இந்தியாவில் முகலாயரின் ஆட்சி - II

(MUGHAL RULE IN INDIA - Part II)

ஆசிரியர்கள்

S. M. எட்வர்ட்ஸ், C.S.I., C.V.O.

H. L. O. காரெட், M.A.

தமிழாக்கம்

A. உஸ்மான் ஷெரீப், M.A.

தமிழ் வெளியீட்டுக் கழகம்

தமிழக அரசு

தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண்-168

இந்தியாவில்
முகலாயரின் ஆட்சி - II

(MUGHAL RULE IN INDIA - Part II)

ஆசிரியர்கள்

S. M. எட்வர்ட்ஸ், C.S.I., C.V.O.
(முன்னாள் ஐ.சி.எஸ். அலுவலர்)

H. L. O. காரெட், M.A.
இந்தியக் கல்வித் துறை,
துணை முதல்வர், அரசினர் கல்லூரி.
லாகூர்.

தமிழாக்கம்

A. உஸ்மான் ஷெரீப், M.A.
வரலாற்றுப் பேராசிரியர்,
அரசினர் கலைக்கல்லூரி, கோவை.

தமிழ் வெளியீட்டுக் கழகம்

தமிழக அரசு

First Edition — July 1968

B.T.P. No. 168

© Bureau of Tamil Publications

Mughal Rule in India (Part II)

S. M. Edwardes and H. L. O Garrett

Translation

A. Oosmann Shariff

Price Rs. 6-00

This translation of 'Mughal Rule in India' by S. M. Edwardes and H. L. O. Garrett is published by arrangement with M/s S. Chand and Company, Ramnagar, New Delhi-1.

Printed by
Novel Art Printers,
Madras-14.

அணிந்துரை

(இரா. நெடுஞ்செழியன், தமிழகக் கல்வி - தொழில் அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ., வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்ல மெல்ல மறைந்து வருகின்றன. நாடு முழுதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி, இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும், மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'இந்தியாவில் முகலாயரின் ஆட்சி-II' என்ற இந் நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் 168ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 203 நூல்கள் வெளிவந்துள்ளன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலைமண்டபத்தில் கொலு வீற்றிருக்கிறாள். எனவே, இவ்வன்னையை வாழ்த்துவோமாக! உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

		பக்கம்
6. முகலாய நிர்வாகம்	...	1
7. முகலாயர்காலத்திய பொருளாதார, சமூகக் கூறுகள்	...	126
8. முகலாயர்களின் கட்டடப் பாங்கும் கலைகளும்	...	177
9. முகலாய ஆதிக்கச் சீர்குலைவின் காரணங்கள்	...	237
கலைச்சொல் அகராதி	...	255
பொருட்குறிப்பு அகராதி	...	259

இந்தியாவில் முகலாயரின் ஆட்சி - II

இரண்டாம் பாகம்

6. முகலாய நிர்வாகம்

தத்துவங்களும் முறையும்

பதினாறு, பதினேழாம் நூற்றாண்டைய முகலாய நிர்வாகத்தின் தத்துவங்களும் முறையும் பெரும்பாலும் அக்பரின் அறிவின் திறத்தால் உருவாக்கப்பட்டன. அவற்றின் வெற்றி, அவ் வெதேச்சாதிகாரியின் உழைப்பையும் இயல்பாகவே பெற்றிருந்த திறமைகளையும் யொட்டி இருந்தது. அவற்றை அவ் வெதேச்சாதிகாரி பரந்த ஆனாலும் முற்றிலும் அடக்கப்படாததாக இருந்த ஆட்சிப் பகுதியின் அரசாங்கத்திற்காகச் செயற்படுத்தவேண்டியிருந்தது. ஆகையால் ஒரு சிறப்பு மிக்க ஆசிரியர் கூறுவதுபோல, 'அவைகளை உருவாக்கியவர் உயிர் நீத்ததும் தமது நற்றிறத்தை இழந்தன.'[1] ஒரு சிவில் அரசாங்க முறையை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பு பாபருக்கோ ஹுமாயூனுக்கோ கிடைக்கவில்லை. ஏனெனில், வட இந்தியாவைக் கைப்பற்றுவதற்கும் பேரரசு வமிசத்தைத் தோற்றுவிப்பதற்கும் இடையூறுகள் மிக்க வாழ்க்கையின்பொழுது அவர்கள் போர் புரிதலில் ஈடுபட்டிருந்தனர். இங்ஙனம் அக்பர் 1556-ல் அரியணையேறியபொழுது, ஆக்ராவுக்கும் (Agra) பெஷாவருக்கும் (Peshavar) இடையில் இருந்த ஆட்சிப் பகுதிகளிலும் ஆஃப்கானிஸ்தானத்திலும் (Afghanistan) அவரது நிலை சிக்கல் நிறைந்ததாக இருந்தது. அவர் கூடுதலாகக் கைப்பற்றிய ஆட்சிப் பகுதிகளும் அவருடைய ஆட்சிக் காலத்தின் இறுதியில் முற்றிலும் இணைக்கப்படவில்லை. பாபருக்கு வாய்ப்புக் கிட்டி இருக்குமாயின் ஒருவேளை அவருடைய புகழ்மிக்க பேரர் நிறுவியதை யொத்த சிவில் நிறுவனங்களை அவரும் பூரணமாக்கியிருக்கக்கூடும்; ஏனெனில், அவர் உயர் தரப் பண்பு மிக்கவராவார். 'மங்கோலியனின் (Mongol) ஆற்றலும்,

[1] V. A. Smith, 'Akbar the Great Mogul' p. 354.

துருக்கியனின் வீரமும் திறமையும்' அவரிடத்தில் கலந்திருந்தன.[1] அதற்கு மாருக, ஹுமாயூன் (Humayun) கற்றறிந்தவராயிருந்தும், அவருடைய தந்தையின் சிறப்பு அம்சங்களாக அமைந்திருந்த செயல்விரைவும் திறமையும் பெற்றிருக்கவில்லை; ஒருவேளை அவருக்கு இயல்பாகவே அமைந்திருந்த திறமைகளையும் கஞ்சா பருகும் பழக்கத்தினுல் அவர் குறைத்துக்கொண்டிருக்கக் கூடும்.

பாபர், ஹுமாயூன் ஆகிய இருவரும் அதிகாரத்தில் அவர்களுக்கு முந்தியிருந்தவர்களான டெல்லி சுல்தானியர்களின் (Sultans of Delhi) கொள்கையைப் பின்பற்றும்படி சூழ்நிலைகளால் வற்புறுத்தப்பட்டனர். அச் சுல்தானியர்கள், இந்து ராஜாக்களையும் இதர நிலக்கிழார்களையும் ஒழுங்காகக் கப்பம் செலுத்திவரும் நிபந்தனையின் மேல் அவர்களுடைய உடைமைகளைத் தொல்லையின்றி விட்டு வைத்தனர், ஆகையினுல், பாபர் தமது நினைவுக் குறிப்புகளில் (Memoire) பீராவிலிருந்து (Bhira) பீஹார் (Bihar) வரையிருந்த ஆட்சிப் பகுதியிலிருந்து 1528-ல் 52 கோடி ரூபாயைத் (4,212,000 பவுண்டு) தாம் வருமானமாகப் பெற்ருர் என்று குறிப்பிடுகையில், ஆட்சிப் பகுதிகளைக் கைப்பற்றிய படையின் மூலமாக வசூலிக்கப் பட்ட நிதியையும், இந்து, முஸ்லீம் தலைவர்களும் நிலக்கிழார்களும் செலுத்திய கப்பத்தையுமே அவர் குறிப்பிடுகிருர். வன்முறையால் பாபர் தமது அதிகாரத்தை நிலைநாட்டிய நாட்டை அத் தலைவர்களும், நிலக்கிழார்களும் நிருவகித்துவந்தனர்.[2] மாகாணங்களில் ஒருவகைப்பட்ட சிவில் நிருவாகத்தை நடத்தவேண்டிய அவசியமும் இந்தியாவில் முகம்மதியர்கள் (Muhammadans) அவர்களது ஆட்சிக்காலத்தின் முந்திய பகுதியில் போதிய எண்ணிக்கைகளையோ தலைநகரைச் சுற்றியிருந்த குறிப்பிட்ட பகுதியைவிட அதிகமான பகுதியை நிருவகிக்கப் போதிய திறமையோ பெற்றிருக்கவில்லை என்ற உண்மையும் அக் கொள்கையைக் கடைப்பிடிக்குமாறு வற்புறுத்தின. பக்தியாரின் (Bakhtyar) மகனுன முகம்மது கில்ஜி (Muhammad Khilji) வங்காளத்தில் கி.பி. 200-ல் கலப்பற்ற முகம்மதிய மாகாண நிருவாகத்தை அமைத்தார். பால்பன் (Balban), அல்லாவுத்தின் கில்ஜி ஆகிய சுல்தானியர்கள் அவர்களுடைய படையின் மூலமாகவே ஆட்சி நடத்தினர்; இந்துக்களை அவர்கள் பதவியில் அமர்த்திக்கொள்ளவில்லை; அடாத கொடுமைகளை இழைத்தும், ஒற்றர் முறையை அமைத்துக்கொண்டும் அவர்கள் தமது இறைமையை அழியாமல் காத்துவந்தனர். முகம்மது பின் துக்ளக்கின் கீழ் (Muhammad-bin Tughlak) அப்

[1] Rulers of Indian Series, 'Babur,' S. Lane-Poole.

[2] Beveridge 'Babur-Nama,' vol. ii, p. 520.

பொழுதிருந்த உள்நாட்டு நிர்வாகம் வீழ்ச்சியுற்றது. கான் ஜஹான் (Khan Jahan) என்ற மதமாற்றம் செய்யப்பட்ட இந்து அமைச்சரிடம், அரசாங்கப் பொறுப்பை விட்டுவைத்திருந்த ஃபிரோஸ் ஷாவின் (Firoz Shah) மிதமான ஆட்சி, தலைநகரிலும் மாகாணங்களிலும் முறையற்ற சர்வாதிகாரமாக இருந்த ஒரு முறைக்கு மீண்டும் சக்தியளிக்கத் தவறியது. அம்முறை கலகம், கொலை ஆகியவற்றாலன்றி மற்ற எதனாலும் நடைமுறையில் கட்டுப் பட்டிருக்கவில்லை.

டெல்லி சுல்தானியர்களின் முறையோடு பெரும்பாலும் மாறு பட்டிருந்த அரசாங்க நிருவாக முறையின் தத்துவங்களை நிலைநாட் டியதற்காக அக்பருக்கு மதிப்புக் கொடுக்கவேண்டியதே எனினும், அவருக்கு இரு திசைகளிலிருந்து உதவி வந்தது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். முதலாவதாக, ஷேர்ஷாவின் (Sher Shah) மேற்கோள்—பீஹாரில் அவருடைய ஆட்சிப் பகுதியிலும் டெல்லி யில் புயல் மிக்க ஐந்து ஆண்டு ஆட்சிக்காலத்தின்பொழுதும் சிவில் அரசாங்கத்தை நடத்துவதற்கான சிறப்புத் திறமையை அவர் வெளிப்படுத்தினார். இரண்டாவதாக, முஸ்லீம் மக்களின் எண் ணிக்கை பதினாறும் நூற்றாண்டின் துவக்கத்தில், குடியேற்றம், மதமாற்றம், பிறப்பு ஆகிய மும்முறைகளால் போதிய அளவு அதிக மாகிவிட்டதனால் சுல்தானியத்தின் முந்திய நாட்களில் இருந்ததை விட மேலும் பலரை அரசாங்கத்தின் சிவில் பதவிகளில் நியமிக்க முடிந்தது என்ற உண்மையாகும். தவிர, முதலில் இந்துக்களையும் முஸ்லிம்களையும் பிரித்த தடை அரண், அக்பர் அரியணை ஏறும் பொழுது பெரும்பாலும் உடைபட்டதனால் இருதரப்புகளும் தொடர்பு கொள்ள நேரிட்டது. உருது (Urdu) என்ற தனிப்பட்ட மொழி ஒன்று இதிலிருந்து உருவாகியது. இம்மொழியை இருகட்சிகளாலும் புரிந்துகொள்ள முடிந்தது; தவிர, படிப்படியாக அது இந்தியாவின் முகம்மதியர்களின் பேசும் மொழியாகிவிட்டது.

ஷேர்ஷாவின் நிர்வாகம் : மத்திய அரசாங்கத்துக்கும் நேரடி யாகக் கீழ்ப்பட்டிருந்த ஒரு முழு நிர்வாக அமைப்பை ஏற்படுத்திய தில் ஷேர்ஷாவின் வெற்றியைக் காணலாம். அவரது ஆட்சிப் பகுதியை அவர் பல பர்கானாக்களாகப் (Parganas) பிரித்தார். ஒவ் வொரு பர்கானாவும் ஃபோடதார் (கருவூலர்), எழுதும் சிப்பந்திகள் ஆகியவர்கள் உதவ, அமீன் (Amin) அல்லது சிவில் மத்தியஸ்தர் ஒருவராலும், வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைப் பெற்ற ஷிக்தார் (Shiqdar) அல்லது இராணுவ போலீஸ் அதிகாரியாலும் நிர்வகிக்கப் பட்டுவந்தது. பல பர்கானாக்களைக் கொண்டது ஒரு சர்க்கார் (Sarkar) அல்லது பிரிவு. அது முதன்மை ஷிக்தார் (Chief Shiqdar), முதன்மை

முன்சீப் (Chief Munsif) ஆகியவர்களின் பொறுப்பில் இருந்தது. இவர்களுள் பின்னவர் அப் பகுதியின் கீழ்த்தர சிவில் அதிகாரிகளைக் கண்காணித்து சிவில் வழக்குகளைத் தீர்ப்பதற்கும் தலங்களிலிருந்த குறைகளை நிவர்த்திப்பதற்கும் சுற்றுப் பயணம் செய்யும் நீதிபதியாகப் பணியாற்றினர். வருமானம், அதையொட்டிய விஷயங்கள்பற்றிய கடிதங்கள் நேரடியாக பர்கானு அதிகாரிகளிடமிருந்து ஷேர்ஷாவின் செயலாளர் அலுவலகத்திற்குச் சென்றன. அதனின் தலைமை அதிகாரிகள் எல்லா முக்கிய விஷயங்களைப்பற்றியும் அரசனிடமிருந்து உத்தரவு பெற்றனர். ஒவ்வொரு பர்கானுவும் பல நகரங்களையும் கிராமங்களையும் உட்கொண்டிருந்ததனுல், நிர்வாகத்தின் தலைவர் குடியானவர்களுடன் பெரும்பாலும் நேர்முகமான தொடர்பைக் கொண்டிருந்தார். அதே குறிக்கோளுடன் அவருடைய நிலவருமானத் திட்டமும் அமைந்திருந்தது. ஏனெனில், அவர் இராணுவ சேவைக்காக அளிக்கப்பட்ட ஜாகீர்களை ஒழித்து அவற்றுக்குப் பதிலாக ரொக்க ஊதியங்களைக் கொடுத்ததுமல்லாமல் அல்லாவுத்தீன் கில்ஜியால் முதன்முதலாகப் புகுத்தப்பட்ட வரி விதிப்புக்காக கிராம நிலங்களை அளக்கும் முறையை மீண்டும் அவர் கடைப்பிடித்தார். வரிவிதிக்கப்பட்ட விளைபொருளில் பாதியை அல்லாவுத்தீன் எடுத்துக்கொண்டார்; ஆனுல், ஷேர்ஷா அரசாங்கக் கோரிக்கையை நான்கில் ஒரு பங்காகவே அமைத்திருந்தார். அதைக் குடியானவர்களின் விருப்பத்தின்படி ரொக்கமாகவோ பண்டமாகவோ கொடுக்கலாம். ஒவ்வொரு தனிப்பட்டவரும் எவ்வளவு வரியைக் கொடுக்கவேண்டும் என்பதைக் குறிப்பதான ஒழுங்கான பத்திரங்களும் தரப்பட்டன. அவருடைய ஏற்பாடுகள் அக்பரின் (Akbar) வருவாய்த்துறை அமைச்சரான ராஜா தோடர் மல் (Raja Todar Mall) என்பவருக்கு முன்மாதிரியாக அமைந்திருந்தன என்பது திண்ணம். அவை பிரிட்டிஷ் (British) நிலத் திட்டத்தின் அடிப்படையாகவும் அமைந்திருந்தன என்றும் கருதலாம். ஷேர்ஷா பல்வகைப்பட்ட உலோக நாணயங்களை ஒழித்தும் தாம் (Dam) என்ற செப்பு நாணயத்தை நுழைத்தும் நாணயமுறையைச் சீர்ப்படுத்தினர்; வருவாய்த்துறைக் காரியங்களுக்காக தாம் என்ற நாணயம் பதினறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. வெள்ளி நாணயங்களையும் அவர் தாராளமாக அடித்துப் புழங்கவிட்டார். அவை மிகச் சிறந்தவையாயும் கலைத்திறம் நிறைந்தவையாயும் இருந்தன. 150,000 குதிரைவீரர்கள் உட்பட ஆற்றல் மிக்க படை ஒன்றின் உதவியால் அவருடைய அதிகாரம் நீடித்து வைக்கப்பட்டிருந்தது. குதிரைகளின் பொய்ப்பட்டியலைத் தடுப்பதற்காக, அரசாங்கப் பணியிலிருந்த குதிரைகளுக்குச் சூடு போட்டு அடையாளச் சின்னங்கள் இடும் அவரது முறையை அக்பர் நேர்முகமாகவே பின்பற்றினர். கரடுமுரடான ஒருவகை நீதி அவரது

நேர்முகக் கண்காணிப்பில் வழங்கப்பட்டு வந்தது. கிராமங்களின் எல்லைகளுக்குள் நடந்த குற்றங்களைக் கண்டுபிடிக்கும் பொறுப்பை கிராமங்களே ஏற்கவேண்டும் என்ற கொள்கை மிகக் கண்டிப்பாக அமுலில் கொண்டுவரப்பட்டது. இதுவுமன்றி, நிழல் தரும் மரங்கள் நடப்பட்ட நெடுஞ்சாலைகள், கிணறுகள், இந்துப் பயணிகளும் முஸ்லீம் பயணிகளும் தங்குவதற்கான ஓய்வு விடுதிகள் ஆகிய வற்றையெல்லாம் கட்டுவதில்கூட ஷேர்ஷாவின் நிர்வாகம் மிக்க உயர்தரத்தை அடைந்திருந்தது. அஃது அவருடைய முகலாய வாரிசுகளில் மிகச் சிறப்பு வாய்ந்தவர்களுக்கு வழிகாட்டியாக இருந் திருக்கவேண்டும்.[1]

முஸ்லிம் ஜனத்தொகை: இந்தியாவில் முகம்மதியர்களின் ஜனத்தொகை வளர்ச்சியைப்பொறுத்தவரை, அக்பரின் பேரரசு நிலைநாட்டப்படுவதற்கு ஐந்து அல்லது ஆறு நூற்றுண்டுகளாகவே மேற்கிலிருந்தும், வடமேற்கிலிருந்தும் துணிகர வீரர்கள் இடையரு மல் நுழைந்துகொண்டிருந்தனர் என்பதும் இவர்கள் பெருமளவில் மத மாற்றங்கள் செய்தனர் என்பதும் தெரியவருகிறது. இவ் அந்நி யர்கள் பெரும்பாலும் முகலாயர்களும் ஆஃப்கானியர்களுமாவர்; முன்னவர்கள் துர்ரானி முகலாயர்கள் (Turani Mughals) என்று வழங்கப்பட்டுவந்தனர்; அவர்கள் ஸுன்னிகளாவர்; அல்லது 'இரானி முகலாயர்கள்' (Irani Mughals) என்று வழங்கப்பட் டனர். அவர்கள் ஷியாக்கள்; பெரும்பாலும் ஷிராஸிலிருந்து (Shiraz) வந்தவர்கள்; மருத்துவர்கள், கவிஞர்கள், வழக்கறிஞர்கள், மற்றும் பல தொழில்களைச் சார்ந்தவர்கள் ஆகியவர்களெல்லாம் அக் குழுவில் அடங்கி இருந்தனர். துர்ரானி முகலாயர்கள், அவர் களுடைய எண்ணிக்கையினுலும், திறமையினுலும், அரசாங்கத்து இராணுவ, சிவில் துறைகளில் ஆற்றல் வாய்ந்த ஒரு கும்பலாயிருந் தனர்; அவர்கள் பேரரசர்களின் நம்பிக்கையையும் பெற்றிருந்தனர். பெஷாவரின் (Peshawar) தென்மேற்கு மலைப்பகுதிகளிலிருந்துவந்த ரோஹில்லாக்கள் (Rohillas) உட்பட ஆஃப்கானியர்கள், பெரும்பா லும் படைவீரர்களாயிருந்தபோதிலும், குடியேற்ற அமைப்புகளை நிலைநாட்டுவதற்குத் திறமை படைத்திருந்தனர்; அத் திறமையை முகலாயர்களோ பாரசீகர்களோ பெற்றிருக்கவில்லை; ஆனுலும், ஆஃப்கானியர்களின் நாட்டுப்புறப் பண்பும், அறிவின்மையும் பொதுவாகவே சிவில் நிருவாகத்தில் அவர்கள் பங்கு பெருவண் ணம் அவர்களைத் தடுத்தன. ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தில் அவர்களில் ஒருசிலரே பதவிகளில் அமர்த்தப்பட்டனர்; ஆனுலும்

1 R. C. Temple, 'A New View of Sher Shah Sur', Indian Antiquary, vol. ii.

இராணுவத் துறையில் அவர்கள் பெற்றிருந்த திறமை, அவுரங்கசீப் தக்காணத்தில் தமது நீண்ட பயனற்ற படையெடுப்பைத் தொடங்கியவுடன் அவர்களை மீண்டும் விரும்பி ஏற்குமாறு செய்தது. மேல் குறிப்பிட்ட வகுப்புகளுக்கு மாறாக இந்துஸ்தானத்து முகம்மதியர்கள் இருந்தனர். அவர்கள் அந்நிய நாடுகளிலிருந்து முன்னாலேயே வந்து குடியேறியவர்களின் வமிசத்தவரான இந்திய மக்களாவர். அவர்கள் முகலாயர்கள் முதல் முதலாகத் தோற்றமளித்த பொழுது ஏற்கெனவே இந்திய ஜனத்தொகையில் நன்கு கலந்துவிட்டிருந்தனர். பாபருக்கும் ஹுமாயூனுக்குமெதிராகச் சிற்றரசர்கள் புரிந்த போர்களில் அவர்கள் இந்திய தரப்பில் போரிட்டனர்; அக்பரது காலத்துக்குள், அவர்களை இந்திய முஸ்லீம்கள் என்று உண்மையிலேயே அழைக்கலாம். அக்பரோடு இந்தியாவுக்கு வந்தவர்களிலிருந்து அல்லது அக்பரின் அதிகாரம் நிலைநாட்டப்பட்டதற்குப் பிறகு இங்கே வந்து குடியேறியவர்களிலிருந்து அவர்களை வேறுபடுத்தலாம். இவ் வகுப்பினர் பெரும்பாலும் கீழ்த்தர சிவில் பதவிகளில் நியமிக்கப்பட்டிருந்தனர். அப் பதவிகளை அவர்கள் பஞ்சாபிலிருந்து வந்த க்ஷத்திரியர்கள் (Kshatrias), அகர்வால் பனியாக்கள் (Agarval Banias), காயஸ்தர்கள் (Kayasths) போன்ற பல்வகை இந்து ஜாதிகளோடும் காஷ்மீரத்திலிருந்து (Kashmir) வந்த ஏராளமான முகம்மதியர்களோடும் பங்கிட்டுக்கொண்டனர். காஷ்மீரத்திலிருந்து வந்த முகம்மதியர்கள் திறம்படைத்த செயலாளர்களாகவும் நிர்வாகத்தில் வாணிகர்களாகவும் இருந்து சிறப்புப் பெற்றவர்களாவர். முகலாய நிர்வாகத்தில் ஒரு சில அராபியர்களும் (Arabs), ஹப்ஷியர்கள் (Habshis) அல்லது அபிஸ்ஸீனியர்களும் (Abyssinians), ரூமி அல்லது துருக்கியர்களும் (Rumis or Turks), ஃபிரங்கீயர்கள் (Firangis) அல்லது ஐரோப்பியர்களும் (Europeans) இருந்தனர். ஹப்ஷியர்களின் கூட்டத்திலிருந்துதான் பொதுவாகப் பேரரசு அரண்மனைக்குத் தேவையான அலிகள் வந்தனர். சில சமயங்களில் டெல்லியில் போலீஸ் தலைவர் போன்ற நிர்வாகப் பதவிகளில் அவர்கள் அமர்த்தப்பட்டனர். அதே சமயத்தில் துருக்கியர்களும் அராபியர்களும் பேரரசப் படையின் பீரங்கிக் கிளைப் பகுதியில் பணியாற்றினர்.[1]

முகலாயப் பொதுப்பணித்துறை : பேரரசின் இராணுவ பலத்தை நீடித்து வைப்பதற்காக அந்நிய முகம்மதியர்கள் நாட்டுக்குள் தாராளமாக நுழைவது அவசியமாக இருந்தது. அவ்வித நுழைதல், 'இந்தியா இந்தியர்களுக்கே' என்கிற அக்பரது

1 W. Irvine, 'Later Mughals', vol. i; W. H. Moreland 'India at the Death of Akbar,'.

கொள்கையின் விளைவாக அவருடைய ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியில் படிப்படியாகக் குறைந்துவிட்டது. ஆனாலும், 16ஆம் நூற்றுண்டின் மத்தியில் அவர்களுடைய எண்ணிக்கை போதுமான அளவுக்கு இருந்ததனுல் அக்பரால் உருவாக்கப்பட்ட பல்வகை துறைகளுக்கும் அலவலகங்களுக்கும் தேவையான ஆட்கள் பெரும்பாலோர் கிடைத்தனர். உண்மையில் முகலாயப் பொதுப்பணித் துறை பெரும்பாலும் அந்நியர்களையே கொண்டதாயிருந்தது.

அக்பருடைய அலுவலர்களில் பெரும்பாலோர் பாரசீகர்களும் (Persians) ஆப்கானியர்களும் ஆகிய அந்நியர்களாகவே இருந்தார்கள் என்றும், இராணுவ, சிவில் பணித்துறையின் உயர் தரங்களில் ஒரு சில இந்துஸ்தானிய முகம்மதியர்களே இருந்தனர் என்றும் அய்னி அக்பரியை (Ain-i-Akbari) மிகக் கவனத்துடன் பரிசீலனை செய்ததற்குப் பிறகு புலோச்மன் (Blochmann) வற்புறுத்திக் கூறுகிருர். அதே சமயத்தில் அலுவலர்களில் 70 சதவிகிதத்தினர் ஹுமாயூனுடன் இந்தியாவுக்கு வந்தவர்களுடைய அல்லது அக்பர் அரியணை யேறியதற்குப் பிறகு வந்தவர்களுடைய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் மீதி 30 சதவிகிதத்தினர் இந்துக்களாகவும் இந்திய முகம்மதியர்களாகவும் இருந்தனர் என்றும் மூர்லாண்ட் (Moreland) மதிப்பிடுகிருர்.[1] இந்துக்கள் பதவியில் நியமிக்கப்படுதல் பொறுத்தவரை, மாபெரும் பேரரசு ஒன்றை சுல்தானியம் பின்பற்றிய தத்துவங்களைக் கொண்டு பேணுதல் இயலாது என்ற கருத்தையும், அரசாங்கத்தின் உறுதிநிலையை வளர்ப்பதற்கு இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் அரசாங்கத்திற்காகப் பணிபுரிய சரிசம வாய்ப்பு அளித்தல் வேண்டும் என்ற கருத்தையும் அக்பர் ஏற்றுக் கொண்டார் என்பதற்காக அவர் புகழப்படுவது இயல்பேயாகும். எனினும், கொள்கை ரீதியாக இந்துக்கள் பொதுப்பணித்துறையில் சேரலாம் என்று இருந்தபோதிலும், செயல் முறையில் அவர்கள் வகித்திருந்த பதவிகளின் எண்ணிக்கை உண்மையில் மிகக் குறைந்தே இருந்தது. தவிர, இந்தப் பதவிகளெல்லாம் மற்றச் சாதிகளுக்கன்றி இராசபுத்திரர்களுக்கே அளிக்கப்பட்டன. அக்பர் ஒரு கொள்கைக்காகவே ஆட்களைப் பதவியில் அமர்த்திஞர்; தகுதியுடையவர்களையே பதவியில் அமர்த்தவேண்டும் என்ற தாராள மனப்பான்மையினுல் அமர்த்தவில்லை என்ற உண்மை இதிலிருந்து வெளியாகிறது. இராசபுத்திரர்களின் விஷயத்தில், இடையருமல் ஆதிக்கத்தை வெளிப்படுத்தல் பயனற்றதாக இருப்பதுமன்றி அபாயமிக்கதாகவும் இருக்கும் என்றும் அவர்களுடைய விசுவாசத்தையும் மதிப்பையும் பெறுவதற்கான பிடிப்பைப்

1 Ain-i-Akbari, trans. by H. Bolchmann, vol. i; Moreland, *ibid.*

பெற மன்னராட்சியை ஆதரிப்பதில் அவர்களுக்குத் தனி ஆர்வம் ஊட்டவேண்டும் என்றும் அவர் உணர்ந்தார்.[1] இவ் விதமாக, நாற்பது ஆண்டுக் காலத்தில் 500 படைவீரர்களைக் கொண்ட மன்சப்புகள் அல்லது பதவிகளை இருபத்தோர் இந்துக் களுக்கு அவர் கொடுத்தார்; அவர்களில் பதினேழு பேர் இராசபுத்தி ரர்கள்; ஆம்பர் (Amber), மார்வார் (Marwar), பிகானீர் (Bikanir), ஜெய்சால்மர் (Jaisalmar), பண்டேல்கண்ட் (Bandelkhand) ஆகிய வற்றின் சிற்றரசர்களும் அந்த இராசபுத்திரர்களின் எண்ணிக்கையில் அடங்கி இருந்தனர். 500 படைவீரர்களுக்கும் குறைந்தவர்களைப் பெற்றிருந்த பதவிகள் முப்பத்தியேழு இந்துக்களுக்குக் கொடுக்கப் பட்டிருந்தன; அவர்களில் முப்பது பேர் சந்தேரி (Chanderi), கரௌலி (Karauli), தாதியா (Datia) ஆகியவற்றின் இராசபுத்திர இளவரசர் களும் பெரிய இராசபுதன இராச்சியங்களின் கீழிருந்த அடியாட்களு மாவர். மீதி இருந்த நான்கு உயர்தர பதவிகளில்—அதாவது 500 படைவீரர்கள் முதல் 5,000 படை வீரர்கள்வரை பெற்றிருந்த மன்சப்புகளில்—ஒன்று அரசவையின் செறி சொல்லாளரான ராஜ பீர்பாலுக்கும், இரண்டாவது வருவாய்த்துறை நிர்வாகியான ராஜா தோடர்மல்லுக்கும், மூன்ருவது ராஜா தோடர்மல்லின் மகனுக்கும், நான்காவது மற்ருெரு க்ஷத்திரியனுக்கும் அளிக்கப்பட்டன.

அக்பரது மேலாண்மைக்குக் கீழ்ப்படிந்த இராசபுத்திர சிற்றரசர்களின்மீது அவரது அதிகாரத்தை வலுப்படுத்துவதற்கான விருப்பத்திஞல் முகம்மதியர் அல்லாதாரைப் பொதுப்பணியில் அவர் அமர்த்திக்கொண்டார் என்பது மிகத் தெளிவாகிறது; தவிர, முகலாயப் பேரரசக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இராசபுத னத்தின் ராஜகுடும்பங்களின் பெண்களுக்குமிடையில் திருமணக் கூட்டுறவுகளை ஏற்படுத்தித் தமது ஆதிக்கத்தை மேலும் உறுதி யாக நிலைநாட்டவும் அவர் முயன்ருர். தலையாய இந்துக் குடும்பங் களை அதிகாரப் பிணைப்புகளாலும் நேர்முகப் பிணைப்புகளாலும் மன்னருடன் இணைக்கும் கொள்கையை மதவெறி பிடித்த அவுரங்க சீப் (Aurangzeb) கைவிட்டது முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குரிய காரணங்களில் ஒன்ருகும் என்பதுவும் தெளிவாகிறது. ஜஹாங்கீர் (Jahangir) ஷாஜஹான் (Shah Jahan) ஆகியோரின் ஆட்சிக்காலங் களில் அரசுப் பணிகளின் பொதுப்பண்பு மாருமல் அப்படியே இருந்துவந்தது. ஆனல், அத் துறையின் திறமையின் சீரழிவு முன்ன வரின் காலத்திலேயே ஆரம்பித்துப் பின்னவர் காலத்தில் மிகவும் தெளிவாய் அறியக்கூடியதாய் இருந்தது. இதற்கு மாருக

[1] J. Tod, 'Annals and Antiquities of Rajasthan,' edited by W. Crooke, vol. i, p. 178.

அவுரங்கசீப் கூடியவரை இந்துக்களைப் பதவிகளில் வேண்டுமென்றே அமர்த்தாது அக்பரின் கொள்கையைக் கைவிட்டார். கலிபாக்களின் முன்மாதிரியை அவரும் பின்பற்றுவதாகக் கருதி அவர் இந்துக்களை இழிவுபடுத்தும் சட்டங்களை அவர்கள்மீது சுமத்தினுர்; அதே சமயத்தில் கீழ்த்தர முஸ்லீம் அதிகாரிகளை அடக்கி ஆள அவர் தவறிவிட்டார். இதனுல் 1681-ல் அவருடைய மூன்ரும் மகனுன இளவரசர் அக்பர் (Prince Akbar) வெளிப்படையாகவும் உண்மையாகவும் இவ்வாறு எழுதினுர்: 'நாட்டின் அதிகாரிகளும் எழுத்தர்களும் வியாபாரிகளின் வழக்கத்தை மேற்கொண்டு வணிகர்களாகிவிட்டனர். பொன் கொடுத்துப் பதவிகளை வாங்கியும், வெட்கப்படத்தக்க பரிசுகளுக்காக அவற்றை விற்றும் வருகின்றனர். உப்பைத் தின்னும் ஒவ்வொருவரும் உப்புக் களஞ்சியத்தையே உடைத்தெறிகின்றனர்.'

பணித்துறை ஆட்சி முறை (Bureaucratic System): முகலாயப் பேரரசின் ஆளும் வகுப்பை அக்பர் நேர்முகமாகப் பாரசீகத்திலிருந்து பெற்ருர்; அது முக்கியமாக இராணுவ இயல்பினைப் பெற்றிருந்தது. ஒவ்வோர் அதிகாரியும் மன்சப் (Mansab) அல்லது மதிப்புமிக்க பதவியும் ஊதியமும் உள்ள அரசாங்கப் பணியில் அமர்த்தப்பட்டார். அதனுல் அவர்கள் கொள்கையளவில் அரசாங்கத்தின் படைத்துறை ஊழியத்திற்குப் பல படைகளையும் துணைப்படைகளையும் வழங்கும் கட்டுப்பாடுடையவர்களாய் இருந்தனர். 1573-4-ல் இம் மன்சப்தார்கள் முப்பத்து மூன்று தரங்களாக வகைப்படுத்தப்பட்டிருந்தனர். பத்துபேருக்குத் தளபதி முதல் 10,000 பேருக்குத் தளபதிகளாகவும் அக்பர் அவர்களை நியமித்திருந்தார். பத்து முதல் 400 வரையிலுள்ளவர்களுக்குத் தளபதிகளாக அமர்த்தப்பட்டவர்கள் பொதுவாக மன்சப்தார் என்றும், 500 முதல் 2,500 வரையிலுள்ளவர்களுக்குத் தளபதிகளாக அமர்த்தப்பட்டவர்கள் அமீர் என்றும், 3,000 பேருக்கும் அதற்கு மேற்பட்டவர்களுக்கும் தளபதிகளாக நியமிக்கப்பட்டவர்கள் அமீரெ ஆஸம் (Amiri-i-Azam) அல்லது உம்தா (Umda) என்றும் வழங்கப்பட்டனர். அக்பரின் ஆட்சியின் மத்திய காலம் வரை ஒரு சாதாரண அதிகாரியின் உயர்ந்த அந்தஸ்து 5,000 பேர்களுக்குத் தளபதியாயிருப்பதுதான். மேலும் உயர் அந்தஸ்துகளில் பேரரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களே அமர்த்தப்பட்டனர். உதாரணமாக, அய்னி அக்பரி (Ain-i-Akbari) தொகுக்கப்பட்ட காலத்தில் இளவரசர் சலீம் 10,000 வீரர்களின் தளபதியாகப் பதவியேற்றிருந்தார். ஆனுல், அக்பருடைய ஆட்சி முடிவில் '5,000 பேர்' என்னும் இந்தக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டது. அக்பருக்குப் பின் வந்தவர்களின் காலத்தில் உயர்பணியிலிருந்தவர்கள் இன்னும்

உயர்ந்த பதவிகளுக்குச் சில சமயங்களில் உயர்த்தப்பட்டனர். ஒவ்வோர் அதிகாரப் பிரிவினருக்கும் குறிப்பிட்ட சம்பள விகிதம் இருந்தது. அதிலிருந்து அவர்கள் குதிரைகள், யானைகள், பொதி விலங்குகள். வண்டிகள்—இவற்றை வைத்துக்கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனாலும், அக்பரின் காலத்திலும் கூட, அவருடைய விதிமுறைகளுக்கு மாருக மன்சப்தார் வழங்கிய ஆட்களின் எண்ணிக்கை அவருடைய அந்தஸ்துக்கு உகந்தபடி இருக்கவில்லை. 'ஆயிரம் பேர்களின் தளபதி' ஒருவர் அதற்குக் குறைவான ஆட்களைக்கொண்ட படையை வழங்கினுல் அது பிரமாதமாகக் கொள்ளப்படவில்லை. '5,000 பேர்களின் தளபதி'' ஒருவர் 4,000 குதிரைவீரர்களை அளித்தால் போதுமானதாகும்; சாதாரணமாகச் சற்றேறக்குறைய ஆயிரம் வீரர்களுக்கு மேல் அவரிடமிருந்து எதிர்பார்க்கப்படவில்லை.[1] ரெவரெண்ட் எட்வர்ட் டெர்ரி (Rev. Edward Terry) என்பவரின் கூற்றின்படி, ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்தில் இப் பழக்கம் மேலும் முனைப்புடையதாயிற்று; பதினெட்டாம் நூற்றுண்டுவரை இவ் விரிவு நீடித்தது. அந் நூற்றுண்டில் பல்வகையான அந்தஸ்துகள் இராணுவ படை வழங்கீடு பொறுத்தவரை வெறும் கௌரவ அந்தஸ்துகளாகி விட்டன. அதே சமயத்தில் 5,000 பேர் கொண்ட வீரர்களின் தளபதிகள், அவர்களுக்கும் தாழ்ந்தவர்கள் ஆகியவர்களின் எண்ணிக்கை அக்பரின் பின்னவர்களின் ஆட்சிக் காலத்தில் மிக அதிகமாயின. புலோச்மன்னுல் கொடுக்கப்பட்ட கீழ்க்கண்ட அட்டவணை (அய்னி அக்பரி) இதற்குச் சான்று கூறும்.

அடியிற்கண்ட வீரர்களின் தளபதிகளின் எண்ணிக்கை	அக்பரின் கீழ்	ஜஹாங்கீரின் கீழ்	ஷாஜஹானின் கீழ்
5,000-லிருந்து 500 வரை	249	439	563
400-லிருந்து 200 வரை	163	438	தெரியவில்லை
150-லிருந்து 10 வரை	1,388	2,064	,,

எல்லாப் பதவியாளர்களும் பொதுவாகத் தங்களாலானவரையில் அரசாங்கத்தை ஏமாற்ற முயன்றதாலும், அக்பரின் சுறுசுறுப்பான கண்காணிப்பிருந்துங்கூட அவர்கள் கெட்ட வழக்கங்களை மேற்கொள்ளுவதிலிருந்து தடுக்கப்படவில்லையாதலாலும், அட்டவணையின்படி மன்சப்புகளின் அதிகரிப்புப் பதினேழாம் நூற்றுண்டில் அரசு பணித்துறையின் திறன் பொதுவாகச் சீரழிந்துபோனதற்குக் காரணமாயிருந்தது என்பதை நன்கு புரிந்துகொள்ளலாம்.

[1] V. A. Smith, 'Akbar The Great Moghul', p. 363.

தனிப்பட்ட மதிப்பு (ஜாத்—Zat) எனக் கருதப்பட்ட மன்சப் அல்லது வகுப்பு அந்தஸ்து தவிர, ஓர் அதிகாரி சுவர் (Suwar) அந்தஸ்தும் அளிக்கப்பட்டார். சுவர்கள் அல்லது குதிரைப் படையைத் துணைப்படையாக வைத்திருந்ததற்காக இது ஒரு சலுகையாக அளிக்கப்பட்டது. இக் கூடுதல் படையின் ஊதியம் கருவூலத்திலிருந்து எடுத்து அளிக்கப்பட்டது; ஊதியப் பட்டியலில் ஐந்து சதவிகிதத்தை மன்சப்தார் தாமே வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டார். ஒரு தரத்துக்குள் மன்சப்தாரின் நிலை அவர் பெற்றிருந்த குதிரைப்படையின் அளவையால் நிர்ணயிக்கப்பட்டது. உதாரணமாக 5,000 படைவீரர்கள் தொகுதியிலிருந்து கீழ்த்தரங்கள் வரை ஓர் அதிகாரியின் அந்தஸ்து ஜாத்திலும் (தனிப்பட்ட வகுப்பு) சுவரிலும் (Suwar) சரிசமமாக இருப்பின் அவர் முதல் வகுப்பினர் (அல்லது தரம்) ஆவார்; அவருடைய சுவர் அந்தஸ்து ஜாத் அந்தஸ்தில் பாதியாக இருந்தால் அவர் இரண்டாம் வகுப்பினராவார்; அவருடைய சுவர் அந்தஸ்து ஜாத்துக்குப் பாதிக்கும் குறைந்திருந்தாலோ அல்லது சுவர் அந்தஸ்தே இல்லாமலிருந்தாலோ மூன்றாம் வகுப்பினராவார். இந்த முறைப்படி, 3,000 ஆட்களைக்கொண்ட ஒரு மன்சப்தார் 3,000 சுவர் ஆட்களைக் கொடுத்தால் அவர் முதல் வகுப்பைச் சேர்ந்தவராவார்; 3,000 ஆட்களைக் கொண்டு 1,500 சுவர்களைக் கொடுத்தால் அவர் இரண்டாம் வகுப்பினராவார். 3,000 ஆட்களைக்கொண்டு 500 சுவர்களைக் கொடுத்தால் அவர் மூன்றாம் வகுப்பைச் சார்ந்தவராவார். இவ் வகுப்புகளின் ஊதியங்கள் சிறிதளவு வேறுபட்டிருந்தன. 3,000 ஆட்களைக்கொண்டிருந்த மன்சப்தார் முதல் வகுப்பைச் சேர்ந்திருந்தால் அவருக்கு ஒரு மாதத்துக்கு 17,000 ரூபாய் ஊதியம் கொடுக்கப்பட்டது; முறையே இரண்டாவது மூன்றாவது வகுப்புகளைச் சேர்ந்திருந்தால் 16,800 ரூபாயும், 16,700 ரூபாயும் அவர்கள் மாத ஊதியமாகப் பெற்றனர்.[1]

இவ்விதமாக, முகலாயப் பேரரசில் நிரந்தரமாக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் திட்டவட்டமான இராணுவ வகையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒரு பணித்துறையைச் சார்ந்தவர்களாவர். எப்படியாயினும், அக்பரின் காலத்தில் அவர்கள் பொது நிர்வாக நீதிப் பணிகளுடன் இராணுவ பணிகளையும் ஆற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. பேரரசரே நேரில் ஆட்களைப் பணித்துறையில் அமர்த்தினர்; அவரவர்களுடைய நிலைமைக்கு ஏற்றவாறு தேர்ச்சி பெற்றவர்களுடைய அந்தஸ்து நிச்சயிக்கப்பட்டது. பதவி பெற விரும்புகிறவர் அரசவையில் மதிப்புப் பெற்று

[1] V. A. Smith 'Akbar the Great Moghul'; W. H. Moreland 'India at the Death of Akbar', Blochmann and Jarrct 'Ain-i-Akbari'.

இருக்கும் நண்பராலோ ஆதரவாளராலோ பேரரசருக்கு அறிமுகப் படுத்தப்பட வேண்டும். அவருடைய வெற்றியானது சர்வாதிகாரி அவரைப்பற்றி எவ்வித சாதகமான கருத்தைக் கொண்டிருக்கிருர் என்பதைப் பொறுத்திருந்தது. பதவி முன்னேற்றம் அளிப்பதில் அந்தச் சர்வாதிகாரி தகுதிக்கான சோதனைகளையும் பொதுவான சட்டங்களையும் பின்பற்றவில்லை. இதற்கு எடுத்துக்காட்டாக ஒரு செய்தியைக் கூறலாம். புதிதாக வரும் ஒருவர் கீழ்த்தர பணித் துறையில் சேர்ந்து, அவரது சொந்த முயற்சியாலும் திறமைகளாலும் அப் பணித்துறையில் உயர் பதவிகளைப் பெறவேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது என்ருலும், ராஜ பிஹாரி மல் (Raja Behari Mal) நேரடியாக 5,000 படைவீரர்களைக்கொண்ட மன்சப்தாராக நியமிக்கப்பட்டார். ஒருவருடைய பண்பை அக்பர் சிறந்த முறையில் மதிப்பிட்டதனுல் அவர் விரும்பியபடி அதிகாரிகளை நியமித்தல், உயர்பதவிக்கு மாற்றுதல், பதவி தாழ்த்துதல் அல்லது பதவியிலிருந்து விலக்குதல் ஆகியவைகளைப் பொறுத்தவரை அவர் கையாண்ட முறையின் விளைவாக எவ்விதத் தீங்கும் ஏற்படவில்லை. அதற்கு மாருக, அக் காலத்திலிருந்த சூழ்நிலைகளில் அதுபோன்று சிறப்பான மற்ற எந்த முறையையும் கையாண்டிருந்திருக்க முடியுமா என்பது ஐயத்துக்குரியதாகும். ஆனல், பின்னல் வந்த அரசர்கள் இயற்கையாகவே பெற்றிருந்த தகுதியும் ஆளுமையும் தெளிவாக அக்பரின் தரத்தைக்காட்டிலும் குறையும்பொழுது, அதிகாரப் பிரமுகர்களின் பண்பும் படிப்படியாகக் குறையத் தொடங்கியது. இவ்விதச் சீரழிவு ஷாஜஹான், அவுரங்கசீப் காலத்தில் காணப்பட்டது. எனினும், புகாரா (Bukhara), குரேசான் (Khurasan), ஈரான் (Iran), அரேபியா (Arabia) ஆகிய நாடுகளிலிருந்து வந்த பல தகுதியுள்ள அரசப் பணியாளர்கள் இவ் வரசர்களுக்குக் கிடைத்தபடியால், பிற்கால முகலாய மன்னர்களின் நிர்வாகப் பணியில் உண்டான படுமோசமான சீரழிவினின்றும் இவர்களின் சிவில் இராணுவ நிர்வாகங்களைக் குலைக்காது காப்பாற்ற முடிந்தது என்று சொல்லலாம்.

பேரரசரின் ஆணைகளுக்கு உடனடியாகக் கீழ்ப்படுதல் முகலாய அரசு பணியாளர்களின் தலையாய கடமையாகும். அவ் அதிகாரிகளின் பெயர்கள் இரண்டு பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டிருந்தன; ஒன்று பேரரசருக்குச் சேவை புரிபவர்களின் பெயர்களையும், மற்ருென்று திட்டவட்டமான பதவிகளைப் பெற்றவர்களின் பெயர்களையும் கொண்டிருந்தன. முதல் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்த அதிகாரிகள் ஒழுங்காக அரசவைக்கு வருதல் தங்களுடைய இராணுவ பலத்தைப் பேணிவைத்தல், பேரரசர் இடும் எவ்வித உத்தரவையும் உடனே நிறைவேற்றுதல் போன்ற கடமைகளை

மட்டும் செய்தால் போதுமானது. இரண்டாவது பட்டியலில் இருந்தவர்களின் பதவிகள் பல்வகைப்பட்டவையாகும். அவர்கள் இராணுவப் பணிகளில்மட்டும் அமர்த்தப்படக்கூடும்; அல்லது மாகாணங்களில் அவர்கள் கவர்னர் பதவியையோ மற்றப் பதவிகளையோ வகிக்க அல்லது பேரரசர் இல்லத் துறைகளான இசைக் கருவியாளர் குழுவிலோ, குதிரைத் தொழுவங்களிலோ, அல்லது பழத்தோட்டங்களிலோ, ஏதாவது ஒன்றில் நியமிக்கப்படலாம். நியமனம் பொறுத்தவரை தனித் தேர்ச்சி முறை எதுவும் இல்லை. ஓர் அதிகாரி முற்றும் மாறுபட்ட புதிய பதவிக்கு ஒரு விநாடியில் மாற்றப்படலாம். பீர்பல் பல ஆண்டுகள் அரசவையில் கழித்த பிறகு எல்லைப் பகுதியில் படைக்குத் தலைமை தாங்கிக்கொண்டிருக்கும்பொழுது உயிர்நீத்தார்; அக்காலத்தில் மிகச் சிறப்புப் பெற்ற இலக்கிய மேதையான அபுல் ஃபாஸல் தக்காணத்தின்மீது படையெடுக்க அனுப்பிவைக்கப்பட்டபோது மிகச் சிறந்த முறையில் பணியாற்றினர்.[1]

சம்பளங்களும் படிகளும்: முகலாய அரசாங்கத்தின் அதிகாரிகள் இரண்டு விதங்களில் தங்கள் சம்பளங்களைப் பெற்று வந்தனர். கருவூலத்திலிருந்து ரொக்கமாக அவர்களுக்குச் சம்பளம் வருவதுண்டு; அல்லது தற்காலிகமாக அவர்களுக்கு ஜாகீர்கள் கொடுக்கப்பட்டுவந்தன. ஒரு ஜாகீரில் (Jagir) ஒரு கிராமமோ பல கிராமங்களோ, ஒரு பர்கானாவோ (Pargana) அல்லது இன்னும் பரந்த பகுதியோ அடங்கி இருந்தன. அதிலிருந்து வரும் நில வருவாய் அவர்களுடைய எல்லா அலுவல் முறையான செலவுகளுக்கும் போதுமானதாக இருந்தது. ஏற்கெனவே குறிப்பிட்டது போல, ஷேர்ஷா ஜாகீர் முறையை வெறுத்தார்; அம்முறை மிகையான செலவு கொண்டது என்னும் காரணத்தினாலும் ஜாகீர்களைப் பெற்றவர்களுக்கு அது மிகையான அதிகாரத்தையும் சுதந்திரத்தையும் அளித்தது என்னும் காரணத்தினாலும் அக்பரும் ஷேர்ஷாவின் கொள்கையைப் பின்பற்றினர். சரியாக அதே காரணத்தை முன்னிட்டு மராட்டியத் தலைவரான சிவாஜியும் (Shivaji) இராணுவப் பணியாற்றியதற்காக சர்அஞ்சாம்களை (Saranjams) அல்லது ஜாகீர்களைக் கொடுக்க விரும்பாது தம்மைப் பின்பற்றுவோருக்கு மற்ற விதங்களில் ஊதியத்தை அளிக்க விரும்பினர். சந்தேகமின்றி ஒவ்வொரு ஜாகீர்தாரும் அவரது பகுதியின் எல்லைகளுக்குள் பெரும்பாலும் கட்டுப்பாடற்றவராக இருந்தார்; தவிர, பின்னல் வாஸ்தவத்தில் நடைபெற்றதுபோல பேரரசரின் அதிகாரத்தைப் புறக்கணித்துத் தமது சுதந்திரத்தை நிலைநாட்டவும் தூண்டப்படக்

1 W. H. Moreland 'India at the Death of Akbar,' pp. 70-71.

கூடும்; அல்லாமலும், கொடுமையும் கடுமையும் வாய்ந்த ஓர் அதிகாரி குடியானவர்களுக்கு வேண்டாத துன்பத்தை இழைக்கலாம். அக் குடியானவர்களின் உழைப்பின் அடிப்படையில்தான் முகலாய அரசாங்கத்தின் முன்னேற்றம் சார்ந்திருந்தது. ஆகையினால், அக்பர் தமது அதிகாரிகளுக்கு ரொக்கமாக ஊதியம் கொடுத்ததும் வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் ஜாகீர் நிலங்களை அரச நிலங்களாக அதாவது கல்சாக்களாக (Khalsa) மாற்றியதும், முற்றும் சரியே. ஏனெனில், அரச நிலங்கள் பேரரசரின் சொந்த வருவாய்த் துறை அதிகாரிகளால் நேரடியாக நிர்வகிக்கப்பட்டுவந்தன. இம் முறை பேரரசரின் அதிகாரத்தை அதிகரித்ததுமின்றி, பல வேளைகளில், அரசாங்கத்துக்கு அதிக பண இலாபத்தையும் அளித்தது. ஷாயிஷ்டகான் (Shayista Khan) வங்காள மாகாணத்தின் கவர்னராக நியமிக்கப்பட்டபொழுது அம் மாகாணத்தின் நிலைமையைப் பற்றி ஷிஹாபுத்தீன் தலீஷ் (Shihabuddin Talish) எழுதியுள்ள குறிப்பிலிருந்து, ஜாகீர் முறை எவ்வளவு குழப்பத்தையும் பழுது உடைய ஆட்சியையும் ஏற்படுத்தலாம் என்று நன்கு தெரிய வருகிறது. பல்வேறு பர்காளுக்களிலும் மன்சப்தார்கள் தமது ஜாகீர்களைப் பெற்றிருந்தனர். அவர்களின் உடன் கூட்டாளிகள் ஏராள்மாக இருந்ததனுல் குடியானவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டனர்; பர்காளுக்களும் பாழாக்கப்பட்டன. (வரிகளை வசூலிப்பதில்) பெருந் தொகைகள் வீணுகச் செலவழிக்கப்பட்டன. ஏனெனில், பல ஷிக்தார்களையும் அம்லாக்களையும் (Amlas) ஒவ்வொரு ஜாகீர்தாரும் வெளியேற்றவேண்டியிருந்தது, என்று தலீஷ் குறிப்பிடுகிருர்.[1]

முகலாய அரசாங்கத்தின் அதிகாரிகள் ரொக்கப் பணம் பெறுவதைவிட ஜாகீர் முறையை அதிகமாக விரும்பினர். ஏனெனில் முதலாவதாக, கருவூலம் விநியோகம் செய்தலில் தாமதித்தது. இரண்டாவதாக, அதிகாரி நட்பையோ நயவஞ்சகத்தையோ கையாண்டு அலுவல் முறைக் குறிப்பேடுகளில் குறிக்கப்பட்டிருப்பதைவிட அதிகமான வருமானத்தை ஒரு ஜாகீரிலிருந்து பெற முடிந்தது. ஜாகீர்களை ஒழிப்பதற்கு அக்பர் கையாண்ட கொள்கையில் அவர் ஓரளவே வெற்றி பெற்றுர் என்பதற்கும் வெறுக்கப்பட்ட இம்முறை ஜஹாங்கீரின் காலத்தில் மீண்டும் தாராளமாகப் பின்பற்றப்பட்டதற்கும் பரவலான காரணம் பொதுப்பணியாளர்கள் தங்களது ஊதியங்களை ரொக்கமாகப் பெறுவதற்கு எதிர்ப்பு காட்டினதேயாகும். ரொக்கமாகக் கொடுக்கப்பட்டாலும், வருமானம் தரும் ஜாகீர்களாகக் கொடுக்கப்பட்டாலும், எல்லாவகை அதிகாரிகளுக்கும் கொடுக்கப்பட்ட ஊதியங்

[1] J. N. Sarkar 'Studies in Mughal India,' p. 155.

களின் ஒப்பளிக்கப்பட்ட விதம் தற்காலக் கருத்துகளின்படி, ஏராள மானதாகவே இருந்தது. அய்னி அக்பரியின்படி, 5,000 ஆட்களைக் கொண்ட முதல்தர மன்சப்தாரின் மாதச் சம்பளம் 30,000 ரூபாய்; அதே வகுப்பைச் சார்ந்த இரண்டாந்தர அதிகாரிக்கு 29,000 ரூபாய்; மூன்றும் தர அதிகாரிக்கு 28,000 ரூபாயாகும். அக்பர் காலத்திய ரூபாய் நாணயம் இரண்டு ஷில்லிங் மூன்று பென்ஸுகளுக்குச் சமமாக இருந்தது; மூர்லாண்டின் கணக்குப்படி, 1012-ல் பிரிட்டிஷ் ரூபாய் பெற்றிருந்த வாங்குந் திறனைவிட ஆறு பங்கு அதிகமானதாகவே பெற்றிருந்தது. அதேபோன்ற தாராள மான சம்பளங்கள் மன்சப்தாரின் கீழ் வகுப்புகளுக்கும் தரப்பட்டன. 1,000 ஆட்களைக்கொண்ட மூன்று 'தரங்களும்' ஒரு மாதத்திற்கு முறையே 8,200 ரூபாய், 8,100 ரூபாய், 8,000 ரூபாய் சம்பளம் பெற்றனர். 500 ஆட்களைக் கொண்டவர்கள் முறையே 2,500 ரூபாய், 2,300 ரூபாய், 2,100 ரூபாய் பெற்றனர்; நூறு ஆட்களைக் கொண்ட அதிகாரிகள், முறையே 700 ரூபாய், 600 ரூபாய், 500 ரூபாய் பெற்றனர்; 10 ஆட்களைக் கொண்டவர்கள், 100 ரூபாய், 82½ ரூபாய், 75 ரூபாய் பெற்றனர். அதிகாரிகள் தனித்தனியாக வைத்துவரவேண்டிய இராணுவப் படைகளின் மாதச் செலவை அவர்கள் இவ் ஊதியத்திலிருந்து கழித்துக்கொள்ளவேண்டியிருந் தது. இச் செலவையும், தேவையானதும் எதிர்பாராததுமான செலவுகளையும் கழித்துவிட்டால் 5,000 ஆட்களைக் கொண்ட ஒரு மன்சப்தார் மாதம் ஒன்றுக்குக் குறைந்தது 18,000 ரூபாய் நிகர சம்பளமாகப் பெற்றார் என்றும், 1,000 ஆட்களைக் கொண்டவர் குறைந்தது 5,000 ரூபாயும், 500 ஆட்களைக் கொண்டவர் குறைந் தது 1,000 ரூபாயும் மாதச் சம்பளமாகப் பெற்றனர் என்றும் மூர் லாண்டு கணக்கிடுகிறார்.[1] ஆயினும், ஓர் அதிகாரி தமது ராணுவச் செலவைச் சிக்கனப்படுத்துவதனால் அல்லது லாபகரமான ஜாகீ ரைப் பெறுவதனால் சம்பளங்களை மறைமுகமாக அதிகப்படுத்திக் கொள்ளக்கூடும். படைகளையும் குதிரைகளையும் வழங்குவதில் மன்சப்தார்கள் அடிக்கடி மோசடி செய்தனர் என்பது திட்டவட்ட மான உண்மையாகும். ஒவ்வோர் ஆளின் அங்கங்களின் விவர மான குறிப்புப் பட்டியலைக் கோரியும், ஷேர்ஷாவும் அல்லாவுத்தின் கில்ஜியும் பின்பற்றிய குதிரைகளுக்குச் சூடுபோட்டு அடையாளச் சின்னங்கள் இடும் முறையைப் புகுத்தியும், ஆஜர்பட்டியல்களையும் மேற்பார்வைகளையும் இடையறுமல் வற்புறுத்தியும் அக்பர் அந்த மோசடியைத் தடுப்பதற்குப் பெருமுயற்சி எடுத்தார். இருந்த போதிலும் அவர் முற்றும் வெற்றிபெறவில்லை. 'பொய் வருகைப் பட்டியல்களைத் தயாரித்தல் முகலாயப்படை உச்ச நன்னிலை

1 W. H. Moreland 'India at the Death of Akbar', pp, 66 ff.

அடைந்திருந்த காலத்திலும் அதனில் காணப்பட்ட குறையாகும். எண்ணிக்கையைப் பூர்த்தி செய்வதற்காக பிரபுக்கள் ஒருவருக் கொருவர் தேவைப்பட்ட ஆட்களைக் கொடுத்தனர்; அல்லது வறுமையில் மூழ்கியிருந்த சோம்பேறிகளெல்லாம் அங்காடிகளி லிருந்து திரட்டப்பட்டு எதிரில் வந்த சுமைதாங்கும் குதிரைகளின் மீது அமர்த்தப்பட்டு திறம்படைத்த மற்றப் போர்வீரர்களுடன் சேர்த்து எண்ணப்பட்டனர்' என்று இர்வின் (Irvine) கூறுகிருர்.[1]

இதுபோன்ற தவருன முறையை அதிகாரிகள் அனுசரிக்கின் றனர் என்று கருதியே, ஒருவேளை ஷாஜஹான் ஓர் ஆண்டில் முழு பன்னிரண்டு மாதங்களுக்கும் கொடுக்கவேண்டிய சம்பளத்தைவிட குறைவான சம்பளத்தைக் கொடுக்கும்படி செய்தது போலும். ஒரு சிலருக்கு நான்கு மாத சம்பளமே தரப்பட்டது; மன்சப்தார்களின் அனுமதிக்கப்படாத இலாபங்களைச் சரிப்படுத்துவதற்காக இவ்வாறு செய்யப்பட்டது. சாதாரண படைவீரன் பொறுத்தவரையிலும் கூட இம் முறை கையாளப்பட்டது. ஏனெனில், படைவீரர்கள் பன்னிரண்டுமாத ஊழியத்திற்காக ஆறு அல்லது எட்டுமாதச் சம்பளத்தையே பெறுகின்றனர் என்றும், ஆறுமாதங்களில் இரண்டு மாதங்களுக்காக அவர்கள் ரொக்கத்துக்குப் பதிலாகப் பழைய துணிகளைப் பெற்றனர் என்றும் இத்தாலிய பயணியான மானுச்சி[2] (Manucci, the Italian traveller) குறிப்பிடுகிருர். மன்சப்தார் களுக்குக் குறைவான சம்பளம் கொடுக்கும் முறை அவுரங்கசீப்பின் ஆட்சிக் காலத்திலும் நீடித்தது; ஆனல், அதனல் மோசடியைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஆகையினல், அவர் காலத்தியப் பேரரசப்படை போதிய பலத்தைப் பெற்றிருக்கவில்லை; இராணுவத் துறையில் பயனற்றதாகவும் இருந்தது. அதிகாரிகளுக்கு ஊதியம் கொடுக்கும் விஷயத்தில் மராட்டிய அரசாங்கம் முகலாயப் பழக் கத்தையே பின்பற்றியது என்பது குறிப்பிடத்தக்கதாகும். மாவட்ட நிறுவனத்தில் அமர்த்தப்பட்டிருந்த கர்குன்களுக்கு (Karkuns) பேஷ்வாக்கள் (Peshwas) பன்னிரண்டு மாதங்களில் பத்து மாதங் களுக்கே சம்பளம் கொடுத்தனர். ஒவ்வொரு மராட்டிய வீரரும் பராமாஹி சக்ரி (Baramahi Chakri) தஹாமாஹி அல்லது அக்ரா மாஹி ஊதியத்தை (Dahamahi or Akramahi Pay) அறிந்திருந் தனர்.[3]

பொதுப்பணித்துறையின் குறைபாடுகள் : கூடியவரை எல்லாவித தள்ளுபடிகளைக் கழித்தபிறகும், முகலாய அரசாங்க

1 W. Irvine, 'Army of the Indian Mughals', p. 45.
2 Manucci, 'Storia do mogor,' ed. Irvine, vol. ii, p. 379.
3 S. N. Sen, 'Administrative System of Marathas,' p. 573.

அலுவலர்கள் மிக அதிகமான சம்பளங்களைப் பெற்றுவந்தனர். அதனால் மிகவும் திறமை படைத்தவர்களும் மிகவும் புதிய துணிகரச் செயல் செய்யும் மேற்கு ஆசியாவினரும் அப் பேரரசு பணிக்கு ஈர்க்கப்பட்டனர்.[1] முகலாயர் ஆட்சிக் காலம் முழுவதிலும் சிவில் நிர்வாகத்திற்கும் போருக்கும் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்புமிக்க முகம்மதியர்கள் யாரெனில், அயல்நாட்டுத் துணிகர வீரர்களும் மதமாற்றம் செய்யப்பட்ட இந்துக்களுமாவர். ஆனால், இந்திய நிலத்தில் முந்திய வகுப்பு விரைந்து சீர்குலைந்தது. அந்நிய நாடுகளிலிருந்து வந்து இங்குக் குடியேறுபவர்கள் இடையறாமல் பொதுப்பணி நிர்வாகத்தில் அமர்த்தப்பட்டதனால்தான் அதன் தரம் குறையாமல் காப்பாற்ற முடிந்தது. அவுரங்கசீப்பின் ஆட்சிக் காலத்திற்குப் பிறகு நாட்டில் குடியேறுபவர்களின் வருகை நின்றவுடன், பேரரசு 'மென்மரப் பகுதியிலிருந்து துண்டிக்கப்பட்ட மரம் போல் சுருங்கத் தொடங்கியது.'[2] அக்பரால் நிலைநாட்டப்பட்ட பணித்துறையினர் மிக உயர்ந்த சம்பளத்தைப் பெற்றபோதிலும், அப் பணித்துறை கவர்ச்சிமிக்க வாழ்க்கைப் போக்காக இருந்த போதிலும், அதில் சில திட்டவட்டமான குறைபாடுகள் இருந்தன. ஓர் அதிகாரியின் வாழ்க்கைத் தரத்தை நீடித்து வைப்பதற்கான செலவு ஏராளமானதாக இருந்தது. கருவூலத்திலிருந்து ரொக்கமாக ஊதியம் கொடுப்பதாயிருந்தால் அது சரிவர வந்து சேருவதில்லை. ஜாகீர்கள் ஏட்டில் எவ்வளவு லாபமிக்கவையாய் இருந்தனவோ அவ்வளவு லாபமிக்கவையாகச் செயல்முறையில் இருக்கவில்லை. ஆயினும், சிக்கனத்தின்மீதும் விவேகத்துடன் வாழ்க்கை நடத்திக் கொஞ்சங் கொஞ்சமாகச் சேமித்த பொருளின்மீதும் தடை விதித்ததுதான் அத் துறையின் மிகப் பெரிய குறைபாடாகும். வெளிப்படையாகச் சுதந்திர நிலையில் தமது குடும்பத்தை நடத்த எவ் அதிகாரியும் துணிச்சல் பெற்றிருக்கவில்லை. எவ் அதிகாரியும் தமது வாரிசுகளுக்கு அந்தஸ்து அல்லது செல்வத்தை விட்டுச்செல்வதை அவரிடம் எதிர்பார்க்கவில்லை; அவ்விதம் விட்டுச்செல்ல அனுமதிக்கப்படவுமில்லை. அந்த அதிகாரி தமது சொந்த முயற்சியால் திரட்டிய செல்வமும் அவர் மரணத்தின்பொழுது பேரரசின் சொத்தாகிவிட்டது. தாம் இறந்தபிறகு தமது குடும்பம் பேரரசரிடமிருந்து வாழ்க்கை நடத்துவதற்காகப் போதிய அளவு பண வுதவி பெறும் என்பதையும், தமது பிள்ளைகளுக்குப் பேரரசர் தக்க உத்தியோகங்களை அளிப்பார் என்பதையும்மட்டும் அவ்வதிகாரி அதிகபட்சமாக எதிர்பார்க்கலாம்.[3] இவ்விதமாக, சிக்கனத்திற்கு

1 W. H. Moreland, *ibid.*

2 W. Irvine, 'Later Mughals', Vol. ii. p. 308.

3 ஒருவேளை மிகைப்படுத்தி எழுதப்பட்ட ஒரு டச்சு அறிக்கையின்படி, 1641-ல் ஆசப்கானின் (Asab Khan) இறப்பின்பொழுது ஷாஜஹான் 19 கோடி

எவ்வித ஊக்கமுமில்லாமற்போய்விட்டது. ஏனெனில், சேமிக்கப்பட்ட பணம் ஒருவர் வாழ்நாளிலே ஏதாவது ஒரு சாக்குப்போக்குக்காகப் பறிமுதல் செய்யப்பட்டது அல்லது அவர் இறப்புக்குப்பின் மீண்டும் பேரரசர் கைவசப்பட்டது. ஆகையினால், சராசரி அதிகாரி ஒருவர் தாம் சம்பாதித்ததைவிட அதிகமான தொகையை ஆடம்பர வாழ்க்கையில் செலவிட்டு, மேலும் மேலும் ஏழைமக்களை வெட்கமில்லாமல் சுரண்ட ஆரம்பித்தார். 'பெறப்பெற மேலும் பெற வேண்டும்' என்பது ஃபிரெஞ்சு பழமொழி; அதற்கேற்ப முகலாயப் பேரரசின் அதிகாரப் பிரமுகர்களின் தாராளமாகச் செலவழிக்கும் பழக்கம் காலப்போக்கில் மேலும் தீவிரமாயிற்று. இறுதியில் அப் பேரரசின் சீர்குலைவுக்கு அதுவே ஆற்றல் மிக்க காரணமாயிற்று. பதவி உயர்த்தல், ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாற்றுதல் போன்ற விஷயங்களில் முகலாய அதிகாரி எதேச்சாதிகாரியின் கைப்பாவையாக இருந்தார்; எதையும் எளிதில் நம்பக்கூடிய தன்மையைப் பெற்றிருத்தலும், தமக்கெதிராக நடக்கும் சதிகளைத் தடுப்பதற்கான திறனைப் பெற்றிருத்தலும்தாம் உண்மையில் முன்னேற்றத்திற்கான கடவுச் சீட்டாகும் (Passport) என்பதை அவ்வதிகாரி அனுபவத்திலிருந்து அடிக்கடி கற்றுக்கொண்டார். ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்தில் அதிகாரிகளை ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கும், ஒரு பதவியிலிருந்து மற்றொரு பதவிக்கும் மாற்றும் முறை ஒன்று கையாளப்பட்டு வந்தது. அதனால் அவர்களுக்குப் பெருஞ் செலவு ஏற்பட்டது. ஒருவேளை இது ஷாஜஹான் குறைந்த காலத்திற்கே ஊதியம் தரும் முறைக்கு நிகரான முறையாக இருக்கக்கூடும். இவ்விதமாகக் கூடுதலான செலவை ஏந்திக்கொள்ளும் பொறுப்பு விவசாயிகளின் மீதும் தொழிலாளர்களின்மீதும் சுமத்தப்பட்டது. அவர்களை மாகாண அதிகாரிகள் இரக்கமின்றிச் சுரண்டினர்.

முக்கிய அமைச்சர்கள்: முகலாயப் பேரரசர் கட்டுப்பாடற்ற அதிகாரத்தைப் பெற்றிருந்தபோதிலும், எல்லா முகம்மதி

ரூபாய் வரப்பெற்றார். ஆமதாபாத் தொழிற்சாலையின் ஆங்கிலேயத் தலைவர் ஒருவரின் சொத்துக்காக இறையுரிமைப்பாட்டு முறையைக் கையாள ஜஹாங்கீர் முயன்றார்; ஆனால், அவ்வுரிமைக் கோரிக்கை 1624-ல் கைவிடப்பட்டது (Moreland, 'From Akbar to Aurangzeb,' p. 278). அவுரங்கசீப் இம் முறையை அனுசரித்துத் தமது சொந்தத் தாய்மாமனை ஷயிஷ்டகானின் சொத்தையும் மஹாபத்கானின் உடைமையையும் அபகரித்தார்; காபூலின் கவர்னரான அமீர் கான் இறந்தபொழுது, ஒரு வைக்கோல் துண்டையும் விடாமல் அவருடைய சொத்தையெல்லாம் கைப்பற்றுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது. ('Letters of Aurangzeb', ed. Bilimoria, Nos. xcix, cxxviii, cxlvi.)

யர்களையும் கட்டுப்படுத்திய குர்ரானது கட்டளை தவிர மற்ற எந்தச் சட்டங்களாலும் விதிகளாலும் கட்டுப்படுத்தப்பட்டிராதபோதிலும், நாட்டின் அன்றாட நிர்வாகத்தில் தமக்கு உதவி புரிவதற்காக அமைச்சர்களை நியமிப்பது தமக்குச் செயல்முறையில் வசதியா யிருப்பதாக அவர் தெரிந்துகொண்டார். அக்பர் ஆட்சிக் காலத்தில் முக்கிய அமைச்சர்கள் யாரென்றால், வக்கீல் (Vakil) அல்லது பிரதம மந்திரி, நிதி அமைச்சரான வசீர் அல்லது திவான் (Vazir or Diwan), தலைமை பக்ஷி (Head Bakshi), சதர் சுதுர் (Sadr Sudur) என்பவர்கள். ஒருவகையில் இவர்களெல்லாம் முகலாய சிவில் பணித் துறையின் தலைவர்களாவார்கள். இர்வின் கூற்றின்படி, தலைமை பக்ஷி பல்வகைப்பட்ட பணிகளையாற்றிவந்தார்.[1] ஏனெனில், இவரை உண்மையில் சம்பளம் வழங்கும் தலைமை அதிகாரி என்று சொல்லலாமென்றாலும், படைக்கு ஆள்களைத் தேர்ந்தெடுத்தல், பல்வகைப் பதிவேடுகளை வைத்தல் ஆகியவைகளுக்கும் அவர் உத்தரவாதியாயிருந்தார். குறிப்பாக மன்சப்தார்கள் அல்லது உயர் அதிகாரிகளின் பட்டியல், அரண்மனைக் காவலர்களின் பட்டியல், ரொக்கமாக ஊதியம் கொடுக்கப்பெற்ற அதிகாரிகளின் பட்டியல், சம்பளம் கொடுப்பதற்கான விதிகள் முதலியவைகளை வைத்துவருவது அவர் பொறுப்பாகும். கடைசியாக, போர் ஏற்படும் தறுவாயில் பேரரசு படைகளின் முழு வருகைப் பட்டியலைப் பேரரசருக்குக் கொடுப்பது அவர் பொறுப்பாயிருந்தது. அது போன்ற சமயங்களில் பல தளபதிகளும் போர்க்களத்தில் நிற்க வேண்டிய இடங்களை அவர்களுக்கு வகுத்தமைத்தலும் அவரது பொறுப்பாகும்; நடத்தவேண்டிய போர் வெகு முக்கியமானதாக இருப்பின், அவரே ஒரு படைக்கு உயர் தலைமை தாங்கவேண்டி நேரிடும்.[2] சாதாரண வேளைகளில் தலைமை பக்ஷி பேரரசர் திவானெ ஆமில் (Diwan-i-Am) நடத்தும் பகிரங்க தர்பாரில் எப்போதும் கலந்துகொள்வார். ஷாஜஹானின் ஆட்சிக் காலம்வரை கொம்புகளில் கட்டப்பட்ட அழகிய கூடாரமாகவே அந்த தர்பார் இருந்துவந்தது.[3] அவ்விடத்தில், இவ்வதிகாரி மன்சப்தார்களிடமிருந்து வந்த மனுக்களைச் சமர்ப்பித்து அவற்றின்மேல் பேரரசரின் ஆணைகளையும் பெற்றார்; தவிர, பதவி உயர்த்தல், இடம் மாற்றல் ஆகியவற்றைப்பற்றிய செயல்துறைக் கட்டளைகளையும் பேரரசரிடமிருந்து பெற்றார். பேரரசின் தலைநகருக்கு விஜயம் செய்திருக்கும்

1 W. Irvine, 'The Army of the Indian Moghuls,' p. 38.

2 V. A. Smith, 'Akbar the Great Moghul', p. 358.

3 நாற்பது தூண்களால் தாங்கப்பட்டும், சிவப்பு மணற்கல்லால் கட்டப்பட்டுமுள்ள தற்கால திவானெ ஆம் 1638-ல் ஷாஜஹானால் கட்டப்பட்டதாகும். J. N. Sarkar, 'Studies in Mughal India', p. 6.

மாகாண அதிகாரிகளையும் அவர் அறிமுகப்படுத்திவைத்தார். அக்பர் ஆட்சிக் காலத்தின் தொடக்க ஆண்டுகளில், அவருடைய முன்னவர்களுடைய காலத்தில் இருந்ததுபோலவே சதர் என்ற பதவி மிக மதிப்பு வாய்ந்ததாக இருந்தது. அப் பதவியாளர் பேரரசரில் நான்காவது அந்தஸ்தைப் பெற்ற அதிகாரியாவார்; சட்ட அதிகாரிகளுக்கெல்லாம் தலைமை அதிகாரியாவார்; திருக்கோயில் தொடர்பாக அல்லது தரும காரியங்களுக்காக நிலங்களை அளிக்கும் விஷயத்தில் பெரும்பாலும் அளவற்ற அதிகாரத்தையும் அவர் பெற்றிருந்தார். சமய உயர் நீதிமன்றத்திற்குரிய அதிகாரங்களுக்குச் சமமான அதிகாரங்களையும் அவர் செலுத்தினர். முரணான சமயக் கருத்துக் கொண்டவர்களுக்கு மரணதண்டனை அளிப்பதற்கும் அவருக்கு அதிகாரம் இருந்தது.[1] ஆயினும், இஸ்லாமிய தத்துவங்களில் அக்பரின் பற்றுப் படிப்படியாகக் குறைந்து கொண்டிருந்த சமயத்தில், 1578-ல் அவர் திருக்கோயில் தொடர்பான கொடைகளின்மீதும், அறக்கொடைகளின்மீதும் அவ்வதிகாரி பெற்றிருந்த ஆதிக்கத்தை அவரிடமிருந்து பறித்துக்கொண்டார்; அக் கொடைகள் துருக்கியில் சயுர்கால் (Sayurghal) என்றும் பாரசீக மொழியில் மததெ மாஷ் (Madad-i-Maash) என்றும் வழங்கிவந்தன. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு (1581, நவம்பரில்) அவர் அப் பதவியை முற்றும் எடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக ஆறு மாகாண சதர் பதவிகளை ஏற்படுத்தினர். அம் மாகாணங்களாவன: (1) டெல்லி, மாளவம், குஜராத்து; (2) ஆக்ரா, கல்பி Kalbi), கலஞ்சார் (Kalanjar); (3) ஹாஜிபூர் (Hajipur) முதல் சர்ஜு (Sarju) அல்லது காக்ரா (Ghaghra) நதிவரை; (4) பீஹார்; (5) வங்காளம்; (6) பஞ்சாப் (Punjab). அதே சமயத்தில், பெரிய நகரம் ஒவ்வொன்றிலும் அக்பர் கீழ்த்தர நீதித்துறை அதிகாரிகளைக் கண்காணிக்க ஒரு தலைமைக் காஸியை (Kazi) நியமித்தார்; மோசடி, லஞ்சம், தாமதம் போன்ற குறைகளை ஒடுக்குவதற்காக அவ் அதிகாரி நியமிக்கப்பட்டார். அவருடைய திட்டங்கள் ஓரளவே வெற்றிகண்டன. காஸிகளின் கூட்டம் லஞ்சம் வாங்கும் கூட்டம் என்று பெயர்பெற்றிருந்தது. அக்பரின் ஆட்சிக் காலந்தொட்டு அவர்களுடைய துறை பழிச்சொல்லுக்கும் அவதூற்றுக்கும் இலக்காக இருந்தது. மக்கள் பெற்ற அனுபவங்களும், கொண்ட மதிப்பீடும் முகலாயர்கள் காலத்திலிருந்து பழமொழிகளாக வழங்கி வருகின்றன. அப் பழமொழிகள் சட்டத்தின் 'அணிகலன்'களான இவ்வதிகாரிகளின் வஞ்சகத்தையும் நம்பத்தகாத நிலையையும் எடுத்துக்காட்டுகின்றன. மற்ற நிர்வாகப் பணியாளர்கள் இராணுவ அதிகாரிகளின் அந்தஸ்தைப் பெற்றதுபோல சிவில் அதிகாரிகளில்

[1] V. A. Smith, 'Akbar the Great Moghul', p. 42.

அவ்வித அந்தஸ்தைப் பெற்றிராதவர்கள் சதர்களும் காஸிகளுமே யாவர்.

படை : முகலாயர் படை அமைப்பைப்பொறுத்தவரை, பெரிய நிரந்தரப் படை எதுவும் வைத்துவரப்படவில்லை. போருக்காகவும் உள்நாட்டுப் பாதுகாப்புக்காகவும் பேரரசர்கள் நான்கு வகைப் பட்ட படைகளை நம்பியிருந்தார்கள். அவையாவன : (a) தன்னாட்சி பெற்ற, ஆனாலும், கப்பம் செலுத்தும் தலைவர்களால் திரட்டப் பட்டு அவர்களின் தலைமையின்கீழ் இருந்த ஒழுங்குமுறை சார்ந்திராத படைவீரர்கள்; (b) அதிகாரப் படிநிலை அமைப்பில் அவரவர்கள் பெற்றிருந்த தரத்தின்படி மன்சப்தார்கள் வழங்கிய அதே மாதிரியான படைகள்; (c) அரசாங்கத்தால் ஊதியம் அளிக்கப்பட்டு மன்சப்தார்களின் தலைமையின்கீழ் வைக்கப்பட்டிருந்த தாக்கிலீக்கள் (Dahili) அல்லது துணைப்படைகள்; (d) அஹாதீக்கள் (Ahadis) அல்லது உரிமை பெற்ற படைவீரர்கள். பேரரசருக்கு முதலில் விண்ணப்பம் கொடுத்து அவரால் மன்சாப்தார்களாகத் தேர்ந்தெடுக்கப்பட நல்வாய்ப்பைப் பெற்றிராத நல்ல பதவிகளையும் குடும்பங்களையும் சார்ந்த இளைஞர்கள் இப் படையில் அடங்கியிருந்தனர். முதல் வகையைப் பொறுத்தவரை, பேரரசின் பல்வேறு பாகங்களின் தல ஆட்சியின் பொறுப்பு ராஜாக்களின் கையிலும் சிற்றரசர்களின் கையிலும் இருந்தது. இவர்கள், அய்னி அக்பரியில் ஜமீன்தார்கள் என்ற கவர்ச்சியற்ற பெயரால் பொதுவாகக் குறிக்கப்பட்டுள்ளனர். மன்சப்தார் அல்லது அதிகாரி அல்லாமல் பேரரசருக்கும் தீர்வை செலுத்தும் குடியானவர்களுக்குமிடையில் இருந்த எம் மனிதனையும் அப் பெயர் குறிப்பதாகும். அக்பரின்கீழ் அதுபோன்ற பகுதிகளின் நிர்வாகம் கடுஞ் செயல்முறை அமைப்பைக்கொண்டிருந்தது. அந்த இராஜாவோ நிலக்கிழாரோ கொல்லப்படுவதிலிருந்தோ, சிறையடைக்கப்படுவதிலிருந்தோ, தமது உடைமைகள் பறிக்கப்படுவதிலிருந்தோ தம்மைக் காப்பாற்றிக்கொள்ள விரும்பினால், அவர் பேரரசின் மேன்மையான அதிகாரத்துக்குக் கீழ்ப்படிந்து, அவ்வப்பொழுது அரசவைக்கு வந்தும், விலைமிக்க வெகுமதிகளைக் கொடுத்தும் (Pesh Kash), தக்க தீர்வை அல்லது கப்பத்தைச் செலுத்தியும், போர்ச் சமயங்களில் படையுதவி அளித்தும் தமது கீழ்ப்படிதலைச் செயல்முறையில் தெரிவித்துக்கொள்ள வேண்டும். அக்பர் தம் அதிகாரத்தின் உச்சநிலை அடைந்தபொழுது அதுபோன்ற இருபது தலைவர்களும் இளவரசர்களும் அவர் பணிக்காகக் காத்திருந்தனர். அவர்களில் ஒவ்வொருவரும் ஒரு படையை வழங்கி, போர் நடந்தால் அதற்குத் தலைமையும் தாங்கினர்.[1] இரண்டாவது வகையைப் பொறுத்தவரை,

1 W. Irvine, 'Later Mugahls'; V. A. Smith, 'Akbar'; Moreland, 'India at the Death of Akbar'.

அதைப்பற்றி ஏற்கெனவே ஓரளவு கூறப்பட்டிருக்கிறது. மன்சப்தார்களால் வழங்கப்பட்ட படைகள் பெரும்பாலும் குதிரைப்படைகளாகவே இருந்தன. மேல்குறிப்பிட்டதுபோல, ஒவ்வொரு பதவியாளரும் குறிப்பிட்ட எண்ணிக்கை வீரர்களையும், குதிரைகளையும், யானைகளையும் வழங்கவேண்டும் என்றும், அவ் வீரர்களுக்குப் போதிய ஆயுதங்களும் மற்றத் தளவாடங்களும் கொடுக்கவேண்டும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. இவ் ஆள்கள் பயிற்சி பெறவேண்டும் என்று எதிர்பார்க்கப்படவில்லை. இவர்கள் பல விதங்களில் ஆடைகளை அணிந்துகொண்டு பல்வகையான ஆயுதங்களைத் தாங்கி நின்றனர். அவர்களைத் தேர்ந்தெடுத்த அதிகாரிகளை அவர்கள் தமது சொந்தத் தலைவராகக் கருதினார்கள். மற்ற வகைப்பட்ட படைகளைவிட மன்சப்தார்களால் வழங்கப்பட்ட இவ்விதமான படைகளையே அக்பர் அதிகமாக நம்பியிருந்தார் என்று சொல்லப்படுகிறது. ஆள்கள், குதிரைகள், ஆயுதங்கள் ஆகியவற்றை வழங்குவதில் பொதுவாக மோசடி நடந்தபோதிலுங்கூட அக்பர் அவர்களையே நம்பினார். பேரரசப் படையின் ஒரு கிளையாக இருந்த இப் படையின் திறனை நிலைநிறுத்துவதற்காக அக்பர் விதிகளையும் ஒழுங்கு முறைகளையும் பிறப்பித்தார் என்பதில் ஐயமில்லை. அவருக்குப் பின்வந்தவர்களின் சுறுசுறுப்பற்ற மேற்பார்வையின் காரணமாகப் போர்புரியும் படை என்ற நிலையில் அவைகளின் மதிப்புப் பெரிதும் சீர்குலைந்தது. *1739*-ல் நாதிர்ஷாவுடன் டெல்லிக்கு வந்த கிஸில்பாஷெர்களுக்கு (Turks and Turkomans) அப் படைகள் மிகத் தாழ்வாயிருந்தன.

மூன்றும் வகுப்பைச் சார்ந்த தாகிலிகள் அல்லது அரசாங்கத்திலிருந்து ஊதியம் பெறும் படைகள் பொதுவாக எண்ணிக்கையில் அதிகமாக இல்லை. அக்பர் *1581*-ல் தமது மாற்றுந்தாய் மகனை முகம்மது ஹகீம் (Muhammad Hakim) கலகம் நடத்தியதால் காபூலின்மீது படையெடுத்தபொழுது அரசாங்கக் கருவூலத்திலிருந்து ஊதியமும் தளவாடங்களும் வழங்கப்பட்ட படைகளில் *45,000* குதிரைப்படை வீரர்களும், *5,000* யானைகளும், எண்ணற்ற காலாட் படையினரும் பின்தொடர்பவர்களும் இருந்தனர் என்று மான்சர்ரேட் (Monserrate) குறிப்பிடுகிறார். ஆனால், இது பணத்தை ஏராளமாகச் செலவிட வேண்டியிருந்த விசேஷ சந்தர்ப்பமாகும். சாதாரணச் சூழ்நிலைகளில், அரசாங்கத்தினிடமிருந்து ஊதியம் பெற்ற படையின் எண்ணிக்கை *25,000*-க்கு மேற்பட்டிராது என்று புலோச்மன் கணக்கிடுகிறார். நான்காம் வகையினரான அஹாதீக்கள் அல்லது உரிமை பெற்ற ஆயுதம் தாங்கிய படைவீரர்கள் வழக்கமாக மன்சப்தார்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தஸ்துள்ள வகுப்பிலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டனர்;

நல்வினை அவர்களைத் தழுவினால் அவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பணிக்குப் பிறகு மன்சப்தார்களாகவும் பதவியில் உயரலாம். மாபெரும் பிரபு ஒருவரின் தனிப்பட்ட தலைமையை அவர்கள் கொண்டிருந்தனர்; அவர்களுக்கென்று ஒரு பக்ஷி அல்லது சம்பளங் கொடுக்கும் அதிகாரி இருந்தார். பல்வகைப்பட்ட கடமைகளில் அவர்கள் அமர்த்தப்பட்டனர். சிலர் அரசதூதர்களின் மெய்காப்பாளர்களாகப் பணியாற்றினர்; சிலர் பேரரசின் அந்தப்புரத்தின் பாதுகாவலர்களாகப் பணியாற்றினர். இன்னும் சிலர் பேரரசரது முகாம்கள், பழத்தோட்டங்கள், நூலகங்கள்போன்ற இடங்களில் பதவிகள் வகித்தனர். ஓர் அஹாதியின் சம்பளம் ஒரு சாதாரணப் படைவீரரின் சம்பளத்தைவிட அதிகமானதாக இருந்தது. ஒரு சாதாரணப் படைவீரன், அவனுடைய குதிரைக்கும் தளவாடத்துக்கும் செலவிடவேண்டியதைக் கழித்துவிட்டால் ஒரு மாதத்திற்கு ஏழு அல்லது எட்டு ரூபாய் சம்பளமாகப் பெற்றான். 'அய்னி அக்பரியின்'படி, பல அஹாதீக்கள் ஒரு மாதத்திற்கு 500 ரூபாய்க்கு மேற்பட்டே வாங்கினார்கள். இதற்கு மாறாக, அஹாதி பன்னிரண்டு மாதங்களில் 9½ மாதங்களுக்கே சம்பளம் வாங்கினர்; மற்ற 2½ மாதச் சம்பளம் குதிரை, தளவாடங்கள் ஆகியவற்றின் செலவைக் கொடுத்துத் தீர்ப்பதற்காகக் கருவூலத்திலேயே வைத்துக்கொள்ளப் பட்டது.[1]

பீரங்கிப் படை முற்றும் பேரரசப் படையாகவோ அல்லது அரசாங்க ஊதியம் பெறும் படையாகவோ இருந்தது. அது அரசரது இல்லத்தில் ஒரு துறையாகவே நிருவகிக்கப்பட்டுவந்தது. இக் கிளையைச் சார்ந்த வீரன் ஒருவனுக்கு மாதச் சம்பளம் மூன்று ரூபாயிலிருந்து ஏழு ரூபாய்வரை இருந்தது. பாபர்தான் முதல் முதலாக 1526-ல் பானிபட்டு (Panipat) போரில் பீரங்கிப் படையைப் பயன்படுத்தினர் என்பதற்குத் திட்டவட்டமான சான்று உள்ளது. மிக்க எடையுள்ள குண்டுகளை ஏந்திச் செல்லும் பீரங்கிகளை ஹுமாயூன் பெற்றிருந்தார். இயந்திரக் கலைகளில் மிக்க கருத்துடையவரும், தானே அவற்றை இயக்கியவருமான அக்பர் பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் தயாரிப்பதில் தனிக் கவனம் செலுத்தினர். மிக்க கனமான பீரங்கிகள் சில அவரிடத்தில் இருந்தன. ஒவ்வொரு பீரங்கியும் பல யானைகளாலும் ஆயிரம் எருதுகளாலும் இழுக்கப்பட்டது. பாரமான பீரங்கிப் படையைப் பொறுத்தவரை அவர் ஒரு பாணியையே உண்டாக்கினர் என்று கூறலாம். அதனுடைய எண்ணிக்கை முகலாயப் பேரரசு சீர்குலைந்துகொண்டிருந்தபோது மேலும்

1 Blochmann and Jarrett, 'Ain-i-Akbari', Moreland, 'India and at the Death of Akbar', V. A. Smith, 'Akbar.'

அதிகரித்தது. ஏனெனில், பீஜப்பூரிலிருக்கும் மாலிக்-இ-மைதான் (Malik-i-Maidan at Bijapur), ஜுனகட்டிலுள்ள லீலம் தோப் (Lilam Top at Junagadh), ஆக்ராவிலுள்ள பெரிய பீரங்கிபோன்ற பீரங்கிகளெல்லாம் இப் பிற்காலத்திற்குரியவையே. இவையெல்லாம் இந்தியாவில் பல்வேறு பாகங்களில் இன்னும் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன. அக்பர் காலந்தொட்டு இந்தியப் பீரங்கி பெருஞ் சுமையாக இருந்ததனுல் உண்மையில் பலனளிக்கவில்லை. அது மிகவும் நேரங் கழிந்தும் குறிதவறியும் சுட்டது. அக்பரது மிகப் பளுவான பீரங்கிகளும் ஆசிர்கர் (Asirgarh) போன்ற உறுதியான அரணின் சுவர்களைத் தகர்க்கமுடியவில்லை. பதினரும் நூற்ருண்டில் முகலாயப் படை பெற்றிருந்த பீரங்கிகளைவிடப் போர்ச்சுகீசியர்களின் (Portuguese) பீரங்கிகள் மிகச் சிறந்தவையாக இருந்தன. பதினெட்டாம் நூற்ருண்டில் நாதர் ஷாவின் (Nadir Shah) ஒழுங்கு பெற்ற பீரங்கி வீரர்களால் இயக்கப்பட்ட ஜஸைர் (Jazair) அல்லது சுழலும் பீரங்கிகளால் முகலாயப் பீரங்கிகள் சிறப்பிழந்தன.[1] சாதாரணக் குடியானவர்களிலிருந்தும் நகரவாசிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட காலாட் படை அதேபோன்று ஏமாற்றத்தை அளித்தது. ஒழுங்காக அமர்த்தப்பட்ட வீரர்களோடுகூடப் பல்வகைப்பட்ட மனிதர்களும் அதில் இருந்தனர். மூன்று ரூபாயிலிருந்து ஆறு ரூபாய்வரை மாதச் சம்பளம் பெற்ற துப்பாக்கி வீரர்களைப்பற்றியும், இரண்டரை ரூபாய்முதல் மூன்று ரூபாய்வரை ஊதியம் பெற்ற சுமை தூக்குபவர்களைப்பற்றியும், இரண்டு ரூபாயிலிருந்து பதினைந்து ரூபாய்வரையிலும் மாதக் கூலி பெற்ற காட்சிச் சண்டை வீரர்கள், மல்லர்கள் ஆகியவர்களைப்பற்றியும், ஒரு தாம்மிலிருந்து (dam) ஒரு ரூபாய்வரை ஒரு நாள் கூலியாகப் பெற்ற அடிமைகளைப்பற்றியும் 'அய்னி அக்பரி' குறிப்பிடுகிறது. இவ் ஆள்களுக்குப் படைப்பயிற்சி சரிவர அளிக்கப்படவில்லை. சுடுபடைக்கலன்களைப் பயன்படுத்த அவர்கள் திறனற்றிருந்தனர். பதினேழாம் நூற்ருண்டில் ஷாஜஹான், அவுரங்கசீப் படைகளில் மதிக்கக்கூடிய துப்பாக்கி வீரர்கள்—பக்ஸாரைச் சார்ந்த பீஜப்பூரின் சுல்தான்களால் பெரும்பாலும் அமர்த்திக்கொள்ளப்பட்ட இந்துக்களும், பந்தேளாக்களும், கர்நாடகர்களும், அலகபாத் (Allahabad) மாகாணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்டையாடும் சிறு வகுப்பினரான பகேலியாக்களுமே (Bahelas)[2] ஆவர். காலாட் படையின் பொதுப் பண்பைப்பற்றி இர்வின் பின்வருமாறு சுருங்கக் கூறுகிருர்: 'பதினெட்டாம் நூற்ருண்டின் இடைக்காலம்வரை, ஃபிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் ஒழுங்குபெற்றிருந்த காலாட் படை

1 W. Irvine, 'Later Mughals', vol, ii; Crooke, 'Things Indian.'

2 W. Irvine 'Later Mughals', vol. ii.

யின் சிறப்பான நிலையை வெளிப்படுத்திக் காட்டினார்கள்; சமயத்தில், இந்தியக் காலாட்படை வீரன் பெரும்பாலும் இரவுக் காவல்காரனைப் போலவும், முகாமிலாகட்டும் அணிவகுத்துச் செல்லும்போதாகட்டும் மூட்டைகளைக் காப்பவனாகவுமே இருந்தான்.'[1] அக்பரது ஆட்சியின்பொழுதும், அவருக்கு அடுத்துப் பின்வந்தவர்களின் ஆட்சியின்பொழுதும் குதிரைப் படை ஒன்றுதான் மதிப்பிற்குரியதாகவும், பண்பு மிக்கவர்கள் சேர்வதற்குத் தகுதியுள்ளதாகவும் கருதப்பட்டது என்பதில் ஐயமில்லை. ஆனால், மற்றப் பிரிவுகளெல்லாம் இழிவான பணியாற்றும் பிரிவுகள் என்றே கருதப்பட்டன. இதற்கு ஓரளவு விலக்கு பீரங்கிப் படையாகும். அதில் அயல் நாட்டு வல்லுநர்கள் மிகப்பலர் சேர்க்கப்பட்டிருந்தனர்.

முகலாயப் படையின் திட்டவட்டமான எண்ணிக்கையைப் பற்றி உறுதியாக ஒன்றும் சொல்வதற்கில்லை. 1648-ல் ஷாஜஹானின் படையில் 440,000 வீரர்கள் இருந்தனர் என்றும், அதில் 200,000 குதிரை வீரர்கள், 8,000 மன்சப்தார்கள், 7,000 அஹாதியர்கள், 40,000 காலாட்படை, துப்பாக்கி வீரர்கள், பீரங்கி வீரர்கள், 185,000 குதிரைப் படைவீரர்கள் அடங்கியிருந்தனர் என்றும், அவர்களுக்கு இளவரசர்களும் பிரபுக்களும் தலைமை தாங்கினர் என்றும் பேராசிரியர் J.N. சர்க்கார் கணக்கிடுகிறார். இவ்வெண்ணிக்கையில், பர்கானாக்களில் நிறுத்தப்பட்ட பௌஜ்தார்கள் (Faujdars), குரோரிகள் (Kroris), அம்லாக்கள் (Amlas) ஆகியவர்களின் தலைமையைக்கொண்ட தல இராணுவப் படைகள் சேர்க்கப்படவில்லை.[2] இந்த இராணுவப் படைகளுக்கு 'பூமி' (Bumi) என்று பெயர் வழங்கிவந்தது. இது பெரும்பாலும் காலாட் படைகளையும், சிற்சில வேளைகளில் குதிரைகளையும், யானைகளையும், பீரங்கிகளையும், படகுகளையும் பெற்றிருந்தது. ஒவ்வொரு சர்க்காரும் அதன் படைக்குப் பொறுப்புடையதாயிருந்தது. ஷாஜஹானே தாம் சிறையில் அடைக்கப்படுவதற்குச் சற்று முன்பு எழுதிய கடிதம் ஒன்றில், தாம் 900,000 வீரர்களுக்குத் தலைவராவார் என்று குறிப்பிடுகிறார். ஆனால், உண்மையில் போர்க்களத்தில் பணிசெய்வதற்காக இருந்த வீரர்களின் எண்ணிக்கை, ஒருவேளை அவ்வெண்ணிக்கைக்குக் குறைந்திருக்கக்கூடும். எந் நிலையிலும் அக்பரின் காலத்தில் முகலாய இராணுவப் படையின் மொத்த எண்ணிக்கையைப்பற்றிய சரிநுட்பமான மதிப்பீடு கொடுக்க இயலாது. பட்டாணியர்களும் (Pathans) இராஜபுத்திரர்களும் பெருவாரியாக இருந்த குதிரைப் படையில் 250,000 வீரர்கள் இருந்திருக்கக்கூடும்.[3] ஆனால், மற்றப்

[1] W. Irvine, 'Army of the Indian Mughuls', p. 57.
[2] J. N. Sarkar, 'Studies in Mughul India', p. 20.
[3] W. H. Moreland, 'India at the Death of Akbar'.

படைகளைப்பற்றிய நம்பத்தக்க போதிய செய்திக் குறிப்புகள் கிடைக்கவில்லை. ஆயினும், அக்பரின் கீழும் அவருக்குப் பிறகு வந்தவர்களின் கீழும் இருந்த படைகளின் எண்ணிக்கை அதிகமாகவே இருந்தபோதிலும், படையின் உணவுப் பணித்துறை எதுவும் பணியாற்றவில்லை. போக்குவரத்து விஷயத்தில், ஒவ்வொரு வீரனும் தேவையான ஏற்பாடுகளைத் தானே செய்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. பாசறையுடன் வந்துகொண்டிருந்த பெரிய அங்காடிகளும், படைகளுக்கு உணவூட்டுவதற்காகத் தானியங்களை கொண்டுபோவதைத் தொழிலாகக் கொண்டிருந்த பன்ஜாரா (Banzaras) இனத்தைச் சார்ந்த நாடோடிகளும் தேவைப்பட்ட பொருள்களை வழங்கிவந்தனர்.[1] இது போன்ற நாகரிகமற்ற ஏற்பாடுகள் முகலாயர்களின் காலம் முழுவதிலுமிருந்து தற்காலம்வரை நீடித்து நிலைத்திருந்தன. ஏனெனில், 1792-ல்கூடக் காரன்வாலிஸ் பிரபுவின் 'படை' திப்பு சுல்தானின்மீது (Tippn Sultan) படையெடுத்தபொழுது 400,000 பஞ்சராக்களைக்கொண்ட பெரும் உதவிப் படை ஒன்று காரன்வாலிஸ் படைக்கு வழங்கீடுகள் செய்ததாக நாம் காண்கின்றோம். பின்னுளிலும் இதுபோன்ற நிகழ்ச்சிகளைக் காணலாம்.

முகலாய இராணுவ அமைப்பில் சில குறைபாடுகள் இருந்தன என்பதும், அக் குறைபாடுகள் அதனைச் சிறப்புவாய்ந்த சமகாலத்திய ஐரோப்பியப் படைகளுக்குச் சரிசமமான நிலையில் இருத்தவில்லை என்பதும், இறுதியில் அக் குறைபாடுகள் அதனைச் சீர்குலையச் செய்தன என்பதும் முந்திய பத்திகளிலிருந்து தெளிவாகின்றது. அக்பர் உயிருடன் இருந்தவரை, படையில் பல குறைபாடுகள் காணப்பட்டபோதிலும், பேரரசரின் தனிப்பட்ட சுறுசுறுப்பும் இராணுவச் சிறப்பியல்புகளும் அதை வியப்புக்குரிய திறமையைப் பெற்றிருக்கும்படி செய்தன ; ஆனால், ஜஹாங்கீர், ஷாஜஹானின்கீழ்த் தவிர்க்க முடியாததால் சீர்குலைவு தொடங்கி அவுரங்கசீப்பின்கீழ் மேலும் முனைப்புப் பெற்றது. அதனால்தான் 30,000 சிறந்த ஐரோப்பிய வீரர்கள் முகலாய அரசனின் ஆதிக்கத்தை எளிதில் ஒழித்துப் பேரரசு முழுவதையும் கைப்பற்றிவிட முடியும் என்று மனூச்சி (Manucci) கூறுகிறார். இவ்வாறு கூறுவதற்கு அவருக்கு ஒருவேளை ஆதாரங்கள் இருக்கலாம். பாசறையிலும் படையெடுத்துச் செல்லும்பொழுதும் மேற்கொள்ளப்பட்ட ஆடம்பரமும் பகட்டுமே இராணுவத்திறனுக்குத் தலையாய இடையூறுகளாக அமைந்திருந்தன. சிற்சில வேளைகளில் வழக்கங்களிலிருந்து அக்பர் விலகிக் கொள்ள முடிந்தது. இவ்வழக்கங்கள்தாம் பேரரசப் படையைச்

[1] V. A. Smith, 'Akbar,' pp. 361-2.

சமாளிக்க முடியாத நகரும் பட்டினமாக்கின. உதாரணமாக, 1573-ல் அவர் ஒரு சிறு காவற்படையுடன் தலைநகரிலிருந்து ஆமதாபாத்தின் எல்லைப்புறங்களுக்குச் சென்றபொழுது, ஒரு நாளைக்கு 50 மைல் குதிரைச்சவாரி செய்தார். ஆனாலும், வழக்கமாகத் தொன்று தொட்டு வந்த பழக்கங்களையே அவர் பின்பற்றினார். பேரரசவையின் ஆடம்பரங்களையும், அந்தப்புரத்திலுள்ள சிலரையும், அவர்களுடைய பணியாள்களையும் யானைகளின்மீதும் ஒட்டகங்களின் மீதும் சுமந்து சென்றதனாலும், பயணம் செய்யும் அரசவை மன்றத்தையும், இசைக்கலைஞர்களின் நுழை மாடத்தையும், அலுவலகங்கள், வேலைச்சாலைகள், அங்காடிகள் ஆகியவற்றையும் பேரரசப் படை கொண்டிருந்ததனாலும் வெகு எளிதாக அதனால் நகர முடியவில்லை. யானைகள், ஒட்டகங்கள் ஆகியவற்றின் வரிசைகள் பொக்கிஷங்களைச் சுமந்து சென்றன. நூற்றுக்கணக்கான மாட்டு வண்டிகள் இராணுவப் பண்டங்களைக் கொண்டுபோயின. கோவேறு கழுதைகளின் படையே பேரரசருக்குத் தேவையான தட்டுமுட்டுப் பொருள்களையும் உடைமைகளையும் தூக்கிச் சென்றன. இவ்வித வனப்பு மிக்க ஆடம்பரக் காட்சிகளை அளித்துக்கொண்டு செல்லும் பேரரசப் படையை, மராட்டியர்களின் தலைவரான சிவாஜியினால் கையாளப்பட்ட செயல்முறை நோக்கங்கொண்ட ஏற்பாடுகளுடன் ஒப்பிட்டுப்பார்க்காமலிருக்க முடியாது. சிவாஜியின் வெகு எளிதாக இயங்கும் இலேசாக இருக்கும் குதிரைப் படை, அக்பரின் தடைப்படுத்தும் முகாமை வெகு எளிதாக முறியடித்திருக்கக்கூடும். 1585-ல் நடத்தப்பட்ட காபூல் படையெடுப்பைப்பற்றித் தந்தை மான்சர்ரேட் (Father Monserrate) விட்டுச் சென்ற குறிப்புகளையும், பேரரசின் முகாமைப்பற்றி அபுல் ஃபாஸல் தந்த வருணிப்பையும் படிக்கும்போது, ஃபிளாண்டர்ஸில் (Flanders) பதினைந்தாம் லூயி (Louis XV) நடத்திய படையெடுப்பைப்பற்றிக் கார்லைல் (Carlyle) கூறுவது நினைவுக்கு வரும். அவர் கூறுவதாவது: 'பதினைந்தாம் லூயி ஃபிளான்டெர்ஸுக்குப் படையெடுத்துச் சென்றபோது அவருடைய வீட்டுச் சிப்பந்திகளும் பணியாள்களும், நாடக அரங்கின் தாள் அட்டைத் தட்டி சறுக்கிச் செல்வதற்குரிய பள்ளவரை வாய்ந்த மரக்கட்டுடனும், இடிமுழங்கும் ஊதாங்குழல்களுடனும், கொதிகெண்டிகளுடனும், வீணைகளுடனும், மேசை அலமாரிகளுடனும், நகர்த்தக்கூடிய ஓர் உணவரங்குடனும் (சச்சரவும் சண்டையும் இட்டுக்கொண்ட) நடிகர்கள் கூட்டமும் எல்லாம் வாகன்களிலும் பழமையாகிவிட்ட தொட்டி வண்டிகளிலும், குதிரை வண்டிகளிலும் ஏறிக்கொண்டுசென்றனர். இவையெல்லாம் ஃபிளாண்டர்ஸைமட்டுமன்றி உலகத்தின் பொறுமை எல்லாவற்றையுங் கூட வென்று

விடும்.'[1] ஆனலும், மிக்க கிறிஸ்தவப் பண்புடையவரான அரசனின் பரிவாரப் பகட்டுகளையும், அக்பர் மேற்கொண்டிருந்த ஆர்ப்பாட்டங் களையும் சடங்கு முறைகளையும், அவுரங்கசீப் வைத்திருந்த பேரரச முகாமின் பகட்டுகளுடனும் சுகபோக சாதனங்களுடனும் ஒப்புநோக் கிஞல், முன்னவை மிக அற்பமானவையாகவே இருக்கும். ஆமத் நகரில் இருந்த அவுரங்கசீப்பின் மகத்தான முகாமைப்பற்றி விரி வான வருணிப்பு ஒன்றை கிரான்ட் டஃப்(Grant Duff) தந்து மேலும் பின்வருமாறு கூறுகிருர்: 'பேரரசின் ஆடம்பரமற்றனவும், துறவு வகையைச் சார்ந்த தனிப்பட்டனவுமான பழக்கங்களோடு அறவே மாறுபட்டிருந்த அதுபோன்ற காட்சியின் பெருமை, அவருடைய குடிமக்களிடம் அது ஏற்படுத்திய பயத்திஞல் அவரது அதிகா ரத்தை வலுப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டிருந்தது; ஆனல், அவருடைய ஆடம்பரத்தை அவருடைய பிரபுக்களும் பின்பற்றியதஞல், அவருடைய படையின் சுறுசுறுப்பான நடமாட்டத்திற்கு அது ஒரு பெருந்தடங்கலாயிற்று; அதே சமயத்தில் அதுபோன்று அமைப்பின் அளவு மீறிய செலவுகள் நிதிநிலையை மிக மோசமாக்கி, மிக இன்றியமையாத அவரது இராணுவ-அரசியல் ஏற்பாடுகளையெல்லாம் விரைவில் நசித்துப்போகும்படி செய்தன.'[2] விவேகமற்ற இன்ப வாழ்க்கைப் பகட்டு ஆர்ப் பாட்டங்கள் அனைத்தும் இவ்விதமாகவே பழிவாங்கப்படும். அவுரங்கசீப்பின் மரணத்திற்கு வெகு நாள்களுக்கு முன்பே அரசாங் கத்தின் இராணுவ பலம் வெறுக்கத்தக்கதாயிற்று; எவ்விதத் தண்டனையும் பெருமல் பேரரசரின் அதிகாரத்தை எதிர்க்க முடிந்தது.

கடற் சிறு கப்பற் படையும் ஆற்றுச் சிறு கப்பற் படையும்: அக்பரின் காலத்தில் தற்காலக் கப்பற்படையையொத்த கப்பற்படை எதையும் முகலாயப் பேரரசு வைத்திருக்கவில்லை. கப்பல் கட்டும் தொழில்களைப்பற்றியும், ஆற்றுப் போக்குவரத்து வேலைகளைப்பற்றி யும் அபுல் ஃபாஸல் குறிப்பிட்டிருப்பதில் தற்கால எழுத்தாளர்கள் பயன்படுத்தும் 'கடற்படை' (Admiralty), 'கடற்படைத்துறை' (Naval Department) என்ற சொற்கள் தவருன கருத்தை உண் டாக்கக்கூடும். மீர் பஹ்ரி (Mir Bahri) என்ற பெயரால் 'அய்னி அக்பரி'யில் வருணிக்கப்பட்டுள்ள துறையின் முக்கிய நோக்கங்க ளாவன: (1) ஆற்றுப் போக்குவரத்துக்காக மிதக்கும் அங்காடி களையும் பூஞ்சோலைகளையும் சுமந்து செல்லும் சிறிய சரக்குப் படகுகள்முதல் பெரிய உல்லாசப் படகுகள்வரை பல்வகைப்பட்ட

1 Carlyle's, 'French Revolution', Chap. II.

2 Grant Duff, 'History of the Mahrattas,' vol. i, p. 255.

படகுகளைக் கட்டுதல். (2) கடற்கரைகள், அலைகள், வாய்க்கால்கள் முதலியவைபற்றிய அறிவு படைத்த நகோதா (Nakhoda) அல்லது படகுத் தலைவர்முதல் சாதாரணப் படகோட்டிவரை எல்லா வகையான ஆள்களையும் வழங்குதல். (5) ஆறுகளை மேற்பார்வையிடுதல்; கடவுகளையும், தோணிகளையும், படகு அணையும் மேடைகளையம் கவனித்துக்கொள்ளுதல். (4) ஆற்றுத் தீர்வைகளையும் சுங்கங்களையும் விதித்தல், பெறுதல், தள்ளிக் கொடுத்தல் ஆகிய இவைகளேயாகும். வாணிகத்துக்கு ஊக்கமூட்ட அக்பர் ஏராளமான பல்வகைப்பட்ட தீர்வைகளைத் தள்ளிக்கொடுத்தார் என்று கூறப்படுகிறது. ஆனாலும், அவர் ஒழுங்காக அமைக்கப்பட்ட கேணித் தீர்வைத் திட்டத்தை வைத்திருந்தார். அவற்றில் சூழ்நிலைக்குத் தக்கவாறு அரையோ, மூன்றில் ஒரு பங்கோ அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டது; மீதி இருந்த தொகையையும், துறைமுகங்கள் வந்து சேரும் ஏற்றுமதி இறக்குமதிகளின்மீது விதிக்கப்பட்ட தீர்வைகளில் $2\frac{1}{2}$ சதவிகிதத்தையும் தோணிக்காரர்கள் அல்லது படகுக்காரர்கள் வைத்துக்கொண்டனர். அத் தீர்வைகளிலிருந்து கிடைக்கும் தொகை அரசாங்கத்துக்கு வரவு வைக்கப்பட்டது. மக்குகளிடமிருந்தும் (Mugs) அரகான் கடற்கரையிலிருந்து வந்த அந்நியக் கப்பற் கொள்ளைக்காரர்களிடமிருந்தும் வங்காளக் கடற்கரையைக் காப்பாற்ற டாக்காவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கடற்படையில் 768 ஆயுதம் தாங்கிய கப்பல்களும் படகுகளும் இருந்தன. அக் கடற்படை தற்காலக் கப்பற்படையை ஓரளவு ஒத்திருந்தது. இக் கப்பற்படை, 1582-ல், ராஜா தோடர்மல் தயாரித்த வங்காளத்துக்கான வருமான விவர அறிக்கை ஒன்றில் முதன் முதலாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. இதற்காக மாதம் ஒன்றுக்கு ரூ. 29,000 செலவழிக்கப்பட்டது என்று மதிப்பிடப்படுகிறது. அதன் பேணுதலுக்காகக் குறிப்பிட்ட சில பர்க்கானுக்களின் வருமானம் ஒதுக்கிவைக்கப்பட்டது. ஏதாவது பற்றுக்குறை ஏற்பட்டதெனில், படகு கட்டுவதற்கான தீர்வையால் அது ஈடுகட்டப்பட்டது. அத் தீர்வை 8 அணாவிலிருந்து கால்ரூபாய்வரை இருந்தது. கப்பற்படைத் தளங்களுக்கு வரும் படகுகளின்மீதும், அத் தளங்களிலிருந்து வெளிச்செல்லும் படகுகளின்மீதும், அக் கப்பல்களில் பணியாற்றுபவர்கள் டாக்கா மாவட்டவாசிகளாக இல்லாவிடின், அத் தீர்வை விதிக்கப்பட்டது. மக்கு (Mug), ∴பெரிங்கி (Feringi) கடற் கொள்ளைக்காரர்களின் நடவடிக்கைகளெல்லாம் ஷிஹாபுத்தீன் தலிஷின் சமகாலத்திய பாரசீகக் குறிப்புகளில் எழுதப்பட்டுள்ளன. அக்பர் காலத்தில் டாக்காவின் சிறு கப்பற்படை திறனற்றதாக இருந்ததென்றும், 1605-க்குள் அக் கொள்ளைக்காரர் துணிச்சல் மிக்கவர்களாகி விட்டதனால் அவர்களை ஒடுக்க வங்காள கவர்னர் அக் கப்பற்

படையை வலுப்படுத்த முடிவுசெய்தார் என்றும் அக் குறிப்புகளிலிருந்து புலனுகிறது. இதனுல் கணிசமான பலன் எதுவும் ஏற்படவில்லை. 1639-ல் இளவரசர் ஷுஜா வைஸ்ராய் பதவியிலிருந்தபொழுது அவ் வமைப்பின் பேணுதலுக்காக ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த பர்காணுக்களின் பொறுப்பை வகித்திருந்த வருவாய்த்துறை அதிகாரிகளின் இலஞ்ச ஊழல்களினுல் அவ்வமைப்புப் பெரும்பாலும் சீர்குலைந்தது. அவுரங்கசீப்பின் வைஸ்ராயான மீர்ஜும்லாவின் சுறுசுறுப்பான நிர்வாகத்தின்போது நிலைமை ஓரளவு முன்னேற்றம் பெற்றது; ஷாயிஷ்டகானின்கீழ் 1664-ல் அக் கப்பற்படையைச் சரிவர அமைத்துக் கடற் கொள்ளைக்காரர்களை ஒழிப்பதற்காக மீண்டும் முயற்சி செய்யப்பட்டது.[1] ஆனுலும், அதனின் மகோன்னத நிலையிலுங்கூட வங்காளத்திலிருந்த கப்பற்படை அமைப்புக் குறைந்ததாகவும் திறனற்றதாகவும் இருந்தது; அக்பரின் காலத்திலும், அவருக்குப் பின் வந்தவர்களின் காலத்திலும் அராகனிப் பகைவர்களுக்கு அது நிகராக இருக்கவே இல்லையெனத் தோன்றுகிறது. அக்பரின் மரணத்தின்பொழுது இந்தியா முழுவதற்குமே இருந்த போர்க் கப்பல்களின் எடை 20,000 டன்னுக்கு (ton) மேற்பட்டிருக்கவில்லை என்று மூர்லாண்டு மதிப்பிடுகிருர்.[2] இந்த எண்ணிக்கையில் போர்த்துகீசியக் கப்பற்படையின் எண்ணிக்கையும், கடற்கரைகளிலிருந்த கப்பற் கொள்ளைக்காரர்கள் வைத்திருந்த படைகளும் அடங்கியிருந்ததனுல், முகலாயப் பேரரசின் கப்பற்படை பலம் பொருட்படுத்தக்கூடியதாக இல்லை என்பது தெளிவாகிறது. அக்பரின் ஆட்சிக் காலத்தில் கிழக்கில் போர்த்துகீசியர்களின் கப்பற்படை பலம் உச்சநிலையில் இருந்தது ; அவர்களுடைய ஆதிக்கத்தை எதிர்ப்பதற்காக எவ்வித முயற்சியும் செய்யாமலும், செங்கடலுக்கு அவர் அனுப்பிய கப்பல்களுக்காக லைசென்சுகளைப் பெற்றுக்கொண்டும் பேரரசர் அவர்களுடைய மேலாதிக்க நிலையைக் குறிப்பறிந்து ஏற்றுக்கொண்டார். சூரத்திலிருந்த (Surat) முகர்மதிய அதிகாரிகள் தங்களது துறைமுகங்களைத் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்காக அவ்வப்பொழுது ஒன்று அல்லது இரண்டு டச்சு (Dutch) அல்லது ஆங்கிலேயக் கப்பல்களின் உதவியை நாடியதிலிருந்து, அக்பருக்குப் பிறகு வந்தவர்களின் ஆட்சிக் காலத்தில் முகலாயர்கள் கப்பற்படை என்பதாக ஒன்று இல்லை என்பது மேலும் புலனுகிறது.[3]

1 R. Mookerji, 'A History of Indian Shipping &c., Mohammedan Period,' Chapter II.

2 W. H. Moreland, 'India at the Death of Akbar.'

3 W. H. Moreland, 'From Akbar to Aurangzeb', Chap. I.

பேரரசின் கப்பற்படை விவரங்களைப் பொறுத்தவரை, அவுரங்க சீப்பின் ஆட்சிக் காலத்தில் ஜஞ்சீராவைச் (Janjira) சார்ந்த சீதி (Sidi) என்பதாக ஒருவர் புதிதாகத் தோன்றி விளங்கினர். ஹப்ஷி (Habshi) அல்லது அபிஸீனியன் (Abysinian) என்று பெரும் பாலும் வழங்கப்பட்ட இம் மனிதர் பீஜப்பூரைச் (Bijapur) சார்ந்த ஆதில் ஷாஹி சுல்தானிடம் (Adil Shahi Sultan) பணியாற்றி, அவரது கப்பற்படையால் கடற்கரைகளையும் வந்து போய்க் கொண்டிருந்த கப்பல்களையும் காத்துவந்தார். ஆனல், தாம் சிவாஜியால் தாக்குண்டபொழுது சுல்தான் தமக்கு உதவ விருப்ப மற்றவராகவோ அல்லது திறமற்றவராகவோ இருப்பதாக அறிந்து கொண்ட சீதி, 1670-ல் அவுரங்கசீப்பிடம் பணியாற்றத் தமது விருப்பத்தைத் தெரிவித்தார். சிவாஜி எவ்வளவு தொல்லைகளைக் கொடுக்க முடியும் என்பதை அனுபவத்தால் உணர்ந்திருந்த பேரரசர், சீதியின் யோசனைத் திட்டங்களுக்கு இணங்கி, மராட் டியருக்கெதிராகத் தமது கப்பற்படையைப் பயன்படுத்த அவருக்கு உதவிப்பணம் தருவதற்கு ஏற்பாடு செய்தார். ஆனல், பெயரளவில் அவர் சூரத்தின் முகலாய கவர்னரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தபோதிலும், பேரரசு கருவூலத்திலிருந்து அவர் உதவிப் பணம் பெற்றபோதிலும், சீதி செயல்முறை உரிமை பெற்று விளங்கு கிருர். இவ் வுண்மையை பம்பாயிலிருந்த (Bombay) ஆங்கிலே யர்கள் வெகுவிரைவில் கண்டுகொண்டனர். அவுரங்கசீப் அவரைப் பேரரச அமைப்பைச் சார்ந்தவராகவே கருதினர்; ஒரு சமயத்தில் (1682) மராட்டியக் கப்பற்படைகளுக்கெதிராகத் தம்முடன் ஒத் துழைப்பதற்காக சூரத்திலிருந்து மற்ருெரு கப்பற்படையையும் அவர் அனுப்பிவைத்தார். ஆனல், சீதி, பேரரச ஆதிக்கத்திற்கு சம்பந்தப் பட்ட ஒரு கூலிப்படைத் தலைவரேயாவார். கிழக்கு இந்தியக் கம்பெனியைப் பொறுத்தவரை உண்மையில் கவனிக்கவேண்டிய ஒரு தனிப்பட்ட சக்தியாகவே அவர் விளங்கினர்.[1]

காவலர் படை (The Police): முகலாய இராணுவ ஏற்பாடு களைப்பற்றி ஆராய்ந்ததற்குப் பிறகு, உள்நாட்டு அமைதிக்கும் பாதுகாப்புக்கும் பொறுப்பு வாய்ந்திருந்த அமைப்பைப்பற்றி நாம் ஆராயவேண்டுவது இயல்பேயாகும். ஊர்காவலர் அமைப்பை, கிராம, மாவட்ட, நகர்ப்புறக் காவலர் அமைப்பு என்று மூன்றுவகை களின்கீழ்ச் சிறப்பாக ஆராயலாம். கிராமக் காவலர் அமைப்பைப் பொறுத்தவரை, முகலாய அதிகாரிகள் குற்றங்களைத் தடுப்ப தற்கும் கண்டுபிடிப்பதற்குமான நாட்டுப்புற ஏற்பாடுகளில் சரிவரக் கவனத்தைச் செலுத்தவில்லை.[2] அவர்களுடைய ஆட்சியின் துவக்

[1] R. and O. Stratchey, "Keigwin's Rebellion."

[2] *See* S. N. Sen, 'Administrative System of the Marathas,' p. 584.

கத்தில், இந்தியாவின் பல பாகங்களில் பழங்காலத்திலிருந்து வந்து கொண்டிருந்த ஒரு முறையை அவர்கள் கண்டனர். அதன்படி, கிராமத்தில் காவலுக்குரிய ஏற்பாடுகளின் பொறுப்பு கிராமப் பெரிய தனக்காரனிடத்திலும், அவன் கீழ் வேலைசெய்த காவல்காரர்களிடத்திலும் இருந்தது; அக் கிராம எல்லைகளுக்குள் எவராயினும் குற்றம் புரிந்திருப்பாராயின், அதைக் கண்டுபிடிக்காவிடின், கிராமவாசிகள் எல்லாம் சேர்ந்து நஷ்டஈடு கொடுக்கவேண்டியதாயிருந்தது. ஆனால், குற்றம் புரிந்தவர்களைக் கண்டுபிடித்துவிட்டாலோ, களவாடப்பட்ட பொருள்களைத் தேடிக் கண்டுபிடித்துவிட்டாலோ அல்லது அடுத்த கிராமத்தின்மீது அக் குற்றப் பொறுப்பைச் சுமத்த முடிந்தாலோ அவர்கள் அங்ஙனம் நஷ்டஈடு கொடுக்கவேண்டியதில்லை. இந்த முறை கிழக்கு இந்தியக் கம்பெனியார் முதன்முதலாக அரசியல் அதிகாரத்தை மேற்கொண்டபொழுது அமலில் இருந்தது. பதினெட்டாம் நூற்றாண்டின் முடிவிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலும் நாட்டில் அமைதி ஏற்படுத்துவதில் முனைந்திருந்த அதிகாரிகளால் அம் முறை முழுவதும் வருணிக்கப்பட்டுள்ளது. ஆகையால், இவ் வேற்பாடுகளின் விவரங்களை ஆராயத் தேவையில்லை. அவை அனைத்தும் தன்னாட்சி பெற்ற பழமை வாய்ந்த கிராமச் சமுதாயத்தின் கூட்டுரிமை வாழ்க்கையின் முக்கியக் கூறுகளில் ஒன்றாகும். ஷேர்ஷா சூர் இத் திட்டத்தைத் தீவிரமாக அமலில் வைத்திருந்தார் என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறோம்; அக்பரும் அவருக்குப் பிறகு வந்தவர்களும் பண்டைக் காலத்திலிருந்து வந்துகொண்டிருக்கும் ஏற்பாடுகளைக் குறுக்கவோ, மாற்றி அமைக்கவோ முயலவில்லை என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால், இம் முறை முழுமை பெற்றிருக்கவில்லை. இது பலமற்ற நிர்வாகத்தின்கீழ்த் துரிதமாகச் சீரழிந்துபோகும்; இப்படியெல்லாம் இருந்தபோதிலும், நெடுந்தொலைவில் இருந்த கிராமப் பகுதிகளுக்கு இம் முறை சிறிதளவேனும் பாதுகாப்பு அளித்தது.

பல பர்காணாக்களைக்கொண்டிருந்த சர்க்கார் அல்லது மாவட்டத்தில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தல் பெரும்பாலும் முகலாய வருவாய்த்துறை அதிகாரிகளின், குறிப்பாக ஃபவுஜ்தார் (foujdar) அல்லது மாவட்டத் தளபதியின் கடமையாகும். அந்த ஃபவுஜ்தார் அக்பரின் நிர்வாகத்தில் மாகாண கவர்னரான சிபா சலாரின் (Sipah Salar) துணை அலுவலராகப் பணியாற்றிவந்தார். 'மாகாணத்தில் பேரரசரின் பிரதிநிதி' என்று 'அய்னி'யில் வருணிக்கப்பட்டுள்ள சிபா சலாரின் பதவிப் பெயர் பிற்காலத்தில் சுபாஹ்தார் (Subahdar) அல்லது சுபாதார் (Subadar) என்று மாற்றப்பட்டது. ஆனால், ஃபவுஜ்தார் என்னும் பெயர் முகலாய ஆட்சிக் காலம் முழுவதிலும் மாறாமலேயே இருந்தது. ஃபவுஜ்தாரின்

முக்கியக் கடமைகளாவன : சாலைகளுக்குக் காவல் புரிதல், எவ்விதமான குழப்பத்தையும் அடக்குதல், கீழ்ப்படியாத அல்லது பிடிமுரண்டான கிராமவாசிகளிடமிருந்து வன்முறையைப் பயன்படுத்தி அரசாங்கத்திற்கு வரவேண்டிய தீர்வைகளை வசூலித்தல் என்பனவாகும். தந்தை மான்சர்ரேட்டின் கூற்று உண்மையானல், அதன்படி அக்பரின் காலத்திலுங்கூடக் குழப்பங்கள் அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டிருந்தன எனலாம். அவருடைய திறமைக்குக் குறைந்த திறமை படைத்த அவரது பின்னவர்களின் அரசாங்கத்தின்கீழோ மாகாணத்தில் குழப்பங்கள் குறைந்திருக்க முடியாது. அதுபோன்ற குழப்பங்களை உடனுக்குடன் ஒடுக்கும்படி ஃபவுஜ்தார்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டது. சந்தேகமின்றி அவர்கள் தமது படைகளின் மூலமும், விரைவானவும் பெரும்பாலும் மிகக் கொடுமையானவுமான தண்டனைகளை விதித்தும் தங்கள் அதிகாரத்தை நீட்டித்து வைத்தனர். நெடுஞ்சாலைகளில் கொள்ளையடித்தல், திருடுதல் ஆகியவற்றைப் பொறுத்தவரை, முன்னல் இருந்த இந்து அரசர்களிடமிருந்து பெற்ற, நிச்சயமாக மிகப் பழமை வாய்ந்த சட்டம் ஒன்று ஃபவுஜ்தாரைக் கட்டுப்படுத்தியது. அதன்படி, அவ்வதிகாரி இழக்கப்பட்ட சொத்தைத் திரும்பக் கண்டுபிடிக்க வேண்டும் அல்லது சொந்தக்காரருக்கு அதற்கான நஷ்டஈடு கொடுக்க வேண்டும். ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தில், பட்டப்பகலில் சாலைகளில் களவாடப்பட்ட ஒருவருக்கு ஃபவுஜ்தார் நஷ்டஈடு கொடுக்கவேண்டும் என்றும், ஆனல், அத்திருட்டு இரவில் நடந்ததெனில் முன்னதாகவே எங்கேனும் தங்காததற்குப் பயணக்காரர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டது என்றும், ஆகையினல், எவ்விதமான கவனிப்போ அல்லது நஷ்டஈடோ பெறவில்லை என்றும் இத்தாலியச் சுற்றுப்பயணியான மானுச்சி குறிப்பிடுகிறர்.[1] அதைப்பற்றிய திட்டவட்டமான குறிப்பீடு எதையும் கண்டுபிடிக்க முடியவில்லையெனினும், அக்பரின் ஆட்சிக் காலத்தில் ஃபவுஜ்தார்மீது அதே போன்ற பொறுப்புச் சுமத்தப்பட்டிருந்தது என ஊகிக்கலாம். ஏனெனில், அவ்விதி மிகப் பழமை வாய்ந்திருந்ததனுலும், பெரும்பாலோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாயிருந்ததனுலும், அதைத் திருத்தம் செய்யவோ ரத்து செய்யவோ முடிந்திராது.

முகலாயப் பேரரசின் நகரங்களிலும் பட்டணங்களிலும் பொதுத் தகைமையையும் ஒழுங்கையும் பேணும் பொறுப்பு உட்பட எல்லா வகை ஊர்காவல் கடமைகளும் கொத்தவாலிடம் (Kotwal) ஒப்படைக்கப்பட்டிருந்தன. அவருடைய அதிகாரங்கள் கட்டுப்

1 Manucci, 'Storia do Mogor', ed. Irvine, vol. ii, p. 451; S. N. Sen, 'Administrative System of the Marathas,' p. 587.

பாடற்று இருந்தன. கொத்தவால் இல்லாதபொழுது அவருடைய பொறுப்புகளை நில வருமானத்தை வசூலிப்பவர் நிறைவேற்றி வந்தார். 'அய்னி அக்பரி'யில் குறிப்பிட்டுள்ள இவ்வதிகாரியின் பல் வேறு கடமைகளின்மீது நம் கண்ணோட்டத்தைச் செலுத்தினால், கிராமப் போலிஸ் விஷயத்தில் இருப்பதுபோலவே, முகலாய அரசாங்கம் பழைமை வாய்ந்த இந்து அரசாங்கங்களிலிருந்த பழக்கத்தைப் பின்பற்றியது என்னும் முடிவுக்கும், சுருங்கச் சொல்லின் முகலாயக் கொத்தவால் என்பவர் மௌரிய காலத்திய (Mauryan) நகரகா (Nagaraka) அல்லது நகரக் காவல்துறை அதிகாரியின் 16ஆம் நூற்றாண்டைய நேர்பகர்ப்பாவார் என்னும் முடிவுக்கும் வராமலிருக்க முடியாது. ஏனெனில், கொத்தவால் பின்வரும் கடமைகளை ஆற்றினார் : கொத்தவால்—வீடுகள், சாலைகள் ஆகியவற்றின் பதிவு ஏடுகளை வைத்திருந்தார். பட்டினங்களை நான்காகப் பிரித்து, ஒவ்வொரு கால்பாகத்தையும் ஓர் உதவி அதிகாரியின் பொறுப்பில் வைத்தார். நாடோறும் பட்டினங்களுக்கு வருபவர்களைப்பற்றியும், பட்டினங்களிலிருந்து வெளியே போகிறவர்களைப் பற்றியும் தெரிவிக்க வேண்டும் ; ஒற்றர்கள் அல்லது துப்பறிபவர்களின் ஒரு சிறு கூட்டத்தை அவர் வைத்திருந்தார். திருடர்களைத் தேடிப் பிடிக்க வேண்டும் ; களவாடப்பட்ட பொருள்களைக் கண்டு பிடிக்க வேண்டும்; இல்லையென்றால், அவற்றின் இழப்புக்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். ஊரடங்கு சட்டத்தையும் அவர் விதித்தார் ; நாணயச் செலாவணி முறைமீது கருத்தாக இருந்தார்; தலைப்பொருள் விலைகளை நிர்ணயித்தார் ; வர்த்தகர்களின் முகத்தல் அளவைகளையும் நிறுத்தல் எடைகளையும் பரிசீலனை செய்தார் ; உயில் எழுதி வைக்காமல் இறந்துபோனவர்களின் சொத்தின் பட்டியல்களை வைத்திருந்தார். பெண்களின் உபயோகத்துக்காகக் கிணறுகளையும் தோணிகளையும் ஒதுக்கிவைத்தார் ; பெண்கள் குதிரைமீது சவாரி செய்வதைத் தடுத்தார் ; இறைச்சிக்காகக் கால்நடைகளைக் கொல்வதைத் தடுத்தார்; அடிமை முறையின்மீது தடுப்பு நடவடிக்கைகளை விதித்தார். சமயப் பித்தர்களையும், துறவி இரவலர்களையும், நேர்மையற்ற வர்த்தகர்களையும் நகரப்புறங்களிலிருந்து வெளியேற்றினார். கசாப்புக்காரர்களுக்கும், தோட்டிகளுக்கும், வேட்டைக்காரர்களுக்கும் தனி இருப்பிடங்களை ஒதுக்கிக்கொடுத்தார் ; மயானங்களுக்காக நிலப்பகுதியை ஒதுக்கி வைத்தார் ; திருவிழாக்களின்பொழுதும், விடுமுறை நாள்களின் பொழுதும் நகரங்களில் விளக்கேற்ற ஏற்பாடுகள் செய்தார். இவை மட்டுமே கொத்தவால்களின் பொறுப்புகளாக இல்லை. ஒவ்வொருவரைப்பற்றிய எல்லா விஷயங்களையும் அவர் அறிந்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. அரசாங்கம் தூக்கிலிடுபவருடன் சேர்ந்து குடித்தோ, கூட்டாளியாக இருந்தோ தம்மை

இழிவுபடுத்திக்கொண்டவர்களுக்கு அவ் வதிகாரி ஏற்ற தண்டனையை விதிக்க வேண்டியிருந்தது. ஒரு பெண் உடன்கட்டை ஏற விரும்பவில்லை யெனில், உடன்கட்டையேறுதலைத் (Sati) தடுத்தார். பன்னிரண்டு வயது அடையாமலிருப்பின் சுன்னத் சடங்கைத் தடுத்தார்; இறைச்சிக்காக எருதுகளையும், எருமைகளையும், குதிரைகளையும், ஒட்டகங்களையும் கொல்வதற்குத் தடைவிதித்தார்; அக்பரின் ஆட்சிக் காலத்தின்பொழுது இலாஹி பஞ்சாங்க முறையைப் பின்பற்றுதலை வற்புறுத்துவதும், பேரரசரால் விதிக்கப்பட்ட விசேட விழாக்களையும் சடங்குகளையும் பின்பற்றுதலை வற்புறுத்துவதும் அவரது பொறுப்பாகும்.[1]

களவாடப்பட்ட பொருள்களைக் கண்டுபிடிப்பதில் கொத்தவால் தவறினால் அப் பொருள்களுக்கான மதிப்பின் பொறுப்பை அவர் ஏற்றுக்கொள்ளவேண்டி நேரிடும் என்று பல சுற்றுப்பயணிகளின் குறிப்புகளிலிருந்து தெரியவருகிறது. இதே போன்ற முறை கிராமக் காவல் அதிகாரிகள் விஷயத்திலும், மாவட்டக் காவல் அதிகாரிகள் விஷயத்திலும் இருந்தது என்பதை ஏற்கனவே கண்டுள்ளோம். ஆனால், இம் மூன்று விஷயத்திலும், முக்கியமாகக் கொத்வாலின் விஷயத்தில் செயல்முறையில் இந்தப் பொறுப்பிலிருந்து தப்பித்துக்கொள்ளவும், பொறுப்பைக் குறைத்துக்கொள்ளவும் வழிமுறைகள் இருந்தன. உதாரணமாக, சூரத்தில் ஓர் அர்மீனியவாசி (Armenian) சுற்றுப்பயணம் செய்துவரும்பொழுது அவருடைய பொருள்கள் களவாடப்பட்டன என்றும், அவை மீட்கபடவில்லை என்றும், அதைப்பற்றி அவர் புகார் செய்தபொழுது அதை வாபஸ் வாங்காவிடின் சித்திரவதைக்குள்ளாவார் என்று கொத்தவாலால் அச்சுறுத்தப்பட்டார் என்றும் தெவனுட் (Thevenot) குறிப்பிடுகிறார்.[2] அதுபோலவே ஃபவுஜ்தாரும் கிராம மக்களும் அவ்வப்பொழுது தங்கள் பொறுப்புகளிலிருந்து தப்பித்துக்கொண்டனர் என்பதில் சந்தேகம் இல்லை எனவும் தேவனுட் குறிப்பிடுகின்றார். சித்திரவதை, ஒற்றுடல் ஆகியவை குற்றங்களையும் சட்ட மீறுதல்களையும் ஒடுக்கக் கொத்தவால் கையாண்ட இரண்டு கருவிகளாகும். குற்றம் புரிந்தவர்களைத் தண்டிக்கக் கொத்தவால் அதிகாரம் பெற்றிருந்தார். அத் தண்டனைகளாவன: கழுவேற்றுதல், யானைகளைக் கொண்டு மிதிக்கச் செய்தல், தலை வெட்டுதல், கைகளை வெட்டுதல், சாட்டையால் இரக்கமின்றி அடித்தல் போன்றவைகளாகும். தூக்கு தண்டனையைப் பொறுத்தவரை, ஒருவேளை அவர் உயர் அதிகாரியின் ஒப்பளிப்பைப் பெறவேண்டியிருந்திருக்கக்கூடும்; ஆனால்,

[1] 'Ain-i-Akbari,' trans. Jarrett, Vol. ii. Smith, 'Akbar', pp. 381, 382.
[2] Quoted by Moreland, 'India at the Death of Akbar,' p. 39.

மற்ற எல்லா விஷயங்களிலும் அவர் பெரும்பாலும் கட்டுப்பாடின்றியே இருந்தார். நெடுஞ்சாலைத் திருடன் அல்லது குற்றம் புரியும் இனத்தினர்மீது தூக்கு தண்டனையை விதிக்கும்போதுகூட, ஒழுங்கையும் பொதுப் பாதுகாப்பையும் பாதுகாக்கும் தனது இன்றியமையாத கடமையின் பகுதியாகத் தண்டனை நிறைவேற்றும் பொறுப்பினை அவர் ஏற்றுக்கொண்டார். சந்திரகுப்த மௌரியரின் கீழ் இருந்ததுபோலவே முகலாயப் பேரரசர்களின்கீழ் நகர்ப்புற நிர்வாகம் எதேச்சாதிகாரம் வாய்ந்ததாக இருந்தது; கொத்தவாலின் பொறுப்புகளும் அதிகாரங்களும், கௌடில்யரின் சிறப்பு வாய்ந்த 'அர்த்த சாஸ்திரம்' ('Arthasastra' of Kautilya) என்ற நூலில் கொத்தவாலுக்கு நிகரான இர்து அதிகாரிக்கு அளிக்கப்பட்ட மிக அதிகமான பொறுப்புகளையும் அதிகாரங்களையும் போலவே இருந்தன.[1]

மேற்குறிப்பிட்டுள்ள போலீஸ் ஏற்பாடுகள் குறிப்பிட்ட ஒருவகை ஒழுங்குத் தரத்தை உண்டாக்கின. இருந்தாலும், பொதுப் பாதுகாப்பு நிலை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கும் ஒருவேளையிலிருந்து மற்றொரு வேளைக்கும் மாறிக்கொண்டேயிருந்தது. களவாடுதலைத் தொழிலாகவே கொண்டிருந்த கள்வர்கள் குன்றுகளிலும் காடுகளிலும் மறைந்திருந்தனர். கொள்ளைக் கூட்டத்தார்கள் திறந்த வெளிகளில் அடிக்கடி வெளிப்பட்டனர். சாலைப் பாதுகாவலை நம்புவதற்கில்லை.[2] அக்பரின் ஆட்சியின்போது சாலைகளில் களவும் கொள்ளையும் பெரும்பாலும் சாதாரணமாகவே நடந்தன. ஏனெனில், ஜஹாங்கீர் அரியணையேறிய பிறகு விடுத்த முதன் முதலான ஆணை ஒன்று பாதுகாப்பின்றி இருந்த சில குறிப்பிட்ட சாலைகளின் கட்டுப்பாட்டை அபிவிருத்தி செய்வதைப்பற்றியதாக இருந்தது. அவர்இறந்தபிறகு நிலைமைமேலும் மோசமாயிற்று. 1609-ல் வில்லியம் ஃபின்ச் (William Finch) என்பவர் சூரத்திலிருந்து ஆக்ராவிற்குப் பயணம் செல்லும்பொழுது சாலைகளில், குறிப்பாக புர்ஹான்பூருக்கும் (Burhanpur) குவாலியருக்குமிடையில் (Gwalior) கள்வர் நிறைந்திருப்பதைக் கண்டார். பானிபட்டுக்கு அருகில் பல திருடர்களின் தலைகள் புதியவாக வெட்டுண்டு, அவர்களுடைய உடல்கள் ஒரு மைல் நீளம் வரையில் கழுமரங்களில் தொங்கிக் கொண்டிருப்பதை அவர் கண்டார்.[3] நான்கு ஆண்டுகட்குப் பிறகு (1613) நிக்கோலாஸ் விதிங்டன் (Nicholas Withington)

[1] See 'Arthasastra,' Chapter XXXVI, et passim, Shamasastry's translation.

[2] W. H. Moreland, 'India at the Death of Akbar,' pp. 41. ff.

[3] W. Foster, 'Early Travels in India', pp. 157 – 8.

என்பவர், ஆமதாபாத்திலிருந்து சிந்திலிருந்த தட்டா (Tatta in Sind) வரை நெடுந்தூரம் நடந்தபொழுது பெற்ற அனுபவம் இன்னும் மோசமாக இருந்தது.[1] அதே சமயத்தில், 'நாடு சட்டக் காப்பிழந்தவர்களாலும் திருடர்களாலும் நிறைந்திருந்ததனால், ஜஹாங்கீரின் இராச்சியம் முழுவதிலும் பெரும் பாதுகாப்பின்றி எவரும் வீடுகளிலிருந்து வெளிவர முடியாது' என்று வில்லியம் ஹாகின்ஸ் (William Hawkins, *1608-13*) கூறுகிறார்.[2] ஷாஜஹானின் நிர்வாகத்தின் கீழ் நிலைமை முன்னேற்றம் பெறவேயில்லை. ஏனெனில், மிக்க கற்பனையற்றும் கவர்ச்சியற்றும் எழுதுபவரும், *1630* இலிருந்து *1633* வரை பாட்னாவுக்குப் போய்வந்துகொண்டிருந்தவருமான பீட்டர் முண்டியின் (Peter Mundy) கூற்றின்படி, அந் நகரச்சுற்றுப் புறங்களில் இந்தியாவின் மற்றப் பகுதிகளில் இருப்பதைப்போலவே கலகக்காரர்களும் திருடர்களும் மலிந்து கிடந்தனர்.[3] பெரிய நகரங்களின் எல்லைகளில் குற்றவாளிகள் என்று சொல்லப்பட்டவர்களின் தலைகள் பொதிந்த சோர் மினார்கள் (chor minars) அல்லது கற்களால் கட்டப்பட்ட தூண்கள் பல இடங்களில் நிறுவப்பட்டிருந்தன. இத் தூண்கள் அரைசாந்து வைத்துக் கட்டப்பட்டிருந்தன. கான்பூர் (Cawnpore) மாவட்டத்தில் ஓரிடத்தில் அதுபோன்ற பல தூண்களை அப் பயணக்காரர் எண்ணினார்; சில மாதங்களுக்குப் பிறகு அவர் திரும்பி வரும்பொழுது *60* தூண்கள் அதிகமாக இருந்ததை அவர் கண்டார். ஷாஜஹானின் ஆட்சிக் கால முடிவிலும் அவுரங்கசீப்பின் ஆட்சிக்காலத் துவக்கத்திலும் மேல்மாகாணங்களின் நிலைமை அதுபோலவே மோசமாக இருந்தது என்றும், பேரரச அதிகாரிகள் திறமையற்ற தன்மையில் செயலாற்றியதாலும் கொடுமைகள் இழைத்ததாலும் அவ்விடத்தில் உண்டான சீர்குலைவின் எதிரொலி தக்காணத்தில் அவுரங்கசீப் முதல் முறை வைஸ்ராயாக இருந்ததற்கும் இரண்டாம் முறை வைஸ்ராயாக இருந்ததற்குமிடையில் காணப்பட்டது என்றும் பெர்னியரின் (Bernier) சான்று எண்பிக்கிறது. *1669, 1681, 1688* ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த ஜாத் (Jat) கலகங்கள், *1672* இல் நடந்த சத்நாமி (Satnami) கலகம், சிவாஜியின்கீழ் மராட்டிய ஆதிக்கம் உருவாதல் ஆகியவையெல்லாம் அப்பொழுதிருந்த முறையின் திறனற்றுச் செயலாற்றும் தன்மையினால் ஊக்குவிக்கப்பட்டன. தல சர்வாதிகாரிகளால் முறையின்றி விதிக்கப்பட்ட கொடுமை வாய்ந்த தண்டனைகளால் அச்சுறுத்திக் 'கரடுமுரடான வகையில் ஒழுங்கு பெறாத பொது அமைதியை நிலைநாட்டுவதே அம் முறையின் நோக்கமாயிருந்தது.'[4]

1 Ibid., p. 190 ff.
2 Ibid., p. 113.
3 Oxford History of India, p. 417.
4 Smith, 'Akbar,' p. 382.

ஊர்காவல் முறை, பொதுப் பாதுகாப்பு ஆகியவற்றின் ஆராய்ச்சியை முடிப்பதற்கு முன், பதினேழாம் நூற்றாண்டில் ஐரோப்பாவிலிருந்த (Europe) சாலைகளின் நிலை தற்காலத்திற்குரிய தரத்துக்கு மிகக் குறைந்திருந்தது என்பதையும், மாபெரு முகலாயரின் இராச்சியத்தில் சுற்றுப்பயணிகளைத் தாக்கிக் களவாடியவர்களுக்கு நிகராக இங்கிலாந்தில் கிளாட் டுவல்களும் (Claude Duvals), ஜொனுதன் வைல்டுகளும் (the Jonathan Wilds), ஜாக் ஷெபர்டுகளும் (the Jack Sheppards) இருந்தனர் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அதற்கு மாருக, தற்காலக் கருத்துகள்படி, இங்கிலாந்தின் நெடுஞ்சாலைப் பாதுகாப்பு நிலை அச்சமயத்தில் முற்றிலும் மோசமாக இருந்தது என்ற உண்மை, இந்தியாவில் அக் காலத்தில் சுற்றுப்பயணம் செய்த ஆங்கிலேயப் பயணிகளின் சான்றை மேலும் வலியுறுத்துகின்றது. ஃபின்ச் என்பவரின் கூற்றின்படி, சாலைகள் 'திருடர்கள் நிறைந்த, போக்கிரிகள் நிறைந்த சாலைகளாகவே இருந்ததை அப் பயணிகள் கண்டறிந்தனர். சர் வில்லியம் ஸ்லீமனும் (Sir Willlam Sleeman) அவருடைய துணை அதிகாரிகளும் 1830-1837ஆம் ஆண்டுகளுக்கிடையில் இறுதியாக அடக்கிய தகி (thagi) என்ற குற்றம், முகலாய ஆட்சி தலைசிறந்து விளங்கிய காலத்தில் இருந்திருக்க வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ஏனெனில், டெல்லி சுல்தான் ஜலாலுத்தீன் கில்ஜி (Jalalu-d din Khilji) காலத்தில் அவரது வரலாற்றை எழுதிய ஸியாவுத்தீன் பரணி (Ziau-d din Barani), அச் சுல்தானின் ஆட்சிக் காலத்தில் சுமார் ஓராயிரம் தக்கர்கள் டெல்லியில் சிறைபிடிக்கப்பட்டனர் என்று குறிப்பிடுகிருர். அச் சுல்தான் தவருக இரக்கங் காட்டியதனுல், வங்காளத்திலுள்ள லக்னேதிக்குக் (Lakhnauti) கப்பலில் ஏற்றி அனுப்பப்பட்டனர்; அங்கே அவர்கள் விடுதலை பெற்றுப் பிந்திய நூற்றாண்டுகளில் யாவரும் அறிந்த தகி ஆற்று (river thagi) முறைக்கு அடிகோலினர். பழமை வாய்ந்ததும், 13ஆம் நூற்றாண்டில் சிறந்து விளங்கியதுமான ஓர் அமைப்பு, 16, 17ஆம் நூற்றாண்டுகளில் பெரும்பாலும் சீர்குலைவு அடைந்திருக்க முடியாது. அக்பரின் ஆட்சிக் காலத்துக்குரிய சமகால வரலாறுகளில் அது குறிப்பிடப்படவில்லை என்பது உண்மையே. ஆனுலும், மீடோஸ் டெய்லரும் (Meadous Taylor) பால்ஃபோரும் (Balfour) பல தக்கர்கள் அக் காலத்தில் கொல்லப்பட்டனர் என்று கூறுகின்றனர். அவர்கள் ஆக்ரா மாகாணத்திலுள்ள எடாவா (Etawah) மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் என்றும், அவர்களுடைய எண்ணிக்கை ஐந்நூருக இருந்தது என்றும் வாய்மொழிப் பாரம்பரியத்தின் அடிப்படையில் பால்ஃபோர் வற்புறுத்திக் கூறுகிருர். தகி போன்ற குற்றங்கள் மலிந்திருந்ததற்காக எடாவா மாகாணம் எப்போதுமே கெட்டபெயர் எடுத்திருக்கிறது. ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தைப் பொறுத்த

வரை, டெல்லிக்கும் ஆக்ராவுக்குமிடையேயிருந்த சாலையில் தக்கர்கள் மலிந்து கிடந்தனர் என்றும், சுருக்கிட்ட கயிற்றை அருகே வரும் ஒருவனின் கழுத்தில் குறிதவறாமல் போட்டு அவனை ஒரு விநாடியில் கொன்றனர் என்றுமாக தெவனோட்டின் திட்டவட்டமான சான்று நமக்குக் கிடைத்துள்ளது.[1] ஒருவேளை பழங்காலந்தொட்டு வந்ததும், ஜலாலுத்தீன் காலத்தில் உறுதியாக நிலைநாட்டப்பட்டிருந்ததுமான இக் குற்றம் புரியும் குழு முகலாய ஆட்சிக் காலம் முழுவதும் தனது கொடூரக் கொலைச்செயல்களைத் தீவிரமாகப் புரிந்துவந்தது என்று நியாயமாக ஊகிக்கலாம்.

சட்டமும் நீதியும்: முகலாய நீதிமுறையைத் தற்காலக் கருத்துகளின் கண்ணோட்டத்தில் பார்க்கும்பொழுது, அது குறைபாடுகள் மிகுந்ததாகவே அமைந்திருந்தது. எவ்விதக் குற்றச் சட்டத் தொகுப்போ, சிவில் சட்டத் தொகுப்போ இருந்ததில்லை. ஆனால், நீதிபதிகளாகப் பணியாற்றியவர்கள் விரும்பினால் குர்ரான் கட்டளைகளைப் பின்பற்றினர். குற்ற வழக்கு நடவடிக்கைகளைப் பற்றியோ, சிவில் வழக்கு நடவடிக்கைகளைப்பற்றியோ குறிப்பேடுகள் வைக்கப்படவில்லை. எல்லா நடவடிக்கைகளும் வாய்மொழியாகவே நடைபெற்றன. அந்த நடவடிக்கைகள் சாதாரணமாகச் சுருக்க வகையாயிருந்தன. ஒழுங்கான நீதிப் பணித்துறை எதுவும் ஏற்படவில்லை. ஒருவேளை காசிக்கள் அவ்விதப் பணித்துறையைச் சார்ந்தவர்கள் என்று கொள்ளலாம். தண்டனை, வழக்கு நடத்தும் அதிகாரியின் விருப்பத்தைப் பொறுத்து இருந்தது. அத் தண்டனை எவ்விதமாகவும் இருக்கலாம். சாட்சிகளுக்கோ, பிரமாணங்களுக்கோ எவ்வகையான கவனமும் செலுத்தப்படவில்லை. அக்பரின் ஆட்சிக் காலத்தில் மாகாண கவர்னருக்கு இடப்பட்ட உத்தரவுகள், அவர் நீதி விசாரணையின் போது சாட்சிகளிலும் பிரமாணங்களிலும் திருப்தி கொள்ளாது பலவகை விசாரணை நடத்தியும், உறுப்பனமதிமூலம் குணத்தை அறிந்தும், முன்னேக்குச் சக்தியைப் பயன்படுத்தியும் அவர்களைக் கேள்விகள் கேட்க வேண்டும் என்றும், அப் பொறுப்பை மற்றவர்களின்மீது சுமத்தித் தாம் பொறுப்பிலிருந்து தப்பித்துக்கொள்ளக்கூடாது என்றும் வற்புறுத்தின.[2] பொதுவாகச் சொல்லப்போனால், தனிப்பட்டவர்களின் குறைகளை நிவர்த்திப்பதும், தவறு புரிபவர்களுக்குத் தண்டனை விதிப்பதும் அரசன் அல்லது நடைமுறை நிருவாக அதிகாரியின் உரிமையும் கடமையுமாகும் என்று கருதப்பட்டது.

[1] The venot's 'Voyages', Eng. trans. 1686, Part III, p. 41. See also Sleeman's 'Rambles and Recollections', revised ed. 1915, p. 652.

[2] 'Ain-i-Akbari', vol. ii, pp. 37–38.

ஆகையால், முகலாயப் பணித்துறையில் இருந்த ஒவ்வொரு மேலதிகாரியும் நீதிவிசாரணை அதிகாரங்களைக் குறிப்பாகக் குற்ற வழக்குகளில் செலுத்தினுர். ஷாயிஷ்டகான் வங்காளத்தை நிர்வகித்துக் கொண்டிருந்த சமயத்தில் சாதித்த நற்செயல்களாக, ஒவ்வொரு நாளும் அரசவையில் வெளிப்படையாக நீதி வழங்கியதையும், கேடுகளை நிவர்த்தி செய்ததையும் ஷிஹாபுத்தின் தலீஷ் தமது 'Continuation of the Fathiyyah-i-ibriyyah' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.[1] கவர்னர் (சிபா-சாலார் அல்லது சுபேதார்—sipah-salar or subadar) தமது சிவில், குற்ற நீதிவிசாரணை அலுவல்களை மாகாணம் முழுவதற்குமே செலுத்தியதுபோல, ஃபவுஜ்தார் மாவட்டம் அல்லது சர்க்காரிலும், கொத்தவால் நகர்ப்புறங்களிலும் செலுத்தினுர். இதுபோன்ற ஏற்பாடுகள் அக்பர் ஆட்சிக் காலத்தின்பொழுது இருந்தன என்பதை அபுல் ஃபாஸலின் எழுத்துச் சான்று நிரூபிக்கின்றது. ஜஹாங்கீரைப் பொறுத்தவரை, *1616*இலிருந்து *1619*ஆம் ஆண்டு வரை இந்தியாவில் இருந்த எட்வர்ட் டெர்ரி(Edward Terry)பேரரசர் நீதி வழங்குவதைப்பற்றிக் கூறி, மேலும் பின்வருமாறு குறிப்பிடுகின்ருர்: 'நகரங்களிலும் மாகாணங்களிலும் உள்ள கவர்னர்கள் ஒரே நீதியை வழங்குகின்றனர். எழுதப்பட்டிருந்த சட்டம் அவர்களுக்கிடையே நிலவியிருந்தது என்பதை நான் கேள்விப்பட்டதே இல்லை. அரசனுடைய எண்ணமும் அவரது பிரதிநிதிகளின் எண்ணமுமே சட்டமாகும்.'[2]

காஸியின் அதிகார எல்லையைப்பற்றி எங்கும் திட்டவட்டமாகக் குறிப்பிடாததால், அவரது உண்மை நிலை என்ன என்று தெளிவுபடக் கூறுவதற்கில்லை. ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தின் பொழுது (*1648*) ஆமதாபாத், அதனைச் சுற்றியிருந்த கிராமங்கள் ஆகியவற்றின்அரசாங்கப் பொறுப்பு கொத்தவாலிடமும், காஸி என்று அவர்கள் அழைத்துவந்த நீதிபதியிடமும் இருந்தன என்று வான் டுவிஸ்ட் (Van Twist) என்ற டச்சுக்காரர் குறிப்பிடுகிருர். அவுரங்கசீப்பின் ஆட்சிக் காலத்தின்பொழுது, *1672*இல், இந்த நாட்டுக்கு விஜயம் செய்த ஃபிரையர் (Fryer) என்பவர், 'அவர்களுடைய வழக்கு விவாதங்களை ஒவ்வொரு நாள் காலையிலும் கவர்னர் கேட்க, காதி அல்லது நீதிபதி தீர்ப்புக் கூற, அவை வெகு விரைவில் முடிந்து விடுகின்றன' என்று கூறுகிருர்.[3] கவர்னர், ஃபவுஜ்தார் அல்லது கொத்தவால் என்ற நிருவாக அதிகாரி வழக்குகளை விசாரிக்கும் போது வந்திருந்து குர்ரானின் கட்டளைப்படி சரியான முடிவுக்கு வர

[1] J. N. Sarkar, 'Studies in Mughal India', p. *160*.
[2] W. Foster, 'Early Travels in India', p. *326*.
[3] See Yule and Burnell, 'Hobson - Fobson', s. v. Cauzee.

முஸ்லீம் சட்டத்தின் களஞ்சியமான காஸி பெரும்பாலும் உதவினர் போலும்; தவிர, பொதுவாக சிவில் வழக்குகளில் அதே சட்டத்தின் படி காஸிகள் தீர்ப்புக் கூறினர் போலும். 'அய்னி அக்பரி'யில் குறிக்கப்பட்டிருக்கும் மற்றொரு நீதிவிசாரணை அதிகாரியான மீர் ஆதில் ஒரு நீதித்துறையை ஆட்சி செலுத்துபவரேயாவார். வாய்ப்பு நேரிடும்பொழுது காஸியின் தீர்ப்புகளை நிறைவேற்ற நிருவாக அதிகாரியால் அவர் நியமிக்கப்பட்டார். காஸியின் சரியான அதிகார எல்லை எதுவாக இருப்பினும், அவர் பொதுமக்களால் அதிகமாக மதிக்கப்படவில்லை என்பது நிச்சயம்.[1] 'முகலாய காலக் காஸிகள் இழிவார்ந்த அளவுக்கு இலஞ்சம் வாங்குபவர்களாக இருந்தனர்' என்று பேராசிரியர் J. N. சர்க்கார் கூறுகிறார். ஒவ்வொரு மாகாணத்தின் தலைநகரிலும் ஒரு தலகாஸி, முதன்மைக் காஸியால் நியமிக்கப்பட்டிருந்தார். இதுபோன்ற நியமனங்கள் அடிக்கடி இலஞ்சப் பணம் கொடுத்து வாங்கப்பெற்றன. சிவில் சட்டத்தைப் பேணுபவர்களிடம் மக்கள் காட்டிய வெறுப்பும் இகழ்ச்சியும் ஒரு பழமொழியிலிருந்து வெளியாகின்றன: 'காஸியின் பெட்டை நாய் செத்தபொழுது பிண ஊர்வலத்தில் நகரம் முழுவதும் கலந்து கொண்டது. ஆனால், காஸியே இறந்தபொழுது ஒருவர்கூட அவருடைய சவப்பெட்டியைப் பின்தொடர்ந்து செல்லவில்லை'.

நகர்ப்புற, மாகாண அதிகாரிகளுக்குமேல் பேரரசரின் நீதிமன்றமே இருந்தது. பேரரசர் நீதியின் அடிப்படை என்றும், இறுதி அப்பீல் நீதிமன்றம் என்றும் கருதப்பட்டார். வழக்குகளையும் அப்பீல்களையும் தீர்ப்பதில் அக்பர் நாள் ஒன்றுக்குப் பல மணிநேரம் செலவிடுவது வழக்கமாக இருந்தது; சிற்சில வேளைகளில் முக்கியமான அசல் சிவில் வழக்குகளைத் தமது நீதிமன்றத்திற்கே மாற்றிக் கொள்வார். ஜஹாங்கீர் தமது அரசவைக்கு அருகில் நிகழ்ந்த முக்கிய விஷயங்களிலெல்லாம் மத்தியஸ்தம் செய்தாரென்று டெர்ரி கூறுகிறார். குற்றச்சாட்டுகளுக்கும் விசாரணைக்குமுரியவான சட்டங்களின்படி பேரரசர் பெரும்பாலும் தீர்ப்பளித்தார். ஷாஜஹான் ஒவ்வொரு புதன்கிழமையும் திவானெ காஸில் தமது நீதிமன்றத்தைக் கூட்டினர்; கட்சிகளுக்கு முன்னிலையில் அவருடைய நீதிவிசாரணை அதிகாரிகள் குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளைக் கேட்டதற்குப் பிறகும், சட்டம் என்ன என்பதை உலெமாக்களிடமிருந்து (சமய சட்ட வழக்கறிஞர்கள்) கேட்டுத் தெரிந்துகொண்ட பிறகும், அவர் தம்மிடம் சமர்ப்பிக்கப்பட்ட செய்திகளின்மீது தீர்ப்புக் கூறினர். அதேபோல் அவுரங்கசீப்பும் தினந்தோறும் தமது அந்தரங்க அறையில் (khil-watgah) நீதி வழங்கினர். தலைநகரிலிருந்தோ,

[1] 'Indian Antiquary,' vol. iii (1924), pp. 255-6.

மாகாணங்களிலிருந்தோ வந்த தீங்கிழைக்கப்பட்டவர்கள் நீதித் துறை அதிகாரிகளால் அவர் முன்னிலையில் கொண்டுவரப்பட்டனர். பேரரசரே நேரில் அவர்கள் குறைகளை விசாரித்து, எங்கு குர்ரானின் கட்டளைகள் பொருத்தமாக இருந்தனவோ அங்கு அவற்றின் படியும், மற்றபடி எங்கு வழக்கத்தின்படியும் பேரரசரின் விருப்பப் படியும் தீர்ப்பளிக்க வேண்டுமோ அங்கு அவ்வவற்றின்படியும் தீர்ப்பளிக்கப்பட்டது.[1] அடுத்தடுத்து வந்த பேரரசர்கள் வழங்கிய நீதியின் தரம் சீரானதன்று. இது இயல்பேயாகும். வழக்குகளுக்கு விசாரணையின்றிச் சுருக்க வகையாய்த் தீர்ப்பளித்தல் அக்பர் காலத்திலும் நாட்டில் வழக்கமாக இருந்துவந்தது. அம் முறையையே அக்பர் கையாண்டு நேர்மையாகவே நீதி வழங்கினார். 'நான் நியாயமற்ற கொலை புரிந்தேனாகில் எனக்கு எதிராகவே நான் தீர்ப்புக் கூறுவேன்' என்று அக்பர் அபுல் ஃபாஸலுக்குக் கூறினாராம். 'நீதி வழங்குவதில் அவர் ஆர்வம் மிக்கவராகவும் விழிப்பாகவும் இருந்தார் என்றும், ஆர்ந்தமர்ந்து முடிவு செய்தே தண்டனை விதித்தார் என்றும், தூக்கு தண்டனை விதிக்கவேண்டியிருந்தாலோ அல்லது அங்கங்களைத் துண்டித்தலான தண்டனை விதிக்க வேண்டியிருந்தாலோ அதை நிறைவேற்றுவதற்குமுன் அதைப் பற்றி அவருக்கு மூன்று முறை நினைவுபடுத்த வேண்டுமென அவர் உத்தரவிட்டிருந்தார் என்றும் அக் காலத்திலிருந்தவர்கள் கூறுகிறார்கள்.[2]

மனம்போன போக்கில் நடப்பதில் ஜஹான்கீர் தமது தந்தையை விட மிக மோசமாக இருந்தார்; இவர் பெற்றிருந்த மிக விரைவில் கோபங் கொள்ளும் குணம் அதிகக் குடிவெறியால் மேலும் மோசமாயிற்று. ஒரே சமயத்தில் மிகக் கொடுமையாகவும், குழந்தைகளை ஒத்த நல்லெண்ணத்துடனும் அவர் நடந்துகொள்வார். இதைப் பற்றி டெர்ரி கூறும்பொழுது, மாறுன குணங்களின் சேர்க்கை இவரிடத்தில் மிக்க விநோதமாக அமைந்திருந்தது என்று குறிப்பிடுகிறார். அக்பர் தண்டனை விதிக்கும்பொழுது ஆரஅமர நடந்து கொண்டதுபோல ஜஹான்கீர் நீதி வழங்கும்பொழுது நடந்து கொள்ளவில்லை. டெர்ரி மேலும் பின்வருமாறு கூறுகிறார்: 'வழக்கு விசாரணைகள் மிக விரைவாக நடந்தேறின. சங்கதியைப் பொறுத்துத் தூக்கிலிடுதல், தலைசீவல், கழுவேற்றுதல், நாய்கள், யானைகள், பாம்புகள் போன்றவைகளைக்கொண்டு கொல்லுதல் இதுபோன்ற தண்டனைகளெல்லாம் வெகுவிரைவில் நிறைவேற்றப்

[1] J.N. Sarkar, 'Studies in Mughul India', pp. 14, 65.
[2] Smith, 'Akbar', p. 344.

பட்டன.[1] கொடுமைகளை இழைப்பதிலும் கடுமையாக நடந்து கொள்வதிலும் ஷாஜஹான் ஜஹாங்கீரைவிட மோசமாக இருந்தார். அவர் விதித்த தண்டனைகள் நிறைவேற்றப்படுவதை அவரே நேரில் பார்ப்பதில் மிருகத்தனமான மகிழ்ச்சியுற்ருர். அவருடைய நீதியைப்பற்றி மானுச்சி போன்றவர்கள் புகழ்ந்துள்ளனர். அவரது நிர்வாகத்தின் சிறந்த இயல்பைப்பற்றியும் அவர்கள் தெளியவைத்துள்ளனர். இலஞ்சம் பெறும் கொத்தவாலான முகம்மது செய்யது (Muhammad Said) என்பவர் பேரரசர் முன்னிலேயில் தூக்கிலிடப்பட்டதையும், வகைதொகையற்ற விதத்தில் கொடுமைகளை இழைத்த மாகாண கவர்னர்களைப்பற்றியும், திவான்-இ-காஸில் வழங்கப்பட்ட நீதியை மாதிரியாகக்கொண்டு அவர்கள் நீதிவழங்கியதைப் பற்றியும் மானுச்சி கூறுவதிலிருந்து, ஷாஷாஹான் தீர்ப்புகள் வழங்குவதில் மனம்போன போக்கிலும் கொஞ்சங்கூட இரக்கமின்றியும் நடந்துகொண்டார் என்பது புலனுகிறது. அதற்கு மாருக, அவுரங்கசீப், ஒரு கண்டிப்பான முஸ்லீம் துறவி என்ற குறிக்கோளை எய்துவதற்கு, தமது நிர்வாகத்திலும் சொந்த நடத்தையிலும் இஸ்லாமின் சட்டத்தையும் மரபுகளையும் அவற்றின் ஒவ்வொரு விவரத்திலும் பின்பற்றுவதற்கு முயற்சி செய்தார். அவர் அங்ஙனம் செய்து மாருன திசையில் தவறு புரிந்தார். எல்லா வழக்கு விசாரணைகளும் உண்மையிலும் பெயரளவிலும் முஸ்லீம் சட்டத்தின்படி நடத்த வேண்டி அவர் விரும்பினுர். ஆனுலும், காஃபி கான் (Khafi Khan) வார்த்தைகளில் சொல்ல வேண்டுமாயின், 'சட்டத்தின் ஆணைகளிடம் கொண்டிருந்த பெருமதிப்பினுல் அவர் தண்டனை விதிக்கவில்லை. தண்டனை விதிக்காததனுல் நாட்டின் நிர்வாகம் நிலைத்திருக்க முடியவில்லை.' முகலாய காலத்து இந்தியாவுக்கு மிகவும் கண்டிப்பான கொள்கைகளையும் சட்டங்களையும் கொண்டதான ஹனஃபா(Hanafa)கொள்கைவழி தண்டனைகளைவிட அரசியற் கலை ஒரு தண்டநீதியே அல்லது தண்டனையைப்பற்றிய சட்டமே ஆகும் என்ற பழமையான இந்து கருத்துக் கொள்கையே மிகவும் ஏற்றது என்று கொள்ளல் பொருத்தமான ஒன்ருகும்; அவுரங்கசீப் இவற்றை உணரவும் ஏற்றுக்கொள்ளவும் முடியாததாலேயே அவருடைய தனிமுறை அதிகாரம் குறைவுற்றது என்றும், பேரரசின் நிர்வாகம் விரைவாக நலிவுற்றது என்றும் ஊகிப்பதுகூட நியாயமானதாகும்.

முகலாயர்களின் காலம் முழுவதிலும் நீதி நிர்வாகம் இலஞ்ச ஊழல்களில் சிக்கிக் கிடந்தது என்பதற்குச் சான்று உள்ளது. செல்வாக்கும் செல்வாக்கு மிக்க நண்பர்களும்

[1] W. Foster, 'Early Travels,' p. 326.

பெற்றிருந்த வழக்கைத் தொடர்பவர் ஒருவர், அவ்வளவு சாதக மான நிலையில் இல்லாத ஒருவரைவிட மிக விரைவில் தனக்குச் சாதகமாகத் தீர்ப்பைப் பெற முடிந்தது. எழுதப்பட்ட சட்டத் தொகுதி ஒன்றும் இல்லாததனால், நிர்வாக அதிகாரிகளும் காஸிகளும் பெயரளவிற்கு இந்து, முஸ்லிம் சட்டங்களைப் பின்பற்றினர். ஆனாலும், அவர்கள் அடிக்கடி வழக்கங்களையும் தங்களது சொந்த தனிக் கருத்துகளையும் பின்பற்றினர். பேரரசரிடமே ஒரு வழக்கை அப்பீலில் கொண்டுபோதல் அநீதிக்கெதிரான பாது காப்பை அளித்தபோதிலும், தலைநகரங்கள் தூரத்தில் இருந்ததனா லும், அவ்விடங்களுக்குப் பயணம் செய்தல் இன்னல் நிறைந்ததாக இருந்ததனாலும், அதிகப் பணம் செலவிடவேண்டியிருந்ததனாலும், வழக்குத் தொடர்பவர் ஒருவர் தமது குறைகளை ஆக்ரா, டெல்லியி லுள்ள அரண்மனைகளுக்குக் கொண்டுபோக முடியவில்லை. சிற்சில வேளைகளில் சமூகச் செல்வாக்கு வெளிப்படையான அநீதித் தீர்ப்பை ரத்து செய்வதற்கோ, அதனின் கடுமையை மிதப்படுத்து வதற்கோ சாதகமாகப் பயன்படுத்தப்பட்டது; ஏனெனில், முக லாயர் காலத்திய மாகாண அதிகாரி, தம்மீது குற்றம் சாட்டப்படு வதற்கோ, பேரரச அவையில் பழிச்சொல்லுக்கு இடம் தருவதற்கோ விரும்பவில்லை. நீதியைப் பெறவும், மக்கள் விருப்பத்திற்கு இணங்கத் தல அதிகாரிகளின் செயல்களைக் கொண்டுவரவும் ஹர்த்தால் (hartal) அல்லது முகலாயர் காலத்திய அதற்கு ஈடான முறை பயன்படுத்தப்பட்டது. சிவில் வழக்குகளில் கடுமையான முறைகள் பயன்படுத்தப்பட்டதைப்போல, குற்றவியல் வழக்குகளில் தண் டனைகள் கடுமையாக இருந்தன. கடனாளிகள் ஒரு தீர்ப்பு நிறை வேற்றப்படுவதற்குத் தமது வீடுகளும் சொந்த உடைமைகளும் விற்கப்படுவதற்குரியவர்களாகியதுமன்றித் தங்களுக்குக் கடன் கொடுத்தவர்களுக்கு அவர்கள் அடிமைகளாகவோ அடியாள்க ளாகவோ விற்கப்படுவதற்குமுரியவர்களாயினர். கடன் கொடுத் தவர் போதிய அளவு செல்வாக்கோ, அர்த்த நடைமுறைகளைப் பயன்படுத்தி உத்தரவுகளை நிறைவேற்றுதபடி தடுக்க அதிகாரி களுக்கு இலஞ்சம் கொடுப்பதற்காகப் போதிய பணமோ பெற் றிராமலிருக்கும்போதுதான் கடன் வாங்கினவர் அக் கொடுமையான தண்டனைகளிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும்.[1] தனிப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்வதற்காக முகலாய சிவில் சட்டத்தின்படி வழக்குத் தொடர்வது மிக மலிவான அல்லது மிக வசதியான முறை அன்று. 'காஸியை நம்பியிருப்பது துயரைத் தேடுவதாகும்' என்று மக்களிடையே வழங்கிவந்த ஒரு பழமொழி பெரும்பாலும் உண்மையானதாகும்.

[1] W. H. Moreland, 'India at the Death of Akbar,' p. 37.

நிதிமுறை (Fiscal System): பேரரச அல்லது மத்திய முறை என்றும் மாகாண அல்லது தல முறை என்றும் வருவாயும் செலவினமும் வகுக்கப்பட்டதன் அடிப்படையின்பேரில்தான் முகலாயப் பேரரசின் நிதிமுறை அமைந்திருந்தது. பேரரச வருவாயின் பெருந் தலைப்புகளாவன: நிலவரி, சுங்கவரி, நாணயச்சாலை, மரபுரிமையாக வரும் சொத்து, பரிசுகள், சர்வாதீனங்கள் (monopolies), போரில் தோற்றவர்களிடமிருந்து கோரப்படும் இழப்பீட்டுத் தண்டத் தொகைகள் (indemnities). இவற்றில் மிக முக்கியமானது நிலவரியாகும். 'அய்னி அக்பரி'யின் மதிப்பீட்டின்படி அது 363 கோடி தாம்களாக இருந்தது. 'பாத்ஷாநாமா' என்ற நூலின்படி அது ஷாஜஹானின் காலத்தில் 880 கோடி தாம்களாக உயர்ந்தது. பிரபுக்களுடைய சொத்துகளும், மற்றவர்களுடைய நிலங்களும் 'மரபுரிமைச் சொத்து' என்ற தலைப்பில் அடங்கி யிருந்தன. இவற்றின் சொந்தக்காரர்கள் இறந்ததும் இவையெல்லாம் முறைப்படியே பேரரசருக்குரியவையாயின. அங்காடியின் நிலைமையினால் பெரும் இலாபம் ஏற்படுவதாக இருப்பின், அப்பொழுதெல்லாம் பேரரச ஆணையினால் சர்வாதீனங்கள் அவ்வப்போது ஏற்படுத்தப்பட்டன; உதாரணமாக, அவ்வித சர்வாதீனம் 1633இல் நீலச் சாய விற்பனையில் ஏற்படுத்தப்பட்டது. 1636இல் கோல்கொண்டா (Golkonda) இராச்சியம் கைப்பற்றப்பட்டபோது இருந்ததுபோல, புதிதாக வென்று கைப்பற்றப்பட்ட இராச்சியங்களின்மீது விதிக்கப்பட்ட அபராதங்களும் கப்பங்களும் 'போர் நஷ்டஈடுகள்' என்ற தலைப்பில் அடங்கியிருந்தன. ஆகையினால், அவையெல்லாம் ஒழுங்கான பேரரச வருமானத்தின் ஆதாரமாக அமைந்திருக்கவில்லை. இம் முக்கிய வருமானத் தலைப்புகளிலிருந்து வரும் வருமானத்தைப் பேரரசக் கருவூலம், படை, சிவில் நிர்வாகப் பணியைச் சார்ந்த எல்லாத் தரத்தினரும் உட்படப் பொது நிர்வாகத்தின் முழுச் செலவு, அரசவைக்கான செலவு, பேரரசு அரண்மனைக்கான செலவு, கட்டடங்கள், மற்றப் பொதுப்பணிகள் ஆகியவற்றுக்கான முதலீடு ஆகியவற்றிற்காகச் செலவழித்தது. வருமானத்தின் பெரும்பகுதி படைக்காகவும், ஆட்சிப் பணித்துறையில் சேர்ந்தவர்களுக்காகவும் செலவழிக்கப்பட்டது. அவ்விரு துறைகளின்மீதும் ஏராளமான பணம் வரைதுறையின்றிச் செலவழிக்கப்பட்டது. படை அதற்கேற்ப பலத்தை எப்போதுமே பெற்றிராவிடினும், எண்ணிக்கையில் தேவைக்கு மேற்பட்டிருந்தது; போதிய அளவு பயிற்சியையும் அது பெற்றிருக்கவில்லை. அக்பர் காலத்தில் பேரரச அதிகாரிகளின் சம்பளம் மிக அதிகமாகவே இருந்தது; ஆனால், ஷாஜஹானின் ஆட்சிக் காலத்திலோவென்றால், அவர்கள் அளவு மீறி மிகையூதியம் பெற்றனர்.

பேரரசத் தேவைகளுக்காக ஒதுக்கிவைக்கப்பட்ட வருமானம் பேரரசக் கருவூலத்தில் சரிவரச் செலுத்தப்படுகிறதா என்பதைக் கவனிப்பதுதான் மாகாண கவர்னரின் முதன்மையான கடமையாகும். அவ்வதிகாரியின் வருமானங்களில், அவரவர்களுடைய நியமனங்களுக்காக அவருக்கும் அவருடைய அதிகாரிகளுக்கும் அளிக்கப்பட்ட நிலங்களிலிருந்து வரும் நிலவருமானம், பலவகைப்பட்ட வரிகள், தீர்வைகள், பொருள்கள், இடம்விட்டு இடம் மாறும் பொழுது அவைகள் மீது விதிக்கப்படும் தீர்வைகள், அபராதங்கள், பரிசுகள், இலஞ்சங்கள் ஆகியவையெல்லாம் அடங்கியிருந்தன. அதிகாரத் தோரணையில் அவர்கள் பெற்ற ஊதியங்கள் மிக அதிகமாகவே இருந்தபோதிலும், முகலாய அதிகாரிகள் பலர் குறிப்பாக ஷாஜஹான், அவுரங்கசீப் காலத்தில் கடனில் மூழ்கிக் கிடந்தனர். ஆகையினால், பேரரசக் கருவூலத்திற்காக வசூலிக்கப்பட்ட பலவகைத் தீர்வைகளிலிருந்து வேறுபட்ட பலவகை வரிகளை அவ்வதிகாரிகள் விதித்துத் தங்களது வருமானத்தை இட்டு நிரப்பிக்கொள்ள வேண்டி நேரிட்டது. சிற்சில இடங்களில் அவர்கள் உப்பு வரி ஒன்றை விதித்தனர். மற்றும் சில இடங்களில் ஆயத்துறை வருமானம் பெற்றனர். 1632இல் சாராய வகையை இறக்கி விற்பதன்மீது கடும் அபராதங்கள் விதிக்கப்பட்டன என்று பீட்டர் முண்டி (Peter Mundy) குறிப்பிடுகிறார். இருந்தபோதிலும், சாராயம் தரும் பனைமரங்களை அதே தேதியில் குத்தகைக்கு விடுவதிலிருந்து சூரத்தின் கவர்னரை அப் பேரரசின் விலக்காணை தடுக்கவில்லை. ‘நபிகள் நாயகத்தின் சமய நீதியைவிட ஷீராவிலிருந்து வந்த திராட்சைரசமே எப்போதும் அதிகச் செல்வாக்குப் பெற்றிருந்தது’ என்று கிப்பன் (Gibbon) கூறுகிறார். அதேபோல, முகலாய இந்தியாவிலும், மேற்குக் கடற்கரையின் கள்ளும் உள்ளூர் மாவட்டங்களிலிருந்து வந்த மஹுவா (mahuva) பானமும் பெரும்பான்மையோரால் விரும்பப்பட்டதனாலும், ஏராளமான வருவாயைக் கொணர்ந்ததனாலும், பேராசை பிடித்த தல அதிகாரிகள் பேரரசின் ஆணைகளைக் கண்டிப்பாகச் செயற்படுத்தவில்லை. பலவகைப்பட்ட தீர்வைகள் பொறுத்தவரையிலும், அதுபோலவே பேரரச ஆணைகள் புறக்கணிப்பட்டன. ஒவ்வொரு பேரரசரும் அவ்வப்பொழுது இத் தீர்வைகளை எடுத்துவிட முயன்றார். ஆனாலும், தல அதிகாரிகள் தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளுவதற்காக அத் தீர்வைகளைத் தொடர்ந்து விதித்துவந்தனர் என்பதற்குச் சமகாலத்துச் சான்றுகள் பல உள்ளன. அபராதங்கள், இலஞ்சங்கள், பரிசுகளைப் பொறுத்தவரை தல அதிகாரிகள் இவற்றை வலிந்து பெறுவதற்கு அளவே இல்லை. அத் தல அதிகாரிகள், தங்கள் நிர்வாகம் அரசவையில் பழிசுமத்தப்படாமலோ, வசைச்சொல்லுக்குட்படாமலோ இருக்கும் வரையில், தங்கள் விருப்பம்போல நடந்து

கொள்ள விட்டுவிடப்பட்டனர். நீதி வழங்கும் அதிகாரிகள் என்ற நிலையில் கவர்னர்கள் கிரிமினல் குற்றங்களுக்காக விதிக்கப்பட்ட அபராதங்களைத் தாங்களே எடுத்துக்கொண்டனர். இதன் விளைவாகக் கொலையாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டவர்களின் மீதும் தூக்குதண்டனை விதிக்காது அடிக்கடி அபராதமே விதிக்கப்பட்டது. சிற்சில நகரங்களில், சுற்றுப்புறங்களிலும் நகரத்துக்கு வரும் வழிகளிலும் தொல்லை கொடுத்துவந்த ஆயுதந் தாங்கிய கொள்ளையர்களுடன் தல அதிகாரிகளும் சேர்ந்துகொண்டு, அவர்களுடைய கொடுந்தொழில்களிலிருந்து வரும் நேர்முக, மறைமுகக் கொள்ளைப் பொருள்களைப் பங்கிட்டுக்கொண்டனர். வியாபாரிகளின் மீது விதிக்கப்பட்ட அபராதங்கள் எல்லாம் அவற்றை விதித்த அதிகாரியின் உடைமைகளாயின என்று 17ஆம் நூற்றாண்டின் டச்சு வர்த்தக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. சலுகைகள் பெறுவதற்கோ, குறைகளை நிவர்த்திப்பதற்கோ ஏராளமான பரிசுகளைத் தல அதிகாரிகளுக்கு வழங்குதல் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையாகும் என்று அதே காலத்திற்குரிய ஆங்கிலேய வர்த்தகர்களின் கடிதங்கள் வெளிப்படுத்துகின்றன. டாக்கா நகரைச் சார்ந்த தானிய வியாபாரிகள் மீர் ஜும்லாவுக்கு (Mir Jumla) 50,000 ரூபாய் கொடுக்கும்வரை அவர்களை அவ்வதிகாரி இரக்கமின்றிச் சாட்டையால் அடித்தார் என்பதிலிருந்து எவ்வளவிற்கு அவ்வதிகாரிகள் சில வேளைகளில் வன்முறையைப் பயன்படுத்தித் தீர்வைகளைப் பெற்றனர் என்பது புலனாகிறது. அந் நகரில் தாம் முகாமிட்டதனால் அவ் வியாபாரிகளுக்கு அத் தொகையைவிட இரண்டு பங்கு இலாபம் கிடைத்தது என்ற காரணத்தைக் காட்டி அவர் அவ்விதம் செய்தார்.[1]

முகலாயர்களின் வருவாய் நிர்வாகத்தைபற்றிய விவரங்களை ஆராய்வதற்குமுன், பேரரசு ஓர் ஒன்றுப்பட்ட தொகுதியன்று என்பதையும், சில பகுதிகளில் அக்பரால் புகுத்தப்பட்ட நிதிமுறையைத் தல அதிகாரிகளின் அல்லது நிலச்சொந்தக்காரர்களின் உரிமையைப் பாதிக்காமல் விதித்திருக்க முடியாதென்பதையும் குறிப்பிடுவது அவசியமாகும். அத் தல அதிகாரிகள், பேரரசரின் மேலாண்மையைப் பெயரளவில் ஏற்றுக்கொண்டு குறிப்பிட்ட கப்பத்தைப் பேரரசக் கருவூலத்திற்குச் செலுத்திவரும்வரையில் தங்களது ஆட்சிப் பகுதிகளில் சுதந்தரநிலையில் விட்டுவைக்கப்பட விரும்பினர். உதாரணமாக, இராசபுதனத்தின் நிலை அது போன்றுதான் இருந்தது. பதேபூர் சிக்ரியின் அருகிலிருந்த மேவாரைச் சார்ந்த

[1] நிதிமுறைபற்றிய இவ்விரு பத்திகளும் W. H. Moreland எழுதியுள்ள 'From Akbar to Aurangzeb' என்ற நூலை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டுள்ளன.

ராணு சங்கா சீசோதியாவை (Rana Sanga Sisodia of Mewar) பாபர் 1527இல் போரிட்டு முறியடித்தவரை இராஜபுத்திரர்கள் பெரும்பாலும் சுதந்தரநிலையிலேயே விட்டுவைக்கப்பட்டனர். 'அக்பர் ஆட்சிப் பகுதிகளைக் கைப்பற்றும் கொள்கையை மேலும் கையாண்டு, தலைசிறந்து விளங்கிய குடும்பங்களிலிருந்து பெண்களை மனைவிகளாகப் பெற்று, தமது இராணுவப் பணித்துறையில் பல தலைவர்களைச் சேர்த்துக்கொண்டார்.' ஆயினும், உண்மையில் நாடு பெரும்பாலும் மறைமுகமாகவே முகலாயர்களால் ஆளப்பட்டு வந்தது. இராணுவ நோக்கில் முக்கியத்துவம் பெற்ற சில நகரங்களிலும் கோட்டைகளிலும் படைகளை வைத்து அவைகளின்மூலமும், பேரரசப் படையில் சேர்ந்து பணியாற்றும் கடமையை இராஜபுத்திர தலைவர்கள்மீது விதித்தும் முகலாயர்கள் நாட்டை ஆட்சி புரிந்து வந்தனர். ஆஜ்மீர் (Ajmer) முகலாய ஆதிக்கத்தின் மையமாகும். அங்கேதான் சுபேதார் அல்லது மாகாண கவர்னர் வசித்துவந்தார்; பைராத் (Bairath), சாம்பர் (Sambhar), பியாணு (Biana), ரான்தம்போர் (Ranthambor) ஆகிய இடங்களிலும், இன்னும் மற்ற இடங்களிலும் ஃபவுஜ்தார்களும் கிலாதார்களும் (qiladars) அமர்த்தப்பட்டனர். ஆஜ்மீர் சுபாவில், பண்டைய இராஜ்யங்களைத் தவிர மற்ற எல்லா இராஜபுத்திர இராஜ்யங்களும் அடங்கியிருந்தன. இதனால், இராணுவ ஆட்சிக்குட்பட்டிருந்த பெரும்பகுதியான நாட்டுப் பரப்புப் பேரரச நிர்வாகத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டிருந்தது. தங்களுடைய இராஜ்யப் பகுதிகளின் எல்லைகளுக்குள் 'இராஜபுத்திரத் தலைவர்கள் தங்களுடைய ஆதிக்கத்தையும் தங்களுடைய சொந்த வரிவிதிப்பு வரிவசூல் முறைகளையும் கையாண்டுவந்தனர்.[1]

வருவாய் முறை: போதிய வருவாயை விதித்து வசூலித்தலும், படைக்குத் தேவையான வீரர்களை அளித்தலும் முகலாய நிர்வாகத்தில் இரண்டு முக்கிய நோக்கங்களாகும் என்று தற்கால ஆசிரியர் ஒருவர் கூறுகிறார். முதலாவது குறிக்கோளைப் பொறுத்தவரை, கூடியவரையில் பேரரசரோ அல்லது அவருடைய நியமனதாரர்களோ குடியானவனிடமிருந்து தரகர்களின் குறுக்கிடுதல் இல்லாமல் நேர்முகமாகவே வருவாயைப் பெறவேண்டியது மிக அவசியம் என்று கருதப்பட்டது. இராஜபுதனத்தின் விஷயத்தில் ஏற்கனவே காட்டப்பட்டதுபோல் இக் குறிக்கோளை எப்பொழுதும் செயற்படுத்த முடியவில்லை. ஆகையினால், பேரரசின் பல பகுதிகளில், தல நிதி ஏற்பாடுகள் ஜமீன்தாரின் பொறுப்பிலேயே இருந்தன. குறிப்பிட்ட ஒரு வருவாயை ஆண்டுதோறும் அரசாங்கத்துக்குக் கொடுப்பதுமட்டும் அவரது பொறுப்பாகும். மற்றபடி, குடி

[1] W. Irvine, 'Later Mughals', vol. i.

யானவர்களிடமிருந்து எவ்வளவு பணம் சுரண்டமுடியுமோ அவ்வளவையும் அவர் பெறலாம்.[1] தனிப்பட்ட இந் நிகழ்ச்சிகளைத் தவிர, முகலாய வருவாய் முறையின் அடிப்படையாவது—பேரரசு பல சுபாக்கள் அல்லது வைஸ்ராய் அரசாங்கங்களாகவும், சர்க்கார்கள் அல்லது மாவட்டங்களாகவும், பர்காணுக்கள் அல்லது ஒரு சில வேளைகளில் மஹல்லாக்கள் என்று வழங்கப்பட்ட பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டிருந்ததுதான். மஹல்லாக்கள் என்ற பிரிவு, அக்பரால், 1579-80-ல், அவரது ஆட்சியின் இருபத்து நான்காம், இருபத்து ஐந்தாம் ஆண்டுகளில் புகுத்தப்பட்டதாகும். நாம் ஏற்கெனவே கண்டதுபோல, இப் பகுதிகளில் வருவாயைத் திரட்டும் பொறுப்பும் இராணுவத்திற்கு ஆள்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்புமன்றிப் பொது அமைதியை நிலைநாட்டும் பொறுப்பும் பல்வகைப்பட்ட அவசரமான வேலைகளைச் செய்து முடிக்கும் பொறுப்பும் ஓர் அதிகாரிகளின் குழுவினிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தன.

மேற்குறிப்பிட்ட தேதிக்கு முன்பு, தமது ஆட்சிப் பகுதிகளிலிருந்த நிதிக் குழப்பத்தைச் சீர்படுத்தவும், பொது நிதி மோசடி செய்யப்படுவதிலிருந்து காக்கவும் அக்பர் பலமுறை முயன்றார். பொதுநிதியை மோசடி செய்தல் இடையருமலும் எங்கும் பரவியும் இருந்தது. உதாரணமாக, தலைக் கனுங்கோக்களால் தயாரிக்கப் பட்டுத் தலைமைத் தானத்திலிருந்த பத்து உயர்தர ஹனுங்கோக்களால் சரிபார்க்கப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையின்மீது திருத்தம் பெற்ற நிலவருவாயின் ஒரு மதிப்பீட்டைத் தயாரிக்கும் பொறுப்பு முஸஃபர்கான் துர்பாதி (Muzaffar Khan Turbati) என்பவரிடம் 1571-ல் ஒப்படைக்கப்பட்டது. அவருக்கு உதவியாகத் தோடர் மலும் (Todar Mall) நியமிக்கப்பட்டார். இங்ஙனமாக, அரசாங்கக் கேட்புத் தொகையை நிர்ணயிப்பதற்காக வழிவழியாக வந்து கொண்டிருந்த பழைய வருவாய்த்துறை அதிகாரிகள் கொண்டிருந்த தலத்தைப்பற்றிய அறிவை முகலாய ஆதிக்கம் நிலைநாட்டப் பட்டதற்குப் பிறகு முதன்முதலாகப் பயன்படுத்திக்கொள்ளப் பட்டது. புதிதாக வெல்லப்பட்ட குஜராத்து மாகாணத்தின் நில வருவாய் மதிப்பீட்டை நிர்ணயிக்குமாறு தோடர்மல் 1573-ல் உத்தரவிடப்பட்டார். நேர்முக நிர்வாகத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப் பட்ட பகுதியில் இருக்கும் நிலங்களையெல்லாம் தோடர்மல் திட்டவட்டமாக அளந்து சர்வே செய்யத் தொடங்கி, இறுதியில் சில கோட்பாடுகளுக்கிணங்க மதிப்பீட்டை நிச்சயித்தார். அம் மதிப்பீடு வடஇந்தியாவில் பின்னுல் அவர் செய்த செட்டில்மென்டுக்கு அடிப்

[1] W. H. Moreland, 'India at the Death of Akbar'.

படையாக அமைந்திருந்தது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, 1575-76-ல் அக்பர் புதியதானதும் பேரழிவுக்கேதுவானதுமான பரிசோதனை ஒன்றைச் செய்தார். இதன்படி, பழங்காலந்தொட்டு வந்துகொண்டிருந்த வருவாய்ப் பகுதிகளான பர்கானுக்களை அக்பர் எடுத்துவிட்டு, வங்காளம், பீஹார், குஜராத்து ஆகியவைகளைத் தவிர, அப்போது எஞ்சியிருந்த பேரரசைப் பல செயற்கைத் தொகுதிகளாகப் பிரித்தார். இந்த ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் ஒரு கோடி அல்லது 10 மில்லியன் டங்காக்கள் (tankas) (250,000 ரூபாய்) வருவாய் கிடைத்தது. ஒவ்வொரு தொகுதியும் கரோரி (karori) அல்லது அமில் (amil) என்று வழங்கப்பட்ட அதிகாரியின் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்தது. வருவாய் வசூலிப்பவருடைய பொறுப்பையும், குடியேற்ற நிறுவன அதிகாரியின் பொறுப்பையும் அவ்வதிகாரி பெற்றிருந்தார்.[1] நகைப்புக்கிடம் தரும் குறுகிய கால மான மூன்று ஆண்டுகளில் பயிரிடப்படும் பரப்பை விஸ்தரித்தல் அவ்வதிகாரியின் முக்கியக் கடமையாயிருந்தது. பதௌனியின் கூற்றின்படி, "துரதிருஷ்டவசமாக அவ்விதம் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் அரசாங்கத்தின் நலன்களை முற்றும் புறக்கணித்து, தங்கள் சுயநலத்திற்காகச் செய்த பேரிரை வேட்டையின் விளைவாக நாட்டையே பாழ்படுத்தினர். அவர்களுடைய கொடுமைகள் குடியானவர்களை மிக மோசமான நிலைக்குட்படுத்தியதனால், பலர் தங்களுடைய மனைவிமக்களை விற்றுவிட்டு, நிரந்தரமாகக் கிராமங் களை விட்டுச் சென்றனர். தோடர்மால் பல கரோரிகளின்மீது நடவடிக்கை எடுத்து விசாரித்து அவர்களுடைய அடாத செயல் களுக்காகக் கடுந்தண்டனை விதித்தார். ஆனாலும், பேரழிவில் முடிந்த இப் பரிசோதனை கைவிடப்பட்டது சரியே. கரோரிகளின் செயற்கை அதிகார வரம்புகள் விலக்கப்பட்டு, அவைகளுக்குப் பதிலாகப் பழமை வாய்ந்த தலப்பிரிவுகள் அல்லது பர்கானுக்கள் மீண்டும் நிலைநாட்டப்பட்டன. ஆனாலும், 'கரோரி' என்ற பட்டப் பெயர் அதற்குப் பின்னரும் நீடித்து நிலைத்திருந்தது. ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தில் அது வழக்கத்திலிருந்தது."[2]

1579-80-ல் அக்பர் செய்த சீர்திருத்தங்கள் பேரரசை 12 சுபாக்களாகப் பிரித்தன. மொத்தத்தில் இச் சுபாக்கள் 100-க்கும் மேற்பட்ட சர்க்கார்களை உட்கொண்டிருந்தன. ஒவ்வொரு சர்க்கா ரிலும் பல பர்கானுக்கள் அடங்கியிருந்தன. உதாரணமாக, ஆக்ரா சுபாவில் 13 சர்க்கார்களும் 203 பர்கானுக்களும் அடங்கியிருந்தன. அவற்றில் 31 பர்கானுக்கள் ஆக்ரா சுபாவில் சேர்க்கப்பட்

[1] Smith, 'Akbar: Ain-i-Akbari', vol. ii.

[2] Badaoni (A. S. B. trans.), vol. ii; Smith, 'Akbar', pp. 139-40; Moreland, *ibid*.

டிருந்தன.[1] நிருவாக வசதிக்காக பர்கானுக்கள், தஸ்தூரிகள் (dasturs) என வழங்கிவந்த பகுதிகளாகத் தொகுக்கப்பட்டிருந்தன. அந் நிலப்பகுதிகளில் குறிப்பிட்ட தல சட்டத் தொகுப்புகளும் பழக்கங்களும் வழக்கத்தில் இருந்தன. தஸ்தூரி-அமல் (Dusturi-i-Amal) அல்லது 'பழக்கவழக்கங்கள்' என்று வழங்கப்பட்டுவந்த இச் சட்டத் தொகுப்புகள் குறிப்பிட்ட பகுதிகளிலிருந்த வருவாய்த் துறை அதிகாரிகளுக்காகப் பல்வகைப்பட்ட உத்தரவுகளையும் அட்டவணைகளையும் கொண்டிருந்தன. வடஇந்தியாவில் நில உடைமை உரிமைபற்றிய விவரங்களை அறிந்திருந்த கனுங்கோக்கள் என்னும் வழியாக வரும் அதிகாரிகள் அவ் வுத்தரவுகளைத் தொகுத்தனர். தாமஸ் (Thomas) என்பவரின் கருத்தின்படி, 'ஓர் அரசவை வழி காட்டும் நூலும், ஒரு சிவில் பணியாளர் பட்டியலும், ஓர் இராணுவப் படைப் பட்டியலும், அக் காலத்திய நாட் குறிப்பேடும், உள்ளூரிலிருந்தும் வெளியிலிருந்தும் வரும் வருமான அறிக்கைகளின் சுருக்கங்களும், அளவைகள், எடைகள், நாணயங்கள் ஆகியவைபற்றிய செயல்முறைக் குறிப்புகளும், பயண விரிவுரை ஏடுகளும், எல்லா வகைப்பட்ட பயனுள்ள தகவல்களும் அவற்றில் அடங்கி யிருந்தன.'[2] வின்செண்ட் ஸ்மித், சுபாக்களைத் தற்கால கவர்னர் மாகாணங்களுடன் ஒப்பிடுகிறார். அச் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்ட அவ்வாண்டில் பன்னிரண்டாக இருந்த சுபாக்களின் எண்ணிக்கை அக்பரின் இறப்பின்பொழுது பதினைந்தாகவும், அவுரங்கசீப்பின் ஆட்சியின் பிந்திய நாள்களில் இருபத்தொன்றாகவும் அதிகமாயிற்று. இதற்குக் காரணமாவது : தக்காண (Deccan) மாகாணங்கள் மூன்றிலிருந்து ஆறாக அதிகமாயின. தவிர, தட்டா (Tatta) அல்லது தெற்கு சிந்து (Sind), காஷ்மீர் (Kashmir), ஒரிஸ்ஸா (Orissa) ஆகியவை முன்பு இருந்ததுபோல முறையே மூல்தான் (Multhan), காபூல் (Kabul), வங்காளம் ஆகியவற்றின் பகுதிகளாக இல்லாமல் தனிப்பட்ட சுபாக்களாக உருவாக்கப் பட்டன. முன்பு இருந்த பன்னிரண்டு மாகாணங்களாவன : அலகாபாத் (Allahabad), ஆக்ரா, அவுத் (Outh), ஆஜ்மீர் (Ajmir), ஆமதாபாத் (Ahamadabad), பேஹார் (Behar), வங்காளம், டெல்லி, காபூல், லாகூர், மூல்தான், மாளவம் என்பவையாகும். இவற்றுடன், பின்னால் வெல்லப்பட்ட பீரார், காந்தேஷ் (Khandesh), ஆமத்நகர் ஆகியவை இணைக்கப்பட்டன. 1579-80-ல் இப் பன்னிரண்டு சுபாக்களின் மொத்த நிலவருவாய் சுமார் 90,744,000 ரூபாய் என்று மதிப்பிடப்பட்டது.[3] அதே சமயத்தில், 1605ஆம்

[1] 'Ain-i-Akbari,' quoted in Smith's 'Akbar' p. 372.
[2] E. Thomas, 'Revenue Resources of the Mughul Empire,' p. 14.
[3] 'Ain-i-Akbari', vol. ii, Jarrett.

LIBRARY

ஆண்டுக்காகத் தலைவர் வான் டன் புருக் (President van den Broeeke) என்பவர் தெரிவித்த எண்ணிக்கையின்படி, அந் நாளில் பதினைந்து சுபாக்களிலிருந்து கிடைத்த மொத்த வருவாய் *174,500,000* ரூபாயாக இருந்தது.[1] நாற்பத்துமூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அவ் வருவாய் பதினேழு கோடியிலிருந்து இருபத்தொரு கோடி ரூபாயாக அதிகமாயிற்று. அதேசமயத்தில் அரசு நிலங்கள் ஷாஜஹானின் தனிப்பட்ட செலவிற்காக மூன்று கோடி ரூபாய் அல்லது 3½ மில்லியன் பவுண்ட் ஸ்டர்லிங் தொகையைக் கொடுத்தன.[2] அவுரங்கசீப்பின் காலத்தில் பேரரசு வருவாய் பெரிதும் குறைந்துவிட்டது. 'தக்காணத்தில் இடையருமல் நடந்த போர் அவர் கருவூலத்தை வெறுமையாக்கியது. அரசாங்கம் ஓட்டாண்டியாகிவிட்டது. பாக்கிச் சம்பளம் பெருது வறுமையில் மூழ்கிக் கிடந்த படைவீரர்கள் கலகம் செய்தனர். அவருடைய ஆட்சிக் காலத்தின் இறுதி ஆண்டுகளில், விசுவாசமும் திறமையும் படைத்த திவானுக முர்ஷீத் கூலிகான் (Murshid Quli Khan) என்பவரால் ஒழுங்காக அனுப்பப்பட்டுவந்த வங்காளத்து வருவாய்தான் பேரரசரின் குடும்பத்தையும் படையையும் பேணிவந்தது.'[3]

சுபா என்பது பேரரசின் சிறியதோர் உருவப்படியாக இருந்ததென்றல், சர்க்கார் அல்லது மாவட்டம் நிர்வாகத்தின் அலகாக அமைந்திருந்தது. அது ஏற்கெனவே குறிப்பிட்டுள்ள ஃபவுஜ்தார் அல்லது இராணுவத் தளபதியின் பொறுப்பிலும், அமல்குஸார் (amalguzar) என்னும் வரி வசூலிப்பவரின் பொறுப்பிலும் இருந்தது. பேரரசரின் அரசவையின் எல்லையற்ற செலவுகளுக்காகவும், தரப்படுத்தப்பட்ட அதிகாரிகள் பெற்ற ஏராளமான ஊதியங்களுக்காகவும் அரசாங்கம் சர்க்காரின் வருவாயைத்தான் நம்பியிருந்தது. அவ் வருவாயின் பெரும்பகுதி நிலத்திலிருந்து கிடைத்ததாகும். பல கோட்டங்களும் எவ்வளவு நிலவருவாய் அளிக்க முடியும் என்பதை ஏறக்குறைய சரிநுட்பமாக நிர்ணயிப்பதற்காகத் தோடர்மல், ஷேர்ஷா காட்டிய முறையைப் பின்பற்றியும், குஜராத்தில் தாமே மேற்கொண்ட ஏற்பாடுகளைத் தமக்கு வழிகாட்டியாக வைத்துக்கொண்டும் வட இந்தியாவில் முழுவதிலும் சீர்திருத்தம் பெற்ற 'நில அளவை செட்டில்மென்ட்' ஒன்றை நிலைநாட்டினர். அந்த செட்டில்மென்டு, பயிரிடப்பட்ட பகுதியின் ஏறக்குறைய சரியான அளவை, மண்வளத்தின் வகைப்பாடு ஆகியவற்றின்

[1] Smith, 'Akbar', p. 380.

[2] J. N. Sarkar, 'Studies in Mughal India', p. 16. *1648*-ல் ஒரு ரூபாய்—2 ஷில்லிங், 3 பென்ஸ் மதிப்புப் பெற்றிருந்தது.

[3] J. N. Sarkar, *ibid.*, p. 51.

அடிப்படையில் அமைந்திருந்தது. இறுதி மதிப்பீட்டை நிச்சயிக்கும் பொழுது, விளைவிக்கப்படும் பயிரின் வகையும், சந்தை நிலவர விலையின் சராசரி மட்டமும் கருத்தில் கொள்ளப்பட்டன. முந்திய ஆண்டுகளில் இருந்த முறையற்ற மதிப்பீடுகளைவிட முன்னேற்றம் பெற்றிருந்த இம் முறை முகலாயர்களின் காலம் முழுவதிலும் நீடித்திருந்தது. சில கூறுகளில் பிரிட்டிஷ் இந்தியாவின் சர்வே செட்டில்மென்டுக்கு (Survey Settlement) ஒரு மாதிரியாகவும் இது அமைந்திருந்தது என்று சொல்லலாம். அவுரங்கசீப் வைஸ்ராயாக இருந்த பொழுது, தோடர்மல் உருவாக்கிய நில அளவை, மதிப்பீட்டு முறைகளை மூர்ஷித் கூலிகான் தக்கணத்தில் பின்பற்றினர். தக்கணம், 1656 ஆம் ஆண்டுவரை, ஒவ்வோர் ஏராலும் உழப்படும் நிலத்தின்மீது ஒரு சிறிய தீர்வையை விதித்து, அரைகுறையான வகையில் வரி விதிக்கப்பட்டுவந்தது. ஆயினும், அவர் தலத்தில் பின்பற்றப்பட்டுவந்த பழக்கங்களில் மிகத் தீவிரமாகத் தலையிடவில்லை. தோடர்மலின் விஞ்ஞான முறைப்படி அமைந்த ஏற்பாடுகள் செயல்முறையில் கொண்டுவர முடியவில்லையெனில், இது விஷயத்தில் அவர் புத்திசாலித்தனமாகவே நடந்துகொண்டாரென்றும் சொல்லலாம். ஒவ்வோர் ஏரால் உழப்பட்ட நிலத்திற்கும் ஒரு மொத்தத் தொகையை நிர்ணயிப்பதான பழைய முறையை அவர் வைத்துக்கொண்டார். பண்டமாகச் செலுத்தப்பட்ட தீர்வைகளையும் அவர் ஏற்றுக்கொண்டார். பல முறைகளைக் கையாண்டு பயிர்களைப் பாகுபடுத்தினர். பயிரிடுதலை மீண்டும் தொடங்குவதற்காகக் குடியானவர்களுக்கு அவர் தடையின்றி முன்பணத் தொகைகளையும் கொடுத்தார்.

இவ்வாறு அக்பரின் ஆட்சிக் காலத்தில் புகுத்தப்பட்ட முகலாய நிலவருவாய்த் திட்டத்தின் மூன்று முக்கியக் கூறுகளாவன: (a) நிலத்தை அளவெடுத்தல்; (b) நிலத்தை வகைப்படுத்துதல்; (c) தீர்வைகளை நிச்சயித்தல். அளவெடுப்பது பொறுத்தவரை, அக்பரும் தோடர்மல்லும் பழைய அளவெடுப்பு அலகுகள் பலவற்றை ஒழித்து, அவைகளுக்குப் பதிலாக இலாஹி கஸ் (Ilahi gaz) (கஜம்—yard) என்பதைப் புகுத்தினர்கள். அந்த அளவு 41 விரல்கள் அல்லது சுமார் 33 அங்குலத்துக்குச் சமமாகும் என்று கருதப்பட்டது. தவிர, ஈரக்காற்றில் சுருங்கிய பழைய கூடாரக் கயிற்றுக்குப் பதிலாக 60 கஜ கூடாரக் கயிறு (தனப்) அல்லது ஜரீப் (சங்கிலி) புகுத்தப்பட்டது. அது இரும்பு வளையங்களால் பிணைத்து முடுக்கப்பட்ட மூங்கிற் கொம்பாகும். மேலும், பரப்பளவையாக 3,600 சதுர கஜங் கொண்ட பைகாவும் (bigha) புகுத்தப்பட்டது. நிலப்பாகுபாடு நான்கு வகையாக இருந்தது. அதாவது, (1) போலாஜ் (polaj) அல்லது ஆண்டுதோறும் பயிரிடப்பட்ட நிலம்; (2) பரௌட்டி

(parauti) அல்லது தன் வளத்தை மீண்டும் பெறுவதற்காகச் சிறிது காலம் பயிரிடப்படாமல் விட்டுவைக்கப்பட்ட நிலம்; (3) சசார் (chachar) அல்லது மூன்று அல்லது நான்கு ஆண்டுகளாகப் பயிரிடப்படாமல் விட்டுவைக்கப்பட்ட நிலம்; (4) பஞ்சார் (banjar) அல்லது ஐந்து ஆண்டுகளாகவோ, அதற்கு மேற்பட்டோ பயிரிடப்படாமல் விட்டுவைக்கப்பட்ட நிலம். தீர்வை வீதங்கள் பொறுத்த வரை ஒவ்வொரு வகைப்பட்ட பயிரும், விளைவிக்கப்பட்ட ஒவ்வொரு நிலப்பகுதியும் அதற்குரிய தீர்வையைச் செலுத்திவந்தது. பயிர்கள் பல்வகைப்பட்டவையாயிருந்தமையாலும், இப்பொழுது பயிரிடப்படும் பயிர்களை மொத்தத்தில் ஒத்திருந்ததனாலும், தீர்வை வீதங்களின் எண்ணிக்கை மிக அதிகமாகவே இருந்தது. அன்றியும், ஒவ்வொருவகைப் பயிரும் எவ்வளவு நிலப்பரப்பில் பயிரிடப்பட்டது என்பது பருவத்துக்குப் பருவமாகக் குறிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு குடியானவனும் சாகுபடி செய்த பகுதிக்கென ஒப்பளிக்கப்பட்ட தீர்வைகளைச் செயல்முறையில் கொண்டுவந்து அக் குடியானவனிடமிருந்து கேட்கப்பட்ட தீர்வை நிர்ணயிக்கப்பட்டது. இங்ஙனமாகக் குடியானவன் ஆக்ராவில் ஒரு பைக்கா கோதுமைக்கு 67 தாம்களும், ஒரு பைக்கா பார்லிக்கு 49 தாம்களும், நீலத்திற்கு $156\frac{1}{2}$ தாம்களும், கரும்புக்கு ஒரு பைகாவுக்கு 239 தாம்களும் கொடுத்தான்.[1] அவ்வாறு பல்வகைப்பட்ட தீர்வைகள் பயன்படுத்தப்பட்டதனால் சிக்கல் நிறைந்த கணக்குகள் போடவேண்டியிருந்தது. தவிர, வசந்தகால அறுவடைக்காக ஒருவகைப்பட்ட தீர்வைகளையும் இலையுதிர்கால அறுவடைக்காக மற்றொரு வகைப்பட்ட தீர்வைகளையும் வசூல் செய்தனர் என்று 'அய்னி அக்பரி'யில் நாம் படிக்கும்பொழுது, தலைமை ஸ்தானத்தில் அபுல் ஃபாஸலும் அவருடைய எழுத்துப் பணியாளர்களும் புள்ளியியல்விவரங்களைத் திரட்டுவதற்காக எடுத்த முயற்சி பிரமாண்டமானதாகும் என்பது தெரிய வருகிறது.[2] வாஸ்தவத்தில் பயிரிடப்பட்ட நிலம்தான் அளக்கப்பட்டு வரி விதிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட முதல் மூன்று வகை நிலங்களில் ஒன்றின் சராசரி விளைச்சலை நிச்சயிக்கும்பொருட்டு, இந்த வகைகள் ஒவ்வொன்றும் மீண்டும் மூன்று தரங்களாக உட்பிரிவினை செய்யப்பட்டன. அவற்றின் சராசரி முதன்மை வகுப்பு நிலத்தின் சராசரியாகும் என்று கருதப்பட்டது. போலாஜ் நிலத்தைப் போலவே பரௌட்டி நிலமும் பயிரிடப்பட்டபொழுது அதே தீர்வையைச் செலுத்தியது. சசார் நிலமும் பஞ்சார் நிலமும் பயிரிடப்பட்டபொழுது, ஐந்தாண்டுகட்குப்பின் போலாஜ் தரத்தை

[1] Moreland, 'India at the Death of Akbar'.

[2] 'Ain-i-Akbari', vol. ii; Moreland, *ibid*; Smith, 'Akbar'.

அடையும்வரை படிப்படியாகத் தீர்வை விதிக்கப்பட்டது. செட்டில் மென்டு அமலில் இருப்பதற்குரிய கால வரையறை எதுவும் நிச்சயிக்கப்படவில்லை.

தோடர்மல்லின் வருவாய் முறை வட இந்தியாவிலும், குஜராத்திலும், ஒரு சில மாறுதல்களுடன் தக்கணத்திலும் அமலில் கொண்டுவரப்பட்டது. அது ரயத்வாரி (rayatwari) முறையாகும்; அதாவது, கூடியவரையில் ஒவ்வொரு தனிப்பட்ட குடியானவனிடமிருந்தும் நேர்முகமாக வரி வசூலிக்கப்பட்டது. அதை அவன் ரொக்கமாகச் செலுத்தவேண்டியிருந்தது. முதலில் அமலில் இருந்த இந்திய முறையாவது: அறுவடையின்பொழுது விளைபொருள்களை அரசாங்கத்துக்கும் விவசாயிக்குமிடையில் பங்கிட்டுக் கொள்வது என்பதாகும். அவ்விரு தரத்தாரும் பருவகால லாப நஷ்டங்களை ஏற்றுக்கொண்டனர். இம் முறையை அக்பர் காஷ்மீரத்திலும் சிந்துவிலும் பின்பற்றினர். 1843-ல் பிரிட்டிஷ்காரர்கள் சிந்து மாகாணத்தை இணைத்துக்கொள்ளும்வரையில் விளைபயிரைப் பங்கிடும் முறை அங்கே நீடித்து நடைமுறையிலிருந்தது. ஆனால், மற்ற இடங்களிலும், பீஹாரிலிருந்து லாகூர், முல்தான் வரை வட இந்தியா முழுவதிலும் குடியானவனின் நிலத்தின் சராசரி விளைச்சலில் மூன்றில் ஒரு பாகத்துக்குச் சமமான ரொக்கப் பணத்தை முகலாயப் பேரரசர் அவனிடமிருந்து வசூலித்தார். அத்தொகை மேலே சொல்லப்பட்ட கோட்பாடுகளின்படி கணக்கிடப்பட்டது. இவ்விதமாக அரசாங்கம் பெற்ற பங்கு மிக அதிகமாகவே இருந்தது. இந்து சட்டத்தின்படியும் வழக்கத்தின்படியும் அமைந்திருந்த ஆறில் ஒரு பங்கையும்விட அது அதிகமாக இருந்தது. மூர்லாண்டின் கணக்கீட்டின்படி, தற்கால நிலக்கிழார் கேட்கும் குத்தகைத் தொகையைப்போல் அது ஏறத்தாழ இரண்டு மடங்குள்ள தொகையாகும். நவீனகால நாணய முறையின்படி பார்த்தால், முக்கியப் பயிர்களுக்கு ஓர் ஏக்கருக்கு முகலாய வரி விதிப்பு ஏறக்குறைய பின்வருமாறு இருந்தது: கோதுமை 17 ரூபாயிலிருந்து 20 ரூபாய்வரை; பார்லி பதினொரு ரூபாயிலிருந்து 13 ரூபாய்வரை; உளுந்து 10 ரூபாயிலிருந்து 12 ரூபாய்வரை; ஜவார் 9 ரூபாயிலிருந்து 10 ரூபாய்வரை; பாஜ்ரா 7 ரூபாயிலிருந்து 8 ரூபாய்வரை; கரும்பு 36 ரூபாயிலிருந்து 42 ரூபாய்வரை; பருத்தி 26 ரூபாயிலிருந்து 30 ரூபாய்வரை; அவுரி 43 ரூபாயிலிருந்து 50 ரூபாய்வரை.

அரசாங்கம் கோரும் மூன்றில் ஒரு பங்கு வரிச்சுமையை விவசாயிகள் தாங்குவதற்கு ஈடாகப் பலவகைப்பட்ட தீர்வைகளும் வரிகளும் எடுக்கப்பட்டுவிட்டன என்று 'அய்னி அக்பரி'யில்

குறிக்கப்பட்டுள்ளது. அக்பர் எடுத்துவிட்ட சில தீர்வைகளாவன: தலைவீத வரி, புனிதத் தலங்களில் தலைவரி, ஒவ்வோர் உருப்படி எருதின்மீது விதிக்கப்பட்ட வரி, மரத்தீர்வை, கைவினைஞர்களின் மீது வரி, கால்நடை விற்பனையின்மீதும் சணல், நார், கம்பளம், எண்ணெய், தோல் ஆகியவற்றின்மீதும் தீர்வைகள், வீடுகள் வாங்குவதற்கும் விற்பதற்கும் கட்டணங்கள், தரோகாக்கள் (darogas), தாசில்தார்கள், கருவூலங்கள் ஆகியவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பரிசுகள் ஆகியவை உள்ளிட்ட இன்னோரன்ன பிற செலுத்தவேண்டிய கட்டணங்கள்; ஆனாலும், சுற்றுப்புற மாகாணங்களிலும் மாவட்டங்களிலும் இருந்த அதிகாரிகள் பெற்றிருந்த பெரும்பாலான கட்டுப்பாடற்ற சுதந்திரமும், இப் பல்வகைப்பட்ட தீர்வைகளை எடுத்துவிட்டுப் பிறப்பிக்கப்பட்ட பிரகடனங்களை மீண்டும் பிறப்பிக்கவேண்டியிருந்தது என்பதுவும் குடியானவன் உண்மையில் பெறவேண்டிய பரிகாரத்தைப் பெறவில்லை என்று சந்தேகிக்கத் தூண்டுகின்றன. முகலாயர்களின் முறையின்கீழ் அவன் விவசாயத்துக்குரிய பல்வகை நஷ்டங்களையும் சுமக்க வேண்டியிருக்கையில், தத்துவ ரீதியாகவேனும் அவன் பெற்றிருக்க வேண்டிய கூடுதல் இலாபம் அவனுக்குக கிடைத்ததா என்பது சந்தேகத்துக்குரியதாகும். வெள்ளத்தில் மூழ்கிய நிலங்களுக்கு வரிகுறைப்புக்கான ஓர் ஒழுங்கு வீதம் இருந்தது என்பதற்கு அபுல் ஃபாஸல் சான்று கூறுகிறார். அதுபோன்ற வரிகுறைப்புகள் பஞ்சத்தின்பொழுதும் பேரிழப்பின்பொழுதும் செய்யப்பட்டன என்பதில் சந்தேகம் இல்லை. ஆனாலும், எவ்வளவிற்கு இப்படிப் பரிகாரம் அளிக்கப்பட்டது என்பதற்கோ, தலைமை ஸ்தானத்திலிருந்து வந்துகொண்டிருந்த செயல்துறைக் கட்டளைகளையும் விதிகளையும் எவ்வளவிற்கு வருவாய்த்துறை அதிகாரிகள் கடைப்பிடித்தனர் என்பதற்கோ சான்று கிடைக்கவில்லை. அக்பர் காலத்திலுங்கூட குடியானவன் தனது சூழ்நிலையிலிருந்து ஒரு சிறு உதவியேனும் பெறவில்லை. அவனுடைய விளைபொருள்களை அனுகூலமான விலைக்கு விற்பதற்காகத் தேவைப்பட்ட வசதிகளும் அவனுக்கு இருந்ததில்லை. விவசாயத்தின் முன்னேற்றத்திற்காகச் சமூகம் எவ்வித உதவியையும் அளிக்கவில்லை. பற்றுக்குறை ஏற்பட்ட காலங்களில் அரசாங்கம் தனது வரிக்கோரிக்கையைக் குறைத்துக்கொண்டபோதன்றி, மற்றபடி எவ்வித உதவியுமின்றிக் குடியானவன் தனது சுமையைத் தாங்கவேண்டியிருந்தது. பிந்திய நாள்களில் அவனுடைய நிலைமை மேலும் மோசமாயிற்று. அதிகாரிகளும் ஜாகீர்தார்களும் குடியானவர்களின் நிலத்தைக் கைப்பற்றி அதைத் தாங்களே பயிரிடும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தனர் என்பது, ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்தின் துவக்கத்தில் பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒன்றிலிருந்து தெரிகிறது. அப்படியிருக்க, நில

வுடைமைகளை நிர்வாகம் வேண்டுமென்றதனாலோ மற்றொரு கூலிக்கு அவற்றைக் கொடுக்கவேண்டியிருந்ததனாலோ, குடியானவர்கள் தங்களுடைய உடைமைகளை ஒவ்வொரு பருவத்திலும் மாற்றும்படி வற்புறுத்தப்பட்டனர் என்று டி லேயட் (de Laet) கூறுகிறார். குடியானவன் பெரும்பாலும் மாருத நில உரிமையை அனுபவிக்க முடியவில்லை. ஆகையினால், அவனால் ஊக்கமாக எதையும் செய்ய முடியவில்லை.

அதற்கு மாறாக, அம் முறை குடியானவனுக்கு ஓரளவு உறுதிப் பாதுகாப்பையும், தன்னுடைய முயற்சிகளில் தனிப்பட்ட அக்கறை கொள்வதையும் அளித்தது. அதே சமயத்தில், அரசாங்க வருவாய் ஏறுவதிலிருந்தும் இறங்குவதிலிருந்தும் அது தடுத்தது; அல்லது அவ்வித ஏற்றத்தாழ்வைக் கூடியமட்டும் குறைத்தது. மேலும், அக்பரின் வெற்றிகளினால் நிலைநிறுத்தப்பட்டு, ஜஹாங்கீர், ஷாஜஹான் ஆட்சிக் காலங்களில் நீடித்து நிலைத்திருந்த அமைதி ஒருவகைப் பட்ட விவசாயச் செழுமையை உண்டாக்கியது. அச் செழுமை உணவுப் பொருள்கள் மலிவாகக் கிடைத்ததனாலும், ஏராளமான வர்த்தகத்தாலும் மறைமுகமாக மேலும் அதிகரித்தது. நில வருவாய்த் திட்டத்தின் அடிப்படையில் இருந்த கோட்பாடுகள் முற்றிலும் சரியானவையே என்பதையும் எவ்விதத் தயக்கமுமின்றி ஏற்றுக்கொள்ளவேண்டும். அக் கோட்பாடுகள் அதிகாரிகளுக்குப் பிறப்பிக்கப்பட்ட பல செயல்துறைக் கட்டளைகளில் அடங்கியிருந்தன. அதற்கு மேற்பட்டு ஒன்றும் செய்வதற்கில்லை. வருவாய் வசூல் அதிகாரிக்கு வழிகாட்டுவதற்காகப் பிறப்பிக்கப் பட்ட விதிகளைப் படித்துப் பார்த்தால் அவ்வுண்மை தெளிவாகும். அவ் விதிகள் 'அய்னி அக்பரி'யில் சேர்க்கப்பட்டுள்ளன. அவ்வதிகாரி குடியானவனின் நண்பனாக இருக்கவேண்டும். குடியானவனுக்குப் பணம் தேவையாயின் முன்பணமாக அவனுக்குக் கொடுத்து, அதைக் கொஞ்சங் கொஞ்சமாக அவனிடமிருந்து திரும்பப் பெறவேண்டும்; பயிரிடுதலுக்கு ஊக்கமளிக்க வரிகளைக் குறைக்கவேண்டும்; குடியானவனுக்குத் தேவையான ஒவ்வொரு வசதியையும் செய்து கொடுக்கவேண்டும். அவன் பயிரிடும் நிலத்தின்மீது விதிக்கப்படுவதற்குரிய தொகைக்கு மேற்பட்டு அவனிடமிருந்து எதுவும் பெறக்கூடாது; விதிக்கப்பட்ட வரியைக் குடியானவனிடமிருந்தே, தரகர்களின்றிப் பெறவேண்டும்; அளவான பலாத்காரத்தைப் பயன்படுத்தியே குடியானவன் தர வேண்டிய பாக்கித்தொகையைப் பெறவேண்டும். மக்களின் நிலைமையைப்பற்றியும், பொதுப் பாதுகாப்பு நிலையைப்பற்றியும், நடப்பு ஊர் விலைகள், வாடகைகள் போன்றவைகளைப்பற்றியும், ஏழை மக்களின் நிலையைப்பற்றியும் மாதந்தோறும் விவர அறிக்கை ஒன்றை

அனுப்பவேண்டும் என்றெல்லாம் அவ்வதிகாரிகளுக்கு உத்தர விடப்பட்டிருந்தது. வருவாய் வசூலிப்பைப்பற்றிய பல்வகை விவரங்களையும் அக் கட்டளைகள் குறிக்கின்றன. தீர்வைகளை ரொக்கமாகச் செலுத்தல் பொதுச் சட்டமாக இருந்தபோதிலும், பண்டங்களாகக் கொடுத்தல் முறை, அதாவது, விளைபயிரில் ஒரு பங்கு மறுக்கப்படவில்லை என்பதும் இதன் தொடர்பாக எதிர் பாராத முறையில் அக் கட்டளைகளிலிருந்து தெரிகிறது. வருவாய் வசூல் அதிகாரிக்கு வழிகாட்டியாக இருக்கப் பயிர்ப் பிரிவுக்கான நான்கு வெவ்வேறு முறைகள் விதிக்கப்பட்டன. பங்கிடும் பொறுப்பைக் கிராமத் தலைவனிடத்தில் ஒப்படைக்கக்கூடாது என்று வருவாய் வசூல் அதிகாரிக்கு எச்சரிக்கை செய்யப்பட் டிருந்தது. அவர் குடியானவனுடன் நேர் தொடர்பு கொண் டிருக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருந்தது.

வருவாய்த் துறைப் பணியாளர் தொகுதி: வருவாய் வசூல் அதிகாரிக்குக் கீழ்ப்பட்டு வெளியில் பணியாற்றுபவர்களின் எண்ணிக்கை பெரிதாகவே இருந்திருக்க வேண்டும். முகலாயர் காலம் முழுவதிலும் கிராமக் கணக்கர் கிராமச் சிப்பந்தி யாகப் பணியாற்றினரேயன்றி, அரசாங்கத்தின் சிப்பந்தி யாகப் பணியாற்றவில்லை. கிராமக் கணக்கரைத் தவிர, அம் முறையின்படி அளவிடுபவர்கள், கர்குன்கள் ஆகியவர்கள் அடங்கிய ஒரு பெருஞ் சிப்பந்திப் படையே நியமிக்கப்பட் டிருந்தது. பருவங்களில் விளைக்கப்பட்ட பயிர்களின் புள்ளி விவரங்களைத் திரட்டுவது அவர்களது கடமையாகும். இவர்களில் ஒவ்வொருவரும் நாள்தோறும் குறிப்பிட்ட ஒரு தொகையையும், அவர் செய்த பணிக்காகத் தானியமாகக் கொடுக்கப்பட்ட தினசரிப் படியையும் பெற்றுவந்தனர்; அல்லது, மாதந்தோறும் மாவு, எண்ணெய், தானியம், காய்கறிகள் போன்ற உணவுப் பொருள் களைப் பெற்றனர். அப் பொருள்களில் ஒரு பங்கு குடியானவர் களால் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். மற்றொரு முக்கியப் பணியாளர் கனுங்கோ ஆவர். (சொல்லையொட்டிப் பொருள் கொண்டால் இது 'சட்ட விரிவுரையாளர்' என்று பொருள்படும்.) நிலம், தல வழக்கங்கள் ஆகியவைபற்றிய எல்லாச் செய்திகளையும் அறிந்திருந்த வழிவழியாக வந்த ஒருவர் என்ற நிலையில் அவ் அதிகாரி தக்காணத்தில் தொன்றுதொட்டு வந்த தேஷ்பாண்டே (deshpande) என்ற அதிகாரிக்கு நிகரானவர். பர்கானாவின் பதிவுக் காப்பாளர் என்ற நிலையில் அக்பரின் காலத்திற்கு முன்பிருந்தே கனுங்கோ பணியாற்றிவந்தார். வருவாய்கள் வசூலிக்கப்பட்டு அவற்றிலிருந்து வரும் தொகையில் இரண்டு சதவிகிதம் ஊதியத்தைப் பெற்ற பட்வாரியைப் போலவே

இவரும் அத் தொகையை [illegible] பெற்ருர். அவருடைய முக்கியப் பொறுப் [illegible] அக்பரின் காலத்தில் [illegible] விருந்தும் வரவேண்டிய வருவாயை [illegible] வன : ஒவ்வொரு கிராமத்தி [illegible] வைத்தல் ; நிலங்களின் பரப்பளவு, ஒரு [illegible] சீம் (taksim) கணக்கை சராசரி குத்தகைத் தொகை, பயிரிடப்பட் [illegible] கா நிலத்திற்கான நிலப்பரப்பு, தீர்வையைச் செலுத்தவேண்டியவர்க [illegible] படாததுமான செலுத்தவேண்டாதவர்களின் பட்டியல் ஆகியவற்றை [illegible] பட்டியல், மாஸினு (mauzina) கணக்கு எழுதுதல் ; மூன்ற [illegible] ட்டும் பணம் வசூலிக்கப்பட்டதன் கணக்கு அல்லது வசூல் (wasul) கணக்கும், தீர்வைகளைச் செலுத்தாது பாக்கி வரவேண்டிய பணத்தின் கணக்கும் எழுதுதல் ஆகியவை. பின்னுள்களில் கணுங்கோவின் பதவி வழிவழியாக வரும் இயல்பினதாயிற்று. அப் பதவியைப் பெற்றிருந்தவர்கள் பதினெட்டாம் நூற்ருண்டில் மற்றவர்களைச் சேர்த்துக்கொள்ளாத ஒரு கூட்டுக் கழகமாகத் தம்மை ஆக்கிக்கொண்டனர்.[1]

ஒவ்வொரு மாவட்டத்திலும் பல கணுங்கோக்கள் இருந்தனர். பட்வாரிகளோ, கிராம அதிகாரிகளோ தங்களுக்கு அறிவிக்கும் நிலத்தில் ஏற்படும் வெள்ள அழிவுகள், நில விற்பனைகள், குத்தகைகள், நிலக்கொடைகள் முதலியவற்றைப்பற்றிய எல்லா விவரங்களையும் கொண்ட பதிவேடு ஒன்றையும் அக் கணுங்கோக்கள் வைத்திருந்தனர். முகலாய ஆட்சிக்கு முன்பு, கணுங்கோக்கள், மேற்குறிப்பிட்டதுபோல, வசூலிக்கப்பட்ட தொகையிலிருந்தோ, தனிப்பட்ட தீர்வைகளிலிருந்தோ குறிப்பிட்ட சதவிகிதத் தொகை ஒன்று கொடுக்கப்பெற்றனர். ஆனல், அக்பரது முறையின் கீழ் அவர்கள் மூன்று வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு, மாதம் ஒன்றுக்கு 20, 30, 50 ரூபாய்க்கு நிகரான நிலைப்படிகள் கொடுக்கப்பெற்றனர். மாகாணக் கணுங்கோக்களின் கணக்குகளைப் பெறவும், அவற்றைப் பேரரசத் தலைமையிடத்திற்கு அனுப்பிவைக்கவும் இரண்டு சதர் அல்லது தலைமைக் கணுங்கோக்கள் நியமிக்கப்பட்டனர். கீழ்த்தர வருவாய்ப் பணித்துறையைச் சேர்ந்த மற்றவர்கள் கீழ்குறிக்கப்படுபவர்கள் ஆவார்கள். ஷிக்தார் : இவர் குறிப்பிட்ட ஒரு நிலப்பகுதியிலிருந்து வருவாய் வசூலித்ததாகத் தெரிகிறது. ஆனலும், அவருடைய எல்லாச் செயல்களையும் அவர் வருவாய் வசூல் அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டியிருந்தது ; அமீன் : மற்ருேர் அதிகாரியாவார் ; இன்னும் ஓர் அதிகாரி முன்சீஃப் (Munsiff) ஆவார். அந் நாள்களில்

[1] See 'The Kanungo' by R. B. Ramsbotham, in 'Journal of Indian History', vol. iii, pt. 2 (1924), pp. 205 ff.

...ளர் ; தற்காலத்தில் இருப்பது முன்சீஃப் ஒரு நிர்வாக அதிகாரியா...ர். இம் மூன்று அதிகாரிகளும் போல அவர் ஒரு நீதிபதியா...க அமைப்பில் இருந்ததைப் பின் முந்திய ஷேர்ஷாவின் ...கத்திலும் நியமிக்கப்பட்டனர் போலும். பற்றியே முகலாய நிர்...டைய சரியான பொறுப்புகள் என்ன என்பது ஆனாலும், அவ...க் குறிக்கப்படவில்லை. அவர்களால் அளிக்கப் திட்டவட்...வாரு பைகா நிலத்தின்மீதும் அவர்களுக்கு ஒரு தாம் பட்ட...ரகு ஊதியம் கொடுக்கப்பட்டது என்று அபுல் ஃபாஸல் கூறுகிறார்.

வருவாய் வசூல் அதிகாரியின் மாவட்டத்தில் வருவாய்ப் பொறுப்பைக் கவனிப்பதற்காக பிதிக்சி(bitikchi) அல்லது கணக்கர் என்ற ஓர் அதிகாரி அவருக்கு உதவியாக இருந்தார். ஒரு கிராமத்தை சர்வே செய்து முடித்த பிறகு ஒவ்வொரு குடியானவனும் எவ்வளவு தொகையைச் செலுத்தவேண்டும் என்பதை நிர்ணயித்து அக் கிராமம் முழுவதன் வருவாயைக் குறிப்பது, அவருடைய மற்றப் பொறுப்புகளுக்கிடையில் அவர் ஏற்கவேண்டியிருந்த பொறுப்பாகும். தவிர, அவ் வருவாய் வசூல் அதிகாரிக்கு ஃபோட்டாதார் (fotadar)அல்லது மாவட்டக் கருவூலர் என்ற அதிகாரியும் உதவியாக இருந்தார். அவருடைய கடமைகளை அபுல் ஃபாஸல் விளக்கியுள்ளார். கர்கூன், முகதம் அல்லது பட்வாரி முதற்கொண்டு அமல் குஸார் அல்லது வருவாய் வசூலிக்கும் அதிகாரிவரை கிராமப் பணியாளர்களும் வருவாய்த்துறைப் பணியாளர்களும் கழனிகளில் செய்த பணிக்காக சுபாவின் நிர்வாகத்தில் ஒரு பெரிய எழுத்தாளர் நிறுவனமே தேவைப்பட்டிருந்திருக்கும். அதேபோல், மாகாண அரசாங்கங்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் ஏராளமான குறிப்பேடுகளைப் பரிசீலனை செய்வதற்காகப் பேரரச அரசாங்க இருப்பிடத்திலும் ஒரு பிரமாண்டமான புள்ளியியல் அலுவலகமும் தேவைப்பட்டிருந்திருக்கும். பல்கதி (balkati) அல்லது பயிர்களை அறுவடை செய்வதற்கான சமயத்தில் கிராமங்கள் செலுத்தவேண்டிய கட்டணங்களைப்போன்ற அளவு மீறிய தீர்வைகளையும் இடை ஆதாயங்களையும் வாங்குதல் கூடாது என்று அக்பர் தமது வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு வெளிப்படையாக உத்தரவிட்டிருந்தும், அக்பரின் ஆட்சிக் காலத்திலும் நிச்சயமாக அவருக்குப்பின் வந்தவர்களின் ஆட்சிக் காலத்திலும் கீழ்த்தர அதிகாரிகளுக்குக் கிராமவாசிகள் பரிசுகள் வழங்கவேண்டியிருந்தது என்பதும், அளவுமீறி இத் தீர்வைகளைப் பெறுதல் மிகச் சாதாரணமாகவே வழக்கத்தில் இருந்தது என்பதும் பெரும்பாலும் உண்மையே. தற்கால வரலாற்றாசிரியர் ஒருவரின் கூற்றின்படி, ‘சட்டமும் நடைமுறையும் இணங்கும்படி செய்வதில் தற்கால ஆங்கில-இந்திய அரசாங்கத்தின் சக்திகளெல்

லாம் அடிக்கடி தவறின. அக்பரின் காலத்தில் மேற்பார்வை அவ்வளவு கண்டிப்பாகவும் தீவிரத்துவம் இருக்கவில்லை.'[1] ஏராளமான வருவாயைப் பெறுதல் முகலாய நிர்வாகத்தின் இரண்டு முக்கிய நோக்கங்களில் ஒன்ருகுமாதலாலும், முழுக் குத்தகைத் தொகைகளையும் வசூலிப்பதற்குத் தல அதிகாரிகளுக்கு உதவக் கிராமப் பெரியதனக்காரருக்குத் தனிப்பட்ட தூண்டுதல்கள் அளிக்கப்பட்டதாலும், இவ் வுண்மையைப்பற்றி 'அய்னி அக்பரி' தெளிவாகக் குறிப்பிடுகிறது. தனிப்பட்ட ஒவ்வொரு குடியானவனும் செலுத்த வேண்டிய நிலவரி உண்மையில் மிக அதிகமானதாகவே இருந்திருக்க வேண்டும். வறுமைக் காலங்களில் ஊன்றுகோலாயிருப்பதற்கு அவனுக்கு மிகச் சிறிய இலாபத்தையே அது கொடுத்திருக்க வேண்டும். அந் நிலையில், கூடியமட்டும் அவன் தனது வாழ்க்கைக்குத் தேவையான தன் நிலத்தின் விளைபொருளைத் தானே வைத்துக்கொண்டான்; மற்றதெல்லாம் அரசாங்கத்திற்குப் போய்ச் சேர்ந்தது. தவிர, அதிகாரிகளையும் அவன் அவ்வப்பொழுது திருப்தி செய்யவேண்டியிருந்தது. அவன் பொறுப்புகள் என்ன என்பதை நிர்ணயித்து அவற்றை அவன் ஒழுங்காகச் செலுத்துகிருனு என்பதைக் கவனிப்பதே அவ்வதிகாரிகளின் கடமையாகும்.

சுங்க வரிகள், கட்டணங்கள் முதலியன: பேரரச வருமானத்தில் பெரும்பாகம் நிலவருவாயிலிருந்து வந்ததாகும்; இது மிக முக்கியமானதுங்கூட. ஆனுலும், சுங்க வரிகளிலிருந்தும், உள்நாட்டு நகர் கடப்பு வரி, பல்வகைப்பட்ட கட்டணங்கள் (அப்வாப்—abwab) போன்றவைகளிலிருந்தும் பெருவாரியான வருவாய் வந்துகொண்டிருந்தது. பேரரசின் எல்லாத் துறைமுகங்களிலும் அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின்மீதும் தீர்வைகள் விதிக்கப்பட்டன. நிர்வாக வசதிக்காக இவ் வரிகளைத் திரட்டும் பொறுப்பு சாதாரணமாக ஷாபந்தார் (shahbandar) அல்லது துறைமுக அலுவலர் என்று வழங்கப்பட்டுவந்த ஒரு தனி அதிகாரியின் கையில் இருந்தது. இவ்வதிகாரியைப்பற்றிதான் பின்வரும் வாக்கியத்தில் வில்லியம் ஹாகின்ஸ் (William Hawkins) (*1608-13*) குறிப்பிடுகிருர்: 'ஆகையால் நான் தலைமைச் சுங்க அதிகாரியிடம் சென்றேன். அவ் வதிகாரி ஒருவர்தான் கடல்பற்றிய விஷயங்களைக் கவனித்து வந்தார்.' தீர்வைகள் மிக அதிகமாக இல்லை என்பதற்கு டெர்ரி 1617-ல் சான்றளிக்கிருர். உண்மையில் அவை $2\frac{1}{2}$ சதவிகிதத்திற்கு மேற்பட்டிருக்கவில்லை. இருந்தபோதிலும், சுங்கவரிகளை வசூலிக்கும் பொறுப்பினை ஒப்பந்தக்காரர்களுக்குக் கொடுத்துவிடும்

[1] Smith, 'Akbar,' p. 377.

பழக்கம் முகலாயர் காலம் முழுவதும் சாதாரணமாகப் பின்பற்றப் பட்டதனுல், ஷாபந்தார் என்ற அதிகாரி, அல்லது தல துறைமுக அல்லது சுங்கவரி அதிகாரி வியாபாரிகளால் கவனிக்கப்பட வேண்டிய ஒருவராயிருந்தார். உதாரணமாக, இனயத்கானின் (Inayat Khan) துடுக்கான சுறுசுறுப்பான மகனின் நடத்தையால் சூரத்தி லிருந்த ஆங்கிலேய, டச்சு வர்த்தகர்கள் 1663-ல் பெரிதும் துன்பமுற்று அவனைப் பதவியிலிருந்து விலக்குமாறு, அந் நகரத்திற்கும் மாவட்டத்திற்கும் கவர்னரான அவனுடைய தந்தையை வேண்டிக் கொண்டனர்.[1] 1656, செப்டம்பரில் தட்டாவிலிருந்து (Thatta) எழுதிய நிக்கோலாஸ் ஸ்கிரிவினர் (Nicholas Scrivener), சிந்தி லிருந்த சுங்கவரி அதிகாரிகளின் லஞ்ச ஊழல்களைப்பற்றியும் பொருள் கொள்ளைகளைப்பற்றியும் வருணித்தார். முக்கால் ரூபாய் தீர்வை செலுத்தவேண்டிய ஒரு படகுக்காகக் கீழ்த்தர அதிகாரிகளுக்கு லஞ்சமாக ஆறு ரூபாயும், தரோகாவுக்கு (daroga) கூடுதல் லஞ்சமாக 88 ரூபாயும் தாம் கொடுக்கவேண்டியிருந்தது என்று அவர் அறுதியிட்டுக் கூறுகிறார்.[2] ஆனாலும், சரக்கு அனுப்புபவர்களுக்கும் வியாபாரிகளுக்கும் தொந்தரவு கொடுப்பதில் தல சுங்க அதிகாரிகளைவிட மாகாண கவர்னர்களும் அரசப் பிரதிநிதிகளும் அதிக வாய்ப்புகளைப் பெற்றிருந்தனர். லஞ்சம் வாங்குவதிலும் பேராசை கொள்வதிலும் அத் தல அதிகாரிகளைவிட அம் மாகாண அதிகாரிகள் மிக மோசமாக இருந்தனர். ஆக்ரா, அவுத் ஆகிய இடங்களிலிருந்தும் மற்ற இடங்களிலிருந்தும் எந்தப் பொருள்களைக் கப்பலேற்றுவதற்காகத் தாங்கள் கரைக்கு அனுப்பினுர்களோ அந்தப் பொருள்களின்மீது சாலைக் கட்டணங்களை வங்காளத்து ஆங்கிலேய வியாபாரிகள் செலுத்தவேண்டியதில்லை என்று1650-ல் ஷாஜஹான் அரச ஆணை (ஃபர்மான்) ஒன்றைப் பிறப்பித்தார். முகலாய சிவில் பணித் துறையாளர்களால் நேர்முகமாக நிர்வகிக்கப்பட்டுவந்த ஆட்சிப் பகுதிகளில்மட்டும் அவ்வாணை செல்லுபடியானதேயன்றி, அரைச் சுதந்தரம் பெற்ற சிற்றரசர்களின் ஆதிக்கத்திலிருந்த இராசபுதனம் போன்ற மாவட்டங்களில் அது செல்லுபடியாகவில்லை என்பதிலும், துறைமுகங்களில் விதிக்கப்பட்ட சுங்க வரிகள் அல்லது $2\frac{1}{2}$ சதவிகித வரி பொறுத்தவரை அவ்வாணை பிரயோகிக்கப்படுவது நோக்கமன்று என்பதிலும் ஐயப்பாடு இருக்காது. அவ்விதமிருந்தும், தாங்கள் சுங்கவரிகளைச் செலுத்த வேண்டியதில்லை என்று ஆங்கிலேயர்கள் வாதாடினுர்கள். அரசப் பிரதிநிதியான இளவரசர் ஷூஜாவுக்கு 1651-ல் 3,000 ரூபாய் லஞ்சம் கொடுத்து ஜேம்ஸ் பிரிட்ஜ்மன் (James Bridgman) இளவரசரை இவ்வாதத்திற்கு இணங்குமபடி

[1] W. Foster, 'English Factories in India,' 1661-4, pp. 203-204.
[2] *Ibid*, 1655-60, pp. 80-81.

செய்தார்.[1] அதேபோன்ற பிரச்னை அவுரங்கசீப் ஆட்சியின் முதல் ஆண்டான 1660-ல் எழுந்தது. ஆனால், அரசப் பிரதிநிதியான மீர்ஜும்லாவுக்கு 3,000 ரூபாய் லஞ்சம் கொடுத்து சுங்கவரிகள் கொடுக்கும் பொறுப்பிலிருந்து ஆங்கிலேயர்கள் தம்மை விடுவித்துக் கொண்டனர்.[2] இதற்கிடையில் மேற்குக் கடற்கரையில் தலைமைத் துறைமுகமாக இருந்த சூரத்தில், கிழக்கிந்தியக் கம்பெனியார் இறக்குமதிப் பொருள்களின்மீது $2\frac{1}{2}$ சதவிகிதம் முழு சுங்கவரியைச் செலுத்தினர். அந் நகரம் 1664-ல் சிவாஜியால் படையெடுக்கப்படும்வரை அவர்கள் அத் தீர்வையைச் செலுத்தி வந்தனர். அவ்வாண்டில், ஆங்கிலேயர்கள் அளித்த கடுமையானதும் உறுதியானதுமான எதிர்ப்பை அவுரங்கசீப் பாராட்டி ஓர் அரசாணை பிறப்பித்தார். அதன்படி, ஓராண்டுவரை எல்லா இறக்குமதிப் பொருள்களையும் சுங்கவரியின்றிக் கொண்டுபோகவும், ஓராண்டுக்குப் பிறகு எப்பொழுதுமே $\frac{1}{2}$ சதவிகிதம் குறைந்ததான தீர்வையைச் செலுத்தவும் அவர்கள் அனுமதிக்கப்பட்டனர். ஆனால், அரை சதவிகிதத் தீர்வையை 1678-ல் மீண்டும் விதித்து முன்னர் கொடுத்த சலுகையின் மதிப்புக் குறைக்கப்பட்டுவிட்டது என்று ஸ்டிரென்ஷாம் மாஸ்டர் (Streynsham Master) என்பவரின் நாட்குறிப்பிலிருந்து தெரிகிறது.[3]

அவுரங்கசீப்பின் ஆட்சிக் காலத்தில் கிழக்கு இந்தியக் கம்பெனியின் பணியாள்கள் எழுதிய கடிதங்கள், தல அதிகாரிகளின் மோசமான ஆட்சியைப்பற்றிப் பல முறை குறிப்பிடுகின்றன. ஏப்ரல் 28, 1663-ல் எழுதப்பட்டு சூரத்திலிருந்து பாலாஸ்கோருக்கு (Balascore) அனுப்பப்பட்ட கடிதம் ஒன்றில் பின்வருமாறு குறிக்கப்பட்டுள்ளது. 'நவாப்பின் (கான்கானன்) தலைமையிடத்தில் இல்லாமையினாலும் அவர் மிகத் தொலைவிலிருந்ததனாலும், இப் பகுதிகளின் கவர்னர்கள் திமிர் பிடித்தவர்களாக இருந்ததுமின்றி, வற்புறுத்தித் தீர்வைகளை வசூலிப்பதில் அத்துமீறி நடந்துகொண்டனர். ஆகையால், அவர்களுடைய நடத்தை இவ்விடத்து வியாபாரத்துக்குப் பெரிதும் தீங்கிழைத்துள்ளது.' மேலும், 21 ஜூன் 1664-ல் எழுதப்பட்ட கடிதம் ஒன்றில், 1663 டிசம்பரில் தக்காணத்துத் தலைமைப் பதவியிலிருந்து வங்காளத்து அரசப் பிரதிநிதியாக மாற்றப்பட்டிருந்த ஷாயிஸ்டகானைப்பற்றி ஹூக்ளியிலிருந்த வர்த்தகர்கள் கடுமையாகப் புகார் செய்தனர். 'அது

[1] W. Foster, *ibid*, 1655-60, pp. 109, 110.

[2] *Ibid*, 1655-60, p. 416. மீர்ஜும்லாவின் பர்வானா வங்காளத்தின் தலைமை ஆங்கிலேய வியாபாரியாக இருந்த ஜொனதன் டிரெவிஸா (Jonathan Trevisa) என்பவருக்குக் கொடுக்கப்பட்டது.

[3] *Ibid* 1661-4, pp. 314-315.

போன்ற பேராசை பிடித்தவனும் நேர்மையற்றவனுமான மனிதன் இப் பகுதிகளில் இதுவரை கவர்னராக வந்ததில்லை' என்று அவர்கள் குறைபட்டுக்கொண்டனர்.[1] ஆங்கிலேயர்கள் ஷாஷுஜாவுக்கும் (Shah Shuja), மீர்ஜும்லாவுக்கும் (Mir Jumla) கொடுத்தது போன்ற பெருந்தொகையை அவர்கள் ஷாயிஸ்டகானுக்குக் கொடுக்குமாறு துன்புறுத்தப்பட்டனர் என்பதற்குச் சான்று இல்லை. அவர்களது முக்கியக் குறையாவது: குறிப்பிட்ட சில பொருள்களின்மீது இருந்த சர்வாதிகாரத்தை அவர் தம் கையிலேயே வைத்துக்கொள்வதில் பிடிவாதமாயிருந்தார் என்பதும், பொதுவாக அவர்களது விவகாரங்களுக்கு இடையூறு உண்டுபண்ணினார் என்பதுமாகும். அதற்கு மாறாக, ஷாயிஸ்டகானின் நிர்வாகத்தை ஷாஹாபுத்தீன் தலீஷ் புகழ்கிறார். முன்பு ஒவ்வொரு வர்த்தகர்களிடமிருந்தும் வலிந்து பெறப்பட்ட ஸகாத் (Zakath), ஹாசில் (hasil) என்ற தீர்வைகளை அவர் எடுத்துவிட்டதுமன்றி, உணவுப் பொருள்களின்மீதும் துணிமணிகளின்மீதும் சர்வாதீனம் பெற்றிருந்த அவரது முன்னோடிகளின் செயலையும் அவர் பின்பற்ற மறுத்துவிட்டார் என்றும் தலீஷ் கூறுகிறார்.[2] ஒருவேளை, ஷாயிஸ்டகான் தமது சமகாலத்தவரைவிடச் சற்றுக் குறைந்தே லஞ்சம் வாங்கியிருக்கக் கூடும். ஆனாலும், கடமையைப்பற்றிய அவரது கருத்து அக் காலத்திய கருத்தோடு பெரும்பாலும் மாறுபட்டிருந்திருக்க முடியாது. பதினாறும், பதினேழாம் நூற்றாண்டுகளில், ஒரு மாகாணத்தின் சுபேதார் அல்லது அரசப் பிரதிநிதிமுதல் சுங்கம் வசூலிப்பவன்வரை எல்லாத் தல அதிகாரிகளும் பேரரசின் தலைநகரிலிருந்து வரும் ஆணைகளை ஒரு சிறிதேனும் பொருட்படுத்தவில்லை என்பதும், தகாத முறைகளை அனுசரித்து, இல்லையெனில், அளவுக்கு மீறி தீர்வைகளை வசூலித்தும் லஞ்சம் வாங்கியும் சொந்த லாபங்களைக் கூடியமட்டும் திரட்டிக்கொண்டனர் என்பதும் பொதுவாக உண்மைகளே என்று ஏற்றுக்கொள்ளவேண்டும். தடையற்ற வாணிகத்தை அனுமதிக்கவோ, வியாபாரிகளின் சரக்குகளைப் பறித்துத் தமது லாபத்திற்காக அவற்றை விற்பனை செய்யவோ சுபேதாரைப் போன்ற ஓர் உயர் அதிகாரி உரிமை பெற்றிருந்தார். அந்நிலையில், அந்த கவர்னர் சரக்குகளின் சொந்தக்காரர்களுக்கு எத்தொகையை அளித்தாராயினும் தாங்கள் பாக்கியசாலிகளே என்று அவர்கள் கருதிக்கொள்ள வேண்டும். ஜஹாங்கீர் ஆட்சிக் காலத்தில் சூரத்தின் கவர்னர் 1615-ல் கிழக்கு இந்தியக் கம்பெனியாரின் சிறந்த இறக்குமதிப் பொருள்களைக் கைப்பற்றி அவற்றிற்காகப் பணம் கொடுக்காமலே இருந்துவிட்டார்; அல்லது மிகத் தாமதித்

[1] Ibid, 1661-4, pp. 288, 395.
[2] J. N. Sarkar, 'Studies in Mughal India', pp. 160, 161.

துக் கொடுத்தாராயினும், அப் பண்டங்களின் உண்மை விலையை விடக் குறைந்த விலையையே கம்பெனியின் ஏஜன்டுகளுக்குக் கொடுத்தார் என்று நாம் படிக்கிறோம்.[1] இறக்குமதிப் பண்டங் களின்மீது குறைந்த தீர்வை செலுத்துவதற்கான சலுகையை அரசரே கொடுத்திருந்தபோதிலும், அச் சலுகையினால் ஏற்படும் நலன் மேற்காட்டியது போன்ற பறிமுதல் செய்யும் தன்மை வாய்ந்த பழக்கங்களால் இல்லாமற்போய்விட்டது.

பழங்காலத்தில் உள்ளூர்க் கடத்துத் தீர்வைகளையும் சுங்கவரி களையும் இந்தியாவின் இந்து அரசர்கள் விதித்தனர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வசூலிக்கப்பட்டுவந்த தீர்வைகள் நியாயமான வருவாய் ஆதாரங்களாகும் என்று தொடக்க காலத்திய முகம்மதியப் படையெடுப்பாளர்கள் ஏற்றுக்கொண்டனர். பாபர் காலத்தில் எல்லையில் சரக்குகளின் மீது வரி வசூலிக்கப்பட்டது என்றும், நாட்டின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குக் கொண்டு போகப்பட்ட வாணிபப் பண்டங்களின்மீது கடத்துத் தீர்வைகள் விதிக்கப்பட்டன என்றும் நாம் படிக்கிறோம்.[2] குறைந்தது இரண்டு முறையாவது அக்பர் உள்நாட்டுக் கடத்துத் தீர்வைகளைத் தள்ளிக் கொடுத்தார் என்று அபுல்ஃபாஸல் கூறுகிறார். ஆனால், தொலை ஒதுக்கமான மாவட்டங்களில் தல அதிகாரிகள் இவ்வாணைகளைப் பொருட்படுத்தவில்லை போலும்; அவருடைய ஆட்சியின் முடிவில் கடத்துத் தீர்வைகளை வசூலிக்கும் முறை பொதுவாகப் பின்பற்றப் பட்டது. ஜஹாங்கீரும் தமது தந்தையின் கொள்கையைப் பின்பற்ற முயன்று, அவரைப் போலவே வெற்றிபெறவில்லை. பல மாவட்டங் களின் ஜாகீர்தார்களும் தங்களது சொந்த லாபத்திற்காக விதித்து வந்த சாலைச் சுங்கவரிகளுக்கும், ஆற்றுச் சுங்கவரிகளுக்கும் மற்ற வரி களுக்கும் ஜஹாங்கீர் தடைவிதித்தார்.[3] பேரரச ஆணை இருந்த போதிலும், கடத்துத் தீர்வை முறை பெரும்பாலும் வற்புறுத்தப் பட்டுவந்தது என்பது பீட்டர் முண்டி, தெவனாட், டாவெர்னியர் ஆகியவர்களின் சான்றுகளிலிருந்து தெளிவாகத் தெரியவருகிறது. சிறப்பாக, அவுரங்காபாத்துக்கும் (Aurangabad) கோல்கொண்டா வுக்குமிடையில் வரி வசூலிக்கும் நிலையங்கள் பதினாறுக்குக் குறையா மல் இருந்தன என்று தெவெனாட் குறிப்பிடுகிறார்.[4] அம் முறை ஷாஜஹானின் காலத்தில் அமலில் இருந்தது என்பது 1656-ல் இளவரசர் ஷூஜா ஆங்கிலேயர்களுக்கு வழங்கிய நிஷான் (nishan

[1] W. H. Moreland, 'India at the Death of Akbar'.

[2] Erskine, 'A History of 'India under the first two sovereigns of the House of Taimur' vol. i, p. 530.

[3] W. H. Moreland, 'India at the Death of Akbar'.

[4] Ibid; S. N. Sen 'Administrative System of the Marathas.'

-சலுகைப் பத்திரம்) ஒன்றில் குறிக்கப்பட்டுள்ளது. அதில், 'தற்கால வருங்கால முதசத்திகளும் (mutasaddis-கணக்கர்களும்), ஜாகீர்தார்களும, ஃபவுஜ்தார்களும், கரோரிகளும் (வருவாய் வசூலிப்பவர்கள்), ஜமீன்தார்களும் ரஹ்தார்களும், (சாலை சுங்கவரிகளை வசூலிப்பவர்கள், குஸர்பான்களும் (guzarbans) (தோணித்துறைச் சுங்க வரி வசூலிப்பவர்கள்), சௌகிதார்களும் (chaukidars), பேரரச நெடுஞ்சாலைகளின் காவலர்களும் ஆங்கிலேயர்களின் சரக்குகள் இடம் பெயர்ந்துகொண்டிருக்கும்பொழுது அவற்றை நிறுத்தவோ பலவந்தமாக அவற்றை வாங்கவோ கூடாது' என்றும், ஏனெனில், எல்லாத் தீர்வைகளினின்றும் அவர்களுக்கு விலக்களிக்கப்பட்டிருக்கிறது என்றும் அரசப் பிரதிநிதி ஆணை பிறப்பித்தார்.[1]

தம் காலத்தில், அவுரங்கசீப், வியாபாரிகளால் சாலையிலும், எல்லையிலும், தோணித் துறையிலும் வசூலிக்கப்பட்ட ரஹ்தாரிகளையும் (சாலைச் சுங்கவரிகள்), பண்டாரி (pandari) என்ற நிலவரி அல்லது வீட்டு வரியையும் தடைசெய்தார். ஆனாலும், அவருக்கு முற்பட்டவர்கள் காலத்தில் ஏற்பட்ட விளைவே இவர் காலத்திலும் ஏற்பட்டது. 'மாட்சிமை தங்கியவரும், நலம் செய்பவருமான பேரரசர் இத் தீர்வைகளைத் தள்ளுதல் செய்த போதிலும், அவற்றை வசூலிக்கக் கூடாது என்று கண்டிப்பாக உத்தரவிட்டிருந்தபோதிலும், பேராசை பிடித்தவர்களின் விருப்பங்களே மேலோங்கி நின்றன. ஆகையினால், பண்டாரியைத் தவிர மற்ற எல்லாத் தீர்வைகள் பொறுத்தவரையிலும் அரசு தடையாணை பயனற்றதாயிற்று. தலைநகரங்களிலும் முக்கிய நகரங்களிலும் பெரும்பாலும் வசூலிக்கப்பட்ட பண்டாரி வரி அரச ஆணையால் பயனுற்றது. தூர இடங்களிலிருந்த ஃபவுஜ்தார்களும் ஜாகீர்தார்களும் அத்தீர்வைகளைத் தொடர்ந்து வசூலித்துவந்தனர்' என்று காஃபிகான் (Khafi Khan) எழுதுகிறார். அதே ஆசிரியரின் கூற்றின்படி, ரஹ்தாரி சுற்றுப்பயணிகள் மீதும் வியாபாரிகளின் மீதும் அநியாயமாகச் சுமத்தப்பட்ட பாரம் என்று யாவராலும் கண்டிக்கப்பட்டது. தவிர, அவுரங்கசீப்புக்கு முந்திய காலத்திலிருந்ததைவிட அவர் காலத்தில் தல அதிகாரிகளும், நிலக்கிழார்களும் வெட்கமில்லாமல் அவ் வரியை வசூலித்தனர்.[2] உள்நாட்டுச் சுங்கவரிகளும் தீர்வைகளும் நிலைத்திருந்தன என்பதையும், நீண்டகாலமாக வசூலிக்கப்பட்டுவந்தன என்பதையும் கருத்தில் கொண்டால், திரு. சுரேந்திரநாத் சென் (Mr. Surendranath) தெளிவாகக் காட்டியுள்ளதுபோல் பூனாவைச் சார்ந்த பீஷ்வாக்கள் முகலாயர்களின்

[1] W. Foster, 'English Factories in India', 1655-60, p. iii.

[2] Elliot and Cowson, vol. vii, pp. 247, 248.

முன்மாதிரியைப் பின்பற்றிப் பலவகைப்பட்ட வரிகளையும் தீர்வைகளையும் விதித்தனர் என்பதில் ஆச்சரியமில்லை. அவ்வரிகளில் சில முகலாய அரசாங்க வரித்திட்டங்களிலிருந்து நேரடியாக எடுத்துக் கொள்ளப்பட்டவையாகும்; மற்றும் சில பழமை வாய்ந்த இந்து ஏகாதிபத்தியங்களிலிருந்து வந்து சேர்ந்தவையாகும்.[1] முகலாய ஆட்சிக் காலம் முழுவதிலும் வியாபாரிகளும், வர்த்தகர்களும், சுற்றுப்பயணிகளும் தங்கள் பயணத்தின்போது சுங்கவரி வசூலிப்பவர்களிடமும் மற்ற அதிகாரிகளிடமும் அடிக்கடி மிக அதிகமான கட்டணங்களைச் செலுத்த வேண்டியதாக இருந்தது. தவிர, பயங்கர சாலைகளில் செல்லும்பொழுது அவர்களுடன் வந்த பாதுகாவலர்களின் பொருட்டு ஏராளமான பணத்தைச் செலவிட வேண்டியிருந்ததுமன்றி, முகலாய இராச்சியங்களின் அமைதியற்ற பகுதிகளின் தலை சிற்றரசர்களுக்கு அச்ச வரியும் செலுத்தினர். தக்காணத்தில் பீஷ்வாக்களின் ஆட்சியின்பொழுது ஹூண்டிகாரிகள் (hundikaris) என வழங்கப்பட்ட தரகர்கள் குழுவினால் வியாபாரிகள் சிறிதளவாவது பரிகாரம் பெற்றனர். ஒரு மொத்தத் தொகையை வாங்கிக்கொண்டு அத்தரகர்கள் ஒரு வியாபாரியின் பொருள்களைப் போய்ச் சேரவேண்டிய இடங்களுக்கு எவ்வித இடையூறுமின்றிச் சேர்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர்.[2] ஆனால், வட இந்தியாவிலும் வங்காளத்திலும் வசித்துக்கொண்டு அத்துணை நல்வாய்ப்புப் பெற்றிராத வியாபாரி இதுபோன்ற உதவியைப் பெற்றிருக்கவில்லை. பேரரச நெடுஞ்சாலைகளில் தனது பணத்தையும் பொருள்களையும் காத்துக்கொள்ள அவன் தனது சொந்த முயற்சிகளையும் சாமர்த்தியத்தையுமே நம்பி இருக்கவேண்டி இருந்தது.

பல்வகைப்பட்ட வரிகள் : பல்வகைப்பட்ட வரிகளும் தீர்வைகளும் (abwab) அமலில் இருந்ததை முகலாயப் பேரரசர்கள் தங்கள் ஆட்சியின் துவக்கத்தில் கண்டனர். அத்தீர்வைகளெல்லாம் அவர்களுக்கு முற்பட்ட முகம்மதிய, இந்து அரசாங்கங்களால் விதிக்கப்பட்டவையாகும். அவற்றில் சிலவற்றை அவர்கள் வைத்துக்கொண்டனர். மற்றவைகளை எடுத்துவிட்டனர். அக்பரால் எடுத்துவிடப்பட்ட சுமார் நாற்பது வரிகளின் பட்டியலை அபுல்ஃபாஸல் தருகிறார். அக்பரின் செயலை ஜஹாங்கீர் பின்பற்றினார். அவர் எடுத்துவிட்ட வரிகளில் சர்தாரக்தி (sardarakhti) என்ற தீர்வையும் அடங்கியிருந்தது. அது மரங்களின்மீது விதிக்கப்பட்ட வரியாகும். இவ்வரியானது பின்னாட்

[1] S. N. Sen, 'Administrative System of the Marathas,' pp. 562 ff.
[2] Ibid p. 565.

களில் மீண்டும் விதிக்கப்பட்டது. மராட்டிய அரசாங்கமும் அதை விதித்தது. 'எனது ஆட்சிக் காலத்தில் பழமரங்களின் மீது தீர்வை விதிக்கப்படவில்லை என்பதற்காக இறைவனுக்கு எனது நன்றி உரியதாகும். எவன் ஒருவன் பயிரிடும் நிலத்தில் தோட்டப் பயிர் செய்கிறானோ அவன் நிலத்தீர்வைகளைச் செலுத்த வேண்டியதில்லை என்று நான் ஆணை பிறப்பித்துள்ளேன்' என்று ஜஹாங்கீர் எழுதினார்.[1] தலைநகரிலிருந்து தொலைவில் இருந்த பல அலுவலர்களும் தல அதிகாரிகளும் பேரரச ஆணைகளைப் பொருட்படுத்தாது தொடர்ந்து இத் தீர்வைகளை வசூலித்தனர் அல்லது சில ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் விதித்தனர். ரசீக் தாஸ் (Rasik Dass) என்ற வருவாய் வசூலிக்கும் தம் அதிகாரி ஒருவருக்கு அவுரங்கசீப் விடுத்த அரச ஆணை (farman) அல்லது உத்தரவுகளின் சுருக்கம் ஒன்றில் பின்வருமாறு காணப்படுகிறது. 'நீர், அமீன்கள், ஆமில்கள், சௌதரிகள், கனுங்கோக்கள், முதஸத்திகள் ஆகியவர்களுக்கு பாலியா (balia) (அல்லது ஹாலியா) வருவாய்க்கு அதிகமான சட்ட மீறிய வரிகள் (exactions) (அக்ராஜாத்கள்-akhrajats), தடையிடப்பட்டிருந்த தீர்வைகள் (abwabs) ஆகியவைகளை வசூலிப்பதற்குத் தடை விதிக்க வேண்டும். இவையெல்லாம் ரையத்துகளின் (குடியானவர்களின்) நலனைப் பாதிக்கின்றன. அவர்கள் 'பாலியா' தீர்வைகளை வாங்காதிருப்பதற்கும் பேரரசரால் எடுத்துவிடப்பட்டதும் தடை செய்யப்பட்டதுமான அப்வாப்புகளை வசூல் செய்யாதிருப்பதற்கும் அவர்களிடமிருந்து நீங்கள் பிணையம் வாங்க வேண்டும்.'[2] இதுபோன்ற எழுபது தீர்வைகளை அவுரங்கசீப் எடுத்துவிட்டிருந்ததால், பேரரசின் சில பகுதிகளில் அவருடைய உத்தரவுகள் பொருட்படுத்தப்படவில்லை என்பது தெளிவாகிறது. அக்பர் எடுக்காது வைத்திருந்த அல்லது விதித்த தீர்வைகளில் ஒன்று திருமணங்களின்மீது ('மராட்டியர் காலத்திய லக்னபதித் தீர்வை-lagnapatti) 'விதிக்கப்பட்டதாகும். இது முந்திய விஜய நகர இந்து அரசர்களால் விதிக்கப்பட்டுப் பிறகு எடுத்துவிடப்பட்டதாகும். ஏராளமான சீதனங்களையும் ஒழுங்காக அமைந்திராத திருமணங்களையும் விரும்பாத அக்பர், திருமணமாக விருக்கும் மணப்பெண்கள், மாப்பிள்ளைகள் ஆகியோரின் சூழ்நிலைகளை விசாரிப்பதற்காக இரு திருமண மேற்பார்வையாளர்களை(தைபேகி—taibegi) நியமித்து, அவர்களுடைய செல்வநிலைக்கேற்பவும் சமூக அந்தஸ்திற்கேற்பவும் இருதரப்பார்மீதும் வரிவிதித்தார். மன்சப்தார்களைப் பொறுத்தவரை, அவ் வரி நான்கு ரூபாயிலிருந்து பத்து முகார்கள்வரை இருந்தது. நடுத்தர வகுப்பைச் சார்ந்த சாதாரண

[1] Elliot and Dowson, vol. vi. p. 365; S. N. Sen, ibid, p. 561.
[2] J. N. Sarkar, 'Studies in Mughal India,' p. 194.

மக்கள் ஒரு ரூபாயும், கீழ்த்தர மக்கள் ஒரு தாம்மும் தீர்வையாகக் கொடுத்தனர்.[1] குதிரைகளின் மீது விதிக்கப்பட்ட வரி, அபுல்ஃபாஸல், மானுக்கி ஆகிய இருவராலும் குறிக்கப்பட்டுள்ள மற்ருெரு முக்கிய வரியாகும். அவ் விலங்கின் இனத்தைப் பொறுத்து அவ் வரி குதிரை ஒன்றுக்கு இரண்டு ரூபாயிலிருந்து மூன்று ரூபாய் வரையிலும் இருந்தது.[2] இத்தாலியைச் சார்ந்த நிகழ்ச்சிக் கோப்பாளரின் கூற்றின்படி,[3] பால்க் (Balkh), பொகாரா (Bukhara), காபூல் (Kabul) ஆகிய நாடுகளிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் ஓர் இலட்சத்திற்கு மேற்பட்ட குதிரைகள் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டன. இவைகளின்மீது அபுல்ஃபாஸலால் குறிக்கப்பட்டுள்ள பேரரசத் தீர்வையைத் தவிர விலை மதிப்பீட்டின்படி 25 சதவிகிதமாக இருந்த ஓர் இறக்குமதித் தீர்வையானது இந்து நதியைக் கடக்கும் வழியில் விதிக்கப்பட்டது.

ஜகாத் (Jakat) என்ற தீர்வை முகம்மதியர் ஒருவரின் இவ்வுலகப் பொருள்களில் நாற்பதில் ஒரு பங்காக இருந்த தீர்வையாகும். இதை அவர் ஏழைகளுக்கு உதவியளிப்பதற்காக ஆண்டுதோறும் ஒதுக்கிவைத்தார்.[4] இதை டெல்லியின் முந்திய முஸல்மான் அரசர்கள் இயல்பாகவே வசூலித்தனர். ஆனால், காலப்போக்கில் இதைப் பொருள்களின் மீது விதித்துத் தல அதிகாரிகள் தங்கள் மனம் போன போக்கில் இந்துக்களிடமிருந்தும் முஸ்லீம்களிடமிருந்தும் இதைப் பெற்றுவந்தனர். எப்படி இருந்தபோதிலும், ஷாயிஷ்டகான் நியமிக்கப்படுவதற்கு முன்பு வங்காளத்தில் இவ் வரி வசூலிக்கப்பட்டதைப்பற்றி ஷாஹாபுத்தின் தலிஷ் எழுதியிருக்கும் ஒரு குறிப்புக்கு இப்படித்தான் பொருள்கொள்ள வேண்டியிருக்கிறது. அவரது கூற்றின்படி, 'தைக்கப்பட்ட கந்தல் துணிகளைவிட உளுத்துக்கொண்டிருக்கும் சீரழிந்த ஆடைகளின்மீது அதிகமான ஜகாத்தைப் பெருவிடில் அதை நிகரற்ற தாராள மனப்பான்மையுடைய செயலாகவும், சமைக்கப்படாத உணவைவிட சமைக்கப்பட்ட உணவின்மீது குறைந்த தீர்வையை வசூலித்தால் அதைக் கருணை நிறைந்த செயலாகவும் ரஹ்தார்கள் கருதினர்; (சுங்கவரி வசூலிப்பவர்கள்)[5] ஃபிரோஷா துக்ளக் (F.ruz Shah Tughlak) அநியாயமான இந்தத் தீர்வைகளுக்குத் தடை விதித்தார்; ஆனால், அவருடைய ஆட்சிக்குப் பிறகு அவை மீண்டும்

[1] *Ain-i-Akbari. trans. Blochmann, vol. i. p. 278.*

[2] Ibid., vol. i. p. 215.

[3] Manucci 'Storia do Mogor.' ed. Irvine, vol, ii. p. 571.

[4] Meer Hassan Ali, 'Observations on the Mussalmans', 1917, ed, Crooke, pp. 67. 135.

[5] J. N, Sarkar, 'Studies in Mugha India' p, 161; 162.

அமலில் கொண்டுவரப்பட்டுப் படிப்படியாக மிகக் கடுமையான முறையில் வசூலிக்கப்பட்டன. இறுதியில், இவ் வரிகளைக் கேட்கக் கூடாது என்று அவுரங்கசீப் தமது பிரதிநிதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டார். ஜகாத் என்ற தீர்வை முதன்முதலாகப் பெற்றிருந்த சமய முக்கியத்துவத்தை இழந்து, இந்துப் பயணிகளிடமிருந்தும் முகம்மதியப் பயணிகளிடமிருந்தும் வசூலிக்கப்பட்டுவந்த பொதுவானதும் சட்டத்துக்கு விரோதமானதுமான ஒரு வரியாகக் கருதப்படுகின்ற நிலைக்குத் தாழ்த்தப்பட்டிராவிடில், அவுரங்கசீப்பைப் போன்ற ஒரு வைதீக, கண்டிப்பான முஸ்லீம் அதை விதிப்பதைத் தடுத்திருக்க மாட்டார். பீஷ்வாக்கள் பின்பற்றிய செயல்முறை இக் கருத்தை வலியுறுத்துகிறது. பீஷ்வாக்கள் அதை ஓர் அரசாங்க வரியாகவே கருதினர்.[1] தவிர, 1650 ஃபிப்ரவரி 3ஆம் நாள் ஆக்ராவிலிருந்து சூரத்துக்கு ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஒரு கடிதமும் அக் கருத்தை வலியுறுத்துகிறது. 'ஜொகாத்' (jokat) என்பது வாணிபப் பொருள்களின் மீது விதிக்கப்பட்ட 'சாலைத் தீர்வைகள்' என்று அக் கடிதம் குறிக்கிறது.[2]

ஒரு முக்கியத் தீர்வையின் விஷயத்தில் தவிர, மற்ற எல்லாப் பலவகை வரிகளைப் பொறுத்தவரையிலும், பொதுவாக மக்களைக் கொடுமைக்குள்ளாக்கிய தீர்வைகளை எடுத்துவிடும் கொள்கையை அவருக்கு முற்பட்டவர்கள் பின்பற்றியது போல அவுரங்கசீப்பும் பின்பற்றினரெனத் தெரிகிறது. ஆனால், அக்பர், ஜஹாங்கீர் விஷயத்தில் இருந்ததுபோலவே, செயல்முறையில் இவருடைய கருத்தை எவ்வளவிற்கு நிறைவேற்ற முடிந்தது என்பது மாகாண அதிகாரிகளைப் பொறுத்து இருந்தது. ஆனால், அவர்களோ வென்றால், பலர் சந்தேகமின்றி மிகக் கொடுமை வாய்ந்தவர்களாகவும் இலஞ்சம் வாங்குபவர்களாகவும் இருந்தனர். ஒருவேளை, பல இடங்களிலும், குறிப்பாக ஒதுக்குப்புறமாயிருந்த மாவட்டங்களிலும் முகலாயப் பேரரசரின் ஆணைகள் நிறைவேற்றப்படவில்லைபோலும்; தவிர, பேரரசு சிதறுண்டுபோகும்வரை அவ் வரிகள் தலங்களில் தொடர்ந்து வசூலிக்கப்பட்டுவந்தன. மேற்குறிப்பிட்ட ஒரு விலக்கு முஸ்லீம்களல்லாதார் மீது ஜெஸியா (jizya) அல்லது தலைவரியாகும். முதன்முதலாக இதை கலீஃபா உமர் (Khalifa Omar) தான் விதித்தார். அவர் அதை 48, 24, 12 தர்ஹாம்கள் என்ற மூன்று தரங்களாகப் பிரித்து அமைத்தார்.[3] பிராமணர்கள் உட்பட டெல்லியிலிருந்த இந்துக்களின் மீது இவ் வரியை ஃபிரோஸ் ஷா

[1] See Surendranath Sums account 'Administrative System of the Marathas,' pp. 566-567.

[2] Foster 'English Factories in India', 1665-60, p. 63.

[3] Smith 'Akbar,' p. 66.

துக்ளக் விதித்தார். முந்திய முஸ்லீம் அரசர்கள் இத் தீர்வைகளி லிருந்து பிராமணர்களுக்கு விலக்களித்திருந்தனர். வரி வீதங்கள் முறையே **40, 20, 10** டங்காக்களாக இருந்தன. பிராமணர்கள் **50** கானிக்கள் (kanis) அல்லது ஜிடால்கள் (jidals)[1] செலுத்த வேண்டியிருந்தது. பாபர், ஹுமாயூன் ஆட்சிக் காலங்களில் இவ் வரிகள் டங்காக்களில் செலுத்தப்படாது ரூபாயாகச் செலுத்தப்பட்டு வந்தன. அவர் சிம்மாசனம் ஏறிய ஏழே ஆண்டில் அக்பர் இவ் வரியை முற்றும் எடுத்துவிட்டார். அங்ஙனம் செய்ததனுல் தம் வருவாயின் பெரும் பகுதியை அவர் இழக்க நேர்ந்தது. இருந்த போதிலும் அவர் அவ்விதம் செய்து தமது குடிமக்கள் எச் சாதியின ராயினும், எம் மதத்தினராயினும் அவர்களுடன் நியாயமாகவே நடந்துகொள்ளவேண்டும் என்ற விருப்பத்தைச் செயல்முறையில் எண்பித்துக் காட்டினுர். பெருஞ் சுமையாக இருந்ததும், எல்லா இந்துக்களாலும் வெறுக்கப்பட்டதுமான ஒரு தீர்வையை மீண்டும் வசூலிக்க ஜஹாங்கீரினுலும் ஷாஜஹானுலும் முடியவில்லை. ஆனுல், முந்திய கலிஃபாக்களைப் பின்பற்றிய கொள்கையைத் தமது கொள் கைக்கு அடிப்படையாக அமைத்துக்கொண்டு அவுரங்கசீப் 1679-ல் மீண்டும் ஜெஸ்ஸியா வரியை விதித்ததுமன்றி, அவருடைய இறுதிக் காலத்தில், பேரரச முகாமுக்கு வசதிக்கேடு ஏற்படுவதையும் பொருட்படுத்தாது தாட்சண்யமின்றி அத் தீர்வையை வசூலிக்கத் தயாராக இருந்தார்.[2] யூதர்கள் (Jews), கிறித்துவர்கள் (Christians), சமயப் பகைவர்கள், சிறு வயதினர், பெண்கள், அடிமைகள், முடவர்கள், குருடர்கள், மாசுபட்ட குணத்தினர், வயது முற்றிய ஏழை மக்கள் ஆகியவர்களே அவரது உத்தரவிலிருந்து விடுபட்டிருந் தனர். தீர்வை வசூலிப்பதற்காக, மற்றவர்களெல்லாம் பின்வருமாறு பிரிக்கப்பட்டிருந்தனர்: (1) 12 தர்ஹாம்களை அல்லது ஏறக்குறைய **3** ரூபாய் 3 அணு 6 பைசாவைச் செலுத்தும் ஏழை மக்கள்; (2) **24** தர்ஹாம்களை அல்லது ஏறக்குறைய 6 ரூபாய் 7 அணுவைச் செலுத் தும் நடுத்தர வகுப்பினர்; (3) 48 தர்ஹாம்களை அல்லது 12 ரூபாய், **14** அணுவைச் செலுத்தும் செல்வந்தர்கள். வசூலிப்பதற்கான திட்ட வட்டமான விதிகள் எழுதப்பட்டன. அவை உயர்தர இந்து வகுப் பினருக்கு மிக்க அருவருப்பைத் தந்தன. ஏனெனில், வரி செலுத்து பவர் வசூலிப்பவருக்கு முன்னுல் மிதியடி இல்லாமலே நேரில் வர வேண்டும். அவ் வரி வசூலிப்பவர், கொடுப்பவனைத் தலையின்மீது கையை வைத்து, பணத்தை எடுத்துக்கொண்டு, ‘இந்தக் குடி யாளிடமிருந்து தலைவரியை நான் ஏற்றுக்கொள்கிறேன்’ என்று பொருள்படும்படியாக அராபிய(Arabic) மொழியில் ஒரு சூத்திரத்தை

[1] Ishwari Prasad, ‘Medieval India,’ p. 517 n.

[2] J. N. Sarkar, ‘Anecdotes of Aurangzib’, p. 142.

உரைப்பார். செலுத்த வேண்டிய பொறுப்பு, ஒருவர் இறக்கும் வரையிலோ அல்லது இஸ்லாமிய மதத்திற்கு மாற்றம் செய்யப்படும் வரையிலோ இருந்தது. மற்றத் தீர்வைகளைப்பற்றிக் குறிப்பிட்டது போல, ஜெஸ்ஸியா வரியை வசூல் செய்தவர்கள் அடிக்கடி விலக்கு களைப்பற்றிய உத்தரவுகளைப் புறக்கணித்தனர் ; வசூலிப்பதற்கான செலவையும் அவர்கள் பொருட்படுத்தாது விதவைகளிடமிருந்துகூட அத் தீர்வைகளை வசூலித்தனர். அவுரங்கசீப்பின் ஆட்சியின்போது இங்ஙனமாகத் திரட்டப்பட்ட வரித்தொகை சரியாக எவ்வளவு என்று சொல்வதற்கில்லை. ஆனாலும், அவுரங்கசீப் இறந்ததி லிருந்து 13 ஆண்டுகளுக்குப் பிறகு 1720-ல் முகமது ஷா ஜெஸ்ஸியா வரியை எடுத்துவிட்டபோது அது ஆண்டுதோறும் நான்கு கோடி ரூபாய் வருவாய் கொடுத்தது என்று மதிப்பிடப்படு கிறது.[1]

நாணயச் செலாவணியும் நாணயச் சாலைகளும். நாணயச் செலாவணியின் நிர்வாகம், நாணயம் அடிக்கும் சாலையின் கட்டுப் பாடு, கருவூலங்களை நிறுவுதல் ஆகியவை முகலாய நிர்வாகத்தின் முக்கியக் கூறுகளாகும். வட இந்தியாவில் அக்பர் ஆட்சிக் காலத் திற்கு முன்னதான 1330ஆம் ஆண்டு முதல் நாணயமுறை குழப்பமான நிலையில் இருந்தது. அவ் ஆண்டில், செப்புக் குறிப் பணங்களே கொண்ட நாணயமுறையை முகமது பின் துக்ளக் மக்களின்மீது திணித்தார். முந்திய பத்தி ஒன்றில் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, 175-178 குன்றிமணி எடையுள்ள ரூபாயை யும் செப்பு தாம்மையும் ஷேர்ஷா செயல் முறையில் கொண்டு வந்து குறைகளைச் சீர்திருத்தினர். ஆனல், துர்கெஸ்தானில் (Turkestan) வழங்கிவந்த அஷ்ரஃபிக்கள் (ashrafis), தர்ஹாம்கள் போன்ற நாணயங்களை அடித்த பாபரின் காலத்திலும் ஹுமாயூனின் காலத்திலும், பேரரசின் நாணய முறையை ஒழுங்கு படுத்த எவ்விதத் திட்டவட்டமான முயற்சியும் நடைபெறவில்லை.[2] ஷீராஸைச் (Shiraz) சார்ந்த சிறப்புமிக்க ஓவியக் கலைஞரும் அழ கான கையெழுத்தாளருமான காஜா அப்துஸ் சமத் (Khwaja Abdus Samad) என்பவரை டெல்லியிலுள்ள பேரரச நாணயச் சாலையின் தலைவராக நியமித்தும், சௌதரி (chaudhuri) அல்லது தொழிலாளர் மேல்முறையாள் என்று வழங்கிவந்த சில்லறை அதிகாரிகளால் இதுவரை மேற்பார்வையிடப்பட்டுவந்த முக்கிய மாகாண நாணயச்சாலை ஒவ்வொன்றையும் முக்கியத்துவம் வாய்ந்த பேரரச அதிகாரிகளில் ஒருவரின் பொறுப்பில் வைத்து, அக்பர்

[1] W. Irvine, 'Later Mughals', ed. J.N. Sarkar, vol. i, pp. 338-9. ஜெஸ்ஸியாபற்றிய முழு விவரத்தைப் பின்வரும் நூலில் காண்க, J. N. Sarkar, 'Aurangzib,' vol. iii. chap. 34.

[2] Yule and Burnel, s. v. Rupee.

1577, டிஸம்பரில் தமது நாணயமுறைச் சீர்திருத்தத்தைத் தொடங்கினுர். இங்ஙனமாக ராஜா தோடர்மல் வங்காள நாணயச் சாலேயின் தலேவரானுர். இதர நான்கு உயர்தர அதிகாரிகள் முறையே லாகூர், ஜான்புரி (Jaunpur), ஆமதாபாத் (Ahmadabad), பாட்ஞ (Patna) ஆகியவற்றில் இருந்த நாணயச்சாலேயின் பொறுப்பை வகித்தனர்.[1] அபுல் ஃபாஸலின் கூற்றின்படி, டெல்லி நாணயச்சாலேயின் நிரந்தரப் பணியாளர் குழுவில் அடியிற் கண்டவர்கள் இருந்தார்கள்: டரோகா (daroga), நோட்டக்காரர் (assayer), சைராஃபி (sairafi -டரோகாவுக்கு உதவ ஓர் அமீன் (amin), நாட்குறிப்பேடு வைப்பவர் (முஷ்ரிப்- mushrif), நாணயச் சாலேக்காகத் தங்கம், வெள்ளி, செம்பு ஆகியவற்றை விலேக்கு வாங்கும் வியாபாரி, ஒரு கருவூலர், எடைபோடுபவர், உலோகக் கட்டிகளே உருக்குபவர், தகடுகளேத் தயாரிப்பவர்.[2] மற்ற நாணயச் சாலேகளிலும் இது போன்ற பணக் குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தன என்பதில் சந்தேகமில்லே. ஷாஜஹானின் காலத்தில் சூரத்தில் மிக முக்கியமான நாணயச்சாலே ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அவரது ஆட்சியின் துவக்கத்தில் அது பெரிதாக்கப்பட்டு, குஜராத்தின் தலேமை நாணயச்சாலே என்ற அந்தஸ்தைப் பெற்றிருந்தது.

அக்பர் பொன், வெள்ளி, செப்பு நாணயங்களே அடித்து வெளியிட்டார். 101 தோலா எடைக்குச் சற்றுக் கூடுதலாகவுள்ள ஷன்ஸா (shansah) என்ற நாணயத்திலிருந்து, 10 ரூபாய் மதிப்புள்ள இலாஹி (ilahi) நாணயம்வரை வெவ்வேறு எடைகளேயும் மதிப்புகளேயும் கொண்ட இருபத்தாறு வகைப் பொன் நாணயங்கள் இருந்தன. இவையன்றியும் இன்னும் குறைந்த மதிப்புள்ள பொன் நாணயங்களும் இருந்தன.[3] அக்பரது ஆட்சிக் காலத்தின் பிந்திய ஆண்டுகளுக்குரிய இந் நாணயங்கள் டெல்லி, வங்காளம், ஆமதாபாத், காபூல் என்ற நான்கு இடங்களிலிருந்த நாணயச் சாலேகளில்தான் அடிக்கப்பட்டன. ஏறத்தாழ இரண்டு ஷில்லிங், மூன்று பென்ஸ் ஸ்டர்லிங் மதிப்புக்குச் சமமாக இருந்ததும், 1914இல் இருந்த 6 பிரிட்டிஷ் இந்திய ரூபாய்களுக்கு நிகரான வாங்கும் சக்தியைப் பெற்றிருந்ததும், $172\frac{1}{2}$ குன்றிமணி எடையுள்ளதுமான ரூபாய்தான் முதன்மையான வெள்ளி நாணயமாகும்.[4] சதுர வெள்ளி ரூபாயையும் (jalali) அக்பர் அடித்து வெளியிட்டார். 1577இல் நாணயச்சாலேயின் சீரமைப்பின்

[1] Smith, 'Akbar,' p. 156.
[2] 'Ain-i-Akbari', trans. Blochman, vol. 1.
[3] Ibid.
[4] Moreland, 'India at the Death of Akbar'.

பொழுது அது முதன்முதலாக வெளியிடப்பட்டது. செப்புக் காசைப் பொறுத்தவரை, ஷேர்ஷாவின் நாணயமுறையைப் பின்பற்றிய தாம் (dam) என்ற நாணயம் முதன்மையான செப்புக் காசாகும். இதற்குப் பைசா (paisa) அல்லது ஃபூலுஸ் (fulus) என்னும் பெயர் வழங்கிவந்தது. இது ஷேர்ஷாவின் நாணயமுறையிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டது. இளவரசனும் குடியானவனும் கைவசமாகப் பயன்படுத்திவந்த இந் நாணயம் 323·5 குன்றிமணி எடை அல்லது ஏறத்தாழ இருபத்தொரு கிராம் எடையுள்ளதாயிருந்தது; கணக்கு எழுதுவதற்காக இது 24 ஜிடால்களாகப் (jital) பிரிக்கப்பட்டிருந்தது. நாற்பது தாம்கள் 172½ குன்றிமணி எடையுள்ள ஒரு ரூபாய்க்குச் சமமாக இருந்தன.[1] அக்பரின் ஆட்சிக் காலத்தில் ஒரு கோடி தாம்கள் கரடுமுரடான பைகளில் போடப்பட்டு ஏழைகளுக்குக் கொடுப்பதற்காக எப்பொழுதும் வைக்கப்பட்டிருந்தன என்றும், அதே குறிக்கோளுடன் வெள்ளி, தங்க நாணயங்களும் திவானி ஆமில் (Diwan-i-Am) வைக்கப் பட்டிருந்தன என்றும் அபுல் ஃபாஸல் கூறுகிறர். எல்லாவித வியாபாரங்களுக்காகவும் வட்டமான பொன் மொகர்கள் (mohurs), ரூபாய்கள், தாம்கள் பயன்படுத்தப்பட்டன. இந் நிலை அக்பருக்கு அடுத்துப் பின்வந்தவர்களின் ஆட்சிக் காலங்களிலும் நீடித்திருந்தது.

சமகால ஐரோப்பிய அரசர்களின் நாணயமுறையைவிட முகலாய நாணயமுறை பொதுவாக மிகச் சிறப்பாகவே இருந்தது. குறிப்பாக, அக்பர் வெளியிட்ட நாணயங்களின் உலோகத்தின் தூய்மையைப் பொறுத்தவரை மிகச் சிறந்ததாயும், முழு எடை உள்ளதாயும் கலைத்திறம் நிறைந்ததாயும் இருந்தது. சிலையுருவங்கள் செய்வதைத் தடுப்பதான பழமை வாய்ந்த செமிடிக் (Semitic) ஆணையானது குரானில் (Koran) மீண்டும் வற்புறுத்தப்பட்டிருந்ததனல், முகம்மதிய அரசர்கள் பொதுவாகவே தங்களது நாணயங்களில் அழகாக எழுதப்பட்ட எழுத்துகளைப் பதியவைக்கும் முறைகளை அனுசரிக்கும்படியாயிற்று. ஆனலும், சிற்சில சமயம் அத் தடையாணையை அவர்கள் சுலபமாகப் புறக்கணித்துவிட்டனர். அக்பர் வைதீகப் பற்றற்றவராக இருந்த போதிலும் குர்ரானல் விதிக்கப்பட்ட அத்தடையைப் பின்பற்றினர்; அவர் தமது நாணயங்களைச் சிறப்பாக எழுதப்பட்ட எழுத்துகளால் அலங்கரித்தார். மூன்று தடவைகளில்தான் அவர் உருவங்கள் பதிக்கப்பெற்ற நினைவுப் பதக்கங்களை வெளியிட்டார். அதற்கு மாருக, ஜஹாங்கீர் மிக்க வைதீகர் என்று கருதப்பட்டபோதிலும்,

[1] 'Ain-i-Akbari'; Smith, 'Akbar'; Moreland, ibid.

தமது உருவங்களையே புழங்கவேண்டிய நாணயங்களில் பொறித்து வைத்தார். தமது வலது கரத்தில் மதுக்கோப்பையை ஏந்தியிருக்கும் உருவத்தைப் பொறித்துவைத்ததன்மூலமாகத் தாம் மது விரும்பி என்னும் உண்மையை எக் காலத்துக்கும் அறிவித்தார். இராசிமண்டலத்தைக் காட்டுவதான ஏராளமான வெள்ளி நாணயங்களையும் ஜஹாங்கீர் வெளியிட்டார். ஆனால், இந் நாணயங்கள் நீங்கலாக மற்ற நாணயங்களைப் பொறுத்தவரை அவருடைய நாணய முறை பழைய மாதிரியாகவே இருந்தது. அந் நாணயங்களில் ஒன்றான ஐந்து மொகர் தங்க நாணயம் தனது கையெழுத்து வேலைப்பாடுகளுக்காகப் புகழ்பெற்று விளங்கியது.[1] 'புதிய அரசரான ஔரங்கசீப் தமது வெள்ளி நாணயத்தின் நேர்த்தியை முன்னை விட $\frac{5}{8}$ சதவிகிதம் அதிகப்படுத்தினார். இதனால் சூரத்தின் வியாபாரிகளுக்கும் கவர்னருக்குமிடையில் சச்சரவுகள் ஏற்பட்டன' என்று 1659இல் ஆங்கில வியாபாரிகள் தமது தாயகத்து அதிகாரிகளுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் எழுதியிருந்த போதிலும்,[2] ஷாஜஹான், அவுரங்கசீப் ஆட்சிக் காலங்களில் முகலாய நாணயத்தின் தன்மை செயல் முறையில் மாறாமலே இருந்துவந்தது.

நாணயங்களில் பயன்படுத்தப்பட்ட எல்லாத் தங்கமும் வெள்ளியும் அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவையாகும்; சோஃபாலா (Sofala), மொஸாம்பிக் (Mozambique ஆகிய இடங்களிலுள்ள போர்ச்சுகீசியக் குடியிருப்புகள் கிழக்கு ஆஃப்ரிக்காவிலிருந்து (East Africa) தங்கம் கொண்டுவந்தனர். கிழக்கிலும் மேற்கிலும் இருந்த மற்ற நாடுகளிலிருந்து வெள்ளி வந்துசேர்ந்தது 'நாட்டின் வடக்கு மலைப்பகுதிகளிலிருந்தும் திபேத்திலிருந்துங் கூட (Tibet ஏராளமான பொன் கிடைத்தது என்று அபுல் ஃபாஸல் அழுத்தமின்றிக் கூறுகிறார். ஆனாலும், அதே சமயத்தில் பேரரசு அயல் நாட்டிலிருந்து வரும் இறக்குமதியை நம்பி நாடு இருந்தது என்று அவர் உறுதியாகக் கூறுகிறார்.[3] வெள்ளியைப் பொறுத்தவரையிலும் இதே நிலைதான் இருந்தது; அவ்வுலோகத்தைக் கணிசமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய எவரும் அனுமதிக்கப்படவில்லை. 'அவர்களுடைய பொற்கட்டிகளை இந்தியாவுக்குக் கொண்டுவந்து இங்கிருப்பவர்களின் பொருள்களைக் கொண்டுபோகிற எந்நாட்டு மக்களையும் முகலாயர்கள் வரவேற்றார்கள் என்றும், ஆனால், இங்கிருந்து வெள்ளியைக் கொண்டு

[1] Smith, 'History of Fine Art in India and Cylon', p. 422 f.
[2] W. Foster, 'English Factories in India,' 1655-60, p. 211.
[3] 'Ain-i-Akbari,' trans. Blochmann, vol. i.

போதல் எளிதில் மன்னிக்க முடியாத குற்றம் எனக் கருதப்பட்டது என்றும் ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவிற்கு விஜயம் செய்த டெர்ரி அறிவிக்கிருர்.[1] கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆரம்ப காலத்திலிருந்தே இந்தியாவுக்குப் பொற்கட்டிகளை ஏற்றுமதி செய்யும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். இதனுல் இங்கிலாந்தில் அவ்வப்பொழுது கிளர்ச்சி நடைபெற்றுவந்தது. அக்பரின் ஆட்சிக் காலத்தின் முடிவில் 1601இல் இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட மொத்தத் தொகையின் மதிப்பு சுமார் 22,000 பவுன் என்று கணக்கிடப்பட்டது; 1616-க்குள் அதனுடைய மதிப்பு 52,000 பவுனுக அதிகரித்தது; அவுரங்கசீப்பின் ஆட்சிக் காலத்தில், 1697ஆம் ஆண்டுக்கும் 1702ஆம் ஆண்டுக்குமிடையில் இந்தியாவுக்கு ஆண்டுதோறும் ஏற்றுமதி செய்யப்பட்ட பொற்கட்டிகளின் மதிப்புக் குறைந்தது; 800,000 பவுனுக இருந்தது. 1681 ஆகிய ஓர் ஆண்டில்மட்டும் வங்காளத்துக்கு அனுப்பப்பட்ட பொற்கட்டிகளின் மதிப்பு 320,000 பவுனுக இருந்தது.[2] இவ்வாறு ஒரு சீராகத் தொடர்ந்து வந்துகொண்டிருந்த செல்வத்தின் ஒரு பாகந்தான் நாணயச்சாலைகளிலும் இன்பப் பொருள்கள் தயாரிப்பிலும் பயன்படுத்தப்பட்டது. எஞ்சியது, வில்லியம் ஹாகின்ஸ் மிகச் சாதுர்யமாகக் குறிப்பிடுவது போல 'புதைக்கப்பட்டிருந்தது' அதாவது, ஆட்சிபுரியும் மன்னர்களாலும், சமய நிறுவனங்களின் பொறுப்பை வகித்தவர்களாலும், சிற்சில சமயங்களில் ஒருசில பிரபுக்களாலும், பணக்கார வியாபாரிகளாலும் முடக்கி வைக்கப்பட்டது.[3] வட இந்தியாவில் பயன்படுத்தப்பட்டுவந்த செம்பு இராசபுதனத்தின் சில பகுதிகளிலிருந்த சுரங்கங்களிலிருந்தே பெரும்பாலும் எடுத்ததாகும்; ஒருசில பகுதி இமய மலைப் பகுதியிலிருந்தும் வந்தது. இப் பகுதி அப் பண்டம் கிடைக்கும் முக்கிய இடங்களில் ஒன்றுஎன்று அபுல்ஃபாஸல் குறிப்பிடுகிருர். குறிப்பிடத்தக்க செப்புச் சுரங்கங்களை பெற்றிராத தென்னிந்தியாவும் தக்காணமும் முகலாயர் காலத்தில் இறக்குமதியையே நம்பியிருந்தன. ஒரு மணங்குக்கு 1,044 தாம்கள் விலையாக அச் செப்பு உலோகத்திற்கு அக்பர் காலத்தில் பேரரச நாணயச்சாலையில் கொடுக்கப்பட்டது என்பதை நினைவில் கொண்டால், இவ்வுலோகத்தின் விலை மிக உயர்ந்ததாகவே இருந்திருக்க வேண்டும் என்பது புலனுகும். இக் காரணத்தால் நாணயம் அடிப்பதற்காகவன்றி மற்றக் காரியங்களுக்காகப் பெருமளவு அது தேவைப்படவில்லை போலும். 1630ஆம்

[1] Moreland, 'India at the Death of Akbar,' pp. 283 ff.

[2] S. A. Khan, 'East India Trade in the 17th Century,' under Gold, Silver.

[3] Moreland, ibid.

ஆண்டுக்கு முன்பு செம்பின் விலை மிக உயர்ந்ததனால், டச்சுக் காரர்கள் அவ்வுலோகத்தால் செய்யப்பட்ட பொருள்களில் இறக்கு மதி வர்த்தகத்தைக் குஜராத்தில் துவக்கிவைக்க வாய்ப்புப் பெற்ற னர்; ஆகையினால், ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்தில் இராசபுதன, மத்திய இந்தியச் செப்புச் சுரங்கங்கள் கொஞ்ச காலம் வேலை செய் யாமல் நின்றுவிட்டன என்று தெரிகிறது.[1]

கருவூலங்கள் : பேரரசின் பல பகுதிகளிலும் கருவூலங்கள் பரவலாக நிறுவப்பட்டிருந்தன. ஒவ்வொரு கோடி தாம்களுக்கும் ஒரு கருவூல அதிகாரியும் அவருக்கு உதவியாக பிதக்சிக்குகளும் நியமிக்கப்பட்டிருந்தனர். பேரரச வேலைச்சாலை ஒவ்வொன்றுக்கும் தனிப்பட்ட கருவூலம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அவற்றின் எண்ணிக்கை மொத்தத்தில் நூறாக இருந்தது. அவற்றின் முக்கியக் கடமையாவது அன்றாட, மாத, ஆண்டு வரவுசெலவுக் கணக்குகளை எழுதுவதாகும். அரசவையின் முக்கிய அதிகாரிகளில் தலைமைக் கருவூலரும் (Treasurer-General) ஒருவராவார். தரோக (daroga), எழுத்தர் ஆகியவர்களின் உதவியைக்கொண்டு அவ்வதிகாரி அரசாங்கத் தலைமை இடத்திலிருந்து கருவூலங்களை மேற்பார்வை யிட்டுவந்தார். அவற்றில் சில ரொக்கப் பணத்திற்கென்றும், மற்ற வைகள் அணிகலங்களுக்கென்றும், இரத்தினக் கற்களுக்கென்றும் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தன. கப்பங்களை வாங்குவதற்காகத் தனிப்பட்ட ஒரு கருவூலர் (peshkash) அமர்த்தப்பட்டிருந்தார் மற் ெருருவர் உயில் எழுதிவைக்காமல் இறந்துவிட்டவர்களின் சொத் துக்காகவும், இன்னும் ஒருவர் நஸர்களுக்காகவும் (nazrs-பரிசு கள் , மற்ெருருவர் அரசனை நிறுத்து எடை காணும்பொழுது செல வழிக்கப்பட்ட பணத்திற்காகவும் அமர்த்தப்பட்டனர். அரசரது திருமேனியை எடைபோடும் பழக்கத்திற்குத் துலாதானம் (tula-dana) என்று பெயர் வழங்கப்பட்டது. அப் பழக்கத்தை முகலாய அரசர்கள் இந்து இளவரசர்களிடமிருந்து மேற்கொண்டனர். அந்த இளவரசர்கள் அதை ஒரு சிறப்புச் சடங்காகவே கருதினர். ஆண்டுதோறும் இருமுறை அக்பர் பொன்னுக்கு ஈடாகவும் மற்ற விலையுயர்ந்த பொருள்களுக்கு ஈடாகவும் நிறுக்கப்பட்டார் என்று அபுல்ஃபாஸல் குறிப்பிடுகிருர். ஜஹாங்கீரை எடைபோட்டதை சர் தாமஸ் ரோவும் டாம் கோர்யாட்டும் (Tom Coryat) வருணிக்கின்ற னர். அப் பழக்கம் அவுரங்கசீப்பின் ஆட்சிக்காலத்திலும் பின்பற்றப் பட்டது என மானுச்சி, டாவெர்னியர், பெர்னியர் ஆகியவர்கள் எல்லாம் குறிப்பிடுகிருர்கள். தம்மைப் பொறுத்தவரையில் அவுரங்க சீப் அப் பழக்கத்தை எடுத்துவிட்டதனால், அவருடைய பிள்ளைகள்

[1] W. H. Moreland, 'From Akbar to Aurangzeb,' Chap. V.

நோய்வாய்ப்பட்டுச் சுகமுற்றதனால் அவர்கள் நிறுக்கப்பட்டதைப் பற்றி அச் சான்று குறிப்பிடவேண்டுமெனத் தெரிகிறது[1] கருவூலங்களுக்காக ஏராளமான ஏற்பாடுகள் செய்துவைக்கப்பட்டிருந்தன; டாக்டர் வின்சென்ட் ஸ்மித்தின் கருத்தின்படி[2], அவை அனைத்தும் பல ஆண்டுகளுக்கு முன்பு ஐக்கிய மாகாணங்களில் இருந்ததைப் போலவும், இப்பொழுதும் பெரும்பாலும் இருப்பது போலவும் இருந்தன. வரவுசெலவுகளுக்காகவும், நடப்பிலிருந்த நாணயங்களை மதிப்பிடுவதற்காகவும் விரிவான விதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அக்பர் அவற்றை முதலில் வெளியிட்டதற்குப் பிறகு அவை பல முறையும் மாற்றி அமைக்கப்பட்டன. நாணயச்சாலையின் அதிகாரிகளும் கருவூலத்தின் அதிகாரிகளும் நேர்மையாக நடந்து கொண்டிருக்கவில்லை என்பதையும், அவர்களை மேற்பார்வையிட வேண்டியிருந்தது என்பதையும் அவ் விதிகள் உறுதிப்படுத்துகின்றன. தக்கையான நாணயங்களை அடித்து வெளியிடுவதாக நாணயச்சாலை அதிகாரிகளின்மீது சந்தேகம் கொள்ளப்பட்டது; கருவூல அதிகாரிகள் தங்களிடம் வந்த நாணயங்களின் எடையைக் குறைப்பதனால் அவர்கள் வியாபாரிகளுக்கு ஒரு கெட்ட வழி காட்டினார்கள் என்று கருதப்பட்டது; வியாபாரிகளும் பொய்யான எடைகளைப் பயன்படுத்தத் தயங்கவில்லை. எடை குறைந்திருப்பதைப்பற்றிய மிகக் கடுமையான உத்தரவுகள் அவ்வப்பொழுது புறக்கணிக்கப்பட்டன. குறிப்பிட்ட மதிப்பு வாய்ந்த நாணயங்களையே அரசாங்கத்திற்குத் தீர்வையாகச் செலுத்த வேண்டும் என்று மாகாணங்களிலிருந்த கருவூல அதிகாரிகள் சிற்சில சமயங்களில் வற்புறுத்தினர்; ஏனெனில், அவர்களும் அவர்களுடைய நண்பர்களும் குத்தகைக் கூட்டு ஒன்றை அமைத்துக் கொண்டனர் போலும்; அல்லது அவர்களது எல்லைகளுக்குள் அந்த நாணயங்களின்மீது தற்காலிக முழு உரிமை பெற்றிருக்க வேண்டும்.[3] பதினாறும், பதினேழாம் நூற்றாண்டுகளில் பணம் கொடுத்தல் வாங்குதல் முறை இந்தியாவில் பெரிதும் முன்னேற்றம் பெற்றிருந்தது. அத் துறையில் தேர்ச்சி பெற்றவர்கள் பலர் முகலாயப் பேரரசின் வாணிகக் கேந்திரங்கள் எல்லாவற்றிலும் இருந்தனர். கருவூல அதிகாரிகள் பல தீய கவர்ச்சிகளுக்கு ஆளாகியிருக்கக்கூடும்; முறையற்ற விதத்தில் செல்வம் திரட்ட அவர்களுக்குப் பல வாய்ப்புகள் கிடைத்தன. அக்பர் இயற்றிய மிக விரிவான விதிகளும் நடைமுறையும் பொது நிதிகள் முற்றும் மோசடி செய்யப்படுவதைத் தடுத்திருக்கக்கூடும்; ஆனாலும், நாணயச்சாலையுடனும் கருவூலங்களுடனும் தொடர்பு கொண்டிருந்த

[1] Qanun-i-Islam.ed. Crooke (1921), p. 191.
[2] Smith, 'Akbar', p. 376.
[3] Moreland, 'India at the Death of Akbar.'

அரசாங்க அதிகாரிகள் சிற்சில சமயங்களில் நேர்மை தவறியதை அவ் விதிகளும் நடைமுறையும் தடுக்கமுடியவில்லை போலும்.

கல்வி: பொதுமக்களுக்கென அமைக்கப்பட்டிருந்த கல்வி முறைக்கான அடையாளம் எதையும் தாம் காணவில்லை என்றும், அக் காலத்தில் நிறுவப்பட்ட பயனுள்ள மானியங்கள், நிதியேற்பாட்டு நிறுவனங்கள் போன்றவற்றின் பட்டியலைத் தாம் காணவில்லை என்றும் தற்கால ஆசிரியர் ஒருவர்[1] அக்பரின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் நிலைமையை ஆராய்ச்சி செய்கையில் குறிப்பிடுகிறுர். இம் முடிவு சற்றுப் பரந்ததாக இருப்பதாய்த் தோன்றுகிறது. தற்கால ஜனநாயக அரசாங்கங்கள் சில ஊக்கி நெறிப்படுத்திவரும் ஆதார, நடுத்தரக் கல்வியைப்போன்ற எதையும் முகலாயர்களின் கீழிருந்த இந்தியாவில் காணமுடிவதில்லை என்பது உண்மையே; ஆனால், டியுடர்களுடை (Tudors) காலத்தில் இங்கிலாந்தோ அல்லது மற்ற எந்த மேற்கு நாடோ கல்வித் துறையில் மிக்க முன்னேற்றம் அடைந்ததாகச் சொல்லிக்கொள்ள முடியாது. இதற்கு மாருக, ஒருவகைப்பட்ட ஆதார, நடுத்தரக் கல்வி முறை முதல் ஆறு முகலாயப் பேரரசர்களின் ஆட்சிக் காலங்களில் அமலில் இருந்தது. அரசாங்கம் வழக்கமாகவே தனது வருமானத்தில் ஒரு பங்கைப் பள்ளிகளையும் கல்லூரிகளையும் நிறுவி நடத்துவதற்காக உண்மையில் கொடுக்கவில்லையென்ருலும், அரசர்களும் அரசவைக்கு ஆர்வத்துடன் வந்துசேர்ந்த கல்விமான்களும் அடிக்கடி அதுபோன்ற நிறுவனங்களை நிலைநாட்டினர்; அல்லது ஏற்கெனவேஇருந்த நிறுவனங்களுக்கு ஆதரவும் ஊக்கமும் அளித்தனர். தவிர, பழமை வாய்ந்த பிராமணக் கல்வி முறையோ, தாய்மொழிக்குரியதான இந்து பள்ளிகளோ, பின்னுள்களில் தோன்றிய மஹாஜனிப் பள்ளிகள் போன்றவையோ பதினொன்று, பன்னிரண்டாம் நூற்ருண்டில் முஸ்லிம்களின் வருகையினுல் கேடுற்றன எனக் கருதுவதற்கு நியாயம் எதுவும் இருப்பதாகத்தோன்றவில்லை; பிந்திக் குறிப்பிட்ட பள்ளிகளில் வாணிக வகுப்பைச் சேர்ந்தவர்களுடைய குழந்தைகளுக்கும் விவசாயிகளுடைய குழந்தைகளுக்கும் ஒரு வகைப்பட்ட ஆதாரக் கல்வி அளிக்கப்பட்டுவந்தது. 1203இல் நாடியா (Nadia) நகரம் முகம்மதியர்களால் கைப்பற்றப்பட்டபோதிலும், சம்ஸ்கிருதக் கல்வியின் மையம் என்று தகுதியுறவே பெற்றிருந்த புகழை அந் நகரம் இழக்கவில்லை. 1867ஆம் ஆண்டில் பேராசிரியர் காவெல் (Proffessor Cowell) அந் நகருக்கு விஜயம் செய்தபொழுதுங்கூட அதனுடைய பள்ளிகளில் கற்றறிந்த பண்டிதர்கள் வாய்வியல், சட்டம், இலக்கணம் போன்ற பாடங்களை

[1] Moreland, ibid, pp. 263 n., 278.

நூற்றுக்கணக்கான மாணவர்களுக்குப் போதித்துவந்தனர். வங்காளத்தைச் சார்ந்த சேன அரசர்களில் ஒருவரால் 1063இல் நிலைநாட்டப்பட்டதிலிருந்து இதுபோன்ற சம்ஸ்கிருதக் கல்வி ஒரு சீராகப் பரவிக்கொண்டுதான் வந்தது.[1] மிகக் கொடுமை வாய்ந்த அல்லது மிக்க வைதீக முகம்மதிய அரசர்கள் சிற்சில சமயங்களில் பிராமணக் கல்வி நிலையங்களை அழித்து, அவற்றின் மாணவர்களை விரட்டியோட்டினர்; ஆனாலும், இதுபோன்ற தற்காலிக இடையூறுகள் ஏற்பட்டுங்கூட, பிராமணக் கல்வி முறை தொடர்ந்துகொண்டு தானிருந்தது. முகலாயர்கள் இறைமை பெற்றிருந்த காலம் முழுவதிலும் பழமை வாய்ந்த சமஸ்கிருதப் பள்ளிகளும் தாய்மொழிக் குரியவான பள்ளிகளும் தங்களுடையனவென்று ஒப்புக்கொள்ளப் பட்ட பணிகளைச் செய்துகொண்டுவந்தன எனக் கொள்வது நியாயமென்றே தோன்றுகிறது.

முகலாயக் கல்வி முன்னேற்றத்தைப்பற்றிய உறுதியான சான்றுகள் கிடைத்துவருகின்றன. முகம்மதியர்கள் இந்தியாவில் குடியேறியதனாலும், அநேகம் பேர் இஸ்லாமுக்கு மதமாற்றம் செய்யப்பட்டதனாலும், மசூதிகள் கட்டப்படவேண்டி நேரிட்டது. அம் மசூதிகள் பெரும்பாலும் போதனைக்கான மையங்களாகவும், இலக்கியப் பணிகளின் மையங்களாகவும் அமைந்திருந்தன.[2] தொடக்க கால முகம்மதிய அரசர்கள் அடிக்கடி முகம்மதியர்களுக்கான கல்வி முறையை ஆதரித்துவந்ததாகத் தெரிகிறது. முகம்மது கோரி (Muhammad Ghori) அவர்களில் ஒருவராவர்; ஆஜ்மீரில் தம்மால் அழிக்கப்பட்ட கோயில்கள் இருந்த இடங்களில் அவர் மசூதிகளையும் கல்லூரிகளையும் கட்டினார் என்று சொல்லப்படுகிறது;[3] கல்விக்கும் சமய வழிபாட்டுக்கும் நிலைக்களங்களாக அமைந்திருந்த பல மசூதிகளைக் கட்டிய சுல்தான் குத்புத்தீன் (Sultan Kutbud din மற்றொருவராவார்.[4] இல்துத்மிஷ் (Iltutmish) ஒரு மத்ரஸாவைக் (madrasah) கட்டினார்; நசீருதீன் (Nasirud din), பால்பன் (Ba ban) என்பவர்கள் காலத்தில் டெல்லி மாபெருங் கல்விமுறையின் கேந்திரமாயிற்று; துக்ளக் அரசர்கள் – குறிப்பாக ஃபிரோஸ் ஷா (Firuz Sha) பள்ளிகளைச் செப்பனிட்டு, அரசாங்க நிதிகளிலிருந்து நன்கொடைகள் அளித்து அவற்றைப் பேணிவந்தார்; அன்றியும், அவர் ஃபெரிஷ்டாவின் கூற்றின்படி மசூதிகளை யொட்டியிருந்த குறைந்தது முப்பது கல்லூரிகளைக் கட்டினதுமன்றி, ஃபிரோஸாபாத்தில் (Firuzabad) தாம் நிறு

[1] F. E. Keay, 'Ancient Indian Education,' pp. 51 ff.

[2] Ibid., p. 114.

[3] N. N. Law, 'Promotion of Learning in India during Muhammadan Rule., pp. 17, 18.

[4] Ibid., pp. 19, 20.

விய கல்லூரி மாணவர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் உதவும் முறையில் உதவித் தொகைகளை ஒதுக்கி வைத்தார்.[1] கடைசியாக, சிக்கந்தர் லோடியும் (Sikandar Lodi) கல்விக்காகச் சிறந்த பணியாற்றினுர். அவருடைய ஆட்சிக் காலத்தில் ஆக்ரா இலக்கிய உலகில் கேந்திர ஸ்தானமாகச் சிறந்து விளங்கிற்று[2]; தவிர, இந்து நூல்கள் முகம்மதியர்களால் பாரசீகத்தில் மொழிபெயர்க்கப்படுவதும், பாரசீக மொழியை இந்துக்கள் கற்றுக்கொள்வதும் பெரிதும் முன்னேற்றம் பெற்றன.[3] இந்தக் கல்வி இயக்கம் வட இந்தியாவுடன் மட்டும் நிற்கவில்லை. ஏனெனில், பதினைந்தாம் நூற்ருண்டில், பீஜப்பூர், கோல்கொண்டா (Golkonda), மாளவம் (Malwa), காந்தேஷ் (Khandesh) ஜானபுரி (Jaunpur), முல்தான், வங்காளம் ஆகிய இடங்களிலும் கல்லூரிகள் கட்டப்பட்டன. கல்விக்கு மிக்க ஊக்கம் அளிக்கப்பட்டது. முகம்மது ஷா பாமினியின் (Muhammad Shah Bahmani) ஆட்சிக் காலத்தில் பீடாரில் மகமூத் கவானுல் (Mahamud Gawan) கட்டப்பட்ட கல்லூரி, மூவாயிரம் நூல்களைக் கொண்டிருந்த நூலகம் ஒன்றைப் பெற்றிருந்ததாகச் சொல்லப்படுகிறது.[4]

இங்ஙனமாக, முகலாயர் இந்தியாவில் வந்துசேர்ந்தபொழுது, மக்தப் (Maktab), மத்ரஸா (Madrasah) போன்ற கல்வி நிலையங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்திருக்க வேண்டும். மக்தப் என்பது மசூதியை யொட்டியிருந்த தொடக்கப் பள்ளியைக் குறிப்பதாகும். ஒரு சிறுவன் வழிபாடுகளுக்காக மனப்பாடம் செய்ய வேண்டியிருந்த குர்ரான் பகுதிகளை அங்கே கற்றுக்கொடுத்தனர். சிற்சில சமயங்களில் எழுதப்படிக்கவும் கணக்குகள் போடவும் கற்றுக்கொடுத்தனர். மத்ரஸா என்பது உயர்கல்விக்காகவென அமைக்கப்பட்டிருந்த பள்ளி அல்லது கல்லூரியாகும்.[5] ஆகையினுல், இந்துஸ்தானத்தில் கல்லூரிகள் இல்லை என்று பாபர் தமது வாழ்க்கைக் குறிப்புகளில் ஏன் எழுதினுரென்று தெரியவில்லை. சிற்சில சமயங்களில் அரசப் புரவலர்களாலோ, செல்வந்தப் பிரபுக்களாலோ நிறுவப்பட்ட பள்ளிகளும் கல்லூரிகளும் அவர்கள் இறந்தபிறகு அல்லது அவர்கள் அவற்றில் கொண்டிருந்த அக்கறை தீர்ந்துவிட்டபோது சீரழிந்தன அல்லது கைவிடப்பட்டன என்பது உண்மையே. சிற்சில சமயங்களில் சமகாலத்திய

1 Keay, p. 117.
2 N. N. Law, ibid., p. 73.
3 Ibid., p. 75.
4 Ibid., pp. 99-113; Keay, ibid., p. 119.
5 Keay, 'Ancient Indian Education,' p. 115.

வரலாற்றுச் செய்திக் கோப்பாளர்கள் குறிப்பிட்ட பள்ளிகள், மசூதியை யொட்டிய வகுப்புகளாக மட்டுமே இருந்தன. பதினாறும் நூற்றுண்டின் துவக்கத்தில் இந்தியப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றின் புகழ் நாட்டின் எல்லைகளுக்கப்பால் பரவியிருக்கவில்லை என்பது உண்மையே. ஆனால், இவையெல்லாம் நிகழ்ந்தனவென்று கொண்டாலுங்கூட, பாபர் வடஇந்தியாவைப்பற்றித்தான் குறிப்பிட்டார் என்று கொண்டாலுங்கூட, அவருடைய கூற்றைத் தடையின்றி ஏற்றுக்கொள்வதற்கில்லை.[1] துவக்கால முகமதிய அரசர்கள் கல்விக்கு அளித்த ஆதரவின் அளவையும் தரத்தையும் பற்றி அவ்வரசர்களின் அரசவையைச் சார்ந்த வரலாற்றறிஞர்கள் மிகைப்படுத்திக் கூறியிருக்கக்கூடும். இதையும் ஒப்புக்கொண்டாலும், பாபர் இந்தியாவுக்கு வந்த சமயத்தில் உயர்கல்விக்கான முகம்மதிய நிலையங்களும், மசூதிகளை யொட்டியிருந்த மக்தப்புகளும் இருந்திருக்க வேண்டும். அன்றியும், கற்றறிந்த புலவர்கள் பலர் தமது வீடுகளிலேயே மாணவர்களுக்குப் பாடம் கற்பித்துவந்திருக்கலாம்.[2]

முகலாயர் காலத்திற்கு முன்பு இருந்த கல்விமுறை சரிநுட்பமாக எப்படி இருப்பினும், முகலாயப் பேரரசர்கள் அறிவை வளர்ப்பதில் கருத்துச் செலுத்தினர் என்பதை மறுக்க முடியாது. ஏனெனில், அவர்களெல்லாம் கலைத்திறம் நிறைந்தவர்கள்; இலக்கியத்தில் மிக்க கருத்துக் கொண்டிருந்தவர்கள். பாபர் ஓர் விதிவசப்பட்ட வீரராக இருந்தபோதிலும், மிக அழுத்தப்பாடான ஆய்வுத்திறம் படைத்தவர்; கலைத்திறமிக்க பாரசீகக் கவிஞருமாவார்; ‘வசனத்தையும் செய்யுளையும் மிகத் தூய்மையாகவும் எளிதாகவும் எழுதும் நடையைத் தமது தாய்மொழியான துருக்கி மொழியில் அவர் பெற்றிருந்தார்.’[3] துருக்கிய மொழியில் எழுதப்பட்ட அவரது செய்யுள்களும், இலக்கணத்தைப்பற்றிய நூலான பாரசீக மஸ்னவியும் (Masnawi), இதர நூல்களும் ‘பாபர்-நாமா’ என்னும் அவருடைய சுயசரிதையான ‘வாழ்க்கைக் குறிப்புகளைப்’ (Memoirs) போலச் சிறப்புப் பெற்றிருக்கவில்லை. அவருடைய வாழ்க்கைக் குறிப்புகள் ‘எக் காலத்திற்குமுரிய விலைமிக்க குறிப்பேடுகள் என்றும், புனித அகஸ்டின் (St. Augustine), ரூஸ்ஸோ (Rousseau) ஆகியவர்களின் குற்ற ‘ஒப்புதல்களையும்’ (confessions), கிப்பன் (Gibbon), நியூட்டன் (Newton) ஆகியவர்கள் வாழ்க்கைக்

[1] Keay, ibid., 120, 121;—Beveridge in Introduction to N. N. Law's 'Promotion of Learning in India,' p. XXV.

[2] Keay, ibid., p. 120.

[3] S. Lane-Poole, 'Babur', Rulers of India Series, p. 10.

குறிப்புகளையும் அவை பொறுத்திருக்கின்றன என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. ஆசியாவைப் பொறுத்தவரையில் அது நிகரற்று விளங்குகிறது.[1] கற்றறிந்தவர்கள் பலர் பாபருடைய அரசவையில் திரண்டிருந்தனர். மீர்கந்தின் (Mirkhund) பேரனான குந்தாமீர் (Khundamir) என்பவரும், ஷேக் ஜெய்ன் காஃபி (Shaikh Jain Khwfi) என்பவரும் மிகச் சிறப்பு வாய்ந்தவர்கள்.[2] ஆனால், அவருடைய இந்தியப் படையெடுப்பிற்குப் பிறகு அவர் நெடுங் காலம் வாழ்ந்திருக்கவில்லையாதலால் கல்விக்காக அவரால் ஊக்க மூட்ட முடியவில்லை. ஹுமாயூன் கூட ஒரு கற்றறிந்தவர்தாம். தொல்லை நிறைந்த அவரது வாழ்க்கையில் அவர் டெல்லியில் ஒரு கல்லூரியைக் கட்டி அறிஞர்களுக்கு மிக்க ஆதரவு தந்தார். 'லுப்புல் தவாரிக்' (Lubbul Tawarikh) என்ற நூலின் ஆசிரிய ரான மீர் அப்துல் லத்தீஃப் அவ்வறிஞர்களில் ஒருவராவார்.[3] ஹுமாயூன் தாம் படையெடுப்பு நடத்தச் சென்றபொழுதெல்லாம் ஒரு சிறு நூலகத்தையும் வழக்கமாகத் தம்முடன் கொண்டு சென்றார். புவியியல், வானசாஸ்திரம் ஆகியவற்றில் அவர் மிக்க கருத்துச் செலுத்தினார். வானசாஸ்திரம் முகலாயர்களின் காலத்தில் மிக அதிகமாக விரும்பப்பட்டது. அதனின் துணையாக இருந்த சோதிடமும் அதுபோலவே விரும்பப்பட்டது. ஹுமாயூன் ஒரு திறம் படைத்த சோதிடராவார். சோதிடத்தில் ஜஹாங்கீர் கொண்டிருந்த நம்பிக்கையைப்பற்றி டெர்ரி கூறுகிறார்.[4] அவுரங்க சீப்பின் ஆட்சிக் காலத்தில், பெர்னியரின் கூற்றின்படி, டெல்லி இந்து -முசல்மான் சோதிடர்களால் நிறைந்திருந்தது. அவர்களில் ஒருவன் கலப்புத் திருமணத்தினால் பிறந்தவனாவான். அவன் கோவாவைச் சார்ந்த போர்ச்சுகீசியன்; வழக்கமாகப் பொய் சொல்லுகிறவன். மாலுமிகளின் காம்பஸ் (compass) கருவியும் ஒருசில ரோமானியத் தொழுகை நூல்களுமே அவனுடைய உடைமைகளாகும்.[5] ஹுமாயூன் ஆட்சிக் காலத்தில் தனிப்பட்டவர்கள் ஒரு சிலர் ஆக்ராவின் அருகில் ஒரு கல்லூரியையும் ஒரு பள்ளியையும் நிறுவி னர். சில ஆண்டுக் காலமாக முக்கிய மத்ரஸா ஒன்று டெல்லியி லிருந்த பேரரசரின் கல்லறையில் அமைக்கப்பட்டிருந்தது.[6]

மாபெரும் முகலாயர்களில் மிகச்சிறப்பு வாய்ந்தவரான அக்பருக்கு எழுதப் படிக்கத் தெரிந்திருந்ததா இல்லையா என்ற

[1] S. Beveridge, 'Calcutta Review', 1897.
[2] N. N. Law, ibid., pp. 121-4.
[3] Ibid., pp. 131, 132.
[4] W. Foster, 'Early Travels in India,' p. 310.
[5] W. Crooke, 'Things Indian', 37.
[6] N. N. Law, ibid, p. 134.

பிரச்சினை திட்டவட்டமாக முடிவு பெறவில்லை. சிறுவனாக இருக்கும் போது அவர் வேலை செய்ய மனமில்லாதவராக இருந்தார்; புத்தகங்களைப் படிப்பதைவிடக் குதிரைச் சவாரி செய்தல், வாட்பயிற்சி போன்ற போர்ப் பயிற்சிகளையே அவர் அதிகமாக விரும்பினார் எனத் தெரியவருகிறது. அவருக்குக் கல்விப் பயிற்சி அளிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர் ஒருவர் அவருடைய விருப்பத்திற்கு மாறாக நடந்துகொள்ள வேண்டா எனக் கருதி, அவருக்கு எழுதப் படிக்கக் கற்பிப்பதற்குப் பதிலாகப் புறாக்களைப் பறக்கவிடும் கலையையே அவருக்குக் கற்றுக்கொடுத்தார்.[1] அக்பரின் அரசவையில் இரண்டாண்டுகள் கழித்த தந்தை மான்சர்ரேட் அக்பருக்கு எழுதப் படிக்கத் தெரியாது என்று கூறுவதன் அடிப்படையில் தற்கால வரலாற்றாசிரியர்கள் சிலர் அக் கருத்தைக் கொண்டுள்ளனர். ஆனாலும், பாபர், ஹுமாயூன் போன்ற பண்புமிக்க கற்றறிஞர்களின் வழித்தோன்றலும், அசாதாரண அறிவுநுட்பத்தையும் வியப்பளிக்கும் ஞாபகசக்தியையும் இயல்பாகவே பெற்றிருந்தவருமான அக்பர் படிப்பதற்கோ, தம்முடைய பெயரை எழுதுவதற்கோ முற்றும் திறமற்றிருந்தார் என்பது நம்ப முடியாததாக இருக்கிறது. அவருடைய ஆசிரியர்கள், ஒருவரைத் தவிர மற்றவர்களெல்லாம் திறமைசாலிகளும் அறிவாளிகளுமாவர்.[2] இயந்திரக் கலைகளிலும், புதிய இயந்திரங்களைக் கண்டுபிடிப்பதிலும் அக்பர் தனி விருப்பம் கொண்டிருந்தார்—செயல்முறை சார்ந்த அவரது குணவியல்பிற்கு அத் துறைகள் மிக்க கவர்ச்சியூட்டின; இலக்கியக் கலைத் திறமையை அவர் தமக்குள் வளர்த்துக்கொள்ளவில்லை என்பது உறுதியே; ஆனால், அவருக்கு எழுதப் படிக்கத் தெரிந்திருந்ததோ இல்லையோ, அவர் அச் சொற்றொடருக்குச் சாதாரணமாகக் கொள்ளப்படும் பொருளில் எழுதப் படிக்கத் தெரியாதவர் என்று கொள்ள முடியாது; இலக்கியக் கல்வியைப் பாராட்டுவதற்கான கூர்மையான திறமையை அவர் பெற்றிருந்தார். பழமை வாய்ந்த சமஸ்கிருத இலக்கியத்தில் அவர் மிக முனைப்பான அக்கறை காட்டினார். பிரசித்தி வாய்ந்த காவியங்களைப் பாரசீக மொழியில் மொழிபெயர்ப்பதற்கும் தழுவி அமைப்பதற்கும், ஆக்ராவிலுள்ள பேரரச நூலகத்திற்காக நூல்களை இயற்றுவதற்கும் அவர் கட்டளையிட்டிருந்தார். கிரேக்க, அராபிய நூல்களை மொழிபெயர்க்க அவர் உத்தரவு பிறப்பித்திருந்தார்; அவருடைய உத்தரவின் பேரில் கான் கானன் பாபரது வாழ்க்கைக் குறிப்புகளைப் பாரசீகத்தில் மொழிபெயர்த்தார்; அதேபோல் 'லீலாவதி' (Lilavathi)

[1] Smith, 'Akbar', p. 22.

[2] N. N. Law, 'Promotion of Learning in India during Muhammadan Rule', pp. 207-12; F. E. Keay, 'Ancient Indian Education,' p. 121.

என்ற கணித நூலின் பதிப்புரு ஒன்றை ஃபெய்ஸி (Faizi) இயற்றினார். சற்றேறக்குறைய 65 லட்ச ரூபாய் மதிப்புள்ள 24,000 நூல்களைக் கொண்டிருந்த சிறப்பு மிக்க நூலகம் ஒன்றை அவர் கட்டினார். இடைவிடாமல் அவர் எழுத்துக் கலைக்கு மிகத் துரிதமாக ஊக்கமளித்தார். அவர் தமது அரசவையிலிருந்த ஓவியக் கலைஞர்களாலும் வரைவு வல்லார்களாலும் எழுதி முடிக்கப்பட்ட அரும் பெரும் நேர்த்தியான ஓவியங்களை விரும்பியதைப்போலவே நேர்த்தியான கையெழுத்துக் கலையையும் பெரிதும் மதித்தார்.[1] பாரசீக மொழியில் அரசாங்கப் பதிவுகள் எல்லாம் எழுதப்பட வேண்டும் என்று தோடர்மால் (Todar Mall) பிறப்பித்திருந்த உத்தரவின் விளைவாக உருது மொழி (Urdu) வளர்ச்சியுற்றதுமன்றி, இந்தியாவின் பெரும் பாகத்தின் பொது மொழியாகவும் அது ஏற்றுக் கொள்ளப்பட்டது.[2]

கல்வி நிலையங்களை நிலைநாட்டும் விஷயத்தில், முற்பட்ட முகம்மதிய அரசர்கள் ஏற்படுத்திய தரத்தைவிட அக்பரின் தரம் குறைந்துவிடவில்லை; ஏனெனில், ஃபதேபூர்-சிக்ரியிலும் (Fathpur-Sikri), ஆக்ராவிலும், இதர இடங்களிலும் அவர் கல்லூரிகளைக் கட்டினார். அவரது சமயப் பொறைக் கொள்கைக்கேற்ப, தமது ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியில் முகம்மதிய மத்ரஸாக்களில் இந்து இளைஞர்களின் கல்விக்காக வசதிகள் ஏற்படுத்தினார்.[3] பேரரசர் காட்டிய வழியைத் தனிப்பட்ட கொடையாளர்கள் பின்பற்றினர்; அக்பரின் வளர்ப்புத் தாயான மாஹம் அனகா (Maham Anaga), புரானா கிலாவின் (Purana Qil'ah) மேற்கு வாயிலுக்கருகில் ஒரு மதர்ஸாவைக் கட்டினாள்; மற்றொரு மதர்ஸா காஜா முயின் (Khwaja Mu'in) என்பவரால் கட்டப்பட்டிருந்தது. அதில் மீர்ஸா முஃப்லிஸ் (Mirza Muflis) என்பவர் மூன்று ஆண்டுகளாகப் பாடம் கற்பித்து வந்தார்; அக்பரின் அரசவையில் திரண்டிருந்த கற்றறிஞர்களில் அவரும் ஒருவராவார்.[4] கல்விக்காக அக்பர் பிறப்பித்திருந்த விதிமுறை பற்றி 'அய்னி-அக்பரி'யில் குறிக்கப்பட்டுள்ள மிகச் சிறப்பான கூற்றைச் சில வரலாற்றறிஞர்கள் உண்மைக்குப் பொருத்தமற்றதாயிருக்கின்றதென்றும், இந்தியாவிலாயினும் மற்ற எந்த நாட்டிலாயினும் பள்ளிகளில் பின்பற்றமுடியாத பாடத்திட்டத்தை அவ்விதிமுறைகள் பரிந்துரைக்கின்றன என்றும் சொல்லி இக் காரணங்

[1] N. N. Law, ibid., pp. 139 ff; Keay, ibid., p. 122; Smith, 'Akbar,' pp. 423 ff.

[2] G. Grierson, 'Literature of Hindustan,' p. 35, Keay, ibid; p. 122.

[3] Keay, ibid., p. 122.

[4] N. N. Law, ibid., pp. 165-8.

களால் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.[1] எழுதுவதற்கும் படிப்பதற்கும் சிறுவர்களுக்குக் கற்பிப்பதற்கான சிறந்த முறையை விளக்கியதற்குப் பிறகு, அந்த அறிக்கை நல்லொழுக்க முறைகள், கணிதம், கணிதத்திற்குரிய தனிப்பட்ட குறிமானமுறை (notation), விவசாயம், உரு அளவைநூல் (mensuration), வடிவியல் (geometry), வானநூல், உறுப்பமைதி இயல் (physiognomy), இல்லத்திற்குரிய விஷயங்கள், ஆட்சிமுறை விதிகள், மருத்துவம், தருக்க முறை, தப்பி (tabii), ரியாஸி (riyazi), இலாஹி (ilahi) அறிவியல்கள், வரலாறு ஆகியவைபற்றிய நூல்களையெல்லாம் படிக்கவேண்டும் என்று வற்புறுத்துகிறது; இவையெல்லாம் படிப்படியாகக் கற்றுக்கொள்ளலாம்[2]. இது உண்மையில் மக்தப்பிகள் அல்லது ஆதாரப் பள்ளிகளுக்காக அன்றி மத்ரஸாக்களுக்காக அமைக்கப்பட்டிருந்த பேரவாமிக்க உயர்ரக திட்டமாகும். இந்தப் பாடத்திட்டத்தைத் தனிப்பட்ட, ஒவ்வொரு மத்ரஸாவும் பின்பற்ற வேண்டும் என்று அக்பர் பெரும்பாலும் விரும்பியிருக்கமாட்டார்; அது முடியாத செயலுமாகும். அவருடைய கருத்தில் பெரும் பயனுள்ளதாக இருக்கும் பாடங்களையே அவர் வற்புறுத்தியிருக்கக் கூடும் எனக் கொள்வதுதான் அதிக நியாயமென்று தோன்றுகிறது. பரிந்துரைக்கப்பட்ட திட்டத்தின் இயல்பு இக் கருத்தை உறுதிப்படுத்துகிறது. ஏனெனில், விஞ்ஞானப் பாடங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. அப் பாடங்கள் குறிக்கப்பட்டுள்ள வரிசைமுறையிலிருந்து செயல்முறையில் பயனுள்ளதாக இருக்கும் பாடங்களே அதிகமாக விரும்பப்பட்டன என்பது புலனுகிறது. அதுபோன்ற பாடங்களே அக்பரின் சுவைத்திறனுக்கு இயல்பாகப் பொருத்தமாயிருந்தன. இந்துப் பள்ளிகளின் அதிவிரைவான முன்னேற்றத்தைப்பற்றி அறிந்திருந்ததால், அக்பர் எழுதப் படிக்கக் கற்றுக்கொடுப்பதைப்பற்றித் தமது ஆலோசனையை அளித்திருப்பார் என்று கருதலாம். படிக்கத் தொடங்குவதற்கு முன்னுல் எழுதக் கற்றுக் கொடுக்கும் முறையான தற்கால மான்டிசோரி (Montessori) முறைக்கு அப் பள்ளிக்கூடங்கள் முன்னேடிகளாக இருந்தன. அதற்கு மாருக அக்பர் காலத்திய பாரசீகப் பள்ளிகள் இருந்தன. இப் பள்ளிகள் எதிர் மாருன முறையைப் பின்பற்றின.[3] அக்பர் காலத்திய முகம்மதியப் பள்ளிகள் பேரரசரின் யோசனைகளை எப்போதுமே நிறைவேற்றின என்று கொள்ள முடியாது; ஏனெனில், அப் பள்ளிகள் பழமை வாய்ந்த மாறுதல் வேண்டா மரபுகளைப் பின்பற்றுவதை விரும்பினது;

[1] Smith, 'Akbar', p. 387.

[2] 'Ain-i-Akbari', trans. Blochmann, vol. i, p. 279.

[3] F. E. Keay, 'Ancient Indian Education,' pp. 124, 125, 166.

மன்றி, அரசரின் அல்லது கற்றறிந்த அவரது பிரபுக்களின் மேற்பார்வையிலிருந்து தப்பித்துக்கொள்ளும்படியும் அமைந்திருந்தன. பல பள்ளிகளில் அவ் விதிமுறைகளை நேர்முகமாகவே புறக்கணித்திருக்கவேண்டும். இருந்தபோதிலும், 'அய்னி-அக்பரி'யில் குறிப்பிட்டுள்ள அக் கூற்றுக் கல்வியில் அக்பர் மிகத் துரிதமான அக்கறை செலுத்தினர் என்பதையும், அவருக்கு முற்பட்டவர்களின் கீழ் வளர்ச்சி பெற்ற பழமை வாய்ந்த கல்விமுறை சீர்திருத்தம் பெற வேண்டியிருந்தது என்று அக்பர் உணர்ந்திருந்தார் என்பதையும் காட்டுகிறது. இவ் வகையில் அக் கூற்று மதிப்பு வாய்ந்ததாகும்.

அக்பர் எழுதப் படிக்கத் திறமை பெற்றிருந்தாரா என்பதற்கு முடிவு காணும்பொழுது தோன்றும் சந்தேகம், அவருடைய மகன் ஜஹாங்கீரைப் பொறுத்தவரையில் மறைந்துவிடுகிறது. ஜஹாங்கீர் நூல்கள், ஓவியங்கள் ஆகியவற்றைப் பெரிதும் விரும்பினர். துருக்கிய மொழியில் படிக்கவும் எழுதவும் அவருக்குத் தெரியும். வரலாறு எழுதுவதைத் தொழிலாகவே கொண்டிருந்த இரு ஆசிரியர்களின்[1] உதவியைக்கொண்டு அவர் தமது வாழ்க்கைக் குறிப்புகளை (Wakiat-i-Jahangiri) எழுதினர். குஜராத்திற்குச் செல்லுகையில் ஒரு நூலகத்தை அவர் தம்முடன் கொண்டு சென்ருர். முப்பது ஆண்டுகளாகச் சீர்கெட்டுக் கவனிப்பாரற்றிருந்த மத்ரஸாக்களைச் சீர்படுத்தி அவற்றை மாணவர்களாலும் பேராசிரியர்களாலும் நிரப்பினதாக 'தாரிகி-ஜான்-ஜஹான்' (Tarikhi-Jan-Jahan) என்ற நூலின் ஆசிரியரான ஜான் ஜஹான் கான் (Jan Jahan Khan) எழுதுகிருர். உயிலெழுதி வைக்காமல் இறந்துபோகிற செல்வந்தர்களின் சொத்து அரசாங்கத்திற்கு வந்துசேரவேண்டும் என்று அவர் ஒரு கட்டளையைப் பிறப்பித்திருந்தார் என்றும், மத்ரஸாக்களையும் துறவி மடங்களையும் அதுபோன்ற நிலையங்களையும் கட்டுவதற்கும் சீர்படுத்துவதற்கும் அதை அவர் பயன்படுத்தினர் என்றும் காஃபிகான் கூறுகிருர்.[2] ஷாஜஹானின் ஆட்சிக் காலத்திய கல்வி நிலையைப் பற்றி பெர்னியர் இருளார்ந்த வருணிப்பைத்தருகிருர். ஆனல், அவர் ஒருசார்பான திறனய்வாளரின் கூற்றுகளை நம்பியதனுலும் சரிவரக் கவனிக்காததனுலும் அங்ஙனம் கூறுகிருர் போலும். நமக்குத் தெரிந்தவரையில், ஷாஜஹான் தமக்கு முற்பட்டவர்களுடைய கொள்கைக்கு மாருக நடந்துகொள்ளவில்லை; தவிர, அவர் உண்மையில் நுண்கலைகளின் புரவலருமாவார். ஆனலும், ஆடம்பரக்

[1] N. N. Law, 'Promotion of Learning in India during Muhammadan Rule,' p. 174.

[2] N. N. Law, ibid, pp. 174, 175; Keay, ibid., p. 128.

கட்டடங்களைக் கட்டுவதில் அவருக்குத் தனிப்பட்ட சுவைத்திறன் இருந்தது. ஒருவேளை அவர் அக்பரையும்விடக் குறைந்த அளவி லேயே கல்வி நிலையங்களைமட்டும் நிறுவுவதில் அக்கறை காட்டி யிருந்திருக்கலாம். இக் காரணத்தை முன்னிட்டு அவருக்கு முற் பட்டவர்களின் ஆட்சிக் காலத்தில் நிறுவப்பட்டதாகச் சொல்லப் படும் பள்ளிகளும் கல்லூரிகளும் ஆதரவின்றி நலிவடைந்திருக்கக் கூடும். தவிர, செல்வந்தர்களாயுள்ள பிரபுக்களும் மற்றவர்களும் மிஞ்சியிருந்த தங்கள் செல்வத்தைக் கல்வி வளர்ச்சிக்காகப் பயன் படுத்தும் பழக்கத்தைக் கைவிட்டிருக்கலாம். ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தில் டெல்லியில் ஒரே ஒரு கல்லூரி நிறுவப்பட்ட தென்றும், ஒரே ஒரு கல்லூரி பழுதுபார்க்கப்பட்டதென்றும் நாம் படிக்கிறோம். பேரரசக் குடும்பத்தைச் சார்ந்த இளவரசன் தாரா ஷிக்கோ (Dara Shikoh) மிகச் சிறந்த கற்றறிந்தவராக இருந்த போதிலும் இந்நிலை ஏற்பட்டிருந்தது வியக்கத்தக்கதாகும். அராபிய, பாரசீக, சம்ஸ்கிருத மொழிகளில் தலைசிறந்து விளங்கிய அவர் குறிப்பிடத்தக்க பல சிறந்த நூல்களை எழுதியுள்ளார்; உபநிஷத்து கள் (Upanishads),[1] பகவத்கீதை (Bhagavadgita), ஜோக்-வசிஷ்ட ராமாயணம் (Jog-Vahsista Ramayanam) ஆகியவற்றைப் பாரசீக மொழியில் அவர் மொழிபெயர்த்துள்ளார். முஸ்லீம் முனி வர்களின் பட்டியல் ஒன்றையும், சூஃபி தத்துவங்களைப்பற்றிய பல நூல்களையும் அவர் இயற்றியுள்ளார்[2] அவருடைய மனைவியினிடம் கொண்டிருந்த காதலுக்காக அவர் விட்டுச்சென்ற துயர் தோய்ந்த நினைவுச் சின்னம் ஒன்றை இந்தியா அலுவலகத்தின் (India Office) நூலகத்தில் இன்றும் பாதுகாத்துவைக்கப்பட்டுள்ளது. அந் நினைவுச் சின்னம் அழகு வாய்ந்த படக்கோப்பின் வடிவில் உள்ளது. அதில் அவர் தம்முடைய கையினாலேயே பின்வருமாறு எழுதியுள் ளார்:

'இந்தப் படக்கோப்புப் பேரரசர் ஷாஜஹானின் மகனான இள வரசன் முகம்மது தாரா ஷிக்கோவால் அன்புமிக்க, நெருங்கிய தோழியான நாதீரா பேகம் அவர்களுக்கு *1051*-ல் (கி.பி. **1641-2**) பரிசாக வழங்கப்பட்டதாகும்.'

துரதிருஷ்ட இளவரசரின் கல்லறையினிடம் நின்றுகொண்டு சிந்தனையில் மூழ்கியிருந்த சர் வில்லியம் ஸ்லீமன் (Sir William Sleeman), அவ்விளவரசர் உயிரோடிருந்து அரியணையேறியிருப்பா ராயின் கல்வியின் தன்மையும் அதனுடன் இந்தியாவின் விதியும்

[1] N. N. Law, ibid., pp. 184-6.

[2] Sleemans, 'Rambles and Recollections,' ed. V. A. Smith, pp. 511-13.

முற்றும் வேறுவிதமாக அமைந்திருக்கும் என்று கூறியது பொருத்த மானதாகும்.

அவுரங்கசீப்பின் கல்விக் கொள்கை வெறிமிக்க அவரது சமயக் கருத்துகளால் பாதிக்கப்பட்டிருந்தது. இந்துக்களின் கல்வியை வளர்ப்பதில் அவர் சிறிதும் அக்கறை செலுத்தவில்லை. உண்மையில் 1669இல் இந்துப் பள்ளிகளையும் கோயில்களையும் அழித்து, அவர்களுடைய போதனை முறைகளையும் சமயப் பழக்கங்களையும் எடுத்துவிடுமாறு அவர் தமது மாகாண கவர்னர்களுக்கு உத்தரவு பிறப்பித்திருந்தார்.[1] அதற்கு மாருக, முகம்மதியக் கல்வியை அவர் ஆதரித்தார்; எண்ணற்ற கல்லூரிகளையும் பள்ளிகளையும் அவர் நிறுவினர்;[2] தவிர, ஒரு சமயத்தில், லக்னேவில் டச்சுக்காரர்களுக்குரியவான சில கட்டடங்களை அவர் கைப்பற்றி அவற்றை மத்ரஸாவாக்கிவிட்டார்.[3] இந்தியாவில் எல்லா நகரங்களிலும் பட்டணங்களிலும் கற்றறிந்த பேராசிரியர்களுக்கு ஓய்வுச் சம்பளமும், படிகளும், நிலங்களும் பரிசாக வழங்கப்பட்டன என்றும், கற்றறிந்த புலவர்களுக்கு அவரவர்களுடைய தகுதிக்கேற்றவாறு உதவிப் பணம் அளிக்கப்பட்டது என்றும்,[4] குஜராத்திலிருந்த மத்ரஸாக்களைப் பழுதுபார்ப்பதற்காகப் பணம் ஒப்பளிக்கப்பட்டது என்றும் 'மீரத்-இ-ஆலம்' (Mirat-i-Alam) குறிப்பிடுகிறது. ஆமதாபாத்தில், 1697-ல் அக்ராமுத்தின் கான் சதர் (Akramuddin Khan Sadar) என்பவரால் நிறுவப்பட்ட கல்லூரி ஒன்றுக்கு உதவி செய்வதற்காகக் கிராமங்களுக்கு இனும் நிலம் (inam) வழங்கப்பட்டது.[5] குஜராத்தைச் சார்ந்த போராக்களின் (Bohras) கல்வி வளர்ச்சியில் அவுரங்கசீப் முனைப்பான தனிப்பட்ட அக்கறை காட்டினர்; அவர்களுக்கென ஆசிரியர்களை நியமித்து, மாதாந்தரத் தேர்வுகளை எழுதுமாறு அவர்களுக்கு உத்தரவிட்டார். அத் தேர்வுகளின் முடிவுகள் அவருக்கு நேரில் அறிவிக்கப்படவேண்டுமெனவும் ஏற்பாடு செய்தார்.[6] முகம்மதியர்களின் கல்வி வளர்ச்சியில் பேரரசர் தனிப்பட்ட அக்கறை காட்டியதனுல் தனிப்பட்ட கொடைவள்ளல்களும் பல மத்ரஸாக்களைத் தோற்றுவித்தனர்; தவிர, சையால் கட்டும் (Sialkot) ஒரு முஸ்லிம் கல்வி மைய இடமாக விரைவில் வளர்ச்சி பெற்றது. அவுரங்கசீப்பும் நன்ருகவே கல்வி கற்றிருந்

1 Sarkar, 'Ancedotes of Aurangzeb', p. 11.

2 Keen's, 'Mughal Empire', p. 23.

3 N. N. Law, 'Promotion of Learning in India during Muhammadan Rule,' p. 188.

4 F. E. Keay, 'Ancient Indian Education,' p. 131.

5 N. N. Law, ibid., p. 188.

6 Ibid., p. 189.

தார்; துருக்கி மொழியை அவர் அறிந்திருந்தார்; அராபிய, பாரசீக மொழிகளிலும் அவர் தேர்ச்சி பெற்றிருந்தார். குர்ராஜனயும் ஹதீஸையும் (Hadis) (மரபுகள்—tradition) அவர் மனப்பாடம் செய்திருந்தார். முஸ்லீம் சமய சித்தாந்தத்தில் அவருக்கு ஆழ்ந்தகன்ற அறிவு உண்டு. பல நூல்களை, பெரும்பாலும் சமய சித்தாந்த நூல்களைப் பேரரச நூலகத்திற்கு அவர் வழங்கினர். இருந்த போதிலும், அவரது இளமைக் காலத்திய கிழ ஆசிரியர் ஒருவரை அவர் கண்டித்ததைப்பற்றி பெர்னியர் குறிப்பிடுவதை நினைவில் கொண்டால், அக் காலத்திய இளவரசர்களுக்கும் இளைய பிரபுக்களுக்கும் சாதாரணமாக அளிக்கப்பட்டுவந்த கல்வியைப்பற்றி அவுரங்கசீப் பெரிதும் அதிருப்தி கொண்டிருந்தார் என்பது விளங்கும். 'நினைவுச் சக்தி அதிகமாக இருக்கும் காலமான இளம் பிராயத்தில்தான் ஆயிரக்கணக்கான சிறந்த போதனைகளை மனம் ஏற்றுக்கொள்ளும் என்பதும், உயர் நோக்கங்களை வளர்த்து அரிய பெரிய செயல்களை ஒருவர் சாதிக்கும்படி செய்வதான போதனைகளை அப்பொழுதுதான் அளிக்கவேண்டும் என்பதும் நீர் அறியாததா?' என்று அவர் தமது கண்டனத்தில் கூறுகிறார். மீண்டும் சீற்றத்தோடுகூடிய தமது சொற்களின் முடிவில், 'அண்டிப் பிழைப்பவனே! எனக்குப் பதில் கூறு. அரசன் தன்னுடைய குடிமக்களுக்கு ஆற்றவேண்டிய கடமைகளையும், குடிமக்கள் தம் அரசனுக்கு ஆற்றவேண்டிய கடமைகளையும் பற்றியாவது எனக்கு நீ கற்பித்திருக்கவேண்டாமா?' என்று அவர் கேட்கிறார்.[1]

பெர்னியரால் எழுதப்பட்டுள்ள இப் பேச்சு முழுவதும் நம்முடைய கவனத்துக்குரியதாகும். முகலாயர் காலத்திய கல்வி முறையின் குறைபாடுகளை அது எடுத்துக்காட்டுகிறது. பல பிரச்சினைகளிலும் குறுகிய மனப்பான்மையையும் மதவெறியையும் அவுரங்கசீப் கொண்டிருந்தபோதிலும், மக்தப்புகளிலும் மத்ரஸாக்களிலும் அளிக்கப்பட்டுவரும் போதனை மட்டுமீறி வழக்கத்திற்கிசைந்ததாகவும் புலமை மிக்கதாகவுமே இருந்தது என்பதையும், இலக்கணத்தை போதிப்பதையும், சுவையற்ற புலங்கடந்த அற்பக் கருத்துகளைப் பற்றிய வாதங்களை நடத்துவதையும்விட மிகப் பரந்த மனிதப் பற்றுக் கோட்பாட்டையும் உயர் குறிக்கோள்களையும் அடிப்படையாகக் கொண்டிருக்கும் குணவியல்பை வளர்ப்பது மிக மேலான பயனுடையதாகும் என்பதை அவர் விவேகத்துடன் உணர்ந்திருந்தார். சிற்சில சமயங்களில் மத்ரஸாக்கள் விஞ்ஞானம், இலக்கியம், வரலாறு ஆகியவற்றைக் கற்பித்தன என்பது உண்மையே; வரலாற்றுப் பாடத்தை முகம்மதியர்கள் மிக அதிகமாக விரும்பினர்;

[1] Bernier's, 'Travels'; Keay, 'Ancient Indian Education,' pp. 132–5.

முகம்மதியர்களின் மற்றக் கல்வி நிலையங்கள் சீர்கெட்டுவிட்ட போதிலும், பெரும்பாலான மக்களால் விரும்பப்பட்டுவந்ததும் பிரிட்டிஷ் ஆட்சிவரையிலும் நீடித்து நிலைத்திருந்ததுமான ஆதாரக் கல்விமுறையுடன் இணைந்திருந்த மக்தப்பு நீடித்திருந்தது என்பதும் உண்மையே. இருந்தபோதிலும், உச்சநிலையிலும் மொகலாயக் கல்விமுறை பண்பாட்டினை வளர்க்கவில்லை; வாழ்க்கையில் மாணவனுக்குரிய தொழிலுக்கான தகுதியை அது அளிக்கவில்லை. கல்வி வளர்ச்சிக்கான வசதிகளை அதிகப்படுத்தும்படி பொதுமக்களிடமிருந்து வந்த கோரிக்கையை, நாட்டின் வறுமையும் பொதுப் பணித்துறையைச் சார்ந்தவர்களின் கொடுங் கொள்ளையிடும் மனப்பான்மையும் அழித்துவிட்டன[1]வாயினும், அம் முறையின் குறைகள், கல்வி வளர்ச்சிக்கான ஆதரவைச் சிற்சில சமயங்களில் மட்டும் அளித்துவந்தமை யெல்லாம், முகலாய அரசர்கள் அவரவர்களுடைய கருத்துகளின்படியும் வரையறைகளுக்கேற்றவாறும் அறிவு நிலையங்களை நிலைநாட்டி வளர்த்தனர் என்பதையும், தற்காலக் கல்வி வல்லுநர்கள் வற்புறுத்தும் சீர்திருத்தங்களையே அவ்வரசர்களில் தலைசிறந்து விளங்கிய இருவர் வற்புறுத்தியதாக சமகாலத்திய ஆசிரியர்களின் குறிப்புகளில் நாம் காண்பதையும் நாம் மறக்கும்படி செய்துவிடக்கூடாது.[2] கல்விக்கான ஆதரவைச் சிற்சில சமயங்களில்மட்டும் அளித்துவந்தமை சர்வாதிகார ஆட்சியின் தவிர்க்கமுடியாத விளைவாகும்.

பெண்களின் கல்வியைப் பற்றி ஒரு வார்த்தை. முகலாயர்களின் காலத்தில் இந்துக்களிடையிலும் முகம்மதியர்களிடையிலும் பெண்களுக்கான கல்வி அளிக்கப்படவில்லை. குர்ரான் முழுவதும், எழுதப் படிக்கவும் பெண்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டது என்று 'கானூனீ இஸ்லாமின்' ஆசிரியர் கூறுகிறார். ஆனால்,இளம் பிராயத்திலேயே அவர்களுடைய கல்வி நிறுத்திவிடப் பட்டதனால் அவர்கள் மிக அதிகமாகக் கற்றிருக்க முடியாது.[3] சிற்சில சமயங்களில் பேரரச குடும்பத்தைச் சார்ந்த பெண்களுக்கும் பிரபுக்களின் பெண்களுக்கும் அந்தப்புரத்திற்குள்ளேயே போதனை அளிக்கப்பட்டுவந்தது. உதாரணமாக, பதேபூர்-சிக்ரியிலிருந்த அரண்மனையில் அக்பர் பெண்களின் கல்வி போதனைக்காக வென்றே சில அறைகளை ஒதுக்கிவைத்திருந்தார்.[4] அவ்விதம் கற்பிக்கப்பட்ட மாதர்கள் சிலர் இலக்கிய உலகில் சிறந்து

[1] Keay, ibid., pp. 136, 140-3.

[2] F. E. Keay, 'Ancient Indian Education,' p. 137.

[3] 'Qanun-i-Islam,' ed. Crooke (1921), p. 51.

[4] N. N. Law, 'Promotion of Learning in India during Muhammadan Rule,' p. 202.

விளங்கினர். பாபருடைய மகளான குல்பதன் பேகம் 'ஹுமாயூன்-நாமா' (Humayun-nama) என்ற நூலை எழுதினர். ஹுமாயூன் மருமகளான சலீமா சுல்தானு (Salima Sultana) என்பவள் பாரசீக மொழியில் பல செய்யுள்களை இயற்றினர்; ஜஹாங்கீரின் அரசியான நூர்ஜஹான் (Nur Jahan) கற்றறிந்தவராவார்; தவிர, பாரசீக, அராபிய இலக்கியத்தில் ஆழ்ந்த அறிவு படைத்தவர்; அதுபோலவேதான் ஷாஜஹானின் மனைவியான மும்தாஜ்மஹாலும் சிறப்புப் பெற்றிருந்தார். ஷாஜஹானின் மகளான ஜஹானரா பேகத்துக்கு (Jahanara Begam) பாரசீகம் கற்றறிந்த மாதரான சதியுன்னிசா (Satiunnisa) குர்ரானையும் பாரசீக மொழியையும் கற்றுக் கொடுத்தார்; கடைசியில் அம் மாது அந்தப்புரத்தின் சதர் (Sadr) அல்லது மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டாள். அதுபோலவே, அவுரங்கசீப்பின் மகளான ஜெபுன்னிஸா (Jebu-n-nissa) ஹபீஸ் மரியம் (Habiz Mariam) என்பவரால் கற்பிக்கப்பட்டார். அப் பெண்ணின் குடும்பம் குராஸம்மில் (Khurasam) இருக்கும் நைஷாபூரிலிருந்து (Naishapur) வந்ததாகும். தனது தந்தையின் அறிவாற்றலையும், இலக்கியத்தில் தனது குடும்பம் கொண்டிருந்த விருப்பத்தையும் மரபுரிமையாகப் பெற்ற ஜெபுன்னிஸா அராபிய, பாரசீக மொழிகளில் சிறந்த புலமை பெற்றிருந்தார். கையெழுத்துக் கலையிலும் அவர் சிறப்புப் பெற்றிருந்தார்; மிக்க விலைமதிப்புள்ள நூலகத்தையும் அவர் திரட்டியிருந்தார். லாகூரின் சுற்றுப்புறத்தில் சார்-பர்ஜி (Char-Burji) என்ற பூங்கா ஒன்று அமைந்திருந்தது. அப் பூங்கா அவ்விளவரசிக்குரியதாகும் என்றும், அங்குதான் அவர் தனது இலக்கியப் பணிகளைச் செய்துவந்தார் என்றும் சொல்லப்படுகிறது. இப்பொழுது அப் பூங்காவில் அதனின் இடிந்து போன வாயில்தான் எஞ்சியிருப்பதாகும். இளவரசர் அக்பர் (Prince Akbar) செய்த கலகத்துக்கு உடந்தையாக இருந்தார் என்ற காரணத்திற்காக தண்டனை பெற்று அவுரங்கசீப்பின் உத்தரவின்படி அவர் சிறையிலடைக்கப்பட்டபொழுது தனது துயரின் சுமையைக் குறைப்பதற்கு அவருடைய இலக்கிய ஆராய்ச்சிகள்தாம் பெரிதும் பயன்பட்டிருக்கவேண்டும். *1702*, மே மாதத்தில் நிகழ்ந்த அவருடைய மரணம்தான் அவரை அச் சிறையிலிருந்து விடுதலை செய்தது. டெல்லியிலுள்ள காபூலி வாயிலுக்கு வெளிப்புறத்தில் உள்ள 'முப்பதாயிரம் மரங்களைக் கொண்ட பூங்காவில்' (Garden of Thirty Thousand Trees) அவருடைய உடல் அடக்கம் செய்யப்பட்டது. அதன்மீது அவுரங்கசீப் ஒரு கல்லறையையும் கட்டிவைத்தார். இராசபுதன ரயில்வேயை அமைத்துக்கொண்டிருக்கிறோம் என்று கூறிக்கொண்டிருப்பவர்களுடைய செயலானது அக் கல்லறையை அழித்துவிட்டது வருந்தத்தக்கதாகும்.[1] மேற்

[1] J. N. Sarkar, 'Studies in Mughal India,' pp. 79-90.

குறிப்பிட்டுள்ள இளவரசிகளைத் தவிர, உயர்தரக் குடும்பங்களைச் சார்ந்த இதர பெண்களும் அவரவர்களுடைய பெற்ருேர் இல்லங் களில் இலக்கியக் கல்வி அளிக்கப்பட்டு வந்தனர் என்பதில் சந்தேகமில்லை. ஆனுலும், அவர்களுடைய எண்ணிக்கை மிக அதிகமானதாக இருந்திருக்க முடியாது. பொதுவாக உயர்தர, நடுத்தர, கீழ்த்தர வகுப்புகளைச் சார்ந்த முஸ்லீம் பெண்களைப் பொறுத்தவரையிலும், அவர்கள் வீட்டையும் குடும்பப் பொருளாதார நிலையையும் சமாளிப்பதற்கான அறிவைப் பெற்றிருப்பின் அவர்கள் போதிய அளவில் கற்றவர் என்றே கருதப்பட்டனர். இக் காலத் திய பொருளில் பெண்களின் கல்வி என்பதை முகலாய இந்தியா வின் கருத்துகளும் பழக்கங்களும் கொஞ்சங்கூட அறிந்திருக்க வில்லை.

போக்குவாத்துகள்: பேரரசரின் குடும்பத்தைப்பற்றியும் அதனுடைய நிர்வாகத்தைப்பற்றியும் வருணிப்பதற்குமுன், முகலா யப் பேரரசில் சாலைவழியாகவும் ஆற்றுவழியாகவும் நடந்துகொண் டிருந்த செய்திப் போக்குவரத்துகளைப்பற்றிக் குறிப்பிட வேண்டும். அக் காலத்திய சாலைகளைப்பற்றிக் கூறும்பொழுது, மிகச் சிறந்த சாலைகளும் சரிவர மட்டமாக்கப்படாமலும் சரளைக் கற்களால் கட்டப் படாமலும் இருந்தன என்பதை மறந்துவிடக்கூடாது. சிறிய பிளவு களையும் அருவிகளையும் கடப்பதற்காக அங்குமிங்குமாக மேடைப் பாதைகள் அமைக்கப்பட்டிருந்தன. பாதை மிகப் பெரிய ஆற்றின் வழியாகச் செல்லும்பொழுது அதைக் கடப்பதற்காகப் படகுவசதியும் செய்யப்பட்டிருந்தது. ‘இங்குத் தடம் பதிந்த சாலைகளோ நெடுஞ் சாலைகளைப் பழுதுபார்ப்பதோ இல்லை. முதன்முதலாக நடமாடும் வண்டிகளின் சக்கரங்கள்தாம் தடங்களை ஏற்படுத்தவேண்டும். ஆகையினுல், முதலாண்டில் அச் சாலைகளின் வழியாகச் செல்வது மிகக் கடுமையானதாகும்’ என்று **1666**-ல் கம்பெனியாருக்கு எழுதிய கடிதத்தில் சூரத்தின் சபை குறிப்பிடுகிறது.[1] கல்கத்தாவி லிருந்து பஞ்சாப் வழியாகச் செல்லும் தற்கால நெடுஞ்சாலையைப் போன்றே பாலங்கள் அமைக்கப்பட்டதும் கருங்கல் பாவியதுமான சிறந்த நெடுஞ்சாலை ஒன்றைப் பதினேரும் நூற்ருண்டிலோ-ஏன்-பத் தொன்பதாம் நூற்ருண்டிலோகூடக் கனவிலும் நினைத்திருக்க முடி யாது; ஏனெனில், ஸ்லீமன் **1835**-ல் எழுதும்பொழுது பின்வருமாறு குறிப்பிடுகிருர்: ‘இந்தியாவில் சாலைகள் எல்லாம் வெகு விரைவில் ஆறுகளாக மாறிவிடுகின்றன; எங்கும் அவைகளுக்குக் கல் பாவப் படவில்லை. ஒவ்வோர் ஆண்டும் மழையில்லாமல் நான்கு அல்லது ஐந்து மாதங்கள்வரை அங்ஙனமே விட்டுவிடப்படுவதனுல் அவற்றின்

[1] Foster, ‘English Factories in India,’ 1665-7, p. 157.

மண் உராய்தலினால் வெறும் மாவாக அரைக்கப்படுகிறது ; அதைக் காற்றுச் சுற்றுப்புறங்களுக்குத் தூவிச் செல்கிறது.[1] கல் பாவாமல் சாலைகளைக் கட்டும் பழக்கம் இந்தியாவில் தொன்றுதொட்டு வருவதாகும். சந்திரகுப்தனால் (Chandragupta Maurya) நிறுவப்பட்ட மௌரிய வமிசம் பல நெடுஞ்சாலைகளைக் கட்டியது. நிர்வாகத்தைச் சார்ந்த துறை ஒன்று அவற்றை ஒழுங்காக வைத்ததுமன்றி, பத்து 'ஸ்டாடிய' (stadia) தூரங்களுக்கு இடையில் [ஓர் இந்தியக் கோஸில் (kos) பாதி] தூண்களையும் அமைத்திருந்தது.[2] பௌத்தர்களும் ஏராளமான சாலைகளை அமைத்திருந்தனர் ; அவற்றைப்பற்றிய முழுக் குறிப்பு ஒன்றை ரிஸ் டேவிட்ஸ் (Rhys Davids) எழுதுகிறார். சாலைகள் அமைப்பது அரசனின் கடமைகளுள் ஒன்றாகும் என்று அக் காலத்திலேயே 'அர்த்த சாஸ்திரத்'தில் (Arthasastra) குறிப்பிட்டிருக்கும் கொள்கையைக் குப்த அரசர்கள் முற்றும் ஏற்றுக்கொண்டனர் என்பது ஃபா-ஹீன் (Fa-hien) என்ற சீன யாத்திரிகர் தம்முடைய சுற்றுப்பயணத்தைப் பற்றி எழுதியுள்ள குறிப்பிலிருந்து எண்பிக்கப்படுகிறது; ஆனால், போக்குவரத்து விஷயத்தில் அக்பர் தமது கவனத்தைச் செலுத்திய பொழுது, அவருக்கு முற்பட்ட காலத்தில் முந்திய இந்து வமிசங்களின் காலத்தில் இருந்ததைவிட மிகக் குறைவான நடவடிக்கைகளே எடுக்கப்பட்டிருந்தன என்பதை அவர் உணர்ந்தார். முகலாயர் காலத்தில் ஷெர்ஷாதான் முதன்முதலாகப் பெருஞ்சாலைகளைக் கட்டியவராவார். கங்கை முகத்துவாரத்திலிருந்து பஞ்சாபுக்கும் இராசபுதனத்துக்கும் சென்ற குறைந்தது நான்கு பெருஞ்சாலைகளைக் கட்டி முடித்தற்காக இந்தியா ஷெர்ஷாவுக்குக் கடமைப்பட்டுள்ளது. 'காடுகளை வெட்டி, அவைகளினூடே வழி ஏற்படுத்தித் தடங்கல்களையெல்லாம் அகற்றி, இப்பொழுது டெல்லியிலிருந்து ஆக்ராவிற்குச் செல்லும் பாதை ஒன்றை அவர் அமைத்தார். (அதாவது, மதுரா வழியாக யமுனையாற்றின் மேற்கில் செல்லுவதான பாதை.) அதில் பல சராய்களை அல்லது சாவடிகளையும் அவர் கட்டினார்.'[3] அக் காலத்திற்கு முன்பு, அவ்விரு மையங்களுக்குமிடையில் சென்றுகொண்டிருந்த பயணிகள் யமுனைக்கும் கங்கைக்குமிடையில் யமுனைக்கு மேற்கிலிருந்த பாதையின் வழியாகச் செல்லவேண்டியிருந்தது. இச் சாலைகளில் அவர் 1,700-க்குக் குறையாத சராய்கள் அல்லது வழிமனைகளைக் கட்டினார் ; தவிர நிழல் தரும் மரங்களையும் சாலையின் இருபுறங்களிலும் நட்டு வைத்தார்.

[1] Sleeman, 'Ramble and Recollections, ed'. Smith (1915) p. 301.

[2] 'Oxford History of India', p. 91.

[3] Nuru-l Hakk in Elliot and Dowson, vi, p. 188.

ஆகையினால், அக்பர் வட இந்தியாவிலிருந்து தக்காணத்திற்கு சாத்பூரா (Satpura) மலைத்தொடரிலுள்ள ஓர் இடைவெளி வழியாக நெடுஞ்சாலை ஒன்றை அமைத்தபொழுதும், லாகூருக்கும் ஆக்ராவுக்கும் இடையில் நெடுஞ்சாலை ஒன்றைக் கட்டியபொழுதும் அவர் பழமை வாய்ந்த இந்து அரசாங்கக் குறிக்கோள்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு கொள்கையே பின்பற்றினர். ஹுமாயூனின் திறமைமிக்க பகைவரால் அக் கொள்கை செயல்முறைக்குக் கொண்டுவரப்பட்டது. நானூறு மைலுக்குமேல் நீளமான ஆக்ரா—லாகூர் சாலை அடுத்தடுத்து வந்த சுற்றுப்பயணிகளால் பாராட்டப்பட்டுள்ளது. *1611*-ல் வில்லியம் ஃபிஞ்ச் (William Finch) அதைக் குறிப்பிடுகிருர்.[1] 'ஜனங்கள் நடமாடும் இச் சாலையின் ஒவ்வொரு பக்கத்திலும் வரிசையாக மரங்கள் நட்டுவைக்கப்பட்டிருந்தன. அச் சாலை லாகூர் நகரிலிருந்து ஆக்ரா நகரம்வரை ஓடியது' என்று டாம் கார்ரியட் (Tom Coryat) *(1612-17)* குறிப்பிடுகிருர்.[2] அது தான் கண்ட ஒப்பற்ற காட்சியாகும் என்று அவர் மேலும் கூறுகிறர். 'உலகத்திலேயே மிக அரிதானதும் பயன்தருவதுமான பணியாகும்' என்று அதை டெர்ரி வருணிக்கிருர்.[3] அக்பரின் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட அல்லது பழுது பார்க்கப்பட்ட நெடுஞ்சாலைகள் பலவற்றில் வரிசையாக மரங்கள் நடப்பட்டிருந்தன; தவிர, சுற்றுப்பயணிகளின் வசதிக்காகச் சுவர் சூழ்ந்த வழிமனைகளும் கட்டப்பட்டன. செங்கூர் (Sengur) நதிக் கரையில் சாபர்கடாவிலிருந்த (Chaparghata) வழிமனையைப் பற்றி ஃபின்ச் வருணிக்கும்பொழுது, 'அந்நியர்கள் தங்கியிருப்பதற்கான விடுதியாக இல்லாமல் ஒரு சிறந்த காப்பரண் மாளிகையாகவே இருந்தது. அது சிறந்த கற்களால் கட்டப்பட்டிருந்தது. அதற்குப் பல பூட்டு சாவிகள் இருந்தன; அதில் ஆயிரம் பேர் தங்க முடிந்தது' என்று கூறுகிறர்[4]. ஆயினும், முக்கிய நெடுஞ்சாலைகளைத் தவிர முகலாயர் காலத்திய சாலைகள் நன்ருக இருக்கவில்லை; சிறு ஆறுகளின்மீதுகூட நிரந்தரமான பாலங்கள் அதிகமாக இல்லை. இதுபோன்ற மிக உறுதியான கட்டுமானம் ஜான்புரியில் (Jaunpur) *1564*ஆம் ஆண்டிற்கும் *1568*ஆம் ஆண்டிற்குமிடையில் கட்டப்பட்ட பெரிய பாலமாகும். பத்து வளைவுகளைக் கொண்டிருந்த அப் பாலம் முனிம்கானல் (Munim Khan) கட்டப்பட்டதாகும். இப்பொழுதும் அதைப் பயன்படுத்துகின்றனர். சாதாரணமாக ஆறுகளைக் கடவுகள், படகு பயணப் பாதைகள்,

[1] W. Foster, 'Early Travels in India,' pp, 185-6.
[2] Ibid., p. 244.
[3] Terry's 'Voyage' (ed. 1655), p. 81.
[4] W. Foster, Ibid., p. 179.

படகு பாலங்கள் ஆகியவற்றின் உதவியால் கடக்கவேண்டியிருந்தது. ஆறுகளில் வெள்ளம் பெருகி ஓடும்பொழுது அவற்றைக் கடத்தல் மிகக் கஷ்டமாக இருந்தது. அபுல் ஃபாஸலின் கூற்றின்படி, சாலைகள், பாலங்கள், அரண்கள் போன்றவைகளைக் கட்டி முடிக்கும் பொறுப்பு நிர்வாகத்துறை ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அக்பரின் ஆட்சிக் காலத்தில் கப்பற்படைத் தலைவருடைய பொறுப்பையும் கட்டடப் பணித்துறையின் முதல் ஆணையாளரின் (First Commissioner of Works) பொறுப்பையும் ஒருங்கே மேற்கொண்டிருந்த ஓர் அதிகாரி அத் துறைக்குத் தலைமை வகித்தார்.[1] இந்த இரண்டு பொறுப்புகளையும் காசிம் கான் (Kasim Khan) வகித்திருந்தார். ஆக்ரா அரண் மீண்டும் கட்டப்படுவதை அவர் மேற்பார்வையிட்டார். அக்பரின் படை செல்லுவதற்காகப் படகு பாலங்களைக் கட்டுவதில் அவர் நிபுணராக விளங்கினர். பஞ்சாபில் 1581-ல் அதுபோன்ற பாலங்கள் பலவற்றை அவர் கட்டினர். சாதாரணப் போக்குவரத்து வசதிக்காக ஆக்ராவிலும் மற்ற நகரங்களிலும் இருந்த பாலங்களையும் அவரே கட்டியிருக்கலாம்.

சாலைகள் அமைக்கும் விஷயத்தில் அக்பரின் கொள்கையையே ஜஹாங்கீர் பின்பற்றினர் என்று தோன்றுகிறது. ஏனெனில், 'அவர் உத்தரவின்படி நூற்றைம்பது காத தூரம் வரையில் இரண்டு வரிசைகளாக மரங்கள் நடப்பட்டிருந்ததையும், பல்வேறு சாலைகளின் வழியைக் காட்டுவதற்காக ஒவ்வொரு கோஸ் தூரத்தில் சிறிய கூர்ங்கோபுரங்கள் அல்லது சிறு தூபிகள் நிறுவப்பட்டிருந்ததையும்பற்றி பெர்னியர் குறிப்பிடுகிறர். அவைகளைப் பேணிக் காப்பதற்காக அக்பர் ஏற்படுத்தியிருந்த துறை சார்ந்த ஏற்பாடுகள் போன்றவற்றை ஷாஜஹானும் ஏற்படுத்தியிருக்க வேண்டும். இடைவிடாமல் பயணம் செய்துகொண்டிருந்த அவுரங்கசீப் சாலைகள் கட்டுவதில் பிரத்தியேகக் கவனம் செலுத்தினர்; மராத்தியர்களுக்கெதிராக அவர் நெடுங்காலமாக நடத்திய படையெடுப்பின்பொழுது அச் சாலைகளின் வழியாகத்தான் அவருடைய படைக்குத் தேவைப்பொருள்கள் அனுப்பப்பட்டுவந்தன. முகலாயப் பேரரசின் சீர்குலைவினல் குழப்பமும் அராஜகமும் உண்டானபொழுதுதான் இந்த நேர்த்தியான பொதுக் கட்டுவேலைகள் சீரழிவுற்றன; இறுதியில் அவைகளுக்குப் பதிலாகக் கருங்கற்களால் கட்டப்பட்ட நெடுஞ்சாலைகளும் இருப்புப்பாதைகளும் தோன்றின. இவையெல்லாம் டெல்லௌசி பிரபு (Lord Dalhousie) கவர்னர்-ஜெனரலாக இருந்தபோது கட்டப்பட்டவையாகும். கங்கை, சிந்து, யமுனை போன்ற மிகப் பெரிய ஆறுகளின் நீர்வழிச் செலவு

[1] 'Akbar-nama,' ii. p. 373.

(navigation) முகலாய காலத்திய நிலப்பாதைகளுக்குப் பயனுள்ள துணைச்சாதனமாயிருந்தது. வட இந்தியாவில் போக்குவரத்துப் பெரும்பாலும் நீர்வழியாகத்தான் நடந்துகொண்டிருந்தது. வங்காளத்தின் நீர்வழிகள், இன்றைக்கு இருப்பதுபோலவே, அன்னாள்களிலும் போக்குவரத்திற்காகப் பெரிதும் பயன்பட்டுவந்தன.[1]

சாலைகளும் ஓய்வு விடுதிகளும் தவிர, முகலாயர்கள் பொதுவாகப் பயன்தரும் பொதுப்பணிகளுக்காக வெகு சிறு தொகையையே செலவழித்தனர். எனினும், ஜஹாங்கீர், ஷாஜஹான் ஆட்சிக் காலங்களில் சமயக் காரியங்களுக்காகவும் சொந்தக் காரியங்களுக்காகவும் கட்டடங்களைக் கட்டுவதில் ஏராளமான பணம் செலவழிக்கப்பட்டது. முன்னவர் தம்முடைய இராணுவப் படைகளுக்காகவென்றே புர்ஹான்பூரில் (Burhanpur) நீர் வழங்கீட்டுக் கட்டு வேலைகளை அமைத்திருந்தார். பின்னவரின் காலத்தில், அலி மர்தான்கான் (Ali Mardan Khan) 1639இல் ராவி கால்வாயைப் (Ravi Canal) பழுதுபார்த்தார் அல்லது கட்டினார். அக் கால்வாயைக் கட்டுவதற்காகச் செலவான தொகையை—ஒரு லட்சம் ரூபாயை தௌலதாபாத்தில் (Daulatabad) மசூதி கட்டுவதற்காக ஷாஜஹான் செலவழித்த 10 லட்சம் ரூபாய்த் தொகையுடனே, டெல்லியில் பேரரசரின் அரண்மனைக்காகச் செலவான 60 லட்சம் ரூபாய்த் தொகையுடனே ஒப்பிட்டுப் பார்க்குங்கால் அது ஒரு சிறு தொகையாகவே தென்படுகிறது. பிரபுக்களும் செல்வமிக்க வியாபாரிகளும் பேரரசர்கள் காட்டியவழியைப் பின்பற்றினர். கல்லறைகள், வழிமனைகள் போன்ற கட்டடங்களைக் கட்டுவது நாகரிக முறையில் பணத்தைச் செலவிடுவதாகும் என்று கருதப்பட்டது. ஆயினும், அக் கட்டடங்களைக் கட்டியவர்களின் இறப்பிற்குப் பிறகு அவை அழிந்துபோகும்படி விட்டுவிடப்பட்டன. அதனால், கட்டடக் கலையின் மாதிரிகளாகவோ, பொதுமக்களின் வசதிக்காகவென இருந்த கட்டடங்களாகவோ பெற்றிருக்கக்கூடிய மதிப்பினை அக் கட்டடங்கள் இழந்தன.[2]

நகர்ப்புறங்கள் : நகரங்கள், பெரிய பட்டணங்கள் ஆகியவற்றின் செல்வ வளமும் செழிப்பும் அக்பர், ஜஹாங்கீர் ஆட்சிக் காலங்களில் இந்தியாவுக்கு வந்த சுற்றுப்பயணிகளின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தன. ஷாஜஹான், அவுரங்கசீப் ஆகியவர்களின் ஆட்சிக் காலங்களில் நகரப் புறநிலைகள் பெரும் மாறுதலுற்றன என்று கருதுவதற்கு ஏதுவில்லை. 'ஆக்ரா மிகப் பெரிய ஒரு நகரமாகும்;

[1] W. H. Moreland, 'India at the Death of Akbar,' p. 7.

[2] W. H. Moreland, 'From Akbar to Aurangzeb,' pp. 195-7.

ஏராளமான மக்கள் அங்கு வாழ்ந்துவந்தனர் என்று ஃபிட்ச் (*1583-91*) கூறுகிறார். வாரணசி, பாட்ன (Patna) ஆகியவற்றின் பேரளவைக் கண்டு அவர் வியப்புற்றார். 'மிகப் பெரிய நகரம்; அங்கே வெள்ளை நிற வாணிகர்கள் பலர் வசித்துவருகின்றனர்' என்று ஃபின்ச் (*1608-11*) சூரத்தை வருணிக்கிறார். வலிமை பெற்ற, செல்வமிக்க நகரான ஜோல்னபூருக்கு (Joulnapoure) (ஜால்ன—Jalna) அவர் விஜயம் செய்தார். ஆமதாபாத், அலஹாபாத், லாகூர் ஆகியவற்றைப்பற்றி அவர் நிரம்பக் கூறுகிறார். அவருக்கு லண்டனைவிட ஆக்ராவும் லாகூரும் மிகப் பெரியவையாக இருந்தன; அவரது சான்றினை டெர்ரியும் (Terry) (*1616-19*) மான்சர்ரேட்டும் (Monserrate) உறுதிப்படுத்துகின்றனர். *1581* இல் லாகூர் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் இருந்த எந் நகருக்கும் குறைந்ததன்று என்று மான்சர்ரேட் வலியுறுத்துகிறார்.[1] அதே சமயத்தில், சூரத்திலிருந்தே ஆக்ராவிற்குப் பயணம் செய்தவரும், பேரரசர் காபூலுக்குச் சென்றபோது அவருடன் சென்றவருமான போர்ச்சுகீசியப் பாதிரி, ஒவ்வொரு நகரத்தையும் தூரத்திலல்லாமல் அருகிலிருந்து பார்க்கும்பொழுது, குறுகிய வீதிகளினாலும் தள்ளிக்கொண்டு நடக்கும் கூட்டங்களினாலும் அது கவர்ச்சியற்றிருந்தது என்றும், செல்வந்தர்களின் ஆடம்பர இல்லங்கள், இன்பப் பூங்காக்கள், அலங்காரமான செயற்கை நீர் ஊற்றுகள் ஆகியவையெல்லாம் பாமர மக்களின் துயர்மிக்க குடிசைகளுடனும் அழுக்கடைந்த குடில்களுடனும் முனைப்பாக மாறுபட்டிருந்தன என்றும் கூறுகிறார். 'ஒரு நகரைக் கண்டால் எல்லாவற்றையும் கண்டுவிட்டது போலாகும்' என்று அவர் எழுதிவைத்தார். மூர்லாண்டின் (Moreland) கூற்றின்படி, இதுவரையிலும் நகர அமைப்பு வல்லுநரின் கவனத்துக்கு வராத அல்லது ஆங்கில-இந்தியர் வசிக்கும் பகுதிகளாக மாறாத நகரங்களுக்கு இன்றுகூட அவ் வருணிப்பு மிகப் பொருத்தமானதாகும்.[2]

பஞ்சம்: முகலாயப் பிரபுக்களின் செல்வமிக்க இன்ப மாளிகைகளுக்குக் கீழ்த்தர வகுப்பினர் குடியிருந்த அழுக்கடைந்த குடில்கள் இருளார்ந்த பின்னணியாக அமைந்திருந்தது போலவே, ஆடம்பரங்களிலும் இன்பங்களிலும் மூழ்கிக் கிடந்த பேரரச அவைக்குப் பின்னிருந்து பஞ்சம் கறுத்த நிழலாகப் படர்ந்திருந்தது. அக்பர் அரியணை ஏறிய ஆண்டில், இந்தியாவின் வடக்கு மாகாணங்களில், குறிப்பாக ஆக்ராவிலும் டெல்லியிலும் மிகக் கடுமையான

[1] W. Foster, 'Early Travels in India,' pp. 17, 20, 23, 133, 137, 161, 173, 177, 182, 292; Smith, 'Akbar,' p. 395.

[2] W. H. Moreland, 'From Akbar to Aurangzeb', p. 9.

பஞ்சம் பரவியது; தலைநகரம் சூறையாடப்பட்டது; அதலி (Adali) என்ற அரசரின் அமைச்சரும் அரியணைக்கு உரிமை பாராட்டியவரு மான ஹேமு (Hemu) மக்களின் துன்பங்களைச் சிறிதும் பொருட் படுத்தவில்லை; ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் தின்று கொண்டிருந்தபோது அவர் தமது யானைகளுக்கு அரிசி, சர்க்கரை, வெண்ணெய் ஆகியவற்றை உணவாக அளித்தார்.[1] குஜராத்திலும் பஞ்சமும் கொள்ளை நோயும் 1573-84இல் பரவியதனால், குடி மக்கள், ஏழைகள், செல்வந்தர்கள் எல்லாம் நாட்டைவிட்டு வெளியேறி மற்றப் பகுதிகளில் குடியேறினர்.[2] அபுல் ஃபாஸலின் கூற்றின்படி, 1583 அல்லது 1584இல் மிகக் கடுமையான பற்றுக் குறை ஏற்பட்டது. அதன் விளைவாகப் பலருடைய உணவுப் பொருள்கள் தீர்ந்துபோயின.[3] ஆனால், 1594இல் தொடங்கி 1598ஆம் ஆண்டுவரை நீடித்திருந்த பஞ்சம் அக்பர் காலத்தில் தோன்றிய மிகக் கடுமையான பஞ்சமாகும். அதனைப் பின் தொடர்ந்து வழக்கம்போலக் கொள்ளை நோய் பரவியது. இதனால் பலர் வீடுகளையும், கிராமங்களையும், நகரங்களையும்விட்டு ஓடினர். 'மனிதர்கள் மனிதர்களையே புசித்தனர்; வீதிகளிலும் சாலைகளிலும் பிணங்கள் தடங்கல்களாகக் குவிந்திருந்தன; அவற்றை அகற்று வதற்காக எவ்வித உதவியும் கொடுக்கப்படவில்லை' என்று சம காலத்திய வரலாற்றுக் கோப்பாளர் எழுதுகிறார்.[4] ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தின் நான்காம் ஐந்தாம் ஆண்டுகளில், 1630-2இல் தக்காணத்தையும் குஜராத்தையும் சூறையாடிய பஞ்சம் அது போலவே மிகக் கடுமை வாய்ந்ததாக இருந்தது. 'பிணங்களின் எலும்புகள் தவிடுபொடியாக்கப்பட்டு மாவுடன் கலக்கப்பட்டு விற்கப்பட்டது' என்றும், 'மகனுடைய அன்பைவிட அவனது இறைச்சியே அதிகமாக விரும்பப்பட்டது' என்றும் அதிகாரபூர்வ மான வரலாற்றாசிரியரான அப்துல் ஹமீது (Abdul Hamid) கூறுவதி லிருந்து அப் பேரழிவின் கொடுமையை ஓரளவு புரிந்துகொள்ளலாம். 'சூரத்திலிருந்து ஆக்ராவிற்குத் தாம் பயணம் செய்துகொண்டிருக் கும்பொழுது சூரத்துக்கும் புர்ஹான்பூருக்குமிடையே இருந்த பகுதி யில் ஏராளமான பிணங்கள் கிடந்ததனால் தனது சிறிய கூடாரத் தைக்கூட அமைக்க முடியவில்லை' என்று பீட்டர் முண்டி (Peter Mundy) என்ற ஆங்கிலப் பயணியும் கூறுகிறார்.[5] அதுபோலவே

1 'Oxford History of India,' p. 344; Badaoni, trans. Ranking-i, 549-51; Elliot and Dowson, v. 490-1; 'Ain-i-Akbari', iii, 475.

2 Smith, 'Akbar' p. 397.

3 'Akbar-nama': vol: iii-Chap. 74.

4 'Oxford History of India', p. 362.

5 'Oxford History of India', p. 393-4.

அவுரங்கசீப்பின் ஆட்சிக் காலத்தின் முதல் ஆண்டில் மிகக் கடுமையான பஞ்சம் ஒன்று தோன்றிற்று. இதனால் வட இந்தியாவிலும் மத்திய இந்தியாவிலும் சொல்லொணுத் துன்பம் ஏற்பட்டது. மார்வாரில் (Marwar) அதனுடைய விளைவுகளைப்பற்றி டாட் (Tod) வருணிக்கையில் பின்வருமாறு கூறுகிறார்: 'சாதி வேறுபாடு முற்றும் மறைந்துவிட்டது. சூத்திரனுக்கும் பிராமணனுக்குமிடையில் இருந்த வேறுபாடு அறுபட்டது. பசியின் கொடுமையைத் தணிக்கப் பழங்கள், பூக்கள், காய்கறிகள், செடிகள் ஆகியவற்றின் தோல் அல்லது பட்டையையும் உரித்துக்கொண்டனர். அதுமட்டுமா! மனிதன் மனிதனையே தின்ன ஆரம்பித்துவிட்டான்! ஏராளமான மக்கள் மடிந்ததனால் நகரங்கள் காலியாகக் கிடந்தன. வீடுகளில் இருந்த விதைகள் நாசமாயின; மீன்கள் அழிந்தன; எல்லாருடைய நம்பிக்கையும் அணைக்கப்பட்டது.'[1]

அவ்வப்பொழுது இந்தியாவில் பெருந்துயரங்களும் கடுமையான பஞ்சங்களும் ஏற்பட்டனவாயினும், முகலாய நிர்வாகம் பரிகாரம் அளிப்பதற்காக முழுமையான அல்லது நீடித்த முயற்சி எதுவும் செய்யவில்லைபோலும். ஏராளமான மரண விழுக்காடு, குழந்தைகள் அடிமையாக்கப்படுதல், மனிதன் மனிதனையே உண்ணுதல் ஆகிய அனைத்தும் முகலாயர்களின் காலத்தில் தோன்றிய கடும் பஞ்சங்களின் இயல்பான பின்விளைவுகளாகும்; அதுபோலவே அதற்கு முற்பட்ட காலங்களிலும் இருந்தது.[2] 1595-8இல் தோன்றிய மிகக் கடுமையான பஞ்சத்தின்பொழுது, பஞ்ச நிவாரண ஏற்பாடுகளை மேற்பார்வையிடுவதற்காக புகாராவைச் (Bokhara) சார்ந்த, இயற்கையாகவே இரக்க குணம் படைத்த ஷேய்க் ஃபரீஸ் (Shaikh Faris) என்பவரை அக்பர் நியமித்திருந்தார். இதன்மூலம் துன்பத்துக்குப் பரிகாரம் தேட அவர் முயன்றார். அவருடைய ஏற்பாடுகளைப்பற்றிய குறிப்பு எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை எனினும், அவர்வசம் இருந்த நிர்வாக அமைப்பைக்கொண்டு அவர் சிற்சில நகரங்களிலும் பட்டணங்களிலும் பட்டினியால் வாடி வருந்திக்கொண்டிருந்தவர்களுக்கு உணவு அளிப்பதைத் தவிர மற்றெதுவும் செய்திருக்க முடியாது என்பது உண்மையாகும். 1630-2இல் தோன்றிய கடும் பஞ்சத்தின்பொழுது ஷாஜஹான் கஞ்சி வார்ப்பதற்காகச் சில சமயலறைகளைக் கட்டினார் என்றும், இருபது வாரங்

[1] Tod 'Annals &c' ed. Crooke (1920), Vol. i, p. 45.

1614ஆம் ஆண்டுக்கும் 1659ஆம் ஆண்டுக்குமிடையே இந்தியாவில் பன்னிரண்டு பஞ்சங்கள் அல்லது பற்றுக்குறைகள் ஏற்பட்டன என்றும், அவற்றுள் பத்து ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டன என்றும் W. H. மூர்லாண்டு மதிப்பிடுகிறார். ('From Akbar to Aurangzeb,' pp. 208 ff)

[2] Moreland, 'India at the Death of Akbar', p. 266.

களில் தருமத்துக்கு எனச் செலவிடுவதற்காக $1\frac{1}{2}$ லட்சம் ரூபாய் அளித்தார் என்றும், நிலவரியில் பதினொன்றில் ஒரு பங்கைத் தள்ளுபடி செய்துவிட்டார் என்றும் 'பாத்ஷா நாமா' (Badshah-nama) என்ற நூலின் ஆசிரியரான முகம்மது அமீன் காஸ்வினி (Muhammad Amin-i-Qazwini) வற்புறுத்திக் கூறுகிறார். முண்டி (Mundy) என்பவர் பார்த்தவரையில், அதைத் தவிர மற்ற எவ்வித உதவியும் பட்டினியால் வாடும் மக்களுக்கு அளிக்கப்படவில்லை. எவ்வித உற்பத்தியுமின்றி, மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்த நாட்டில் பதினொன்றில் பத்துப் பங்காக நிலவரியை வசூலிப்பது நியாயம் என்பதோ, வசூலிக்க முடியும் என்பதோ பெரிதும் ஆட்சேபிக்கப்படத்தக்கதாகும். வறுமையினாலும் அதனைப் பின் தொடர்ந்து வந்த கொள்ளை நோயினாலும் பதினாயிரக் கணக்கில் மக்கள் மாண்டனர் என்பது உண்மையே. விவசாயத்தை நம்பியிருந்த மக்களைப்போலவே பட்டணங்களில் வசித்துவந்த நெசவாளர்களும் இதர தொழிலாளிகளும் துன்பமுற்றனர். உண்மையில் குஜராத்திலிருந்த நெசவாளர்கள் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டதனால் அவர்கள் எல்லோரும் தங்களுடைய இல்லங்களைவிட்டு ஓடிவிட்டனர்; ஆகையினால், ஆங்கில வர்த்தகர்கள் தங்களுடைய கப்பல்களில் ஏற்றிக்கொண்டு செல்வதற்கான பொருள்களை வாங்க முடியவில்லை.[1] 1658 60இல் தோன்றிய பஞ்சமும் மிகக்கடுமையானதாகும்; குறிப்பாக சிந்துவில் அது சொல்லொணுத் துன்பம் விளைத்தது. சூரத் வர்த்தகர்கள் கிழக்கு இந்தியக் கம்பெனியாருக்கு எழுதிய கடிதத்தின்படி அங்கே 'அப் பஞ்சம் பலரை வாரிக்கொண்டு சென்றுவிட்டது'. அடுத்த ஆண்டில் (1660) 'பஞ்சம் மற்ற எந்த இடத்திலும் இதுபோலச் சூறையாடியிராது. உயிருடன் இருந்தவர்கள் இறந்தவர்களை அடக்கம் செய்யவும் முடியாமல் தவித்தனர்' என்று அவர்கள் ஏப்ரல் 13ஆம் நாள் எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பிடுகின்றனர்.[2] தமது குடிமக்களின் சுமையைக் குறைக்கும் வகையில் அவுரங்கசீப் தொலலை மிக்க பல்வகைப்பட்ட எழுபது தீர்வைகளையும் வரிகளையும் தள்ளுபடி செய்து, அவற்றை வசூலிப்பதை மிகக் கண்டிப்பாகத் தடையிடுவதற்கான ஆணை பிறப்பிப்பது ஒன்றைத்தான் செய்ய முடிந்தது. இந்த ஆணையால் மக்களுக்கு நலன் எதுவும் ஏற்படவில்லை; ஏனெனில், காஃபிகானின் கூற்றின்படி, அரசத் தடையாணை பயனற்றதாயிற்று; தல அதிகாரிகள் தடையிடப்பட்டிருந்த தீர்வைகளைத் தங்களுடைய நலனுக்காகவே தொடர்ந்து வசூலித்துவந்தனர்.[3]

1 'Oxford History of India', p. 394; Moreland, ibid., pp. 127-8, 188.

2 W. Foster, 'English Factories in India', 1655-60, pp. 210, 307.

3 'Oxford History of India', p. 423.

அவ்வப்பொழுது தோன்றிக்கொண்டிருந்த பஞ்சங்களினின்றும் மக்களுக்குப் பரிகாரம் அளிப்பதற்கு முகலாய நிர்வாகம் செயல் முறையில் எதுவும் செய்யவில்லை என்பதையும், மழை இல்லாததனுல் பற்றுக்குறை ஏற்படும் சமயங்களில் தோன்றும் சாதாரணத் துன்ப காலங்களின்பொழுதும் மேற்குறிப்பிட்டது போன்ற நெடுங் காலமாக நீடித்திருந்த கடுமையான பஞ்ச காலங்களின்பொழுதும் குடியானவன் எவ்வித உதவியுமின்றித் துயரத்தைப் பொறுத்துக் கொள்ளவேண்டியிருந்தது என்பதையும் சமகாலத்திய குறிப்புகளின் சான்று வற்புறுத்திக் கூறுகின்றது. அரசாங்கத்தின் கோரிக்கை, முகலாய சிவில் பகுதித் துறையினரில் கொள்ளைகளினுலும் லஞ்ச ஊழல்களினுலும் மேலும் மோசமாகி, குடியானவனைச் சேமிப்பு எதையும் செய்யாவண்ணம் தடுத்ததனுல் அவன் துயருக்காளாவதன்றி வேறெதுவும் செய்வதற்கில்லை. பரிகார ஏற்பாடுகளைச் செய்வதற்காக எனத் தக்க அமைப்பு எதுவும் இல்லாமை, இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்கிடையில் விரைந்து செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் இல்லாமை, உலக விவகாரங்கள் விதிவசப்படி ஆகட்டும் என்ற ஒருவிதமான போக்கு ஆகிய அனைத்தும் ஒன்ருகச் சேர்ந்து மனித உயிரைக் காப்பதைத் தடுத்தன. உண்மையில், அவுரங்கசீப் மறைந்து நூற்றெழுபது ஆண்டுகளுக்குப் பிறகுதான் பெரும் பணத்தைச் செலவழித்தேனும் மனித உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்பது அரசாங்கத்தின் விரிவான பரிகார ஏற்பாட்டுக் கொள்கையின் அடிப்படைத் தத்துவமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பேரரசக் குடும்பம் : இதுவரை மனிதத் துன்பங்களைப்பற்றி ஆராய்ந்தோம். இப்பொழுது நம் கவனத்தைப் பேரரசக் குடும்பத்தின் சில கூறுகளை ஆராய்வதில் செலுத்துவோம். அக் குடும்பம் மிக ஆடம்பரமாக நடத்தப்பட்டுவந்தது. 1595-ல் நூற்றுக்கு மேற்பட்ட தனித்தனி அலுவலகங்களையும் வேலைச்சாலைகளையும் கொண்டிருந்த அக்பரது இல்லம், மாளிகை ஆகியவற்றிற்காக ஆண்டுதோறும் 309,186,795 தாம் அல்லது ஒரு ரூபாய்க்கு 40 தாம்கள் விகிதப்படி 7,729,670 ரூபாய் செலவழிக்கப்பட்டது.[1] ஆண்டுதோறும் செலவழிக்கப்பட்ட தொகை ஷாஜஹானின் காலத்தில் ஒருவேளை இன்னும் அதிகமாக இருந்திருக்கும். ஏனெனில், அவரும் அவருடைய தந்தையும், தங்களுடைய மூதாதையர் திரட்டி வைத்திருந்த செல்வத்தையும், பாபர், ஹுமாயூன், அக்பர் ஆகியவர்களின் பலத்தினுலும் போர்செய்வதற்கான இயல்புணர்ச்சியினுலும் கைப்பற்றிய வருவாய்களையும் செலவிட்டு இன்பந் துய்க்க மனவுறுதி

[1] 'Ain-i-Akbari', trans. Blochmann, vol. i.

கொண்டிருந்தனர். மீர் அர்ஸ் (Mir Arz) அல்லது வேண்டுகோள்களைக் கவனிக்கும் பிரபு (Lord of Requests) என்ற அதிகாரியையொத்திருந்த முதன்மை பக்ஷியும், 'அரண்மனைத் தளபதி' (Palace Commandant) என்ற அதிகாரியும் அரண்மனையின் இரு முக்கிய அலுவலர்களாவர். ஜஹாங்கீரின் அரசவையைப் பற்றிய தமது வரலாற்றில் எட்வர்ட் டெர்ரி (1616-19) இவர்களைக் 'கருவூலர்' என்றும் பேடிகளின் தலைவர் என்றும் (அவருடைய அரண்மனையின் மேற்பார்வையாளரும் கட்டுப்பாட்டு அதிகாரியும்) வருணிக்கிறார்.[1] செயலாளர்; யானைகளின் தலைவர்; கூடாரத் துறையின் தலைவர்; ஆடைகள் வைக்கும் நிலையடுக்குப் பேழையின் தலைவர் (the keeper of the Wardrobe) ஆகியவர்கள் ஜஹாங்கீரின் அரண்மனையின் மற்ற முக்கிய அதிகாரிகளாவார்கள். சமயலறை, தண்ணீர் வசதி, கொட்டில்கள், பழத்தோட்டங்கள், பூங்காக்கள் போன்ற முறைகள் உட்பட அரச இல்லத்தைச் சார்ந்த துறைகள் எல்லாவற்றையும் அக்பர் இராணுவ முறையிலேயே கவனமாக அமைத்துவைத்திருந்தார். உதாரணமாக, சமயல்துறை மீர் பகவால் (mir bakawal) என்பவரின் பொறுப்பில் இருந்தது; அக்பர் காலத்தில் அவ்வதிகாரி 600 ஆள்களைக் கொண்ட மன்சப்தார் என்ற மதிப்புத் தரப்பெற்றிருந்தார். அப்பதவியை ஏற்றிருந்த ஹகீம் ஹுமாம் (Hakim Humam) பேரரசரின் நெருங்கிய நண்பராவார். அவருக்குக்கீழ்த் துணையாளர் பலர் இருந்தனர்; ரொக்கப் பணத்தை வைப்பதற்காகவும் தேவைப் பொருள்களை வைப்பதற்காகவும் கருவூலர்கள், சுவை காண்பவர்கள், எழுத்தர்கள், பல்வேறு நாடுகளிலிருந்து வந்த சமயல்காரர்கள் ஆகியவர்களெல்லாம் அவருக்குக்கீழ் இருந்தனர். அவர்களில் பலர் அஹாதீக்களாகவும் மற்ற இராணுவப்படைகளைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தனர்; அவரவர்களுடைய மதிப்புத் தரத்திற்கு ஏற்ப அவர்கள் ஊதியம் பெற்றனர். ஒரு காலாட்படை வீரனின் மதிப்புத்தரம் வாய்ந்த சமயலறை வேலைக்காரன் மாதம் ஒன்றுக்கு 100 தாம் முதல் 400 தாம்வரை சம்பளம் பெற்றான். ஒவ்வொரு தின்பண்டத்தின் விலையையும் நிர்ணயித்தல், மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பண்டகசாலையில் குறை நிரப்பப்படுதல், சமயலறைக்கான ஆண்டு வரவுசெலவுத் திட்டம் தயாரித்தல் ஆகியவைகளெல்லாம் மீர்பகவாலின் பொறுப்புகளாகும். தனிப்பட்ட கால்நடை வெட்டும் இடங்கள் நகரத்திற்கு வெளிப்புறத்தில் ஆறுகளுக்கோ குளங்களுக்கோ அருகில் அமைக்கப்பட்டிருந்தன. பேரரச மாளிகைக்கான இறைச்சியை அந் நீரில் கழுவி மூடி முத்திரையிடப்பட்ட பைகளில் வைத்துச் சமயலறைக்கு அனுப்பினார்கள். பச்சைப் பசேலென்று இருக்கும் புதிய காய்கறிகளுக்காக

[1] Smith, 'Akbari', p. 359; W. Foster, 'Early Travels &c.,' p. 327.

வென்று காய்கறித் தோட்டம் ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. ஆனால், சில சிறப்புக் காய்கறிகளும், வாத்துகளும், நீர்க்கோழிகளும் ஒழுங்கான இடைவேளைகளில் காஷ்மீரத்திலிருந்து வருவிக்கப் பட்டன.[1] அக்பரின் ஆட்சிக் காலத்தில் இருபத்துநான்கு மணி நேரமும் சமயல்துறை வேலையில் ஈடுபட்டிருந்திருக்க வேண்டும்; ஏனெனில், பேரரசர் ஒரு வேளைக்குமட்டும் உணவு அருந்தினாலும், அதைக் குறிப்பிட்ட ஒரு வேளையில் அருந்துவதில்லை; உணவு அருந்தத் தாம் முடிவு செய்த பிறகு ஒரு மணிக்குள்ளாகக் குறைந் தது நூறுவிதமான உணவுகளைச் சமையல் செய்யவேண்டும் என்று அவர் எதிர்பார்த்தார்.

அப்தர்கானா (Abdar Khana) அல்லது குடிநீர் வழங்கும் துறை கங்கையிலிருந்து குடிநீர் வழங்குவதற்கும், யமுனை, சீனாப் நதிகளி லிருந்து சமையலுக்காக நீர் வழங்குவதற்கும் பொறுப்பேற்றிருந்தது. வெடியுப்புமூலமாக அதை வடிகட்டிக் குளிரவைத்தனர். கோடைக் காலத்தில் எல்லாத் தர மக்களும் பனிக்கட்டியைப் பயன்படுத்தினர்; லாகூரிலிருந்து தொண்ணூறு மைல் தூரத்தில் உள்ள பன்ஹான் (Panhan) என்ற இடத்திலிருந்து நாள்தோறும் சுமைக் கூலிக் காரர்கள் பனிக்கட்டியைக்கொண்டுவந்தனர்; தவிர, குதிரை வண்டி களிலும் படகுகளிலும் அதைக் கொண்டுவந்தனர். தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப ஒவ்வொரு படகிலும் ஆறு சேர் முதல் பத்து சேர்வரை பனிக்கட்டி (ice) பத்துப் படகுகளில் அன்றுடம் தலைநக ருக்குத் தவருமல் கொண்டுவரப்பட்டது. தலைநகரத்துக் கடைகளில் அதனுடைய விலை ரூபாய்க்கு இரண்டு அல்லது மூன்று சேராக இருந்தது. பழத்துறை அதிக விலை கொடுத்துக் காபூல், காஷ்மீரத்திலிருந்தும், படக்ஷானிலிருந்தும், சாமர்கண்டிலிருந்தும்கூடப் பழங்களை இறக்குமதி செய்தது. கொட்டில்களில் மனிதர்களும் பிராணிகளும் நிறைந்திருந்தனர். ஜஹாங்கீரிடத்தில் *12,000* யானைகளும் *12,000* குதிரைகளும் இருந்தன என்று வில்லியம் ஹாகின்ஸ் (William Hawkins, *1608-13*) சொல்கிறார்.[2] ஜஹாங்கீருடைய தந்தையின் காலத்திலும் கொட் டில்களில் இருந்த பிராணிகளின் எண்ணிக்கை சற்றேறக்குறைய அதேபோன்றிருந்தது. சாதாரணமாக ஒவ்வொரு யானைக்கும் நான்கு பணியாள்கள் இருந்தனர்; ஆனால், பேரரசரின் சொந்தப் பயனீட்டுக்கான ஒவ்வொரு யானைக்கும் ஏழு பணியாள்கள் இருந் தனர். முகலாயப் பேரரசின் பல்வேறு பகுதிகளில் குதிரைகள் வளர்க்கப்பட்டுவந்ததனால் உள்ளூரில் வளர்க்கப்பட்ட குதிரைகள்

[1] 'Ain-i Akbari', vol. i, Ain, 26 &c.
[2] W. Foster, 'Early Travels,' p. 104.

பல கொட்டில்களில் இருந்தன. கட்ச்சிலிருந்து (Cutch) வந்தவை சிறப்பு வாய்ந்தவை என்று கருதப்பட்டது ; ஆனாலும், பல குதிரைகள் துரானிலிருந்தும் (Turan) ஈரானிலிருந்தும் (Iran) இறக்குமதி செய்யப்பட்டன. கொட்டில் துறையின் முழு நிர்வாகமும் அத்பேகி (atbegi) என்ற உயர் அதிகாரியின் பொறுப்பிலிருந்தது. ஒவ்வொரு கொட்டிலிலும் அவருக்கு உதவியாக ஒரு தரோகா, முஷ்ரிப்புகள் (mushrifs) அல்லது கணக்கர்கள், ஆய்வாளர்கள், குதிரைக் கலனை, ஆடை, மணி, அணி ஆகியவற்றைப் பூட்டும் பொறுப்பை ஏற்றிருந்த அக்தசீக்கள் (akhtachis), சபுக்சோவார்கள் (chabuk-sowars) ஆகியவர்களும், குதிரைக்காரர்கள் பலரும் இருந்தனர். அவர்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட சம்பளத்தைத் தவிர, அத்பெகியும் அவருடைய பணியாள்களும் ஒரு குதிரை பரிசாக வழங்கப்பட்ட போதெல்லாம் ஆதாயம் பெற்றனர் ; ஏனெனில், பரிசாக வழங்கப்படும் குதிரையின் விலை அதனுடைய உண்மை விலையைவிட ஐம்பது சதவிகிதம் அதிகமாகக் கணக்கிடப்பட்டது. அதைப் பெறுபவர் பரிசுக்காகத் தமது நன்றியைத் தெரிவிக்கும் வகையில் விலையாகக் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு மொகருக்கும் பத்து தாம்களைக் கொடுக்கவேண்டியிருந்தது. பிறகு அத் தொகையைக் குறிப்பிட்ட விகிதங்களில் அத்பெகிகள் பங்கிட்டுக்கொண்டனர். பேரரசரின் ஒட்டகங்களின் ஆடம்பரமான பரிவாரப் பொறுப்பினைப் பளுவான பீரங்கிப்படைத்துறை அல்லது போக்குவரத்துத்துறை ஏற்றிருந்தது. இவ்வொட்டகங்கள் குஜராத்தில் வளர்க்கப்பட்டவைகள் ; அவற்றின் மதிப்பு மிக உயர்ந்திருந்தது ; அஜ்மீரிலிருந்து ஓட்டப் பந்தய ஒட்டகங்கள் வந்தன ; சுமை தாங்கிச் செல்லவும் ஒட்டகங்களில் மிகச் சிறப்பானவை தட்டாவிலிருந்து (Tatta) (சிந்து) கொண்டுவரப்பட்டவையாகும். கோவேறு கழுதைகளின் பொறுப்பையும் அத் துறை ஏற்றிருந்தது. அவற்றில் ஒருசில காஷ்மீருக்கும் அட்டாக்குக்கும் (Attock) இடையிலிருந்த பகுதியில் வளர்க்கப்பட்டவை ; மற்றும் சில ஈராக்கிலிருந்து (Irak) இறக்குமதி செய்யப்பட்டவை ; கடைசியில் எருதுகளின் பொறுப்பையும் அத் துறை மேற்கொண்டிருந்தது. ஏராளமான எருதுகள் அப்பரின் கனத்த பீரங்கிகளை இழுக்கவோ, பேரரசப் பாசறைக்குத் தேவைப்பட்ட பொருள்களை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டுபோகவோ தேவைப்பட்டன. பேரரசக் கொட்டிலில் யானைகளையும், குதிரைகளையும், ஒட்டகங்களையும், எருதுகளையும் தவிர, ஏராளமான மான்கள், நாய்கள், எருமைகள், பழக்கப்பட்ட சிங்கங்கள், வேட்டையாடும் வேங்கைகள் அல்லது சீட்டாக்கள், பருந்துகள், புறுக்கள், பாடும் பறவைகள் ஆகியவை எல்லாமும் இருந்தன. 'தமது இல்லத்திற்காகவும், தமது குதிரைகள், ஒட்டகங்கள், ஒற்றைத் திமில் ஒட்டகங்கள், வாகனங்கள், யானைகள்

ஆகியவற்றிற்காகவும் அரசர் (ஜஹாங்கீர்) ஏராளமான பணத்தைச் செலவழிக்கிறார். ஆண்டில் ஒவ்வொரு நாளும் அவர் அவ் விலங்குகளின் இறைச்சிக்காக 70,000 ரூபாய், அதாவது, 35,000 (எட்டுக்கொண்ட) ரியால்கள் செலவழிக்கிறார் என்று என் முன்னிலையில் கப்பல் தலைவர் ஹாகின்ஸுக்கு அரசனின் விலங்கு வாணிகர் நம்பும்படியான வகையில் கூறினார்' என்று ஜெளர்டன் (Jourdain) கூறுவதில் நாம் வியப்புறவேண்டியதில்லை.[1]

பேரரச அந்தப்புரத்தில் 5,000 பெண்கள் இருந்தனர். ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒரு தனி அறை இருந்தது. அவர்களைக் கட்டுப்படுத்துவதற்காக அவர்கள் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தனர்; ஒவ்வொரு பகுதியும் ஒரு பெண் தரோகா அல்லது தலைவியின்கீழ் அமைக்கப்பட்டிருந்தது. இந்தத் தரோகாக்கள் தத்தமது பிரிவிலுள்ள பெண்களை நிர்வகிப்பதற்கும், அவர்களிடையே ஒழுங்கு நிலைபெறச் செய்வதற்கும் பொறுப்பு வாய்ந்தவர்களாவார்கள். 1,000 ரூபாய் முதல் 1,600 ரூபாய்வரை அப் பெண்களுக்கு மாதச் சம்பளம் தரப்பட்டது. இந்தச் சம்பளத் தொகையும், பணியாள்கள், பாதுகாவலர் முதலியோரின் சம்பளத்தையும், அன்றடச் செலவுகளையும், பல்வகைப்பட்ட செலவுகளையும் கூட்டினால் பெருந்தொகையாகிவிட்டதால், அந்தப்புரத்திற்கான செலவு ஏராளமாக இருந்தது. அத் தொகை ஜஹாங்கீரின் காலத்தில் நாள்தோறும் 30,000 ரூபாய்க்கு இருந்தது என்று ஹாகின்ஸ் கணக்கிடுகிறார்.[2] எழுத்தர்கள், பணப்பொறுப்பாளர்கள், தலைமைப் பணப்பொறுப்பாளர்கள் ஆகியவர்கள் அடங்கிய தனிப்பட்ட பணியாளர் குழு ஒன்று கணக்கு எழுதுவதற்கும் செலவைச் சரிபார்ப்பதற்கும் நியமிக்கப்பட்டிருந்தது.[3] இந்தத் தலைமைப் பணப்பொறுப்பாளர் பேரரசரின் தலைமைக் கருவூலருடன் நேர்முகமாகக் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண்டிருந்தார். ஆயுதம் தாங்கிய பெண்காவலர் படை ஒன்று அந்தப்புரத்தின் உட்புறத்தைக் காத்துவந்தது; வெளிப்புறத்தைப் பேடிகள் காத்துவந்தனர். அவர்களுக்கும் அப்பால் இராசபுதனப் படைவீரர்கள் நிறுத்தப்பட்டிருந்தனர். பாதுகாப்பை முற்றும் உறுதிப்படுத்த இன்னும் சற்றுதூரத்தில் மற்றப் படைவீரர்கள் நிறுத்தப்பட்டிருந்தனர். பேரரசஅந்தப்புரம் அதனின் பெண்பணியாள்கள், சுமைதூக்குபவர்கள், பெண்காவலர்கள், பேடிகள், இராணுவப் படைக்காவலர்கள் ஆகியவையெல்லாம் ஏறத்தாழ ஒரு தனிப் பட்டணமாகவே அமைந்திருந்தது.

[1] 'Ain-i-Akbari,' vol. i ; Foster, 'Early Travels,' p. 104.
[2] W. Foster, 'Early Travels,' p, 104.
[3] 'Ain-i-Akbari,' vol. i.

பேரரசர் அணிவகுத்துச் செல்லும்பொழுதோ, வேட்டையாடப் போகும்பொழுதோ செலவைப் பொருட்படுத்தாது அவருடைய பாசறை அதே ஆடம்பரத்தில் அமைத்து நடத்தப்பட்டுவந்தது. பேரரச அந்தப்புரம், அரசவை மண்டபம், இசையாளரின் படியரங்கம் (naqqarah khana) ஆகியவையெல்லாம் 1,530 கெஜ நீளமுள்ள ஒரு நிலப்பரப்பில் அமைக்கப்பட்டிருந்தன; அந் நிலத்தின் இருபுறங்களிலும் அதற்குப் பின்னாலும் 360 கெஜ அளவில் இருந்த திறந்தவெளியில் பேரரசக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்காகக் கூடாரங்கள் அமைக்கப்பட்டன. இந்த வளவுக்குள் காவலர்களைத் தவிர மற்றெவரும் புகமுடியாது. அவர்களுடைய கூடாரங்களுக்குச் சற்றுத் தொலைவில் அலுவலகங்களும் வேலைச்சாலைகளும் அமைக்கப்பட்டன. அவைகளுக்கும் பின்னால் பாசறையின் நான்கு மூலைகளிலும் கடைகள் இருந்தன. இவையெல்லாம் சேர்ந்து மாபெரும் வளைவாக அமைந்திருந்தது; அவ் வெல்லைக்கப்பால் பிரபுக்களின் கூடாரங்கள் அவரவர்களுடைய பதவித் தரத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்டன.[1] 'அவர் அணிவகுத்துச் செல்லும்பொழுதோ, வேட்டைக்குச் செல்லும்பொழுதோ அவருடைய கூடாரங்களின் பரப்பளவு லண்டனின் பரப்பளவைப் போன்றிருக்கும் அல்லது அதற்கு மேற்பட்டுமிருக்கும். அவரைப் பின்தொடர்ந்து செல்லும் பலவகைப்பட்டவர்களின் எண்ணிக்கை இரண்டு லட்சமாக இருக்கும் என்று நான் கூறுவேன்; ஏனெனில், ஒரு நகருக்குத் தேவைப்பட்ட பொருள்களெல்லாம் அவருடன் சென்றன' என்று ஜஹாங்கீரின் பாசறையின் பரப்பளவைக் கண்டு வியப்புற்ற ஹாகின்ஸ் கூறுகிறார்.[2] அவருடைய சான்றினை அபுல் ஃபாசல் உறுதிப்படுத்துகிறார். 'ஒவ்வொரு பாசறைக்கும் அதன் முழுமைக்குமான போக்குவரத்துக்காக 100 யானைகளும், 500 ஒட்டகங்களும், 400 வண்டிகளும், 100 சுமை தாங்குபவர்களும் வேண்டியிருந்தன; பலவகைப்பட்ட பல்லாயிரக் கணக்கான வேலையாள்கள் பயன்படுத்தப்பட்டனர்; பாரசீக, இந்தியவாசிகளான ஃபெரஷர்கள் (farashes), வழிகாண்மார்கள், தண்ணீர் கொண்டுபோகிறவர்கள், தச்சர்கள், கூடாரம் அமைப்பவர்கள், விளக்குப் பிடிப்பவர்கள், சக்கிலிகள், பெருக்குகிறவர்கள் ஆகியவர்களெல்லாம் வேலையில் அமர்த்தப்பட்டனர். இவர்களைத் தவிர, இராணுவப் பாதுகாவலர்களும், ஆயுதம் தாங்கிய பெண்களும் (உருது பேகிர்கள்-urdu begis), ஏராளமான வேலைக்காரிகளும் இருந்தனர்' என்று அவர் குறிப்பிடுகிறார். அதிலிருந்து பேரரசப் பாசறையின் பரப்பளவைப்பற்றி யூகித்துக்கொள்ளலாம். பரஷ்

[1] 'Ain-i-Akbari,' vol. i, p. 47.
[2] W. Foster 'Early Travels,' p. 106.

கானுவில் பத்தாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் வேலை செய்தனர் என்றும், அதை இயந்திரங்களின் உதவியால் அமைப்பதற்கு 1,000 ஃபரஷர்கள் ஒரு வாரகாலம் யந்திரங்களின் துணைகொண்டு அதை எடுத்தனர் என்றும் அபுல்ஃபாசல் கூறுவதிலிருந்து எவ்வளவு குற்றேவலர்கள் வேலையில் அமர்த்தப்பட்டிருந்தனர் என்பது ஓரளவு புலனாகும்.[1] 1633இல் ஷாஜஹானின் பாசறை காஷ்மீர்ப் பள்ளத்தாக்கை நோக்கி நகர்ந்து சென்றுகொண்டிருக்கும் பொழுது அது அளித்த காட்சி மிகச் சிறப்பாக இருந்திருக்க வேண்டும். 'கான்வஸ் (canvas) துணியால் ஆன ஒரு நகரம். 100,000 குதிரை வீரர்கள், 50,000 காலாட்படையினர், அதே போன்ற எண்ணிக்கையுள்ள வேலையாள்கள், அடிமைகள், அலிகள், இராணிகள், இளவரசிகள், அவர்களுடைய தோழிகள் கொண்ட முழுப் பட்டாளம் எல்லாம் நகர்ந்துகொண்டிருந்தனர். கணவாய்களிலிருந்து பனியை யானைகள் முகர்ந்தன; இரவில் தலைவரது சிவப்புக் கூடாரத்தின் முன்னால் பிரம்மாண்டமான விளக்கு ஒன்று அரசனது விருப்பத்தைச் சைகையால் காட்டியது. முழங்கிக்கொண்டிருந்த கூட்டம் அச் சைகையால் நகர்ந்தது; அரசனின் விருப்பமே அக் கூட்டத்தின் மையமாகும். அவர்கள் ஆங்காங்கே நின்று சென்றனர். இரண்டு பாசறைகள் இருந்தன. ஒரு கூட்டம் வந்து சேர்ந்தவுடன் பாசறை எப்போதும் அமைக்கப் பட்டது. வழியில் அவர்கள் காட்டுப் பன்றி, புலி ஆகியவற்றையும் சிங்கத்தையும்கூட வேட்டையாடினர். அப்பொழுது இந்துஸ்தானத்தில் சிங்கங்கள் இருந்தன. அவற்றையெல்லாம் அவர்கள் வலைகளின் உதவியாலோ, விலங்குகளைத் துரத்தும் வேலைக்காரர்களின் உதவிகொண்டோ, ஒரு கழுதையை அபினி கொடுத்து மயங்கவைத்து அதைத் தூண்டிலாகப் பயன்படுத்தியோ வேட்டையாடினர்.[2]

பேரரசரின் அன்றாட வேலை : மேலும் குறிக்கப்படவேண்டியிருக்கும் முகலாயப் பேரரச அவையின் ஆடம்பர வாழ்க்கையின் வருணிப்பு, பேரரசின் நிர்வாகம் பெரும்பாலும் பேரரசரின் உறுதியையும் தகுதியையும் ஒட்டியே இருந்தது என்பதையும், ஆகையினால், அக்பரும் அவருக்குப் பிறகு அடுத்தடுத்துப் பதவியேற்ற மூன்று அரசர்களும் மிகக் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது என்பதையும் நாம் மறந்து விடும்படி செய்துவிடக்கூடாது. 'மாபெரும் முகலாயர்களின் பேரரசைப் போன்ற ஒரு பேரரசு அதனின் உச்ச நிலையில் உயிரற்ற

[1] 'Ain-i-Akbari,' vol. i.

[2] Vicomte D 'Humeres, 'Through Isle and Empire', p. 212.

இயந்திரமாக இருந்திருக்க முடியாது. சோம்பேறிகள் மட்டும் அரசர்களாகவும், ஆலோசனைச் சபையினராகவும், படைத்தலைவர்களாகவும் பதவியேற்றிருப்பார்களாயின், நிர்வாகம், கலைகள், செல்வம் ஆகியவையெல்லாம் உண்மையில் அவைகள் அக்காலத்தில் வளர்ச்சி கண்டதுபோலக் கண்டிருக்க முடியாது' என்று தற்கால வரலாற்றாசிரியர் ஒருவர் சரியாகவே கூறியுள்ளார்.[1] 'பாபரால் நிறுவப்பட்ட பேரரசின் பிந்திய வரலாறு அவ்வாசிரியரின் கூற்றை உறுதிப்படுத்துகிறது; ஏனெனில், பேரரச வமிசம் சீர்குலைந்ததற்குப் பிறகு கற்பனைத் தோற்றங்களாக இருந்த அரசர்கள் ஒருவர்பின் ஒருவராகத் தோன்றியபொழுது, சர்வாதிகாரியின் தனிப்பட்ட ஆற்றலை நம்பியிருந்த கட்டமைப்புத் தவிர்க்க முடியாதவாறு சீர்குலைவுற்றது. தைமூரிடமிருந்து அக்பர் மரபுரிமையாகப் பெற்ற படையெடுப்புக்கான பேராவல், ஒழுங்குற அமைப்பதற்கான அறிவு ஆகியவற்றிற்கும், 1803இல் லேக் பிரபுவை (Lord Lake) வரவேற்கச் சிறிய, கிழிந்த விதானத்தில் வீற்றிருந்த, இரங்கத்தக்க, வயதடைந்த, குருட்டு ஷா ஆலமின் பெயரளவான இறைமைக்குமிடையில் பெரும் பிளவு இருந்தது.

முகலாயப் பேரரசின் பொற்காலத்துப் பேரரசர்களின் அன்றாடச் செயல்முறைகளைப்பற்றி விரிவான குறிப்புகளைச் சமகாலத்திய ஆசிரியர்கள் நல்ல வேளையாக விட்டுச் சென்றுள்ளனர். சூரியோதயத்திற்குச் சற்றுப் பிறகு தமது எல்லாத் தரக் குடிமக்களுக்கும் காட்சியளிக்கும் பழக்கத்தை அக்பர் மேற்கொண்டிருந்தார். எவரால் அவர்களுக்கு பாக்கியம் ஏற்படுமோ அல்லது தீமை விளையுமோ அவரைத் தரிசிக்க அல்லது காண அம் மக்கள் துடிதுடித்துக் கொண்டிருந்தனர். அங்கிருந்து அவர் திரும்புவதற்குள் எல்லா வேலைகளையும் செய்து முடித்துவிடுவார். அன்றைய தினத்தின் முதல் சுற்றுக்காவலுக்குப் பிறகு அவர் இரண்டாம் முறை பொது மக்களுக்குச் சம்பிரதாயப்படி காட்சியளித்தார். சிற்சில சமயங்களில் சற்று நேரம் கழிந்து காட்சியளித்தார். மதிப்புக்குரிய பிரமுகர்கள் மட்டுமே அப்பொழுது அவரைப் பார்க்க அனுமதிக்கப்பட்டனர். மற்ற வேளைகளிலும் அவர் அடிக்கடி அரசவை மண்டபத்திற்கு எதிரில் இருந்த ஜன்னலில் ஜரோகா (Jarokha) தோன்றி இரண்டு மணிநேரம் நின்றுகொண்டு விண்ணப்பங்களுக்குச் செவி கொடுத்துக் கேட்பார்; அறிக்கைகளைப் பெறுவார்; வழக்குகளில் தீர்ப்புக் கூறுவார்; அல்லது வீரர்களும் விலங்குகளும் அணிவகுத்துச் செல்வதைப் பார்வையிடுவார். நின்றுகொண்டே வேலைகளைக் கவனிப்பதை அவர் அதிகமாக விரும்பினார். ஆனால், சில வேளை

[1] J.N. Sarkar 'Studies in Mughal India,' p. 2.

களில், ஆசியாவிலிருந்த பழக்கத்தைப்போல கால்மேல் கால் போட்டுக்கொண்டு தலையணையின்மீது உட்காருவார் அல்லது ஐரோப்பிய வழக்கப்படி உயர்ந்த அரியணையில் வீற்றிருப்பார். அவரவர்களுடைய பல்வேறு தரங்களுக்கேற்ப இளவரசர்களும் பெரிய பிரபுக்களும் அவருக்கு அருகில் வீற்றிருப்பர். ஒழுங்கான இடைவேளைகளுக்குப் பிறகு பணியாற்றுவதற்காக வந்துகொண்டிருந்த அதிகாரிகள் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தனர்; அல்லது தக்க மரியாதையுடன் ஆள்களை அறிமுகப்படுத்தினர்; உடனே உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டன. அவருடைய வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையையும் குறித்துக்கொள்வதற்காக எழுத்தர்கள் அருகே நின்றுகொண்டிருந்தனர்.[1]

அக்பரைவிட விரைவூக்கத்தைக் குறைவாகவும், சிந்தனை செய்கிற சிற்றின்பத் தோய்வான இயல்பினை அதிகமாகவும் பெற்றிருந்த ஜஹாங்கீர் தமது தந்தையின் பழக்கத்தையே பின்பற்றினார். டெர்ரியின் (1616-19) கூற்றின்படி, அவர் ஒரு நாளில் மூன்று முறை காட்சியளித்தார். முதலாவதாகச் சூரியோதயத்தின்போது கிழக்கிலிருந்த மதிலிடை வளைவு ஜன்னலில் காட்சியளித்தார்; அங்கே பலர் கூடி அவருக்கு வணக்கம் (சலாம்) செய்தனர்; ''பாத்ஷா சலாமத்', அதாவது, 'ஓ அரசரே நீர் நீடூழி வாழ்க!' என்று ஆர்ப்பரிப்பர். நண்பகலில் தமது யானைகள் சண்டையிடுவதையோ, பொழுதுபோக்கான மற்ற விளையாட்டுகளையோ பார்ப்பார். சூரிய அஸ்தமிப்புக்குச் சற்று முன்பு மேற்கிலிருக்கும் ஒரு ஜன்னலில் அவர் காட்சி அளிப்பார். சூரியன் அஸ்தமித்ததும் முரசொலியுடனும் ஊதுகுழல்களின் ஒலியுடனும் அவர் திரும்புவார். மக்களின் ஆர்ப்பரிப்புகள் ஏற்கெனவே இருந்த இரைச்சலை அதிகப்படுத்தின. இம் மூன்று வேளைகளில் ஏதாவது ஒரு வேளையில் வாதி ஒருவர் தமது விண்ணப்பத்தை அரசர் பார்க்கும்படி மேலே தூக்கவேண்டும்; அவருடைய விண்ணப்பம் ஆராயப்படும். ஏழு மணியிலிருந்து ஒன்பது மணிவரை அவர் தமது பிரபுக்களுடன் தனிமையில் இருப்பார்.''[2] நானூறு ஆள்களைக்கொண்ட மன்சப்தாரும் அரசவையின் பிரமுகருமான ஹாகின்ஸ் (1608-13) ஜஹாங்கீரின் அன்றாட வழக்கமான நிகழ்ச்சிகளைப்பற்றிப் பல விவரங்களைத் தருகிறார்.[3] பொதுவாக அந்த நிகழ்ச்சிகள் ஷாஜஹானின் அன்றாட,வழக்கமான நிகழ்ச்சிகளுடன் ஒத்திருந்தது.

[1] Smith, 'Akbar,' p. 383.
[2] W. Foster, 'Early Travels,' p. 326.
[3] Ibid., pp. 114 ff.

ஷாஜஹானுடைய அன்றாட நிகழ்ச்சிகள் காலை நான்கு மணியிலிருந்து தொடங்கின. அந்த நேரத்தில் தொழுகையும் வேதம் ஓதுவதும் முடிந்த பிறகு, 6-45 மணிக்கு அவர் ஜன்னலில் தமது குடிமக்களுக்குக் காட்சியளித்தார். அதற்குப் பிறகு யானைப் போட்டிகளையும் குதிரைப் படையின் சாரி விளையாட்டுகளையும் பார்த்தார்; 7-40 மணிக்கு திவானி ஆமில் (Diwan-i-Am) அவர் தமது பொது தர்பார் நடத்தினர். அதற்குப் பிறகு அவர் 9-30 மணிக்கு திவானி காஸ்ஸில் (Diwan-i-Khas) சிலரை மறைவடக்கமாகக் கண்டார். இந்த இரண்டு சபைகளிலும் நிர்வாக வேலைகளும் பொதுப் பிரச்சினைகளும் கவனிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து 11-40 மணி அளவில் ஷா புர்ஜ் (Shah Burj) அல்லது அரச கோபுரத்தில் அவர் அந்தரங்க விஷயங்களைப் பற்றியும் அரசியல் விஷயங்களைப் பற்றியும் மறைவடக்கமாகச் சிலருடன் கலந்தாலோசித்தார் நண்பகலிலிருந்து பிற்பகல் நான்கு மணி வரையில் பேரரசர் அந்தப்புரத்தில் காலங் கழித்தார்; நண்பகல் தொழுகைகளை முடித்து, உணவு அருந்தி, சற்று ஓய்வு பெற்று, எல்லாவகைப் பெண்களுக்கும் தானம் வழங்குவதை மேற்பார்வையிட்டார். பிற்பகல் நான்கு மணிக்கு மீண்டும் பொதுமக்களுக்குக் காட்சியளித்தார். இது மாலை 6-30 மணி வரை தொடர்ந்து நடைபெற்றது. அம் மணி அளவில் திவானி காஸ்ஸுக்குத் தலைமை வகித்து நிர்வாக விஷயங்களைக் கவனித்தார். இந்த வேலையின்பொழுது இசையும் நடனமும் வழக்கமாக நடைபெற்றன. அப்பொழுது ஏதாவது அவசர வேலை இருப்பின் அது செய்து முடிக்கப்பட்டது. பின்னர் இரவு எட்டு மணி அளவில் இரண்டாம் முறையாக ஷா புர்ஜ்ஜில் அந்தரங்க விஷயங்கள் விவாதிக்கப்பட்டதற்குப் பிறகு ஓய்வுபெற ஷாஜஹான் அந்தப்புரத்திற்குச் செல்வார். அங்கே உறங்கும் வரையில் இசையைக் கேட்டுக்கொண்டும், புத்தகங்களை மற்றவர்கள் உரக்கப் படிக்க அதைக் கேட்டுக்கொண்டும் அவர் காலத்தைக் கழித்தார்.[1]

வெளிப்படையாகக் கூடிய அரசவையிலும், தனிப்பட்டோருக்கு நடத்திய அரசவையிலும் பேரரசர் ஆற்றிய வேலையின் இயல்பைப் பற்றி ஏற்கெனவே முந்திய பத்திகளில் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளோம். பொதுவாகப் பேசுங்கால், கட்டுப்பாடற்ற சர்வாதிகாரி ஒருவர் இயல்பாகக் கவனிக்கவேண்டியவைகளையெல்லாம் அவர் கவனித்தார். பேரரசருடைய சொந்த விருப்பங்களின்படியும் கருத்துகளின்படியுமே பேரரச் நிர்வாகம் முழுவதும் நடத்தப்பட்டுவந்தது. ஆனாலும், அவ்விதமாகச் செய்து முடிக்கப்பட்ட செயல்களின் அள

1 J. N. Sarkar, 'Studies in Moghul India,' pp. 3 ff.

வும் தரமும் பேரரசர்களின் குணத்தையும் திறமையையும் பொறுத்து இன்றியமையாத வகைகளில் மாறுபட்டிருந்தன. ஜஹாங்கீரோ, ஷாஜஹானோ அக்பரைப்போலக் கடினமாக உழைத்திருக்கமாட்டார்கள். பேரரசின் நிர்வாக முறையை அக்பர் தமது சொந்தக் குழந்தையைப்போலவே கருதினார். இது நியாயமேயாகும். தவிர, ஜஹாங்கீர், ஷாஜஹானுடைய தீர்ப்புகளிலும் முடிவுகளிலும் அக்பருடையவைகளைப்போன்ற பரந்த மனப்பான்மையையும் ஒருசார் பற்ற இயல்பையும் காணமுடியாது. அவுரங்கசீப்பின் தரம் சற்றேறக் குறைய அக்பரின் தரத்தையொத்திருந்தது. குறிக்கோளை மிகத் தீவிரமாக நிறைவேற்றும் மனப்பான்மையை அவுரங்கசீப் பெற்றிருந்தார்; பொழுதுபோக்குகளில் தமது தந்தையைவிடக் குறைந்தே ஈடுபட்டிருந்தார். அரசவையின் வரலாற்றுசிரியரின் கூற்றின்படி, இருபத்துநான்கு மணி நேரத்தில் அவர் மூன்றே மணி நேரம் தூங்கினார். சுறுசுறுப்புற்றதும் எழுச்சியற்றதுமான வாழ்க்கையை அவர் நடத்தினார்.[1]

காலை 7-30 மணி அளவில் திவானி காஸ்ஸில் நீதி வழங்குவதுடன் தொடங்கி மாலை 7-40 மணி அளவில் அரசவை கலைக்கப்படும் வரையில் முடிவடைந்த அவருடைய சம்பிரதாயமான அன்றாட வேலைத்திட்டம் அவருக்கு முற்பட்டவர்களின் வேலைத் திட்டத்தைப் போலவே இருந்தது. ஆனாலும், அவர் வேலையில் கழித்த காலத்தில் பெரும்பகுதியை குர்ஆனாலும் மரபுகளினாலும் நிர்ணயிக்கப்பட்ட தொழுகைகளில் கழித்தார். இவ்விதமாக, மசூதியின் கோபுரத்திலிருந்து தொழுகைக்காக அழைக்கும் முஅஸ்ஸனின் குரலைக் கேட்டவுடன் தனிப்பட்டவர் கூடும் சபையில் மாலை நேர வேலை திடீரென்று நின்றுவிடும். தொழுகைக்கு அழைப்பவரின் அழைப்புக்கேற்பக் குறிக்கப்பட்ட பதில் தொழுகைகளை அவுரங்கசீப்பே ஓதுவார். அவரது ஆட்சியின் பதினொன்றும் ஆண்டிலிருந்து (1668) இசைக் கச்சேரிகளையும் நடனங்களையும் அவுரங்கசீப் நிறுத்திவிட்டார். அந் நிகழ்ச்சிகளெல்லாம் அவருக்கு முற்பட்டவர்களின் காலத்தில் திவானி காஸ்ஸில் மாலையில் நடந்த கூட்டங்களுக்கு உற்சாகமூட்டின.[2] மிகத் தீவிரமாகச் சந்தேகிக்கும் மனப்பான்மையினாலும், சூழ்ச்சி அரசக் கலையின் மிக முக்கியமான கருவியாகும் என்பதில் அளவு மீறிய நம்பிக்கை வைத்ததனாலும் அவருடைய நிர்வாகப் பணியின் தரம் குறைந்தது. எவரையுமே அவர் நம்பவில்லை. தன்னொழுக்கத்தில் கண்டிப்பானதும் தன்னலமும் சூழ்ச்சியுமுடையதானதுமான குணத்தை அவர் படைத்திருந்ததனால்

[1] Ibid., p. 71.

[2] J. N. Sarkar, 'Studies in Mughal India,' p. 70.

எம் மனிதனின்மீதும் பெண்ணின்மீதும் அவரால் அன்பு செலுத்த முடியவில்லை. ஆகையால், அவருடைய அதிகாரிகளும் பணியாள் களும் சிறந்த முறையில் அவருக்குப் பணியாற்றவில்லை.' தமது இராச்சியத்தை ஆட்சிபுரியும் வேலையில் அவர் இடைவிடாமல் முனைந்திருந்தபோதிலும், நிர்வாகத்தின்மீது அவர் உறுதியான பிடியைப் பெற முடியவில்லை. அதுபோன்ற பிடியை அக்பர் பெற் றிருந்ததனால்தான் அவருடைய நிர்வாகம் அவ்வளவு சிறப்பு மிக்க தாகவும் பல வழிகளில் பயனுள்ளதாகவும் இருந்தது. மனித இயல் பின் குறைபாடுகளை அவுரங்கசீப் இன்னும் சிறிது புரிந்துகொண் டிருந்திருப்பாராயின், இந்திய வாழ்க்கையின் இன்பகர அம்சங் களில் இன்னும் சற்று அனுதாபம் காட்டியிருப்பாராயின், ஒரு கவர்ச்சிமிக்க மனிதராகவும், அதன் காரணமாக இன்னும் பெரிய அரசராகவும் அவர் ஆகியிருக்கக்கூடும்; மரணப் படுக் கையில் இருக்கும்பொழுது அவருடைய இறுதிச் செய்தி துயர் தோய்ந்ததாக இருக்கும்படி செய்த வார்த்தைகளை அவர் சொல்லி யிருக்கவும் மாட்டார். அவ் வார்த்தைகள் வருத்தத்தையும் தெருட்சி யையும் வெளிப்படுத்துகின்றன; அவ் வார்த்தைகளாவன: 'என்னைப் பற்றியே நான் அறிந்துகொள்ளவில்லை; அல்லது நான் யார், என் னுடைய நோக்கம் என்ன என்பதையும் நான் புரிந்துகொள்ளவில்லை. என்னுடைய வாழ்நாள் வீணாயிற்று; நான் உதவியற்றும் மனமுடைந் தும் இருப்பதுபோலவே படையும் குழப்பத்தில் மூழ்கிக் கிடக்கிறது. நான் கடவுளை அணுக முடியவில்லை; என் மனத்தில் அமைதியும் இல்லை.'[1]

வாழ்க்கைத் தொழில்கள்: தற்கால அரசாங்கங்களின் கவ னத்தை ஈர்க்கும் மருத்துவ உதவி, ஆயத்துறை, வனங்களை அழியாமல் காத்தல், தொழில்நுட்பத் துறை போன்ற தனிப்பட்ட துறைகள் முற்றும் இல்லாமை முகலாய நிர்வாகத்தின் சிறப்பு அம்சமாகும். இந் நிலைமை தற்கால ஆய்வாளரைத் திகைப்புறச் செய்யும். இதுபோன்ற செயல்கள் நிர்வாகம் கவனிக்கத்தக்க செயல்களாகும் என்று கருதினாலும், இதுபோன்ற துறைகளை ஒழுங்காக அமைத்துச் சிப்பந்திகளை அமர்த்தி அவற்றை நடத்து வதற்காகத் தற்காலத்தில் இந்தியாவில் இருப்பதுபோன்ற கற்றறிந்த நடுத்தர வகுப்பு ஒன்று அப்பொழுது இல்லை. 'டெல்லியில் நடுத் தர வகுப்பினரே இல்லை. ஒரு மனிதன் மிக உயர்வகுப்பினைச் சேர்ந் திருக்க வேண்டும்; இல்லையெனில் மிகத் தாழ்வான வாழ்க்கையை நடத்த வேண்டும்' என்று பெர்னியர் குறிப்பிடுகிறார். அதாவது, பேரரச அவையை அண்டியோ, அதனைப் போலவே தங்களை

[1] Bilimoria, 'Letters of Aurangzeb.'

அமைத்துக்கொண்டிருந்த மாகாண கவர்னர்களின் அரசவையை அண்டியோதான் மற்ற வாழ்க்கைத் தொழில் வகுப்புகளைச் சார்ந்த வர்கள்—மருத்துவத் தொழிலை மேற்கொண்டிருந்தவர்கள், இலக்கியம், கலை, இசை ஆகியவற்றில் ஈடுபட்டிருந்தவர்கள்—போதிய வருவாயைப் பெற முடிந்தது. அவர்களுடைய சிறந்த கலைப் பொருள்களை விலை கொடுத்து வாங்கவோ, அவர்களுடைய தொழில் திறமையைப் பயன்படுத்தவோ பலரைக் கொண்ட நடுத்தர வகுப்பு எதுவும் இல்லை. ஆகையினால், மருத்துவர்கள், மற்றத் துறைகளில் தேர்ச்சி பெற்றவர்கள் ஆகியவர்களின் எண்ணிக்கை முகலாயப் பேரரசில் அதிகமாக இருக்கவில்லை. தவிர, போதுமான வருமானத்திற்கு இன்றியமையாததாக இருந்த பேரரசின் ஆதரவு பாரசீகத்திலிருந்தும் ஆசியாவின் மற்றப் பகுதிகளிலிருந்தும் வந்தவர்களுக்கே பெரும்பாலும் கிடைத்ததனால், இந்தியர்களுக்கு வாய்ப்பு இன்னும் குறைந்திருந்தது. அக்பரின் அரசவையிலிருந்த கவிஞர்களில் முக்கால்வாசிப் பேரும் மருத்துவர்களிலும் இசைவல்லார்களிலும் மூன்றில் ஒரு பங்குக்கு மேற்பட்டவர்களும் அயல் நாட்டினராவர் என்றும், அவர்களுடைய முழுவருமானம் அவர்கள் நல்வசமாகப் பேரரசரிடமிருந்து பெற்ற மன்சப்புகளிலிருந்தோ, ஜாகீர்களிலிருந்தோ, அல்லது ரொக்கப் பணவுதவியிலிருந்தோ பெறப்பட்டதாகும் என்றும் ப்ளாச்மன் (Blochmann) கணக்கிட்டிருக்கிறார். பேரரச அவையில் தங்களது வாழ்க்கைத் தொழிலுக்குக் காப்புறுதி இல்லை என்பதை அத் தொழில்களை மேற்கொண்டிருந்தவர்களில் பலர் அனுபவத்திலிருந்து தெரிந்துகொண்டனர். அரசரின் ஆதரவு எவ்வளவு திடீரென்று தரப்படுகிறதோ அவ்வளவு திடீரென்று நிறுத்திவிடப்படும். பணவுதவியையோ ஜாகீர்களையோ அளிக்கும் பொறுப்பு, நம்பத்தகாததும் லஞ்ச ஊழலில் சிக்கிக் கிடந்ததுமான சதர் (Sadr) என்ற துறையின் பொறுப்பில் இருந்தது. வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரிப்பவர்களின் கவனம் செலவை எங்ஙனம் குறைப்பது என்ற பிரச்சினையில் செல்லும்பொழுது இந்த அன்பளிப்புகளும் உதவிப் பணமும் பெரும்பாலும் ரத்து செய்யப்பட்டன; அல்லது மதிப்பில் குறைக்கப்பட்டன. மருத்துவர், இலக்கிய வல்லுநர், கலைஞர் ஆகியவர்களின் பணிகளை ஏற்றுக்கொள்ள அரசவையும் பேரரச பணித்துறையும் தவிர மற்றெவரும் இல்லை. பாமர மக்கள்—வியாபாரிகள், விவசாயிகள், தொழிலாளிகள், வேலையாள்கள், அடிமைகள்—அனைவரும் அவர்களைப் பயன்படுத்துவதற்குப் போதிய கல்வி அறிவையோ செல்வத்தையோ பெற்றிருக்கவில்லை. சில நகரங்களில் ஒரு ஹகீமோ வைத்தியரோ நிலையற்ற ஊதியத்தைப் பெற்றிருக்கக்கூடும்; ஆனால், சாதாரண மக்களில் பலர் தங்கள் வியாதிகளைப் போக்கப் பச்சிலை மருந்துகளையோ மந்திரத்தையோ நம்பியிருந்தனர்.

வனங்கள் : இப்போதைவிட முகலாயர் காலத்தில் வனத்தின் பரப்பளவு அதிகமாகவே இருந்தது. ஜானிபுரியிலிருந்து அலகாபாத்திற்குச் செல்லும் சாலை தொடர்ந்திருந்த காட்டின் வழியாகச் சென்றது என்று ஐரோப்பியப் பயணியான ஃபின்ச் கூறுகிறார். தற்போது மிக்க ஜனத்தொகை கொண்டிருக்கும் ஆஸம்கர் (Azamgarh) மாவட்டம் இருக்கும் இடத்தில் கொக்ரா (Goghra) நதியின் தெற்குக் கரை நெடுக இருந்த காடுகளைப்பற்றி அபுல் ஃபாஸல் வருணிக்கிறார். வட இந்தியாவில் மலையடிவாரத்திலுள்ள காடுகள் இப்போதைவிட முந்தி இன்னும் அதிகமாக ஐக்கிய மாகாணங்களிலும் பீஹாரிலும் பரந்திருந்தன என்றும், பரெய்லி (Bereilly), கோரக்பூர் (Gorakhpur), முஸஃப்பர்பூர்(Mujaffarpur)ஆகியவற்றின் வடக்கிலிருந்த ஒரு சில பகுதிகளே நிலையாகப் பயிரிடப்பட்டு வந்தன என்றும் மூர்லாண்டு சுட்டிக் காட்டுகிறார்.[1] மிகத் தொலைவாகவும் நெருங்க முடியாததாகவும் இருந்த வனங்களிலிருந்து முகலாயக் கருவூலத்திற்கு வருமானம் வரவில்லைபோலும். நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் அண்மையிலிருந்த வனங்கள், மரத் துண்டுகள், விறகு, இன்னும் சில சிறிய விளைபொருள்கள் ஆகியவற்றைச் சேகரிக்க அனுமதியளிப்பதற்குப் பதிலாகத் தல அதிகாரிகள் மக்களிடமிருந்து வசூலித்த தீர்வைகளை மட்டும் செலுத்திவந்தனர். பிந்திய நாள்களில் தக்காணத்தில் மரத்தை வெட்டுவதற்கான அனுமதியை மராட்டிய அரசாங்கம் விலைக்கு விற்று அதிலிருந்து கொஞ்சம் வருமானம் பெற்றது என நமக்குத் தெரிகிறது. ஆனாலும், பொதுவாக, வருமானத்திற்கன்றி விளைபொருள்களுக்காகவே வனங்களை அவ்வரசாங்கம் பாதுகாத்தது. இதற்கு மாறாகச் சான்று கிடைக்கவில்லையாதலால், முகலாய அரசாங்கத்தின் கொள்கையும் அதுபோன்றே இருந்தது என்றும், இப்பொழுது கொள்ளப்படும் கருத்தில் வனங்கள் அப்பொழுது ஒழுங்குபடுத்தப்படவில்லை என்றும் கருதலாம். ஆயினும், பதினாறும், பதினேழாம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்தில் நேர்த்தியான மரங்கள் பல முற்றும் அழிக்கப்பட்டன என்பதையும், இந்தியாவில் 1855ஆம் ஆண்டுவரையிலும் வனங்களை வளர்ப்பதற்கும் பாதுகாப்பதற்குமான விஞ்ஞான முன்னோக்குடைய கொள்கை கையாளப்படவில்லை என்பதையும் நினைவில் கொள்ளுங்கால், அக் காலத்தில் இந்தியாவில் விஞ்ஞான நிர்வாகம் அனுசரிக்கப்படவில்லையென்பது ஒரு பெருங் குறையாகக் கருதப்படமாட்டாது. தவிர, விரிவான வனச் சட்டங்களும் ஒழுங்கு முறைகளும் ஏற்பட்டிராத காரணத்தினால் அரசாங்கம் கணிசமான வருவாயை இழந்தது எனக் கொண்டாலும், இக் காலத்தைவிட அக் காலத்தில் நாட்டுப்புறவாசிகள் தங்களுடைய

[1] W. H. Moreland, 'India at the Death of Akbar,' p. 7.

சொந்த உபயோகத்துக்காக ஏராளமான வனப்பொருள்களைப் பெற முடிந்தது.

அடிமை முறை: முகலாய நிர்வாகத்தின் தொடர்பாக அடிமை முறை என்ற பொருளைப்பற்றி ஆராய்வதும் பொருத்தமான தாகும். கி.மு. நான்காம் நூற்றுண்டில் இந்தியாவில் அடிமைகள் இல்லை என்று மெகஸ்தனீஸ் (Megasthenes) கருதவேண்டி நேரிட்டாலும், உண்மையில் அதைப்பற்றி அவருக்குத் தவருன செய்தியே தெரிவிக்கப்பட்டிருந்தது. பழங்காலந்தொட்டே பல்வேறுவகைகளில் அடிமை முறை நாட்டின் பல பாகங்களில் நிலைத்திருந்தது என்பதற்குச் சான்றுகள் நிரம்ப உள்ளன. முகலாய வமிசத்திற்கு அடுத்து முற்பட்டவர்களைப் பொறுத்தவரை நமக்கு ஸியா உத்தீன் பரணியின் (Ziaudin Barani) சான்று கிடைத்துள்ளது. அச் சான்றின்படி 'ஃபிரோஸ் ஷா துக்ளக் அடிமைகளுக்காக வசதிகள் செய்து தருவதில் மிக்க கவனமாக நடந்துகொண்டார். அதனுல், போரில் கைப்பற்றப்பட்ட அடிமைகளில் சிறந்தவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை அரசவையின் பணிக்காக அனுப்பிவைக்குமாறு தமது நிலமானியர்களுக்கும் அதிகாரிகளுக்கும் அவர் உத்தரவு பிறப்பித்திருந்தார். நகரத்திலும் நில மானியங்கள் பலவற்றிலும் மொத்தத்தில் 180,000 அடிமைகள் இருந்தனர். அவர்களின் பேணுதலுக்காகவும் வசதிக்காகவும் சுல்தான் தனிப்பட்ட அக்கறை எடுத்துக்கொண்டார். அடிமை முறை இந்தியாவின் இதய பாகத்தில் வேரூன்றியிருந்தது. அதை முறையாக ஒழுங்குபடுத்துவது தமது கடமைகளில் ஒன்று என்று சுல்தான் கருதினுர்.'[1] உண்மை என்னவென்ருல், அடிமை முறையும் அடிமைகளைக் கைப்பற்றுவதும் இந்து சட்டங்களினுலும் முஸ்லிம் சட்டங்களினுலும் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. ஆகையினுல், முகலாயர்களின் காலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் பலவீனமுற்ற கிராமங்களை அவ்வப்பொழுது கொள்ளையடித்துக் கிராமவாசிகளைத் தூக்கிச் சென்று அடிமைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதும், குற்றவாளிகளையும் வாங்கிய கடனைத் திருப்பிக்கொடுக்க முடியாதவர்களையும் தண்டிக்கும் வகையில் அவர்களை அடிமைப்படுத்துவதும் இயல்பே என்றும் நியாயமானதென்றும் கருதப்பட்டது. அடிமைகளைத் திரட்டுவதற்காகக் கையாளப்பட்ட மூன்ருவது முறை என்னவென்ருல், வறுமைப்படும்பொழுதும் பஞ்ச காலத்திலும் பெற்ருேர் தங்கள் குழந்தைகளை விற்றுவிடுவதாகும். இந்த முறை அக்பரின் ஆட்சிக் காலத்திலும், அவருடைய இறப்புக்குப் பிறகு இருநூறு ஆண்டுக் காலம் வரையிலும் கையாளப்பட்டுவந்தது. ஆயினும், ஒரு

[1] Smith, 'Oxford History of India,' p. 249.

வகையில் அக்பர் இந்த வர்த்தகத்திற்குத் தடை விதிக்க முயன்றார். 'இந்தியாவில் படையெடுப்பின்பொழுது வெற்றிகொண்ட அரசப் படைகள் நாட்டில் வசிப்பவர்களை பலவந்தமாக விற்பதும், அவர்களுடைய மனைவிகளையும் குழந்தைகளையும் அவர்களை அடுத்திருப்பவர்களையும் அடிமைகளாக்குவதும் வழக்கமாகும். ஆனால், அரசப் படையைச் சேர்ந்த எந்தப் படைவீரனும் அதுபோன்ற செயல்களைப் புரிதல் கூடாது என்று சமய, மதியுள்ள, இரக்க உணர்ச்சிகளினால் ஊக்குவிக்கப்பட்ட மாட்சிமை பொருந்திய பேரரசர் இப்பொழுது ஆணை ஒன்றைப் பிறப்பித்துள்ளார்' என்று அபுல் ஃபாஸல் எழுதுகிறார்.[1] 'அடிமைத் தன்மையை ஒழிப்பதாகும்' என்று இவ் வாணையை அபுல்ஃபாஸல் வருணித்திருப்பது பொருத்தமற்றதாகும்; ஏனெனில், அக்பரின் ஆட்சிக் காலம் முழுவதிலும் அடிமை முறை அங்கீகரிக்கப்பட்ட வழக்கமாகவே தொடர்ந்து நிலைத்திருந்தது. அதற்கு மாறாக, மிக முனைப்பான விரும்பத்தகாத விளைவுகளை உண்டாக்கிக்கொண்டிருந்த ஓர் ஏற்பாட்டைத் தமது படைவீரர்கள் பின்பற்றக்கூடாது என்று பேரரசர் மிக்க கூரறிவுடன் தடைவிதித்தார்.

இத் தடை அவருக்குப் பிறகு வந்தவர்களுடைய ஆட்சிக் காலத்தில் பின்பற்றப்பட்டதா என்பது ஐயத்துக்குரியதாகும். ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்தில் மிகப் பிரியமாக ஆடப்பட்ட கமர்கா (kamargha) என்ற விளையாட்டைப்பற்றி ஃபின்ச் கூறுவதை நாம் நம்புவதாயிருந்தால், வனங்களில் வசித்துவந்த காட்டுச் சாதிகளும் இதர தாழ்ந்தோரும் காட்டு விலங்குகளுக்குச் சமமாகவே கருதப்பட்டனர். அவ் விளையாட்டாவது, பரந்த நிலப்பகுதி ஒன்றை இராணுவக் காவலர் வேலியைப் போல சூழ்ந்துகொண்டு மையமான இடத்தை நோக்கிப் படிப்படியாக நெருங்கிக்கொண்டேயிருக்க, வசதியான இடைவெளியில் ஏராளமான விலங்குகள் சிக்கிக்கொண்டன. இவ்விதமாக வேட்டையாடப்பட்ட விலங்குகள் கொல்லப்பட்டன அல்லது மற்ற எவ்வகையிலாவது தீர்வு செய்யப்பட்டன; ஆனால், காடுகளிலும் பாலைவனங்களிலும் வசித்துவந்த பரிதாபத்துக்குரிய, திருடும் குணமுள்ள ஏழை மக்கள் காபூலின் அங்காடிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டு அங்கே குதிரைகளுக்கும் நாய்களுக்குமாகப் பண்டமாற்றம் செய்யப்பட்டனர். இக் குறிப்பு ஒருவேளை திராவிட (Dravidian), கொலேரிய (Kolarian), காட்டுச் சாதிகளைக் குறிக்கலாம்—இவர்கள் சந்தளர் (Santal), காண்டர் (Gond), பில்லர் (Bhil), மினவர் (Mina) போன்றவர்கள் ஆவார்கள். இவர்களெல்லாம் முகலாயர்களின் காலத்தில் மனித வர்க்கத்திற்கப் பாற்பட்டவர்கள் என்று கருதப்பட்டனர்; தவிர, மராட்டியர்களின்

[1] 'Akbar Nama,' Vol, ii.

ஆட்சியின்பொழுது எவ்வித இரக்கமுமின்றி இவர்கள் கைப்பற்றப் பட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். ஜனங்களைக் கடத்திச் செல்லுதல் முகலாய நிர்வாகத்தின் கீழ், குறிப்பாக வங்காளத்தில் நிலைத்திருந்தது. பல ஆசிரியர்களின் கூற்றின்படி வங்காளம் பல அலிகளைத் தந்தது.[1]

ஆனால், இந்தியாவிலிருந்துமட்டும் அடிமைகள் வரவில்லை; அயல்நாட்டு அடிமைகள் ஆஃப்ரிக்காவிலிருந்தும் (Africa) மேற்கு ஆசியாவிலிருந்தும்கூட இறக்குமதி செய்யப்பட்டனர். அவர்களுடைய விலை மிக உயர்ந்ததாக இருந்தது. அவர்கள் போகப் பொருள்களாகவே கருதப்பட்டனர்; குறிப்பாக அபிஸினியாவிலிருந்து வந்த அடிமைகள் அதிகமாகத் தேவைப்பட்டனர். மொஸாம்பிக்வாசிகள் (Mozambique) பலர் வழக்கமாகவே அடிமைகளாக விற்கப்பட்டனர்; தவிர, பாரசீகத்திலிருந்தும் இன்னும் தூரப் பிரதேசங்களிலிருந்தும் ஏராளமான அடிமைகள் கொண்டுவரப்பட்டனர். இவ்வகையில், முகலாய அரசாங்கம் அந்தக் காலத்துக் கிறித்தவ அரசாங்கங்களைவிட மோசமாக இருக்கவில்லை. இன்னுங் கேட்டால் சில கூறுகளில் அவைகளைவிட ஒருபடி இறங்கியே இருந்தது. அக்பரின் ஆட்சிக் காலத்தின் முடிவில் போர்ச்சுகீசியர்களின் அடிமை வியாபாரம் மிக மோசமாக இருந்ததனால், அடிமைகள் கொடூரமாக நடத்தப்படுவதைப் பற்றிய ஆணை ஒன்றைப் போர்ச்சுகீசிய அரசர் 1599-ல் பிறப்பித்தார். பெரும்பாலும் வங்காளத்தின் கரையோரத்திலிருந்த சுந்தர வனங்களிலும் (Sunderbunds) தீவுகளிலும் அவர்கள் அடிமைகளை வேட்டையாடினார்கள். இவ்விதமாகப் பதினேழாம் நூற்றாண்டில் வங்காளத்தின் ஜனத்தொகையை அநேகமாக அவர்கள் அழித்துவிட்டனர். 1629-ல் ஹூக்ளியிலிருந்த (Hugli) போர்ச்சுகீசியர்களை ஜஹாங்கீர் அடிமைகளாக்கி ஆக்ராவுக்கு அனுப்பிவைத்தார்; அவர்களை அவர் அவ்விதமாக நடத்தியது, தமது இந்தியக் குடிமக்களை அவர்கள் மிகக் கொடூரமாக நடத்தியதற்குத் தக்க பதில் தண்டனையாகும் என்றுதான் கருதவேண்டும். டச்சுக்காரர்களும் அதுபோலவே இருந்தனர்; ஆனால், அவர்கள் பெரும்பாலும் அபிஸீனிய அடிமைகளையே (ஹபஷீக்கள்) விற்பனை செய்துவந்தனர். அவர்களுடைய (ஹபஷீக்கள்) இனத்தார்தாம் மேற்குக் கடற்கரையோரத்திலிருக்கும் கன்னடத்திலுள்ள ஒருவகைக் கலப்புச் சாதியினர்.[2] போர்ச்சுகீசியர்களைப் போல முகலாயர்கள் அடிமைகளைக் கொடுமையாக நடத்தவில்லை என்பதை மறந்துவிடக்கூடாது.

[1] Account of Bengal in the 'Ain-i-Akbari,' Vol. ii.
[2] W. Crooke, 'Things Indian,' s. v. Slavery.

இஸ்லாம், அடிமைகளை இகழ்ச்சிக்குரியதான, துன்புறுத்துவதற்குரிய உடைமைகள் எனக் கருதாது குடும்பத்தையொட்டியிருப்பவர்களும் சிறப்பாக நடத்தப்படவேண்டியவர்களுமாவர் என்றும், செல்வந்த நிலைக்கும் பொறுப்பு ஏற்கும் நிலைக்கும் அவர்கள் உயர்ச்சி பெறக்கூடும் என்றும் கருதியது. குத்புத்தீன் ஐபெக் (Kutbud din Aibak), யல்துஸ் (Yalduz), குபாச்சா (Kubacha), இல்துத்மிஷ் (Iltutmish) ஆகியவர்களின் வாழ்க்கை வரலாறு, அடிமைகளாயினும் மாகாண கவர்னர்களின் பதவிக்கு வருவதற்கோ ஓர் ஆளும் வமிசத்தை உருவாக்குவதற்கோ அவர்கள் தகுதி பெற்றவர்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது.

நிலத்தையொட்டியிருந்த அடிமை முறை: வீட்டில் வேலை செய்யும் அடிமைகளை நிலத்தையொட்டியிருந்த அடிமைகளினின்றும் அல்லது விவசாய அடிமைகளினின்றும் வேறுபடுத்தவேண்டும். அவ்வகைப் பட்ட அடிமை முறை மாபெரும் முகலாய மன்னர்கள் காலத்தில் நாட்டுப்புறங்களில் காணப்பட்டது. கிராம அடிமை முறை மிகப் பழமை வாய்ந்த ஒரு வழக்கம் போலும். பதினாரும் நூற்றாண்டிற்கு முன் நீண்ட காலமாகவே அது இருந்துவந்தது. முகலாய காலத்தில் நிலவுடைமை பெற்றிராத தொழிலாளர்கள் பலரும் கீழ்த்தர வேலையாள்கள் பலரும் இருந்தனர். அதுதான் கிராம மக்களின் அமைப்பில் அக் காலத்திற்கும் இக் காலத்திற்குமிடையிலுள்ள முக்கிய வேறுபாடாகும். அந்தத் தொழிலாளர்களும் வேலையாள்களும் 'தங்களுடைய எஜமானர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமைகூடப்பெற்றிராதவர்கள். ஆனால், குடியானவனுக்கோ குடியானவர்களுக்கோ அவர்கள் வேலை செய்யவேண்டி இருந்தது. கிராம வழக்கம் அல்லது மரபின்படி அவர்கள் அக் குடியானவர்களுக்கு உரிமையாக்கப்பட்டிருந்தனர்.' முகலாயர் காலத்திய விவசாய அடிமையின் நிலை கவர்ச்சி மிக்கதாக இருந்திருக்கமுடியாது. சாதாரண காலங்களில் உயிர்பிழைத்திருப்பதற்காகமட்டும் போதுமானதாக இருந்த ஊதியத்தை அவன் பெற்றிருக்கக்கூடும். ஆனால், பஞ்சம், பற்றுக்குறை ஏற்பட்டபொழுது அவன் ஒன்று வீட்டுக்குள் பட்டினியாகக் கிடந்து சாகவேண்டியிருந்தது; இல்லையெனில் சாலையோரத்திலோ காட்டிலோ பட்டினியாகக் கிடந்து மடியவேண்டியிருந்தது; வேலை தேடுவதற்காகக் கிராமத்தைவிட்டு வெளியில் போக அவனுக்கு உரிமை இல்லை; கிராமத்தில் தேவைக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இருந்தால்தான் அவனுடைய எஜமானர்கள் அவனுக்கு வெளியில் செல்ல அனுமதி தந்தனர். அதற்கு மாறாக, அதிருஷ்டம் வாய்ந்த, கடினமாக உழைக்கக்கூடிய அடியாள் ஒருவன் அவ்வப்பொழுது சுதந்திரக் குடியானவனாக உயர்ச்சி பெற முடிந்தது. பிந்திய நாள்களில் அடிமைத் தொழி

லாளர்கள் அவ்வப்பொழுது நிலங்களைப் பெற்றிருந்தனர் என்பதற்குச் சான்று உள்ளது; மற்ற இடங்களில் அவர்களுக்குத் தேவை இல்லையெனில் அவர்கள் அந் நிலங்களைப் பயிரிடலாம். இதற்கு மாறுபட்ட நிலைக்குச் சான்று கிட்டவில்லையாதலால், முகலாயர் காலத்தில் அதுபோன்ற சலுகைகள் கொடுக்கப்பட்டன என்றும், சிக்கனத்தாலும் சிறந்த செயலாட்சியினலும் ஒரு தொழிலாளி நிலத்தை யொட்டிய அடிமைகளின் கூட்டத்திலிருந்து விட்டுநீங்குவதற்கான தகுதியைப் பெறும்வரை தனது நிலவுடைமைகளைப் படிப்படியாக அதிகப்படுத்திக்கொண்டே போகலாம் என்றும் கருதலாம். ஆனாலும், அக் காலத்திய சூழ்நிலைகளையெல்லாம் கருதுங்கால், அதுபோன்ற நிகழ்ச்சிகள் வெகு சிலவே கிடைக்கும். நிலமற்றிருந்த தொழிலாளர்கள் பலர் எந்த அடிமை நிலையில் வசித்துவந்தார்களோ அதே நிலையில் உயிர்துறந்தனர்; இப் பிறவியில் அவர்களுக்குக் கிட்டாத சுதந்திரத்திலும் சுகவாழ்விலும் ஒரு பகுதியே அடுத்த பிறவியில் அவர்களுக்குக் கிடைக்கக் கூடும் என்று நம்பிக்கொண்டே அவர்கள் இறந்துபோயிருக்கக்கூடும்.

நிர்வாகமுறையின் குறைபாடுகள்: மேற்குறிப்பிட்ட உண்மைகள், அக்பரால் உருவாக்கப்பட்ட தத்துவங்களையும் அநேக விவரங்களையும் அடிப்படையாகக்கொண்டிருந்த முகலாய நிர்வாகத்தில் இயல்பாகவேஅமைந்திருந்த குறிப்பிட்ட சில குறைகளும் காணப்பட்டன என்பதை விளக்குகின்றன; அக் குறைகள் இறுதியில் அதனைச் சீர்குலைத்தன. முதலாவதாக, அந் நிர்வாகம் உயிரியக்கவியலான வளர்ச்சியைப் பெற்றிருக்கவில்லை; தவிர, செயல்முறையில் அதனின் வெற்றிக்காக அது அரசனின் சொந்தத் தகுதியையும் செயலையும் நம்பியிருந்தது. பேரரசரின் திறமை அந் நிர்வாகத்தை உருவாக்கியவருடைய தரத்திற்குக் குறையாதவரையில் அது பெருமளவும் திறன் படைத்ததாக இருந்தது; மொத்தத்தில் பேரரசின் தேவைகளை நிறைவேற்றிவந்தது. ஆனால், முகலாய அரியணையில் வீற்றிருந்தவர்கள் சக்தியற்ற அரசர்களாகி, செயலாற்றலை இழந்து, இன்ப வாழ்க்கையில் மூழ்கிச் சீர்குலைவுற்றவுடன் அக் கட்டடம் விரைவில் அழிந்து வீழ்ச்சியுற்றது. இரண்டாவதாக, அம் முறை மக்கள் விருப்பத்தின் அடிப்படையிலும் தொன்றுதொட்டு வரும் மரபின் அடிப்படையிலும் அமைந்திருக்கவில்லை. கடந்த நூற்றுண்டுகளில் இந்து அரசர்கள் பின்பற்றிய கொள்கையையே அக்பர் பல துறைகளிலும் பின்பற்றியபோதிலும், பல இந்தியர்கள் அம் முறையை ஓர் அந்நிய முறையாகவே கருதியிருக்க வேண்டும். பொதுப்பணித் துறையைச் சார்ந்த உயர்தரப் பதவிகளுக்கெல்லாம் பாரசீகத்திலிருந்தும் இந்திய எல்லைக்கப்பால் உள்ள நாடுகளிலிருந்தும் வந்தவர்களே நியமிக்கப்பட்டிருந்ததால், முகலாய நிறு

வனங்கள் அந்நிய நிறுவனங்களேயாகும் என்று இந்துக்கள் கருதி யிருக்க வேண்டும். இயல்பாகவே மிகக் கூர்மையான முன்னோக் குடைய அக்பர் இந்த பலவீனத்தைக் கண்டுபிடித்து, அதைத் தவிர்ப்பதற்காக ஆற்றல் மிக்க இந்துக் குடும்பங்களின் ஆதரவைப் பெற முயன்றார்; அதில் வெற்றியும் கண்டார். ஆனால், ஷாஜஹான் கையாண்ட தவறான கொள்கையும் அவுரங்கசீப்பின் மதவெறியும் அக்பரின் திட்டத்தைப் பயனற்றதாக்கின. ஆகையினால் பொது மக்களின் ஆதரவுக்கு ஈடாக இருந்திருக்கக்கூடிய ஒரே ஓர் ஆதரவையும் அந் நிர்வாகம் இழக்க நேர்ந்தது. மூன்றாவதாக, அர சாங்கத்தின் கொள்கைகளைச் செயல்முறைப்படுத்த வேண்டியவர் களின் வாழ்க்கைத்தரம் மிக உயர்ந்தும் இன்பத்தில் மூழ்கியதாகவும் இருந்ததனால், அவர்கள் நேர்மையாகவும் லஞ்சம் வாங்காமலும் நடந்துகொள்ள முடியவில்லை. பொதுப்பணித் துறையில் சிக்கன மாகச் செலவு செய்வதற்கு ஊக்கமளிக்கப்படவில்லை; பேரரசர் இடை விடாமலும் முனைப்பாகவும் விதித்த கட்டுப்பாடுதான் முழு மொத்த மான லஞ்ச ஊழலைத் தடுத்தது. அக் கட்டுப்பாடு தளர்ச்சியுற்ற வுடன்—காலப்போக்கில் அவ்வாறு தளர்ச்சி உண்டாகத்தான் செய்யும்—பேரரச அதிகாரிகள் சுரண்டி வாழ்பவர்களும் கொடுமை இழைப்பவர்களுமாயினர்; தவிர, அளவு மீறிய தீர்வைகளை அவர் கள் வசூலித்ததனாலும் அவர்களது பொதுவான கொடுங்கோலாட்சி யினாலும் எங்கும் பற்றாக்குறை ஏற்பட்டது; இறுதியில் நிதி நிலைமை சீர்குலைவுற்றது. சிக்கனமாக நடத்தப்படாததும் இன்பத்தில் மூழ்கியிருந்ததுமான வாழ்க்கையின் தீய விளைவினைப் பேரரசப் படையின் வரலாற்றில் காணக்கூடும். சமகாலத்திய இந்திய இராச்சியங்களின் படைகளைவிட மிகச் சிறந்த படையொன்றை அக்பர் தமது அசாதாரண திறனாலும் இராணுவ ஆற்றலினாலும் உருவாக்க முடிந்தது. ஜஹாங்கீர், ஷாஜஹான் ஆகியவர்களின் ஆட்சிக் காலங்களில் அப் படை சற்றுச் சீர்குலைவு அடைந்தபோதி லும், அவுரங்கசீப்பின் ஆட்சியின் இடைக்காலம் வரை அது ஓரளவு திறனுள்ளதாகவே இருந்தது. ஆயினும் அக் காலத்திற்குப் பிறகு, பெற்றோர்களின் தவறான கட்டுப்பாட்டினால் செயலூக்க ஆற்றலை இழந்திருந்த பேரரச குடும்பத்தைச் சார்ந்த இளவரசர்களின் தகுதி யின்மையும், மட்டுமீறிய இன்ப வாழ்க்கையினால் பிரபுக்களும் தலைவர்களும் எய்தியிருந்த ஊக்கக் குறைவும் பேரரசின் படையின் திறனை அழித்துக் கடினமான, உறுதி வாய்ந்த மராட்டியர்களின் தாக்குதல்களுக்கெதிராகச் சக்தியற்றதாக்கின.

இக் குறைகள் இருந்தபோதிலும், அக்பருடைய நிர்வாகமுறை நூற்றி ஐம்பது ஆண்டுகளாக ஏறத்தாழ செட்டாகவே நடைபெற்று வந்தது. அக்பருக்கு அடுத்துப் பிறகு வந்த மூன்று அரசர்களும்

அவரவர்கள் பொறுத்தவரையில் சிறப்புத் திறன் பெற்றவர்களாக இருந்ததனுல்தான் அவ்விதம் அது நடைபெற்று வந்தது. அதே சமயத்தில், பேரரச அவையின் ஆடம்பரங்களைப்பற்றியும், நிகரற்ற நினைவுக் கட்டடங்களின்மீது செலவழிக்கப்பட்ட ஏராளமான தொகையைப்பற்றியும், பேரரசர்களின் விலை உயர்ந்த பொக்கிஷங்களைப்பற்றியும் படிக்குங்கால், தைமூரித்துகளின் ஒவ்வொரு தலைமுறையினரிடமும் மிகத் தீவிரமாக இருந்த படையெடுப்பு நடத்துவதற்கான ஆர்வமும் வாழ்வதற்கான உறுதியும் அக்பருடைய மரணத்திற்குப் பிறகு நலிவுறத் தொடங்கின என்பது தெரிய வரும்.

'முதாதையோரிடம் காணப்பட்ட போர் உணர்வை அவுரங்கசீப் வெளிப்படுத்தினுர். அவ் வுணர்ச்சியுடன் சமய வெறியும் கலந்து கொண்டது. ஆனுல், இப்பொழுது காலம் கடந்துவிட்டது. வீரர்களைப் பெற்றெடுத்த காலம் முடிவடைந்தது. ஷாஜஹானின் மகனுக்குப் பிறகு இந்த மாபெரும் வமிசம் வெறும் கற்பனைத் தோற்றங்களிலேயே நழுவிச்சென்றது'. தைமூர் காலந்தொட்டு வரும் முகலாயர்கள் விதியைப்பற்றியும் பரந்த பேரரசப் பகட்டைப் பற்றியும், உலகப் பொருள்களின் நிலையாமையைப்பற்றியும் மிக ஆழ்ந்த கருத்தினைக் கொண்டிருந்தார்கள் எனத் தெரிகிறது. இக் கருத்தைத் தைமூரினுல் சிறைபிடிக்கப்பட்ட பையஸித்துக்கு (Bayazid) அவர் அளித்த விடையிலும், ஃபதேபூர்சிக்ரியின் ஆடம்பரமிக்க வெற்றி நுழைவாயிலில் எழுதப்பட்டுள்ள அக்பரது செய்தியிலும் காணலாம். இவ் வமிசத்துத் தொடக்ககால அரசர்கள் இராணுவ, நிர்வாகத் துறைகளில் பெற்ற வெற்றிகளுக்குக் காரணமாக அமைந்திருந்த திறமையையும் மன உறுதியையும் அக் கருத்துச் சீர்குலைய வைத்திருக்கக்கூடும்.

எனினும், அக்பர் முன்கூட்டியே அறிந்திருப்பாராயின், தாம் சாதித்த அரிய செயல் முழுவதுமே அழிவு பெருது என்பதை அவர் உணர்ந்திருப்பார். கிட்டத்தட்ட இருநூறு ஆண்டுகட்குப் பிறகு, நுட்பமாக உருவாக்கப்பட்ட அவரது நிர்வாக முறையின் அறிகுறிகள் எல்லாம் மறைந்துவிட்டபொழுது 'புதிதாக அமைக்கப்பட்டிருந்த ஆங்கில-இந்திய அதிகாரிகள் அக்பரது நிறுவனங்களை மீண்டும் நிலைநாட்ட முயன்றனர். நிலவரியை மதிப்பிடுதல் அல்லது விவசாய விளைபொருளில் அரசாங்கத்தின் பங்கு மதிப்பிடுதல் போன்ற பொறுப்புகளை ஏற்றிருந்த முக்கியமான துறையில் அக்பரது முறையின் முக்கியக் கூறுகளைப் படிப்படியாக மேற்கொள்ள அவர்கள் முயன்றனர். இந்தியாவின் ஆட்சிமொழியில் அத் துறைக்கு நிலத் தீர்வைத்துறை (Settlement Department) என்று பெயர் வழங்கப்

பட்டு வந்தது. தற்போதைய இந்தியப் பேரரசின் மாகாணங்களில் பலவற்றில், நிலத் தீர்வைத் துறையின் கொள்கைகளும் செயல் முறையும், அக்பரும் அவருடைய அமைச்சர்களும் உருவாக்கிய முறையைப் போன்றவையேயாகும். பணித்துறை ஆட்சியின் அடிப்படையில் அமைந்திருந்த அரசாங்கக் கட்டமைப்பில் அவரது கைவண்ணத்தின் சின்னங்களை இன்றைக்கும் காணலாம்.[1] சுருங்கச் சொல்லின், வெளித்தோற்றத்தில் தென்படுவதைவிட மிக அதிகமாகவே தற்கால இந்தியா மாபெரும் முகலாய மன்னரின் நிர்வாக மேதைமைக்குக் கடமைப்பட்டுள்ளது என்பதையே அவ் வரலாற்றாசிரியரின் முடிவு நமக்கு நினைவூட்டுகிறது.

அக்பர் உருவாக்கிய நிலவருவாய் நிர்வாகத்தின் தத்துவங்களை அவருக்குப் பிறகு வந்தவர்கள் கண்டிப்பாகப் பின்பற்றி இருப்பார்களாயின், முகலாயப் பேரரசுக்கு ஏற்பட்ட நிர்வாக, பொருளாதாரச் சீர்குலைவு அவ்வளவு விரைவாக நிகழ்ந்திருக்காது. தங்களுடைய பின்னாட்களில் ஜஹாங்கீரையும் ஷாஜஹானையும், தமது ஆட்சிக் காலத்தின் பெரும்பகுதியில் அவுரங்கசீப்பையும் நிர்வாக மேதைமை பொறுத்தவரை அக்பரோடு ஒப்பிட முடியாது. ஷாஜஹானின் வயது முதிர முதிரத் தமது திறமையை மிக விரைவாக இழந்து கொண்டிருந்தார் என்பதைச் சமகாலப் பதிவேடுகள் குறிக்கின்றன.[2] அக்பரின் நிலவருமான ஏற்பாடுகளின் இரண்டு முக்கியக் கூறுகளை ஜஹாங்கீரும், ஷாஜஹானும், அவுரங்கசீப்பும் கைவிட்டனர். பேரரசின் வளமை அவ்விரண்டு கூறுகளின் அடிப்படையில்தான் அமைந்திருந்தது. அவையாவன: அதிகாரிகளுக்கு ஊதியத்தை ரொக்கமாகக் கொடுத்தல், வரிவசூலிப்பவர்கள் தனித்தனி குடியானவர்களுடன் நேர்முகமாகத் தொடர்பு கொண்டிருத்தல் ஆகியவையாகும். ரொக்கப் பணத்தை ஊதியமாகக் கொடுப்பதற்குப் பதிலாக நிலங்களை அளித்தல் அதிகாரிகளுக்கு ஊதியம் தரும் சாதாரண முறையாகும் என்பதற்கும், இந்த முறையின் தீமைகள் அடிக்கடி மாற்றுதல்களினால் மேலும் மோசமாயின என்பதற்கும் ஜஹாங்கீரின் சொந்த நினைவுக் குறிப்புகள் சான்று கூறுகின்றன. அடிக்கடி மாற்றங்களின் காரணத்தை முன்னிட்டு, அதிகாரிகள் தமக்குக் கிடைத்த சொற்ப காலத்தில் கூடியமட்டும் குடியானவர்களைச் சுரண்ட முயன்றனர். ஷாஜஹான் தமது அதிகாரிகளை அடிக்கடி மாற்றவில்லையாயினும், அவருடைய ஆட்சிக் காலத்தில் மொத்த நிலவருவாயில் ஏறத்தாழ எட்டில் ஏழு பங்கு என ஒதுக்கப்பட்டிருந்தது

[1] Smith, 'Akbar,' p. 355.

[2] W. Foster, 'English Factories in India', Vol. v. p. 204; vii, p. 302; viii, p. 51.

என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. அதன் விகிதம் அவுரங்கசீப்பின் காலத்தில் இன்னும் அதிகமாகவே இருந்தது. இதன் விளைவாக, விவசாயிகள் அக்பரின் அமைப்பில் முக்கியப் பங்கு பெற்றிருந்த வருவாய் வசூலிக்கும் அதிகாரியுடன் தொடர்பு கொள்ளாது, பலவகைப்பட்ட ஒப்பந்ததாரர்களுடன் அல்லது பட்ட உரிமையாளர்களுடன் தொடர்புகொள்ளவேண்டி நேரிட்டது. அவர்களில் ஒவ்வொருவரும் தமது சொந்த நலனுக்காக ஏராளமான பணத்தை வசூலிப்பதில் கருத்தாக இருந்தனர்.

நில ஒப்படைகளின் எண்ணிக்கை ஏராளமாக அதிகரித்தது; தவிர, வருவாயை வசூலிப்பதற்கான உரிமையைக் குத்தகைக்கு விடும் பழக்கமும் சுருக்கவகையான கிராம செட்டில்மென்டுகளின் பழக்கமும், வரிவிதிப்பு விகிதத்தை மொத்த விளைபொருளில் மூன்றில் ஒரு பங்கிலிருந்து அரைப் பங்காக அதிகரித்தமையும், வன்முறையைக் கையாண்டு பயிரிடும் நிலப்பரப்பை அதிகப்படுத்தினமையும் ஆகிய அனைத்தும் அக்பரின் இறப்பிற்குப் பிற்பட்ட நூற்றாண்டில் கையாளப்பட்ட முறைகளில் சில ஆகும். குத்தகைக்கு விடும் முறைக்கு அக்பர் தடை விதித்திருந்தார்; ஆனாலும் அது 1616ஆம் ஆண்டுக்குள் சாதாரண பழக்கமாகிவிட்டது. அதுபோலவே கிராம செட்டில்மென்ட் முறைக்கும் அவர் தடை விதித்தார். அந்த முறைப்படி, கிராமம் முழுவதற்குமாக ஒரு மொத்தத் தொகையைத் தருவதற்கு கிராமப் பெரியதனக்காரன் ஒப்பந்தம் செய்துகொண்டான்; ஆனாலும், இந்த முறை 1665-6-ல் வழக்கமாகச் செயல்முறையில் இருந்தது என்பதை அவ்வாண்டில் அவுரங்கசீப் பிறப்பித்த உத்தரவு ஒன்று உறுதிப்படுத்துகிறது. ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தில் அரசவையின் செலவு ஏராளமானதாகிவிட்டதனால் வரிவிதிப்புத் தரத்தை உயர்த்தவேண்டி நேர்ந்தது; ஆனால், அங்ஙனம் செய்ததனால் பேரரசர் பொருளாதார முறையைச் சீர்திருத்த முடியாதபடி சிதைத்துவிட்டார்; தேசியப் பொருளாதாரப் பற்றுக்குறைக்கு அதனால் வழிவகுக்கவும் செய்தார். நிலவருவாய் கோரிக்கையின் சுமை தாங்க முடியாததாக இருந்ததனாலும் அதை விதிப்பதற்கும் வசூலிப்பதற்கும் கையாண்ட கொடுமைவாய்ந்த முறைகளினாலும், குடியானவர்கள் தமது கிராமங்களை விட்டு வெளியேறினர் என்றும், நிலம் பயிரிடப்படாமல் விட்டு வைக்கப்பட்டதென்றும், 1656 ஆம் ஆண்டைப்பற்றித் தாம் கோல்பெர்ட்டுக்கு (Colbert) எழுதிய கடிதத்தில் பெர்னியர் சுட்டிக் காட்டுகிறார். இறுதியாக நிலத்தைப் பயிரிடுவதை அதிகமாக்குவதற்காகச் சாட்டையடி கொடுக்குமாறு அவுரங்கசீப் தமது வருவாய் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். பதினேழாம் நூற்றாண்டின் இடைக்காலத்தைச் சார்ந்த குடியானவர்களின் மிகக் கடுமையான

வறுமையைப்பற்றி பெர்னியர், டாவெர்னியர் (Tavernier) ஆகிய இருவரும் குறிப்பிடுவது வியக்கத்தக்கதன்று. ஏனெனில், முகலாய அதிகாரிகள் இழைத்த கொடுமைகளும், இந்து அரசர்களின் ஆட்சிப் பகுதிகளுக்குக் குடியானவர்கள் ஓட்டம் பிடித்ததும் அவர்கள் நேரில் கவனித்த இரண்டு முக்கிய விஷயங்களாகும். அவர்களுடைய சான்றை மற்றச் சமகாலத்திய ஆசிரியர்கள் உறுதிப் படுத்துகின்றனர். பாமர மக்களுக்கு வேலை செய்வதற்கான ஊக்கம் இல்லை; அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதைத் தவிர தப்பித்துக்கொள்ள வேறு வழியில்லை என்றும் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்; அதாவது, அப்போதைக்குச் சூழ்நிலை சாதகமாக இருந்த பகுதிக்கு அவர்கள் ஓட்டம் பிடித்தனர்; அல்லது அயல் நாட்டில் பிழைப்பாதார உறுதிக்குப் பதிலாகத் தமது சொந்த சுதந்திரத்தை அவர்கள் ஒப்படைக்க வேண்டியிருந்தது.[1] அய்னி-அக்பரியில் குறிப்பிட்டுள்ள அக்பர் தமது வருவாய் அதிகாரிகளுக்கு இட்டிருந்த செயல்துறைக் கட்டளைகளுக்கும், குடியானவர்களைச் சாட்டையால் அடித்தும் நிலங்களைப் பயிரிடுவதற்காக ஏற்பாடுகளைச் செய்யுமாறு அவுரங்கசீப் தமது அதிகாரிகளுக்கு இட்டிருந்த ஆணைக்குமிடையில் எவ்வளவு பெரிய பிளவு இருக்கிறது. முன்னால் குறிப்பிட்டது, தைமூரின் வழித்தோன்றல்களில் மிகப்பெரிய, சுறுசுறுப்பு மிக்கவரின் நல்லெண்ணங்களைச் சுட்டிக்காட்டுவதுபோல, பின்னால் குறிப்பிட்டுள்ளது முகலாய நிர்வாகத்தின் சீரழிவின் குறியீடாயமைந்துள்ளது. அவுரங்கசீப்பின் ஆட்சியின் முடிவின்பொழுது பேரரசு, சீர்குலையும் நிலையை எட்டியிருந்தது; அச் சீர்குலைவிற்கு மிக முக்கியமான காரணமாவது முகலாயப் பணியாளர் ஆட்சியின் கொடுமையும் அடக்கு முறையும் நாள்தோறும் வளர்ந்துகொண்டிருந்ததேயாகும்.

[1] W. H. Moreland, 'From Akbar to Aurangzeb', pp. 246 ff.
கடைசி மூன்று பத்திகளும் இந்நூலையே ஆதாரமாகப் பெற்றிருக்கின்றன.

7. முகலாயர் காலத்திய பொருளாதார, சமூகக் கூறுகள்[1]

விவசாய முறை

தற்காலத்தில் இருப்பது போலவே முகலாய இந்தியாவிலும் விவசாயம் அடிப்படைத் தொழிலாகவும் பேரரச வருவாயின் முக்கிய ஆதாரமாகவும் இருந்தது. விவசாய முறையின் முக்கியக் கூறுகளும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் விளைந்த பயிர்களின் இயல்பும் இப்பொழுது இருப்பதுபோலவே இருந்தன ஆனால், இக் காலத்திலிருக்கும் மாபெரும் சணல் தொழில் பீஹாரில் அவுரி சாகுபடியின் வளர்ச்சி, ஐக்கிய மாகாணத்தில் (United Provinces) விளையும் கோதுமை, கரும்பு ஆகியவற்றையெல்லாம் முகலாயர் காலத்தில் காணமுடியாது. மிக அண்மையில் வளர்ச்சிபெற்ற இப் பொருள்களை விலக்கிவிட்டால், அக்பர் காலத்திய விவசாய முறைக்கும் தற்கால விவசாய முறைக்குமிடையில் இருந்த முக்கிய வேறுபாடாவது—செயற்கை நீர்ப்பாய்ச்சல் வசதிகள் இல்லாமை, நில அடிமையாட்கள் நாட்டுப்புற வாழ்க்கையின் இயல்பான அம்சமாக அமைந்திருத்தல், அரசாங்கத்தின் தீர்வைக் கோரிக்கை மிக அதிகமாக இருத்தல் ஆகியவை எல்லாம் அக்பர் ஆட்சிக் காலத்தின் அம்சங்களாக அமைந்திருந்தன. அரசாங்கத்தின் கோரிக்கையையும் மற்றவர்களின் கோரிக்கையையும் நிறைவேற்றிய தற்குப் பிறகு குடியானவனிடம் எஞ்சியிருந்த சராசரி தொகை

[1] அடிக்குறிப்புகளில் மற்றபடி குறிப்பிட்டிருந்தாலன்றிப் பொருளாதார நிலைகளைப்பற்றியும் வாணிகத்தைப்பற்றியுமான செய்திகளும் முடிவுகளும் W. H. Moreland என்பவர் எழுதியுள்ள பின்வரும் இரண்டு முக்கியமான நூல்களிலிருந்து எடுக்கப்பட்டவையாகும்—'India at the Death of Akbar' and 'From Akbar to Aurangzib.'

இப்பொழுது இருப்பதைவிட மிகக் குறைந்தே இருந்தது என்று மூர்லாண்ட் (Moreland) சுட்டிக் காட்டுகிறார். அக்பருக்குப் பிறகு வந்தவர்களுடைய காலத்தில் விவசாய முறை மாறுபடாமலே இருந்தது; ஆனால், குடியானவன் தனது சொந்த பயனுக்காகவும் வசதிக்காகவும் பெற்ற உபரிவருவாய் குறைந்துகொண்டே வந்ததனால் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு வேண்டிய ஊக்கம் நிச்சயமாகக் குறைந்துகொண்டே வந்தது. இதனாலும், தல அதிகாரிகள் மேலும் மேலும் இழைத்த கொடுமைகளாலும், வற்புறுத்திய கோரிக்கைகளாலும் பல இடங்களில் விவசாயம் கைவிடப்பட்டது. அக்பரின் ஆட்சிக் காலத்தில் நிலவருவாய் 363 கோடி தாம்களாக இருந்தது என்று அய்னி-அக்பரியில் குறிக்கப்பட்டுள்ளது. பாத்ஷானாமாவின் கூற்றின்படி அத் தொகை ஷாஜஹானின் காலத்தில் 800 கோடி தாம்களாக அதிகரித்தது. அரசாங்க கோரிக்கை மிக அதிகமாகிவிட்டது என்பது இத் தொகைகளிலிருந்து புலனாகிறது. அதோடுகூட, ஷாஜஹானிடமிருந்து அதிக ஊதியம் பெற்ற ஆட்சிப் பணியாளர்களின் ஊதாரித்தனமான பழக்கங்களினாலும் நீடுறுதியாக அதிகமாகிக்கொண்டிருந்த அவர்களது கடன்களினாலும் நாட்டுப்புற மக்களின்மீது பலவகையான தலத் தீர்வைகளும், வரிகளும், பொருள்களின் போக்குவரத்தின்மீது விதிக்கப்பட்ட தீர்வைகளும் சுமத்தப்பட்டன. இத் தீர்வைகளெல்லாம் அடிக்கடி பேரரச ஆணையைப் பொருட்படுத்தாமலேயே விதிக்கப்பட்டன. இதன் விளைவாக விவசாயிகள் ஜீவனோபாயத்துக்காகவும் ஒரு சிறிது லாபமும் பெறவில்லை; ஆகையினால் நிலத்தைப் பயிரிடுவதில் அவர்களுக்கு ஊக்கமும் இருக்கவில்லை. பதினேழாம் நூற்றாண்டில் ஆங்கிலேய, டச்சு (Dutch) வியாபாரிகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக இந்தியாவின் சிற்சில பாகங்களில் பட்டும் பருத்தியும் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனாலும், பொதுவாகச் சொல்லப்போனால், அக்பரின் இறப்புக்குப் பிறகு புகையிலை பயிர்த்தொழில்தான் விவசாயத்தில் புதிதாக நுழைக்கப்பட்டதாகும். அதைப்பற்றிப் போர்ச்சுகீசியர்களிடமிருந்து இந்தியர்கள் தெரிந்துகொண்டனர். ஜஹாங்கீரின் ஆட்சிக்கு முன் அதைப்பற்றி எவரும் கேள்விப்பட்டதில்லை. அது முதல் முதலாகக் குஜராத்தில் பயிரிடப்பட்டது. அங்கே அது 1613-ல் கிடைத்தது. புகை பிடிப்பதைத் தடுக்க ஜஹாங்கீர் 1617-ல் ஆணை பிறப்பித்ததிலிருந்து அவ்வாண்டில் பலர் புகை பிடித்தனர் என்பது புலனாகிறது. ஆனால், மற்ற விஷயங்களில் இருந்தது போலவே இங்கும் இவ்வாணை செயல்முறையில் பயன் எதுவும் விளைவிக்கவில்லை. ஏனெனில், மானுச்சியின் கூற்றின்படி, டெல்லியிலிருந்த புகையிலைப் பண்ணையிலிருந்து அவுரங்கசீப்பின் ஆட்சியின் தொடக்க ஆண்டுகளில் ஏராளமான பணம் கருவூலத்திற்கு வந்து

கொண்டிருந்தது. மானுச்சி அளிக்கும் எண்ணிக்கைகள் மிக மிகைப்படுத்தப்பட்டவை என்று கருதினாலும், புகைபிடிக்கும் பழக்கம் பலரிடையில் இருந்தது என்பது அதிலிருந்து புலனாகிறது.

முகலாயர் காலத்தில் வேளாண்மை வகையினைச் சேராத முக்கிய இனங்களாவன: மீன் பண்ணைகள் (இவைகளிலிருந்து வெகு சிறு வருமானமே வந்தது), கனிப்பொருள்கள், உப்பு, சர்க்கரை, கஞ்சா, நீலம், சாராயம். அக்பரின் ஆட்சிக்காலத்தில் மத்திய இந்தியாவிலும் இராசபுதனத்திலும் இருந்த சுரங்கங்களிலிருந்து கொஞ்சம் செம்பு வந்தது; ஆனால், ஜஹாங்கீர் அரியணையேறியதற்குப் பிறகு அச் சுரங்கங்களில் வேலை நடப்பது நின்றுவிட்டிருக்கலாம். கருவிகள், ஆயுதங்கள் போன்றவைகளைத் தயாரிப்பதற்குத் தேவைப்பட்ட இரும்பு இந்தியாவின் பல பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்டது. பாதரசம், வெள்ளீயம், ஈயம், துத்தநாகம் ஆகியவையெல்லாம் பொதுவாக வெளியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. இப்பொழுதைவிட அப்பொழுது அதிக விலையாயிருந்த உப்பு பஞ்சாப்பின் சுரங்கங்களிலிருந்தும் சாம்பர் ஏரியிலிருந்தும், கடல்நீரிலிருந்தும் பல முறைகளைக் கையாண்டு தயாரிக்கப்பட்டது. வங்காளத்திலிருந்து ஒருவகைப்பட்ட உயர்ரக சர்க்கரை கிடைத்தது. அது கடல் வழியாக மலையாளக் கரைக்கும் (Malabar Coast) கங்கை நதியின் வழியாக முகலாயர்களின் தலைநகருக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. வெள்ளைச் சர்க்கரை பேரரச அவைக்குத் தேவைப்பட்டதனால் சாதாரண மக்கள் பெரும்பாலும் வெல்லத்தையே பயன்படுத்தினர். வெள்ளைச் சர்க்கரையின் விலை மணங்கு ஒன்றுக்கு 128 தாம்களாக இருந்ததனால் சாதாரண மக்கள் அவ்வளவு விலை கொடுத்து அதை வாங்க முடியவில்லை. நீண்ட காலமாகவே மாளவத்திலும் (Malava) பீஹாரிலும் கஞ்சாப் பொருள்கள் பயிரிடப்பட்டுவந்தன. பானாவிலும் (Bana) மற்றக் கேந்திர ஸ்தானங்களிலும் நீலம் பயிரிடப்பட்டது. இது ஏற்கெனவே குறிப்பிட்டது போல அக்பரின் இறப்புக்கு அடுத்த நூற்றாண்டில் ஐரோப்பிய வர்த்தகங்களுக்குத் தேவைப்பட்டதனால் அதிக லாபம் கொணர்ந்தது. சாராயம் பொறுத்தவரை, கூடியவரை அதனின் உற்பத்தியைக் குறைக்குமாறு அக்பர் தமது கொத்தவால்களுக்குக் கட்டளையிட்டிருந்தார். தாமே பெரிய குடிகாரராக இருப்பினும் ஜஹாங்கீர் அதனின் தயாரிப்புக்குத் தடைவிதித்தார். ஆனாலும், தெற்கில் கள்ளும் (tadi) வடஇந்தியாவில் மாஹுவா சாராயமும் தொடர்ந்து தயாரிக்கப்பட்டு வந்தமையால் அவ்வுத்தரவு பயனற்றதாயிற்று. அக்பருக்குப் பின் வந்தவர்களின் ஆட்சிக் காலங்களில் விவசாய வகையைச் சாராத விளைச்சலின் மிக முக்கியக் கூறுவது வெடியுப்பு மிக அதிக அளவில்

தேவைப்பட்டதாகும். அதனது உற்பத்தி ஏராளமான தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்தது.

தொழிலும் கைத்திற வேலைகளும் : அக்பரின் காலத்திலாவது அவருக்குப் பிறகு வந்தவர்களுடைய காலத்திலாவது தற்காலத்தில் இருப்பதுபோன்ற தொழில்துறை அமைப்பு எதுவும் இருக்கவில்லை. நெசவாளி, தச்சன், கைவினைஞன் அனைவரும் முழுவதும் தரகர்களாலேயே பொருளுதவி அளிக்கப்பட்டனர். அவர்கள் ஏராளமான பொருள்களை உற்பத்தி செய்தனர். அவற்றில் சில அதிக விலையுள்ளவைகளாக இருந்தன. அத் தரகர்கள் மனம் திருப்தியடையும்வரை அவர்களைச் சுரண்டினர். பிரபுக்களும் உயர் அதிகாரிகளும்தாம் அத் தொழிலாளர்களின், கைவினைஞர்களின் பொருள்களை அடிக்கடி வாங்கி அவர்களைத் தரகர்களின் பிடியிலிருந்து விடுதலை செய்யக்கூடியவர்களாக இருந்தனர். ஆனாலும், அப் பிரபுக்களும் உயர் அதிகாரிகளும், மற்றோர் இடத்தில் குறிப்பிட்டது போல, உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பொருள்களைவிட வெளிநாடுகளிலிருந்து வந்த விலையுயர்ந்த பொருள்களையும் புதுமைப் பொருள்களையும் வாங்குவதிலேயே சுவைநாட்டமுள்ளவர்களாயிருந்தனர். பண்டங்களின் விலை மிக அதிகமாக இருந்தது; வரிச்சுமை மிக அதிகமாக இருந்தது. ஆகையால், தொழிலாளர்கள் தரகர்களின் ஆதிக்கத்துக்குட்பட வேண்டியிருந்தது. பற்றுக்குறைக் காலத்தையும் வறுமைக் காலத்தையும் சமாளிக்க அத் தரகர்கள் தொழிலாளர்களுக்குச் சிறிதளவு இலாபமும் விட்டுவைக்கவில்லை. கைநுட்ப வேலைக்காரர்கள்மீதும், பொருள்களின்மீதும், தொழில்களின்மீதும் விதிக்கப்பட்ட பல தீர்வைகளையும் வரிகளையும் அக்பர் எடுத்துவிட்டு, அத் தொழிலாளர்களுக்குப் பரிகாரம் அளிக்கப் பெருமுயற்சி செய்தார். ஆனால், அதுபோன்ற தள்ளுபடி கொடுத்தல் ஒரு சிறு காலத்திற்கே அளிக்கப்பட்டது போலும்; பேரரச ஆணைகளையும் புறக்கணித்துத் தல அதிகாரிகள் அத் தீர்வைகளை வசூலித்தனர். அக்பரின் ஆட்சிக் காலத்தில் நாள்தோறும் கொடுக்கப்பட்ட கூலியை மூர்லாந்து கணக்கிட்டு, அவை தற்கால நாணயங்களின்படி பின்வருமாறு இருந்தன என்று கூறுகிறார்: சாதாரணத் தொழிலாளி $5\frac{1}{2}$ அணா; உயர்ரகத் தொழிலாளர்கள் $8\frac{1}{2}$ அணாவிலிருந்து 11 அணாவரை; தச்சன் $8\frac{1}{2}$ அணாவிலிருந்து $1\frac{1}{4}$ ரூபாய்வரை; கட்டட வேலைக்காரன் 14 அணாவிலிருந்து $1\frac{1}{4}$ ரூபாய்வரை. அரசவையில் பணியாற்றிய மிகக் கீழ்த்தர அடிமைகள் மாதம் ஒன்றுக்கு 12 அணா பெற்றனர். குற்றேவலர்கள் அல்லது காலாட்படை வீரர்கள் சிலரே மாதம் ஒன்றுக்கு மூன்று ரூபாய்க்கு மேற்பட்டுக் கூலி பெற்றார்கள். கைவினைஞர்களின் கூலியைப்பற்றிச் சான்று எதுவும் இல்லாவிடினும், பதினாறும் பதினேழாம்

நூற்றாண்டுகள் முழுவதிலும் அவர்களது நிலை மிக மோசமாகவே இருந்தது என்று சமகாலத்திய குறிப்பேடுகளில் அவர்களைப்பற்றிப் பொதுவாகச் சொல்லப்பட்டுள்ளது. அதே நிலையில்தான் கை தேர்ந்த கைவினைஞர்களும் தொழிற்சாலை வேலையாள்களும் இருந்தனர் என்று கூறலாம். அவர்கள் அனைவரும் தங்களுடைய மேலதிகாரிகளுக்கு அடிக்கடி தஸ்தூரிகளையும் (dasturi) அபராதங்களையும் செலுத்தவேண்டியிருந்தது. அக்பருக்குப் பிறகு வந்தவர்களுடைய காலத்தில் அவர்கள் அடிக்கடி கூலியில்லாமலேயே வேலை செய்யுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர். ஜஹாங்கீர், ஷாஜஹான் காலத்தில் அவர்களுடைய நிலைமை மேலும் மோசமாகியது. அவுரங்கசீப்பின் காலத்தில் வறுமையினால் நாட்டுப்புறங்களிலிருந்து இடையறாமல் நகர்ப்புறங்களுக்குக் குடியேறினர் எனத் தெரிகிறது.

முகலாயர் காலத்திய கைத்திற வேலைகளில் பின்வருவன மிக முக்கியமானவையாகும்—மரக் கட்டில்கள், நிலைப்பெட்டிகள், நாற்காலிகள், பெட்டிகள் ஆகியவைகளின் தயாரிப்பு; சிறிய அளவில் தோல் பொருள்களின் தயாரிப்பு; தாள்கள் உற்பத்தி; பானைகள் தயாரிப்பு—இது எங்கும் பரந்திருந்தது; செங்கல் தயாரிப்பு; முகலாய இராச்சியங்களில் பல விநோதமான பெட்டிகள்; சேமப் பெட்டிகள், பேனாக் கூடுகள், ஜமக்காளங்கள் ஆகியவைகளும் இன்னும் பல சிறந்த தயாரிப்புப் பொருள்களும் கிடைத்தன என்பதை எட்வர்ட் டெர்ரி கவனித்துள்ளார். கைத்திறக் கலைஞர்கள் தயாரித்த பொருள்கள் பலவும் கலைத்திறம் பெற்றவையாய் இருந்தன. ஆனாலும், பொதுவாகப் பேசுகையில், அவற்றின் மதிப்பு அவர்கள் பயன்படுத்திய மூலப்பொருள்களின் விலைவாலுமின்றி அவர்களது கைத்திறனின் விலையாலும் மிக உயர்ந்திருந்தது. வைதாரித்தனமான ஆட்சி வகுப்பினரின் தேவைகளும் வெளிநாட்டிலிருந்து வரும் சிறிய, நிலையற்ற தேவையும் அதுபோன்ற பொருள்களின் விலையை நிர்ணயித்தன. ஆகையினால், இதுபோன்ற தயாரிப்பு வகையில் வளர்ச்சிக்கு வாய்ப்பே கிடைக்கவில்லை அதுபோலவே, முகலாயர்களின் காலத்தில் பட்டுத் துணிகளை இந்திய ஜனத்தொகையில் ஒரு சிறு பகுதியாக இருந்த உயர்தர வகுப்பினரே பயன்படுத்தியதனால் பட்டுநூல் நெசவும் விரிவடையவில்லை. இந்தியத் தறிகளின் உற்பத்திப் பொருள்கள், தூரக் கிழக்கு (Far East), மத்திய ஆசியா (Central Asia), பாரசீகம் (Persia) ஆகியவற்றிலிருந்தும் மத்தியதரைக்கடலின் (Mediterranian) கிழக்குக் கோடியில் ஒட்டிக்கிடந்த பகுதிகளிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்ட பட்டுத் துணிகளுடன் போட்டியிட வேண்டியிருந்தது. இத் தொழிலுக்கு அக்பர் அளித்த ஆதரவும், அதில்

அவர் செலுத்திய அக்கறையும் அரசவை வட்டாரங்களின் தேவை களுக்கு ஒரு பெரும் ஊக்கத்தை அளித்ததுமன்றி, லாகூர், ஆக்ரா, ஃபதேபூர் சிக்ரி, குஜராத்து ஆகிய இடங்களிலெல்லாம் பட்டுநூல் நெசவுத் தொழில் வளர்ச்சி பெறவும் நேரடிக் காரணங்களா யிருந்தன. அதுபோலவே அவருடைய செல்வாக்கு, கம்பளி, ஜமக்காள நெசவுத் தொழில்களிலும் தென்பட்டது. பெரும்பாலும் உரோமங்களிலிருந்து தயாரிக்கப்பட்டவையும் காஷ்மீரத்தில் தோன்றியவையுமான அந்தச் சால்வைகள் லாகூரிலும், ஜமக்காளங் கள் லாகூரிலும் ஆக்ராவிலும் தயாரிக்கப்பட்டன. முன்னேற்றம் பெற்ற தயாரிப்பு முறையை மக்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்காகத் திறம்படைத்த ஆசிரியர்களும் வேலையாள்களும் இந்தியாவில் குடியேறினர் என்று அபுல் ஃபாஸல் கூறுகிறார். தவிர, நெசவுத் தொழில் முழுவதன் செயல்முறை அறிவை அக்பரே பெற்றார் என்றும், பல்வகைப்பட்ட உரோம நெசவு, பட்டுநூல் நூற்றல் தொழில்கள் பூரணப் பொலிவு நிலைக்குக் கொண்டுவரப்பட்டன என்றும் அவர் கூறுகிறார். அதுபோன்ற பொருள்களின் தேவையை அதிகரிப்பதற்காக உள்ளூரிலேயே நெசவு செய்யப்பட்ட குறிப் பிட்ட வகைத் துணிகளையே பயன்படுத்துமாறு சில தரங்களைச் சேர்ந்தவர்களுக்கு அக்பர் ஆணையிட்டார் — இவ்வாணையின் விளைவாக லாகூரில் சால்வை தயாரிக்கும் தொழிற்சாலைகள் பல நிறுவப்பட்டன. வெளிநாடுகளிலிருந்து வந்த ஜமக்காள நெசவாளர்கள் ஆக்ரா, ஃபதேபூர் சிக்ரி, லாகூர் போன்ற இடங் களில் வந்து குடியேறி, பாரசீகத்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஜமக்காளங்களுடன் போட்டியிட ஜமக்காளங்களைத் தயாரிப்பதற் காக ஊக்கமளிக்கப்பட்டது. 1,800 ரூபாய் விலைபெற்ற தனிப்பட்ட ஜமக்காளங்களையும், பல்வகைப்பட்ட ஜஜம்கள் (jajams), ஷெத் ரிஞ்சிகள் (shetringis), பலூச்சிகள் (baluchis), பட்டுப் பாய்கள் ஆகியவைகளையும் பேரரச நெசவுச்சாலைகள் தயாரித்தன. லண்டனைச் (London) சார்ந்த கிர்டிலெர் கம்பெனிக்கு (Girdler's Company) அதனின் தலைவரான ஆர். பெல் (R. Bell) என்பவர் பரிசாக வழங்கிய ஜமக்காளம் லாகூரிலிருந்த பேரரசத் தொழிற்சாலை யில் தயாரிக்கப்பட்ட சிறப்பு மிக்க ஜமக்காளங்களில் ஒன்றாகும். ஆயினும் பாரசீகத்திலிருந்து ஏராளமான ஜமக்காளங்கள் இறக்குமதி செய்யப்பட்டன என்று அபுல் ஃபாஸல் ஒப்புக்கொள்கிறார். பேரரசர் அத் தொழிலுக்குத் தாமே ஊக்கமளித்தபோதிலும், அது பெருமளவில் முன்னேற்றம் பெறவில்லையெனத் தெரிகிறது. இந்தி யத் தறிகளில் நெய்யப்பட்ட கம்பளித் துண்டுகள் பெரும்பாலும் கரடுமுரடான துப்பட்டிகளாகவே இருந்தன. அவற்றைப் பெரு வாரியான மக்கள் வாங்க முடிந்தது. உயர்வகுப்பினரால் அணியப் பட்ட வெல்வெட், கம்பளித் துணிவகை—குறிப்பாக ஒண்சிவப்பு

நிற ஆடை—அனைத்தும் அக்பரின் ஆட்சிக் காலத்தில் ஐரோப்பாவி லிருந்து இறக்குமதி செய்யப்பட்டவையாகும் என்று 'அய்னி அக்பரி' காட்டுகிறது. இதுபோன்ற நிலைதான் பதினேழாம் நூற்றாண்டிலும் இருந்தது.

முகலாயர்களின் காலத்தில் பருத்தித் துணிகளின் தயாரிப்பு மிக வளர்ச்சி பெற்றதாக இருந்தது. அவைகள் உள்ளூரிலும் வெளி நாடுகளிலும் விற்கப்பட்டன. நேர்த்தியான பருத்தித் துணி வாரணாசியில் (Benares) நெய்யப்பட்டது என்று 1585-ல் ஃபிட்ச் (Fitch) குறிப்பிடுகிறார். ஆக்ராவிலும், மாளவத்திலும், தக்காணத் திலும், குஜராத்திலும், மற்றப் பல இடங்களிலும் அது தயாரிக்கப் பட்டது. மிக நேர்த்தியான மஸ்லின்—இந்தியாவிலேயே நேர்த்தி யானதும் சிறந்ததுமான மஸ்லின் என்று டெர்ரி கூறுகிற மஸ்லின்— டாக்கா மாவட்டத்திலுள்ள சோனர்கோனில் (Sonargaon) தயாரிக் கப்பட்டது; பருத்தி ஜமக்காளங்கள், படுக்கை விரிப்புகள், கம்பளி கள், கயிறுகள், நாடாக்கள் போன்ற பல்வகைப்பட்ட பொருள்கள் எல்லாவிடங்களிலும் நெய்யப்பட்டுவந்தன. 'பருத்தித் துணிகளின் மொத்த உற்பத்தி 1600ஆம் ஆண்டில் தொழில் உலகத்தின் மாபெருஞ் சிறப்புச் செய்தியாகும்' என்று மூர்லாந்து குறிப்பிடு கிறார். மக்களில் பெரும்பாலோர் ஒருசில ஆடைகளையே அணிந் திருந்தார்கள் என்பதைக் கருத்தில் கொண்டாலும், வங்காளத்தில் ஓரளவு பருத்தி ஆடைகளைவிடச் சணலால் நெய்யப்பட்ட ஆடை களையே அதிகமாகப் பயன்படுத்தினார்கள் என்பதைக் கருத்தில் கொண்டாலும், ஒவ்வோர் இந்தியனும் நாட்டில் தயாரிக்கப்பட்ட ஆடைகளையே அணிந்தான் என்று சொல்வது மிகையாகாது. தனது உள்ளூர் அங்காடிகளுக்குமட்டுமன்றி. ஆஃப்ரிக்காவின் (Africa) கிழக்குக்கரை, அரேபியா (Arabia), எகிப்து (Egypt), பர்மா (Burma), மலாக்கா (Malacca), ஜலசந்தி நாடுகள் ஆகியவற்றின் அங்காடிகளுக்கும், முக்கியத்துவமற்ற சிற்சில ஆசிய அங்காடி களுக்கும் இந்தியா பருத்தித் துணியை வழங்கியது. அக்பர் காலத் தில் நன்றாக வேரூன்றிவிட்ட இத்தொழில் ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்திலும், ஷாஜஹானின் ஆட்சிக் காலத்திலும் நீடித்து வளர்ச்சிபெற்று, டச்சு, ஆங்கிலேய வர்த்தகர்களின் செயல் களால் பெரும் ஊக்கம் பெற்றது. அவ் வர்த்தகர்கள், மேலைநாட்டு அங்காடிகளுடன் இந்தியா நேரடித் தொடர்பு கொள்ளும்படி செய்தனர். ஜஹாங்கீர் மரணமடைந்த காலத்தில் குஜராத்தின் காலிகோ ஏற்றுமதி வர்த்தகத்திற்கு ஆங்கிலேயர்கள் அடிகோலி னர். ஷாஜஹானின் ஆட்சிக் காலம் முடிவடையும் சமயத்தில், கிழக்குக் கரையின் ஏற்றுமதி வர்த்தகத்தில் சென்னை காலிக்கோ துணி ஒரு சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது. பருத்தித் துணி

களுக்கு ஐரோப்பாவிலிருந்து புதிதாக வந்த தேவையால் உற்பத்தி மேலும் அதிகமாயிற்று. உற்பத்தியாளர் பெற்ற இலாபம் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கே வரையறுக்கப்பட்டது; எனினும், மேற்கு ஐரோப்பாவுடன் வர்த்தகத் தொடர்பை நிலைநாட்டிய அந்நிய வியாபாரிகளின் முயற்சிகளினால் இந்தியா நேர்முக இலாபத்தைப் பெற்றது என்று கொள்ளலாம்.

வெளிநாட்டு வர்த்தகம்: மேற்குக் கடற்கரையிலிருந்த முகம்மதிய வர்த்தக வகுப்பினர் இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகத்தையும் வாணிபத்தையும் முதன் முதலாகத் தொடங்கினர். கீழ்க்கடலில் போர்ச்சுகீசியர்கள் தோன்றிய பின்னரும்கூட அவ் வர்த்தகம் பெரும்பாலும் அவர்கள் கையில்தான் இருந்தது. அவ் வர்த்தகம் முகலாயர்களின் காலத்தில் மேலும் வளர்ச்சியுற்றது. அக்பரும் ஜஹாங்கீரும் கடல்வழியாகச் செல்லும் வர்த்தக மார்க்கங்களின்மீது மேலாண்மை பெறுவதற்காக நடந்த போராட்டத்தில் ஈடுபடவில்லையெனினும், கடல் கடந்த வர்த்தகத்தில் அவ்விருவரும் கருத்துச் செலுத்தினர். அக்பரே வியாபாரத்தில் முனைந்திருந்தார். தந்தை மான்சர்ரேட்டின் (Father Monserrate) கூற்றின்படி, அக்பர் வியாபாரத்தில் இலாபம் பெறவும் ஆவலாக இருந்தார்.[1] ஆனாலும், மற்றோர் இடத்தில் குறிப்பிட்டதுபோல, போர்ச்சுகீசியரின் கடல் ஆதிக்கத்தை எதிர்க்க அவர் எவ்வித முயற்சியும் செய்யவில்லை. தவிர, தாம் குஜராத்திலிருந்து செங்கடல் துறைமுகங்களுக்கு (Red Sea Ports) அனுப்பிய கப்பல்களுக்காக அவர் அவர்களிடமிருந்து அனுமதிச் சீட்டுகளையும் உடனடியாகப் பெற்றுவந்தார். அக்பர் ஆட்சிக் காலத்தில் கடல் கடந்த அந்நிய நாட்டு வர்த்தகம் நடந்த முக்கிய இடங்களாவன: காம்பே (Cambay), சூரத் (Surat) துறைமுகங்கள், வங்காளம், முக்கியமாக சட்கோன் (Satgaon—இது மூர்களுடைய நகரங்களிலெல்லாம் தலைசிறந்த நகரமாக விளங்கியது) ஏராளமான பொருள்களைப் பெற்றிருந்தது;[2] சோழ மண்டலக் கடற்கரை (Coromandel coast); சிந்துநதி ஆகியவை. மிளகு வர்த்தகம் மலையாளக் (Malabar) கரை வழியாக வெளிநாடுகளில் நடந்தது. வங்காளத் துறைமுகங்கள் அதிகமாக விரும்பப்படவில்லை போலும்; ஏனெனில், ஜஹாங்கீரின் இறுதி ஆண்டான 1627-ல் தொடர்ந்து நடந்த போர்களும், கலகங்களும், அடிக்கடி நிகழ்ந்த நிருவாக மாறுதல்களும் வாங்காளத்தின் வர்த்தகத் ததப் பேராபத்திற்குட்படுத்தின என்றும், ஹூக்ளி (Hugli), மேக்னா Meghna) நதிகளின் முகத்துவாரங்களில் கடற்கொள்ளைக்காரர்கள்

[1] See V. A. Smith 'Akbar' p. 411.

[2] Ralph Fitch in W. Foster, 'Early Travels in India', p. 26.

மொய்த்திருந்தனர் என்றும், அவர்கள் வர்த்தகத்தையும் கப்பல்களையும் சூறையாடினர் என்றும் படாவியாவின் (Batavia) கவர்னர்-ஜெனரல் அறிவித்தார். நிலவழியாக நடந்த வெளிநாட்டு வர்த்தகம் இரண்டு முக்கிய மார்க்கங்களின் வழியாக நடந்தது. அவை யாவன: லாகூரிலிருந்து காபூலுக்கும், முல்தானிலிருந்து[1] காந்தாரத்திற்கும் (Kandahar) சென்ற மார்க்கங்கள். ஆனாலும் போக்குவரத்துக் கட்டுப்பட்டதாகவும் ஒழுங்கற்றதாகவும் இருந்தது; ஏனெனில், எல்லா வாணிபப் பண்டங்களையும் பொதிவிலங்குகளின்மீது ஏற்றிக்கொண்டு போகவேண்டியிருந்தது; வழியில் கொள்ளை, வன்முறைபோன்ற ஆபத்துகளையும் எதிர்நோக்கவேண்டியிருந்தது.

அக்பர் ஆட்சிக் காலத்தில் முகலாயப் பேரரசின் முக்கிய ஏற்றுமதிப் பொருள்களாவன: ஜவுளி, மிளகு, நீலம், கஞ்சா போன்ற லாகிரி வஸ்துகள், இன்னும் பல்வகைப்பட்ட பொருள்கள் ஆகியவை. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களாவன: பொற்கட்டிகள், குதிரைகள், கச்சாப் பட்டு நூல், உலோக வகைகள், தந்தம், பவளம், விலையுயர்ந்த கற்கள், அம்பர், ஜவுளிகள் (பட்டு, வெல்வெட், பொன், வெள்ளி, சரிகை வேலைப்பாடுடைய துணிவகை, ஆடவர் உடைக்குரிய கம்பளித் துணிவகை), வாசனைப் பொருள்கள், மருந்துகள், சைனாவிலிருந்து வந்த பொருள்கள், ஐரோப்பிய சாராய வகைகள், ஆஃப்ரிக்க அடிமைகள் ஆகியவையாகும். ஏராளமான நேர்த்தியான சைனா பீங்கான் பொருள்கள் சைனாவிலிருந்து வந்த பொருள்களில் அடங்கியிருந்தன. பேரரசரும் அவருடைய முஸ்லீம் பிரபுக்களும் சைனா பீங்கான் கலன்களை அதிகமாக விரும்பினர். உதாரணமாக, அக்பரின் உணவு பீங்கான் தட்டுகளில்தான் எப்பொழுதும் பரிமாறப்பட்டது. அவர் 1605-ல் இறந்தபொழுது, ஆக்ராவில் மட்டும் 25 இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்புள்ள பீங்கானிலும் வர்ணக் கண்ணாடியிலும் செய்யப்பட்ட பல்வகைப்பட்ட, மிக மென்மையான பாத்திரங்களை அவர் விட்டுச் சென்றார். கண்ணாடி ஒருவேளை வெனிஸிலிருந்து (Venice) வந்ததுபோலும்; அப் பெருங் குவியலில் வெகு சிறிதே இப்பொழுது மீதியாக நிற்கிறது. எதுவுமே இல்லையென்றுகூடச் சொல்லலாம். இருந்தபோதிலும், முகலாயர் காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பீங்கான் பொருள்களின் சிறந்த மாதிரிகள் இப்பொழுதும் இந்திய

[1] குறிப்பாக முல்தானியர்கள் துணிகர வணிகர்களாவார்கள். பதினெட்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில் காஸ்பியன் கடலில் (Caspian Sea) பாகூ (Baku) என்ற இடத்தில் அவர்கள் குடியேற்ற அமைப்பு வைத்திருந்தனர். அங்கே அவர்கள் ஒரு கோயிலையும் கட்டினார்கள் என்று சொல்லப்படுகிறது. விவரங்களுக்காக—பார்க்க—Article by Parma Nand in Punjab Historical Society's Journal, vol, viii.

அங்காடிகளில் கிடைக்கின்றன; அல்லது சில ஆண்டுகளுக்கு முன் கிடைத்துவந்தன. ஐரோப்பிய சுவைத்திற வல்லுநர்கள் சிலாடன் (celadon) என்றும் டெல்லியில் 'கோரி' (ghori) என்றும் வழங்கிய செய்கலம்தான் மிக அதிகமாக விரும்பப்பட்டது. சிறந்த இந்திய மாதிரிகள் பல மிங் (Ming) காலத்தைச் சேர்ந்தவை போலும் (கி.பி. 1368—1644). ஆனாலும் ஒருசில மாதிரிகள் அதற்குமுன் சுங் (Sung) காலத்தையும் சேர்ந்தவையாக இருக்கக் கூடும் (கி.பி 960—1280). விஷமிடப்பட்ட உணவை அச் செய் கலத்தில் வைத்தால் அது பிளவுபடும் அல்லது உடைந்துவிடும் என்று கருதப்பட்டதனால் அக் கலத்திற்குப் பெருமதிப்பு இருந்தது.[1]

நவீன கால வர்த்தகத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், பதினேழாம் நூற்றாண்டின் துவக்கத்தில் இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகம் முழுவதும் மிகக் குறைவாகவே இருந்தது; ஏனெனில், பெருவாரியான மக்களுக்கிடையே ஐரோப்பாவிலிருந்து வந்த பண்டங்களுக்குத் தேவை இருக்கவில்லை. அவர்கள் மிக ஏழைகளாக இருந்ததனால் அப் பண்டங்களை வாங்க முடியவில்லை. அதே சமயத்தில், உயர்வகுப்பினர் விலையுயர்ந்த விளையாட்டுப் பொருள்களிலும் புதுமைப் பொருள்களிலுமே விருப்பத்தைச் செலுத்தினர். அதே வேளையில், இந்தியா தனது உற்பத்திப் பொருள்களை விற்க ஆவல் கொண்டிருந்தபோதிலும், பரிவர்த்தனையாக இந்தியாவுக்குத் தங்கமோ வெள்ளியோ தேவைப்பட்டது என்பதனாலும், மற்றோர் இடத்தில் ஏற்கெனவே குறிக்கப்பட்டுள்ளதுபோல், கீழ்நாடுகளுக்குத் தடையின்றிப் பொற்கட்டிகள் ஏற்றுமதி செய்வதற்கு இங்கிலாந்தில் (England) கடும் எதிர்ப்பு இருந்ததனாலும், இந்தியா வெகுசில பொருள்களையே ஏற்றுமதி செய்தது. இருந்தபோதிலும், அக்பரின் இறப்புக்குப் பிறகு, வெளிநாட்டு வணிகர்கள் இந்திய காலிகோ, வெடியுப்பு, நீலம், கச்சாப் பட்டு ஆகியவைகளுக்காகவும் இதர பொருள்களுக்காகவும் புதிய அங்காடிகளைப் படிப்படியாக நிறுவியபொழுது இப் பொருள்களை வாங்குவதற்காக இந்தியாவிலிருந்த ஐரோப்பாவின் தரகர்களுக்குத் தேவைப்பட்ட பணத்தை ஐரோப்பா கொடுக்க வேண்டியிருந்தது. இந்திய அங்காடிகளில் வாங்கிய கடன்களுக்குச் சாதாரணமாக மிக அதிகமான வட்டி விகிதம் இருந்தது. ஆகையால், இந்தியாவிற்குத் தடையின்றிப் பொற்கட்டிகளையும் வெள்ளிக் கட்டிகளையும் அனுப்புவதைத் தவிர மேற்கு நாடுகளுடன் உண்டான புதிய வர்த்தகத்துக்குத் தேவையான பணத்தைக் கொடுக்க வேறு வழியில்லை என்றாகிவிட்டது.

[1] V. A. Smith, 'Akbar', pp. 411, 412.

இந்தப் பொன், வெள்ளிக் கட்டிகளின் ஏற்றுமதியைப்பற்றிக் கூறும் பொழுதுதான், 'ஆசியாவைச் செல்வம் பெறச் செய்வதற்காகத் தான் ஐரோப்பா இரத்தம் சிந்துகிறது' என்று சர் தாமஸ் ரோ (Sir Thomas Roe) குறிப்பிடுகிறுர். இக் காரணத்திற்காகத்தான் பதினேழாம் நூற்றுண்டில் இங்கிலாந்தில் இடையரு எதிர்ப்பையும், சிற்சில வேளைகளில் மிகக் கடுமையான எதிர்ப்பையும் கிழக்கு இந்தியக் கம்பெனியார் (East India Company) எதிர்நோக்க வேண்டியிருந்தது.

ஜஹாங்கீர், ஷாஜஹான், அவுரங்கசீப் ஆகியவர்களின் ஆட்சிக் காலத்தின்பொழுது பேரரசின் வாணிகத்தின் முக்கியக் கூறுவது டச்சுக்காரர்களுடைய வாணிகச் செயல்களும், ஆங்கிலேயர்களின் வாணிகச் செயல்களுமேயாகும். அவர்கள் அனைவரும் கிழக்கு ஆஃப்ரிக்கக் கரை நாடுகளுடனும் ஆசியாவுடனும் இந்தியா கொண்டிருந்த வர்த்தகப் போக்கை மாற்றியதுமன்றி, தடையற்ற வளர்ச்சி விளைவிக்கும் வகையில் கீழ்நாட்டு அங்காடிகளுடனும் மேல்நாட்டு அங்காடிகளுடனும் நேர்முக வர்த்தகத்தை நிலை நாட்டினர். ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்தில் அப் புதிய வாணிகத்தின் தேவைகளையும் சாத்தியக்கூறுகளையும் சோதிப்பதில் அவ்விரண்டு ஐரோப்பிய தேசங்களும் ஈடுபட்டிருந்தன. 1625ஆம் ஆண்டிற்குள் நீலம், காலிகோக்கள் ஆகியவற்றின் வர்த்தகம் நிலை நாட்டப்பட்டுவிட்டது. மேற்குக் கடற்கரையில் சூரத், ஐரோப்பிய ஏற்றுமதி இறக்குமதிகளின் தலையார்ந்த கேந்திரமாயிற்று. அப்பொழுதுதான் 1630-32-ல் கடும் பஞ்சம் தோன்றியது. இதனுல், குஜராத்தின் வழங்கு பொருள்களில் தற்காலிகமான குறைவு ஏற்பட்டதனுல், அக் குறைவை நிரப்புவதற்காக ஆங்கிலேய வர்த்தகர்கள் இந்தியாவின் பெரும்பகுதியில் வர்த்தக வாய்ப்புகளைத் தேடிக்கொண்டிருந்தனர். ஷாஜஹானின் ஆட்சிக் காலம் முடிவதற்கு முன்பு பத்தாண்டுகளுக்கும், 1650ஆம் ஆண்டிற்குள் சிந்துவிலிருந்து வங்காளம்வரை, கடற்கரையிலிருந்த முக்கிய அங்காடிகளிலெல்லாம் ஆங்கிலேயர்களும் டச்சுக்காரர்களும் தங்களை மிக உறுதியாக நிலைநாட்டிக்கொண்டனர். தவிர, பீஹாரின் பெரும்பகுதியிலும், இப்பொழுது ஐக்கிய மாகாணங்கள் (United Provinces) என வழங்கப்பட்டுவரும் பகுதியிலும் அவர்கள் தங்கள் வர்த்தகத்தை மும்முரமாக நடத்திக்கொண்டிருந்தனர். சென்னையின் காலிகோக்கள், பீஹாரின் வெடியுப்பு, வங்காளத்தின் பட்டு, சர்க்கரை ஆகிய இந் நான்கும், அவுரங்கசீப்பின் ஆட்சிக் காலத்தில் ஐரோப்பாவுடன் இந்தியா நடத்திவந்த வர்த்தகத்தின் முக்கியமான உருப்படிகளாகும். ஏற்கெனவே குறிப்பிட்டவாறு ஐரோப்பியப் பொருள்களுக்கான தேவை இந்தியா

வில் மிகச் சிறியதாகவே இருந்தது. ஐரோப்பாவுடன் புதிதாக நடத்தப்பட்டுவந்த வியாபாரம், இந்தியாவில் செல்வந்தர்கள் விலையுயர்ந்த பொருள்களில் கொண்டிருந்த விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான வாய்ப்பை அவர்களுக்கு அளித்தது. அப்பொருள்கள் 'விளையாட்டுப் பொருள்கள்' என்ற பொதுத் தலைப்பில் இங்கிலாந்தின் ஏற்றுமதிப் பொருள்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தன. இந்திய உயர்குடி மக்களுக்குப் பரிசுகளாக வழங்கவோ, விற்கவோ அவை ஏற்றுமதி செய்யப்பட்டன.

இவ் விஷயத்தில் பேரரசர்களே புதுப்பாணியை ஆரம்பித்து வைத்தனர். அரிய பொருள்களையும் பழம் பொருள்களையும் சேகரிப்பதை அருங்கலை விநோதமாகக் கொண்டிருப்பவரென்று ஜஹாங்கீர் வருணிக்கப்பட்டுள்ளார். ஜஹாங்கீர், விளையாட்டுப் பொருள்களில் காட்டிய விருப்பத்தில் குழந்தைகளையொத்திருந்தார். ஏறக்குறைய ஓர் அவுன்ஸ் எடையுள்ளதும் சொலிக்கும் மாணிக்கங்கள் பதிக்கப்பட்டிருந்ததுமான ஒரு சிறிய பொற் சீழ்க்கையைத்(whizle) தாம் பேரரசருக்குப் பரிசாக வழங்கியபோது, பேரரசர் அதை எடுத்துக்கொண்டு சுமார் ஒரு மணிநேரம் ஊதிக் கொண்டிருந்தார் என்று காவெர்ட் (Covert) வருணிக்கிறார்.[1] குறிப்பாக அந்த மாபெரும் முகலாய அரசருக்குப் பரிசாக வழங்குவதற்கு விநோதப் பொருள்களையும், அலங்கரிக்கப்பட்டுச் சட்டங்களில் பொருத்தப்பட்ட ஓர் ஆள் உயரக் கண்ணாடிகள், படங்கள் ஆகியவற்றையும் அனுப்புமாறு டச்சு வர்த்தகர் வான் ராவெஸ்டின் (Van Ravesteyn) ஐரோப்பாவிலிருந்த தமது மேலதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார். ஒரு பெரிய செம்பு விளக்கை டச்சுக்காரர்கள் ஷாஜஹானுக்குப் பரிசாக வழங்கியதனால் அவர்கள் சில வாணிகச் சலுகைகளைப் பெற முடிந்தது. அதைத் தொடர்ந்து ஜப்பானிலிருந்து (Japan) பொன் வண்ண மெருகெண்ணெய் பூசப்பட்ட பல்லக்குகளைப் பெறப் பேரரசர் விருப்பம் தெரிவித்தார். நேர்த்தியான வேட்டை நாய்களையும், புலிகளை எதிர்க்கவல்ல சில வகை வலிவுள்ள நாய்களையும் பொம்மைகளின் வகையில் சேர்க்க முடியாது. இருந்தபோதிலும், அக் காலத்தில் இந்தியாவில் அவையெல்லாம் உண்மையில் புதுக் கைப்பொருள்களாக இருந்தன. பல முகலாயப் பேரரசர்கள் ஐரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நாய்களில் கருத்துச் செலுத்தினர். சர் தாமஸ் ரோ (Sir Thomas Roe) ஜஹாங்கீருக்காகக் கொண்டுவந்த இரண்டு 'மாஸ்டிப்' வகை நாய்களைப் பற்றிய வேடிக்கையான நிகழ்ச்சி ஒன்றை டெர்ரி (Terry) கூறுகிறார். ஒவ்வொரு நாயும் சிறிய

[1] H. G. Rawlinson, 'British Beginnings in Western India', p. 84 n.

வண்டி ஒன்றில் கொண்டுபோகப்பட்டது. அதில் ஒன்று துணிச்சல் மிக்கதாகி யானையைக்கூடத் தாக்கிற்று. இதைக் கண்டு மகிழ்ச்சியுற்ற முகலாயப் பேரரசர் ஒவ்வொரு நாய்க்கும் நான்கு பணியாள்களை நியமித்து, அவற்றைப் பல்லக்குகளில் கொண்டுபோகும்படி செய்தார். தவிர, ஒரு சோடி வெள்ளிக் குறடுகளைச் செய்ய வைத்து, அந் நாய்களுக்குத் தமது கையினாலேயே உணவூட்டினார். இறுதியில், மற்றொரு ஜோடி 'மாஸ்டிப்' வகை நாய்களையும், அயர்லாந்தின் மான்வேட்டை நாய்கள் சிலவற்றையும் தமக்காகக் கொண்டுவரும்படி பேரரசர், சர் தாமஸ் ரோவுக்கு எழுதினார்.[1] எட்வார்ட்ஸ் (Edwards) என்ற ஆங்கில வியாபாரி ஒருவர் 'மாஸ்டிப்' வகை நாயைப் பரிசாக வழங்கி அவரிடமிருந்து பயனற்ற ஃபர்மான் ஒன்றையும் வெகுமதியாக 3,000 ரூபாயையும் ஏற்கெனவே பெற்றார். அந் நாய் ஒரு சிறிய சிறுத்தையைக் கொன்றதுமன்றி ஒரு காட்டுக் கரடியையும் தாக்கிற்று.[2] உஸ்பெக் (Uzbeg) அல்லது மத்திய ஆசிய வேட்டை நாய்களை அவுரங்கசீப் வைத்திருந்தார் என்றும், அவை ஒவ்வொன்றுக்கும் ஒரு சிறு சிவப்புச் சட்டை தைத்து வைத்திருந்தார் என்றும் பெர்னியர் (Bernier) எழுதுகிறார். சூரத் தொழிற்சாலையின் தலைவரான ஜான் சைல்ட் (John Child) ஒரு சமயத்தில் சூரத்தின் முகலாய கவர்னருக்கு இரு பொம்மை நாய்களைப் பரிசாக வழங்கி அவருடைய மனத்தை மாற்றும்படி செய்தார் என்று 1683, ஏப்ரல் 23ஆம் நாளில் அவரே எழுதிய கடிதத்திலிருந்து தெரியவருகிறது.[3]

பதினேழாம் நூற்றாண்டில் முன்னோடிகளாயிருந்த ஐரோப்பிய வணிகர்களின் விருப்பப்படியே எல்லாம் நடந்தன என்று நினைக்கக் கூடாது என்று மூர்லாந்து எச்சரிக்கை செய்கிறார். உலகத்தின் மற்றப் பகுதிகளிலிருந்த அங்காடிகளில் காணப்பட்ட வர்த்தக சர்வாதீனங்கள், தனிக் கூட்டுகள், தரகர்கள், கடன் கொடுப்பதற்கான வசதி, பரிவர்த்தனை, காப்புறுதி போன்ற வசதிகள், வாங்குவோர் விற்போர் ஆகியவர்களுக்கிடையில் காணப்பட்ட கடும் போட்டி, தங்களுக்கே பயன் தருவதற்கான செய்திகளை நாடுதல் போன்ற கூறுகளெல்லாம் இந்தியாவிலிருந்த அங்காடிகளிலும் காணப்பட்டன என்பதை அவ் வர்த்தக முன்னோடிகள் உணர்ந்திருந்தனர். வில்லியம் ஃபின்ச் (William Finch) என்பவரின் கூற்றின்படி, இந்திய வணிகர்கள், 'பேயைப்போல் மிக நுட்பமான அறிவு படைத்தவர்கள்' என்றும், சாதாரண ஆங்கிலத்தில் கூற

[1] W. Crooke, 'Things Indian', p. 143.
[2] H. G. Rawlinson, 'British Beginnings in Western India', p. 73.
[3] R. and O. Strachey, 'Keigiwn's Rebellion', pp. 37, 38.

வேண்டுமானால் தங்களைப்போலவே அவர்களும் திறம்படைத்த வியாபாரிகள் என்றும் அவர்கள் தெரிந்துகொண்டனர். வாணிகப் பிரச்சினைகளைத் தீர்க்க இந்தியர்கள் எவ்விதம் தமது திறமைகளைப் பயன்படுத்தினர் என்பது பிரசித்தி வாய்ந்த விர்ஜி வோரா (Virji Vora) என்பவரின் வாழ்க்கையிலிருந்து விளங்குகிறது. 1619-1670 ஆண்டுகளுக்கிடையில் ஆங்கில வர்த்தகர்களின் வாணிகத்துக்குத் தேவைப்பட்ட பணவுதவியை அவர் அளித்து, சூரத்தின் வாணிகம் முழுவதையும் தமது கைவசப்படுத்தி வைத்திருந்தார். 'உலகத்திலேயே மிகப் பெரிய செல்வந்தர்' என்று அவரை யாவரும் கருதினர். தல முகலாயர்களின் ஆட்சிக் காலங்களில் கவர்னரோ, இதர உயர் அதிகாரியோ வியாபாரிகளின் விஷயத்தில் தலையிடுதல் என்பது, அக்பருக்குப் பிறகு வந்தவர்களின் ஆட்சிக் காலங்களில் வியாபாரிகள் எதிர்நோக்கவேண்டியிருந்த பேராபத்தாகும். எவ்விநாடியும் அந்த கவர்னர் அல்லது அவ்வதிகாரிகள் எப் பண்டத்தையேனும் 'வாங்குவோர் அல்லது விற்பவர்' என்ற முறைமையில் தாமே நேரில் தோன்றுவர் அல்லது தமது பிரதிநிதிகளை அனுப்பிவைப்பர். இது நிகழ்ந்ததெனில், 'தற்காலிகமாக பலாத்காரத்தால் போட்டி விலக்கப்பட்டுள்ளது' என்று கருத வேண்டும். அவ்வதிகாரி ஒரு சர்வாதீனத்தை நிலைநாட்டவும் கூடும். அதுபோன்ற ஒரு சர்வாதீனத்தை ஆமதாபாத்தின் கவர்னர் 1647-ல் நீலப்பொருள் விற்பனையில் நிலைநாட்டினார்; அல்லது சூரத் மாவட்டம் இன்னும் பஞ்சத்தால் வாடி வருந்திக் கொண்டிருக்கும்பொழுது 1632-ல் அதன் கவர்னர் தானிய விற்பனையில் குத்தகைக் கூட்டு அல்லது குழுவை நிலைநாட்டியது போல ஒரு குழுவை அவ்வதிகாரி ஏற்படுத்தக்கூடும். தவிர, 1635-36-ல் ஹூக்ளியில் நேரிட்டதுபோல அவ்வதிகாரி ஒரு துறைமுகத்தின் வர்த்தகத்தையே கைப்பற்றிக்கொள்ளலாம். உதாரணமாக, மீர் ஜும்லா தமது வாழ்க்கையின் உச்சநிலையில் கப்பல்களையும் சாலைப் போக்குவரத்துச் சாதனங்களையும் சொந்தமாக வைத்துக்கொண்டு அயல் நாடுகளுடன் பரந்த வாணிபம் நடத்திவந்தார். அதுபோன்ற ஓர் அதிகாரியால் வியாபாரிகளுக்கு எவ்வளவு தீங்கிழைக்கப்படலாம் என்பதை, 1659-ல் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கடிதம் ஒன்றிலிருந்து தெரிந்துகொள்ளலாம். வங்காளத்திலுள்ள காஸிம் பஸாரில் (Kasim bazar) ஆங்கிலேயத் தொழிற்சாலைக் கதவுகளை மூடும்படி மீர் ஜும்லா உத்தரவிட்டு, ஆங்கிலேயர்கள் தம்மை நேரில் வந்து பார்க்கும்வரை அவர்களுடன் மற்றெவரும் வாணிகம் செய்தல் கூடாது என வற்புறுத்தினர் என்று அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.[1] இந்திய

[1] W. Foster, 'English Factories in India,' 1655-60, p. 286.

வியாபாரிகள் நடத்தப்பட்ட விதம் படுமோசமாகவே இருந்தது. பணக்கார வியாபாரிகளிடமிருந்து வெட்கங்கெட்ட வகையில் பணம் பறிக்கப்பட்டது. அத்தகைய அனுபவம் வீர்ஜி வோராவுக்கே 1638-ல் ஏற்பட்டது. சூரத் கவர்னரின் உத்தரவின்படி அவர் சிறையிலடைக்கப்பட்டார். மிருகத்தனமான கொடுமைகளை அவர் சகித்துக்கொள்ளவேண்டியிருந்தது. வியாபாரத்துக்குத் தடையிடத் தல அதிகாரிகள் பெற்ற வாய்ப்புகளும், இந்தியாவின் பல்வேறு இடங்களுக்குப் பொருள்களைக் கொண்டுபோவதற்கும் இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்குமிடையில் பொருள் போக்குவரத்துக்கும் செலவான காலமும் பணமும் வர்த்தகக் குழுக்களை ஊகவாணிகத்தில் (speculation) ஈடுபடும்படி செய்தன. பத்தொன்பதாம் நூற்றுண்டின் வாணிகத் தேவைகளுக்காகக் கடலடித் தந்திக் கம்பிவடம் (submarine cables), தந்திப் பொறி, சேணெலிக் கருவி போன்ற விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் பயன்படுத்தப்படும்வரை வியாபாரத்தில் மேற்சொன்ன நிலை முற்றும் தவிர்க்கப்படவில்லை.

பொருளாதார முறை: முகலாயர் காலத்திய பொருளாதார முறைபற்றிக் கவனம் செலுத்தும்போது, உற்பத்தியாளர்களுக்கும் நுகர்பவர்களுக்குமிடையில் இருந்த பெரும்பிளவு வியப்பை அளிக்கிறது. மானிட வர்க்கத்திலேயே சேர்ந்திராதவர்கள் என்றும் கைப்பற்றி அடிமைகளாக விற்பதற்கே தகுதியுள்ளவர்கள் என்றும் கருதப்பட்ட காட்டு ஜாதியார்களைத் தவிர, உற்பத்தியாளர் என்ற வகையில் குடியானவர்கள், தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள், வியாபாரிகள் ஆகியவர்கள் இருந்தனர். பேரரசப் பொதுப்பணியில் சேர்ந்த சிவில், இராணுவப் பணியாட்கள் வாழ்க்கைத் தொழிலர், சமய வகுப்பினர்கள், சிப்பந்திகள், அடிமைகள் ஆகியோர் நுகர்பவர் வகுப்பில் அடங்கியிருந்தனர். இவ் வகுப்பினரெல்லாம் எண்ணிக்கையில் அதிகமாகவே இருந்தனர்; அதாவது, அரசாங்க, சமூகத் தேவைகளை ஒவ்வொருவகுப்பிலிருந்தும் ஒருசிலரையே நியமித்து நிறைவேற்றியிருக்க முடிந்திருக்கும். சமய இரவலர்களின் கூட்டங்கள் பயன்தருவதான எவ்வித வேலையும் செய்யவில்லை. உழைவர்கள், குற்றேவலர்கள் அனைவரின் கூட்டங்கள் வீடுகளில் செய்த பணி பெரும்பாலும் தேவையற்றதாகவே இருந்தது. பெரிய முகலாயப் படைவீரர்களின் கூட்டங்களுக்குப் பதிலாக ஒரு சிறிய, நன்கு பயிற்சிபெற்ற படை குறைந்த செலவு பிடிப்பதாகவும் அதிகத் திறமையுடையதாகவும் இருந்திருக்கும். மேற்சொன்ன முகலாயப் பெரும் படைக்கூட்டம் பயிற்சியின்றியும் ஒழுங்கின்றியும் இருந்தது. சிவாஜியின் மாவலிகள் (mawalis), ஹெட்கரிகள் (hetkaris) போன்ற உரம் வாய்ந்த நன்கு பயிற்சிபெற்ற படைகளுக்கெதிராக அக் கூட்டங்கள் பயனற்றன

வாக இருந்தன. சுருங்கச் சொல்லின், முகலாய இராச்சியங்களின் பெரும்பாலான வருமானம் தேவை மீறி இருந்த பணித்துறைகளுக்காகச் செலவழிக்கப்பட்டது அல்லது வீணுக்கப்பட்டது. இறுதியில் இவ்வாடம்பரத்தின் விலைப்பாரத்தை உற்பத்தி செய்யும் வகுப்பினர் சுமக்கவேண்டியிருந்தது. எண்ணிக்கையில் வெகு சிலராகவும், பெரும்பாலும் அந்நியர்களாகவும் இருந்த உயர் குடிமக்களும் உயர் அதிகாரிகளும் அக்பரிடமிருந்து பெரும் ஊதியங்களைப் பெற்றனர்; ஷாஜஹானின் ஆட்சியின் காலத்தில் அவர்கள் மேலும் ஆடம்பர ஊதியங்களைப் பெற்றனர்; தங்களது வருமானத்தை இன்பப் பொருள்களின்மீதும் ஆடம்பரங்களின்மீதும் அவர்கள் ஏராளமாகச் செலவழித்தனர். மற்ருேர் இடத்தில் ஏற்கெனவே குறிப்பிட்டிருப்பதுபோல, அவர்கள் பெற்றிருந்த செல்வம் அவர்கள் இறக்கும்பொழுது பேரரசக் கருவூலத்துக்கு வந்துசேரவேண்டும் என்று ஆணையிடப்பட்டதனுல் அவ் வுயர்குடிமக்கள் ஆடம்பர வழக்கங்களைக் கட்டாயமாக மேற்கொள்ளவேண்டி நேரிட்டது. இங்ஙனமாக, சேமிப்பதற்கு அவர்களுக்கு ஊக்கமளிக்கப்படவில்லை. அவர்களுடைய வாழ்நாளில் அவர்கள் ஒருவேளை எதையாவது சேமித்து வைத்திருந்து அது கண்டுபிடிக்கப்பட்டுவிட்டால், அது முழுவதையும் இழக்க நேரிடும் பேராபத்துக்கும் அவர்கள் உட்பட்டிருந்தனர். இதிலிருந்து தப்பித்துக்கொள்ளவேண்டுமாயின் ஒரே ஒரு வழிதான் இருந்தது. அதாவது, அவர்களுடைய வாழ்நாளிலேயே தங்களுடைய பெண்களுக்கு ஏராளமான சீதனங்களைக் கொடுப்பதிலும், விலைமிக்க கல்லறைகளையும் நினைவுக் கூடங்களையும் கட்டுவதிலும், ஏராளமான பணியாள்களை வைத்துக்கொள்வதிலும், அன்னிய நாட்டு இன்பப் பொருள்களை நுகர்வதிலும் பெரும்பாலான பணத்தை வீணுக்கினர். ஏராளமான பணத்தை அவர்கள் உணவிற்காகவும் செலவழித்தனர். மிக்க விலைகொண்ட பனிக்கட்டிகளை அவர்கள் ஆண்டு முழுவதும் பயன்படுத்தினர்; சாமர்கண்டிலிருந்தும் (Samarkand) மற்ற இடங்களிலிருந்தும் மிக்க விலை கொடுத்து அவர்கள் பழங்களை இறக்குமதி செய்தனர். தமது துணிமணிகளை அபுல் ஃபாஸல் ஆண்டுதோறும் தமது வேலையாள்களுக்குக் கொடுத்துவந்தார். அவ் வுயர்குடிமக்கள் துணிமணிகளை அணிவதில் எவ்வளவு ஆடம்பரமாக இருந்தனர் என்பது அதிலிருந்து தெரியவருகிறது. அப் பிரபுக்களும் உயர் அதிகாரிகளும் அணிகலன்களுக்காகவும், யானைகளுக்காகவும், குதிரைகளுக்காகவும், யானைக்கலனைக்காகவும் மிக்க அதிக விலை கொடுத்தனர். ஒவ்வொரு குதிரையின் விலையும் 200 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை இருந்தது; விளையாட்டுகளிலும், சூதாட்டங்களிலும், கூடாரங்களை அலங்கரிப்பதிலும், பேரரசருக்கும் செல்வாக்குப் பெற்றவர்களுக்கும் விலையுயர்ந்த பரிசுகள் வழங்குவதிலும் ஏராளமான

செல்வத்தை அவர்கள் வீணாக்கினர். அவர்களுடைய குற்றேவலர்களின் எண்ணிக்கை உண்மையில் நூற்றுக்கணக்கில் இருந்தது. கெட்டற்ற இவ் வாழ்க்கை வெகு விரைவில் தன் தீய விளைவுகளைக் கொடுக்கவே செய்தது. ஷாஜஹான், அவுரங்கசீப் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் இருந்த பெர்னியர் (Bernier), அக் காலத்திய பிரபுக்களும் உயர் அதிகாரிகளும் ஏழைகளாகியிருந்தனர் என்றும், கடனில் மூழ்கிக் கிடந்தனர் என்றும், செல்வத்தின் அழிவிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள அவர்கள் குடியானவர்களை இரக்கமின்றித் துன்புறுத்தினர் என்றும் குறிப்பிடுகிறார்.

உயர்தர வகுப்புகளுக்கும் கீழ்த்தர வகுப்புகளுக்குமிடையில் ஏற்பட்டிருந்த பெரும் பிளவு அக்பரின் ஆட்சிக் காலத்தில் வெளிப்படையாகக் காணப்பட்டது; ஜஹாங்கீர், ஷாஜஹான் ஆட்சியின்போது அப் பிளவு மேலும் விசாலமுற்றது. செல்வந்தர்கள் அதிகாரத்திலும் இன்ப நுகர்ச்சியிலும் திளைத்துக்கொண்டிருக்கையில், பெருவாரியான மக்கள் சொல்ல முடியாத வகையில் ஏழைகளாக இருந்தனர் என்று ஆக்ராவிலிருந்த டச்சுத் தொழிற்சாலையின் முதல்வர் 1626ஆம் ஆண்டிலிருந்த நிலைமையை மறுசீராய்வு செய்யும்பொழுது குறிப்பிடுகிறார். பெயரளவில் சுதந்திர மனிதர்களாக இருந்தபோதிலும், தொழிலாளி, குற்றேவலன், கடைக்காரன் ஆகியோர் உண்மையில் அடிமைகளேயாவர். குறிப்பாக, தொழிலாளி மிகக் குறைந்த கூலியைப் பெற்றதுமன்றிக் கொடுமைக்கும் உட்படுத்தப்பட்டான். அவன் ஆட்சிப் பணியாளர் கூப்பிட்ட குரலுக்கு ஏனென்று கேட்கும் அடியாளாகவே இருந்தான். அவர்களுள் எவருக்காவது அவனுடைய பணிகள் தேவையாக இருப்பின், அவனைப் பிடித்துப் பணிசெய்யுமாறு கட்டாயப்படுத்தலாம்; அவன் எதிர்ப்புத் தெரிவித்தால் அவனைச் சாட்டையாலும் அடிக்கக்கூடும்; பலவந்தமாக அவனை வேலை செய்யச் சொல்லி முடிந்தபிறகு அவனுக்குக் கொடுக்கவேண்டிய தொகையில் பாதியே கொடுக்கப்பட்டுள்ளது; அல்லது ஒன்றும் கொடுக்காமலேயே அவனை அனுப்பிவிடக்கூடும். அவனுடைய சொந்த உடைமைகள் வெகு சிலவே இருந்தன; அவனுடைய உணவு மிக மோசமாக இருந்தது. அவனுடைய வீடு ஒரு தொட்டிலாகவே இருந்தது. வேலையாள்கள், குற்றேவலர்கள் ஆகியோரின் நிலை அத்துணை மோசமாக இருக்கவில்லை. அவர்கள் ஒரு மாதத்தில் சில நாள்களுக்குத்தான் ஊதியம் பெற்றனர்; மிகச் சிறிய தொகைகளையே அவர்கள் ஊதியமாகப் பெற்றனர். அத் தொகையையுங்கூட அவர்கள் பல மாதங்களாகப் பெறவில்லை. கடைக்காரனோ, சில்லறை வியாபாரியோ சிறிது சுதந்திரம் பெற்றிருந்தான். ஆனால், அவன் சுமாராக நல்ல நிலையில் இருப்பானாயின், அதை அவன் மறைக்க

வேண்டியிருந்தது. இல்லையெனில், அவன்மீது பொய்க்குற்றம் ஒன்று சுமத்தப்பட்டு, அவனுடைய பொருள்கள் கைப்பற்றப்படக் கூடும். பெரும்பாலும் பொருள்களைப் பாதிக்கும் குறைந்த விலைக்கே பிரபுக்களுக்கு அவன் விற்கவேண்டியிருந்தது. ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தின் இறுதியில் இவ்வதிகாரிகளின் கொடுங்கோன்மையை பெர்னியர் குறிப்பாகக் கண்டிருக்கிருர். மேற்குறிப்பிட்ட நிலை 1670ஆம் ஆண்டுவரை நீடித்திருந்தது என்று பெர்னியரும் அவருடைய தோழரான டாவெர்னியரும் (Tavernier) சுட்டிக்காட்டுகின்றனர். கீழ்நிலையில் இருந்தவர்களுக்குத் தாங்கள் இழைத்த கொடுமைகளுக்கு ஈடாக உயர்தர வகுப்பினர் முகலாய இராச்சியத்தின் பொருளாதாரத்தை ஓரளவுக்கு வளம்பெறச் செய்திருக்கலாம். உண்மையில் அவர்கள் அவ்விதமான செயல் எதையும் செய்யவில்லை; இன்ப நுகர்ச்சிகளில் வீணுக்கப்படாத வருமானத்தை அவர்கள் பயன்தராத வகைகளில் பதுக்கி வைத்தனர். ஐரோப்பிய வர்த்தகர்களுக்கு அவர்கள் அளித்த ஆதரவால் நாட்டிற்கு மறைமுக நலன் ஏற்பட்டது என்பது உண்மைதான்; ஏனெனில், அது புதிய வியாபார வாய்ப்புகளைத் துவக்கியது மன்றிப் பின்னுள்களில் பொருளாதார வளர்ச்சிக்கும் வழிகோலியது. தமது சொந்தப் பயனுக்காகவே, இன்பப் பொருள்களையும் புதுமைப் பொருள்களையும் பெறுவதற்காகவே அந்த ஆதரவு காட்டப்பட்டதெனினும், அன்னியர்களால் நிலைநாட்டப்பட்ட வியாபாரம் சாதாரணக் குறைந்த வருமானத்தைப் பெற்றுவந்த சிறிய நடுத்தர வகுப்பினருக்கும் வியாபாரிகளுக்கும் கொஞ்சம் பலனளித்தது. ஆயினும், வந்த இலாபத்தையெல்லாம் அவர்கள் ஜாக்கிரதையாக மறைத்துவைத்தனர்; இல்லையெனில், ஒரு சிறிய ஆடம்பரம் அவர்களிடம் காணப்பட்டதெனினும் அது அதிகாரிகளின் பேராசையைத் தூண்டிவிடும். மிகச் சிறிய காரணங்களுக்காகவும் ஒரு வியாபாரியின் உடைமைகளை அவ்வதிகாரிகள் பறித்துக்கொள்ளத் தயாராக இருந்தனர். மேற்குக் கரையில் வசித்துவந்த சில இந்திய வியாபாரிகள்தாம் நடுத்தர வகுப்பினராக இருந்துகொண்டு, ஜஹாங்கீர், ஷாஜஹான் ஆட்சிக் காலங்களில் ஒருவகைப்பட்ட சிறந்த வாழ்க்கைத்தரத்தை மேற்கொண்டிருந்தனர். ஆனால், அவர்கள்கூடத் தல முகலாய அதிகாரிகளின் வெறுப்பூட்டும் கண்ணேட்டத்திலிருந்து தப்பவில்லை.

வாழ்க்கைத் தொழில் வகுப்பைச் சார்ந்தவர்கள் அரசவையோடு ஒட்டியிருக்கும் நல்வாய்ப்பினைப் பெற்றிருந்தாலன்றி ஒரு நல்ல வருமானத்தை எதிர்பார்க்க முடியவில்லை. ஆகையினுல், அவர்கள் வழக்கம்போல் மிக ஏழ்மை நிலையில் இருந்தனர். ஆனுல், கீழ்த்தர வகுப்பினர்தாம் எல்லோரையும்விட மிக ஏழ்மை நிலை

யில் இருந்தனர். அக்பரின் ஆட்சிக் காலத்திலுங்கூட அவர்கள் பட்டினியால் வாடும் நிலையில் இருந்தனர். பற்றுக்குறையின்பொழுதும் பஞ்சத்தின்பொழுதும் அவர்கள் பல இன்னல்களுக்கு ஆளாயினர். குறைந்தபட்ச ஆடைகளும் ஒருசில வீட்டுப் பாத்திரங்களுமே அவர்களுடைய உடைமைகளாக இருந்தன. சமூகம் ஆற்றும் சேவைகளோ, சமுதாயம் தரும் நலன்களோ அவர்களைத் தொடவில்லை. அவர்களது வாழ்க்கையின் பின்னணியில் பஞ்சத்தின் நிழல் படர்ந்திருந்தது. அப் பஞ்சம் அவ்வப்பொழுது பொருளாதாரக் குழப்பத்தை உண்டாக்கியதுமன்றி அவ்வப்போது அவர்களுடைய வீடுகளைச் சிதைத்தது; குழந்தைகளை அடிமைகளாக விற்கச் செய்தது; அவர்களைக் கொடும் பட்டினியால் வாடச்செய்தது. அக்பரின் மரணத்துக்குப் பிறகு அவர்களுடைய நிலைமை மேலும் விரைவில் மோசமாயிற்று. இவ்வுண்மைக்குப் பல ஐரோப்பியச் சுற்றுப்பயணிகள்—லின்ஸ்சோட்டன் (Linschoten), ஹாக்கின்ஸ் (Hawkins), சால்பங்க் (Salbank), ஜௌர்டைன் (Jourdain), சர் தாமஸ் ரோ (Sir Thomas Roe), பைரார்ட் ட ல வால்லே (Pyrard de la Valle), ட லேயட்(de Laet) சான்றளிக்கின்றனர். அதிகார வர்க்கத்தினரால் கையாளப்பட்ட அடக்குமுறையைப்பற்றி பெர்னியரும் டாவெர்னியரும் அழுத்திக் கூறுகின்றனர். வற்புறுத்தலின்மேல்தான் நிலம் பெரும்பாலும் உழப்பட்டது. முகலாய ஆட்சிப் பணியாளரின் கொடுங்கோலாட்சியின்மீது வெறுப்புக் கொண்டவர்கள் இந்து இராஜாக்களின் ஆட்சிப் பகுதிகளில் இடையருமல் குடியேறிக் கொண்டிருந்தனர். 'குடியானவர்களிடமிருந்து அளவு மீறிச் சுரண்டப்பட்டதனுல் உண்பதற்கு அவர்களுக்குக் காய்ந்துபோன ரொட்டியும் கிடைக்கவில்லை' என்று ஆக்ராவிலிருந்த டச்சுத் தொழிற்சாலையின் முதல்வர் 1616-ல் எழுதினுர். பஞ்சத்தின் விளைவிலிருந்து படிப்படியாக நாடு மீட்புப் பெற்றதைப்பற்றி மெத்வோல்டும் (Methwold) சூரத்திலிருந்த சபையும் வருணிக்கும்பொழுது பின்வருமாறு கூறுகின்றனர்: 'மெள்ள மெள்ளத்தான் கிராமங்களில் மக்கள் வந்து நிரம்புகின்றனர்; இருந்தாலும், அவர்களின் வருகையால்கூட அவைகளும் முன்னேற்றம் பெறுகின்றன. பல்வகைப்பட்ட கவர்னர்களின் அளவு மீறிய பேராசையும் கொடுங்கோன்மையும் ஓர் ஆண்டுவரைதானும் இல்லாவிடில் ஏழைமக்கள் தாம் தலையெடுத்துத் தங்களுடைய ஆடுமாடுகளைச் சரிவரப் பாதுகாத்து நிலத்தை வளம்பெறச் செய்யமுடியும்.' நகரங்களிலிருந்த கைவினைஞர்களின் நிலை அவ்வளவு சிறப்பாக ஒன்றும் இருக்கவில்லை. வியாபாரியின் சுகவாழ்வுக்கும் கைவினைஞனின் வறுமைக்குமிடையில் இருந்த வேறுபாட்டை வான் டுவிஸ்ட (Van Twist) சுட்டிக்காட்டுகிருர். பட்டணங்களில் இருந்த நெசவாளர்கள் மிக

ஏழ்மை நிலையில் இருந்தார்கள் என்பதை எல்லாச் சமகாலத்திய வரலாற்றுக் குறிப்புகளும் ஏற்றுக்கொள்கின்றன.

முந்திய பத்திகளெல்லாம் முகலாயப் பேரரசின் பொருளாதார நிலைகளைப்பற்றிய சுருக்கமாகும். அந் நிலைமைகளை மிக விரிவாக மூர்லாந்து ஆராய்ச்சிசெய்து பொதுவாகப் பின்வரும் முடிவுகளுக்கு வருகிறார். போதுமான அளவு உற்பத்தி செய்யாமையும் விநியோகித்தலைச் சரிவரச் செய்யாமையும் அக்பரின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் பொருளாதார வாழ்க்கையின் முக்கியக் கூறுகளாகும். முன்னதை அதிகப்படுத்தவும் பின்னதைச் சீர்படுத்தவும் ஏதுக்கள் இல்லையாதலால், கொஞ்ச காலம் வறுமை பெருகிவருவதைத் தவிர்க்க முடியாததாயிற்று. 'நிருவாகச் சுரண்டல்' அடிப்படையில் இருந்த தீமையாகும். அது அக்பர் காலத்திலும், அதற்கு முற்பட்ட காலத்திலிருந்தும் இந்திய மக்களின் சக்தியைத் தனக்குக் கீழ்ப்படுத்திப் பயனற்றதாக்கிவிட்டது. உற்பத்தி செய்பவர்கள் ஆடம்பரங்களிலும், ஆர்ப்பாட்டங்களிலும், இன்ப வாழ்க்கையிலும் மூழ்கியிருந்தவர்களின் பிடியில் சிக்கியிருந்தனர்; அந்த ஆடம்பரக்காரர்கள் பதவியேற்றிருந்த காலத்திய நிலைகள், சந்தர்ப்பங்கள் ஆகியவற்றின் காரணமாக எண்ணற்ற விவசாயிகள், தொழிலாளிகள் அனைவரின் பொருளாதார, ஆன்மீக வளர்ச்சிக்காக எம் முயற்சியையும் அவர்கள் செய்ய முடியாமற்போனதுமன்றி, அதே சமயத்தில் தங்கள் சொந்த நலனுக்காகத் தொழிலாளர்களின் மொத்த வருமானத்தில் மிகப் பெரும்பகுதியை அவர்கள் ஒதுக்கிவைத்துக் கொள்ளும்படியாயிற்று. இந்தியாவில் ஆங்கிலேயர்களும் டச்சுக்காரர்களும் வந்திறங்கியதற்குப் பிறகு அந் நிலையில் தவிர்க்க முடியாதவாறு ஒருவித மாறுதல் ஏற்பட்டது. தவிர, ஜஹாங்கீர், ஷாஜஹான், அவுரங்கசீப் ஆகியவர்களின் ஆட்சிக் காலத்தில் பொருள்களுக்கான அதிகத் தேவை, புதிய வாணிகப் பொருள்கள் நுழைக்கப்படுதல், சீர்திருத்தமான செயல்முறைகள் ஆகியவையெல்லாம் — அவற்றையெல்லாம் அவ் வர்த்தகர்கள் ஏற்படுத்தினர் — முகலாயப் பேரரசுக்குச் சில நலன்களைக் கொடுத்தன. ஆனால், சிறிய எண்ணிக்கையாளர்களாக இருந்த பொருளாதார ஒட்டுண்ணிகளின் (parasites) பேணுதலுக்காகத் தங்களது மொத்த வருமானத்தில் பாதியை அளிக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட பெருவாரியான மக்களின் வறுமை நிலையும், முகலாய சிவில் பணியாளர்களின் கொடுங்கொள்ளைக் குணம் தூண்டப்பட்டுவிடுமோ என்று அஞ்சி நடுத்தர வகுப்பினர் செலவு செய்ய விரும்பாமையும் இறக்குமதி வியாபாரத்தின் வளர்ச்சியை உறுதியாகத் தடுத்தன. முகலாயப் பிரபுக்களின் ஏறுமாறான விருப்பங்களை நிறைவேற்றுவதற்காகவே மிகச் சில

பண்டங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. அதற்கு மாருக, நீலம், காலிகோ, வெடியுப்பு போன்ற இந்திய ஏற்றுமதிப் பொருள்களுக்காகப் புதிதாக ஏற்பட்ட அங்காடிகளிலிருந்து வரும் இலாபம் எவ்வளவு சிறப்பாகப் பார்த்தாலும் அரைகுறையாகவே இருந்தது. தவிர, டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் ஆகியவர்களின் வியாபார நடவடிக்கைகள் பயனுள்ளவையாக இருப்பினும், சமுதாயத்தின் பொது வருமானத்தில் பரவலாக அதிகரிப்பு ஏற்படுத்தவில்லை.

புதிய அங்காடிகளை நிலைநாட்டுதல், வியாபார வளர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருந்த பொருளாதார முன்னேற்றத்திற்கான வாய்ப்பெல்லாம் முகலாய நிருவாக முறையினுல் அழிக்கப்பட்டது. அந் நிருவாக முறை உற்பத்தியாளர் உயிர்பிழைப்பதற்காக வெகு சிறிய இலாபத்தையே அவர்களுக்குக் கொடுத்து, அவனது உழைப்பின் பலன்களில் பெரும் பகுதியை உபயோகமற்ற திட்டங்களில் வீணுக்கியது. அக்பரின் காலத்தில் அதிகாரிகள் சுரண்டுதலுக்குத் தடை போடப் பேரரசர் முயன்றும், அது இருக்கவே செய்தது. அவருக்குப் பிற்பட்டவர்களின் ஆட்சிக் காலத்தில் அது நிதானமாக அதிகமாயிற்று. அக்பர் ஏற்படுத்திய நிருவாகத்தின் பொதுத் தரம் சீரழிந்ததற்கேற்றவாறு அச் சுரண்டல் அதிகரித்தது. இறுதியில், அவுரங்கசீப் ஷாஜஹானைச் சிறையிலடைத்த பொழுது, பொருளாதார அமைப்பு முற்றும் சீர்குலையுந் தறுவாயிலிருந்தது. அவுரங்கசீப்பின் முழு ஆட்சிக் காலத்திலும் தேசிய நிதி நிலை நொடிப்பு ஒரு கருமேகம்போலப் படர்ந்திருந்தது. இறுதியில், அது இதர அரசியல், சமூகக் கூறுகளுடன் சேர்ந்துகொண்டு பேரரசைச் சீரழித்தது. பதினேழாம் நூற்றுண்டின் பெரும் பகுதியில் முகலாயப் பொருளாதார அமைப்பின் தீக்குறியான கூறுகளைப்பற்றி மூர்லாந்து பின்வருமாறு நன்கு வருணித்துள்ளார்:

'ஆடையின்றி இருந்த நெசவாளர்கள் மற்றவர்கள் உடுத்திக் கொள்வதற்காக உழைத்தனர்; பட்டினியால் வாடிக்கொண்டிருந்த உழவர்கள் நகரங்களுக்கும் பட்டணங்களுக்கும் உணவூட்டப் பாடுபட்டனர். இந்தியாவை ஒரு தொகுதி என்று எடுத்துக்கொண்டால், அது பல பயனுள்ள பொருள்களைத் தந்து அவற்றிற்குப் பண்டமாற்ருகத் தங்கமும் வெள்ளியும் பெற்றது; அதாவது, கற்களைப் பெற்றுக்கொண்டு ரொட்டி கொடுத்தது. ஒரு பருவத்திலிருந்து மற்றொரு பருவம்வரை பட்டினியால் வாடிக்கொண்டிருந்த ஆண்களும் பெண்களும் உணவு கிடைக்கும்வரை பொறுமையுடன் இருந்தனர்; உணவு கிடைக்காவிடின் — அது அடிக்கடி கிடைக்கவில்லை — அடிமைகளை விற்கும் வியாபாரிதான் அவர்களுக்கு மீட்பு அளித்தான். அதையும் விட்டால், நரமாமிச பட்சணம் (cannibalism),

தற்கொலை அல்லது பட்டினி ஆகிய இவைதாம் அவர்களுக்குக் கதி. அந் நிலையிலிருந்து தப்பித்துக்கொள்ளும் ஒரே வழி அதிகமாகப் பொருள்களை உற்பத்தி செய்வதுதான். அதனோடு வாழ்க்கைத்தரமும் உயரவேண்டும். ஆனால், அப்பொழுதிருந்த நிருவாக முறைகள் அவ் வழியை நன்றாக அடைத்துவிட்டன. அம் முறைகள் அதிக விளைச்சலுக்காகத் தண்டனை விதித்தன; அதிகமாக நுகர்வதற்கான ஒவ்வோர் அறிகுறியும் புதியதாய்ப் பிடுங்கித் தின்பதற்கான அறிகுறி என்று கருதப்பட்டது.'[1]

தன்து மன்சப்தார்களின் கொடுங்கோன்மையாலும், சுயநலம் கருதும் ஆடம்பரத்தாலும் தவிர்க்கமுடியாத நிலையில் ஏற்கெனவே சிதைவுற்றிருந்த பேரரசுக்கு நாதர் ஷா இறுதி வீச்சினைக் கொடுத்தார் என்பது நியாயமான கூற்றேயாகும்.

சமூக வாழ்க்கை, கொள்ளைநோய் முதலியன: முகலாயர் காலத்திய மக்களின் சமூக வாழ்க்கையைப் பற்றி எழுதுவதற்கு ஆதாரமாக வெகு சில சான்றுகளே உள்ளன. சாமானிய மக்களைப் பற்றியும், அவர்களின் வாழ்க்கை முறைகளைப்பற்றியும் சமகாலத்து ஆசிரியர்கள்—குறிப்பாக முகம்மதிய வரலாற்றறிஞர்கள்—ஒன்றுமே கூறுவதில்லை. அவர்களுடைய குறிப்பேடுகள், 'அரசர்கள், அரசவைகள், படையெடுப்புகள் பற்றிய வரலாறேயன்றி, தேசமும் சமூகமும் படிப்படியாகத் தோன்றி வளர்ந்ததைப் பற்றிய குறிப்பல்ல.'[2] உண்மையாகவே ஒரு நோக்குத் திசையிலிருந்து பார்ப்போமாகில், பேரரசின் வரலாறு என்பது லாகூர், டெல்லி, ஆக்ரா ஆகிய இம் மூன்று பட்டணங்களின் அரசர்களுடைய வரலாறு என்றுதான் கருதவேண்டும்.[3] அதற்கு மாறாக, நாட்டுப்புற மக்களின் வாழ்க்கையைப்பற்றி எழுத ஒன்றுமே இல்லையென்று சொல்லலாம். வறுமையின் காரணத்தாலும் கல்வி இல்லாமையினாலும் அம் மக்களின் வாழ்க்கை வருணிக்க முடியாத அளவு கவர்ச்சியற்றும் மாறுபாடற்றும் இருந்தது. உண்மையில் மௌரியப் பேரரசரான (Mauryan Emperor) சந்திரகுப்த மௌரியரின் (Chandragupta Maurya) அரசவைக்கு விஜயம் செய்த மெகஸ்தனீஸின் (Megasthenes) காலந்தொட்டே அவர்களுடைய அன்றாட வாழ்க்கையில் பொது இயல்பு சற்றே மாறியிருக்கக்கூடும். சிக்கனமாக நடத்தப்பட்ட அவர்களது வாழ்க்கையின் அமைதியை அவ்வப்பொழுது சின்னபின்னமாக்கிய பெருந்துயரங்களைப்பற்றிய செய்தி

[1] Moreland, 'From Akbar to Aurangzeb', pp. 304 – 5.
[2] V. A. Smith, 'Akbar', p. 386.
[3] P. Kennedy, 'History of the Great Mughals', i, 3.

கள் நிரம்பக் கிடைக்கின்றன. அவ்வப்போது ஆயிரக்கணக்கான நாட்டுப்புற மக்களை வாரிச் சென்ற பஞ்சங்களைப்பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். கடுங் கொள்ளை நோய்களும், வாந்திபேதி, 'புபோனிக்', 'பிளேக்கு', கடுங்காய்ச்சல் வகைகள் அவ்வப்பொழுது மக்கள் தொகையைக் குறைத்தன. பெருஞ்சேதம் விளைவிக்கும் வெள்ளங்கள் அவ்வப்பொழுது ஏற்பட்டன. தவிர, முகலாய ஆட்சியின்பொழுது காடுகள் மிகப் பரந்திருந்ததனால், காட்டு விலங்குகளின் தாக்குதல்களால் மனிதர்களுக்கும் கால்நடைகளுக்கும் இழப்பும், நிலங்களுக்கும் பயிர்களுக்கும் சேதமும் உண்டாக்கக்கூடிய சாத்தியக்கூறு இப்போதைவிட அப்பொழுது அதிகமாகவே இருந்திருக்க வேண்டும் என்று யூகிக்கலாம்.

நோய்கள் பொறுத்தவரை, பதினேழாம் நூற்றாண்டில் இந்தியாவில் வாந்திபேதி நோய் இருந்தது என்பது உறுதி; தவிர, ஹரித்துவார் (Hardwar), பிரயாக் (Prayag) (அலஹாபாத்—Allahabad), ஒரிஸ்ஸாவிலிருக்கும் பூரி (Puri) போன்ற ஸ்தலங்களில் யாத்திரிகர்கள் ஏராளமாகத் திரண்டதனால், அந்நோய் கொள்ளைநோய்த் தோற்றத்தில் அவ்வப்பொழுது நாடு முழுவதிலும் பரவியிருக்க வேண்டும். முகலாய ஆட்சியின்பொழுது சாலைகளும் மற்றப் போக்குவரத்துச் சாதனங்களும் இல்லையென்று வைத்துக்கொண்டாலுங்கூட, பெரும் புண்ணிய தீர்த்தங்களில் திரண்ட கூட்டங்கள் இப்பொழுது திரளும் அளவுக்கு இல்லாவிடினும் ஏராளமானதாகவே இருந்திருக்க வேண்டும். எலிகளால் உண்டாகும் பிளேக் என்னும் கொள்ளைநோய் 1616-ல் ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்தின் பத்தாவது ஆண்டு முடியும்பொழுது திடீரென்று பஞ்சாபில் தோன்றியது. 1696-ல் மறுமுறை பம்பாயில் தோன்றும்பொழுது பெற்றிருந்த அறிகுறிகளையே அது அப்பொழுதும் பெற்றிருந்தது. 'இக்பால் நாமா' (Iqbal-nama) என்ற நூலின் ஆசிரியரான முகம்மதுகான் Mohammad) Khan) பின்வருமாறு குறிப்பிடுகிறார்: 'நோய் வெளிப்படுந் தறுவாயில் ஓர் எலி தன் வளையிலிருந்து பைத்தியம் பிடித்ததுபோல வெளியில் வந்து வீட்டுக் கதவுகளின்மீதும் சுவர்களின்மீதும் மோதிக்கொண்டு செத்துவிடும். இந்த அறிகுறி தோன்றியவுடனே வீட்டிலிருப்பவர்கள் உடனே வீட்டைவிட்டு காடுகளுக்குச் சென்றுவிடுவார்களாயின் அவர்கள் உயிர் தப்ப முடியும்; இல்லையெனில், அக் கிராமவாசிகள் எல்லோருமே இறந்துவிடுவர்.' எலிகள் அல்லது சுண்டெலிகள் கொள்ளைநோயைப் பரப்புகின்றன, நோய் பரவியுள்ள பகுதிகளிலிருந்து மக்கள் தாமதமின்றி வெளிவந்துவிடவேண்டும் என்ற இவ்விரண்டு உண்மைகளையும் தற்கால மருத்துவக்கலை ஏற்றுக்கொண்டுள்ளது. பிளேக்கு நோயைப்பற்றி இவ்விரண்டு உண்மைகளையும் முந்நூறு

ஆண்டுகட்கு முன்பே நிலைநாட்டிய பெருமை அவ்வாசிரியருக் குரியதாகும். 1616-ல் ஆக்ராவில் டாம் கார்யாட் (Tom Coryat) வந்திறங்கியபொழுது அவ்விடத்தைச் சூறையாடிக்கொண்டிருந்த அக் கொள்ளைநோய் வடஇந்தியா, மேற்கு இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் பரவியிருந்தது. எட்டு ஆண்டுகள்வரை அது நீடித் திருந்தது. அந் நோயைப்பற்றி ஜஹாங்கீர் தமது வாழ்க்கைக் குறிப்புகளில் (Memoirs) எழுதியுள்ளார். அந் நோயின் கொடுமை யும், போதிய மருத்துவ வசதியும், சிகிச்சை முறையும் இல்லாமை யினால் ஏராளமான மக்கள் மடிந்திருக்கவேண்டும். பீஜப்பூரில் அவுரங்கசீப்பின் முகாமில் 1689-ல் அந் நோய் இரண்டாம் முறை தோன்றியது.[1] மீண்டும் மூன்றும் முறையாக 1703-4-ல் தக்காணத்திலும் தோன்றியது. இரண்டாம் முறை தோன்றியதைப் பற்றி காஃபிகான் தெளிவாக வருணித்துள்ளார். மற்ற வகையான கொள்ளைநோய்களைப் பொறுத்தவரை, பேரரசின் கிழக்கு மாகாணங் களில் 1575-ல் ஏற்பட்ட பேரழிவைப்பற்றி அபுல் ஃபாஸல் கூறு கிறார். அந் நோய் குறிப்பாக கௌரில் மிகக் கடுமையாக இருந்தது. அவ்விடத்தில், 'மக்கள் இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கும் முடியாத நிலைக்கு வந்துவிட்டனர்; ஆகையால், அவர்கள் அப் பிணங்களை ஆற்றில் எறிந்துவிட்டனர்' என்று பதௌனி கூறுகிறார். இது ஒருவேளை மலேரியாவின் உக்கிரமான வகையைச் சேர்ந்ததா யிருக்கலாம். கான்கானுனை மூனிம்கானும், அவருடைய பல அதி காரிகளும் பணியாள்களும் இந் நோயினால் அழிந்தனர். ஜஹாங்கீர் 1618-ல் ஆமதாபாத்துக்கு விஜயம் செய்தபொழுது மற்றொரு கடுங் கொள்ளைநோய் அந் நகரைப் பீடித்தது. அதன் உண்மை இயல்பைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. இதனால் ஐரோப்பியர் களும் இந்தியர்களும் ஏராளமாக இறந்துபோனார்கள். இக்கொள்ளை நோயும் 1918-ல் இந்தியாவில் பெரும் ஆட்சேதம் விளைவித்த 'இன்ஃபுளுயன்ஸா' எனப்படும் ஜுரமும் ஒன்றே என்று தற்கால ஆசிரியர் ஒருவர் கூறுகிறார். ஆனால், அவ்விரண்டுமே ஒன்று என்று நிச்சயமாகச் சொல்வதற்கில்லை.[2]

மெக்னா முகத்துவாரத்தில் (Meghna Delta) முகலாயர் காலத் தில் 1584-5-ல் ஏற்பட்ட வெள்ளம், இந்தியாவில் பல பகுதிகளை யும் எப்போதுமே மிகக் கடுமையாகப் பாதிக்கும் வெள்ளங்களுக்கு உதாரணமாகும். பக்லா சர்க்கார் (Bagla Sarkar) நிலப் பரப்புதான் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. அப் பகுதி

[1] Elliot and Dowson, vol. vii, p. 337; Grant Duff, 'History of the Mahrattas', ed. 1921, vol. i, p. 274 and note.

[2] See, 'History of Jahangir', by Beni Prasad (Allahabad University Studies in History).

பகர்கன்ஞ் (Bakarganj) என்ற தற்கால மாவட்டத்தின் தெற்குப் பகுதிக்கு நிகரானதாகும். அங்கே, அபுல் ஃபாஸலின் கூற்றின்படி, 'ஏறக்குறைய 200,000 உயிர்ப்பிராணிகள் இவ் வெள்ளத்தில் மூழ்கி மடிந்தன.'[1]

காடுகளும் இணைநிலத்துக்குரிய உயிரினத் தொகுதிகளும்: முகலாயக் காலத்தில் காடுகள் மிகப் பரந்திருந்தன என்பதற்கும், இப்பொழுது ஜனத்தொகையை அதிகமாகப் பெற்றிருக்கும் பகுதிகளில் அப்போது காட்டு விலங்குகள் திரிந்துகொண்டிருந்தன என்பதற்கும் பல்வகைச் சமகாலக் குறிப்பேடுகள் சான்று கூறுகின்றன. 'இந்துஸ்தானத்தில் சமவெளியின் பல இடங்கள் அடர்ந்த முட்செடிகளைக் கொண்டிருப்பதனால், பர்கானுவின் மக்கள் இக் காடுகளை நம்பி அவற்றில் தஞ்சம் புகுகின்றனர்; அவ்விடங்களை எவரும் அணுகமுடியாததைப் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் நெடுங்காலமாகக் கலகம் செய்துகொண்டு தீர்வைகளையும் செலுத்த மறுத்துவிடுகின்றனர்' என்று பாபரே தமது நினைவுக் குறிப்புகளில் (Memoirs) எழுதுகிறார்.[2] ஜான்புரியிலிருந்து (Jaunpur) அலகாபாத்துக்குச் (Allahabad) செல்லும் சாலை தொடர்ச்சியான காட்டின் வழியாகச் சென்றது என்று வில்லியம் ஃபின்ச் (1608-11) கூறுகிறார். கோக்ரா (Gogra) நதியின் நெற்குக் கரையில் காடுகள் பரந்திருந்தன என்று அபுல் ஃபாஸல் 'அக்பர்நாமா'வில் குறிப்பிடுகிறார். மலையடிவாரக் காடுகள் ஐக்கிய மாகாணங்களிலும் (United Provinces) பீஹாரிலும் இப்பொழுது இருப்பதைவிட அப்பொழுது மேலும் வெகுதூரம்வரை பரந்திருந்தன என்பதில் ஐயமில்லை.[3] பாபர் காலத்தில் கோக்ரா நதிக்கு அடுத்தும், பெஷாவரின் (Peshawar) சுற்றுப்புறத்திலும் கிடந்த நிலப்பகுதியில் ஏராளமான காண்டாமிருகங்கள் இருந்தன. தற்காலத்திய அலகாபாத் மாவட்டத்திலிருந்த காரா (Karrah) என்ற இடத்தில் காட்டு யானைகள் காணப்பட்டன. ஆக்ரா, மாளவம் (Malwa), மார்வார் (Marwar), பீஹார் போன்ற இடங்களில் அக்பர் அவற்றை வேட்டையாடினார். அவ்விடங்களிலெல்லாம் அவை இப்பொழுது காணப்படுவதில்லை. தற்போதைய காஸிப்பூர் மாவட்டம் முழுவதுமே அக் காலத்தில் யானை, காண்டாமிருக மந்தைகள் மொய்த்துக்கொண்டிருந்ததாகத் தெரிகிறது. மதுராவுக்கு (Mathura) அருகில் அக்பர் புலிகளைச் சுட்டார்; மற்ற மாவட்டங்களிலும் சில வேளைகளில் அவை கொல்லப்பட்டன; இப்பொழுது அம் மாவட்டங்களிலெல்லாம் அவை

[1] V. A. Smith, 'Akbar', p. 399.

[2] See P. Kennedy, 'History of the Great Moghuls', i, 145.

[3] H. W. Moreland, 'India at the Death of Akbar', p. 7.

காணப்படுவதில்லை. வடமேற்கு இந்தியா, மத்திய இந்தியா ஆகியவற்றின் பெரும் பகுதியில் சிங்கங்கள் திரிந்துகொண்டிருந்தன. அவற்றில் வெகு சில வகைகளே இப்பொழுது கத்தியவாரில் (Kathiawar) தென்படுகின்றன. ஜாலௌருக்குச் (Jalaur) செல்லும் சாலையில் சிங்கங்களும் புலிகளும் இருந்தன என்று வில்லியம் ஃபின்ச் எழுதுகிருர்.[1] மாண்டுவிலிருந்த [Mandu—தற்போது தார் இராச்சியத்தில் (Dhar State) உள்ளது] தமது முகாமை எப்படிச் சிங்கங்கள் துன்புறுத்தின என்பதை எட்வர்ட் டெர்ரி கூறுகிருர். சூழ்ந்திருந்த காடுகளில் ' புலிகளும், இதர கொடுவிலங்குகளும், காட்டு யானைகளும் ஏராளமாக இருந்தன ' என்றும் அவர் கூறுகிருர்.[2] பேரரசர் ஜஹாங்கீரும் அவருக்குப் பரிவாரமாகச் சென்றவர்களும் சிங்கங்களை வேட்டையாடி, வில்களாலும், சிறு துப்பாக்கிகளாலும், வேல்களாலும் அவற்றைக் கொல்வது வழக்கமாயிருந்தது. கி.பி. 1623-ல் தீட்டப்பட்ட நேர்த்தியான முகலாய ஓவியம் ஒன்றில், பாரி டோ ஆப்பைச் (Bari Doab) சார்ந்த ரஹீமாபாத் பர்காணுவில் (Rahimabad pargana) பேரரசர் சிங்கத்தைச் சுடும் காட்சி தென்படுகிறது.[3] இப்பொழுது அவ்வோவியம் கல்கத்தாவிலுள்ள இந்தியன் மியூசியத்தில் (Indian Museum at Calcutta) உள்ளது. இதுபோன்ற சிங்க வேட்டை ஒன்றின்பொழுது, 1611-ல் ஜஹாங்கீர் காயமுற்ற ஒரு சிங்கத்தால் திடீரென்று தாக்கப்பட்டார்; ஃபின்ச்சின் கூற்றின்படி, மிக்க துணிச்சலுடன், இராஜபுதன இராணுவ அதிகாரியான அனுப் ராய் (Anup Rai) என்பவர் பேரரசரைக் காப்பாற்றினார். இளவரசர் குர்ரம் (Prince Kurram) (பின்னல் ஷாஜஹான்) அச் சிங்கத்தைக் கொன்று அனுப் ராயைக் காப்பாற்றவில்லையெனில், அனுப் ராயே கொல்லப்பட்டிருப்பார்.[4] அனுப் ராயின் விசுவாசத்துக்காகவும் வீரத்திற்காகவும் பேரரசர் அவரை 5,000 ஆள்கள் கொண்ட மன்சப்தாராக்கினர். இச் சந்தர்ப்பத்தில் மட்டுமே ஷாஜஹான் ஆபத்தின்போது தம் வீரத்தைக் காட்டினர் என்று கருதக்கூடாது; ஏனெனில், 1854-ல் லண்டன் (London) நகரில் விற்கப்பட்ட சிறப்பு வாய்ந்த முகலாயச் சித்திரம் ஒன்றில், தமது அரசவையாளர் ஒருவரைத் தாக்கிக்கொண்டிருந்த சிங்கத்தை ஷாஜஹான் கிழித்தெறிந்ததாகக் காட்டப்பட்டுள்ளது.[5] பேரரசர் தலைநகரான ஆக்ராவுக்கருகிலும், ஒருவேளை, மற்ற நகரங்களின் அருகிலும்கூடப் பேணப்பட்டுவந்த விசாலமான வேட்டைக் களங்

[1] W. Foster, 'Early Travels in India', p. 174.

[2] See, V. A. Smith, 'Akbar', p. 401.

[3] 'Memoirs of Jahangir', vol. ii, p. 284; P. Brown, 'Indian Painting, &c.,' p. 132.

[4] W. Foster, 'Early Travels in India', p. 154.

[5] V. A. Smith, 'History of Fine Art in India', p. 424.

கள் முகலாயர் காலத்தில் காடுகள் இருந்தமையைக் குறிக்கின்றன. பேரரசருக்கும் முகலாயப் பிரபுக்களுக்கும் வேட்டையாடுவதற்கான வாய்ப்புகளைக் களங்கள் நிரம்பக் கொடுத்தபோதிலும், அவற்றி லிருந்த பெரிய, சிறிய வேட்டை விலங்குகளின் நாசவேலைகளால் பயிர்கள் ஓரளவு பாதிக்கப்பட்டிருக்கவேண்டும்.

திறந்தவெளிகளில் ஆடப்பட்ட விளையாட்டுகள்: திறந்த வெளிகளுக்கான பயிற்சிகளிலும் விளையாட்டுகளிலும் தொடக்க கால முகலாயப் பேரரசர்களெல்லாம் மரபுரிமையான விருப்பம் கொண்டிருந்தனர். பாபரின் வாழ்க்கை நீண்ட ஒரு படை யெடுப்பாகவே இருந்ததனால், அவருக்குப் பிறகு வந்தவர்களைவிட அவருக்கு இத் துறையில் வாய்ப்புக் குறைந்தே இருந்தது. இருந்த போதிலும், அவருக்குக் கிடைத்த ஓய்வு நேரத்தை அவர் வேட்டை யாடுவதில் கழித்தார்; அவர் தம்மைச் சுகநிலையில் வைத்துக்கொள்ள முயன்றதுமன்றி, மட்டுமீறிய குடிப்பழக்கத்தினால் உண்டான தீய விளைவுகளைத் தடுப்பதற்காகத் தமது வழியில் குறுக்கிட்ட ஒவ்வோர் ஆற்றையும் நீந்தியே கடந்தார். அவர் இறப்பதற்கு ஓர் ஆண்டுக்கு முன்புகூட அவர் கங்கையை (Ganges) நீந்திக் கடந்தார். அப்பொழுது 'ஒவ்வொரு கைவீச்சினையும் எண்ணி னேன்' என்று அவர் தமது வாழ்க்கைக் குறிப்புகளில் எழுதுகிறார். 'நான் அதை 33 வீச்சுகளில் கடந்தேன்; பிறகு ஓய்வெடுக்காம லேயே திரும்பி நீந்திவந்தேன். எல்லா ஆறுகளையும் நான் நீந்திக் கடந்துள்ளேன்; கங்கையை மட்டுமே கடக்கவேண்டியிருந்தது.'[1] ஹுமாயூனின் விளையாட்டுச் சாதனைகளைப்பற்றிப் போதிய செய்தி கள் கிடைக்கவில்லை. எனினும், அவர் அபினி அருந்தும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தபோதிலும், தமக்கு முன் இருந்த தைமூரிய வமிசத் தைச் சார்ந்த மற்றவர்களைப்போல அவரும் வீரம் படைத்தவராக இருந்தார்; ஒரு வீரர் என்ற நிலையில்வலிமையும் துணிச்சலும் தேவைப்பட்ட எச் செயலுக்கும் அவர் ஆயத்தமாக இருந்தார். சிற் சில வேளைகளில் அவரது தைரியம் அவரை மடத்துணிச்சலை நோக் கிச் செலுத்தியது. உதாரணமாக, இந்தியாவின் மிக வலிமையான கோட்டையின் அணுகமுடியாத பக்கத்தின்மீது அவர் ஏறினார்.[2] படைபலத்தைக்கொண்டு தமது ஆதிக்கத்தை நிலைநாட்டியதற்குப் பிறகு அக்பர் தமது ஓய்வு நேரத்தை வேட்டையாடுவதில் கழித்தார். அதில் அவருக்குப் பேராசை இருந்தது; அதிகச் செலவு பிடித்த

[1] L. Binyon, 'Court Painters &c.,' Introduction by T. W. Arnold' p. 13.

[2] P. Kennedy, 'History of the Great Moghuls', vol. i, p. 172.

தமது வேட்டையாட்டங்களில் தமது முக்கிய அரசவைப் பிரபுக்கள் பங்கு பெறவேண்டுமென்று அவர் எதிர்பார்த்தார். உண்மையில், விளையாட்டுகள், சூதாட்டங்கள் என்ற இரண்டு வழிகளில் முகலாயப் பிரபுக்கள் தமது பெருவருமானத்தைச் செலவழித்தனர். அக்பரே குதிரைகளைப்பற்றியும், ஒட்டகங்களைப்பற்றியும், யானைகளைப்பற்றியும், நாய்களைப்பற்றியும் எல்லாம் அறிந்திருந்தார். அவர் ஒரு சிறந்த குதிரைச் சவாரி செய்பவராவார். தவிர, ஜஹாங்கீர் தமது வாழ்க்கைக் குறிப்புகளில் எழுதுவதுபோல, மிகக் கொடூரமான யானைகளையும் அக்பரால் அடக்க முடிந்தது. தமது குதிரை வீரர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக, இராணுவப் படையெடுப்பு ஒன்றைப் புதிதாகத் தொடங்குவதற்குமுன் ஒரு பெரிய வேட்டையாடலை அவர் நடத்துவார். சிறப்புப் பயிற்சி பெற்ற சீட்டாக்களைக் (Cheetahs) கொண்டு அவர் மறிமான்களைத் துரத்தும்படி செய்வதில் பெருமகிழ்ச்சியுற்றார். புலியாகட்டும், சிங்கமாகட்டும் அல்லது மற்ற எந்தக் கொடூர விலங்காகட்டும், அவர் அதைத் தாக்கத் தயாராக இருந்தார்; அவ் விலங்கை வீழ்த்துவதற்காக எவ்வளவு சலிப்பையும் தாங்குவதற்கும் அவர் தயாராக இருந்தார். அவர் குதிரைமீது ஏறிக்கொண்டு முழு வேகத்தில் செல்லும் மறிமான்களை ஈட்டியால் குத்தும் காட்சியைக் காட்டும் அழகிய முகலாய ஓவியப் படம் ஒன்று பிரிட்டிஷ் மியூசியத்தி லுள்ளது.[1] ஒரு காலத்தில் பிகானீர் பாலைவனத்தில் (Bikaner Desert) காட்டுக்கழுதைகளின் கூட்டம் ஒன்று அவரை எதிர் நோக்கி வர, அவர் அதைப் பின்துரத்திச் செல்லுவதில் முனைப்பாக இருந்ததனால், அவருடைய பணியாள்களிடமிருந்து ஒதுக்கப்பட்டுத் தாகத்தால் உயிர்நீங்கும் நிலைக்கு வந்துவிட்டார்.[2] வேட்டைப் பறவைகளை வளர்த்துப் பழக்கும் கலையும் அக்பர் விரும்பிய விளையாட்டாகும். பேரரசப் பணித்துறையில் இருந்த வல்லூறு வளர்ப்பவர்களைப் (falconers) பற்றியும், அவரது பல்வகைப்பட்ட பறவைகளைப்பற்றியும் அபுல் ஃபாஸல் முழு விவரங்களைக் கொடுக்கின்றார். தவிர, 'மாட்சிமை பொருந்திய பேரரசர் தாராள மனப்பான்மையாலும், தமது அரசவையைப் பகட்டாரவாரத்துடன் மிளிரச் செய்யும் விருப்பத்துடனும் வல்லூறுகளுடனும் வேட்டையாட விரும்பினார். ஆழ்ந்து பார்க்காதவர்கள் வேட்டையாடுதலே இவரது நோக்கமாகும் என்று கருதுவர்' என அபுல் ஃபாஸல் கூறுகிறார். பேரரசரால் வளர்க்கப்பட்டுவந்த பருந்துகளும் மற்றப் பறவைகளும் விலங்குகளும் ரால்ப் ஃபிட்ச் (Ralph Fitch) (*1583-91*) என்ற சுற்றுப் பயணிக்கு வியப்பூட்டின; வில்லியம் ஹாக்கின்ஸ் (*1608-13*)

[1] See, L. Binyon, 'Court Painters &c.,' p. 28.
[2] Smith, 'Akbar', p. 339.

சான்றுப்படி, ஜஹாங்கீர் வளர்த்துவந்த பறவைகளின் எண்ணிக்கை மிகப் பெரிதாகவே இருந்தது.[1]

முகலாய அரசர்கள் தங்களது வேட்டை விருப்பத்தைச் சந்தேகமின்றி அவர்களுடைய மூதாதையரான மங்கோலியரிடமிருந்து மரபுரிமையாகப் பெற்றுர்கள். போரும் வேட்டையாடுதலும் அம் மங்கோலியரின் தேசீயப் பொழுதுபோக்குகளாக இருந்தன. செங்கிஸ்கானின் (Chengiz Khan) பனிக்காலத்திய பெருவேட்டையாட்டங்கள் இராணுவ நடவடிக்கையைப் போலிருந்தன. 'பெரிய நிலப்பகுதிக்கு வேலியிடப்பட்டது. சிறிதுசிறிதாக இவ் வட்டம் சுருங்கிக்கொண்டேவந்து ஒரு சிறிய வட்டமாகியது. அதில்தான் கானும் (Khan), தங்கள் கணவனைப்போலவே தாங்களும் திறந்தவெளிகளில் வாழ்ந்துவந்த அவரது மனைவிகளும், அவருடைய நெருங்கிய பணியாள்களும் முதலில் நுழைந்தனர்; பிறகு அவர்கள் வேட்டையாடி விலங்குகளைக் கொன்று சலிப்புற்றதற்குப் பிறகு பிரமுகர்களின் முறை வந்தது; இறுதியில், அவ் வட்டம் எல்லோருக்கும் திறந்துவிடப்பட்டது.'[2]

தமது ஆட்சியின் ஏழாம் ஆண்டில் ஜஹாங்கீர் இடைவிடாமல் இரண்டு மாதம் இருபது நாள்கள் வேட்டையாடினுர் என்பதிலிருந்து ஜஹாங்கீர் வேட்டையாடுவதில் எவ்வளவு விருப்பம் கொண்டிருந்தார் என்பது எண்பிக்கப்படுகிறது. இவ்விதச் சுற்றுலாக்களின்பொழுது கொல்லப்பட்ட விலங்குகளைப் பற்றி ஒழுங்காக ஒரு பதிவேடு வைக்கப்பட்டிருந்தது போலும்; ஏனெனில், அவர் நாற்பத்தேழு வயதடைந்திருந்தபொழுது, பன்னிரண்டு வயதிலிருந்து தாம் வேட்டையாடிக் கொன்ற எல்லா விலங்குகளையும் பற்றிய பட்டியல் ஒன்றைத் தயாரிக்குமாறு அவர் 1616-ல் உத்தரவிட்டார். அவருடைய வாழ்க்கைக் குறிப்புகளின்படி 17,167 விலங்குகளை அவர் கொன்றுர்; தவிர, 11,365 விலங்குகள் அவருக்கு எதிரில் கொல்லப்பட்டன. இவ் வெண்ணில், மூன்றில் இரண்டு பங்கு புல் மேயும் விலங்குகளையோ, பறவைகளையோ குறிக்கும்.[3] சீட்டாக்களைக்கொண்டு மறிமான் வேட்டையாடுதல் அக்பரின் காலத்தில் இருந்ததுபோல இவர் காலத்திலும் பெரும்பாலோரால் விரும்பப்பட்டது என்று எட்வர்ட் டெர்ரி கூறுகிறுர்.[4] பாபரையும் ஜஹாங்கீரையும் போலல்லாமல், ஷாஜஹான் தமது சொந்த வாழ்க்கைக் குறிப்புகளை எழுதிவைக்கவில்லை. ஒருவேளை இக் காரணத்தை

[1] W. Foster, 'Early Travels', pp. 17, 104.
[2] P. Kennedy, 'History of the Great Moghuls', vol. i, p. 20.
[3] P. Kennedy, 'History of the Great Moghuls,' vol. ii, p. 16.
[4] W. Foster, 'Early Travels', p. 312.

முன்னிட்டு அவரது வேட்டையாடுவதற்கான விருப்பத்தைப் பற்றி நாம் அதிகமாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆனாலும், அவர் சிறுவனாக இருக்கும்பொழுது குடும்பத்தில் வேட்டையாடும் பழக்கத்தை அவர் நிச்சயமாகப் பின்பற்றினார்; முந்திய பத்தி ஒன்றில் குறிப்பிட்டதுபோல, தமது அஞ்சாமைக்கும் வலிமைக்கும் அவர் ஒரு சந்தர்ப்பத்தில் சான்று காட்டினார். அவுரங்கசீப்பின் வேட்டைப் பயணங்களைப்பற்றி பெர்னியரின் குறிப்பேடுகளிலிருந்து நமக்கு அதிகமாகத் தெரியவருகிறது. அரசன் ஒரு சிங்கத்தைக் கொல்லுதல் ஒரு நல்ல சகுனம் என்றும், ஆனால் அவ் விலங்கு தப்பி ஓடிவிட்டால் அரசாங்கத்திற்குப் பெருந் தீங்கு ஏற்படும் என்றும் கருதப்பட்டதென பெர்னியர் எழுதிவைத்துள்ளார். நான்கு ஐந்து நாள்கள்வரை இடைவிடாமல் காட்டில் முகாமிடுவது அவுரங்கசீப்பின் வழக்கமாகும். அவர் கொன்ற சிங்கத்தின் அளவுகள் எடுக்கப்பட்டு அதன் பற்களைப்பற்றிய விவரங்களும் நகங்களைப்பற்றிய விவரங்களும் குறித்துக்கொள்ளப்பட்டன. அரசவை வட்டாரங்களில் நடப்பிலிருந்த கதை ஒன்றை பெர்னியர் இது சம்பந்தமாகக் குறிப்பிடுகிறார். ஒரு கழுதை ஒரு சிங்கத்துக்கு இரையாகக் கட்டப்பட்ட பொழுதெல்லாம் அதற்கு ஏராளமான அபினி ஊட்டப்பட்டது. அச் சிங்கம் அதைத் தின்று வியப்பதிர்ச்சியுறுவதற்காக இங்ஙனம் செய்யப்பட்டது என்று அவர் கூறுகிறார். ஆனால், அவ் வழக்கம் பழக்கத்திலில்லை என்றும், தனது இரையை உண்ட சிங்கம் தூங்க விரும்பும் என்பதனால் அப் பழக்கத்திற்குத் தேவையில்லை என்றும் பெர்னியர் மேலும் கூறுகிறார்.

மிருகச் சண்டைகள் முகலாயப் பேரரசர்கள், அவர்களுடைய அரசவையாளர்கள் அனைவராலும் விரும்பப்பட்ட மற்றொரு பொழுதுபோக்காகும். நாள்தோறும் பேரரசர் தமது குடிமக்களுக்குக் காட்சியளிப்பதற்காகக் கட்டப்பட்டிருந்த முகமாடியின் எதிர்ப்புறத்தில் இருந்த பரந்த திறந்த வெளியில் அச் சண்டைகள் நடந்தன. யானைகளும், எருமைகளும், செம்மறியாட்டுக் கடாக்களும், இதர விலங்குகளும் பறவைகளும் இச் சண்டைகளில் கலந்துகொண்டன. இச் சண்டைகள் முகலாயர்களால் புதிதாக நுழைக்கப்பட்டவையல்ல; முகலாயர் காலத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே வட இந்தியாவில் அவை பழக்கத்தில் இருந்தன. சிறப்பாக ஐரோப்பியச் சுற்றுப்பயணிகள் யானைச்சண்டைகளைப் பார்த்து மிக்க வியப்புற்றனர். அதுபோன்ற பயணிகளில் டாம் காரியட் ஒருவராவர் (1621-27). இவர் இதைப்பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்: 'வாரத்தில் இருமுறை தமக்கு நேரில் யானைச்சண்டைகள் நடக்கும். உலகத்திலேயே இது ஒரு துணிகரக் காட்சியாகும். சில யானைகள் 13½ அடி உயரம் இருந்தன. இரு மலைகளைப்போல்

அவை ஒன்றையொன்று மோதித் தள்ளிக்கொண்டிருந்தன. சண்டையின் மத்தியில் சில வாணவெடிகள் வெடித்து அவைகளைப் பிரிக்காவிடின் அவை தம்முடைய பயங்கரத் தந்தங்களால் ஒன்றை ஒன்று குத்திக்கொண்டு முடிந்திருக்கக்கூடும்.'[1] ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்தில் நடந்த இச் சண்டைகளை எட்வர்ட் டெர்ரியும் அதேபோன்ற சொற்களில் வருணிக்கிறார்; யானைப்பாகர்கள் காயமுறுவது அரிதே என்றும் அவர் வற்புறுத்திக் கூறுகிறார்.[2] இது உண்மையாயிருக்குமாயின், அக்பர் காலத்துக்குப் பிறகு நிலைமை மாறியிருக்கவேண்டும். அப்பொழுது, இந்த யானைச்சண்டைகள் அடிக்கடி யானைப்பாகர்களின் மரணத்தை விளைவித்தன. இச் சண்டைகளெல்லாம் ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமை தவிர மற்ற நாள்களிலெல்லாம் நண்பகலில் நடைபெற்றன என்று வில்லியம் ஃபின்ச் கூறுகிறார்; ஞாயிறன்று சண்டைகள் நடைபெறவில்லை. அவர் மேலும் கூறுகிறார்: 'அதற்கு மாறுகச் செவ்வாய்க் கிழமை இரத்தம் சிந்தும் நாளாக இருந்தது; சண்டையிடும் விலங்குகளின் இரத்தமும் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களின் இரத்தமும் அந் நாளில் சிந்தப்பட்டன; அரசர் நீதி வழங்கியதுமன்றி இரத்தம் சிந்தப்படுவதையும் பார்த்தார்.'[3] பேரரச அவைக்கு முன்னல் நடைபெற்ற இச் சண்டைகளில் காட்டு விலங்குகள்மட்டுமே கலந்துகொண்டன என்பதில்லை. பழமை வாய்ந்த ரோமாபுரியின் முறையைப் பின்பற்றி மனிதர்களுக்கிடையில் நடந்த மல்யுத்தங்களை அக்பர் பார்த்த செயல் தந்தை அக்வாவிவாவுக்கும் (Father Aquaviva) தந்தை மான்சர்ரேட்டுக்கும் (Father Monserrate) வியப்பூட்டியது என்று கூறப்படுகிறது. இதுபோன்ற கேளிக்கைப் பொழுதுபோக்கு ஜஹாங்கீர், ஷாஜஹான் ஆட்சிக் காலங்களிலும் நீடித்தது.[4] 'கொடிய சிங்கம் ஒன்றுடன் சண்டை செய்ய ஜஹாங்கீர் ஒரு பட்டானியனுக்கு உத்தரவிட்டார்; அவன் கொல்லப்பட்டதற்குப் பிறகு அம் மிருகத்துடன் சண்டை செய்ய மேலும் பத்து ஆள்களை அவர் ஏவினர்' என்று ஹாக்கின்ஸ் கூறுவதிலிருந்து மனிதர்களுக்கும் மிருகங்களுக்குமிடையில் நடந்த சண்டைகளைப் பற்றியும் நாம் தெரிந்துகொள்கிறோம். அப் பத்து ஆள்களும் படுகாயமுற்றனர்; அவர்களுள் மூவர் உயிரிழந்தனர்.[5] 'பேரரசர் மகிழ்ச்சி நிலையில் இருக்கும்பொழுது இதுபோலவே மூன்று மாதங்களைக் கழித்தார். அவருடைய இன்பத்திற்காகப் பலர் உயிரிழந்தனர்; பலர் கடுங்காயமுற்றனர்.' என்று ஹாகின்ஸ் கூறுகிறார்.

[1] W. Foster, 'Early Travels', p. 247.
[2] Ibid., p. 306.
[3] Ibid., p. 184.
[4] V. A. Smith, 'Akbar', p. 340.
[5] W. Foster, 'Early Travels', p. 111.

தங்களுடைய மங்கோலிய, டார்ட்டார் (Tartar) மூதாதையோரிடமிருந்து முகலாயப் பேரரசர்கள் மரபுரிமையாகப் பெற்ற விரும்பத்தகாத இயல்புகளில் கொடுமை இழைக்கும் தன்மையும் ஒன்றாகும். 'மனிதன் ஒரு நாயே' என்று கூறிய நெப்போலியனின் (Nepolean) புகழ்மிக்க கூற்று முகலாய இந்தியாவிற்கு விபரீதமாகப் பொருந்துவதாயிருந்தது. அந்நாட்டு அரசர்கள், பேரரசர் முதற்கொண்டு கீழ்த்தர பௌஜ்தார் வரை யாவரும் மனித உயிரைப் பொருட்படுத்தவில்லை.[1]

மேற்குறிப்பிட்ட கொடுமைகள் இல்லாததும் திறந்தவெளிகளில் ஆடப்படுவதுமான விளையாட்டுகள் பல முகலாயர்களுக்கிடையில் காணப்பட்டன. மல்யுத்தம், 'போலோ', புறக்களைப் பறக்கவிடுதல் ஆகியவை பெரும்பாலோரால் விரும்பப்பட்ட பொழுதுபோக்கான விளையாட்டுகளாகும். இந்தியச் சிலம்பு விளையாட்டுகளில் மிகச் சிறப்பு வாய்ந்ததான மல்யுத்தம் இந்திய இளவரசர்களால் எக் காலமும் ஆதரிக்கப்பட்டுவந்தது. அக்பர் ஆட்சிக் காலத்திய பேரரசப் பணியாளர் தொகுதியில் பாரசீகத்திலிருந்தும் (Persia), துர்ரானிலிருந்தும் (Turan), வட இந்தியாவிலிருந்தும், மேற்கு இந்தியாவிலிருந்தும் வந்த குத்துச்சண்டைக்காரர்களும் மல்யுத்தக்காரர்களும் இருந்தனர். அக் காலத்திலிருந்த சிறப்புமிக்க சிலம்ப வித்தைக்காரர்களின் பட்டியலைக் கொடுக்கும் அபுல் ஃபாஸல், நாள் தோறும் பேரரசரின் முன்னிலையில் சம வலிமைபெற்ற போட்டியாளர்களின் இரண்டு சோடிகள் பெரும் பரிசுகளுக்காகச் சண்டையிட்டனர் என்று கூறுகிறார்.[2] முதன் முதலாகக் கீழ்த்திசை நாடுகளில் தோன்றிய சுகன் (Chugan) அல்லது சௌகன் (Chaugan) என வழங்கிவந்த போலோ (Polo) விளையாட்டு, பாரசீகத்து சஸ்ஸானிய அரசர்கள் (Sassanid Rulers of Persia), நீதிக்குப் பேர்போன நூருத்தீன் (Nurruddin, the Just), மாபெரும் சலாவுத்தீன் (The Great Saladin) போன்ற அரசர்களின் விருப்பத்தையும், இதர முஸ்லீம் அரசர்களின் விருப்பத்தையும் பெற்றதாகும். டெல்லியின் தொடக்ககால முகம்மதிய அரசர்கள் இதை இந்தியாவில் நுழைத்தனர். லாகூரில் இவ் விளையாட்டை ஆடிக்கொண்டிருக்கும் பொழுதுதான் சுல்தான் குத்புத்தீன் ஏய்பெக் (Sultan Kuttbuddin Aibak) மரணமுற்றார். இந்தியாவிலும், ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் இப்பொழுது ஆடப்படும் விளையாட்டிலிருந்து குறிப்பிட்ட சில அம்சங்களில் அது வேறுபட்டிருக்கக்கூடும். இப்பொழுது ஆடப்படும் ஆட்டம், அஸ்ஸாம் (Assam), பர்மா (Burma) எல்லைகளில்

[1] P. Kennedy, 'History of the Great Mughals', vol. ii, p. 3.
[2] 'Ain-i-Akbari', trans. Blochmann, vol. i, p. 253.

இருக்கும் மணிபூரில் (Manipur) 1864-ல் இருந்த ஆட்டத்தையும், சிந்துநதியின் மேற்புறத்தில் உள்ள பால்டி (Balti), சித்ரால் (Chitral) ஆகிய இடங்களில் இருந்த ஆட்டத்தையும் ஒத்திருக்கிறது. இந்த ஆட்டத்தைப்பற்றி பாபர் தமது வாழ்க்கைக் குறிப்புகளில் சொல்லுகிருர்; அக்பர் அதன்மீது பெருவிருப்பங் கொண்டிருந்தார். 'ஆழ்ந்து பார்க்காதவர்கள் இவ்வாட்டத்தை வெறும் கேளிக்கைப் பொழுதுபோக்கு என்றும், வெறும் விளையாட்டு என்றும் கருதுவர்; ஆனல், இன்றும் உயர்ந்த கருத்துகளைக் கொண்டிருப்பவர்கள் இது செயல் விரைவையும் முடிவுக்கு வரும் திறமையையும் பெறுவதற்கான சாதனமாகும் என்று கருதுகின்றனர். இவ்வாட்டத்தினல் பலம் வாய்ந்தவர்கள் குதிரைச் சவாரி செய்யக் கற்றுக் கொள்கின்றனர்; குதிரைகளும் விரைவியக்கச் சாதனைகளைப் புரியவும் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படியவும் கற்றுக்கொள்கின்றன. ஒரு மனிதனின் உண்மை மதிப்பை அது சோதனை செய்கிறது; நட்புத் தளைகளை வலுப்படுத்துகிறது. ஆகையால், மாட்சிமை தங்கிய பேரரசர் இவ்வாட்டத்தில் பெருவிருப்பங் கொண்டிருந்தார். வெளித்தோற்றத்தில் இவ்வாட்டம் அரசவையின் பகட்டாரவாரத்தை அதிகப்படுத்துகிறது; ஆனல், உன்னதக் கருத்தின் கண்ணேட்டத்தில் இதை ஆராயும்பொழுது, இது மறைந்திருக்கும் திறமைகளையெல்லாம் வெளிப்படுத்துகிறது' என்று அபுல் ஃபாஸல் கூறுகிருர். ஆக்ராவிற்குத் தெற்கேயுள்ள கக்ரலியில் (Kakrali) தாம் கட்டிய நகார் சைன் (Nagarchain) என்னும் தற்காலிக வேட்டையரங்கத்தில் 1564-ல் அக்பர் தங்கியிருந்தபொழுது 'போலோ' என்ற விளையாட்டை அவர் தொடர்ந்து ஆடினர்; குறிப்பாக இருள் மிக்க இரவிலும் அவர் அவ்வாட்டத்தில் கலந்துகொண்டார். அப்பொழுதெல்லாம் அவர் பிரகாசிக்கும் பந்துகளைப் பயன்படுத்தினர். அப்பந்துகள், தீவைப்பதனல் புகைந்து எரியும் தாக் (dhak) அல்லது பலாஸ் மரத்தின் (Butea frondosa) கட்டையினல் செய்யப்பட்டவையாகும். 'அவ்வாட்டம் பிறங்கொளிரச் செய்வதற்காகப் பேரரசன் சௌகான் கொம்புகளின் உச்சிப் பாகங்களில் பொன், வெள்ளிக் குமிழ்ப் பிடிகளைப் பொருத்தி வைத்தார். ஏதாவது ஒரு கொம்பு உடைந்துவிட்டதெனில், எந்த ஆட்டக்காரரின் கையில் அத் துண்டுகள் விழுகின்றனவோ அவருக்கே அவை உரியதாகும்' என்று அக்பரது அரசவை வாழ்க்கை வரலாற்று ஆசிரியர் கூறுகிருர்.[1] முகலாய அரசவையாளர்கள் அவ் விளையாட்டில் கலந்துகொள்ளவும் வேடிக்கை பார்க்கவும் வரவேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. போட்டியின்பொழுது பந்தயங்கள் கட்டுவதும் அக்பரால் அனுமதிக்கப்பட்டது. அக்பருக்குப் பிறகு வந்தவர்களின் ஆட்சிக் காலங்களில்

[1] 'Ain-i-Akbari', trans. Blochmann, vol. i, pp. 247, 298 ff.

பேரரச குடும்பத்தைச் சார்ந்த இளவரசர்களும், உயர்குடிக் குடும்பங்களையும் பணக்காரக் குடும்பங்களையும் சேர்ந்த இளைஞர்களும் ஒருவேளை அதில் கலந்துகொண்டபோதிலும், அதைப்பற்றி அப்பொழுது அவ்வளவாகத் தெரியவில்லை. அரசவையால் மேற்கொள்ளப்பட்ட ஒரு கேளிக்கைப் பொழுதுபோக்கு என்ற நிலையில் மத்திய ஆசியாவின் வன்பாலைகளிலிருந்து வந்த முகலாயர்களின் மரபுவழியாக வந்த ஆண்மைத்தனம் குறையக்குறைய இவ்வாட்டமும் தனது கவர்ச்சியை இழந்திருக்கலாம். கடைசியில் பிந்திய முகலாய அரசர்களின் செயலற்ற ஆட்சியின்பொழுது முழுவதுமே மறைந்துவிட்டது. புருக்களைப் பறக்கவிடுதல் பொறுத்தவரை, இப் பறவைகளில் தாம் பெற்றிருந்த விருப்பத்தை அக்பர் தமது கொள்ளுப் பாட்டனரிடமிருந்து (அதாவது, பாபரின் தந்தையிடமிருந்து) மரபுரிமையாகப் பெற்றிருந்திருக்கக்கூடும். அப் பாட்டனார் கரணமிடும் புருவகைகளை வளர்த்துவந்தார். உண்மையில் கூறப்போனல், அப் பறவைகள் பறப்பதைப் பார்ப்பதற்காகக் கட்டப்பட்டிருந்த கோபுரம் இடிந்து விழுந்ததனல்தான் அவர் மரணமடைந்தார். எந் நிலையிலும், புருவைப் பறக்கவிடும் கலையை அக்பர் தமது இளம்பிராயத்திலிருந்தே தமது ஆசிரியர்களில் ஒருவரிடமிருந்து கற்றுக்கொண்டார். எழுதப் படிக்கக் கற்றுக் கொடுப்பதற்குப் பதிலாகத் தமது மாணவருக்கு இக் கலையைக் கற்றுக் கொடுத்ததிலிருந்து எவ்வளவிற்கு அவ்வாசிரியர் தமது கடமையை மறந்திருந்தார் என்பது விளங்குகிறது. அரியணையேறியதற்குப் பிறகு அக்பர் இருபதினயிரத்திற்கும் மேற்பட்ட புருக்களை வளர்த்து, அவற்றைப் பத்து வகைகளாகப் பிரித்து வைத்திருந்தார். அவற்றின் கூத்தாடல்களை அவர் சலிப்புருமல் கண்டு களித்தார். அவ் விளையாடல்களுக்கு அவர் இஷக்குபாஜி (ishkbazi) அல்லது 'காதல் விளையாட்டு' என்று பெயர் வைத்தார்.[1] இந்த வேடிக்கைப் பொழுதுபோக்கு ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்திலும் ஒரு பொழுதுபோக்காக இருந்திருக்க வேண்டும். ஏனெனில், பத்தாயிரம் புருக்கள் உட்படப் பேரரசர் பல்வகைப்பட்ட பறவைகளை வளர்த்துவந்தார் என்று வில்லியம் ஹாக்கின்ஸ் (William Hawkins) கூறுகிருர். ஆனலும், பிந்திய ஆண்டுகளில் புருக்களைப் பறக்கவிடும் கலையைப் பலர் விரும்பியதாகக் கொள்வதற்குச் சான்று எதுவும் இல்லை. ஆயினும், முகலாயத் தலைநகரத்தில் மட்டுமன்றி மற்றப் பல இடங்களிலும் இவ் விளையாட்டுச் சாதாரணமாக நடந்திருக்கவேண்டும். லக்னேவிலும் (Lucknow) இதர இடங்களிலும் நவீன காலத்தில் இதில் மக்கள் கலந்துகொள்கின்றனர்.

[1] 'Ain-i-Akbari', vol. i, pp. 298-301.

வீட்டுக்குள்ளாக ஆடப்படும் விளையாட்டுகள்: சதுரங்கம் (chaturanga) உட்பட வீட்டுக்குள்ளாக ஆடப்படும் பல விளையாட்டு களிலும் முகலாயச் சமூகம் சிறப்புக் கவனத்தைச் செலுத்தியது. அச் சதுரங்க விளையாட்டு இந்தியாவில் பழங்காலத்திலேயே தோன்றிக் கி.பி. ஆறும் நூற்றுண்டிற்குச் சற்றுப் பிறகு அரேபியா (Arabia), பாரசீகம் (Persia), சீனு (China) ஆகிய நாடுகளுக்குப் பரவியிருக்கலாம். 'சதுரங்கம்' என்று நாம் அழைப்பதான புத்தி சூழ்த்திறமிக்க விளையாட்டை அவர்கள் தங்களுடைய வீடுகளில் அல்லது மேசைகளின்மேல் ஆடுகின்றனர் என்று ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்திய இந்தியாவைப்பற்றி எட்வர்ட் டெர்ரி தாம் எழுதிய வரலாற்றில் கூறுகிறுர்.[1] ஐரோப்பிய (பரங்கி-farangi) சதுரங் கத்திலிருந்து சில அம்சங்களில் வேறுபட்டிருந்த இவ்வாட்டம் அராபிய மொழியில் ஷத்ரஞ்ச் (shatranj) என வழங்கிவந்தது. முஸ்லீம் சட்ட வல்லுநர்களால் அனுமதிக்கப்பட்ட ஒரே ஒரு விளையாட்டாக இருந்ததனுல் இதனைப் பல முகமதியரும் விரும் பினர்.[2] சௌபர் (chaupar) அல்லது தலைக்குப் பதினைந்து காய் களுடன் ஆடப்படும் ஆட்டம் (backgammon) 'அய்னி அக்பரி'யில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றோர் ஆட்டமாகும். இதைப் பலர் விரும் பினர்? மேற்குறிப்பிட்ட ஏட்டுரைப் பகுதியில் எட்வர்ட் டெர்ரி இதற் குச் 'சூதாட்ட மேசை' (table) என்று பெயர் கொடுக்கிருர்.[3] இது ஒரு சிலுவை போலிருந்த துணி அட்டையின்மீது ஆடப்பட்டது. அச் சிலுவையின் ஒவ்வொரு கரமும் இருபத்து நான்கு சதுரங் களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இச் சதுரங்கள் ஒவ்வொன்றும் எட்டுக் கொண்ட மூன்று வரிசைகளாக அமைக்கப்பட்டிருந்தன. பகடையோடு (dice) ஆடப்படும் பான்சா (pansa), சோழிகளுடன் (cowries) ஆடப்பட்ட பச்சிஸி (pachisi), சந்தல் மண்டல் (chandel-mandal) என்ற வேறு மூன்று வகை ஆட்டங்களுக்கும் அப் பலகை பயன்பட்டது. இவற்றில் இறுதியில் குறிக்கப்பட்டுள்ள இரண்டு விளையாட்டுகளிலும் அக்பர் பெரு விருப்பங் கொண்டிருந்தார். பச்சிஸி என்ற பழமைவாய்ந்த இந்த விளையாட்டினை அஜந்தா குகை களில் காணப்படும் ஓவியங்களில் ஒன்றில் காணலாம். ஆக்ரா அரணிலும், ஃபதேபூர்-சிக்ரியிலுள்ள காஸ் மஹாலிலும் (Khas Mahal) இருந்த உள்முற்றத்துச் சலவைக்கல் சதுரங்களில் தந்த ஆட்டக் காய்களுக்குப் பதிலாக இளம் அடிமைப் பெண்களை வைத்து அக்பர் இவ் வாட்டத்தை ஆடினுர் என்று சொல்லப்படுகிறது.[4] முகலாய

[1] W. Foster, 'Early Travels', p. 312.

[2] Herklots, 'Qanun-i-Islam', ed. Crooke, p. 331.

[3] 'Ain-i-Akbari', vol. i, p. 303.

[4] Herklots, 'Qanun-i-Islam', ed. Crooks p. 334.

வட்டாரங்களில் ஆடப்பட்டுவந்த சீட்டுக்கட்டுகளைப்பற்றி அபுல் ஃபாஸல் வருணிக்கிறார். அச்சீட்டுக்கட்டுகள் தற்கால ஆங்கிலேயச் சீட்டுக்கட்டுகளினின்றும் வேறுபட்டிருந்தன. இவற்றைக்கொண்டு அக்பர் பல மணி நேரம்வரை விளையாடினாரென்று தெரிகிறது.

மட்டுமீறிய குடிப்பழக்கம்: மட்டுமீறிய குடிப்பழக்கத்தைப் பற்றிக் குறிப்பிடாமற்போனால் முகலாயர் காலத்திய சமூக வாழ்க்கையைப்பற்றிய வருணிப்பு முற்றுப்பெறாது. இப் பழக்கந்தான் தொடக்ககால முகலாயப் பேரரசர்களைப் பாழாக்கிய குற்றமாகும். மிகவும் மெட்டாக இருந்த அவுரங்கசீப்பைத் தவிர அவருக்கும் சற்றுக் குறைவாக ஷாஜஹானைத் தவிர, அவ் வமிசத்தின் மற்ற எல்லாப் பேரரசர்களும் அளவு மீறிக் குடிக்கும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தனர்; இப்பாவச் செயலுக்குக் குர்ரான் தடை விதித்திருந்தபோதிலும், பதினைந்தாம் நூற்றாண்டில் இத் தீய பழக்கம் கீழ்த்திசை நாடுகளில் எல்லா இடத்திலும் பரவியிருந்தது.[1] சில ஆண்டுகள்வரை பாபர் மட்டுமீறிய குடிபோதையில் இருந்தார் என்றும், அவருடைய இரு சகோதரர்களும் மட்டுமீறிய குடிப்பழக்கத்தினால் இருந்தனர் என்றும் அவரது வாழ்க்கைக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. குடிபோதையில் மூழ்கிக் கிடப்பது பாபருக்கு மிக்க மகிழ்ச்சியளித்தது. தவிர, தமது ஓய்வு நேரத்தைத் தமது ஆப்த தோழர்களுடன் குடிபோதையில் மரத்தின் அடியிலோ, ஓடையின் அருகிலோ படுத்துக்கொண்டு கழிப்பதை அவர் மிக விரும்பினார். அவர் தமது குடிவிருந்துகளைப்பற்றி மிக வெளிப்படையாகவே எழுதுகிறார். ஆனாலும், ராணா சங்காவுடனும் இராஜபுத்திரர்களுடனும் மூண்ட கான்வாப் போரின்தறுவாயில் அவருடைய வாழ்க்கையில் மிக நெருக்கடியான நிலைமை ஏற்பட்டபொழுது, சாராயக் கோப்பைகளை உடைத்து, பின்னர் தமது வாழ்நாள் முடியும்வரை மீண்டும் சாராயம் குடிக்கப்போவதில்லை என்று சத்தியம் செய்யும் அளவுக்கு அவருக்கு மனத்திடம் இருந்தது. நமக்குத் தெரிந்தவரையில் மிக்க சமயப்பற்றுடன் அவர் அச் சத்தியத்தைக் காப்பாற்றினார். குடியைவிட அபினியின்மீதுதான் ஹுமாயூனுக்கு விருப்பம் அதிகமாக இருந்தது; ஆனாலும், குடிப்பழக்கத்தை அவர் மேற்கொண்டிருந்தார் என்பது, அவர் குடிப்பழக்கத்தை விட்டுவிட்டாரென்று ஜஹாங்கீர் தமது வாழ்க்கைக் குறிப்புகளில் குறிப்பிடுவதிலிருந்து தெரியவருகிறது. மட்டுமீறிக் குடிப்பதை அக்பர் அவ்வப்பொழுது கண்டித்தார். ஆனாலும், அவரும் குடும்ப மரபைப் பின்பற்றினார். ஒவ்வொரு சமயம் அவர் மட்டுமீறியும் குடித்தார். தமது தந்தை குடிபோதையில் இருந்த சமயத்தைப்பற்றியும், போதையில்லா

[1] P. Kennedy, 'History of the Great Mughals,' vol. i, p. 122.

நிலையில் இருந்த சமயத்தைப்பற்றியும் ஜஹாங்கீர் தமது வாழ்க்கைக் குறிப்புகளில் எழுதுகிறார். 1582-ல் அக்பர் மட்டுமீறிக் குடித்தார் என்பதைத் தந்தை அக்குவாவிவா தலைமை தாங்கிய சமயத் தூதுக்குழு அக்பரின் அரசவைக்கு விஜயம் செய்ததைப் பற்றிய குறிப்பு நிரூபிக்கிறது. அக் குறிப்பு இப்போதும் நமக்குக் கிடைக்கிறது. பேரரசர் மிக்க போதை தரும் அரக்கான ஒரு வகைப் பனைச் சாராயத்தையும், முனைப்பிழந்த மணப்பொருள் கலந்த அபினித் தயாரிப்பான புஸ்த் (post) என்ற போதைப்பொருளையும் அருந்துவார் என்று மற்றொரு கட்டுரைப் பகுதியில் பார்டோலி குறிப்பிடுகிறார்.[1] குடிபோதையில் இருக்கும்பொழுது பல சமயங்களில் அக்பர் தமது வாளுடனேயே போரிடுவது போன்ற பைத்தியக்காரச் செயல்களைப் புரிந்துள்ளார். அவருடைய வலிமை வாய்ந்த உடலுக்கு இடைவிடாமல் குடிப்பதனால் ஏற்படும் தீய விளைவுகளிலிருந்து தப்பித்துக்கொள்ள முடிந்தபோதிலும், அவருடைய நடத்தை அவரைச் சூழ்ந்திருந்தவர்களை—குறிப்பாக அவருடைய பிள்ளைகளான முராத் (Murad), டேனியல் (Daniyal) ஆகியவர்களை மிகக் கடுமையாகப் பாதித்தது. அவ்விருவரும் அத்துமீறிக் குடிப்பதனால் ஏற்படும் மூளைக்கோளாற்றினால் மரணமடைந்தனர்.

ஜஹாங்கீர் தமது குடிப்பழக்கங்களைப்பற்றித் தமது வாழ்க்கைக் குறிப்புகளில் மிக வெளிப்படையாகவே எழுதியுள்ளார். அவரது வெளிப்படையான கூற்றுகளையும் தவிர, வில்லியம் ஃபின்ச் அளித்துள்ள சான்றும் நம்மிடத்தில் உள்ளது.[2] அவர் பின்வருமாறு எழுதுகிறார்: ‘மாலைவேளையில் அவர் தர்பாரிலிருந்து திரும்பியதும் அவரது மஹாலுக்கு அருகிலிருந்த அரசவைக்குப் பின்னாலிருந்த ஒரு சிறிய அறையில் நுழைந்து இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு தான் வெளியே வருவார். அந்த அறைக்குள் பிரமுகர்களைத் தவிர மற்றெவரும் நுழையமுடியாது. மாதந்தோறும் புதுப்பிக்கப்பட்ட அனுமதிச் சீட்டுகளுடன்தான் அவர்களும் உள்ளே நுழைய முடிந்தது. அங்கே அவர் மற்றவர்களுடன் கலந்துகொண்டு குடிப்பார். ஒவ்வொரு வேளையில் அவ்வறையில் முப்பத்தொரு பேர் இருந்தனர். சிற்சில வேளைகளில் அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையும் அங்கே தென்பட்டது. மிகக் கடுமையாகத் தீர்ப்பளிப்பவர்களுடன் சேர்ந்துகொண்டு அவர் குடிப்பார். தாம் குடிக்காமல் ஒரு மணிநேரம் கழித்தால் தமது கைகளெல்லாம் நடுங்கத் தொடங்கிவிடுகின்றன என்றும், தம்மால் அமைதியாக உட்காரவும் முடியவில்லை படுக்கவும் முடியவில்லை என்றும் ஜஹாங்கீரே

[1] V. A. Smith, 'Akbar', p. 114.
[2] W. Foster, 'Early Travels', p. 185.

கூறுகிறார்; நாள்தோறும் அருந்திய மதுவின் அளவை அவர் குறைத்துக்கொண்டே வந்தபோதிலும், ‘மனிதனுக்கு இறைச்சியும் மதுவைப்போல இன்றியமையாததாக இருப்பதனால் அதைப் பயன்படுத்துவதை என்றால் முற்றும் விட்டுவிடுவது மிகக் கஷ்ட மாக இருக்கிறது; ஏன்! அவ்விதம் விட்டுவிடுவது முடியாத காரியமாகும்’ என்று அவர் சொல்லுகிறார். பிற்பட்ட ஆண்டுகளில் பேரரசி நூர்ஜஹான் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி அவரது குடிப்பழக்கத்தைக் குறைக்க முயன்றாள்; அம் முயற்சியும் ஜஹாங் கீரின் மிக உறுதியான உடலமைப்பும் நெடுங்காலமாக மட்டுமீறிக் குடித்ததனால் ஏற்பட்ட விளைவுகளிலிருந்து அவரைக் காப் பாற்றின.

நல்வசமாக அரசர்களின் நடத்தையைப் பொதுவாக மக்கள் பின்பற்றவில்லை. அங்காடிகளில் மது விற்கப்படுவதை அனுமதித்து அக்பர் ஆணை பிறப்பித்ததிலிருந்து குடிப்பழக்கம் ஓரளவு இருந்தது என்பதை யூகித்துக்கொள்ள முடியும். சமயக் குழுக்கள் அவ் வாணைக்கு மிகக் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தன. கள், கஞ்சா, சில குறிப்புகளின்படி மது ஆகிய வஸ்துகளை விற்பதற்குத் தடை விதித்த ஆணை ஒன்றை ஜஹாங்கீர் பிறப்பித்ததிலிருந்தும் அப் பழக்கம் இருந்தது எனத் தெரியவருகிறது. இந்த ஆணையைச் சமய குருமார் கண்டித்தார்கள். அக்பரின் ஆட்சிக் காலத்திலும், ஒருவேளை பிந்திய நாட்களிலும், குடியினால் பிரபுக்கள் பலர் மடிந் தனர். உதாரணமாக, சிந்தின் மீர்ஸா ஜானி பேக் (Mirza Jani Beg) தக்காணத்தில் குடியினாலேயே செத்தார். ஷா பேக் கான் (Shah Beg Khan) என்பவர் மது, கஞ்சா, பங் ஆகிய லாகிரி வஸ்துகளின் கலப்பு ஒன்றை அருந்தினார்.[1] ஆனால், அரசவைக்கு வெளியி லிருந்த வட்டாரங்களில் பண்பு மிக்க இந்திய மக்களிடம் குடிப் பழக்கம் அவ்வளவிற்குக் காணப்படவில்லை. குடிப்பழக்கத்தை அனுமதித்த சாதியினர் சில சமயங்களில் மதுவை அத்துமீறி அருந்தினர் என்பதும், மேற்கு இந்தியாவின் சிற்சில பகுதிகளில் அவ்வப்பொழுது ஏராளமாக மது அருந்தப்பட்டது என்பதும் உண்மையே. உதாரணமாக, அவுரங்கசீப்பின் ஆட்சிக் காலத்தில், 1672-ல் சூரத்தில் வாழ்ந்திருந்த மக்களைப்பற்றிக் கூறும்பொழுது ஸ்டிரைன்ஷாம் மாஸ்டர் என்பவர் (Streynsham Master) இவ்வித மாகக் குறிப்பிடுகிறார்: ‘மாடு, எருது, அல்லது கன்றின் இறைச் சியை யாரும் புசிக்கமாட்டார்கள்; அநேகமாக ஒருசிலரே மது அருந்தமாட்டார்கள். ஏனெனில், இறைச்சியை உண்ணாதவர்கள் ஏராளமாக போதைமிக்க மதுவைக் குடிப்பார்கள்.’ கீழ்த்தர

[1] V. A. Smith, ‘Akbar’, p. 406.

மக்களிடம் குடிப்பழக்கம் இருந்துவந்தது என்பதையும், பேரரச அவையுடன் தொடர்பு கொண்டிராத உயர்தர வகுப்பினரும் ஒவ்வொரு சமயத்தில் குடித்தனர் என்பதையும் ஏற்றுக் கொண்டாலுங்கூட, எல்லாத் தர மக்களும் பொதுவாகக் குடிப் பழக்கத்தை மேற்கொண்டிருக்கவில்லை என்று ரெவரெண்ட் எட்வர்ட் டெர்ரி (Rev. Edward Terry, 1616-19) தெரிவிக்கும் முடிவை நாம் ஏற்றுக்கொள்ளலாம். 'குடிப்பழக்கம் பொறுத்தவரையில், பல முகம்மதியர்களும் புறச்சமயம் சார்ந்தவர்களும் உயிர்நீக்கிக் கொள்வார்களேயன்றி அவர்களுடைய சட்டம் தடையிடப் பட்டதைப் புசிக்கமாட்டார்கள்; குடிக்கவுமாட்டார்கள். சட்டத் தால் அனுமதிக்கப்பட்ட இறைச்சியையும் குடியையும் அவர் களுடைய இயல்பைத் திருப்தி செய்துகொள்வதற்காகவேயன்றிப் பசியைப் போக்கிக்கொள்வதற்காக அருந்தமாட்டார்கள். அள வின்றிச் சாப்பிடுவதை அவர்கள் வெறுத்தனர்; மட்டுமீறிய குடியை ஒருவகையான பைத்தியம் என்றும் அவர்கள் கருதினர் (உண்மை யும் அதுதானே). ஆகையினால், அவர்கள் தங்களுடைய மொழியில் குடிகாரனையும் பைத்தியக்காரனையும் ஒரே பெயரால் (மெஸ்த்) அழைக்கின்றனர்' என்று டெர்ரி எழுதியுள்ளார்.[1] இப்பொழுது இருப்பது போலவே முகலாயர்களின் காலத்திலும் மக்களுடைய குடிப்பழக்கங்கள் இருந்திருக்கக்கூடும். மட்டுமீறிய குடிப்பழக்கங்களைப் பொதுவாக இந்துக்களும் முகம்மதியர்களும் வெறுத்தனர்.

விழாக்களும் யாத்திரைகளும்: இந்துக்கள் இந் நாள்களில் விரும்புவது போலவே அந் நாள்களிலும் யாத்திரை போக விரும் பினர். ஆனால், சரியான போக்குவரத்துச் சாதனங்களும், துரித மாகப் பயணம் செய்வதற்கான வசதிகளும் இல்லாமையினால் பெரும் பாலான மக்கள் யாத்திரை போக முடியவில்லை.[2] அக்பரின் ஆட்சி துவங்கும்வரை, யாத்திரிகர்களின்மீது முஸ்லீம் அரசாங்கங்கள் வரி களை விதித்தல் வழக்கமாகவே இருந்துவந்தது; இதனால் ஏராள மான வருவாயும் கிடைத்தது. ஆனால், 1563-ல் அக்பர் மதுராவில் முகாமிட்டிருந்தபொழுது, அதுபோன்ற பழக்கத்தை முதன்முத லாகக் கேள்விப்பட்டு, படைத்தவனை வழிபாடு செய்வதற்காகக் கூடி யிருக்கும் மக்களின்மீது தீர்வைகளை விதித்தல் தெய்வ விருப்பத் திற்கு மாறுகும் என்ற காரணத்தின்பேரில் தம்முடைய இராச்சியங் கள் முழுவதிலும் அத் தீர்வையை ரத்து செய்து உத்தரவு பிறப்பித் தார்.[3] அபுல்ஃபாஸலின் கூற்றின்படி, அவ் வரியை எடுத்துவிட்

[1] W. Foster, 'Early Travels, &c.,' p. 317.
[2] W. H. Moreland, 'India at the Death of Akbar', p. 277.
[3] V. A. Smith, 'Akbar', p. 64.

டதனுல் கருவூலம் இலட்சக்கணக்கான ரூபாயை இழக்க நேர்ந்தது. இவ்விதம் கூறுதல் மிகைபடுத்திக் கூறுவதாகும் என்று கொண்டாலும், இந்து சமயத்தின் முக்கியமான புனிதத் தலங்களுக்கு ஏராளமானவர்கள் யாத்திரை சென்றனர் என்பது அக் கூற்றிலிருந்து புலனுகிறது. டெல்லியின் வடக்கிலிருந்த புகழ்வாய்ந்த புண்ணிய க்ஷேத்திரமான தானேஸ்வரில்தான் அக்பர் 1567-ல் சந்நியாசிகளில் இரண்டு கட்சிகளுக்கிடையில் நடந்த இரத்தவெறி கொண்ட சண்டையைக் கண்டு, பலவீனமான கட்சிக்கு உதவி தரும்படி தமது படையுதவி ஆள்களுக்கு உத்தரவிட்டார். ஜெஸ்ஸியா வரி அல்லது தலேவரியை முஸ்லீமல்லாதார்மீது அவுரங்கசீப் மீண்டும் விதித்து முடிந்தவரையில் பல இந்துக் கோயில்களை அழித்தபோதிலும், யாத்திரிகர் வரியை அவர் மீண்டும் விதிக்கவில்லை. ஆனுலும், இந்துக்களிடம் அவர் கொண்டிருந்த மனப்போக்கினுல் அவருடைய ஆட்சிக் காலத்தில் இந்து சமயத்தினைச் சார்ந்த தீர்த்தங்களுக்கும் க்ஷேத்திரங்களுக்கும் விஜயம் செய்பவர்களின் எண்ணிக்கை ஓரளவு குறைந்திருந்தது. அவுரங்கசீப்பின் மனப்பான்மையையே தல முஸ்லிம் அதிகாரிகளும் கொண்டிருந்தனர்.

முகலாயர்களின் காலத்தில் முஸ்லீம்கள் மெக்காவுக்கு யாத்திரை செய்வது ஆண்டுதோறும் நிகழும் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். இது இயல்பேயாகும். இருபதாம் நூற்ருண்டில் ஏராளமான மக்கள் யாத்திரை செய்வதுபோல அக் காலத்தில் இந்தியாவிலிருந்து ஜெத்தாவுக்குச் (Jeddah) சென்றவர்களின் தொகை இருந்திருக்க முடியாது. இந்தியாவில் கட்டப்பட்ட மிகப்பெரிய கப்பல்களைப் பதினைந்தாம் நூற்ருண்டிலேயே நிக்கோலோ கோன்டியும் (Nicolo Conti) இதர சுற்றுப்பயணிகளும் மேற்குக் கரையில் கவனித்துள்ளனர். அவைகளெல்லாம் செங்கடலுக்குச் செல்ல இருக்கும் யாத்திரிகர்களுக்காகவே வைத்திருக்கப்பட்டவையாகும். அதுபோல ஆறு கப்பல்கள் இருந்தன; அவை மிகப் பெரிய கப்பல்களாகும். அவை போர்ச்சுகீசியர்களால் கட்டப்பட்ட கப்பல்களை யொத்திருந்தன; ஆனுல், கடுங் காற்றடிக்கும் சமயங்களில் அவைகளால் ஈடுகொடுக்க முடியவில்லை.[1] ஒவ்வோர் ஆண்டும் அவை காம்பே குடாவிலிருந்த சூரத்திலிருந்தும் மற்றத் துறைமுகங்களிலிருந்தும் புறப்பட்டு யாத்திரிகர்களை ஏற்றிக்கொண்டு போனதுமல்லாமல், வர்த்தகத்திற்கான பண்டங்களையும் கொண்டு சென்றன. இப்பொழுது இருப்பதுபோலவே அப்பொழுதும் செங்கடல் வர்த்தகமும் யாத்திரிகர்களின் போக்குவரத்தும் மிக நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தன.[2] யாத்திரிகக் கப்பல்களின்

[1] W. H. Moreland, 'India at the Death of Akbar', p. 171.
[2] Ibid., p. 205.

மிகப் பேரளவு முகலாயர் காலம் முழுவதிலும் ஹெஜ்ஜாஸுடன் (Hedjaz) நடந்துவந்த போக்குவரத்தின் ஒரு கூறுகும் போலும். ஏனெனில், 1612-ல் காப்டன் சாரிஸ் (Captain Saris) அவைகளில் இரண்டு கப்பல்களை—அதாவது, ரஹீமீ (the Rahimi), முகம்மதி (the Muhammadi) என்ற இரண்டு கப்பல்களை—அளவிட்டார். அவைகளில் ஒவ்வொன்றும் ஏறக்குறைய 1,500 டன் எடையுள்ளதாக இருந்திருக்கவேண்டும்.[1] ஆனாலும், ஓரிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு எட்வர்ட் டெர்ரி முகலாயப்பேரரசு பற்றிய தமது வரலாற்றில் பின்வருமாறு கூறுகிறார்: 'சூரத்திலிருந்து மெக்காவுக்கு வழக்கமாகச் செல்லும் கப்பல் மிக்க பளுவைச் சுமந்து செல்கிறது. அவற்றில் சில கப்பல்கள் ஆயிரத்து நானூறு அல்லது ஆயிரத்து அறுநூறு டன் எடையுள்ளவைகளாக உள்ளன. ஆனாலும், அவை நன்ருகக் கட்டப்படவில்லை. அவைகளிடத்தில் நல்ல பீரங்கிகள் இருந்தும், தம்மைக் காத்துக்கொள்ள முடியவில்லை. ஒவ்வோர் ஆண்டும் ஏராளமான பிரயாணிகளை இக் கப்பல்கள் கொண்டு செல்கின்றன. உதாரணமாக, நாம் இந்தியாவைவிட்டுச் சென்ற ஆண்டில் அங்கிருந்து புறப்பட்டுத் திரும்பிவந்த கப்பல் ஒன்றில் 1,700 பிரயாணிகள் இருந்தனர். அவர்களில் பலர் பணம் சம்பாதிப்பதற்காகச் செல்லவில்லை; ஆனால், மெதீனாவிலிருக்கும் முகம்மதின் சமாதிக்கு மரியாதை செலுத்துவதற்காகப் பக்தியுடன் சென்றனர்.[2]

அக்பர் தமது ஆட்சியின் துவக்கத்தில் மெக்காவுக்குச் சென்ற யாத்திரிகர்களிடம் மிக்க அக்கறை செலுத்தினர். யாத்திரிகர்களுக்குப் பணவுதவியும் மற்ற விதமான உதவியும் அளிக்க அவர் விருப்பமுள்ளவராயிருந்தார். யாத்திரை செல்ல விரும்பிய எவரும் அதற்கான செலவை அரசாங்கக் கருவூலத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்று 1575-ல் அவர் ஒரு பொது ஆணையைப் பிறப்பித்தார்; அச் சலுகையை அவரது முஸ்லீம் குடிமக்களில் பலர் பயன்படுத்திக்கொண்டனர். அவ் வாண்டில் மெக்காவுக்கு யாத்திரை சென்றவர்களில் முக்கியமானவர்கள் அக்பரின் அத்தையான குல்பதன் பேகமும் (Gulbadan Begam), பைராம்கானின் விதவையான சலீமா சுல்தான் பேகம் என்பவருமாவர். சலீமா சுல்தான் பேகம் பேரரசரை மணந்துகொண்டவராவார். போர்ச்சுகீசியரிடமிருந்து அனுமதிச் சீட்டுப் பெறும்வரையில் அம் மாதர்கள் சூரத்தில் ஓர் ஆண்டு முழுவதும் தங்க நேரிட்டபோதிலும், இறுதியில் அவர்கள் யாத்திரிகையை முடித்துக்கொண்டு 1582-ல் பத்திரமாகத்

[1] Ibid., p. 203 n.

[2] W. Foster, 'Early Travels', &c., p. 301.

திரும்பினர்.[1] ஒரு தலைவரின் பொறுப்பில் யாத்திரிகர்கள் கூட்டங் கூட்டமாகச் செல்லும் முறையையும் அக்பர் துவக்கிவைத்தார்; அக் கூட்டம் முழுவதற்கும் போதிய பணமும் அத் தலைவரிடம் கொடுக்கப் பட்டது. அவர் சுல்தான் காஜாவை (Sultan Khwaja) மீர் ஹாஜி (Mir Haji) அல்லது யாத்திரிகர்களின் தலைவராக நியமித்தார். 1576-ல் சென்ற யாத்திரிகர்களின் கூட்டத்தில் தாமும் கலந்து கொள்வதாக அவர் விருப்பம் தெரிவித்தார். அவ்விதம் செய்தல் கூடாதென அவருடைய மந்திரிகள் வற்புறுத்தியபொழுது, அக் கூட்டம் போக இருந்த சமயத்தில் தமது உடைகளைக் களைந்தெறிந்து இஹ்ராம் (ihram) அல்லது யாத்திரிகர்களின் உடையைத் தரித்துக் கொண்டு சுல்தான் காஜா கரையோரத்தை நோக்கித் தமது நீண்ட யாத்திரிகையை ஆரம்பிப்பதற்காக அடியெடுத்து வைத்ததும் அவ ருடன் சில அடி தூரம் அவரும் நடந்தார்.[2] மற்ற முகம்மதிய அரசர் களைப் போலவே அக்பரும் அவ்வப்பொழுது யாத்திரை முறையைக் கையாண்டு, அரசியல் காரணங்களால் விரும்பத் தகாத அமைச் சர்களையும் பிரபுக்களையும் விலக்கினர்.[3] அதாவது, அவர்களை யாத் திரை போகும்படி சொல்லி அனுப்பிவிட்டார். இந்த முறையைப் பாதுகாவலரான பைராம்கான் விஷயத்தில் அக்பர் கையாண் டார். அரசாங்கப் பொறுப்பைத் தாமே ஏற்றுக்கொள்ளத் தீர்மானித் திருப்பதாகவும் அதனால் பைராம்கான் நீண்டகாலமாக எண்ணி யிருந்த மெக்கா யாத்திரையை மேற்கொள்ளவேண்டும் என்றும் 1560-ல் அக்பர் அவருக்குத் தெரிவித்தார்.[4] பிந்திய நாள்களில் அக்பர் இஸ்லாமைப் புறக்கணித்தபொழுது நிலைமை பெரும்பாலும் மாறிவிட்டது. பேரரசரின் தொடக்ககால ஆர்வத்தைப்பற்றி எழுதிய பதோனி (Badaoni) பின்வருமாறு கூறுகிருர்: 'இப்பொழுது நிலைமை தலைகீழாக உள்ளது. ஏனெனில், அதுபோன்ற பெயரை யும் அவர் கேட்க விரும்பவில்லை. யாத்திரைக்குச் செல்வதாக அனுமதி கேட்பவன் மரண தண்டனைக்குட்படவேண்டிய மனித னுகக் கருதப்பட்டான்.'[5]

ஆண்டுதோறும் செங்கடலுக்குச் சென்று திரும்புகையில் முகலாய யாத்திரைக் கப்பல்கள் போர்ச்சுகீசியர்களுடனும் மற்ற ஐரோப்பிய மக்களுடனும் அடிக்கடி தொடர்பு கொண்டிருந்தன. அவர்கள் இந்தியக் கடலின்மீது ஆதிக்கம் பெறுவதற்காகப்

[1] V. A. Smith, 'Akbar' pp. 134, 135.
[2] Herklots, 'Qanun-i-Islam', ed. Crooke, p. 115.
[3] Moreland, 'India at the Death of Akbar', p. 263.
[4] V. A. Smith, 'Akbar', p. 44. See also Finch's reference in W. Foster's 'Early Travels in India', p. 165.
[5] Badaoni, ii, p. 246.

போராடிக்கொண்டிருந்தனர். போர்ச்சுகீசியர்களுடன் அக்பர் தொடர்ந்து சுமாராக நட்புத் தொடர்பைக் கொண்டிருந்ததனால், மெக்காவுக்கு யாத்திரிகர்கள் பத்திரமாகப் போவதற்கான வசதியைப் பெறமுடிந்தது; ஆனாலும், பிந்திய நாள்களில், யாத்திரிகர்களைக் கொண்டுசெல்லும் கப்பல்கள் மற்றக் கப்பல்களைப் போலவே லைசென்சு கட்டணங்களையும் இலஞ்சங்களையும் கொடுக்கும்படி வற்புறுத்திய போர்ச்சுகீசியர்கள் சிற்சில சமயங்களில் மிக்க தொல்லை கொடுத்தனர். ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்தின் ஆரம்பத்தில், தங்களுக்கு 100,000 மகமுடிகள் (40,000 ரூபாய்கள்) கொடுத்தாலன்றி அரச மாதாவுக்குரியதான யாத்திரைக் கப்பல் ஒன்றைக் கைப்பற்றி அதை டையுவுக்குக் (Diu) கொண்டு போவதாகப் போர்ச்சுகீசியர்கள் அச்சுறுத்தினர் என்றும், இறுதியில் ராஜி ஏற்பாடாக 1,000 ரியல்களையும் (reals) (சுமார் 2,000 ரூபாய்கள்) முகலாயர்கள் தங்களுக்குக் கொடுக்க விரும்பிய பல்வகைப் பரிசுகளையும் அவர்கள் பெற்றனர் என்றும் வில்லியம் ஃபின்ச் (1608-11) வருணிக்கிறார்.[1] ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்தில் இவ்விதமான குற்றங்களை போர்ச்சுகீசியர்கள்மட்டுமே புரியவில்லை; ஏனெனில், தம்மை மோச்சா (Mocha) என்ற இடத்தில் அராபியர்கள் சிறைபிடித்துக் கொள்ளையிட்டதற்காகப் பழிதீர்த்துக்கொள்ள விரும்பிய காப்டன் மிடில்டன் (Captain Middleton) 1612-ல் தம் கப்பற்படையைக்கொண்டு செங்கடலின் வாயிலை முற்றுகையிட்டு, ரஹீம் என்ற பெரிய யாத்திரைக் கப்பல் உட்படப் பல முகம்மதியக் கப்பல்களைக் கைப்பற்றிக் கப்பம் செலுத்துமாறு வற்புறுத்தினர்; அக்கப்பல் 15,000 ரியல்களைக் கப்பமாகச் செலுத்தியது.[2] அவுரங்கசீப்பின் ஆட்சிக் காலத்தில் யாத்திரைகளைப்பற்றிப் பல்வேறு குறிப்புகள் உள்ளன. சிற்சில சமயங்களில் ஐரோப்பியக் கப்பல்கள் பீஜப்பூரின் (Bijapur) அரசுரிமை பெற்ற இராணியைப் போன்ற சில மதிப்பு மிக்க யாத்திரிகர்களை ஏற்றிக்கொண்டு சென்றன. அவ்விராணி ஒரு சிறிய டச்சுக் கப்பலில் 1661, ஃபிப்ரவரி மாதத்தில் கடற் பயணம் செய்தார். இப் பெண்மணி நான்கு முறை யாத்திரை செய்தாள் என்று மானுச்சி கூறுகிறார்.[3] தமது வைதிக ஒழுக்கத்திற்கு ஏற்ப அவுரங்கசீப் நான்கு மிகப் பெரிய கப்பல்களைச் செலவின்றி யாத்திரிகர்களைக் கொண்டுசெல்வதற்காக சூரத்தில் தயாராக வைத்திருந்தார் என்று டாக்டர் ஜான் ஃபிரையர் (Dr. John Fryer) குறிப்பிடுகிறார். இவை வடிவமைதியில்லாத பிரம்மாண்டமான கப்பல்களாகும். இக் கப்பல்கள் ஒவ்வொரு

[1] W. Foster, 'Early Travels', p. 129.

[2] H. G. Rawlinson, 'British Beginnings in Western India,' p. 49.

[3] W. Foster, 'English Factories in India', 1661-4, p. 88 n.

வேளையில் ஐரோப்பியக் கடற்கொள்ளைக்காரர்களால் தாக்குண்டன. கஞ்ச சவாய் (Ganja Sawai) (கன்ஸ்வே என்று அக் காலத்திற்குரிய ஆங்கிலக் கடிதங்களில் குறிக்கப்பட்டுள்ளது) என்ற யாத்திரிகக் கப்பல் இவ்விதமாகக் கொள்ளையடிக்கப்பட்டது. பேரரசருக்கே உரியதான அக் கப்பல் ஜான் ஏவரி (John Avery) என்ற மிகக் கொடுமை வாய்ந்த கடற்கொள்ளைக்காரனால் 1695-ல் கைப்பற்றப்பட்டது. யாத்திரிகர்களைத் தவிர அச் சமயத்தில் நடந்த செங்கடல் வியாபாரத்திலிருந்து பெறப்பட்ட 52 இலட்சம் ரூபாயையும் அக் கப்பல் கொண்டுசென்றதனால் அக் கப்பல் விலையுயர்ந்த ஒரு பரிசாகும். அச் செய்தி சூரத்தில் முஸ்லீம் மக்களுக்கு எட்டியதும் அவர்கள் பெருங்கோபமுற்றனர்; அதன் விளைவாக முகலாய கவர்னர் அவ்விடத்திலிருந்த தொழிற்சாலையின் தலைவரையும் ஆங்கிலேயர்களையும் கோபாவேசமுற்ற கூட்டம் கொல்லாவண்ணம் காப்பாற்றுவதற்காக அவர்களைக் கைதுசெய்து விலங்கு பூட்டிவிட்டார்.[1] ஆனால், இதற்கு ஆங்கில வர்த்தகர்கள் பொறுப்பாளிகளாக மாட்டார்கள்; ஆனாலும், கொள்ளையிடும் தங்களுடைய சகாக்களின் துர்நடத்தைக்காக ஓரளவு கம்பெனியாரும் பொறுப்பாளிகளாவர் என்று அவுரங்கசீப் கருதினாரென்பதில் சந்தேகமில்லை. குறைந்தது ஒரு சமயத்தில் 1689-ல் முகலாய யாத்திரைக் கப்பல்களைக் கொள்ளையிட்டதற்குப் பழிவாங்க பம்பாயைத் தாக்கும்படி சிதிக்கு அவர் உத்தரவிட்டார்.[2] மெக்காவுக்கு யாத்திரை செல்லுதல் அக்பர் ஆட்சிக் காலத்திலும் அவருக்குப் பிறகு வந்தவர்களுடைய ஆட்சிக் காலத்திலும் முஸ்லீம் வாழ்க்கையில் ஒழுங்கான கூருகும் என்று மேற்குறிப்பிட்ட அங்குமிங்குமான சான்றுகளிலிருந்து தெரிகிறது. இருந்தபோதிலும், பக்தி மிக்க இந்த யாத்திரைகளை மேற்கொண்டவர்களுடைய எண்ணிக்கை 1914ஆம் ஆண்டுக்கு முந்திய பத்தாண்டுக் காலத்தில் ஆண்டுதோறும் பெருங் கூட்டமாக யாத்திரை சென்றவர்களுடைய எண்ணிக்கையைவிடக் குறைந்தே இருந்தது.

குடிமக்களிடையில் இருந்த வகுப்புகள்: முகலாயப் பேரரசில் வசித்துவந்த பல்வகைப்பட்ட வகுப்பினரைப்பற்றிக் குறிப்பிட்டு இவ்வத்தியாயத்தை முடிப்பது பொருத்தமாகும். இக் காலத்தில் இருப்பதுபோலவே இந்து சாதிமுறை மிக மும்மரமாகவே இருந்தது என்று திரு மூர்லாந்து சுட்டிக்காட்டுகிறார்.[3] ஆனாலும், அக் காலத்திற்குரிய ஆங்கில ஆவணங்களும் பதிவேடுகளும் பொதுவாக இனங்கள், சாதிகள், வகுப்புகள் ஆகியவற்றை வேறுபடுத்த

1 'Bombay City and Island Gazetteer', vol. ii, p. 85.
2 'Bombay City and Island Gazetteer', vol. ii, p. 83.
3 W. H. Moreland, 'India at the Death of Akbar', p. 23.

வில்லை. 'ஜென்டஸ்' (Gentus) அல்லது 'ஜென்டைல்கள்' (Gentiles), அதாவது, புறச்சமயத்தினர் என அவைகள் இந்துக்களைக் குறிப்பது போலவே, எல்லா வகைப்பட்ட முகம்மதியர்களையும் குறிக்க 'மூர்' என்ற பெயரை வழங்கின. ஆனாலும், பனியாக்கள் (Banias), பிராமணர்கள் (Brahmans), இராசபுத்திரர்கள் (Rajputs) என்ற மூன்று முக்கிய இந்து வகுப்புகளை ஐரோப்பியக் கடிதங்கள் அடிக்கடி குறிப்பிடுகின்றன. பனியாக்கள் அக் காலத்திய வியாபாரத்திற்குரிய கடிதங்களில் இயல்பாகவே முக்கியத்துவம் பெறுகின்றனர். ஏனெனில், முக்கியமாக அவர்களுடன்தான் டச்சு, ஆங்கிலேய வர்த்தகர்கள் வியாபாரம் நடத்திவந்தனர். பிராமணர்களைப்பற்றிச் சுற்றுப்பயணிகளும் ஆங்கிலேய வர்த்தகர்களும் அவுரங்கசீப்பின் ஆட்சிக் காலத்தில் சிவாஜியுடன் தாங்கள் கொண்டிருந்த தொடர்பு சம்பந்தமாகக் குறிப்பிடுகின்றனர்; இராஜபுத்திரர்களைப்பற்றிப் பல ஐரோப்பிய ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். 1516-ல் பார்பேசா (Barbosa), 1614-ல் பொக்காரோ (Bocarro), 1638-ல் மாண்டெல்ஸ்லோ (Mandelslo), 1648-ல் வான் டுவிஸ்ட் (Van Twist), 1673-ல் ஃபிரையர் (Fryer) ஆகியவர்களெல்லாம் அவர்களைப்பற்றிக் குறிப்பிடுகின்றனர். பதினேழாம் நூற்றுண்டில் முகலாயப் பேரரசுக்கு விஜயம் செய்த ஆங்கில வர்த்தகர்கள் இந்து இனங்களுக்கும் வகுப்புகளுக்குமிடையிலிருந்த வேறுபாடுகளைக் காணமுடியவில்லை. சூறையாடுவதையும் தாக்குதல்களை நடத்துவதையும் இராஜபுத்திரர்கள் பழக்கமாகக் கொண்டிருந்ததனுல், அப் பெயரை அவ்வர்த்தகர்கள் எவ்வித வேறுபாடுமின்றி எல்லாவகையான ஆறலை கள்வர்களுக்கும் வழங்கிவந்தனர். இங்ஙனமாக இராஜபுத்திரர்கள் அசாதாரண இராணுவத் திறமையைப் பெற்றிருந்ததனுல் அக்பர் அவர்களைப் பேரரசப் படையில் சேர்த்துக்கொண்டார். அத் திறமையைப்பற்றி பார்போசா, பொகாரோ, வான் டுவிஸ்ட், ஃபிரையர் ஆகிய அனைவரும் குறிப்பிடுகையில், மண்டெல்ஸ்லோ (Mandelslo) அவர்களைப் பற்றி வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் அல்லது டோரிக்கள் (Tories) என்று கூறுகிருர். ஷாஜஹானின் ஆட்சிக் காலத்திற்குரிய ஆங்கிலக் கடிதங்கள் ஐரோப்பிய வர்த்தகர்கள் கொள்ளையிட்ட 'ராஷ்பூத்துகளைப்' பற்றிக் கூறுகின்றன. அவ்விதம் குறிக்கப்பட்டுள்ளவர்கள் முற்றும் வேறுபட்ட மற்றொரு கொள்ளைக்கார வகுப்பினைச் சார்ந்திருக்கக்கூடும்.[1] அக்பர் காலத்தில் சீக்கியர்கள் குறிக்கப்படுகின்றனர். ராஜா பீர்பால் (Raja Birbal) கருத்தினை ஏற்றுக்கொள்ளாது அக்பர் சீக்கிய மதத்தின் தத்துவங்களை ஏற்றுக்கொள்ள விரும்பினுர்.[2] இப் பரந்த கருத்தினை அவுரங்கசீப் கொண்டிருக்க

[1] W. Foster, 'English Factories in India', 1655-60, p. 105.
[2] V. A. Smith, 'Akbar', p. 237.

வில்லை. காஃபிகானின் கூற்றின்படி, அந்தத் துணைகுருமார்களை விலக்கி சீக்கியர்களின் கோயில்களை இடித்துத் தள்ளும்படி அவுரங்கசீப் கட்டளை பிறப்பித்தார். 'பஞ்சாபைச் சார்ந்த ஜாத்துகளும் (Jats), கத்திரிகளும் (Khatvis), விக்கிரகங்களை வழிபாடு செய்யும் இதர ஜனங்களும் அச் சமயக் குழுவில் அடங்கியிருந்தனர்' என்றும் காஃபிகான் கூறுகிறார்.[1]

சந்தால்கள் (Santals), பில்கள் (Bhils) போன்ற வன இனங்களைப்பற்றி அதிகமாகத் தெரியவில்லை. ஏனெனில், அவர்கள் நாகரிகத்திற்கு அப்பாற்பட்டவர்கள் என்று யாவரும் கருதினர். ஆனாலும், அவ் வகுப்பைச் சார்ந்தவர்களைத்தான் வில்லியம் ஃபின்ச் ஜஹாங்கீரின் வேட்டையாடல்களைப்பற்றிய வருணிப்புகளில் குறிப்பிடுகிறார். 'பேரரசர் குறிப்பிட்ட ஒரு வனத்தையோ பாலைவனத்தையோ சுற்றிச் சிறந்த ஆள்களை நிறுத்திவைக்கிறார். இவர்கள் மீண்டும் சந்திக்கும்வரை இவ் வட்டம் நெருங்கிக்கொண்டே வருகிறது. இந்த எல்லைக்குள் மிருகமோ மனிதனோ வேட்டையாடப்பட்ட எதுவும் அரசனது ஷிகார் (shikar) அல்லது வேட்டை என்று கருதப்படுகிறது. அரசர் இரக்கம் காட்டினாலன்றி மற்ற எவரும் அதை விட்டுவிட்டால் அவன் தன் உயிரை இழக்கவேண்டியதுதான். பிடிபட்டவைகள் விலங்குகளாயின் அவற்றை விற்று வரும் பணம் ஏழைகளுக்குக் கொடுக்கப்படும். பிடிபட்டவர்கள் மனிதர்களாயின் அவர்கள் அரசனின் அடிமைகளாகிவிடுவர். அது போன்ற அடிமைகளை ஒவ்வோர் ஆண்டும் காபூலுக்கு அனுப்பி அவர்களுக்குப் பதிலாகக் குதிரைகளையும் நாய்களையும் அரசர் பெறுவார். இவர்கள் காடுகளிலும் பாலைவனங்களிலும் வசிக்கும் ஏழைகள், மோசமானவர்கள், திருடர்கள்; இவர்களுக்கும் விலங்குகளுக்கும் அதிக வேறுபாடு இல்லை.'[2] ஜஹாங்கீர் பின்பற்றிய முறையாவது, ஒரு காட்டைச் சுற்றிவளைத்து அவ் வட்டம் படிப்படியாகச் சுருங்கும்படி செய்வதாகும்; அது செங்கிஷ் கானும் (Chengiz Khan) மங்கோலியர்களும் பின்பற்றிய முறையை யொத்திருந்தது. இம் முறையைப் பற்றி முந்திய ஒரு பாராவில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களை மராட்டியர்கள் நடத்தியதைவிட சிறிது மேலாகவே ஜஹாங்கீர் நடத்தினார். சாதிக்கப்பாற்பட்டவர்கள் என்றும் கொள்ளைநோய் என்றும் கருதி மராட்டியர்கள் அவர்களைக் கொன்றனர்.

அக்காலத்திய இந்தியாவிலிருந்த முகம்மதியர்கள் ஏறக்குறைய வடமேற்குப் பகுதிவாசிகள் என்றும் கரையோரத்தில் வசிப்பவர்கள் என்றும் பிரிக்கப்பட்டிருந்தனர். முந்திய வகுப்பில் பாபருடைய

[1] Elliot and Dowson, vol. vii, p. 413.
[2] W. Foster, 'Early Travels in India', p. 154.

ஆட்சிக் காலத்திலும், அவருக்குப் பிறகு வந்தவர்களுடைய ஆட்சிக் காலங்களிலும் இந்தியாவுக்கு வந்த முகலாயர்களும் பாரசீகர்களுமன்றி முகலாயர்களின் வருகைக்கு முந்திய ஐந்து நூற்றுண்டுக் காலத்தில் தொடர்ந்து இந்தியாவுக்கு வந்துகொண்டிருந்தவர்களின் சந்ததியார்களான ஏராளமான நாட்டுப் பழங்குடி முகம்மதியர்களும் அடங்கியிருந்தனர். அதற்கு மாருக, கரையோரத்திலிருந்த முகம்மதியர்கள் பெரும்பாலும் வர்த்தகர்களாவர்; முதன் முதலில் இவர்கள் அரேபியாவிலிருந்தும் (Arabia) பாரசீகக் குடாவிலிருந்தும் வந்தவர்கள். 1500ஆம் ஆண்டுக்கு முற்பட்ட பல நூற்றுண்டுக் காலமாக இந்த அராபிய, பாரசீக வியாபாரிகள் ஏராளமான மக்களை மதமாற்றம் செய்தனர். திருமணங்கள் புரிந்துகொண்டும், கரையோரத்திலிருந்த இந்துக்களுடன் தற்காலிகமான அல்லது சம்பிரதாயமான தொடர்புகளை வைத்துக் கொண்டும், அவர்கள் மேற்கு இந்தியாவிலிருந்த நவாய்த்தார்கள் (Navayats), மலையாளத்தைச் சார்ந்த மாப்பிள்ளைகள் (Mappillas or Moplahs of Malabar), தீபகற்பத்தின் கிழக்குக்கரையைச் சார்ந்த லப்பைகள் (Lubbyes or Labbais) ஆகியவர்களைப் போன்ற கலப்பு முகம்மதிய சமுதாயங்களைத் தோற்றுவித்தனர். இந்த அராபியர்களும், பாரசீகர்களும், நவாய்த்தார்களும், மற்றவர்களும் கிழக்குக் கரையில் போர்ச்சுகீசியர்கள் வருவதற்கு முன்பே கடல் வாணிகத்தை நிலைநாட்டியிருந்தனர். போர்த்துகீசியர்கள் இந்தியக் கடல்களின்மேல் தங்களது ஆதிக்கத்தை நிலைநாட்டிய பொழுதுங்கூட அவர்கள் முஸ்லீம் வியாபாரிகளை வியாபாரத்திலிருந்து அகற்ற சக்தியற்றிருந்தனர். அம் முஸ்லீம் வர்த்தகர்கள் ஷாஜஹான், அவுரங்கசீப் ஆட்சிக் காலங்களிலும், அவர்களுக்குப் பிறகு வந்தவர்களுடைய ஆட்சிக் காலங்களிலும் தொடர்ந்து வளர்ச்சியும் வளமும் பெற்றுக்கொண்டிருந்தனர். பெரும்பாலான ஹபஷிக்கள் (Habshis) அல்லது அபிஸினியர்களும் (Abyssinians) முஸ்லீம் ஜனத்தொகையில் அடங்கியிருந்தனர். அவர்கள் முதலில் அடிமைகளாக நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டனர். பிரெஸ்டர் ஜானுடைய (Prester John) நாட்டைச் சார்ந்த மூன்று அபெஷிகள் (Abeshis) போர்ச்சுகீசியக் கப்பல்களுக்குப் பண்டங்களை விற்பதற்காக வந்தனர் என்று போர்ச்சுகீசிய ஆசிரியரான பர்ரோஸ் (Barros) 1553-ல் குறிப்பிடுகிறுர். சுமார் நூற்று இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு இதுபோன்ற முகம்மதியர்களைப்பற்றி ஃபிரையர் திட்டவட்டமாகக் குறிப்பிடுகிறுர். இந்த ஹபஷிக்கள் சிற்சில சமயங்களில் மிக்க உயர் பதவியை அடைந்தனர். உதாரணமாக, டெல்லியின்மீது ஆட்சி நடத்திய ஒரே ஒரு பெண்மணியான ரஸியாவின் (Raziyya) (1236-40) ஆட்சிக் காலத்தில் குதிரைக்கொட்டில் தலைவனுக ஒரு ஹபஷி உயர்வு பெற்றுன்.

ஜன்ஜீரா (Janjira) என்ற சிற்றரசு தீவின் தலைவன் அதுபோன்ற அபிஸீனியக் குடும்பங்களின் வழித்தோன்றல்களில் ஒருவனுவன். இந்தியாவின் மேற்குக் கரையின் வரலாற்றில் அவன் சிறந்து விளங்குகிருன்.

முகலாயர் காலத்திய இந்தியா அந்நிய நாடுகளுடன் தொடர்பு கொண்டிராத நாடாக இருக்கவில்லை. நிரந்தரமாக வசித்துவந்தவர்களேயன்றி, ஐரோப்பா, அரேபியா, பாரசீகம், அர்மீனியா, சீனு, ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்து வந்த சுற்றுப்பயணிகளையும் தற்காலிகமாக வசித்துவந்தவர்களையும் பதினும் நூற்ருண்டில் கடற்கரையோரத்திலும் அவ்வப்பொழுது உள்ளூர் நகரங்களிலும் காணலாம். இவ் அந்நியர்களில் ஒருசிலர் வியாபாரத்திற்காக ஏறத்தாழ நிரந்தரமாகவே இந்தியாவில் குடியேறிவிட்டனர். உதாரணமாக, அர்மீனியர்கள், சூரத் போன்ற வாணிகக் கேந்திரங்களில் இவர்கள் சிறுபான்மையோராக இருந்தபோதிலும் மிகச் சிறந்து விளங்கினர். 1664-ல் சிவாஜி சூரத்தைத் தாக்கியபோது[1] அர்மீனியர்களும் சில துருக்கிய வணிகர்களுங்கூடத் தங்களுடைய பண்டங்களுடன் ஒரு சராயில் தஞ்சம் புகுந்தனர் என்று கேள்விப் படுகிறேம். 'கோஜா மினுஸ்' (Cojah Minaz) என்பவர் அந்த அர்மீனியர்களில் ஒருவராவார். 1663ஆம் ஆண்டில் எழுதப்பட்ட ஆங்கிலக் கடிதம் ஒன்று அவரை ஒரு முக்கிய அர்மீனிய வியாபாரி என்று குறிப்பிடுகிறது.[2] சிவாஜி சூரத் நகரைத் தாக்கியதையொட்டி அவுரங்கசீப்பின் அமைச்சர் பிறப்பித்த கட்டளை ஒன்றில் அந் நகரில் வசித்துவந்த பல்வகைப்பட்ட சமூகங்களின் பட்டியல் ஒன்றில் அர்மீனியர்கள் பெயரும் காணப்படுகிறது.[3] அர்மீனியர்கள் தலையார்ந்த மது வியாபாரிகள் என்று எட்வர்ட் டெர்ரி கூறுகிருர். அவுரங்கசீப்பினிடம் அபிஸீனிய அரசர் அனுப்பிவைத்த அர்மீனியத் தூதரைப்பற்றி பெர்னியர் குறிப்பிடுகிருர். அர்மீனியர்களைப் போலவே யூதர்களும் (Jews) சிறுபான்மையோராக இருப்பினும் வியாபாரத்தில் சிறந்து விளங்கினர். அவர்களில் ஒருவர் கான்ஸ்டான்டிநேப்பில் வாசியாவார். சிவாஜி சூரத்தைத் தாக்கியபொழுது அவ் வணிகர் விடாப் பிடிவாதத்தைக் காட்டினுர் என்று பெர்னியர் கூறுகிருர். 'அந்த யூதர் விலைமிக்க இரத்தினங்களை வைத்திருந்தார் என்றும், அவற்றை அவுரங்கசீப்பிற்கு விற்க விரும்பினுர் என்றும் சிவாஜி அறிந்திருந்தார். ஆனுலும், மூன்று முறை முழங்காலின்மீது உட்காரவைக்கப்பட்டுத் தலையின்மீது வாள் சுழற்றப் பட்டபோதிலும், அவ் வியாபாரி விடாப்பிடியாக அவ்வுண்மையை

[1] W. Foster, 'The English Factories in India', 1661-4, p. 297.
[2] Ibid., 1661-4, pp. 189, 207.
[3] Ibid., p. 214.

மறுத்துவிட்டார். இவ்வித நடத்தை ஒரு யூதனுக்கு உகந்ததாகும். அவன் உயிரையும்விடப் பணத்தையே அதிகமாக விரும்புபவன்."[1] முகலாயர்களின் காலத்தில் வியாபாரத்திற்காக இந்தியாவிற்கு வந்த இந்த அந்நிய யூதர்கள் கொச்சியைச் (Cochin) சார்ந்த யூதர்களுடனோ, வடகொங்கணத்தைச் சேர்ந்த (Northern Konkan) பெனி-இஸ்ரேல் (Bene-Israel) என்பவர்களுடனோ எவ்விதத் தொடர்பும் கொண்டிருக்கவில்லை. அச் சமயத்தில் அவர்களெல்லாம் முக்கியமாகத் தச்சர்களாகவும் எண்ணெய் எடுப்பவர்களாகவும் இருந்தனர்.

பார்சி (Parsi) வகுப்பைச் சார்ந்தவர்கள் ஒருசிலராகவே இருந்தபோதிலும், அக்பரின் ஆட்சிக் காலத்தில் மிக்க முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தனர். பதினாறும் நூற்றாண்டின் துவக்கத்தில் நவோசரியையும் (Naosari) குஜராத்தின் இதர மாவட்டங்களையும் இன்னும் விட்டுச் செல்லாது, வேளாண்மை, தச்சுவேலை, போன்ற தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுடைய முன்னோர்கள் இந்தியாவுக்கு வந்தபொழுது அம் மாவட்டங்களில்தான் குடியேறினர். ஹுமாயூனின் ஆட்சிக் காலத்தில் பம்பாய்வாசிகள் என்று போர்ச்சுகீசிய மருத்துவரான கார்சியா ட ஆர்ட்டா (Garcia da Orta) அவர்களைக் குறிப்பிடுகிறார். ஆனாலும், 1578ஆம் ஆண்டுவரையிலும் அவர்கள் சிறந்து விளங்கவில்லை; இந்தியாவில் பார்சி குருமார்களின் தலைமை இருப்பிடமாக இருந்த நவோசரியைச் சார்ந்த தலையார்ந்த மோபெத்தான (Mobed) தஸ்தூர் மெஹர்ஜி ராணா (Dastur Meherji Rana) 1578-ல் அக்பரின் அரசவைக்கு வந்து, ஸொராஷ்டிரிய மதத்தின் தத்துவங்களைப் பேரரசருக்குப் போதித்தார். தஸ்தூர் தமது மதத்தின் ஆணைகள், சடங்குகள், வினைமுறைகள் ஆகியவற்றைப் பேரரசருக்குக் கற்றுக்கொடுத்து, அவருடைய மனத்தில் ஆழமாகப் பதியவைத்ததனால் ஸொராஷ்டிர (Zoroastrian) மதத்தை அவர் ஏற்றுக்கொண்டார் என்றுகூடக் கருதப்பட்டது. ஒவ்வொரு பார்சியும் அணியும் சத்ராவையும் (sadra) (புனித சொக்காய்) குஸ்தியையும் (kusti) (கச்சையையும்) பேரரசர் அணிந்துகொண்டிருந்தார் என்று கருதப்படுகிறது; ஸொராஸ்டிரிய விதிமுறைகளின்படி நெருப்பை மூட்டிப் பேரரச மாளிகையில் வைக்கும்படி அவர் உத்தரவிட்டதை மறுக்கமுடியாது; அது அணையாமல் வைத்திருக்கும் பொறுப்பை அவர் அபுல்ஃபாஸலிடம் ஒப்படைத்தார். மரபு உரிமையாக வரக்கூடிய இருநூறு பைகா (bighas) நிலங்களை அக்பர் தஸ்தூருக்குக் கொடுத்தார். 1591-ல் தஸ்தூர் இறந்ததற்குப் பிறகு அதை முன்னூறு பைகா

[1] Ibid., p. 310.

வாக அதிகரித்து தஸ்தூரின் மகனுக்கு வழங்கினர்; அம் மகனும் பேரரசரை வந்து கண்டார். பார்சி சமயத்தில் அக்பர் உண்மை யான பற்றுதலைக் கொண்டிருப்பினும் இல்லாவிடினும், 1580ஆம் ஆண்டிலிருந்து அவர் வெளிப்படையாக சூரியனுக்கு முன்னும் நெருப்புக்கு முன்னும் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார் என்பதும், அந்தி வேளையில் விளக்குகளை ஏற்றும் சமயத்தில் அவருடைய அவை யினர் அனைவரும் மிக்க மரியாதையுடன் எழுந்துகொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டார் என்பதும் உண்மையே.[1] ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்தில் பார்சிகள் பேரரசவையில் ஓரளவு செல்வாக்கைப் பெற்றிருந்தனர். பேரரசர் தமது பிள்ளைகளுக்கு இட்ட பாரசீகப் பெயர்கள்—குஸ்ரோவ், குர்ரம், ஜஹந்தர், ஷாரியார், ஹோரஷாங்—எல்லாம் அச் செல்வாக்கின் நேர்முக விளை வாகும் எனக் கருதப்படுகிறது. ஒருவேளை அதே பேரரசரின் ஆட்சிக் காலத்தில்தான் பார்சிகள் தற்காலிகமாகத் தமது விவசாயத் தொழிலைக் கைவிட்டு வாணிகத்தை மேற் கொள்ளத் தொடங்கினர்; அத் துறையில் அவர்கள் அக் காலத்துக்குப் பிறகு மிக்க திறமையை வெளிப்படுத்தியுள் ளனர். ஷாஜஹானின் ஆட்சிக் காலம் முடிவதற்குள் அவர்கள் வேளாண்மைத் துறையிலும் வாணிகத் துறையிலும் சிறந்தவர்க ளென்று கருதப்படுவதற்கான தங்கள் உரிமைகளை உறுதிப்படுத்திக் கொண்டனர்; தவிர, வாணிகத்தைச் சார்ந்த பல்வகைப்பட்ட நட வடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர்; குறிப்பாக அயல் நாடு களுடன் நடந்த வாணிகத்தில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர். 1660-ல் சூரத்திலிருந்த ஆங்கிலத் தொழிற்சாலையின் முதன்மைத் தரகர் ருஸ்தும் மானேக் (Rustom Manek) என்ற ஒரு பார்சி யாவார். அவருடைய எஜமானர்களுக்கு அவர் மிக்க பயனுள்ளவ ராக இருந்தார்.[2] வரலாற்றில் சிறப்புப் பெற்ற கார்ஷெட்ஜி போசாஜி (Kharshedji Pochaji) என்பவரும் ஒரு பார்சியாவார். அவர் 1664-ல் பம்பாய் அரண்களைக் கட்டும் பொறுப்பை ஒப்பந்தக் குத்தகைக்கு எடுத்திருந்தார்.[3] அவர்களெல்லாம் பதினெட்டு, பத்தொன்பதாவது நூற்றாண்டுகளில் பம்பாயின் வாணிக முக்கியத் துவத்திற்கு அடிகோலிய பார்சி வர்த்தகர்களுடைய முன்னோர்க ளாவர்.

ஜனத்தொகையில் ஐரோப்பிய அம்சம் பொறுத்தவரை, பதினா றும் நூற்றாண்டின் இறுதிவரை போர்ச்சுகீசியர்கள் மட்டுமே முக்கிய ஸ்தானத்தை வகித்துவந்தனர். மேற்குக் கரையில் கோவாவையும்

[1] V. A. Smith, 'Akbar', pp. 162-4.
[2] Karaka, 'History of the Parsis'; vol. ii, p. 9.
[3] 'Gazetteer of Bombay City and Island', vol. i, p. 152 n.

(Goa) மற்ற இடங்களையும், கிழக்குக் கரையில் சாந்தோமையும் (Santhome) பெற்றிருந்ததனால் அவர்கள் சிறந்து விளங்க முடிந்தது. சிந்து, கங்கை நதி முகத்துவாரங்களிலும் அவர்கள் வாணிக நிலையங்களை நிலைநாட்டியிருந்தனர்; சிட்டகாங்கிலும் வங்காளக் குடாக்கடலிலும் வெளிப்படையாகக் கொள்ளையடிக்க அவர்கள் தயங்கவில்லை. அக்பரின் அரசவைக்குச் சென்ற போர்ச்சுகீசியத் தூதுக்குழுக்களைப்பற்றி மீண்டும் கூறவேண்டியதில்லை. பதினேழாம் நூற்றாண்டில் காட்சி மாறுகிறது; மேற்கு நாடுகளுடன் புதிதாகக் கொண்டிருந்த வாணிகத் தொடர்பின் விளைவாக முகலாயப் பேரரசின் கடற்கரையிலிருந்த நகரங்களையும் உள்ளூர் நகரங்களையும் நாடிய ஆங்கிலேயர்கள், டச்சுக்காரர்கள், டேனிஷ்காரர்கள், மற்றும் பல ஐரோப்பியர்கள் அனைவரின் எண்ணிக்கையும் அதிகரித்தது. வாணிகத்தில்மட்டும் ஐரோப்பியர்கள் ஈடுபட்டிருக்கவில்லை; ஏனெனில், மானுச்சியின் கூற்றின்படி, ஷாஜஹானின் ஆட்சிக் காலம் முடிவடைவதற்குச் சற்று முன்பு, 1656-ல், எண்பதுக்குக் குறையாமல் ஐரோப்பியர்களை மீர்ஜும்லா (Mir Jumla) தமது படையில் துப்பாக்கி வீரர்களாகவும் பீரங்கி வீரர்களாகவும் நியமித்திருந்தார்.[1] அவர்களெல்லாம் பாபரால் உருவாக்கப்பட்டு அவருடைய கீர்த்தி மிக்க பேரனால் ஒழுங்காக அமைக்கப்பட்ட பேரரசின் இறுதிச் சீர்குலைவின்பொழுது ஏற்பட்டிருந்த அமைதியற்ற காலத்தில் பல்வேறு இந்திய அரசர்களின் பணித்துறையில் சேர்ந்திருந்த ஏராளமான ஐரோப்பிய வீரர்கள், துணிகர வீரர்கள் ஆகியவர்களின் முன்னோர்களாவர்.

[1] Manucci, 'Storia do Mogor,' vol. i, p. 226.

8. முகலாயர்களின் கட்டடப் பாங்கும் கலைகளும்

கட்டடப் பாங்கு

ஸ்லீமன் தம்முடைய நூலான 'Rambles and Recollections'-ல் ஷேக் ஷாதியின் கூற்று ஒன்றை மேற்கோளாகக் காட்டுகிறார்; அதாவது, 'மக்கள் நலனுக்காகக் கோயில்கள், பாலங்கள், நீர்த் தேக்கங்கள், சத்திரங்கள் ஆகியவற்றின் வடிவில் பெரும் பணிகளை விட்டுச் சென்ற மனிதன் இறப்பதில்லை'[1] என்பதே அக் கூற்றாகும். கவிஞரின் இச் சொற்கள் மாபெரு முகலாயர்களின் மசூதிகள், அரண்மனைகள், நுழைவாயில்கள் ஆகியவற்றிற்கு மிகச் சிறப்பாகப் பொருந்துகிறது. அவர்களும், அவர்களுடைய பேரரசும், படை, ஆட்சிமுறை ஏற்பாடுகளும் நினைவுக்குக் கொண்டுவர முடியாத அளவு மறைந்துவிட்டன. ஆனால், அவர்களுடைய மேதைமையையும் ஆளுமைத் தன்மையையும் வெளிப்படுத்துகிற கட்டடக் கலைச் சாதனைகள் அவர்களை இறவாதவர்களாக ஆக்கிவிட்டன. மற்ற நாடுகளில் முகமதியர்களின் கலைப்பாணியைப் போன்றே இந்தியாவில் முஸ்லீம்களின் கட்டடக் கலையும், பிற்காலத்தில் சசானித்துகளால் (Sassanids) விருத்திபண்ணி மாற்றியமைக்கப்பட்ட வளைவுக் கூரைகளையுடைய மெசபடோமிய கட்டடக் கலையிலிருந்தே பெரும்பாலும் வந்தது. ஆகையால், அபாசித் கலிஃபாக்கள் காலத்தில் பாக்தாத்திலிருந்த பாணியுடன் பெரிதும் ஒத்திருக்கின்றது. முகலாயக் கட்டடங்களில் முனைப்பான அம்சமாக இருக்கும் கவிகை மாட வடிவத்தை இந்துக் கட்டடக் கலையில் பார்க்க முடியாது. ஆகவே, இம் முறை மத்திய ஆசியாவைச் சேர்ந்த தர்கோமான்களின் மணிவடிவக் கூடாரங்களின் மாதிரியாக இருக்கலாம் என்று சில அறிஞர்கள் கருதுகிறார்கள். எனினும், அதன் தோற்றம் எப்படியிருப்பினும், மேல்வளைவைப் போலவே

[1] Sleeman, ed. V. A. Smith, p. 410.

கவிகை மாடம் பாக்தாத் மக்களுக்கு நன்கு தெரிந்திருந்தது. அது அங்கிருந்து முகமதிய உலகு முழுதும் பரவிற்று.[1] முகமதியர்கள் இந்தியாவிற்கு முதலில் வந்தபொழுது, அவர்களுடைய மசூதிகளை யும் மற்ற நினைவுச் சின்னங்களையும் கட்ட நிர்ப்பந்தமாக அமர்த்தப் பட்ட இந்தியக் கொத்தர்கள், முஸ்லீம் பாணியில் மேல்வளைவுகளைக் கட்டுக் கற்களுடன் கட்ட இயலாதவர்களாக இருந்தார்கள். ஆனால், 14ஆம் நூற்றுண்டளவில் அவர்களுடைய இத்த இயலாமை நீங்கி, தங்களை வென்றவர்களின் அமைப்புகளை நிறைவேற்றுவதில் தங்களுடைய சொந்தக் கட்டமைப்பு முறைகளை நம்பியிருக்க வேண்டிய நிலையில் அவர்கள் இல்லை. இதற்கு மாருக, இந்துக் கருத்துகளுடனும் கட்டடக் கலைப் பாணிகளுடனும் கொண்டிருந்த தொடர்பு காரணமாக மெதுவாக, ஆனால், உறுதியாக முகமதியர் அமைப்பு முறைத் திட்டங்கள் பாதிக்கப்பட்டன. அநேகமாக இதன் விளைவாகத்தான் முகலாயர்களுக்கு முற்பட்ட காலங்களில் இந்தியாவின் பல பாகங்களில் கட்டப்பட்ட முகமதியக் கட்டடங் களில் பலவிதப் பாணிகள் காணப்படுகின்றன. சான்ருக, துக்ளக் வமிசத்து நினைவுச் சின்னங்களின் எளிமையான திண்மை வாய்ந்த தன்மையை வங்காள சுதந்திர முகமதிய அரசர்களின் காலத்தில் வளர்ந்த முஸ்லீம் பாணியில் பார்க்க முடியாது. பீஜப்பூர், கோல்கொண்டா சுல்தானியங்களின் பாணிகள் ஒன்று மற்றென்றி லிருந்து முற்றும் வேறுபடுகின்றன. இவ்விரண்டு பாணிகளையும் இந்து, சமணக் கட்டடக் கலைப் பாங்கின் தெளிவான முத்திரைகளைக் கொண்ட குஜராத் மாநில அழகான பாணியிலிருந்து எளிதில் வேறு படுத்திக் காட்ட முடியும்.[2]

முகலாயர்கள் காலம் முழுவதும் கட்டடக் கலைப் பாணியில் இந்து செல்வாக்கு இருந்துவந்தது. இது முகலாயக் கட்டடங் களில் குறுகிய தூண்களிலும், சாந்துப் பூச்சுகளிலும், தண்டைய அடைப்புகளிலும் (corbel brackets), பிற ஒப்பனைக் கூறுகளிலும் வெளிப்பட்டது. இதை அக்பர் ஆட்சிக் காலத்தில் சிறப்பாகக் காணலாம். பாரசீக மொழிக்கும் பண்பாட்டுக்கும் சலுகை காட்டிய அக்பர், கட்டடக் கலையைப் பொறுத்தவரையில் வேண்டுமென்றே இந்து ஆதாரங்களைக் கையாண்டார். இம் முறையில் தம் சொந்த நாட்டுடன் கொண்ட வேறுபாட்டுக்குத் தெய்வப் பண்பூட்டினுர். இந்தியச் சூழ்நிலையின் செல்வாக்கிற்கு முகலாயப் பேரரசு வழி படிப் படியாக அடிபணிந்தமை, அவர்களின் கல்லறைகளின் ஒழுங் கமைதியில் மிகத் தெளிவாகக் காணலாம். 'முன்னோர் சாமர்க்கண்

[1] Smith, 'History of Fine Art, &c.,' p. 392; J. N. Sarkar, 'Studies in Mughal India.'

[2] Smith, ibid.

டிலே படுத்திருக்கிறார்; பாபர் தம்முடைய உடல் ஆக்ராவிலிருந்து காபூலுக்கு மீண்டும் கொண்டுசெல்லப்படவேண்டுமென்று விரும்பினார்; ஹுமாயூன் டெல்லியிலே இருக்கிறார்; அக்பர் சிக்கந்தராவில்; ஷாஜஹான் ஆக்ராவில்.'[1] ஆனால், ஃபதேபூர் சிக்ரியிலுள்ள ஒப்பனைத் தூண்களிலும், ஷேக் சலீம் சிஸ்தியின் கல்லறையிலுள்ள தண்டைய அமைப்புகளிலும் காண முடிவதுபோல முகலாயக் காலத்துக் கட்டடங்கள் இந்து ஒப்பனை விவரங்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கையில், அவற்றின் வகையும் கட்டடக் கலைக் கோட்பாடுகளும் அடிப்படையில் முகமதியர்களுடையதாகும். பாபராலும் ஹுமாயூனாலும் கட்டப்பட்டு இப்பொழுதும் இருக்கிற கட்டடங்களில் இது சிறப்பாகத் தெளிவாகிறது. அவை இந்தியச் செல்வாக்கின் அறிகுறியைச் சிறிதும் வெளிப்படுத்துவதில்லை. அவை அழியாமல் முழுமையாக இருந்தாலோ, பாதி அழிந்திருந்தாலோ, எப்படியிருப்பினும் அந்நிய நாட்டைச் சேர்ந்தவை; முகமதியர்களுடையவை. முகலாயக் கட்டடப் பாங்கின் முக்கியக் கூறுகளாவன: முனைப்பான கவிகை மாடங்கள் (domes), மூலைகளிலுள்ள மெல்லிதான சிறு கோபுரங்கள், தூண்களால் தாங்கப்பட்ட அரண்மனை மண்டபங்கள், இந்திய-சார்சானிய நுழைவாயில் ஆகியவைகளாகும். 'இந் நுழைவாயில் முகப்புச் சுவரில் பெரிய அரைவட்ட வடிவுக் கவிகை மாட அமைப்பில் இருக்கிறது. இது போற்றத் தக்க முறையில் கட்டடத்திற்குப் பொருத்தமான விகிதத்தில் அமைந்திருக்கிறது. ஆனால், இந்த மேல்வளைவுக்கடியில் சிறிய நீண்ட சதுர வழியே உண்மையில் புகு வழியாகும்.'[2] இப் பாணியில் அமைந்த நுழைவாயிலுக்கு நேர்த்தியான சான்று ஃபதேபூர் சிக்ரியிலுள்ள புலந்த் தர்வாஜா (Buland Darwaza) ஆகும். இது அக்பரின் குஜராத்து வெற்றியைக் கொண்டாடுவதற்காக 1601-2-ல் எழுப்பப்பட்டது.

அவுரங்கசீபைத் தவிர மற்ற எல்லாத் தொடக்கக் கால முகலாயப் பேரரசர்களும் பெருங் கட்டடங்களைக் கட்டினார்கள். அவுரங்கசீப் இந்துக் கோயில்களை அழிப்பதில் அதிக ஆர்வங் கொண்டிருந்தாரேயன்றித் தம் சொந்தச் சமய ஆலயங்களை நிறுவுவதில் அத்துணை ஆர்வம் காட்டவில்லை. பாபர் இந்தியாவில் ஆண்டது மிகக் குறுகிய காலமாக இருப்பினும், அல்பேனியக் கட்டடக் கலைஞன் சினானின் (Sinan) மாணவர்களைக் கான்ஸ்டான்டிநோபிளிலிருந்து அழைத்துவர அவருக்கு அவகாசம் கிடைத்திருந்தது. சினான் ஆட்டமன் பேரரசில் பல முக்கியக்

[1] D'Humieres, 'Through Isle and Empire', p. 198.
[2] J. N. Sarkar, 'Studies in Mughal India', p. 287.

கட்டடங்களுக்கு அமைப்பு முறை வகுத்துத் தந்தவர். பாபர் சினுனின் மாணவர்களைக் கொண்டு பள்ளி வாசல்களையும், தம்முடைய இந்துஸ்தான வெற்றியைக் கொண்டாட மற்றச் சிற்பக்கலை நினைவுச் சின்னங்களையும் கட்டுவித்தார். தம்முடைய 'வாழ்க்கைக் குறிப்பில்' (பாபர்-நாமா) ஆக்ராவில் கட்டடங்கள் கட்ட ஒவ்வொரு நாளும் 680 இந்தியக் கற்கொத்தர்கள் பணியாற்றினுர்கள் என்றும், சிக்ரி, பயாஞு, குவாலியர் முதலிய இடங்களில் கட்டப்பட்ட கட்டடங்களில் சுமார் 1,500 பேர் நாள்தோறும் பணி செய்ய அமர்த்தப்பட்டார்கள் என்றும் பாபர் குறிப்பிடுகிருர்.[1] 1526ஆம் ஆண்டின் வெற்றிக்குப் பின்னர் பானிப்பட்டில் பாபர் கட்டிய ஒரு பெரிய பள்ளிவாசலும், ரோஹில்கண்டில் சாம்பல் (Sambal) என்ற இடத்தில் கட்டிய ஜும்மா மசூதியும்தாம் அவர் கட்டிய கட்டடங்களில் இன்றும் அழியாமல் இருக்கின்றன. காலம் ஹுமாயூனின் கட்டடங்களையும் கடுமையாகப் பாதித்திருக்கிறது. தம்முடைய கொந்தளிப்பான வாழ்க்கையில் கட்டடங்கள் கட்டவும் அவருக்கு அவகாசம் கிடைத்திருக்கிறது. ஹுமாயூனுல் கட்டப்பட்டவற்றில் இரண்டு மட்டும் பாதி அழிந்த நிலையில் காணப்படுகின்றன. இவைகளில் ஒன்று பஞ்சாபில் ஹிசார் (Hissar) மாவட்டத்தில் ஃபதாபாதில் (Fathabad) உள்ளது. இது ஹுமாயூன் சிந்து நோக்கிச் சென்றுகொண்டிருந்தபொழுது சுமார் 1540ஆம் ஆண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும். இம் மசூதி திண்மையுடன் சிறப்பாக வகுத்துக் கட்டப்பட்ட கட்டடமாகும். இது பாரசீக மாதிரியில் மூலாம் பூசப்பட்ட ஓடுகளைக் கொண்டு ஒப்பனை செய்யப்பட்டிருக்கிறது. அக்பர் காலத்துக்கு முன்னுல் வட இந்தியாவில் இந்திய-பாரசீகப் பாணியில் சிறப்பாகத் திட்டமிடப்பட்டும், பெருமிதம் மிக்க கட்டடமாகவும் இருப்பது ஹுமாயூனின் பகைவரான ஷெர் ஷாவின் கல்லறையாகும். வங்காளத்தில் சகாபாத் மாவட்டத்தில் சஹஸ்ராமில் (Sahasram) ஓர் ஏரியின் மத்தியில் உள்ள உயர்வான பீடத்தின்மேல் இது கட்டப்பட்டிருக்கிறது. இதன் கட்டடக் கலை முற்றிலும் முகம்மதியப் பாணியைச் சார்ந்தது. ஆனுல், இந்து பாணியில் அமைந்த தண்டையமும் (corbelling), கிடைமட்ட வளைவுகளும் (horizontal architraves) எல்லா உட்புறக் கதவுகளிலும் கையாளப்பட்டிருக்கின்றன. இது துக்ளக்கின் கலையழகற்ற கட்டடங்களுக்கும், பெண்மை அழகு ததும்பும் ஷாஜஹானின் தலைசிறந்த கட்டடத்துக்கும் இடைப்பட்ட பாணியென்று பொதுவாகச் சொல்லப்படுகிறது.[2]

[1] Babur-nama, trans. A. S. Beveridge, vol. ii, p. 520.
[2] Smith, 'History of Fine Art', p. 406.

அக்பர் அரசாட்சிக்கு வந்ததும் முகலாயக் கட்டடக் கலை நிகரற்ற சிறப்புப் பெற்றது. பின்சந்ததிகளுக்கு அவர் விட்டுச் சென்ற அவராட்சிக் காலத்து நினைவுச்சின்னங்கள், அபுல் ஃபாஸலின் கூற்று முழுவதும் சரியென்று நிருபிக்கின்றன. அவர் கூறுவதாவது: 'மேன்மை தங்கிய மன்னர் அழகு வாய்ந்த கட்டடங்களுக்குத் திட்டமிடுகிறார்; தம் எண்ணத்தில் உருவான அவைகளுக்குக் கல்லினாலும் களிமண்ணாலும் ஆடை அணிவிக்கிறார்'.[1] அக்பர் தம் வழக்கமான முழுநிறைத் திட்பநுட்பத்தினால் தமது பொதுப்பணித் துறையின் பணிகளின் முழு விவரங்களிலும் தேர்ச்சியுற்றிருப்பார் என்பது நிச்சயம்; அதனோடு அவரைச் சூழ்ந்திருக்கின்ற கலைஞர்களில் நிபுணர்கள் செயலுரு அமைக்கக் கருத்துகளையும் அவரே வழங்கிவந்தார். அதன் பயனாக ஃபதேபூர் சிக்ரியில் உள்ள கட்டடங்களையோ, ஆக்ராவிலுள்ள ஜஹாங்கீரின் மஹாலையோ, குவாலியரிலுள்ள முகம்மது காஜின் கல்லறையையோ, டெல்லியிலுள்ள ஹுமாயூனின் கல்லறையையோ நாம் ஆராய்ந்தால், மிக உயர்ந்த திறமையையும் அறிவு முத்திரைகளையும் நாம் காணலாம். தம் பெயரை உலகப் புகழுள்ளதாக ஆக்கிய கட்டடக் கலையின் உயர்ந்த படைப்புகளோடு தம் செயல்களை அவர் நிறுத்திக்கொள்ளவில்லை. கோட்டைகள், நாட்டு மாளிகைகள் (villas), கோபுரங்கள், சத்திரங்கள், பாடசாலைகள், குளங்கள், கிணறுகள் ஆகியவற்றையும் அக்பர் அமைத்தார்; தொழிலாளர்களின் கூலிகளையும் கட்டடச் சாமான்களின் விலைகளையும் அவர் நிர்ணயம் செய்தார்; தம் தாயிடமிருந்து அவர் மரபுரிமையாகப் பெற்ற பாரசீகக் கருத்துகளை இன்னும் அவர் கடைப்பிடித்துக்கொண்டிருந்தார். என்றாலும், இந்துச் சமயத்தின்மேல் அவர் கொண்டிருந்த இயற்கையான பற்றோடு பேரரச அரியணையின்மேல் இந்துக் குடிகள் பற்றுக் கொள்ள வேண்டும் என்கின்ற அவருடைய வெளிப்படையான கொள்கையும் இணைந்ததனால், தம்முடைய பெரும்பாலான கட்டடங்களில் இந்துக் கட்டடக் கலைப் பாணியை அவர் புகுத்த நேர்ந்தது. இப் பாணி ஆக்ரா கோட்டையில் ஜஹாங்கீரின் மஹாலில் மிகத் தெளிவாகத் தெரிகிறது. இது ஓர் இந்து இராஜாவின் அரண்மனையோவென்று நினைக்குமளவுக்குக்காட்சி யளிக்கின்றது. இந்தப் பாணி மேலும் ஃபதேபூர் சிக்ரியிலுள்ள சில கட்டடங்களில் வெளிப்படுகின்றது. இந் நகரம் வெல்லப்பட்ட நாட்டின் மரபை மிக உறுதியாகப் பின்பற்றியது. மசூதி ஒன்றில்தான் தம் ஆதிக்கத்தை வென்றவரால் செலுத்த முடிந்தது. இவற்றிற்கு மாறாக, பழைய தில்லியில் 1596ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட ஹுமாயூனின் புகழ்பெற்ற கல்லறையில், அக்பரின் பாரசீகப் பற்றுச் சித்திரிக்கப்

[1] 'Ain-i-Akbari,' trans. Blochmann, vol. i, p. 85.

பட்டிருக்கிறது. இக் கட்டடத்திலுங்கூட, கல்லறையின் தரைத் திட்டம் (ground plan) இந்திய பாணியைக் கொண்டதுதான். கட்டடத்தின் வெளிப்புறத் தோற்றம் பாரசீகத்தில் காணமுடியாத வெள்ளைச் சலவைக் கல்லால் பெரிதும் ஆக்கப்பட்டும், பாரசீகக் கட்டடக் கலைஞர்கள் பெரிதும் விரும்பிய ஓடு, வண்ணங்களால் அழகுபடுத்தப்படும் முறை கையாளப்படாமலும் தூய பாரசீகப் பாணியினின்றும் வேறுபடுத்தப்பட்டிருக்கிறது. இரண்டு கவிகை மாடங்களைக் (double dome) கொண்டு, சிறிது புடைத்த வரை கோட்டோடு, உயர்ந்த தலைப்பை அடுத்த கீழ்ப்பகுதியின்மேல் நிற்கும் இக் கட்டடம், இந்தியாவின் பழைய முறைக்குச் சான்று என்னும் முறையில்கூடச் சிறப்புப் பெற்றிருக்கிறது. இக் கட்டுமான முறை சாமர்க்கண்டில் உள்ள தைமூர் (Timur), பீபி கனும் (Bibi Khanam) கல்லறைகளில் காணப்படுகிறது. இது மேலும் பதினோராம் நூற்றுண்டின் இறுதியில் கட்டப்பட்ட டமாஸ்கஸின் (Damascus) உமாயத் மசூதியின் அமைப்புத் தோற்றத்திலும் காணப்படுகிறது.[1]

பொதுவாகச் சொல்லுமிடத்து, அக்பருடைய ஆட்சிக் காலத்துக் கட்டடங்கள் இந்து-முகம்மதிய இணைப்புக் கூறுகளைப் பெற்றிருக்கின்றன எனலாம். சில சமயங்களில் முன்னதும், வேறு சமயங்களில் பின்னதும் முனைப்புப் பெற்றிருப்பதால், இந்து-முகமதியக் கலப்புப் பாணியை இது சேர்ந்ததாகும் என்று சொல்வது சரியாகும். புனித ஷேக் சிஸ்தியின் (Shaikh Chisty) ஆசிரமத்தைச் சுற்றி அக்பர் கட்டியதும், 1569ஆம் ஆண்டுமுதல் 1584ஆம் ஆண்டு வரை பேரரச அவையின் இருப்பிடமாக விளங்கியதுமான ஃபதேபூர் சிக்ரி அக்பரின் மேதைமைக்குச் சிறந்த சான்றுக விளங்குகின்றது எனக் கருதலாம். பின்னர் வருகின்ற ஆட்சிக் காலங்களில் இவற்றிற்கு ஒன்றும் சேர்க்கப்படவில்லை என்கிற பொருளில், இது வர்சைலஸை விட (Versailles) அதிக முழுமை வாய்ந்த ஒரு படைப்பாகும். வர்சைலஸ் ஒரு குறையை, ஒரே ஓர் இரஸக்குறையைப் பெற்றிருக்கிறது. அதாவது, ஒரு தனிமனிதப் பண்பைத் தெய்விக உருவக அடிமைத் தன்மையோடு தகவின்றித் திரும்பத் திரும்பக் காட்டுகிறது. தனியுரிமை (prerogative), பெருமிதம் ஆகியவற்றின் கண் கொண்டு பார்த்தால் தனி மனிதப் பண்பு சிறப்புடையதாக இருக்கலாம். ஆனல், இது அறிவாற்றலில் குறைவுள்ளதாகவும், தத்துவமும் மனித ஆர்வமும் (human anxiety) இல்லாததாகவும் இருக்கிறது. அக்பரின் சிறப்பியல்பு இதிலிருந்து எத்துணை வேறுபடுகிறது! அக்பரின் சமகாலத்தவரான இரண்டாம் ஃபிலிப்பிற்கு

[1] Smith, 'Akbar', p. 435.

அல்லது ஒரு நூற்றாண்டிற்குப் பின்னர் வந்த அடக்குமுறை வீரர்களின் (Dragonnades) அரசனுக்கும் அக்பரின் நற்பண்புத் திரட்சிக் கொள்கை எத்துணை அரிய பாடம்![1] அக்பரின் பாழடைந்த நகரின் அநேக முக்கியக் கட்டடங்கள் பழுதடையாமல் இன்றும் ஏறக்குறைய அப்படியே இருக்கின்றன; பல சீர்திருத்த முடியாத அளவுக்கு அழிந்தும் விட்டன. இருப்பினும், போதுமான அளவு கட்டடங்கள் நிலைத்திருக்கின்றன. குவாப்கா (Khwabgah-கனவு இல்லம்), பதிவேடுகள் அறை, திவானி-காஸ்(Diwan-i-Khass), திவானி-ஆம் (Diwan-i-Am), பெரிய மசூதி போன்றவைகள் இக் கட்டடங்களின் திரட்சியின் முந்திய பெருமையைத் தெரிந்து கொள்ள உதவிபுரிகின்றன. சிவப்பு மணற் கல்லின் முகட்டை உச்சியாகக்கொண்ட இக் கட்டடங்கள் உலகிலேயே செல்வமிக்க அரசனுக்கு நகர உள்ளரணை முன்பு அமைந்திருந்தன. திவானி காஸைவிட எழில் வாய்ந்த ஒரு கருத்தைக் கற்பனையுங் கூடச் செய்ய முடியாது என்று தற்காலப் பயணி ஒருவர் கூறியிருக்கிறார்.

'ஓர் ஒருங்கொத்த தன்னிகழ்வால் சிக்கந்தரா கல்லறை மாடத்தின் உச்சியிலுள்ள பேரரசரின் கல்லறையின் ஓர் அணியாக விளங்கும் நடுத்தூணின் கவின்மிகு செதுக்கு வேலைகள் இளவரசிகள் துயில்கொள்ள வரும் பஞ்சமகாலைக் கருத்தில் கொண்டதாக ஒருவர் சொல்லக்கூடிய தூணின் தலைப்பு மாபெரு வட்டமாகப் பரவியிருக்கிறது. இத் தூண் உச்சியிலிருந்து தாழ்ந்த, திறந்த, நான்கு குறுக்குக் கற்பின்னல்களாலான மாடிமுகப்புப் படிக்கட்டுகளால் பூமியோடு தொடர்புகொள்ளக்கூடிய மேடைகள் இருக்குமிடங்களில் விதான மண்டபத்தின் மூலைகளுக்குப் பிரிந்து செல்கின்றன. தாமரை மலர்க் கிண்ணத்திலுள்ள கடவுளைப்போல் பேரரசர் தண்டயக் கட்டுகளால் அமைந்த தூணின் உச்சியின் நடுவில் வீற்றிருந்தார். கோணங்கள் ஒவ்வொன்றிலும் ஓர் அமைச்சர் வீற்றிருந்தார்; திறந்தோ மூடியோ இருந்த கல்லால் இழைக்கப்பெற்ற திரைகளின் வளைவுகள் வழியாகப் பரந்த வட்டமான அடிவானம் முழுதும் காணலாம். பேரரசின் மூலைமுடுக்குகளிலிருந்து ஆகாயத்தின் நான்கு மூலைகளுக்கும் பரவுகின்ற ஒளிமிகு சுடரைப்போல் தலைவரின் கட்டளை இங்கிருந்து பரவியது. பொறுப்புடைமையையும் அதிகார விருப்பையும் கற்பனையாகக் காண இதற்குமேல் எனக்குக் கவிதை உணர்வு இல்லை.'[2]

[1] D' Humieres, 'Through Isle and Empire,' p. 194.
[2] Ibid, pp. 199-200.

அக்பருடைய நகரின் எழில்மிக்க கூறுக இருப்பது புலந்து தர்வாஸா (Buland Darwaza) அல்லது பெருவாயிலாகும். இது சலவைக்கல்லாலும் மணற்கல்லாலும் கட்டப்பட்டிருக்கிறது. மசூதியின் தெற்கு நுழைவாயிலாக இது அமைந்திருக்கின்றது. 'இந்தியா முழுவதிலும் மிகப் பூரணமான கட்டடக் கலைச் சாதனைகளில் இது ஒன்றாகும்' என்று ஒரு நிபுணரால் இது வருணிக்கப்படுகிறது. ஃபதேபூர் சிக்ரிக்கு விஜயம் செய்த ஃபிரெஞ்சு நாட்டவர் ஒருவருடைய கீழே கொடுக்கப்பட்டுள்ள வருணனையின்மூலமாக இது சாதாரண மனிதனின் மனத்தில் ஏற்படுத்தும் பிரமிப்பை நன்கு அறிந்து கொள்ளலாம்:

'150 அடி உயரமுள்ள இப் பெரும் பகுதி, அரைக் கவிகை மாடமாக அமையும் மத்திய மேல்வளைவு, திட்டமாக அமையும் வியனகத்தின் நான்கு மூலைகளிலும் இருக்கும் நான்கு தூபிகள், நுழைவிடத்திற்கு இட்டுச் செல்லும் பரந்த படிக்கட்டுகள், சரிவு நிலையிலுள்ள படிகள் இருக்கும் தரையின் கீழ்நோக்கிய தொடர்பான சரிவு ஆகிய இவைகளெல்லாம் சேர்ந்து இந்த நுழைவாயிலை இணையற்றதொரு நினைவுச் சின்னமாகச் செய்கின்றன. குன்றின் அடிவாரத்தில் குவிந்திருக்கும் எளிய குடியிருப்புகளைக்கொண்ட இக் கிராமத்தின் ஓரத்தைக் கீழிருந்து பார்க்கும்பொழுது பெருமிதப் போக்குடையதாகத் தோன்றுகிறது. மாபேரளவான பெரும் பகுதிக்கும், இதனுடைய சுற்றுச்சார்புகளுக்கும், மேல்நோக்கி உயர்ந்து செல்லும் வீறார்ந்த இதனுடைய கல் மேற்கவிகைக்கும் இயைபு பொருந்தாமையில்தான் இந்தப் பெருமிதப் போக்குக் காணப்படுகிறது. முற்காலத்தில் வன்பாலை நிலத்திலிருந்த விலங்குகளின் தோல்களைச் சுமந்துநின்ற நிலைக்கம்பத்தைப்போல் அல்லது உயரிய விதானமுறைகள் எல்லாவற்றுடனும் அமைந்துள்ள வெற்றியாளர்மீது காணப்படும் கதம்பத் திரளான கம்பளம்போல் இத் தூபிகள் தோன்றுகின்றன. செங்குத்து நிலைகள் இத்தகைய முழுநிறைவான சிறப்பை எட்டியுள்ள மற்றொரு நினைவுச் சின்னமாகிய புவாய்ஸ் மாதாகோவிலை (Beauvais Cathedral) மட்டுமே நான் அறிவேன். இது இறைவனைப் புகழ்ந்தேத்தும் சிறந்த வாழ்த்தொலியேயாகும். மற்றபடி, முஸ்லிம் கல்வெட்டு ஒன்று தகுந்த உணர்ச்சிப் பாடல் வடிவத்தில் பின்னே காணுமாறு ஆர்ப்பரிக்கிறது: 'இதனுடைய அலமாரி அறைகள் (mihrab) பரந்த புருவத்தையுடைய உதயத்தைப் போலவும், இதன் உச்சநிலை வானகப் பால்வீதி மண்டலத்தைப் போலவும் இருந்தன. இதனுடைய நுழைவாயில் உரக்கக் கூச்சலிடுகிறது.'

'அஞ்சத்தக்க தோற்றமுடைய மேல்வளைவிற்குமுன் உன்னை ஒரு சிறந்த மறைவு வெளிப்பாடும், ஓர் உள்ளூக்கம் பெற்ற உணர்ச்



ஃபதேபூர் சிக்ரி - பஞ்சமஹால்

சியும் ஆட்கொள்ளுகின்றன. இந்துஸ்தானத்தின் அடிவானத்தி லிருந்து கம்பீரமாக எழும் ஒரு நிலை, மேடையின் உச்சியிலிருந்து நூற்றுக்கணக்கான ஊதுகொம்புகளிலிருந்து கிளம்புகிற பேரொலி யைவிட உரக்கவும் தொடர்ச்சியாகவும் இங்கிருந்து ஒரு வெற்றி எக்காளமாக வெளிவருகிறது. இப் பெருஞ் செருக்கொலி செழிப் பான சமவெளிகள் மீதும், அமைதி நிறைந்த பட்டணங்கள் மீதும், அழிக்கப்படாத காடுகள் மீதும் பரவி, தென் கரைகளின் மலைப்பு உண்டுபண்ணும் மெல்லொலியோடு சேர்ந்து மறைந்துவிடுகிறது.'

ஒருவர் மற்றச் சொற்களை நினைக்கிறார். இவைகளின் மூன்றடுக்கு இணைப்பு, ஒரு மாருச் சடங்கிற்கொப்ப ஒரு வளமான செவ்வகமாக அமைகிறது. வீரூர்ந்த எளிமையோடு இம் மேல்வளைவு அமைக்கப் பட்டிருக்கிறது. அவர்கள் பேசுகிறார்கள்:

'உலகம் ஒரு பாலம்; இதன் மீது கடந்து செல்க. ஆனால், இதன் மீது வீடமைக்கலாகாது. உலகம் ஒரு மணிநேரம்தான் நிலைத்து நிற்கும். இதை தியானத்தில் கழி. எஞ்சியதை யார் பார்க்க முடியும்? நீ கொடுத்த ஈகைதான் மிகப்பெரிய செல்வம். செல்வம் தோன்றிப் பின் மறையும். கண்ணாடிதான் உலகம் என்பதை உணர்க. உன் கண்கள் காணாத எதையும் உன்னுடையதென்று சொல்லாதே.'

'இத் தூய்மையான வரிகளையும், இதன் பொருண்மைப் பேரழ கையும், கலையின் இச் செயலுருவாக்கத்தையும் வியந்து பாராட்டும் நிலையில் நாம் இருக்கும்போது, ஆழ்ந்த மதிப்பு, துயரார்ந்த நிலை ஆகியவற்றின் ஒரு கூறு கலந்திருக்கக் காண்கிறோம். பெறலரும் நிறைவுணர்வுகளில் ஒன்றை இது அளிக்கிறது. இதைக் காலம் நம் நினைவிலிருந்து அழிக்கமுடியாது. இந் நினைவாற்றலை நாம் எங் கிருந்தாலும் இழக்க முடியாது.'[1]

ஃபதேபூர் சிக்ரியைப்போன்று எதுவும், எப்பொழுதும் படைக் கப்பட முடியாது என்று துணிந்து சொல்லலாம். ஏனெனில், ஃபெர்குஸனின் சொற்களில், இதைக் கட்டிய பெரிய மனிதரின் மனத்து எண்ண அலைகளின் பிரதிபலிப்பு இது என்று கூறலாம்.[2] நீண்ட காலமாகக் கவனிப்பாரற்றிருந்தபோதிலும், காலம் அதன் மீது வடுக்களை ஏற்படுத்தியிருந்தபோதிலும், அது சிறப்பு மிக்க ஒரு தனிமனிதரின் இயல்புகளைச் சிறந்த வகையில் வெளிப்படுத்து கிறது.

[1] D' Humieres; 'Through Isle and Empire', pp. 206-7.

[2] Fergusson, 'History of Indian and Eastern Architecture', ed. 1910, p. 297.

மேலே கூறப்பட்ட கட்டடக் கலையின் தலைசிறந்த படைப்புகளைத் தவிர வேறு பலவும் அக்பர் கட்டினார். சான்றாக, சிக்கந்தராவில் உள்ள கட்டடங்கள், ஆக்ராவிலுள்ள அக்பரி மஹால், அட்டாக்கிலுள்ள கோட்டை, அலகாபாத் கோட்டை முதலியன. அலகாபாத்துக்கோட்டையைக்கட்டப்பலவகையரானஇருபதாயிரம் பேர் வேலைக்கு அமர்த்தப்பட்டு நாற்பதாண்டுகள் தொடர்ந்து பணி நடந்தது என்று வில்லியம் ஃபின்ச் (William Finch) என்பவருக்குத் தெரிவிக்கப்பட்டது. தாம் அலகாபாத்திற்கு விஜயம் செய்தபொழுது ஐந்தாயிரம் பேர் அப்போதும் வேலை செய்துகொண்டிருந்தார்கள் என்று வில்லியம் ஃபின்ச் கூறுகிறார்.[1] தம்முடைய தந்தை அக்பரின் காலத்தில் கட்டப்பட்ட கட்டடங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது, ஜகாங்கீரின் காலத்தில் கட்டப்பட்ட கட்டடங்கள் மிகக் குறைவானவை. இருப்பினும், அவைகளில் சில மிகுந்த முக்கியத்துவமும் தரமும் வாய்ந்தவை. நூர்ஜஹானால் சுமார் 1628ஆம் ஆண்டில் ஆக்ராவுக்கு அணிமையில் கட்டப்பட்ட இதிமது-உத்-தௌலாவின் (Itimadu-d daula) கல்லறையைவிட எக் கட்டடமும் அதிக அழகுடையதாக இருக்க முடியாது. முழுவதும் வெள்ளைச் சலவைக் கல்லால் கட்டப்பட்டு, சாதாரண விலையுயர்ந்த கற்களால் பல்வண்ண ஒப்பனை அமைப்பு (pietra dura) முறையால் அழகுபடுத்தப்பட்டு, ஷாஜஹானின் ஆட்சிக் காலத்து ஒருவகை அலங்காரப் பாணியை அது ஒத்திருக்கிறது; இன்னும் கேட்டால் அதைவிட உயர்வாயிருக்கிறது என்றுகூடச் சொல்லலாம். லாகூரிலும் மற்ற இடங்களிலுமுள்ள ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்தில் முக்கியமான நினைவுச் சின்னங்களில் ஒன்று சிக்கந்தராவிலுள்ள அக்பரின் மாபெருங் கல்லறையாகும். இது 1605-1612 ஆம் ஆண்டுகளுக்கிடையில் பேரரசரின் கட்டளையின்பேரில் கட்டப்பட்டது. ஐந்து சமசதுர மேல்தளங்களைச் சிறப்பாகக் கொண்டு அவை உயரமாகச் செல்லச் செல்லக் குறைந்துகொண்டே வருகின்ற இக் கல்லறையின் அமைப்புத் திட்டம், பஞ்ச மஹாலின் (Panch Mahall) அமைப்புத் திட்டத்தோடு ஓரளவு ஒத்திருக்கிறது. பஞ்ச மஹால் அக்பரால் ஃபதேபூர் சிக்ரியில் கட்டப்பட்ட ஐந்து மாடிகளைக்கொண்ட விதான மண்டபமாகும் (pavilion). இக் கட்டடம் இந்திய புத்த விஹாரங்களின் மாதிரியில் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று அதிகாரபூர்வமான வரலாற்றாசிரியர்கள் சிலர் கருதுகிறார்கள். ஆயினும், கம்போடியாவிலும் கொச்சின் சீனாவிலுமுள்ள கெமர் கட்டடக் கலைப் பாங்கின் (Khmer architecture) முக்கிய இரு வகைகளில் ஒரு வகையோடு இது ஒத்திருக்கிறது; அதைப்போலவே இருக்கிறதென்றும் சொல்லலாம். ஆகவே,

[1] W. Foster, 'Early Travels in India', p. 177.



ஆக்ரா : இதிமது-உத்-தௌலாவின் கல்லறை



ஆக்ரா கோட்டை—முத்து மசூதி.

தூரக்கிழக்கிலிருந்து (Far East) ஜஹாங்கீரின் அரசவைக்கு வந்த கைவிணைஞர்களின் ஆலோசனையைக் கேட்டு அக்பருடைய கல்லறை கட்டப்பட்டிருக்கலாமென்று வேறோர் அறிஞர் கூறுகிறார்.[1] இக் கூற்றில் ஓரளவு உண்மை இருக்கிறது. ஏனெனில், இக் கட்டடத்தின் மேல்மாடியில் நினைவுச் சின்னத்தின் (cenotaph) மேல் ஒரு சிறு குவிமாடமும் இக் கட்டடத்தின் அமைப்புத் திட்டத்தில் (plan) இடம் பெற்றிருக்க வேண்டும் என்று குறிப்பாக ஃபெர்குஸனும் மற்றோர் அறிஞரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால், அது கட்டப்படவேயில்லை. கெமரை மூலமுதலாகக் (Khmer origin) கொண்ட பழைய கம்போடியக் கட்டடங்களின் மேல்மாடியில் வளைந்த கூரை போன்ற அமைப்பு இருப்பது அக் கட்டடங்களின் சிறப்புக் கூறு ஆகும்.

ஆயினும், ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தில்தான் இந்தோ-பாரசீகக் கட்டடக் கலைப் பாணி அதனுடைய உயர்ந்த அழகைப் பெற்றது. இக் கட்டடங்களை அவர் கட்டுவதற்குப் பிடித்த செலவு மிகவும் ஏராளமானது. தாஜ்மஹாலுக்கு மட்டும் 45 இலட்சம் பவுன் ஸ்டெர்லிங் செலவிடப்பட்டிருக்கின்றது என்று ஒரு மதிப்பீடு கூறுகிறது. ஆக்ராவில் உள்ள அரண்மனையில் பூந்தோட்டங்கள், முத்து மசூதி (Pearl Mosque), தாஜ்மஹால் ஆகியவைகளும், தில்லியில் உள்ள அரண்மனைகள், இத்கா, ஜாமா மசூதி ஆகியவைகளும் தவிர லாகூரிலும் அவர் அரண்மனைகளையும் பூந்தோட்டங்களையும் கட்டினார். காபூலில் ஒரு கோட்டையையும், அரண்மனையையும், ஒரு மசூதியையும், காஷ்மீரத்தில் அரச கட்டடங்களையும் (royal buildings), ஆஜ்மீரத்திலும், அலகாபாத்திலும், மற்ற இடங்களிலும் பலவிதக் கட்டடங்களையும், முக்லிஷ்பூரில் (Mukhlispur) அரண்மனைகளையும், காந்தகாரிலும் மற்ற இடங்களிலும் பல கோட்டைகளையும் ஷாஜஹான் கட்டினார். இக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஏற்பட்ட செலவின் சரியான மதிப்பீடு தெரியவில்லை. ஆனால், இவைகளினால் ஏற்பட்ட செலவு பல கோடியாக இருந்திருக்க வேண்டும். ஷாஜஹானின் முக்கியக் கட்டடங்கள் பாரசீகப் பாணியைக் கொண்டவை. ஆனால், அதே சமயத்தில் நிகரற்ற ஒப்பனை நுணுக்கங்களும் மிகுதியாக வெள்ளைச் சலவைக் கல்லும் பயன்படுத்தப்பட்டதால், பாரசீகப் பாணியிலிருந்து தெளிவாக மாறுபட்டிருக்கின்றன. ஷாஜஹானின் ஆட்சிக் காலத்து மற்றொரு முக்கியக் கூறு, வெளிவேலைப்பாட்டுச் செதுக்குச் சித்திரமாகும். இவ் வேலைப்பாடு நேர்த்தியான கட்டடங்களை அணி செய்கிறது. பரவலான அமைப்புத் திட்டத்தோடு பெண்மையின் அழகும்

[1] Smith, H. F. A., p. 411; 'Indian Antiquary', vol. lii, 1923, p. 118.

பொருத்தமாக இணைந்த தாஜ்மஹால் இவ்வுலகின் ஒப்பற்ற அழகு பொருள்களில் ஒன்று எனப் பல ஆர்வலர்களால் வருணிக்கப் படுகிறது. பேரரசி மும்தாஜ் மஹால் இறந்த சில மாதங்களுக்குப் பின்னர் 1631ஆம் ஆண்டில் தாஜ்மஹால் கட்டத் தொடங்கப்பட்டு 1653ஆம் ஆண்டுவரை இறுதியாகக் கட்டி முடிக்கப்படவில்லை. இதைக் கட்ட ஒவ்வொரு நாளும் இருபதாயிரம் பேர் அமர்த்தப் பட்டனர். தாஜ்மஹாலுக்குத் திட்டம் தீட்டிய சிற்பி யாரென்று திட்டவட்டமாகத் தெரியவில்லை. 'ஐரோப்பிய-ஆசிய மேதைமைக் கூறுகளின் இணைப்புப் படைப்பே தாஜ்மஹால் என்று வின்சென்ட் ஸ்மித் கூறுகிறார். இக் கருத்தை மௌல்வி மொய்னுதீன் அஹமது (Maulvi Moinu-d-din Ahmad) மறுத்து, இஸா அஃபந்தி(Isa Afandi) என்ற துருக்கிய இந்தியரால் அது திட்டமிட்டுக் கட்டப்பட்டது என்று கூறுகிறார். அவர், மேலும், ஃபிரெஞ்சு அல்லது இத்தாலிய நிபுணர்கள் தாஜ்மஹாலைத் திட்டமிட்டுக் கட்டுவதில் பங்குகொண் டார்கள் என்பதையும் மறுத்து, அதற்குக் காரணங்களையும் கூறு கிறார்.[1] ஷாஜஹானின் தொடக்கத் திட்டத்தில் நதியின்மேல் நிலைபெறுன ஒரு பாலத்தைக் கட்டி, தாஜ்மஹாலையும் பேரரசராகிய தமக்கே அதே மாதிரி சிறப்புமிக்க மற்றொரு கல்லறையையும் இணைக்க ஷாஜஹான் எண்ணியிருந்தார். ஆனால், இவ்வெண்ணம் நிறைவேறாமலேயே போய்விட்டது. இப்பொழுது நதியின் இரு கரைகளை எதுவும் இணைக்கவில்லை. 'சில சமயங்களில் பச்சைக் கிளிகள் நீரின் மேற்பரப்பின்மேல் பறந்துசென்று இரு கரைகளை யும் இணைக்கின்றன. மங்கலொளியில் தங்க அம்பருத் தூணியி லிருந்து தப்பிப் பாயும் மரகத அம்புகள்போல் இக் கிளிகள் மிளிர் கின்றன. மெல்லப் பாயும் நீரின் அமைதியான மேற்பரப்பின்மீது பாசத்திலிருந்து சாவுக்குச் செய்தி செல்வது போன்று இருக்கிறது.'[2]

ஆக்ரா, டெல்லி ஆகிய இரண்டு இடங்களில் ஷாஜஹான் கட்டிய இரண்டு அரண்மனைகளில் முந்திய இடத்தில் கட்டப்பட்ட அரண்மனை அவைநயத்தில் உயர்ந்தது என்றும், பிந்திய அரண்

[1] See Smith, H. F. A., pp. 416-18, Moinu-d din Ahmad., 'The Taj and its Environments', pp.16-30 (2nd ed., Agra, 1924) என்ற இந்த இரண்டு நூல்களிலும் சிற்பி யாரென்பதைப்பற்றிய வாதத்தைக் காண்க.

[2] ஷாஜஹானின் இதற்குமுன் கட்டிய வேறொரு கல்லறையின் புகழைத் தாஜ் மகாலின் புகழ் மங்கச் செய்துவிட்டது. அது லாகூரின் அருகில் சதாராவிலுள்ள அவருடைய தந்தையின் கல்லறையாகும். ரஞ்சித் சிங்கின் காலத்தில் அது பெரிதும் சீரழிவுற்றபோதிலும், இன்றும் பேரழகுடன் திகழ்கிறது. தாஜ் மகாலைப் போன்றே இக் கட்டடமும் ஐரோப்பியர்களால் கட்டப்பட்டது என்ற வதந்தி பல ஆண்டுகளாக இருந்துவருகிறது. இதன் அருகில் ஜஹாங்கீரின் புகழ் மிக்க மனைவியான நூர்ஜஹான் எவ்வித ஆடம்பரமுமற்ற கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டுள்ளார். தன் கணவன் இறந்த பின்னர் தான் அடைந்த புகழ் மங்கிய நிலையை இது எடுத்துக்காட்டுகிறது போலும்.

மனையை முழுமையாகப் பார்த்தால், ஃபதேபூர் சிக்ரி அக்பரின் தனித்தன்மையை வெளிப்படுத்துவதுபோல், இது ஷாஜஹானின் தனித்தன்மையைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது என்று ஃபெர்கூசன் கூறுகிருர். இவ்விரண்டு மாளிகைகளும் வீருர்ந்த அழகுள்ளவை. சிறப்பாக, முதன் முதல் வெள்ளியாலான கூரையைக்கொண்ட திவானி காஸ், 260 இலட்சம் ஃப்ரெஞ்சு பண மதிப்புடையது என்று தாவர்னியர் (Tavernier) குறிப்பிடுகிருர். இதனுடைய சலவைக்கல், தங்கம், விலையுயர்ந்த கற்கள் கலந்த ஒப்பனை அமைப்பு, அதில் பாரசீக மொழியில் எழுதப்பட்ட சொற்கள் சரியானவை என்று பறைசாற்றுகின்றது. அச் சொற்களாவன:

> ‘இவ்வுலகில் சுவர்க்கம் இருக்கின்றதென்ருல்
> அது இதுதான், அது இதுதான்; இதைத் தவிர
> வேறு எதுவுமில்லை.’

ஆனால், ஒருவேளை ஷாஜஹானின் ஆட்சிக் காலத்துக் கட்டடக் கலையின் மிகப் பூரணமான மரபுரிமைச் சொத்து (legacy) ஆக்ரா கோட்டையிலிருக்கின்ற முத்து மசூதியாகும். அவ் வொப்பற்ற கட்டடத்தில் மாபெரு முகலாயர்களால் புகுத்தப்பட்ட பாணி தன்னுடைய தூய்மை, அழகு இவற்றின் உச்சத்தை எட்டிற்று.

‘திசை திரும்பாக் கூர்மாடச் சிற்பப் பாணியைக் காட்டிலும் பற்கள் போன்ற முனைப்பான மேல்வளைவுகள், வெள்ளை, நீல நிறத் தொலைவுத் தோற்றங்கள்—ஆகியவைகளில் இன்னும் சிறிது செறிந்த மறை ஆற்றலுடைய கருத்து இருக்கிறது. உலகிலேயே மிகப் பெரிய தமிழ் நாட்டுக் கோபுரங்கள் ஊட்டுகின்ற தெய்வ உணர்வு, இருதயக் கனலின் மிகப் பூரணமான பொருளிலிருந்து உருவாகிய நம்பிக்கை, அருட் செய்கையிலிருந்து ஒளிர்விடும் பற்றுறுதியோடு ஒப்பிட்டால், குழப்பமாகவும் வீணழிவாகவும் தெளிவற்றதாகவும் தோன்றுகின்றது. கிரேக்கக் கோயில்களின் தூய தன்மை, அழகைக் கல்லுருவாக்கும் அவ்வுணர்வைப் பெற்றிருக்கவில்லை. இயற்கையின் விளையாட்டால் பிறந்த தெய்வத் தன்மை, மேகங்கள், அலைகள், காற்றுகள் ஆகியவற்றின் குழந்தையை ஒருவர் வரவேற்கின்ருர். ஒருவருக்கு மொட்டிலிருந்து பூ மலர்வதைப் போல் எவ்வித வேதனையுமின்றித் தன் முதல் வெற்றுப் புனைகதையிலிருந்து தோன்றுகிறது; மற்ருெருவருக்குத் தெய்வத் தன்மையைக் கருத்தில் கொள்ளமுடியாதாகையால், இது சுடர்விட்டு ஒளிர்கின்ற கல்வடிவிலுள்ள கவிதையாக நினைவாழத்திலிருந்து வெளிவருகிறது. மகிழ்ச்சிக்கும் கழிபேருவகைக்கும் இடையேயுள்ள

அதே வேறுபாடுதான் இதுவும். ஆயினும், முத்து மசூதி தரும் உணர்ச்சியில் எவ்விதமான வலிந்து தோற்றுவிக்கப்பட்ட அல்லது துயரார்ந்த புலனுணர்வும் இருப்பதாகக் கற்பனை செய்யலாகாது. முதல் உண்டாகும் உணர்ச்சி அமைதியும் சாந்தமுமாக இருக்கிறது. அடையக்கூடியதாக நம்புகின்ற ஒருவரின் தூய்மையான தியான ஆர்வ முனைப்பைப் பின்னர்தான் ஒருவர் உணரத் தொடங்குகிறார். அப்போது வெண்மையாகப் பழுக்கக் காய்ச்சிய உலோகம் என்று வெப்ப அலைகளை அச் சலவைக் கற்கள்மீது பரவச் செய்வதுபோல் ஓர் அதிர்வு ஏற்படுகிறது; அடுத்து மறுபடியும் எல்லாம் அமைதி. புனித இடம் உயிர்த்துடிப்புடன் இருக்கிறது. கழிபேருவகைக்கும் மெய்மறந்த களிப்பிற்கும் இடையில் மறைவடக்கமான ஓர் ஆன்மா துடிக்கிறது.'[1]

அவுரங்கசீப் ஆட்சிக்கு வந்ததும் முகலாயக் கட்டடக் கலைப் பாணி விரைவில் சீரழிவுற்றது. அவருக்குமுன் இருந்தவர்களுடன் ஒப்பிடும்பொழுது அவுரங்கசீப் அதிகமாகக் கட்டடங்கள் கட்ட வில்லை. சுமாரான தரமுள்ள கட்டடங்கள் இவருடைய காலத்தில் பல கட்டப்பட்டன. அவற்றில் சிறந்தது லாகூரில் கட்டப்பட்ட மசூதியாகும். இது 1674ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது. இது டெல்லியிலுள்ள பெரிய மசூதியைப் பார்த்துக் கட்டப்பட்ட தாகும். ஆனாலும், அப் பெருமை வாய்ந்த கட்டடத்திற்கு இது திட்டமாகத் தாழ்ந்ததேயாகும். ஓரளவு சிறப்புமிக்க மற்றொரு கட்டடம் டில்லியிலுள்ள ஜினத்துன்னிசாவின் (Zinatu-n nissa) மசூதியாகும். ஆனால், பொதுவாகச் சொல்லுமிடத்து, அவுரங்கசீப் பின் காலத்து இந்தோ-பாரசீகக் கட்டடக் கலைப் பாங்கு படிப்படியாகச் சீர்குலைந்துகொண்டிருந்தது. இச் சீர்குலைவு பதினெட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த அயோத்தி அரசர்களின் செம்மை பெறாத கட்டடங்களில் முடிவடைகிறது. நேர்த்தியான கட்டடங்களைத் திட்டமிடவும் கட்டவும் அவுரங்கசீப் ஆதரவு தரவில்லை என்று நாம் அவரைக் குறைகூற முடியாது. ஆனால், கட்டடக் கலைக்கோ, முந்திய மன்னர்களின் பேரரச அவையிலிருந்த நுட்பத் தொழிலாளர்களுக்கோ இவர் ஆதரவு தரவில்லை என்பது உறுதி. அவுரங்காபாத்தில் இருக்கின்ற இவருடைய கல்லறையே பெருமிதம் குன்றியதாக இருக்கின்றது. இது, இந்துஸ்தானத்தில் தாஜ்மஹால், ஸ்பெய்னில் (Spain) அல்ஹம்பரா (Alhambra) ஆகிய ஒப்பற்ற இந்த இரண்டு நினைவுச் சின்னங்களைத் தோற்றுவித்த முஸ்லீம் ஆக்க அறிவு தனது குறிக்கோளை நிறைவேற்றிவிட்டது என்பதற்கும், பிஷப் ஹீபரின் (Bishop Heber) சொற்களில் 'பூதங்

[1] D. Humieres, 'Through Isle and Empire', pp. 225-6.

களைப்போல் கட்டி நகைத்தொழிலாளர்களைப் போன்று செயல் தீர்வு செய்த' தைமூரிய வமிசத்துப் பேரரசர்கள் மீண்டும் நினைவு கொள்ள முடியாத அளவுக்கு மறைந்துவிட்டனர் என்பதற்கும் மௌனமாகச் சான்று கூறுகிறது.

முகலாய ஓவியக் கலை

முகலாய ஓவியக் கலையின் வரலாறு முகலாயக் கட்டடக் கலையின் வரலாற்றை ஒத்திருக்கிறது. பேரரசு சிறந்திருந்த பொழுது அதுவும் சிறந்திருந்தது; பேரரசு சீர்குலைந்தபொழுது ஓவியக் கலையும் தாழ்ச்சியுற்றது. அக்பரால் முகலாயக் கட்டடங் களின் பாணியும் அமைப்புத் திட்டமும் பாரசீகத்திலிருந்து தொடக் கத்தில் புகுத்தப்பட்டு, இந்து எண்ணங்களின் தொடர்பால் முழுதும் உருமாறி, இந்தோ-பாரசீக அல்லது முகலாயப் பாணியாக மாறிற்று. அதேபோன்று, முகலாயர்கள் காலத்து ஓவியக் கலையும் தோற்றத்தில் பாரசீகப் பாணியாக இருந்தாலும், உண்மையில் பாரசீக-இந்து எண்ணங்களின் ஒரு கூட்டு விளைவாகும். இது வளர்ந்து ஓவியக் கலையில் இரண்டு பாணிகளாக மலர்ந்தது. ஒன்று முகலாய பாணி; மற்றொன்று இராஜபுத்திர பாணி. இவைகள் இரண்டின் வெற்றிக்கும் தைமூரின் சந்ததியாரின் ஊக்கமும் ஆதர வுமே காரணமாகும். பண்டைக் கால புத்த சமயப் புரோகிதர் களின் சித்திரக் கலையின் அடிப்படையில் எழுந்தது இந்திய ஓவியக் கலை. ஆகவே, இந்து ஓவியக் கலை பாரசீகக் கலையிலிருந்து அடிப் படையில் வேறுபட்டதாகும். பாரசீகக் கலை தூரக்கிழக்குக் கலைப் பாணிக்கு நெருங்கிய தொடர்புடையதாகும். ஆனால், தொடக்க கால முகலாயப் பேரரசர்கள் பாரசீகக் கலைப் பாணியை இந்தியா வில் புகுத்தியபொழுது, அக் கலைப் பாணி இந்தியாவின் பல தலை முறைகளாகத் தூரிகையைப் பயன்படுத்துவதில் பயிற்சி பெற் றிருந்த நாட்டுக் கலைஞர்களை—பரம்பரை ஓவியக் கலைஞர்களை— விரைவில் கவர்ந்தது. அக் கலைஞர்கள் தங்கள் சொந்த எண்ணங் களுக்குத் தகுந்தவாறு அதைத் திருத்தியமைத்துக்கொண்டார்கள். இந்து ஓவியக் கலைஞர்களின் முறைகள் பாரசீகப் பாணி முறை களுக்கு மாறுபட்டிருக்கவில்லை. ஆனால், அவர்கள் உருவாக்கிய பாணி பொதுவாக அதனுடைய நோக்கங்களிலும், மெய்ப்பாட்டி லும், தன்மையிலும் முற்றும் வேறுபட்ட ஓர் இயல்பையே உணர்த்துகிறது. முகலாய பாணி 'ஓரளவு உலகாயத வாழ்க்கை கொண்ட அரசவை. அதனுடைய பகட்டாரவாரமான வினைமுறை கள், ஊர்வலங்கள், வேட்டை மேற்செலவுகள், செல்வமிக்க ஒரு கீழ்த்திசை வமிசத்தின் காட்டுத்தனமாக இருப்பினும், அழகான எல்லாப் பகட்டுகள் ஆகியவைகளைச் சித்திரித்துக் காட்டுவதோடு மட்டும் நின்றுவிட்டது. ஆனால், இந்துக் கலைஞர்கள் மானசிகமாக

வும் பௌதிகமாகவும் மிகுந்த நுண்ணிய மற்றொரு சூழ்நிலையிலே வாழ்ந்து, இந்து ஆதரவாளருக்குப் பணிபுரிந்து, இந்திய இதிகாசக் காட்சிகள், குடும்ப வாழ்க்கைச் செய்திகள், வாழ்க்கை விளக்கங்கள் ஆகிய காட்சிகளைச் சித்திரித்து, தங்களுடைய தாய்நாட்டையும் அதன் தத்துவத்தையும் நினைத்தார்கள்.'[1]

முகலாயர்களால் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டு இந்தியாவிலுள்ள இந்துக் கலைஞர்களால் இவ்வாறாகத் தங்களுடையதாக்கிக் கொள்ளப்பட்ட பாரசீக ஓவியக் கலைமுறை சீனக் கலையின் நாட்டுப்புற அமைப்பேயாகும். மங்கோலியர்களால் ஏற்படுத்தப்பட்டு தைமூரின் வமிசத்தினரால் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்ட தூரக் கிழக்குப் பாணிகளோடு இது கொண்ட தொடர்பினால் இதன் தனிச் சிறப்பான இயல்புகள் தோன்றின. இக் கலை இந்தியாவினுள் புகுத்தப்படுவதற்கு அடுத்து முந்திய காலத்தில் இக் கலையின் இருபெரு வல்லுநர்களான ஹெராட்டின் பிஹ்ஜாத்தும் (Bihzad of Herat), அவருடைய மாணவர் டாப்ரிஜின் ஆகா மிராக்கும் (Aga Mirak of Tabriz) ஆவார்கள். 'கீழைநாட்டு ராஃபேல்' (Raphael of the East) என்று புகழப்படுகிற பிஹ்ஜாத் உருவப் படக் கலையைக் கண்டுபிடித்து வளர்த்தார். உண்மையாகவே, தொடக்கத்தில் சுல்தான் உசேன் பைக்காராவின் (Sultan Hussain Baiqara) ஆதரவிலிருந்து, அதன் பின்னர் பாரசீகத்து 'சஃபாவைத்' வமிசத்தைத் (Safavide dynasty) தோற்றுவித்த ஷா இஸ்மெயிலின்கீழ்ப் பணிபுரிந்த பிஹ்ஜாத், தைமூரின் சந்ததியார் காலத்து மங்கோலியப் பாணியிலிருந்து சஃபாவைத் அரசர்களுடன் தொடர்பு கொண்ட பண்பட்ட கலைப்பாணியாகப் பாரசீக ஓவியக் கலை மாறியதற்கு (transition) அடையாளமாக இருந்தார்.[2] சீனு, ஜப்பான் ஆகிய நாடுகளின் ஓவியக் கலையின் சிறப்புமிக்க அம்சம் அதன் கோடு என்றும், பாரசீகக் கலையின் சிறப்பு அம்சம் அதன் கோடும் வண்ணமும் என்றும், இந்தியக் கலையின் சிறப்பு அம்சம் அதன் வண்ணம் என்றும் ஒரு புகழ்பெற்ற கலை வல்லுநர் கூறியிருக்கிருர்.[3] முகலாய அரசர்களால் ஆதரிக்கப்பட்ட கலைஞர்களின் கலையாக்கங்களில் இப் பண்புகள் சேர்ந்து கலந்து இணைந்து நிற்கின்றன. இது படிப்படியாக மாறி ஒரு புறம் தூய்மையான முஸ்லீம் கலையாகவும், மற்றொரு புறம் புதிய இந்திய சித்திரக் கலைப்படைப்பாகவும் வளர்ச்சியுற்றது. தூய்மையான மங்கோலிய அல்லது சீனக் கலைப்பண்புகள் வீழ்ச்சியுற்ற படிமுறை (process), படிப்படியான இந்தியப் பாணியின் வளர்ச்சியும் பாட்ரு

[1] P. Brown, 'Indian Painting under the Mughals'.
[2] P. Brown, 'Indian Painting under the Mughals;' Smith, H. F. A.
[3] Ibid.

வில் குதா பக்ஷ் நூலகத்தில் (Khuda Baksh Library) காப்பாற்றப்பட்டு வருகிற தாரிகி கண்டானி தைமூரியா (Tharikh-i Khandan-i-Timuria), பாதுஷா நாமா (Badshah-nama) என்ற இரு நூல்களிலும் காணலாம். முன்னதில் சீன வரிவடிவக் கோட்டின் உறுதித் தன்மை மென்மையாக்கப்பட்டு, இயற்கைக் காட்சி தெளிவாக இந்தியத் தன்மை கொண்டதாக இருக்கிறது. ஆனால், பின்னதில் சீனத் தாக்கு விளைவு அடியோடு மறைந்து இந்திய பாணி முனைப்படைகின்றது.[1]

பாபருக்கு ஓவியம் வரையவோ வண்ணம் தீட்டவோ தெரியாது என்றாலும், அவருடைய கூர்ந்து கவனிக்கும் ஆற்றலாலும் இயற்கை மேல் அவருக்கு இருந்த ஆழ்ந்த ஆர்வத்தினாலும் அவர் ஒரு பிறவிக் கலைஞர். இரவில் உணவு, களியாட்டத்திற்குப் பிறகு, பாபர் ஓர் ஆப்பிள் மரத்தின்முன் ஆழ்ந்த சிந்தனையில் நின்றுகொண்டு, எத்துணைத் திறமைவாய்ந்த ஓவியனாலும் எழுதமுடியாத இலையுதிர் காலத்து இலைகளின் அழகு வண்ணங்களை வியந்து பாராட்டுவார். 'அவர் எப்பொழுதும் இயற்கையின் அழகைக் கூர்ந்து கவனிப்பார்' என்று லேன் பூல் (Lane Poole) எழுதுகிறார். மேலும் தொடர்ந்து அவர் எழுதுவதாவது: 'இதற்கு முன்னர் தமக்குத் தெரியாத இலாமிச்சைச் செடியைக் (spikenard) கண்டுபிடித்தால் மிகுந்த மகிழ்ச்சி அடைவார். தமக்கு விருப்பமான பூந்தோட்டங்களில் உள்ள மலர்களின் எழிலைப்பற்றி எடுத்துரைக்க அவர் சலிப்படைவதேயில்லை. இவ்வெழில்களைப் பார்த்து இரசிக்கும் உணர்ச்சியையோ, கவிதை, இசை ஆகியவற்றின் இன்பத்தைத் துய்க்கும் உணர்ச்சியையோ அவருடைய ஒழுக்கமற்ற வாழ்க்கை மழுங்க வைக்கவில்லை.'[2] இந்தியாவில் ஓவியக் கலையை வளர்க்க பாபர் எந்தவித முயற்சியும் எடுத்ததாகத் தெரியவில்லை. ஆனால், தமது தைமூர் சந்ததி முன்னோர்களைப் போன்றே பாபரும் ஓவியக் கலைஞர்களை ஆதரித்தார் என்று அவருடைய வாழ்க்கைக் குறிப்பின் பாரசீக மொழிபெயர்ப்பான ஆல்வாரிலுள்ள கையெழுத்துப் பிரதி குறிப்பிடுகிறது. அந் நூலின் கைப்பிரதியில் வரையப்பட்ட விளக்கப் படங்கள் அவருடைய ஆட்சிக் காலத்தில் பழக்கத்திலிருந்த ஓவியக் கலை பாணியைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.[3] ஹுமாயூனின் சீரமைதியற்ற வாழ்க்கை இந்தியாவில் அவர் உடைமையாயிருந்த பகுதிகளில் கலையை வளர்க்க அவருக்கு வாய்ப்பு அளிக்கவில்லை. அத் துறையில் அவருக்கு ஏதாவது திட்டங்கள் இருந்திருந்தாலும் அவை அவருடைய அகால மரணத்தினால் தடைப்பட்டன. அவர்

[1] J. N. Sarkar, 'Studies in Mughal India', pp. 290, 291.
[2] S. Lane-Poole, 'Babar', (Rules of India Series), p. 149.
[3] L. Binyon, 'Court Painters of the Grand Mughals', Introd., p. 14.

நாடு கடத்தப்பட்டுப் பாரசீகத்திலும், அதன் பின்னர் காபூலிலும் இருந்த சமயங்களில் தம்முடைய ஓய்வுக் காலத்தைக் கழித்த விதம், தைமூர் சந்ததியார் குடும்பத்தினருக்குக் கலைகளில் இருந்த சுவை யார்வம் இவருக்கும் இருந்தது என்பதையும், பாபரைப் போன்றே இவரும் இயற்கையை வியந்து பாராட்டுபவராக இருந்தார் என் பதையும் நிரூபிக்கின்றது. குரேஸானில் உள்ள எல்லாப் பூந்தோட் டங்களுக்கும் சென்றதோடு, பாரசீக இசை, கவிதையோடும், ஷா தாமஸ்ப்பின் (Shah Tahmasp) ஆதரவின் கீழ் அக் காலத்தில் சிறந்திருந்த பெருங் கலைஞர்களால் நடத்தப் பட்ட கலைக்கூடங் களுடனும் பள்ளிகளுடனும் ஹுமாயூன் தொடர்பு கொண்டிருந்தார். இவ்விதமாகப் புகழ்மிக்க பீஹ்ஜத்தின் மாணவரான மீர் சயத் அலியை யும் (Mir Sayyid Ali) காஜா அப்துஸ் சமதையும் தப்ரிஜில் அவர் சந்திக்கும்படி நேரிட்டது. அவர்கள் இருவருக்கும் வேண்டுகோள் விடுத்து, 1550ஆம் ஆண்டில் காபூலில் தம் அரசவைக்கு வரச் செய் தார். காபூலில் அவரும் அவருடைய சிறு வயது மகன் அக்பரும் அக் கலைஞர்கள் இருவரிடமும் ஓவியப் பாடங் கேட்டுப் 'பொதுவாக அக் கலையைக் கற்றுர்கள். மேலும், மிர் சயத் அலிக்குத் தஸ்தானி அமிர் அம்ஸாவிற்கு (Dastan-i-Amir Hamzah) விளக்கப் படம் தயாரிக்க அவர் அங்கேதான் வேண்டுகோள் விடுத்தார். இப் பெரும் பணி காஜா அப்துல்' சமத் மற்றும் பல கலைஞர்களின் ஒத்துழைப்போடு பல ஆண்டுகள் தொடர்ந்து நடந்தது. உண்மை யாகவே, இந்தியா அல்லது பாரசீகத்திலிருந்து வந்திருக்கக்கூடிய சில துணைக்கலைஞர்களின் உதவியுடன் ஹுமாயூனல் ஆதரிக்கப் பட்டுக் காபூலில் பணிசெய்த இவ்விரண்டு இளமாணுக்கர்கள், அக்ப ரின் காலத்தில் மேம்பாடு அடைய இருக்கின்ற முகலாய ஓவியக் கலை பாணிக்கு உட்கருவாக விளங்கினுர்கள்.[1] அக்பர் ஓவியக் கலைக்கு ஊக்கமும் ஆதரவும் தருவதில், ஹுமாயூன் உயிரோடு இருந்திருந்தால் எதைச் செய்திருப்பாரோ அதையேதான் செயல் முறையில் செய்து காட்டினுர் என்பதில் ஐயமில்லை. ஹுமாயூன் சொன்னதற்கிணங்க அக்பர் கற்ற கலைக்கல்வி, தம் முன்னேரிட மிருந்து பரம்பரையாகப் பெற்ற ஓவியக் கலை ஆர்வத்தை உறுதிப் படுத்தி வளரச் செய்தது என்பது பொருந்தும். இவ்வகையில் ஹுமாயூன் முகலாய ஓவியக் கலை பாணியை முதன்முதல் ஏற் படுத்தியவர் என்று கொள்ளலாம்.

தம் ஆட்சிக் காலத்தின் தொடக்கத்தின் சில ஆண்டுகளில் அக்பருக்குக் கலையை வளர்க்கக் காலம் கிடைக்கவில்லை. அந்தப்புர மகளிர், அரசவையின் உஸ்பெக் பிரபுக்கள் ஆகியவர்களின் பாது

[1] P. Brown, 'Indian Painting under the Mughals', pp. 53, 54.

காப்பிலிருந்து விடுபட்டுத் தம் அதிகாரத்தை நிலைநாட்டும் முயற்சியில் அக்பர் பெரிதும் ஈடுபட்டிருந்தார். இதற்கிடையில் மீர் சையித் அலி 'அமீர் அம்ஸாவிற்கு' (Amir Hamzah) விளக்கப் படங்கள் தயாரிக்கும் பணியைத் தாம் மெக்காவிற்குப் புனிதப் பயணத்திற்காகப் புறப்படும் வரையில் தொடர்ந்து செய்துவந்தார். அதன் பின்னர் அப் பணி ஷிரின் கலம் (Shirin-Kalam) அல்லது 'இனிமையான பேனு' என்று அக் காலத்தில் வழங்கப்பட்டுவந்த காஜா அப்துஸ் சமதிற்கு மாற்றப்பட்டது. அவருடைய அழகிய எழுத்து எழுதும் திறமைக்காக அவர் அவ்வாறு வழங்கப்பட்டார். அமீர் அம்ஸாவின் (Amir Hamzah) விளக்கப் படங்கள், தாப்ரிஜில் (Tabriz) பழக்கத்திலிருந்துவந்த ஓவியக் கலை பாணியை ஒத்திருந்ததால், அக் காலத்திலும் பாரசீகக் கலைபாணியின் தாக்கு விளைவு மேம்பட்டிருந்ததாகத் தெரிகிறது. ஆனால், 1562ஆம் ஆண்டு இந்துப் பாடகர் தான்சென் (Tansen) முகலாய அரசவைக்கு வரும் காட்சி கொண்ட ஓவியம் தீட்டப்பட்டபோது முகலாய இந்துக் கலைபாணிகள் இணையவிருக்கும் பண்பு வெளிப்படத் தொடங்கின.[1] 1569ஆம் ஆண்டு அக்பர், ஃபதேபூர் சிக்ரியைக் கட்டி, ஓவியக் கலைஞர்களின் தலைசிறந்த படைப்புகளைக் கொண்டு அதை அழகுபடுத்தத் தீர்மானித்தபொழுது, அக் கலைபாணி மேலும் ஒரு தெளிவான முன்னேற்றத்தைப் பெற்றது. அப்துஸ் சமதின் தலைமையின் கீழ்ப் பயிற்சிபெற்ற சில பாரசீகக் கலைஞர்கள் ஏற்கெனவே அக்பருடைய அரசவையில் இருந்தனர். அவர்கள் இந்தியக் கலைஞர்களின் படைப்பில் நல்லனவற்றை எடுத்துப் பயன்படுத்தவும் தயாராய் இருந்தனர். அவரை அழகுபடுத்துவதில் பயிற்சிபெற்ற இந்தியக் கலைஞர்கள் பலரும், பேரரசர் விரும்பியவாறு ஓவியங்கள் வரையத் தங்கள் திறமையைப் பயன்படுத்தவும் விருப்பமுடையவர்களாக இருந்தார்கள். இதனுடைய விளைவாக, 1570-1585ஆம் ஆண்டுகளுக்கிடையில் இந்திய-பாரசீக ஓவியங்களின் கூட்டு உழைப்பால் அக்பரின் புதிய தலைநகரத்தின் சுவர்கள் அழகுபடுத்தப்பட்டன. இக் கலைஞர்கள் தங்கள் பணிகளைத் தனித்தனியாகச் சுதந்திரத்துடன் செய்தார்கள் என்றாலும், அவற்றில் அடங்கிய புதிய கருத்துகளை ஏற்றுக்கொண்டார்கள்; இதனால் முறையான இந்தோ-பாரசீகக் கலைபாணி ஏற்படுவதற்கு வசதி ஏற்பட்டது.[2]

அக்பர் காலத்தில் பேரரச ஓவியக் கலைபாணியைச் (imperial school of painting) சேர்ந்த கலைஞர்களில் பெரும்பாலானோர் இந்துக் கலைஞர்களே ஆவர் என்பது சிறப்பான செய்தியாகும். இக் கலைபாணியை அமைத்தவர்கள் பாரசீக அல்லது அயல் நாட்டு

[1] Ibid., pp. 61 ff.

[2] P. Brown, 'Indian Painting under the Mughals', pp. 61 ff.

ஓவியர்கள் என்றாலும், அவர்கள் எண்ணிக்கையில் குறைவானவர்களே. அவர்களில் காஜா அப்துஸ் சமதும் ஒருவர். அவர் 1577ஆம் ஆண்டில் தங்கசாலையின் தலைவராக உயர்த்தப்பட்டார். அதைத் தொடர்ந்து முல்தானில் திவான் அல்லது வருவாய்த்துறை ஆணையாளராக (Revenue Commissioner) ஆனார். கால்முக்கிலிருந்து (Kalmuck) வந்த ஃபரூக் பேக் (Farrukh Beg) மற்றொருவர். அவர் 1585ஆம் ஆண்டில் அரசவையில் சேர்ந்தார். குஸ்ரா குலி (Khushrau Quli), ஜாம்ஷெட் (Jamshed) ஆகியோரோடு காஷ்மீரத்து ஐந்து ஓவியக் கலைஞர்களைக் கொண்ட குழுவினரும் அரசவையில் இருந்தார்கள். அக்பரின் ஆட்சிக் காலத்துத் தலை சிறந்த பதினேழு கலைஞர்களில் பதின்மூன்றுக்குக் குறையாத இந்துக்கள் முகலாயக் கலைபாணியின் சிறப்புக் கூறான உருவப் படக்கலையில் சிறந்து விளங்கினார்கள். அவர்கள் சாதித்த கலையின் உயர்தரத்தை அபுல் ஃபாஸலின் (Abul-Fazl) பின்வரும் சொற்களின்மூலமாக அறியலாம்: 'நாம் கற்பனையும் செய்ய முடியாத அளவுக்கு அவர்களின் படங்கள் உயர்ந்திருக்கின்றன; உண்மையாகவே, இவ்வுலக முழுவதிலும் அவர்களுக்கு இணை யாருமில்லை'. அவர்களில் முக்கியமானவர்கள் பஸவன் (Basawan), லால் (Lal), தஸ்வந்த் (Daswanth) ஆவர். தஸ்வந்த் கஹார் (Kahar) அல்லது பல்லக்குத் தூக்குவோர் சாதியைச் சார்ந்தவர். அவர் தம் புகழின் உச்சநிலைக் காலத்தில் பித்துப் பிடித்துத் தற்கொலை செய்து கொண்டார். பஸவன், பின்னணி ஓவியங்கள், காட்சிகள் வரைதல், வண்ணப் பகிர்வு, உருவப்படக் கலை ஆகியவற்றில் சிறந்து விளங்கினார். 'அய்னி அக்பரி'யில் (Ain-i-Akbari) கூறப்பட்ட மற்ற இந்துக் கலைஞர்களான கேசு (Kesu), முகந்த் (Mukund), ஹரிபன்ஸ் (Haribans)ஆகியோர் பெரும்பாலும் காயஸ்தா (Kayastha), சித்தேரா (Chitera), சிலாவட் (Silavat), கதி (Khati) சாதிகளைச் சேர்ந்தவர்கள். ஓவியம் சிறப்பாக அமையவேண்டும் என்பதற்காக ஒவ்வோர் ஓவியத்தையும் எல்லாரும் சேர்ந்து எழுதும் பழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். தலைசிறந்த கலைஞர் ஓவியத்தின் அமைப்பை முதலில் வரைவார். அதன் பின்னர் ஒவ்வோர் ஓவியக் கலைஞரும் தாம் நிபுணராயிருக்கும் துறைப்பகுதியைத் தீட்டுவார். இம்முறை 'ராசம்நாமா'விற்கு (Razmnama) விளக்கப் படம் வரையும் போது கையாளப்பட்டது. இப் பணி தஸ்வந்த், பஸவன், லால் ஆகியவர்களிடம் முக்கியமாக ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவர்கள் ஒவ்வொருவரும் ஓவியத்தின் தனித்தனிப் பகுதியைத் தங்களிடம் பணியாற்றும் துணைக் கலைஞர்களிடம் கொடுத்தார்கள்.[1]

[1] L. Binyon, 'Court Painters of the Grand Mughals, pp. 45, 46; P. Brown, ibid., pp. 120-3; Smith, 'Akbar', pp. 429, 430.

பாபர் முதலான தம் இனத்து மற்ற அரசர்களைப் போன்றே அக்பரும் இயற்கையழகு உணர்வையும் 'உலகத்தின் மேன்மை, அதிசயம் ஆகியவற்றை வியந்து பாராட்டும் இயல்பையும் கொண்டிருந்தார்'. இந்த நோக்கமே—சொந்தப் பகட்டோ, தன் புகழ் ஆசையோ அல்ல—அக்பரைக் கடுமையான முகமதிய வைதீகத்திற்கு எதிராக ஓவியக் கலைக்கு ஊக்கமளிக்கவைத்தது.[1] இருப்பினும், தம்மை அடுத்துள்ள அதிக வைதீக நம்பிக்கையுடையவர்கள் தாம் இவ்வாறு உயிர்வாழும் பொருள்களை எழுதிக்காட்டுவது சம்பந்தமாகக் குரானின் கட்டளைகளை புறக்கணிப்பதற்குத் தமக்குண்டான காரணங்கள்பற்றிய ஏதேனும் செயல்முறை விளக்கத்தை எதிர்பார்ப்பார்கள் என்று அக்பர் உணர்ந்தார். ஆகவே, அவர்களில் பெரும்பாலானோர் தனிப்பட்ட முறையில் கூடியிருக்கின்றபொழுது அதை வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு, ஓவியக் கலையைப் பற்றி அடிக்கடி மேற்கோள் காட்டப்படும் கருத்தை அக்பர் வெளியிட்டார். இதை அபுல்ஃபாஸல் எழுதிவைத்திருக்கிறார். 'ஓவியக் கலையை வெறுப்பவர்கள் பலர் இருக்கிறார்கள்; அப்படிப்பட்டவர்களை நான் வெறுக்கிறேன். ஓவியக் கலைஞர் கடவுளை உணரத் தனிப்பட்ட வழியைப் பெற்றிருக்கிறார்போல் எனக்குத் தோன்றுகிறது. ஏனெனில், உயிருள்ள எதையாவது கலைஞர் வரையும்பொழுது, அதனுடைய உறுப்புகளை ஒன்றுக்குப்பின் மற்றொன்றை உருவாக்கும் பொழுது, தன் பணியில் தனித்தன்மையைக் காட்டமுடியாது என்பதை உணர வேண்டியவராக இருக்கிறார்; எனவே, உயிர் கொடுக்கிற கடவுளைப்பற்றி நினைக்க உந்தப்படுகிறார். இவ்வாறாக, அவருடைய அறிவு வளர்கிறது.' பேரரசர் ஓவியக் கலையைப் புகுத்தியபொழுது அவரைச் சூழ்ந்திருந்த முகமதியர்களின் அச்சத்தையும் தடையையும் போக்க இந்தக் கருத்து எழுதப்பட்ட அக்பர் இவ் வாசகங்களைக் கூறினார். இது அரசவையிலிருந்த வாழ்க்கைக் குறிப்பு எழுதுபவரின் சொற்களில் உறுதிப்படுத்தப்படுகிறது. உருவப்படம் எழுதும் கலைக்குப் பேரரசர் அளித்த ஆதரவைப்பற்றி எழுதும்போது அவர் பின்வருமாறு கூறுகிறார்: சட்டத்தின் எழுத்தில் வெறிகொண்டவர்கள் ஓவியக் கலையை வெறுக்கிறார்கள். ஆனால், இப்பொழுது அவர்களுடைய கண்கள் உண்மையைப் பார்க்கின்றன'.

ஓவியக் கலைக்குத் தாம் ஆதரவு அளிப்பதன் காரணத்தை இவ்வாறு வெளிப்படையாக அறிவித்த பின்னர், பேரரசப் பள்ளியைத் தொடங்கி, தம்முடைய வழக்கமான ஆர்வத்துடனும் விவரங்

[1] L. Binyon, 'Court Painters of the Grand Mughals,' pp. 40, 41.

களைக் கிரகிக்கும் திறமையோடும் ஓவியங்களை எழுதுவிக்க ஊக்கமளித்து அக்பர் தம்முடைய பணியைத் தொடங்கினார். கலையறிவு, கேளிக்கை ஆகியவற்றின் சாதனமாகக் கருதிய அக்பர் கலைக்காக முழு ஊக்கத்தையும் அளித்தார் என்று 'அய்னி அக்பரி'யிலிருந்து அறிகிறோம்.[1] 'ஓவியக் கலைஞர்களின் ஓவியங்கள் பெருமை தங்கிய பேரரசர் முன்னால் ஒவ்வொரு வாரமும் தரோக்களாலும் (daroghas) எழுத்தாளர்களாலும் வைக்கப்படும். அதன் பின்னர் அரசர் ஓவியத்தின் வேலைப்பாட்டின் சிறப்புக்குத் தக்கவாறு பரிசளிக்கிறார்; அல்லது அவர்களுடைய மாதாந்தர ஊதியத்தை அதிகப்படுத்துகிறார்'. வேறுவிதமாகக் கூறவேண்டுமானால், அப் பள்ளி பேரரசரின் நேரடி ஆதிக்கத்திற்கும் மேற்பார்வைக்கும் உட்பட்டிருந்தது. அப் பள்ளியிலுள்ள நூற்றுக்கு மேற்பட்ட ஓவியக் கலைஞர்கள் ஃபதேபூர் சிக்ரியில் ஒரு பெரிய அறையில் ஓவியப் பணி புரிந்தார்கள். அவர்கள் எல்லோருக்கும் மான்சப்தார்கள் (mansabdars) அல்லது அஹாடிகள் (ahadis) என்ற இராணுவத் தகுதி அளிக்கப்பட்டது. அவர்களின் தகுதிக்குத் தக்கவாறு ஊதியம் கொடுக்கப்பட்டது. சான்றாக, அப்துல் சமதுக்குப் பேரரசு வட்டாரத்தில் தம் இராணுவத் தகுதிக்கும், அதிகமான செல்வாக்கு இருந்தாலும் அவர் '400 மான்சப்தார்' தரத்தையே பெற்றிருந்தார். ஓவியர்களின் பிரிவோடு ஒப்பனைக்காரர்களின் பிரிவையும் அப் பள்ளி பெற்றிருந்தது. ஒப்பனைப் பிரிவில், அணிகலக் கலைஞர்கள், முலாம் பூசுபவர்கள், கோடு வரைபவர்கள், நூல்களின் பக்கங்களை அலங்கரிப்பவர்கள் ஆகிய பணியாளர்கள் இருந்தனர். பேரரசு ஆட்சிமுறையின் பொது இராணுவத் திட்டத்தின்படி இவர்கள் காலாட்படைப் பிரிவினைச் சேர்ந்தவர்களாக வகைப்படுத்தப்பட்டனர். இவர்களுடைய பணிகள் முக்கியமாக முகலாய ஓவியத்திற்குத் தயார் செய்வது அல்லது கையெழுத்துப் பிரதிகளுக்கு ஒளியூட்டுவது ஆகும். அன்றியும், ஓவியக் கலைக்குப் பயன்படுத்தப்படுகிற பொருள்களை மேலும் செம்மையுள்ளதாக ஆக்குவதிலும், அப் பொருள்களின் விலைகளைக் கண்டறிந்து நிச்சயிப்பதிலும், வண்ணங்களின் கலப்பில் முன்னேற்றங்கள் செய்வதிலும் பேரரசர் தம் கவனத்தைச் செலுத்தினார். 'இதுவரைக்கும் காணப்படாத செயல் தீர்வை (finish) ஓவியங்கள் பெற்றன' என்று அபுல் ஃபாஸல் கூறுகிறார். இந்தியாவில் இதுவரை நிலவிவந்த கலைப்படிவத்துக்கு முற்றும் மாறுபட்ட புதிய கலையமைப்புப் படைப்பை அக்பர் புகுத்தியதால், இப் பள்ளியின் பணிகளுக்குத் தொழில்துறைப் பிரிவு (technical branch) இன்றியமையாததாயிற்று. 'தட்பவெப்ப நிலையினாலும் காலப்போக்கினாலும் சிதைந்தபொழுது உடனடியாக

[1] 'Ain-i-Akbari', trans, Blochmann, vol. i, p. 108.

மீண்டும் வண்ணம் தீட்டிக்கொள்ள உதவுகின்ற, கரடுமுரடான கெட்டிச் சாயத்தினால் சுவர்களின் மேற்பரப்பில் பெரிய காட்சிகளை இனியும் ஓவியர்கள் வரையவேண்டியதில்லை. இதற்குப் பதிலாகத் தாள்களின்மேல் சிறு படங்களை வரையும் முறையைப் பின்பற்ற வேண்டியிருந்தது. தாள்களின்மேல் கவனமாகவும் நுட்பமாகவும் வரைந்து வண்ணம் தீட்டப்படும். இது ஓவியக் கலைஞர்களின் தனித் திறமைக்கு நிலையான பதிவாகவும் அமைந்திருந்தது. எனவே, சிறப்பான வகைத் தாள்களும் வண்ணப் பொருள்களும் தேவைப்பட்டன. தகுதியும் நேர்த்தியும் வாய்ந்த தூரிகைகள் தயாரிக்கப்பட வேண்டியிருந்தன. மென்மையான இடையீட்டுப் பொருள்களையும் (delicate mediums) பசைகளையும் பெறவேண்டியிருந்தது. இப் பொருள்கள் இந்த உத்தி மாற்றத்துக்கு அவசியமாய் இருந்தன. இப் பொருள்களில் பல இந்தியாவில் பலருக்குத் தெரியாது. அப்போதுதான் பயன்படுத்தப்படத் தொடங்கியிருந்த காகிதத்தை இதற்கு உதாரணமாகக் கூறலாம். ஆகையால், ஓவியக் கலைக்கு அவசியமான காகிதம் பெறவேண்டியிருந்தது. தொடக்கத்தில் பாரசீகத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. ஆனால், பின்னர் தாள்கள் தயாரிக்கும் ஆலைகள் முகலாயர்களால் இந்தியாவிலேயே ஏற்படுத்தப்பட்டன. பாரசீகக் கலைஞர்களால் சிறிய ஓவியப் படக் கலைக்கு வேண்டிய வண்ணப் பொருள்களின் தயாரிப்பு முக்கியத்துவம் அடைந்தது. இவ் வண்ணங்கள் அல்லது அவைகளுக்கான வாய்பாடுகள் இந்தியக் கலைஞர்கள் பயன்படுத்துவதற்குக் கொடுக்கப்பட்டன. இந்தியக் கலைஞர்கள் ஓவியம் எழுதும்பொழுது வண்ணம் கலக்கப் பயன்படுத்தத் தங்களுக்கெனத் தட்டுகளைக் கொண்டிருந்தாலும், இப் புதிய உருவப்படக் கலையின் நல்விளைவுகளைப் பெறுவதில், தங்களுக்கு உதவக்கூடிய எவ் வண்ணங்களையோ இடையீட்டுப் பொருள்களையோ சேர்த்துக் கொள்ளத் தயாராயிருந்தனர்.[1]

அக்பரின் அவைக்களத்திலிருந்த கலைஞர்கள் உருவப் படக் கலையிலும், நூல்களில் விளக்கப் படங்கள் வரைவதிலும் தனித்திறமை பெற்றிருந்தார்கள். அவர்களில் சிலர் விலங்குகள், பறவைகள் ஆகியவைகளின் ஓவியங்கள் வரையும் கலையிலும் சிறப்பான மேன்மை பெற்றிருந்தார்கள். 'தம் உருவப்படம் வரையப்படுவதற்காக அக்பரும் கலைஞர்கள்முன் உட்கார்ந்திருக்கிறார். நாட்டிலுள்ள பெருமக்களின் உருவப்படங்களும் வரையப்பட வேண்டுமென்று கட்டளையும் இட்டிருந்தார். இவ்வாறு எழுதப் பட்ட படங்களைக்கொண்டு ஒரு பெரும் இணைப்பேடு (album)

[1] P. Brown, 'Indian Painting under the Mughals', p. 64.

தயாரிக்கப்பட்டது. இதனால், இறந்தவர்கள் புது வாழ்வு பெற்றார்கள்; இன்னும் உயிரோடு இருக்கின்றவர்களுக்கு அமரத்துவம் உறுதியாக்கப்பட்டது'.[1] துரதிருஷ்டவசமாகப் பேரரசரின் இணைப் பேட்டில் சேர்க்கப்பட்ட மூலமுதல் உருவங்கள் இப்பொழுது ஒன்று கூட அவ்வாறு ஏதாவது இருந்திருந்தால், இல்லை. ஆனால், இப்பொழுது பிரிட்டிஷ் காட்சி சாலையில் (British Museum) பாதுகாக்கப்பட்டிருக்கிற பாபருடைய தந்தை உமார் ஷேக்கின் வேட்டையாடும் காட்சியைச் சித்திரிக்கும் அழகான ஓவியம் அக்பருடைய ஆட்சிக் காலத்தைச் சேர்ந்ததேயாகும் அப்படியானால், இந்தப் பேரரசர்த் தொகுப்பில் உள்ள உருவப்படங்களின் சிறப்பியல்பான நுண்சுவையைப்பற்றியும், பாரசீக-இந்தியக் கலைகளின் பொருத்தமான இணைப்பைப்பற்றியும், நாம் ஓரளவு அறிய முடிகிறது. இதற்கு மாறாக, அக்பரின் கலைமுறையின் புத்தக விளக்கப்படங்களின் அநேக சான்றுகள் கையெழுத்துப் பிரதியில் இப்பொழுதும் இங்கிலாந்தில் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் மிகப் பிரசித்தி வாய்ந்தது 40,000 பவுண்டு விலைமதிப்புள்ளதென்று சொல்லப்படும் 'இராஜம் நாமா' (Razm-nama) ஜெய்ப்பூரிலும், 'பாபர் நாமா' (Babar-nama) பிரிட்டிஷ் பொருட்காட்சிசாலையிலும், 'அக்பர் நாமா' (Akbar-nama) விக்டோரியா, ஆல்பர்ட் பொருட்காட்சிசாலையிலும் இருக்கின்றன. இந்தியக் கலை பாணியைவிட, பாரசீகக் கலை பாணியை இயல்பாகவே மிகுதியாகப் பெற்றிருக்கின்ற விளக்கப் படங்களைக்கொண்ட 'பாபர் நாமா'வில் விலங்குகள், பறவைகள், மரங்கள் முதலியவைகளின் ஓவியங்கள் பல இருக்கின்றன. இவைகளில் சில ஓவியங்கள் மான்சூரினால் (Mansur) வரையப்பட்டவையாகும். மான்சூர் அக்பரிடம் பணிசெய்யத் தொடங்கி, அக்பருக்குப்பின் வந்தவருடைய ஆட்சிக் காலத்தில் புகழ் அடைந்தார். இப் புத்தகத்திலுள்ள சிறிய, ஆனால், அழகிய மயில்களின் படத்தை இந்துக் கலைஞர் ஜகநாத் என்பவர் வரைந்தார். அவர் அபுல் ஃபாஸலினால் குறிக்கப்பட்ட திறமை வாய்ந்த கலைஞர்களுள் ஒருவர். அக்பருடைய கலைமுறையில் ஈடுபட்டிருந்தவர்களைப்பற்றிச் சிறிது பகுத்து ஆராய்ந்தால், பேரரசர் தம்முடைய அரசவைக்குப் பல நாடுகளிலிருந்து ஓவியக் கலைஞர்களை வரவழைத்தார் என்பது தெரியவரும். நெடுந்தொலைவிலிருந்த குஜராத், பஞ்சாப் மாவட்டங்களைச் சேர்ந்த இந்திய நாட்டுக் கலைஞர்களும், காஷ்மீரம், பாரசீகம், துருக்கிஸ்தான் ஆகிய வெளிநாட்டுக் கலைஞர்களும் அக்பருடைய அரசவையில் இருந்திருக்கின்றனர். "பல வேறுபட்ட இனங்கள், கொள்கைகள் கொண்ட இந்தக் கலைச் சமூகம் அக்பரால் ஒன்று

[1] Ain-i-Akbari, vol. i, pp. 108-9.

சேர்க்கப்பட்டு ஒரே பள்ளியாக வளர்ந்து சிறப்புப் பெற்றது. இக் கலைச் சமூகம் சிறப்புப் பெற்றதற்குக் காரணம் இது ஒரே நோக்கத்தால் உந்தப்பட்டிருந்ததே. அந்த ஒரே நோக்க மாவது, இந்தக் கலைமுறை தோன்றுவதற்குக் காரணமாக இருந்த மாபெரும் அறிஞரை மகிழ்விக்கின்ற சிறப்பு வாய்ந்த ஓவியங்களைத் தீட்டுவதேயாகும்'.[1]

ஆயினும், அக்பருடைய இறப்புக்குப் பின்னர் இக் கலை ஜஹாங்கீரின் முழு ஆதரவைப் பெறுதிருந்தால், இது தொடர்ந்து வளர்ந்து சிறப்படைந்திருக்குமா என்பது ஐயத்திற்குரியது. கலை இக் காலத்தில் தன் வளர்ச்சிக்கு அரசரின் தனிப்பட்ட ஆர்வத்தை நம்பியிருந்தது. அக்பரால் தொடங்கப்பட்ட இவ் அமைப்பை ஆர்வ ஓடன் பாதுகாத்த அழியாப் பெருமை ஜஹாங்கீரைச் சாரும். அரசவையின் ஊக்கம் இவ்வாறு தொடர்ந்து கிடைத்ததால், ஓவியக் கலைஞர்கள் தாங்கள் வரைந்த ஓவியங்களின் தரத்தில் தொடர்ந்த முன்னேற்றத்தை ஏற்படுத்தினர். முகலாய வமிசத்தோடு தொடர்பு கொண்ட உருவப்படக் கலையின் சிறப்பு பாணியாக இதை முழுமையடையச் செய்தார்கள் இக் கலைஞர்கள். தற்காலத் திறனாய்வாளர் ஒருவரால் 'பல காலங்கள் கடந்து தொடர்ந்து நிலைத்திருக்கும் சிறந்த தொகுப்பாளரின் வகையைச் சேர்ந்தவர்' என்று ஜஹாங்கீர் வருணிக்கப்படுகிறார். சிறப்பான வேலைப்பாட்டைச் சுவைத்திறத்துடன் பாராட்டுபவராகவும், சிறந்த கலைப்பண்பு அறிஞராகவும், தம்முடைய ஓவியக் கலைஞர்களின் திறமையில் பெருமை கொண்டவராகவும், தம்முடைய கருத்தைக் கவர்ந்து கலை உணர்வுத் தரத்தை திருப்தி செய்யும் எந்தப் படத்துக்கும் மிகுதியான விலை கொடுப்பவராகவும்கூட ஜஹாங்கீர் வருணிக்கப்படுகிறார்.[2] இவர் ஓவியக் கலையில் முழுமை பெற்ற ஓர் திறனாய்வாளர் என்பது உறுதி. எப்படியெனில், தம்முடைய வெளிப்படையான வரலாற்றுக் குறிப்பில் கூறுவதுபோல், இவர் உருவப்படங்களில் மிகுந்த பற்றுக் கொண்டவராகவும், அவைகளைச் சீர்தூக்கி நோக்கும் திறமை பெற்றவராகவும் இருந்தார். ஓவியத்தை வரைந்தவர் உயிரோடு இருந்தாலோ, இறந்துபோய்விட்டாலோ, அதை வரைந்தவருடைய பெயரை அவரால் கூறமுடியும். அவ்வளவுக்கு அவர் திறனாய்வுக் கலையில் முழுமை பெற்றிருந்தார். 'ஒரே மாதிரியான ஓவியம் பல கலைஞர்களால் தீட்டப்பட்டிருந்தால், எந்தெந்த ஓவியத்தை யார்யார் வரைந்தார்கள் என்பதை என்னால் கூற முடியும். ஒரே ஓவியத்தைப் பல கலைஞர்கள் செயல்தீர்வு செய்திருந்தாலும், அந்த ஒரு படத்தின் ஒவ்வொரு பகுதியையும் வரைந்த

[1] P. Brown, ibid., pp. 123, 124.

[2] L. Binyon, 'Court Painters of the Grand Mughals,' pp. 50 ff.

கலைஞர்களின் பெயர்களை என்னால் சொல்ல முடியும். உண்மையில் யார் கண் புருவத்தை எழுதினர் என்றும், கண் இமையை இன்னர் வரைந்தார் என்றும் தவறு இல்லாமல் என்னால் சொல்ல முடியும்; அல்லது முதல் ஓவியனால் வரையப்பட்ட ஓவியத்தில் வேறோர் ஓவியன் தன் கைவண்ணம் காட்டியிருந்தால், அதையும் என்னால் சொல்ல முடியும்'[1] என்று அவர் தொடர்ந்து கூறுகிறார்.

கலைத்திறனாய்வாளர் என்ற முறையில் ஜஹாங்கீரின் கருத்து ஒருபுறமிருக்க. மேலே சொல்லப்பட்ட ஜஹாங்கீரின் மதிப்பீடு அவர் இயற்கையின்பால் கொண்டிருந்த உள்ளார்ந்த பற்றைக் குறித்துப் போதுமான அளவு கூறவில்லை. பயணம் செய்வதிலும், விளையாடுவதிலும் தம் தோழர் குழாமில் இன்பம் துய்க்குமுகத்தான் மது அருந்தும் விருப்பத்திலும், இலக்கிய நாட்டங்களிலும் ஜஹாங்கீர் தம் கொள்ளுப் பாட்டனாரான பாபரைப் பெரிதும் ஒத்திருந்தார். இருப்பினும், பாபர் ஜஹாங்கீரைவிட இயற்கையிலேயே மிகுந்த வலிமையுடையவராகவும், மிகக் கடுமையான வாழ்க்கை வாழ்ந்தவராகவும் இருந்தார். தோட்டங்கள், மலர்கள், இயற்கைக் காட்சிகள் ஆகியவற்றில் பற்றுக் கொண்டதிலும், உலகத்தின் எழிலில் ஆழ்ந்த மகிழ்ச்சி பெற்றதிலும் இவர் பாபருடன் மேலும் ஒத்திருந்தார். தம்முடைய வாழ்க்கைக் குறிப்பில், காதல், மதுவின் இரவுக் கதைக்கும் மண்டை ஓடுகளாலான தூபிகள்பற்றிய நிகழ்ச்சிகளுக்குமிடையில் பாபர் கூறுவதாவது: 'முலாம்பழத்தின் காட்சியைக் கண்டு தம் நாட்டின் நினைவைப் பெற்று அழுதாராம். இதே போன்று ஜஹாங்கீரும் காஷ்மீரத்து மலர்களையும் புல்தரைகளையும் கண்டு பரவசத்தால் உந்தப்பட்டுப் பாட ஆரம்பித்தார். உண்மையிலேயே காஷ்மீரத்தின்மேல் அவருக்கு இருந்த பற்று மிகவும் ஆழமானது. ஆகவே, தம் ஆட்சிக் காலத்தில் பதின்மூன்று முறை காஷ்மீரத்துக்குப் பயணம் செய்திருக்கிறார். தம் கலையுணர்வைத் தொட்ட பூவையோ, மரத்தையோ, இயற்கைக் காட்சியையோ கண்டால், அவற்றை அப்படியே வரையுமாறு தம் ஓவியர்களைப் பணிப்பார். ஜஹாங்கீரிடத்துப் பல குறைகள் இருந்தன. ஆனால், கலைஞரின் கற்பனைக் கண் அவரிடம் இருந்தது. அவர் தாம் வாழ்ந்த காலம் வரைக்கும் முகலாயக் கலையின் உயிராகவும் உணர்வாகவும் திகழ்ந்தார்.[2] இறக்கும் தறுவாயிலும் இயற்கையோடு இயைந்திருக்கும் உணர்வே அவரிடமிருந்தது. தம்முடைய கல்லறை காற்றில் படிந்தும், மழையிலும் பனியிலும் நனைந்தும் திறந்த நிலையிலே இருக்கவேண்டுமென்று இறக்கும் தறுவாயில் கேட்டுக்கொண்டார். லாகூரில் அழகு வாய்ந்த பூந்தோட்டத்தில் வெள்ளைச் சலவைக்-

[1] 'Memoirs of Jahangir,' Rogers and Beveridge, 1909, vol. i, p. 20.
[2] P. Brown, 'Indian Painting under the Mughals,' p. 71 ff.

கல்லாலான பிணப்பெட்டியில் தூங்குவதைக் காட்டிலும் சிறப்பான வேறு இயற்கைக் கோவில் இருக்க முடியாது.

ஜஹாங்கீர் அரியணை ஏறுவதற்கு முன்னர் ஹெராட்டின் (Herat) புகழ்மிக்க ஓவியரான ஆகா ரிஸாவைத் (Aga Riza) தம்மிடம் வேலையில் அமர்த்தியிருந்தார்; இவரைப்பற்றித் தம்முடைய வரலாற்றிலும் ஜஹாங்கீர் எழுதுகிறார். கால்முக்கின் (Kalmuck) கலைஞரான ஃபரூக் பெக் (Farrukh Beg) என்பவரோடு ஆகா ரிஸாவின் மகன் அபுல் ஹாசனும் (Abul Hasan) பேரரசரின் ஆதரவைப் பெற்று அரசவையின் தலைமை ஓவியரில் ஒருவரானார். ஃபரூக் பெக் அப்துஸ் சமதின் இறப்புக்குப் பின்னர் கலைமுறையின் தலைவரானார். அம்முறையில் சமர்க்கண்டைச் சேர்ந்த முகமது நாதிரும் (Muhammad Nadir) முகமது முராத்தும் (Mohammad Murad) இருந்தார்கள். இவர்கள் முகலாய அரசவையில் இறுதி அன்னிய நாட்டுக் கலைஞர்களாயிருந்தார்களென்று தெரிகிறது. விலங்குகளின் ஓவியங்களைச் சிறப்பாக வரையும் உஸ்தாத் மான்சூரும் (Ustad Monsur), உருவ ஓவியக் கலையில் நிபுணரான பிஷன்தாசும் (Bishandas), மனோகரும், கோவர்த்தனரும் இருந்தனர். இவர்களும், இவர்களினும் புகழ் குறைந்தவர்களும் ஜஹாங்கீரின் கலைக்குழுவில் எப்பொழுதுமே இருந்தார்கள். பேரரசரின் எண்ணத்திற்குப்பட்ட எந்த நிகழ்ச்சியையும் காட்சியையும் வரைய இவர்கள் பணிக்கப்பட்டார்கள். உருவங்களை எழுதும் பணியில் ஈடுபட்டிருந்தாலும், நூல்களுக்கு விளக்கப் படங்களை எழுதும் பணியில் ஈடுபட்டிருந்தாலும், பேரரசரின் மதிப்பீட்டுக்கும் சுவைத்திறத்துக்கும் தக்கவாறே எழுதினர். பேரரசர் சிற்றோவியப் படக்கலையின் (miniature painting) முதல் தரமான இலக்கிய நயம் வாய்ந்த கூறுகளை நேரடியாகத் தெரிந்துகொண்டிருந்தார். சிறந்த கலைபாணிகளின் மாதிரிகளைத் தொடர்ந்து வாங்கிக் கலைஞர்களின் சுவைத்திறத்தை அதிகப்படுத்தவும் அவர் முயன்றிருக்கிறார். பேரரசரின் குறிக்கோள்கள் கலைஞர்களின் திறமையோடு இணைந்ததால், முகலாயக் கலைபாணி மிகச் சிறப்பான முறையில் உயர்ந்தது. இறுதியில் அது பாரசீக ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றது. அக்பருடைய ஆட்சிக் காலத்தில் அதிகமாக இருந்த பாரசீகக் கலைச் செல்வாக்கு அவருடைய மகனின் ஆட்சிக் காலத்தில் நிதானமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. பாரசீகக் கலைஞர்கள் இன்றுங்கூட ஜஹாங்கீரின் அரசவையில் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் ஷாஜஹானின் அவையிலும் பணியில் அமர்த்தப்பட்டிருந்தார். அவைக்களக் கலைஞர்களால் பாரசீக ஓவியங்களிலிருந்து பிரதிகள் இப்பொழுதும் எடுக்கப்பட்டன. ஆனால், உண்மையான பாரசீகபாணி சிறிது சிறிதாக மறைந்து ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்தில்

முக்கியாம்சத்தில் இந்திய கலைபாணி ஒன்றுக்கு இடங்கொடுத்தது. இவ்வாறாக அயல்நாட்டு அரசவையின் கலையாக ஆரம்பித்து, ஆதரவை நம்பி அதனால் நெறிப்படுத்தப்பட்ட ஒரு கலை, அதன் வெளிநாட்டு அல்லது பாரசீகக் கூறுகள் முழுவதும் இணைத்துக் கொள்ளபடுகிறவரையில் சிறிது சிறிதாக இந்து மரபிற்கு மாறியது.[1] முகலாய சிற்றோவியப் படக்கலைக்கு (Miniature Painting) அடித்தளம் அமைத்தவர் அக்பர் ஆவார். ஆனால், இராஜபுத்திர இளவரசிக்குப் பிறந்த அவருடைய மகன் ஜஹாங்கீர்தான் தம்முடைய அறிவாலும் கலையுணர்வாலும் புதிய இந்தியக் கலைபாணி முழுமையடைவதற்கு வழிகாட்டினார். மேலும் அதனுடைய வெற்றிக்கும் தம்முடைய வியக்கத்தக்க மதிப்பீட்டுப் பண்பின் செல்வாக்கினால் வழிகோலினார்.

பெர்சி பிரவுனின் (Percy Brown) கருத்துப்படி, முகலாயக் கலையின் உண்மையான உயிர்ப்பண்பு ஜஹாங்கீரோடு மறைந்தது. ஷாஜஹான் தம் முன்னோர்களைப் போன்று ஓவியங்களைப் பாராட்டும் கூருணர்வு பெற்றிருக்கவில்லை. அவருடைய பற்றெல்லாம் கட்டடக் கலை, நகைத்தொழிற் கலை ஆகியவற்றில் இருந்தது. இதன் விளைவாக, முகலாய ஓவியக்கலை இவருடைய ஆட்சிக் காலத்தில் முதன்முதலாக வீழ்ச்சியுறும் அறிகுறிகளைப் பெற்றது. இக் காலத்தில் எழுதப்பட்ட படங்கள், தங்கள் கவர்ச்சிக்கு ஜஹாங்கீரின் கலைபாணியில் திகழ்ந்த வண்ணங்களின் இயற்கையான இணைப்புக்குப் பதிலாகச் செறிவான சாயப் பொருளையும், தாராளமாகத் தங்கம் உபயோகப்படுத்துவதையுமே நம்பியிருந்தன. கலைஞர்களின் நிலையில்கூட ஒரு மாற்றம் ஏற்பட்டது. அரசவைக் கலைஞர்களின் எண்ணிக்கையை ஷாஜஹான் குறைத்துவிட்டார். சிறந்த ஓவியக் கலை நிபுணர்கள் சிலரை மட்டுமே தம்முடைய ஆதரவின் கீழ் வைத்துக்கொண்டார். இவ்வாறாகத் தங்களுடைய வாழ்க்கைக்கு அரசரையே முழுவதும் நம்பிருந்த பெரு பாலான கலைஞர்கள் அரசவையின் பெருமக்கள், பிரபுக்கள் ஆகியவர்களின் ஆதரவை நாடிச் செல்லவேண்டியிருந்தது. உண்மையிலேயே தாரா ஷுக்கோவைப் (Dara Shukoh) போன்று ஒருசில அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களால் ஊக்கம் கொடுக்கப்பட்டது என்றாலும், கலை பேரரசியலாரின் தனியுரிமை என்ற நிலை போய்விட்டது. இப்பொழுதும் இந்திய அலுவலகத்தில் உள்ள (India office) தாரா

[1] P. Binyon, 'Court Painters, &c., passim:' P. Brown, 'Indian Painting &c., passim.' இக் காலத்தைச் சேர்ந்த மூன்று அழகிய ஓவியங்கள் சமீப காலத்தில் ஜெய்ப்பூரில் கண்டுபிடிக்கப்பட்டன. மிக்க வயதடைந்த ஒரு முதியவரின் படம் சலீம் சிஸ்தியின் படமோ என்று நினைக்கத் தோன்றுகிறது: பஞ்சாப் வரலாற்றுக் கழகப் பத்திரிகையின் ix ஆம் தொகுதியில் இவைகள் விளக்கப்படுகின்றன.

ஷுக்கோவின் ஓவிய இணைப்புப் படங்கள் அவர் கலையை ஆதரித் தார் என்பதை நிருபிக்கிறது. ஆனால், ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்தின் இறுதியில் அரசவையில் திரண்டிருந்த ஓவியக் கலை ஞர்கள் எல்லோரும் முதன்மையான பிரபுக்களிடத்தில் பணிபெற முடியவில்லை. பிரபுக்களின் ஆதரவை அடைய முடியாத கலைஞர் கள் வட இந்தியாவில் கடைவீதிகளில் கலைக்கூடங்களை அமைத்துக் கொண்டு, பொதுமக்களுக்குத் தங்களுடைய ஓவியங்களை விற்று தங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய வருவாயைச் சம்பாதிக்க வேண்டி யிருந்தது. ஆயினும், கலைஞர்களின் ஓவியங்களை மதித்து அவை களை விலைக்கு வாங்குகின்ற மக்கள் மிகமிகக் குறைந்த அளவின ராகவே இருந்தனர். இதனால் அவையினாலோ, பிரபுக்களாலோ ஆதரிக்கப்படாத ஓவியக் கலைஞர்களின் தகுதியும் புகழும் சிறிது சிறிதாகக் குலைந்து, சாதாரணச் சிறு தொழில் செய்பவர்களாக அவர்கள் மாறினர். பதினேழாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் இருந்த வாணிகக் கலையின் இந்தக் கூறுபற்றிச் சொல்லுகின்ற பெர்னி யர் (Bernier) என்ற பயணக்காரர், ஓவியக் கலைஞர்கள் நகரங்களில் மேலாளர் (master) ஒருவரின் மேற்பார்வையின் கீழ், அறைகளில் பணியாற்றினார்கள் என்றும், அவர்கள் புகழ் அடைய வாய்ப்பு இல்லை என்றும், தங்கள் பணிக்கு மிகக் குறைவான ஊதியமே பெற் றனர் என்றும் கூறுகிறார். இம் முறை ஷாஜஹானின் ஆட்சிக்காலத் தில் ஓரளவு தொடங்கிவிட்டது என்றே சொல்ல வேண்டும். ஆனால், சில கலைஞர்களைக்கொண்ட குழுவையே ஆதரிக்கும் ஷாஜஹா னின் முறையினாலும், அக்பர், ஜஹாங்கீர் ஆகியவர்களுடைய பொற்காலத்தில் தாங்கள் செய்து வந்ததுபோல் பயிற்சி பெற்ற கலை ஞர்கள் பலரைப் பிரபுக்கள் ஆதரிக்க இயலாமையாலும் கலை வாணிகமுறை தோன்றிற்று. பேரரச தர்பார்களின் உருவ ஓவியங்களையும் மாதிரி ஓவியங்களையும் படைப்பது ஷாஜஹானின் கீழிருந்த ஓவியக் கலைஞர்களுக்கு விருப்பமான கலையாகவே தொடர்ந்து இருந்துவந்தது. ஆக்ஸ்ஃபோர்டில் (Oxford) பாட்லியன் நூலகத்தில் (Bodleian Library) பாதுகாக்கப்பட்டுவருகிற பேரர சரின் தர்பாரில் பகட்டான வண்ணங்களையும் மிகுதியான தங்கத் தையும் பார்க்க முடியும். ஆனால், பெர்சி பிரவுனின் கூற்றுப்படி 'ஷாஜஹானின் காலத்தின் ஓவியக் கலையின் முக்கியப் பண்பான ஆடம்பரம், வெளிப்பகட்டு எல்லாவற்றின் அடித்தளத்தில் நிச்சய மான வீழ்ச்சிக்கு அறிகுறியான அளவுக்கு மீறிய முதிர்ச்சி உணர்வைக் காணலாம்.'[1]

அவுரங்கசீபின் சமயவெறியும் சமயப் பொறையின்மையும் தவறான வழியில் செல்லும் ஆட்சிமுறைத் தன்மைகளும் முகலாயப்

[1] P. Brown, 'Indian Painting, & c.,' p. 98.

பேரரசுக்குச் சாவு மணியடித்தன. பேரரசு சிதறுண்டபொழுது அதனுடன் முகலாயக் கலைகளும் வீழ்ச்சியுற்றன. ஆனால், இஸ்லாம் சமயச் சட்டங்களுக்கு மாறுபட்டவை என்ற நிலையில் ஓவியக் கலையை அவுரங்கசீப் தன் வரையில் வெறுத்தாலும், உண்மையில் அவர் அதைத் தடை செய்யவுமில்லை, அதைப்போன்ற கலையான இசைக் கலையைக் கண்டித்ததுபோல் கண்டிக்கவுமில்லை. இருப்பினும் ஓவியங்களை அவர் தம் கையினாலேயே அழிக்கவில்லை என்று கூறமுடியாது. பீஜப்பூரிலுள்ள அஸர் மஹாலிலுள்ள (Asar Mahal) ஓவியங்கள் பலவற்றை அவர் அழித்ததாகக் கூறப்படுகிறது. அவருடைய திட்டமான ஆணைப்படி சிக்கந்தராவில் அக்பரின் கல்லறையிலுள்ள உருவங்கள் வெள்ளையடிக்கப்பட்டு அழிக்கப் பட்டன என்று மானூக்கி (Manucci) எழுதுகிறார். இருப்பினும், உருவங்களை எழுதுவதில் கைதேர்ந்த ஓவியர்கள் அவருடைய ஆட்சிக் காலத்தில் தங்களுடைய கலையை வளர்த்து வந்திருக்கிறார்கள். அவருடைய முன்னோர்கள் காலங்களில் எழுதப்பட்ட ஓவியங்களின் எண்ணிக்கையைப் போலவே இவர் காலத்தில் எழுதப்பட்ட ஓவியங்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருந்தது. இவ்வுருவ ஓவியங்களில் பேரரசருடைய உருவமும் ஒன்றாகும். ஆகவே, இது பேரரசரின் அனுமதியின் பேரிலேயே எழுதப்பட்டிருக்கவேண்டும். இவ் ஓவியங்கள் அரசர் வேட்டையாடுவது, பயணம் செய்வது, படிப்பது, படையை நடத்துவது போன்ற காட்சிகளைச் சித்திரிக்கின்றன. சான்றாக, 1686ஆம் ஆண்டில் பீஜப்பூரில் நடத்தப்பட்ட முற்றுகை ராம்பூர் அரசாங்க நூலகத்தில் (Rampur State Library) பாதுகாக்கப்பட்டுள்ள ஓவியத்தில் தீட்டப்பட்டிருக்கிறது. பேராசிரியர் சர்க்கார் (J. N. Sarkar) குறிப்பிடுவதுபோன்று, பேரரசர் ஒரு சமயம் கலகஞ் செய்யும் ஒரு மகனின் உடல்நலத்தைப் பதிவு செய்யும் பொருட்டு ஓவியர் திறமையை ஒருசமயம் பயன்படுத்திக் கொண்டார். முகமது சுல்தானின் சிறைவாழ்க்கையின்பொழுது அவருடைய படம் பேரரசரின் ஆணைப்படி முறையான இடைக் காலங்களில் வரையப்பட்டு பேர் அரசருடைய ஆய்வுக்காக அவர் முன் வைக்கப்பட்டன. இவ்வாறாகத் தம்முடைய மகனைச் சென்று பார்க்கவேண்டிய அவசியமின்றி அல்லது அவனைக் குவாலியர் கோட்டையிலிருந்து தம் முன்னிலையிலும் கொண்டுவராமல் தம் மகனின் உடல் நிலையைப்பற்றி உடனுக்குடன் பேரரசர் அறிந்து கொண்டிருந்தார்.[1] ஆனால், பொதுவாகப் பேசுமிடத்து இக்காலத்தில் போதுமான அளவில் ஓவியங்கள் வரையப்பட்டாலும் ஓவியக் கலை அவுரங்கசீபின் ஆட்சிக்காலத்தில் தெளிவான வீழ்ச்சியை அடைந்தது. அக் கலை ஜஹாங்கீரின் காலத்தில் உச்சநிலை அடைந்

[1] J. N. Sarkar, 'Studies in Mughal India,' p. 78.

தது. ஷாஜகானின் காலத்தில் தன் உயிர்ப் பண்பினை இழக்கத் தொடங்கியது. அதனுடைய வீழ்ச்சி அவுரங்கசீபின் காலத்தில் விரைவுபடுத்தப்பட்டது. ஓவியக் கலையை ஆதரிப்பதும் ஊக்குவிப்பதும் குரான் சட்டக் கொள்கைக்கு முற்றும் முரண்பட்டது என்று அவுரங்கசீப் கருதினார்.[1]

தொடக்க கால முகலாய மன்னர்களின் ஆட்சிக் காலங்களில் வரையப்பட்ட ஓவியங்கள் அவைகளின் கலைப் பண்பிற்காக நிபுணர்களால் போற்றப்பட்டன. அக்காலத்திய அரச குடும்பத்தினரின் பழக்கவழக்கங்களைப்பற்றி உபயோகமான குறிப்புகள் தருவதால் வரலாற்று ஆசிரியர்களால் புகழப்படுகிறது. பேரரசர்களின் அன்றாட வாழ்க்கையைப்பற்றியும் பயனுள்ள செய்திகளை அவை நமக்குத் தருகின்றன. ஆக்ரா தோட்டம் ஒன்றில் பாபர் ஒரு தூதுக் குழுவை வரவேற்பதைப் பார்க்கிறோம்; ஃபதேபூர் சிக்ரியின் கோபுரங்களிலும் சுவர்களிலும் கொத்தர்கள் பணிபுரிவதைப் பார்க்கிறோம்; அக்பருடைய யானை கோபாவேசத்தினால் படகு பாலத்தை அழிப்பதைக் காண்கிறோம். பெரும் பேரரசரே புலியையும் மானையும் வேட்டையாடுவதையும், பாறையினடியில் உறங்கிக்கொண்டிருப்பதையும் நாம் காண்கிறோம். ஜஹாங்கீர் ஒரு சிங்கத்தைக் கொல்லும் காட்சி சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

ஷாஜஹான் ஒரு சமயம் சமயபோதகர் ஒருவரைப் பார்க்கச் செல்லும் காட்சியும், மற்றொரு சமயம் திவானி ஆமின் (Diwan-i-Am) பகட்டுக்கிடையே அரியணையில் வீற்றிருக்கும் காட்சியும் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. சிலசமயங்களில் அந்தப்புர வாழ்க்கையைச் சித்திரிக்கும் காட்சிகள் காணப்படுகின்றன. கலை செழித்தோங்கிய காலங்களில் இம்மாதிரியான ஓவியங்களைக் காண்பதரிது. இத்தகைய ஓவியங்கள் அவுரங்கசீபின் ஆட்சிக்காலத்தின் தொடக்க ஆண்டுகளில் தொடங்கி, பதினெட்டாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரையில் உள்ள கலையின் படிப்படியான சீரழிவுக் காலத்தைச் சேர்ந்தவையாகும். பேரரசின் சீர்குலைவினால் கலைஞர்கள் சிதறுண்டுபோனார்கள். கலைஞர்கள் தலைநகரிலிருந்து வெளியேறி அவுத், ஹைதராபாத் ஆகிய இடங்களில் குடியேறினார்கள். இப்பகுதிகளில் புதிய வமிசங்கள் தோன்றித் தங்கள் சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்திக் கொண்டன. இதனால் இப்பகுதிகளில் புதிய வேலை வாய்ப்புகள் மிகுதியாயின. ஓவியக் கலைஞர்களில் சிலர் கிழக்கு நோக்கிப் பாட்னாவுக்குச் சென்றார்கள். மற்றவர்கள் மைசூரில் அடைக்கலம் புகுந்தார்கள். இங்கு தங்களுடைய பழைய மரபுகளைப் பத்தொன்பதாம்

[1] See L. Binyon, 'Court Painters, &c.,' pp. 62 ff; P. Brown, 'Indian Painting, &c.,' pp. 98 ff.

நூற்றுண்டின் இடைக்காலம் வரையில் கையாண்டார்கள். ஆனல், கலை தன் முந்திய உயிர்ப்பண்பையும் சிறப்பையும் மீண்டும் அடையவில்லை. வீழ்ச்சிக் காலத்தில் கலை பெற்ற ஆதரவு, தன்மையிலும் அளவிலும் மிகக் குறைவானது. மாபெரும் முகலாயர்களினுல் அளிக்கப்பட்ட ஊக்கத்தையும் பொருளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இவ்வாதரவு மிகக் குறைவானதாகும்.[1]

நேர்த்திக் கையெழுத்துக் கலை: முகலாய ஓவியக்கலையோடு தொடர்பு கொண்டது நேர்த்திக் கையெழுத்துக் கலையாகும். இந்தியா, பாரசீகம், சீனு ஆகிய நாடுகளில் இக் கலை எப்பொழுதும் பெரிதும் மதிக்கப்பட்டு வந்திருக்கின்றது. உண்மையாகவே கையெழுத்துப் பிரதியின் எழுத்தழகு, விளக்கப்படங்களை விட அதிக மதிப்பும் முக்கியத்துவமும் பெற்றதாகக் கருதப்பட்டது. திறமையுள்ள ஓவியக்கலைஞரின் ஊதியத்தினளவு—இன்னுங் கேட்டால் அதிகமாக—கையெழுத்துக் கலைஞரால் பெறமுடிந்தது. 'இயற்கையாகவே கலைஞனுகப் பிறக்காதவன் கலைஞனுவதற்குத் தகுதியற்றவன்' என்னும் ஹோரேசின் (Horace) புகழ்பெற்ற மூதுரை நல்ல கையெழுத்து எழுதுபவர்களின் அறிவுத் திறத்தைப் பற்றி ஆசிய நாடுகளில் பரவலாக இருந்துவந்த கருத்தைச் சரியாக விளக்குகிறது. இக் கலைஞர்களின் கையெழுத்துகள் தொகுக்கப்பட்டுப் பட இணைப்புகளில் ஓவியக்கலையின் சிறப்புள்ள மாதிரிகளைப் போன்று பாதுகாக்கப்பட்டு வந்தன. முகலாயர்கள் காலத்தில் ஓவியக்கலைஞர்கள் சாதாரண பரம்பரைத் தொழிலாளிகளாகவே கருதப்பட்டார்கள். அவர்கள் நீண்டகாலப் பயிற்சியின் விளைவாகக் கைதேர்ந்த கலைஞர்களாக மெதுவாக மாறினர்கள். ஆனல், நேர்த்திக் கையெழுத்துக் கலைஞர்கள் படிப்பாலும் பழக்கத்தாலும் அடைய முடியாத தெய்விகத் திறமையை அதிருஷ்டவசமாகப் பெற்றவர்கள் என்று மக்களால் மதிக்கப்பட்டார்கள்.[2] சர் ஜான் மால்காமின் (Sir John Malcolm) கருத்துப்படி, பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்திலும்கூட, பாரசீகத்தில் நேர்த்திக் கையெழுத்துக் கலையில் சுவைத் திறம்பற்று இருந்தது. அக்காலத்திற்கும் சில ஆண்டுகளுக்கு முன்னர் இறந்துபோன தார்வெஸ் மஜீத் (Darvesh Magid) என்ற புகழ்பெற்ற கையெழுத்துக் கலைஞரால் எழுதப்பட்ட நான்கு வரிகளுக்குச் சிறந்த கலைப் பண்பறிஞர் ஒருவர் ஏழு பவுன்களைக் கொடுத்து வாங்கினர் என்று சர் ஜான் மால்காம் கூறுகிறர்.[3] முகலாயர்கள் காலத்தில் ஓவியக்கலையும் நேர்த்திக் கையெழுத்துக் கலையும் இணைந்தே வளர்ந்தன. இதன் விளைவாக ஓவியத்தின்

[1] See P. Brown, ibid, pp. 103-5.
[2] Ibid., p. 21.
[3] Malcolm, 'History of Persia,' 1829, vol. ii, pp. 421 n.

பின்புறத்தில் பெரும்பாலும், சிறந்த கையெழுத்துக் கலைஞன் ஒருவனால் ஓவியத்திற்குத் தொடர்பேயில்லாத சில வரிகள் எழுதப்பட்டிருக்கும். நேர்த்திக் கையெழுத்துக் கலைஞர்கள் தாங்கள் எழுதிய கையெழுத்துப் பிரதிகளுக்குக் கையொப்பமும் தேதியும் இடும் பழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். ஓவியக் கலைஞர்கள் எத்துணைச் சிறப்புப் பெற்றவர்களாக இருப்பினும், கையெழுத்துக் கலைஞர்கள் ஓவியக் கலைஞர்களைவிட ஆசியா முழுவதும் மிக்க புகழ் பெற்றிருந்தார்கள். இந் நிலை ஃபிரெஞ்சு ஆசிரியர் ஒருவரின் மதிப்பீட்டிற்கு ஐயமின்றிக் காரணமாக அமைந்திருந்தது. அவர் சொல்வதாவது: கிழக்கில்—அதாவது, முகம்மதியக் கிழக்கில்—நேர்த்திக் கையெழுத்துக் கலைக்கு ஓவியக் கலை சாதாரணப் பணிப்பெண் தான்.[1]

பாபர், ஹுமாயூன் காலங்களில் நேர்த்திக் கையெழுத்துக் கலையைப்பற்றி நமக்கு அதிகமாகத் தெரியவில்லை. இருப்பினும், 1504ஆம் ஆண்டில் பாபூரி (Baburi) என்ற புதிய எழுத்துப் பாணியை பாபர் கண்டுபிடித்ததாகக் கூறப்படுகிறது.[2] ஆனால், அக்பரின் ஆட்சிக் காலத்தில் எட்டு வகையான நேர்த்திக் கையெழுத்துகள் பழக்கத்தில் இருந்தன என்று அபுல் ஃபாஸல் கூறுகிறார். அவற்றுள் ஏழு வகைகள் இப்னி முக்லா (Ibni Muqlah) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டவை. நாஸ்தாலிக் (nastaliq) என்ற எட்டாவது வகை, பேரரசருக்கே மிகவும் விருப்பமானதாக இருந்தது. இவ்வெட்டாவது வகைக் கையெழுத்து ஏழு வகைகளுள் நாஸ்க் (naskh), தாலிக் (taliq) என்ற இரண்டு வகைகளை இணைத்து உருவாக்கப்பட்டு, முழுவதும் வளைவுக் கோடுகளால் ஆனது.[3] பொதுவாகப் பேசுமிடத்து, இந்தப் பலவகைக் கையெழுத்துகள் அவைகளின் நேரான வளைந்த கோடுகளின் விகிதங்களிலுள்ள வேறுபாடுகளினால் ஒன்றிலிருந்து மற்றொன்று வித்தியாசப்படுகின்றன. முக்கிய 'நேர்கோட்டு' வகை கூஃபிக் (kufic) என்றும், முக்கிய 'வளைகோட்டு' வகை நாஸ்தாலிக் (nastaliq) என்றும் வழங்கப்பட்டன. அக்பரின் அரசவையிலிருந்த பன்னிரண்டு தலைசிறந்த நேர்த்திக் கையெழுத்துக் கலைஞர்களின் பெயர்களை அபுல் ஃபாஸல் தருகிறார். அவர்களில் ஒருவரான நாஸ்தாலிக் நிபுணர் காஷ்மீரத்து முகமது உசேன் (Muhammad Husain) என்பாருக்கு 'ஜரின் கலம்' அல்லது 'தங்கப் பேனா' என்ற பட்டம் கொடுக்கப்பட்டது.[4] அமிர் ஹம்ஸாவினுடைய (Amir Hamza) கதைகள்

[1] 'Huart, 'Less Calligraphes et les Miniaturistes de l'Orient Musulman, Paris' 1908.

[2] N. N. Law, 'Promotion of Learning in India' p. 123.

[3] Ibid., p. 158; Smith, 'Akbar', p. 425; 'Ain-i-Akbari', trans. Blochmann, p. 99.

[4] Ibid., p. 103.

அழகான கையெழுத்தில் எழுதப்படவேண்டும் என்று அக்பர் கட்டளை இட்டார் என ஃபெரிஷ்டா (Ferishta) என்ற வரலாற்று ஆசிரியர் கூறுகின்றார்.[1] ஆகையால், அக்பருக்கு எழுதத் தெரியாது என்றாலும் அழகான கையெழுத்துக் கலையை ஆதரிக்க அவருடைய குறை தடையாக இருக்கவில்லை என்பது தெளிவாகிறது. இவருடைய விளைவு, இப்பொழுதும் இருக்கின்ற அவர் காலத்துக் கையெழுத்து மாதிரிகளில் மட்டுமல்லாது, நேர்த்தியாக எழுத்துகள் பொறிக்கப்பட்ட அவர்தம் நாணயங்களிலும் வெளிப்படுகின்றது. கவிஞர், சிற்பி, செதுக்குபவர், நேர்த்திக் கையெழுத்துக் கலைஞர் ஆகியவர்களின் ஒத்துழைப்பின்மூலமாகவே அக்பரின் நாணயங்கள் சிறப்புற்றிருக்கின்றன. தீர்மானமான பொருளின் தயாரிப்புக்கு இவர்களில் ஒவ்வொருவருக்கும் முக்கியப் பங்கு உண்டு. தம் தந்தை கையெழுத்துக் கலையை ஆதரித்ததுபோன்றே ஜஹாங்கீரும் தொடர்ந்து ஆதரித்துவந்தார். அழகாக எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதிகளுக்கு எவ்வளவு விலையேனும் கொடுக்க அவர் தயாராயிருந்தார். மீர் ஹஷாம் (Mir Hasham) என்ற ஓவியக் கலைஞர் ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தில் நேர்த்திக் கையெழுத்துக் கலைஞராகவும் இருந்து சிறப்பான புகழ் பெற்றார். கையெழுத்துக் கலையில் தேர்ச்சி பெற்றிருந்த ஜவாஹிர் ரகாம் (Jawahir Raqam) என்ற தம் நூலகருக்கு அவுரங்கசீப் மிகுந்த ஆதரவு காட்டினார். அவுரங்கசீப் தாமே ஒரு சிறப்பான கையெழுத்துக் கலைஞர். தம்முடைய கையினால் குரான் பிரதிகளை எழுதி அவைகளை விற்று வருகின்ற வருமானத்தைத் தம் சொந்தச் செலவுகளுக்காகப் பயன்படுத்திக்கொண்டார்.[2] நேர்த்திக் கையெழுத்துக் கலை முகலாயர் காலத்தில் பல விதங்களில் பயன்படுத்தப்பட்டது. கித்தா (qit'a) என்ற ஒளி அமைப்பின் அழகான மாதிரிகளில் இது தென்படுகிறது. அதை இப்பொழுதும் கல்கத்தாவில் இந்தியப் பொருட்காட்சிச்சாலையில் காணலாம். அது ஹெராட்டின் (Herat) மீர் அலியால் (Mir Ali) தயாரிக்கப்பட்ட சிறந்த மாதிரியாகும். அவர் 1558-59ஆம் ஆண்டில் இறந்துபோனார். அக்பர் காலத்து முக்கியச் செதுக்குபவராக இருந்த டெல்லியின் மௌலானா அலி அகமத், நாஸ்தாலிக் (nastaliq) எழுத்து வகை நிபுணராகவும் இருந்ததால், அரசமுத்திரைகளைச் செதுக்கவும் அது பயன்படுத்தப்பட்டது. குர்ரானில் உள்ள வாசகங்களால் கட்டடங்களிலும் சின்னங்களிலும் அழகுபடுத்தக் கையெழுத்துக் கலை பயன்படுத்தப்பட்டது. கட்டங்களில் பொது அழகு திட்டத்தோடு குரானின் வாசகங்களும் ஒரு பகுதியாக அலங்காரத்தில் அமைக்கப்பட்டன. இவ்வாறு நேர்த்திக்

[1] See N. N. Law, 'Promotion of Learning,' &c., p. 142.

[2] J. N. Sarkar, 'Anecdotes of Aurangzeb,' p. 52.

கையெழுத்து முறை கையாளப்பட்ட திறமையை, அக்பரின் சலவைக் கல்லாலான கல்லறைமேல் அமைக்கப்பட்ட நினைவுச் சின்னத்திலும் (cenotaph) சிகந்தராவிலுள்ள (Sikandarah) அவருடைய கல்லறை மாடத்தின் உச்சி மாடியிலும் காணலாம். அம் மாடியின் செவ்வகப் பக்கங்களும் உச்சியும் படைப்புக் கடவுளின் தொண்ணூற்றொன்பது பெயர்களால் மென்மையான அரேபியச் செதுக்கு அமைப்பால் அழகு செய்யப்பட்டிருக்கின்றன. 'அல்லாஹு அக்பர் ஜல்லா ஜலாலாஹு' (Allaho Akbar Jalla Jalalahu) என்ற சொற்கள் மரச்சட்டத்தின் நுனியிலும் அடியிலும் மிகுந்த 'அழகும் மென்மையுமுள்ள மலர் ஒப்பனையால் சூழப்பட்டுப் பொறிக்கப்பட்டிருக்கின்றன.'[1] முகலாய அரசவையின் முக்கியக் கூறாக அமைந்த எழில் வாய்ந்த கையெழுத்துக் கலைமேல் உள்ள பற்று, பெயர் தெரியாத ஒருவரால் (anonymous) நாலடிக் கவிதையில் பேனாவைப் பற்றிப் புகழ்ந்து எழுதவைத்தது. அப் புகழுரை வருமாறு: 'இவ் அண்டத்தின் (universe) தலைவன் பேனாவாகும். இதை வைத்திருப்பவர்களுக்கு இது செல்வத்தைக் கொடுக்கிறது. அதிர்ஷ்டமற்றவனையும் செல்வ நிலைக்கு இட்டுச் செல்லுகிறது.'[2]

சிற்பக் கலை: கலையின் மற்ற அமைப்புகளைப் பார்க்கின்ற பொழுது, வட்டத்திலோ புடைப்பிலோ (relief) சிற்பக் கலை சிறிதும் இல்லாதிருப்பது ஒருவரை வியப்பில் ஆழ்த்துகிறது. ஓட்டுகிறவர்களுடனோ, ஓட்டுகிறவர்கள் இல்லாமலோ உள்ள கல்யானைகளைத் தவிர உண்மையில் எந்தச் சான்றும் கிடைக்கவில்லை. கோட்டைகளின் வாயில்களில் இத்தகைய கல்யானைகளை அமைப்பது வழக்கமானதாக இருந்தது. சான்றாக, ஃபதேபூர்-சிக்ரியிலுள்ள யானை கௌனி 'இப்பொழுதும் சிதைந்த இரண்டு பிரம்மாண்டமான யானைகளால் காக்கப்படுகின்றது. அவ் யானைகள் பன்னிரண்டரை அடி உயரமுள்ள பீடங்களின்மேல் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் துதிக்கைகள் தொடக்கத்தில் வாயிலுக்குக் குறுக்கே ஒன்றையொன்று பிணைத்துக்கொண்டிருந்தன.'[3] கலைச்சிறப்பற்ற பல சிறிய யானைகள் பல முகலாயக் கட்டடங்களில் ஒப்பனைச் சிற்பங்களின் பாகமாக இருக்கின்றன. ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்தில் ஆக்ராவிற்கு விஜயம் செய்த வில்லியம் ஃபின்ச் (William Finch) என்பவர் 'இரண்டு இராஜாக்கள்' ('two Rajas') சிலைகளைப்பற்றிக் கூறுகிறார்.[4] அக்பர் அல்லது ஜஹாங்கீரின் ஆணைப்படி அந்த

[1] Smith, H. F. A., p. 430.

[2] See 'Indian Antiquary,' vol. liii, June, 1924, p. 136.

[3] Smith, H. F. A., p. 425.

[4] W. Foster, 'Early Travels' p. 183; 'Purchas His Pilgrims' Maclehose, vol. iv, p. 72.

நகரின் வாயில்கள் ஒன்றில் அவைகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. யானைகளின்மேல் அமர்ந்த உருவங்கள், அரண்மனைப் பிரபுக்கள் சிலரோடு சண்டையிட்டபொழுது கொல்லப்பட்ட ஜெய்ப்பூரின் இராஜா பகவன்தாசருடைய இரண்டு பேரர்களைக் குறிக்கின்றன எனக் கருதப்படுகிறது. ஆனால், அவைகள் அக்பரால் அமைக்கப் பட்ட ஜெய்மால், ஃபட்டா ஆகியவர்களின் சிலைகளாகவுமிருக்கலாம். இச் சிலைகளின் சுவடுகள் இப்போது எதுவும் இல்லை. ஜஹாங்கீரின் கட்டளையின்பேரில் அமைக்கப்பட்ட சித்தூர் இராணு, அவருடைய மகன் ஆகியவர்களின் முழு உருவச் சலவைக்கல் சிலைகள் ஆக்ராவி லுள்ள அரண்மனைப் பூந்தோட்டத்தில் தாசன் ஜரோகாவுக்குக்கீழே அமைக்கப்பட்டன என்பது உறுதியாகும். ஜஹாங்கீர் நாள்தோறும் இங்கேதான் மக்களுக்காகக் காட்சியளிக்கத் தோன்றினர்.[1] பெரும்பாலும் ஆஜ்மீரில் செதுக்கப்பட்டதாகக் கருதப்படும் இந்தச் சிலைகள்கூட மறைந்துவிட்டன. இறுதியாக, பெர்னிய ருடைய(Bernier) சான்றும் நம்மிடத்தில் இருக்கின்றது. அதாவது, அவுரங்சீபின் ஆட்சிக் காலத்தின் தொடக்க ஆண்டுகளில் 1663-ல் டெல்லிக் கோட்டையின் டெல்லி வாயில், சித்தூரை 1568ஆம் ஆண் டில் காத்த வீரர்களான ஜெய்மாலையும் (Jailmall) ஃபட்டாவையும் (Fatta) குறிப்பதாகக் கருதப்படும் யானைகளின்மேல் இவர்ந்துள்ள இரண்டுபேர் சிலைகளைக்கொண்ட சிறப்புப் பெறுகிறது.[2] ஷாஜஹான் டெல்லியில் கோட்டையைக் கட்டியபொழுது அவருடைய ஆணை யின்படி இச் சிலைகள் எழுப்பப்பட்டிருக்கலாம். ஆனால், ஃபதேபூர்-சிக்ரியில் ஹதிபாலில் (Hathipol) உள்ள யானைகளைப் போன்று இந்த டெல்லிச் சிலைகளும் அவுரங்கசீபின் கட்டளைகளின்பேரில் உடைக்கப்பட்டன. இவைகள் முதலில் இந்து சிற்பிகளின் வேலைப் பாடுகளாக இருந்த காரணத்தால் அவுரங்சீபின் சமய வெறுப்பை இச் சிலைகள் தூண்டியிருக்கலாம்.

ஒப்பனைச் செதுக்கு வேலை (Decorative Carving): மேற் சொன்ன நிலைமைக்கு மாறாக அக்பர், ஜஹாங்கீர், ஷாஜஹான் ஆகிய அரசர்களின் ஆட்சிக் காலங்களில் ஒப்பனைப் புடைப்புச் செதுக்கு வேலை சிறப்பான நிலையை எய்தியிருந்தது. அக்பருடைய கல் லறையின் மேலுள்ள செதுக்கு வேலையைப்பற்றி ஏற்கெனவே சொல் லப்பட்டிருக்கிறது. அதில் நேர்த்திக் கையெழுத்து ஒப்பனையுடன் கூட, மேகங்கள், செடிகள், மலர்கள், வண்ணத்துப் பூச்சிகள், புழுக்கள், மரபியலான மலர்க்குவளை அமைப்பு ஆகியவையெல் லாம் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. தாஜ்மஹாலின் சுவரின்

[1] 'Memoirs of Jahangir,' Rogers and Beveridge, p. 322.
[2] Tod, 'Annals and Antiquities of Rajasthan,' ed. Crooke 1910., vol. i, p. 382 and n.

கீழ்ப்பகுதியில் மணற்கல்லின் (sandstone) புடைப்பில் மரபியலான மலர்களைக்கொண்டு அழகுபடுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், கல் பின்னல் வேலை, திட்ட அமைப்பிலும் செயல்தீர்வு முறையிலும் இப்போது உயர்தரத்தைப் பெற்றுச் சிறந்திருந்தது. இம்மாதிரியான பின்னல் வேலைப்பாடுகளை எண்ணற்ற வடிவியல் மாதிரிகளில் அநேக முகமதியக் கட்டடங்களில் காணலாம். அகமதாபாத்தில் ஏறத்தாழக் கி.பி. 1500 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட சிதிசயத் பள்ளி வாசலில் அழகுற அமைக்கப்பட்ட செதுக்கு சித்திரங்கள், முகலாயர்கள் காலத்திற்கு முன்னரும் இக் கலை வளர்ந்தது என்பதற்கும், அவைகள் ஜன்னல்களில்மட்டுமல்லாது கதவின் மரச்சட்டங்களிலும் கல்லறைத் திரைகளிலுங்கூடப் பயன்படுத்தப்பட்டன என்பதற்கும் சான்றுகளாயிருக்கின்றன. ஃபதேபூர் - சிக்ரியில் ஷேக் சலீம் சிஸ்தியின் கல்லறையிலுள்ள சலவைக்கல் திரை வேலைப்பாடும், தாஜ்மஹாலில் நினைவுச் சின்னத்தைச்(cenotaph) சுற்றியுள்ள போற்றத்தக்க சலவைக்கல் திரையும், அக்பர், ஷாஜஹானின் ஆட்சிக் காலங்களில் இக் கலை, குஜராத்தின் தலைசிறந்த கலைப்படைப்புகளோடு ஒப்பிடக்கூடிய திறந்த வேலைப்பாட்டுச் செதுக்குவேலையில் (open work carving) தலைசிறந்த படைப்புகளைப் படைக்க முடியும் என்பதை வெளிப்படுத்துகின்றன.

பல்வண்ண ஓவியங்கள் (Mosaics): முகலாயர் காலத்துக் கைவினைஞர்கள், பல்வண்ண ஓவியங்களிலும் பதிக்கும் ஒப்பனைகளிலும் கைதேர்ந்தவர்கள். பாரசீக வடிவியல் மாதிரியில் (Persian geometrical patterns) இணைக்கப்பட்ட சிறு பல்வண்ணத் துண்டுப் பாளங்களினால் ரோமானிய-பைசான்டைன்(Roman and Byzantine) பாணியில் ஆக்கப்பட்ட பல்வண்ண ஓவியங்களே அக்பர் ஆட்சிக் காலத்து அணிகல அமைப்புகளாக அமைந்திருந்தன. சாதாரண சலவைக்கல் உட்பதிப்பு வேலைப்பாட்டுக்கு இவைகள் சேர்க்கையாக அமைந்திருந்தன. ஃபதேபூர்-சிக்ரியிலுள்ள பெரிய பள்ளிவாசலில் இவைகளைக் காணலாம். ஆயினும், ஜஹாங்கீரின் ஆட்சியின் இறுதிக் காலத்தில் இவைகள் நீக்கப்பட்டு, இவற்றிற்குப் பதிலாகத் தொழில்நுட்பத் துறை மரபாகக் கூறப்படுகின்ற பல்வண்ண ஓவியங்களின் ஒப்பனை முறை (pietra dura) கையாளப்பட்டுவந்தது. இவ் ஒப்பனை முறை மணிவகைகள், இரவைக்கல், கார்னிலியான் போன்ற விலையுயர்ந்த அல்லது தரங்குறைந்த கற்களைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி, அத் துண்டுகளைச் சலவைக் கல்லின் குடைகுழிகளில் (sockets) நேர்த்தியாகப் பொருத்தப்படுவதாகும். இம்மாதிரி வேலைப்பாட்டின் மிகத் தொடக்ககால மாதிரிகள் உதயபுரியிலுள்ள கோல் மண்டலிலும் (Gol Mandal), ஆக்ராவிலுள்ள இத்துமத்தௌலாவின் (Itumadu-d-daula) கல்லறையிலும்

காணலாம். முகலாயப் பேரரசர்கள் பல்வண்ண ஓவிய ஒப்பனை முறையைப் (pietra dura)பற்றி எங்கிருந்து தெரிந்துகொண்டார்கள் என்பதை உறுதியாகச் சொல்லமுடியவில்லை என்றாலும், பேரரசவையில் வேலையிலிருந்த அயல்நாட்டுக் கைவினைஞர்கள் சிலரால் இத்தாலியிலிருந்து இம் முறை புகுத்தப்பட்டிருக்கக்கூடும் என்று கருதலாம். இம் முறை தெரிந்துகொள்ளப்பட்ட பிறகு, இந்து-முகம்மதியத் தொழிலாளர்கள் அதைத் தாராளமாகப் பயன்படுத்திக்கொண்டார்கள். ஷாஜஹான் காலத்தில் பழைய பல்வண்ண ஒப்பனை முறை அறவே நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக இந்த முறை இடம் பிடித்துக்கொண்டது. இது டெல்லி, ஆக்ரா ஆகிய நகரங்களில் ஷாஜஹானால் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களிலிருந்து தெளிவாகிறது. இவ்விரு நகரங்களிலுள்ள அரண்மனைகளும் தாஜ்மஹாலும் பல்வண்ண ஓவியங்களின் உட்பதிவினால் ஆடம்பரமாக அணி செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வொப்பனை முறைக்கு சஹத்ராவிலுள்ள (Shahdara) கல்லறையும், லாகூர்க் கோட்டையிலுள்ள சிஸ் மகல் (Shish Mahal), நௌலகாவும் (Naulakha) சிறந்த சான்றுகளாக விளங்குகின்றன.

மெருகிடப்பட்ட பாவோடு வேலைப்பாடு (Glazed Tile-work): கடைசியாக மெருகிடப்பட்ட பாவோடு வேலைப்பாட்டைப்பற்றிக் கவனிப்போம். இம் முறை தொடக்கத்தில் பாபிலோனியாவில் இருந்தது என்றும், பிறகு அங்கிருந்து கொரசானுக்கும் சமர்க்கண்டுக்கும் பரவியது என்றும் சொல்லப்படுகிறது. முகலாயர் கட்டடங்களின் கவிகை மாடங்களிலும் சுவர்களிலும் பயன்படுத்தப்பட்ட தனிவகையான ஓடு காசி (kashi) அல்லது சினி (chini) வகையைச் சேர்ந்தது. இதற்குமுன் ஷேர் ஷா, ஹுமாயூன் ஆகியவர்களின் கல்லறைகளில் ஓட்டுவேலைப்பாட்டின் மாதிரிகள் காணப்படுகின்றன என்றாலும், ஜஹாங்கீரின் காலத்தில்தான் இவை செல்வாக்கு அடைகின்றன. இவ்வகை வேலைப்பாட்டின் சிறந்த சான்றுகளை ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தில் லாகூரில் கட்டப்பட்ட வஜிர்கானின் (Wazir Khan) மசூதியின் கிளைக்கோபுரங்களிலும் (minarets), அவுரங்சீபின் ஆட்சியின் தொடக்க காலத்தில் ஆக்ராவில் கட்டப்பட்ட சினி-கா-ரௌஜாவின்(Chini-ka-Rauza) சுவர்களிலும் காணலாம். பின்னர் கூறப்பட்ட கட்டடம் காலத்தினால் சிதைந்துவிட்டது என்றாலும், அக் கட்டடத்தின் வெளிப்புற மேற்பரப்பு முழுவதும் பல மாதிரியான பல்வண்ண ஓட்டு வேலைப்பாட்டினால் ஆக்கப்பட்டிருந்தது என்பதை அறியப் போதுமான சான்றுகள் இன்னும் இருக்கின்றன. இப்பொழுதும் லாகூர்க் கோட்டைச் சுவரில் இன்னும் சிறப்பான வேலைப்பாட்டினைக் காணலாம். அங்கு 497 கெஜ நீளம் 17 கெஜ உயரமுள்ள மேற்பரப்பில் யானைச்சண்டை

கள் போன்ற காட்சிகளைக் காட்டும் வண்ண ஓட்டு வேலைப்பாடு அமைக்கப்பட்டிருக்கின்றது.[1]

இசையும் பாடலும்: அவுரங்கசீபைத் தவிர மற்ற எல்லா முகலாய மன்னர்களும் இசையில் பற்றுக் கொண்டவர்களாகவும், இசைக்கலையை ஊக்குவிப்பவர்களாகவும் இருந்தார்கள். இசைக் கலை, புகழ்பெற்ற அமீர் குஸ்ருவினால் (Amir Khusru)தொடக்கத்தில் சீர்திருத்தப்பட்டு வளர்ச்சியடைந்தது. இவர் 1266-86ஆம் ஆண்டு களுக்கிடையில் சுல்தான் கியாஸ் உத்தீன் பால்பனின் அவையி லிருந்தபொழுது, மத்திய ஆசியாவிலிருந்து முதலில் புகுத்தப்பட்ட இசைமுறைகளைத் திருத்த அவருக்கு அவகாசம் கிடைத்தது. இவ் வாறாக அமீர் குஸ்ரு இடைநிகழ்வாக இந்து இசையின் தன்மையில் நாளடைவில் மாற்றத்தை உண்டாக்கினார். இது தன் இறுதி அமைப்பில் பாரசீகக் கஜாலை (ghazal) ஒத்திருந்தது. இசையை வளர்த்துப் பாராட்டுவதில் முகலாய மன்னர்கள் மட்டுமல்லாமல் பல இந்திய அரசர்களும் பெரிதும் ஈடுபாடு உடையவர்களாயிருந் தார்கள். தவிர, பீஜப்பூரைச் சேர்ந்த அடில் ஷாஹி சுல்தான்களும், அக்பர் காலத்து மாளவ நாட்டு பாஜ்பகதூரும் (Baz Bahadur) இசையில் ஈடுபாடுகொண்டிருந்தார்கள். இக் கலையில் பாபர் மிகவும் தேர்ச்சி பெற்றவராயிருந்ததாகச் சொல்லப்படுகிறது. இசையைப் பற்றி பாபர் ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையே (thesis) எழுதியிருக் கிறார்.[2] ஹுமாயூன் இசைக்கலையைப்பற்றிக் கொண்டிருந்த கருத்து என்ன என்பதற்கு உறுதியான சான்றுகள் இல்லையென்றாலும், இசையிலும் நடனத்திலும் தமது குடும்பத்தினர் கொண்டிருந்த பற்று அவருக்கும் இருந்திருக்கலாம். அக்பரின் அரசவையிலிருந்த வாழ்க்கை வரலாற்றாசிரியர் விட்டுச் சென்ற குறிப்புகளிலிருந்து, அக்பர் இக் கலையிடத்து எத்துணைப் பற்றுக் கொண்டிருந்தார் என் பது தெரியவருகிறது. 'பேரரசர் இசைக்கலையில் பெரிதும் கவனம் செலுத்துகிறார். இம் மயக்கும் கலையில் தேர்ச்சி பெற்ற கலைஞர்கள் அனைவருக்கும் அவர் ஆதரவாளராக இருக்கிறார்' என்று அவர் கூறுகிறார். இந்துக்கள், ஈரானியர்கள், துரானியர்கள், காஷ்மீரி கள் முதலிய இனத்தவர்களில் ஆண்களும் பெண்களுமாக எண் ணற்ற இசைக்கலைஞர்கள் அரசவையில் இருந்தனர். அரசவை இசைக்கலைஞர்கள் ஏழு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவினரும் வாரத்தின் ஒவ்வொரு நாளுக்காகவென்று ஒதுக்கப்பட்

[1] ஸ்மித்தின் 'நுண்கலைகளின் வரலாறு' பக். 424-8ஐ அடிப்படையாகக் கொண்டு இறுதி நான்கு பத்திகள் அலங்காரத் துணைக்கலைகளைக் கூறுகின் றன. அவர் லாகூர்க் கோட்டையிலிருந்த ஓடுகளில் ஒன்றை மறுபடி எடுத்துச் சேர்த்திருக்கிறார். பக்கம் 446ஐப் பார்த்தபடி.

[2] N. N. Law, 'Promotion of Learning,' & c., p. 122.

டிருந்தனர்.[1] அக்பருடைய இசையார்வம், இசையைச் சுவையுணர் வோடு கேட்பதுடன் நின்றுவிடவில்லை. அபுல் ஃபாஸலின் கருத்துப்படி, தேர்ந்த இசைக் கலைஞர்கள் பெற்றிருந்த இசைப்புலமையைவிட அதிகப் புலமையை அக்பர் பெற் றிருந்தார். நக்காரா (nakkarah) என்ற இசைக்கருவியை மிக நேர்த்தியான முறையில் அக்பர் வாசித்தார். லால் கலாவந்த் என் பவரிடம் (Lal Kalawant) இந்து வாய்ப்பாட்டைச் (vocalisation) சிறப்பான முறையில் படித்தார். இந்து மரபைச் சார்ந்த வாய்ப் பாட்டின் மூச்சையும் ஒலியையும் ஒன்று விடாமல் அவர் அக்ப ருக்குப் போதித்தார்.[2] அக்பரே இருநூறு பாரசீகப் பழைய இராகங்களுக்கு இசை அமைத்தார். இக் கலைக்கு அக்பரின் ஆதரவு இருந்த காரணத்தால் இசைக்கலை மிகுந்த புகழ்பெற்றது. இசைக்கலையின் வாய்ப்பாட்டுப் பிரிவு, இராகங்களாலும் ராகிணி களாலும் (raginis) பரவலாகப் பேணி வளர்க்கப்பட்டது. நாடு முழு வதும் பிரபுக்களும் செல்வர்களும் பேரரசரின் ஆர்வத்தைப் பின் பற்றி இசைக்கலையை வளர்க்க முயன்றார்கள். திறமையான பாட கர்கள் அடிக்கடி விலையுயர்ந்த வெகுமதிகளைப் பெற்றார்கள். சான்றாக, ராம்தாஸ், அப்துற்றஹீம் மிர்ஸாவிடமிருந்து(Abdurrahim Mirza) ஓர் இலட்சம் ரூபாயைப் பெற்றார். கான் கானனும்[3] (Khan Khanan) புகழ்பெற்ற மியான் தான்சென்னும் (Mian Tansen) அக்ப ரிடமிருந்து இரண்டு இலட்சம் ரூபாயை அன்பளிப்பாகப் பெற்றனர். இக் காலத்தில் கருவி இசையாகவோ, வாய்ப்பாட்டுக்கு அனுசரணை யாகவோ இருந்த முக்கிய இசைக்கருவிகள் சர்மாந்தல்(sarmandal), வீணை (vina), நை (nai), கரணா (karana), தம்பூரா (tamburah), ஜிக்காக் (ghichak), கூபுஸ் (qubuz), சுரணா (surna), கானுன் (qanun) என்பவைகளாகும்.

அக்பருடைய அரசவையில் இருந்த முப்பத்தாறு பாடகர்கள், இசைக்கருவி வாசிப்பவர்களின் பட்டியல் ஒன்றை அபுல் ஃபாஸல் தருகிறார். அவர்களில் முன்னர் சொல்லப்பட்ட பாஜ்பகதூரும் ஒருவர். அவர் 1,000 மன்சப்தாராக நியமிக்கப்பட்டிருந்தார். அவர் நிகரற்ற பாடகர் என்று சொல்லப்படுகிறது. ஆனால், அக் காலத்து மிகச்சிறப்பான திறமையுள்ள பாடகர் மியான் தான்சென் கலாவந்த் (Mian Tansen Kalavant) ஆவார். இவர் தொடக்கத்தில் ரேவா நாட்டு இராஜாவின் பணியிலிருந்துகொண்டு இராஜா மான் சிங்கினால் (1486-1518) குவாலியரில் தொடங்கப்பட்ட இசைப்

[1] 'Ain-i-Akbari,' vol. i, trans. Blochmann, p. 612.
[2] 'Memoirs of Jahangir,' Rogers and Beveridge i. 150.
[3] N. N. Law, 'Proportion of Learning, & c,' pp, 155 ff.

பள்ளியில் தம் இசைத்தொழில் வாழ்க்கையை ஆரம்பித்தார்.[1] 1562-63ஆம் ஆண்டில் அக்பர் ரேவாவின் இராஜாவைத் தான் செனனைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு வற்புறுத்தினர். பேரா சவைக்கு அப் பாடகர் முதல் முறை வரும் காட்சி ஓவியமாகத் தீட்டப்பட்டது ; அது ஓவியக் கலையில் அழியாப் புகழ் பெற்றிருக்கிறது. இவ் ஓவியம் இப்பொழுது கல்கத்தாவில் இந்தியப் பொருட்காட்சிச் சாலையில் பாதுகாக்கப்பட்டுவருகிறது. இதனுடைய வரலாற்றுச் சிறப்பு ஒருபுறமிருக்க, உருவப்படக் கலை பாரசீகப் பாணியிலிருந்து முகலாயப் பாணிக்கு மாறும் நிலையைக் காட்டும் விலையுயர்ந்த சான்ருக இவ் ஓவியம் விளங்குகிறது. இது பாரசீகப் பாணியும் இந்துஸ்தானத்தின் நாட்டுக் கலையும் தொடக்கத்தில் இணைவதைச் சிறப்பான முறையில் காட்டுகிறது.[2] தான்செனனினுடைய இசைத் திறமையைப் புகழும் கதைகள் பல புனையப்பட்டிருக்கின்றன. தம்முடைய மிகுதியான நேரத்தை விவசாயிகள் நீர் இறைக்கின்ற பொழுது பாடும் எளிமையான பாட்டுகளைக் கேட்பதில் தான்சென் செலவிடுவார் என்றும், அப் பண்ணிசையை மேலும் பூரணத்துவமுடைய தம் வாய்ப்பாட்டுக் கலைக்குப் பயன்படுத்திக்கொள்வார் என்றும் கூறப்படுகிறது. தம்முடைய எதிரி பிர்ஜா பௌலா (Birza Baula) சக்திவாய்ந்த பண் ஒன்ருல் பாறையைப் பிளக்கச் செய்ததுபோன்று, தான்செனும் பண்ணிசைத்து யமுனை நதி ஓடாமல் தடுத்தார் என்றும் புகழப்படுகிருர். அரைக்கும் யந்திரங்களின் (stone- grinding mill) ஒலியிலிருந்து இனிமையான குரலைப் பழகிக் கொண்டதாகக் கருதப்படுகின்ற பிர்ஜா பௌலாவைப்பற்றிப் புகழ் வாய்ந்த இசைக்கலைஞர்களின் பட்டியலில் அபுல் ஃபாஸல் குறிப்பிடவில்லை; ஆனல், பிர்ஜா பௌலாவுக்கும் தான்செனுக்குமிடையில் இருந்த பகைமையை மரபுவழிச் செய்திகளும் நாடோடிக் கதைகளும் குறிப்பிடுகின்றன.[3]

இசைக்கலையின் இந்து விமரிசகர்கள், இந்து இசைக்கலையின் சீரழிவுக்குத் தான்சென்தான் காரணமாக இருந்தார் என்று குற்றம் சாட்டுகிருர்கள். அவர்கள் கூறும் குற்றச்சாட்டு, இவர் இராகங்களைத் தவருகத் திரித்து அமைத்தார்; அவைகளில் 'பிந்தாலும்' (bindol) 'மேகும்' (megh) அவருடைய காலத்திலிருந்து முழுவதும் மறைந்துவிட்டன என்பதாகும்.[4] இது எவ்வாறு இருப்பினும், தான்சென் ஒப்புயர்வற்ற புகழைப் பெற்றிருந்தார். 'இவரைப் போன்ற ஒரு பாடகர் இந்தியாவில் கடந்த ஆயிரம் ஆண்டுகளில்

1 P. Brown, 'Indian Painting, &c.'
2 'Ibid', p. 57.
3 Sleeman's 'Rambles and Recollections', ed. V. A. Smith, pp. 561-2.
4 Fox-Strangways, 'Music of Hindustan,' 1914.

யாரும் இல்லை!' என்ற அபுல் ஃபாஸலின் கருத்தைத் தான்சென் உண்மையாக்குகிறார்.

தான்சென் குவாலியரைச் சேர்ந்தவராயிருக்கலாம். குவாலியரில் முகலாயர்கள் காலத்தில் பாடகர்கள், இசைக்கலைஞர் ஆகியோர் ஏராளமாக இருந்தார்கள். அக்பரின் பணியில் சேர்ந்த சிறிது காலத்துக்குப் பின்னர்தான் தான்சென் முஸல்மானாக மாறினார்; மிர்ஸா என்ற பட்டமும் அவருக்குக் கொடுக்கப்பட்டது. 1589ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அவர் இறந்தார்; அவருடைய உடல் குவாலியரில் முகமது காஸின் (Muhammud Ghaus) கல்லறைக்குத் தென்மேற்கு மூலையில் புதைக்கப்பட்டது. தான்சென் இந்து அல்லர்; அவர் முஸ்லீம் என்பது இவ்விடத்தில் புதைக்கப்பட்டதனால் மறைமுகமாக நிரூபிக்கப்படுகிறது. ஏனெனில், இது முஸ்லீம்களுக்கு மட்டுமே உரிய இடம். இந்து எவரும் இங்கே புதைக்கப்பட்டிருக்கமாட்டார். ஃபோர்பெஸின் (Forbes) கருத்துப்படி தான்சென் உண்மையில் லாகூரில்தான் இறந்தார்; அதன் பின்னர், அக்பரின் வெளிப்படையான கட்டளையின்படி, அவர் உடல் குவாலியருக்குக் கொண்டுவரப்பட்டது.[1] அக்பரின் பெயரில்தான் தான்செனின் பெரும்பாலான இசைப்பாடல்கள் எழுதப்பட்டிருக்கின்றன என்று இங்கே சொல்லிவைக்கலாம். 1605ஆம் ஆண்டில் மனோகர் (Manohar) என்ற ஓவியரால் தீட்டப்பட்ட ஜஹாங்கீரின் அரசவையில் உள்ள ஊர்வல ஓவியம் ஒன்றில் தான்சென் இருப்பதாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இது கலைபற்றிய காலவழுவாகும். இவ் ஓவியம், அக்பர், ஜஹாங்கீர் ஆகிய இருவருடைய ஆட்சிக் காலங்களிலும் தான்சென் இருந்தார் என்ற தவறான கருத்தை உணர்த்துகிறது.[2] ஜஹாங்கீர் பட்டத்திற்கு வந்தபொழுது தான்சென் உயிரோடு இருக்கவில்லை என்பதில் ஐயமேயில்லை. தான்சென் அக்பரின் 34ஆவது ஆட்சி ஆண்டில் இறந்தவர். இதற்கு மாறாக, தம்முடைய வாழ்நாளில் பலமுறை வரையப்பட்ட ஒரு புகழ்மிக்க பாடகனின் உருவத்தை ஜஹாங்கீரின் அரசவைக் கலைஞன் ஒருவன் தன் ஆதரவாளரின் அரசவைக் காட்சியில் வரைந்துவைத்திருப்பார் என்பதில் தவறு இல்லை. தான்சென்னின் புகழ் என்றும் நிலைத்து நிற்கும். புலோச்மன் (Blochmann) கூறுவது போன்று, 'அவருடைய இனிமையான இசை இன்றும் இந்துஸ்தானத்து மக்களால் எங்கும் திரும்பத் திரும்ப இசைக்கப்படுகிறது.[3] இசையைத் தொழிலாகக் கொண்டவர்களுக்குத் தான்செனின் கல்லறை ஒரு புண்ணியத் தலமாக

[1] Forbes, 'Oriental Memoirs,' 1813, iii. 32.

[2] P. Brown, 'Indian Painting, & c.,' p. 155.

[3] 'Ain-i-Akbari,' trans. Blochmann, p. 406.

விளங்குகிறது. ஒரு காலத்தில் அவர் எழுப்பிய இசை விளக்கம், இன்றும் அவருடைய கல்லறைக்கு நிழல் தரும் வேப்பமரத்து இலைகளில் படிந்திருக்கின்றன. அவ்விலைகளைத் தின்பவருடைய குரல் இனிமையுள்ளதாகும் என்ற நம்பிக்கை மக்களிடை நிலவிவருகிறது.

தம் தந்தையாரின் இசைச் சுவையார்வத்தை ஜஹாங்கீரும் மரபுரிமையாகப் பெற்றிருந்தார். ஜஹாங்கீர் பல நல்ல பாடகர்களைத் தம் அரசவையில் வைத்து ஆதரித்தார். இக் கலையில் துறைபோகிய ஆறு கலைஞர்களின் பெயர்களை 'இக்பால்நாமா-இ-ஜஹாங்கீரி' (Iqbal Nama-i-Jahangiri) குறிப்பிடுகிறது.[1] ஆக்ராவின் வருணனையில் வில்லியம் ஃபின்ச் (William Finch), அக்பரைப் போன்றே ஜஹாங்கீரும் ஒவ்வோர் இசைக் குழுவுக்கும் ஒவ்வொரு நாள் என்ற முறையைத் தம் ஆட்சிக் காலத்தில் கையாண்டார் எனக் கூறுகிறார். மேலும் அவர் கூறுவதாவது: 'பாடும், நடனமாடும் ஆயிரக்கணக்கான பெண்கள் ஏழு நாள்களுக்கொரு தரம் வரும் தங்கள் முறைப்படி அங்கு இரவும் பகலும் வருகிறார்கள். அரசரோ அல்லது அவரது மகளிரோ அழைக்கும்பொழுது மஹாலில் ஆடவோ பாடவோ இவர்கள் தயாராக இருக்க வேண்டும். அரசர் அவர்களுடைய திறமைக்குத் தக்கவாறு பணவுதவித் தொகையை அளித்தார்.'[2] ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தில் அதிக அவசரமான ஆட்சிமுறைப் பணிகள் முடிவடைந்த பிறகு திவானி காசில் (Diwan-i kass) இசைக்கலை நிகழ்ச்சிகள் நடந்தன என்பதைப்பற்றி முன் ஓர் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. வாய்ப்பாட்டு, கருவி இசை ஆகியவை இக் கேளிக்கைகளின் முக்கியக் கூறுகளாக இருந்திருக்கின்றன. இவற்றின் தரம் மிகச் சிறந்து இருந்திருக்கின்றது. எப்படியெனில், இக் காலத்தில் இந்தியாவில் சில காலம் தங்கிய தேவர்நியர் (Tavernier) என்ற பயணக்காரர், 'இம்மாதிரியான பேரரச வரவேற்பு விழாக்களில் இசைக்கப்படுகின்ற இசை இனிமையும் சுவையும் உள்ளதாக இருக்கின்றது; மிக முக்கியமான விஷயங்களில் மிக ஆழ்ந்திருக்கின்ற அரசவை உறுப்பினர்களின் சிந்தனையைக் கலைக்காத அளவு இசை நிகழ்ச்சிகள் மெல்லிய ஒலி உடையதாகவே இருக்கும்' என்று கூறுகிறார். இந் நிகழ்ச்சிகளில் சில சமயங்களில் பேரரசரும் கூடக் கலந்துகொள்வார். இதற்குக் காரணம், அரசவைச் செய்தி எழுத்தாளரின் கூற்றுப்படி, பேரரசர் ஒரு சிறந்த பாடகர். மாலை நேரங்களில் நடைபெறுகின்ற சபைகளில் கலந்துகொண்ட உலகப்

1 N. N. Law, 'Promotion of Learning, &c.' P. 178.
2 W. Foster, 'Early Travels,' P. 183.

பற்றைத் துறந்த தூய்மையுள்ளம் கொண்ட சூஃபிகளில் (Sufis) பலரும் தெய்வபக்தி உள்ளவர்களும் தங்கள் உணர்வை இழந்து மகிழ்ச்சிப் பெருவெள்ளத்தில் இருக்குமாறு செய்யுமள வுக்கு அரசருடைய குரலினிமை ஈர்க்கும் தன்மை பெற்றிருந்தது!'[1] இது கீழைநாட்டுக்கேயுரிய உயர்வு நவிற்சி என்றாலும், ஷாஜ ஹான் இனிமையான குரலைப் பெற்றிருந்தார் என்றும், அவர்தம் பாட்டனாரைப் போன்றே மிக்க கவனத்தோடு இசைக்கலையைப் பயின்றிருந்தார் என்றும் கொள்ளலாம். தம் முன்னோர்களைப் போன்று இவர் பாடகர்களை ஆதரித்தார். அவருடைய அரசவை யில் இருந்த இரண்டு தலைமைப் பாடகர்கள் இராமதாசும் மகாபட் டரும் ஆவர். ஒரு சமயம் ஜகந்நாத் என்ற பாடகரின் கலைநிகழ்ச்சி யில் பேரரசர் மிக மகிழ்ந்து கலைஞர்கள் எடையளவு தங்கத்தைப் பரிசாக அளித்தார்.[2]

அவுரங்கசீப் பட்டத்திற்கு வந்ததிலிருந்து இசைக்கலைக்குக் கேடு சூழ்ந்துவிட்டது. முந்திய முகலாயப் பேரரசர்களால் இசை சிறந்த ஆதரவைப் பெற்றிருந்ததோடு, எல்லாப் பிரிவு மக்களும் இசையை எப்போதுமே விரும்பினார்கள். இதை மதிப்பிற்குரிய எட்வர்டு டெர்ரி (Rev. Edward Terry) இந்தியாவில் தங்கிய மிகக் குறுகிய காலத்திலேயே கவனித்திருக்கிறார்.[3] இசைக்குத் தடை விதித்துப் பேரரசர் ஆணை பிறப்பித்ததைக் கண்டும், உண்மையில் இசையையே தொழிலாகக்கொண்ட கலைஞர்களின் எண்ணிக்கை யைக் குறைக்க ஒரு தனித்துறையையே அவுரங்கசீப் ஏற்படுத்தினார் என்பதைக் கேட்டும் வியப்பும் அதிருப்தியும் கலந்த உணர்ச்சிகள் மக்களிடம் தோன்றின. இத் துறையின் அதிகாரிகள் தங்கள் பணி களைச் செவ்வனே செய்தார்கள். மனூக்கி (Manucci) கூறுவதுபோல், அவ்வதிகாரிகள் இசைப்பாட்டு ஒலிகள் கேட்கும் வீடு அல்லது இடத்திற்குச் சென்று, கலைஞர்களின் கருவிகளை உடைத்து, பாட கர்களுக்கும் கேட்பவர்களுக்கும் துன்பமான நிலையை ஏற்படுத்தி னார்கள். இதனால் பாடுவதைத் தொழிலாகக் கொண்டவர்கள் தங்கள் வாழ்க்கைக்குரிய வருவாயை இழக்கும் ஆபத்தான நிலையில் இருந்தார்கள். இதனால் இக் கலைஞர்கள் பேரரசரிடம் சென்று தம் கட்டளையை நீக்குமாறு கேட்டுக்கொள்ளத் தீர்மானித்தார்கள். 'அவுரங்கசீப் பள்ளிவாசலுக்குப் போகின்ற ஒரு வெள்ளிக் கிழமை யில் சுமார் ஓராயிரம் கலைஞர்கள் கூடினார்கள்' என்று மனூக்கி (Manucci) எழுதுகிறார். சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட இருபதிற்கு மேற்பட்ட பாடைகளுடன் அவர்கள், இறந்துபோன பெரிய மனித

[1] J. N. Sarkar, 'Studies in Mughal India,' pp. 12, 13.
[2] W. Crooke, 'Things Indian,' p. 330 f.
[3] W. Foster, 'Early Travels,' p. 310.

ருடைய உடலுடன் கல்லறைவரை வருவதுபோன்று, துன்ப மிகுதி யால் உரக்க அழுதுகொண்டு வெளியே வந்தார்கள். தூரத்தி லேயே அவுரங்கசீப் இந்தக் கும்பலையும், அவர்களுடைய அழுகை யையும், சோகக்குரலையும் கேட்டு வியப்பு அடைந்தவராய், இவ் வளவு துன்பத்துக்குக் காரணம் அறிந்துவர ஆள் அனுப்பினர். அப்பொழுது தங்கள்மேல் பேரரசர் இரக்கம் கொள்வார் என்று நினைத்து அவ் இசைக்கலைஞர்கள் தங்கள் அழுகையையும் கண்ணீ ரையும் மிகுதிப்படுத்தினர்கள். புலம்பிக்கொண்டே விம்மலுடன் அக்கலைஞர்கள், அரசருடைய ஆணைகள் இசைக்கலையைக் கொன்று விட்டன என்று அவ்வாள்களிடம் பதிலளித்தார்கள். அதன் காரணமாக இறந்த இசையைக் கல்லறைக்கு எடுத்துச் செல்லு கிறேம் என்றும் கூறினர்கள். இச் செய்தி அரசருக்குச் சொல்லப் பட்டது. மிகுந்த அமைதியோடு பேரரசர், அவ் இசையின் ஆன்மா சாந்தியடைய அவர்கள் பிரார்த்தனை செய்ய வேண்டுமென்றும், இசை, குழியில் நன்ருகப் புதைக்கப்படுவதில் அவர்கள் மிகுந்த கவனம் செலுத்த வேண்டுமென்றும் கூறினர்.[1] பேரரசரின் பதில் ஒருவிதக் கடுகடுப்பான நகைச்சுவையை வெளிப்படுத்துகிறது. ஆனல், அவருடைய வைதிகப் பற்றுத் தம் முந்திய கட்டளைகளில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்த அனுமதிக்கவில்லை.

ஆயினும், இசைக்குத் தடையுத்தரவு இட்டிருந்தாலும், தம் மாளிகையில் நடன, பாடல் பெண்களை தம் மகளிரின் பொழுது போக்கு மகிழ்ச்சிக்காக ஔரங்கசீப் தொடர்ந்து அனுமதித்தார் என்று மனூக்கி கூறுகிறர். ஆனல், அவர்களுடைய பெண்மேற் பார்வையாளர்களுக்குச் சிறப்புப் பெயர்கள் அளிக்க விருப்பமில் லாத அளவுக்கு அவர் இருந்தார். 'பேரரசர் இசையை முழுமை யாக உணர்ந்திருந்தார். தம் ஆட்சிக் காலத்தின் தொடக்கத்தில் அதில் தலையிட எந்த முயற்சியும் அவர் எடுத்துக்கொள்ளவில்லை' என்று பக்தாவர்கான் (Bakhtawar Khan) கூறுகிறர். பெரிய முகம் மதிய இமானுன ஷாஃபியின் (Iman Shafi) போதனையால் அவர் பின்னர் இசைக்கு ஆட்சேபம் தெரிவித்தார். இக் கொள்கையை அனுசரித்து, தங்களுடைய தொழிலில் வெட்கப்படுகிறேமென்றும், அதை விட்டுவிடுகிறேமென்றும் சொல்கின்ற இசைக்கலைஞர்க ளுக்கு ரொக்கப் பணமோ நிலமோ கொடுப்பதற்குக்கூட அவு ரங்கசீப் தயாராயிருந்தார்.[2]

நகைத்தொழில் : எல்லாக் காலங்களிலும் முகலாயப் பேரரசர் களின் தனிச்சிறப்பியல்பாய் இருந்த நகைகள், விலையுயர்ந்த கற்கள்

1 Manucci, 'Storia do Mogor,' ed. Irvine, ii. p. 346 f.

2 Elliot, vii. 156P. Kennedy, 'History' of the Great Moghuls, ii, pp. 76, 79.

ஆகியவைகளின்மேல் இருந்த பற்று மணி இழைக்கும் கலையிலும் நகைத்தொழிற் கலையிலும் மிகுந்த நன்மையை ஏற்படுத்தியது. இராஜா விக்கிரமஜித்தின் குடும்பத்தினரிடமிருந்து புகழ் மிக்க கோஹினூர் வைரத்தை முதன்முதல் பெற்றவர் ஹுமாயூன் ஆவார். ஹுமாயூன் நாடுகடத்தப்பட்டிருந்த சமயத்தில் அது பாரசீகத்தில் ஷா தாமாஸ்ப்பிடம் (Shah Tahmasp) இருந்தது. அதன் பின்னர் இறுதியாக மீர் ஜும்லாவின் (Mir Jumla) பரிசாக அவுரங்கசீபின் கருவூலத்திற்கு வந்தது. அக்பர் தாம் இறக்கும்பொழுது 'இக் காலத்தில் குறைந்த பட்சம் இருபது கோடி பவுண்டுக்கு வாங்கும் சக்தியுள்ள நான்கு கோடி பவுண்டு நாணயப் பணத்தையும்[1], தாம் மிக உயர்வாக மதித்த மிகுதியான நகைகளையும் விட்டுச் சென்றார். நகைகளுள் விலையுயர்ந்த சிவப்புக் கற்களை மிகுதியாகக்கொண்ட தொழுகை மணிமாலைகள் இரண்டு இருந்தன. இவைகள் ஒவ்வொன்றும் பத்து இலட்சம் ரூபாய் மதிப்பிடப்படுகின்றது. வில்லியம் ஹாக்கின்ஸ் (William Hawkins -1608-13) என்பவரால் தயாரிக்கப்பட்டிருக்கின்ற ஜஹாங்கீரின் சொந்த உடைமைப் பொருள்களின் பட்டியலில் இருக்கிற அநேக சிறந்த மணிகளும், புகழ்பெற்ற மயிலாசனத்தை அழகுபடுத்துவதில் பயன்படுத்தப்பட்ட மணிகளும் முதலில் அக்பரால் திரட்டப் பட்டவை. ஜஹாங்கீரின் வேறு பல நகைகளாவன: பதிக்கப் படாத ஒன்றரை மணங்கு வைரக்கற்கள், பன்னிரண்டு மணங்கு முத்துகள், இரண்டு மணங்கு சிவப்புக் கல், ஐந்து மணங்கு மரகதம், ஒரு மணங்கு பச்சைக் கல், கல்லிழைத்த வாட்பிடிகள், குத்துவாள்கள், முரசுகள், உடையூசிகள், கனித்துய் போன்ற அணிகலன்கள், சேணங்கள், ஈட்டிகள், அரசின் நாற்காலிகள், குவளைகள், மதுக்கிண்ணங்கள், தாயத்துகள், மோதிரங்கள்.[2] ஷாஜஹானிடத்து நகையாசை நகை வெறியாக மாறிற்று. அவருடைய சொந்த நகைகள் ஐந்து கோடி ரூபாய் மதிப்புடையன. அதனோடு, இளவரசர்களுக்கும் மற்றவர்களுக்கும் இரண்டு கோடி ரூபாய் மதிப்புள்ள நகைகள் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டிருந்தன. அவர் சாதாரணமாக அணிந்திருந்த நகை 2 கோடி ரூபாய் மதிப்புள்ளது. இவைகள் அந்தப்புரத்தில் பெண்பணியாளர்களின் பாதுகாப்பில் ஒப்படைக்கப்பட்டிருந்தன; மற்ற மூன்று கோடி ரூபாய் மதிப்புள்ள நகைகள் வெளியறைகளில் அடிமைகளின் பாதுகாப்பில் இருந்தன. தம்முடைய தலைப்பாகையில் அவர் அணிந்திருந்த பெரிய கெம்புக் கற்கள் பதித்த கனித்துய்

[1] Smith, 'Akbar,' p. 347.
[2] Foster, 'Early Travels, &c.,' pp. 102-10.

போன்ற அணிகலன் மட்டும் பன்னிரண்டு இலட்சம் ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.[1]

நகைத்தொழிற் கலை முகலாயர்களின் பகட்டுப் பற்றின் இணைப்புக்குச் சிறந்த சான்றாக ஷாஜஹானின் புகழ்மிக்க மயிலாசனத்தைக் கூறலாம். மயிலாசனம் அக்காலத்திலிருந்த ஃபிரெஞ்சு நகைத்தொழிலாளர் ஒருவரால் பதினைந்து கோடி ஃபிராங்கு மதிப்புடையது என்று குறிக்கப்பட்டிருக்கின்றது. அதில் அடங்கியிருக்கிற பொருள்கள் மட்டும் அதன் பொருட்டு அமர்த்தப்பட்ட தொழிலாளிகளுக்குக் கொடுக்கப்பட்ட கூலி நீங்கலாக, ஒரு கோடி ரூபாய் மதிப்புப் பெறுகிறது. இந்த ஆசனம் சுத்தத் தங்கத்தினால் செய்யப்பட்டிருக்கிறது. இதில் மணிகள் பதிக்கப்பட்டிருக்கின்றன. இம் மணிகள் பதினாறு இலட்சம் ரூபாய் மதிப்புப் பெறும். உட்புறக் கூரைக்கு மூலாம் பூசப்பட்டிருக்கிறது. வெளிப்பக்கம் சிவப்புக் கல்லாலும் மற்ற நகைகளாலும் பதிக்கப்பட்டிருக்கின்றன. பன்னிரண்டு மரகதத் தூண்கள் கூரையைத் தாங்கி நிற்கின்றன. அக் கூரையில் விலையுயர்ந்த கற்களால் ஒளியுடன் திகழும் இரண்டு மயில்களின் உருவங்கள் ஏறி நிற்கின்றன. மயில்களுக்கு இடையில் ஒரு மரம்; அம் மரத்தில் வைரக்கற்கள், சிவப்புக் கற்கள், மரகதக் கற்கள், முத்துகள் ஆகியவை பதிக்கப்பட்டிருக்கின்றன. பேரரசருடைய இருக்கைக்கு ஏறிச் செல்லக் கல்லிழைத்த படிகள் மூன்று இருக்கின்றன. அவ்விருக்கை கல்லிழைத்த பதினொரு பொட்டிப்புகளால் சூழப்பட்டிருக்கின்றது. இவற்றின் நடுவில் உள்ள பொட்டிப்பில், ஜஹாங்கீருக்கு முதலாம் ஷா அப்பாஸ் (Shah Abbas I) அன்பளிப்பாகக் கொடுத்த பகட்டு மிக்க சிவப்புக் கல் அதனுடைய மைய மணிக்கல்லாக விளங்குகிறது.[2] இத்தகைய பிறங்கொளிப் பகட்டுகளுக்கிடையில், பேரரசர் விலைமதிப்பற்ற மணிகள் இழைத்த வெண்ணிற ஆடையணிந்து பழைய முகலாயச் சிற்றோவியப் படங்களில், 'மூன் நெற்றிக் கச்சை கற்பனை ஒளி வட்டத்துடனும், மூக்குக்கு அருகில் ஒரு மலரைப் பிடித்துக் கொண்டும்' இருப்பது போல் தோன்றினார். ஷாஜஹான் மகனின் கண்டிப்பான வைதிகம் அவருடைய ஆட்சியின் தொடக்க ஆண்டுகளிலேனும் நாகரிகமற்ற வெளிப்பகட்டுகளுக்கும் மரபுவழி வந்த விருப்பத்துக்கும் தடை செய்யவில்லை என்பதை அறிய பெர்னியர் (Bernier) 1630-ல் அவுரங்கசீபின் தர்பாரை வருணித்திருப்பதைப் படிக்கவேண்டும். 'பெரிய மண்டபத்தின் ஒரு கோடியில் கண்ணைப் பறிக்கும் அழகு வாய்ந்த உடையில் அரசர் அரியணையில் வீற்றிருந்தார். அவருடைய சட்டை வெண்ணிறமுடைய ஒரு

[1] J. N. Sarkar, 'Studies in Mughal India,' pp. 17, 18.
[2] Ibid., pp. 18, 19.

விதப் பகட்டுத் துணி; அதில் அழகுறப் பூப்போடப்பட்டுத் தங்கத் தாலும் பட்டினாலும் இழைநயத்தோடு அணிசெய்யப்பட்டிருந்தது. தங்கத் துணியாலான தலைப்பாகை கனித்துய் போன்ற ஓர் அணிகலனைக் கொண்டிருந்தது. அதன் அடிப்பகுதி மிகப் பெரிய அளவும் மதிப்பும் உள்ள வைரக்கற்களால் இழைக்கப்பட்டிருந்தது. சூரியனைப் போன்று ஒளி உமிழ்ந்துகொண்டிருந்த ஒப்புயர்வற்றதாகக் கூறப்படுகிற கீழ்த்திசைப் புட்பராகமும் அதனுடன் இருந்தது. பிற சமயத்தைச் சேர்ந்தவர்கள் அணிகின்ற மணிமாலை போன்று அவருடைய கண்டசரம் மிகப்பெரிய முத்துகளைக்கொண்டு வயிறுவரை தொங்கிக்கொண்டிருந்தது.'

'அரியணை திரண்ட ஆறு கால்களால் தாங்கப்பட்டிருந்தது. அக் கால் முழுவதும் கெட்டித் தங்கத்தால் ஆனது என்று சொல்லப்படுகிறது. அதன்மேல் கெம்புக் கற்கள், மரகதக் கற்கள், வைரக் கற்கள் தூவலாக இழைக்கப்பட்டிருந்தன' என்று பெர்னியர் எழுதுகிறார்.[1] ஜஹாங்கீரின் அவையைப் போன்ற பகட்டான காட்சி ஒன்றை மனத்தில் வைத்துக்கொண்டுதான் மில்டன் கீழ்க் காணுமாறு வருணித்திருப்பார்:

'மாண்புறு அரசின் அரியணையதுவே; இந்து ஆர்மசின் வளத்தினும் மின்னிடும் கீழ்த்திசை மன்னரவர்மேல் செல்வக்கை சொரி நன்முத்தொடு பொன்னினும் நனி சிறந்ததுவே'.

அழகான பாத்திரங்களையும், பச்சைக் கல்லாலான குவளைகளையும் ஜஹாங்கீரும் ஷாஜஹானும் தொகுத்துவைத்திருந்தார்கள். அவுரங்கசீப் அரியணையில் அமர்ந்தால், 'அவருக்குமுன் வைரக் கற்கள், கெம்புக் கற்கள், மரகதக் கற்கள் பதிக்கப்பட்ட ஒரு தங்கத் தட்டும், அதன்மேல் தட்டைப்போன்றே அழகுபடுத்தப் பட்ட வட்டவடிவங் கொண்டதும் மழமழப்பான பளிங்காலானதுமான ஒரு பெரிய குவளையும் கொண்டுவந்து வைக்கப்படும். இவ்வாறு அவுரங்கசீப் கட்டளையிட்டிருந்தார்.[2] டில்லி அரண்மனையில் 1857 ஆம் ஆண்டில் காணப்பட்ட நேர்த்தியான பளிங்குக் குவளைகள் மாபெரு முகலாயர்களின் காலமான பழங்காலத்தைச் சேர்ந்தவையாக இருக்கலாம். நகைகளிடத்தும் கல்லிழைக்கப் பட்ட பொருள்களிடத்தும் இருந்த ஆசைவெறி பேரரச அரண்மனையோடுமட்டும் நின்றுவிடவில்லை; அவ்வாசை செல்வப் பிரபுக்களிடமும் மிகுந்திருந்தது. அவர்கள் ஏராளமாக நகைகள்

[1] See L. Binyon, 'Court Painters of the Grand Moghuls,' Introduction by T.W.Arnold, p. 33.

[2] Bernier, quoted by Crooke, 'Things Indian,' p. 75.

அணிந்திருந்தார்கள். அவர்கள் அபூர்வமான மணிகள்மாட்டு மிகுந்த நாட்டம் கொண்டிருந்தார்கள். எல்லாவகையான விலை யுயர்ந்த கற்களையும் மிகுதியான விலை கொடுத்து வாங்கினார்கள். இவ்வாறு மிகுதியாகத் தொகுக்கப்பட்ட இந்தச் செல்வம், நகைகள், தங்கம், வெள்ளித் தட்டு, ரொக்கப் பணம் ஆகியவைகளின் உருவில் 1739ஆம் ஆண்டில் நாதிர் ஷா (Nadir Shah) டில்லியைக் கைப்பற்றியபோது அவனுடைய கையில் சிக்கிற்று. அவன் கொள்ளையடித்த பொருள்களின் மதிப்பீடுகள் பலவிதமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மொத்தம் 70 கோடி என்றும், அதில் 25 கோடி நகைகளும், மொத்தத்தில் ஒன்பது கோடிக்கு மயிலாசனமும் வேறு பல சிம்மாசனங்களும், நகைகளாலான போர்க்கருவிகளும் கலங்களும் இருந்தன என்று ஃபிரேஸர் (Frazer) குறிப்பிடுகிறார். ஆனால், இம் மதிப்பீடு அநேகமாக மிகை யானதாக இருக்கலாம். இந்திய வஸிருடன் (Wazir) நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த ஆனந்தராமின் மதிப்பீடு மேலும் நம்பத் தகுந்ததாக இருக்கும். வெற்றியாளன் (நாதிர் ஷா) 60 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வெள்ளி நாணயங்களையும், அநேக ஆயிரக்கணக் கான தங்க நாணயங்களையும், சுமார் ஒரு கோடி மதிப்புள்ள தங்கச் சாமான்களையும், உலகத்தில் இணையற்றவையாயிருந்த சுமார் ஐம்பது கோடி மதிப்புள்ள நகைகளையும் எடுத்துச்சென்றான் என்று ஆனந்தராம் கூறுகிறார்.[1]

பூந்தோட்டங்கள் (Gardens)

பூந்தோட்டங்களைத் திட்டமிட்டு அமைக்கும் கலையைப்பற்றிச் சிறிது சொல்லி இந்த அத்தியாயத்தை முடிப்பது பொருத்தமான தாகும். இத் துறையில் இந்தியக் கலைக்கு முகலாயர்களின் பங்குதவி மிகுதியானதாகும் என்று திரு. ஹேவல் (Mr. Havell) கூறுகிறார். பாரசீகத்தின் வழியாகப் பூந்தோட்டப் பற்று முற்காலத் தில் மத்திய ஆசிய மக்களுக்கு எட்டிற்று. வன்பாலை (steppe) இன மக்கள் இறுதியில் இந்துஸ்தானத்தை நோக்கி வந்தபொழுது, தங்களுடன் பூந்தோட்டப் பற்றையும் கொண்டுவந்தார்கள். முகலாயர்களின் வருகைக்கு முன்பேயே பூந்தோட்டங்கள் இந்தியாவில் இருந்தன என்பது உறுதி. வாஸ்தவமாகவே 14ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஃபிரோஸ் ஷா (Firoz Shah) 1,200 பூந்தோட்டங்களை டில்லிக்கு அருகில் அமைத்தார்.[2] ஆனால், இவைகள் பண்டைய இந்து பாணியில் அமைந்தவை. இவைகள் தைமூர் இனத்துப் பெயரோடு சிறப்பாய் அமைந்த, நீர் பாய்ச்சப் பட்ட இன்பக் களங்களுடன் (pleasaunces) ஒருசிறிதும் ஒத்திருக்க

[1] W. Irvine, 'Later Mughals,' ed. J. N. Sarkar, vol. ii, p. 371.
[2] W. Crooke, 'Things Indian,' p. 242.

வில்லை. தம் தாய்நாடான ஃபர்காருவையும், அதனுடைய அழகான பூந்தோட்டங்களுள்ள உஷ்ஷின் (Ush) பருவத்தில் சிறந்து வய லெட் மலர்களின் சிறப்பையும், தூலிப்களையும் (Tulips) விளங்கு கின்ற ரோஜா மலர்களையும் நினைத்துக்கொண்ட பாபர், இந்துஸ் தானத்தில் அழகான பூந்தோட்டங்கள் இல்லாமை குறித்துத் தம் 'வாழ்க்கைக் குறிப்பில்' வருத்தம் தெரிவிக்கிறார். 'பாபர் வருவதற்கு முன்னர் இந்தியப் பூந்தோட்டங்கள் எந்த முறை யிலும் திட்டமிடப்படவில்லை; விதான மண்டபங்களைப் பெற் றிருக்கவில்லை; ஒலிக்கும் நீர்ச்சுனைகளைப் பெற்றிருக்கவில்லை' என்று அபுல் ஃபாசல் 'அய்னி அக்பரி'யின் ஒரு பகுதியில் குறிப் பிடுகிறார். பாபரால் இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்டு பின்வரு வோர்களுக்கு விட்டுச்செல்லப்பட்ட பூந்தோட்ட அமைப்புக் கலை பாரசீகத்திலும் துருக்கிஸ்தானத்திலும் பூரணமாக வளர்ந்திருந்தது. இதனுடைய சிறப்புக் கூறுகளாவன: வாய்க்கால்கள், நீர்த்தொட்டி கள் அல்லது குளங்கள், சிற்றருவிகள், செயற்கை நீர்ப்பாசனமாகும். ஒவ்வொரு பக்கமும் வழிமட்டம்வரைக்கும் நீர் நிரம்பி வழியுமாறு திட்டமிட்டுக் கட்டப்பட்டிருந்தது. இத் திட்டத்தின்படி சாய்வான தரையில் வரிசையான பல மேல்தளங்கள் (terraces) இருந்தன. குரானில் சொல்லப்பட்ட சொர்க்கங்களின் எட்டுப் பகுதிகளுக்குப் பொருந்துமாறு வழக்கமாக எட்டு மேல்தளங்கள் இருக்கும். ஆனால், சில சமயங்களில் ஏழு கோள்களைக் குறிக்குமாறு ஏழு மேல்தளங்கள் இருக்கும்.[1] பூந்தோட்டத்தின் முகடாக (climax) வருணிக்கப்படு கின்ற முக்கிய விதான மண்டபம் வழக்கமாக உச்சியில் உள்ள மேல் தளத்தில் இருக்கும். இங்கிருந்து நோக்கின், தோட்டத்தின் எல்லாப் பக்கங்களும் எல்லாக் காட்சிகளும் நன்கு தெரியும். ஆனால், சில சமயங்களில் இம் மண்டபம் எல்லாவற்றிற்கும் கீழே உள்ள தளத்தில் கட்டப்பட்டிருக்கும். பூந்தோட்டங்களின் வழியாக வரிசையாக மேலே நோக்கி அமைந்த நீர்ச்சுனைகள், அருவிகள் ஆகியவை களின் காட்சிகளை இக் கூடாரத்தில் தங்கியிருக்கிறவர்கள் தடை யின்றிக் காணும்பொருட்டு இவ்வாறு கட்டப்பட்டிருக்கும். பாரசீக முகலாயத் தோட்டங்களின் அடித்தளத் திட்டம் சதுரமாகவோ, நீண்ட சதுரமாகவோ இருக்கும். இவைகளைச் சுற்றி முழுவதும் வாள் போல் பற்கள் அமைந்த ஞாயில்களைக் (battlements) கொண்ட உயர்ந்த சுவர்கள் இருந்தன. இடையிடையே பெரிய நுழைவாயில் களும் அமைந்திருந்தன. பெரும் பூந்தோட்டங்கள் வழக்கமாக நான்கு நுழைவாயில்களைக் கொண்டிருந்தன. சிறிய எண்கோணக் கட்டடங்களின் வெளிச்சுவர்களும் எண்கோண வடிவில் அமைந் திருந்தன.[2]

[1] C. M. Villiers Stuart, 'Gardens of the Great Mughals,' pp. 11ff.
[2] Ibid., pp. 13 ff.

முகலாயப் பூந்தோட்டங்களில் அமைந்த நடைபாதைகள் பொதுவாகப் பூப்படுக்கைகளுக்கு (flower beds) மேலாக உயர்த்தப்பட்டு அமைக்கப்பட்டிருந்தன. இப் பூப்படுக்கைகள் அப் பாதைகளுக்கு எல்லைகளாக அமைந்தன. முக்கியச் சதுரங்கள் அல்லது சமதளப் பகுதிகள் (paterrres) பாதைகள், அவற்றின் பூம்பாத்தி வரப்புகள் ஆகியவற்றின் மட்டத்திற்குக் கீழே அமைக்கப்பட்டிருந்தன. அதில் பழமரங்கள், ரோஜாப் புதர்கள், நீண்ட மலர்ச் செடிகள் வளர்க்கப்பட்டிருந்தன. பூந்தோட்டத்தின் தனித்த சதுரங்கள் சில சமயங்களில் துலிப் (tulip), ரோஜா, வயலெட் போன்ற மலர்ச் செடிகளுக்குத் தனித்தனியாக ஒதுக்கி விடப்பட்டிருந்தன. வேறு சமயங்களில் ஒரு தோட்டம் முழுவதும் சிறப்பான மலர் ஒன்றிற்கே தனியாக ஒதுக்கிவிடப்பட்டிருந்தது.[1] முகலாயர்கள் இந்தியாவில் நிலையாகத் தங்கிவிட்ட பின்னர், அவர்களின் பூந்தோட்டங்களின் தன்மையிலும் சில மாற்றங்கள் ஏற்பட்டன. சாய்வான தரை அநேகமாகத் தென்படாது. இந்தியாவின் வெப்பமானது உடலின் குளிர்ச்சிக்காக மிகுதியான நீரை வருவிப்பதற்கு இன்றியமையாத காரணமாக ஆயிற்று.

இதன் விளைவாக அக்பரின் ஆட்சிக் கால இறுதியில் பூந்தோட்டத்தின் முக்கிய நீர்வழி இருபது அடி அல்லது அதற்கு மேற்பட்ட அகலத்தில் விசாலப்படுத்தப்பட்டது. இதைக் காஷ்மீரத்தில் ஜஹாங்கீரால் அமைக்கப்பட்ட சாலமார் பாக்கில் (Shalamar Bagh) காணலாம். சிறிது காலத்திற்குப் பிறகு சிறு கால்வாய்கள் படிக்கற்கள் வைக்கப்படுகின்ற அளவுக்கு அகலப்படுத்தப்பட்டன. படிக்கற்கள் தோட்ட அமைப்பின் முக்கியக் கூறுக விளங்கின. நீர்த்தேக்கங்களுக்கும் கால்வாய்களுக்கும் நீர் ஊற்றுகள் அமைக்கப்பட்டன.[2] முகலாயப் பூந்தோட்டங்கள் அரச பரம்பரையைச் சேர்ந்த இளவரசர்கள், பிரபுக்கள் ஆகியவர்களின் கல்லறைகளிலும் வீருர்ந்த கல்லறை மாடங்களிலும் அமைக்கப்பட்டிருந்தன. இதற்குச் சிறந்த சான்று சிக்கந்தராவிலுள்ள அக்பரின் கல்லறைப் பூந்தோட்டமாகும். இப் பூந்தோட்டத்தின் அடித்தளத் திட்டம் அண்டத்தின் சிலுவை (Cosmic cross) மாதிரி அமைந்த ஒரு பிரம்மாண்டமான சதுர வேலி ஆகும். இது பாபரால் தொடக்கத்தில் அமைக்கப்பட்ட நான்கு பக்கங்களைக்கொண்ட பூந்தோட்ட அடித்தளத் திட்டம்ஆகும். இத் தோட்டத்தின் நடுவில் கல்லறை மாடம் அமைந்திருக்கிறது. நீர்ச்சுனைகள் பக்கவாட்டில் அமைந்திருக்கின்றன. நீர் குறுகிய கால்வாய்கள் வழியாக ஓடிற்று. ஒரு காலத்தில்

[1] Ibid., pp. 12, 142.

[2] Ibid., pp. 101, 102.

இந் நீர் கல்வழிப் பாதைகளின் (stone pathways) நடுவில் வழிந்து சென்றது. லாகூரில் உள்ள சலமார் பாக்கில் உள்ளது போன்று, இந்த வாய்க்கால்களும் நீர்க்கால்களும் தட்டையான மண்ணோடுகளைக்கொண்டு அடித்தளம் அமைக்கப்பட்டிருந்தன. சிக்கந்திரா பாத் தோட்டத்து வாய்க்கால்களின் ஓரமாக அமைந்த—பூம்பாத்திகள் அமைந்த சமதளப் பகுதிகளில் (parterres) சைப்ரஸ் மரவகைகளும், காட்டு அன்னுசியும், இழைப்புளி மரங்களும் (plane-trees), கமுக மரங்களும் வளர்ந்திருந்தன. முகாலாயர் காலத்துப் பிரபுக்கள் அமைத்த பெரும்பாலான தோட்டங்களில் மத்திய பராதாரி (baradari), அவர்கள் இருக்கின்ற வரைக்கும் கோடைக்கால விடுதியாகவும், அவர்கள் இறந்தபின்னர் அவர்களின் கல்லறை மாடங்கள் அமைக்கப் பயன்படுபவையாகவும் இருந்தது. பின்னர் அப் பூந்தோட்டம் சமய காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு, அத் தோட்டத்தின் பழங்களும் மலர்களும் பாதுகாவலர்களுக்கோ, துறவிகளுக்கோ, வழிப்போக்கர்களுக்கோ கொடுக்கப்படும்.[1] தாஜ்மகாலின் தோட்டமும் இம்மாதிரியான நான்கு பாகங்களின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருந்தது. ஆனால், தாஜ்மகால் தோட்டம் மற்றக் கல்லறைத் தோட்டங்களிலிருந்து ஒருவிதத்தில் வேறுபடுகிறது. அதாவது, தாஜ்மகால் தோட்டத்தின் மத்திய பாகத்தில் கல்லறைக்குப் பதிலாகச் சலவைக் கல்லாலான குளம் அமைக்கப்பட்டிருக்கிறது. இது தாஜ்மகால் தோட்டத்தின் ஓரத்தில் அமைந்து நதியைப் பார்த்தவண்ணம் இருக்கிறது.[2]

ஆயினும், முகலாயத் தோட்டம் கல்லறைக்குப் பின்னணியாக அமையவேண்டும் என்ற நோக்கத்தில் எப்போதுமே அமைக்கப்பட்டதன்று. பேரரசத் தோட்டங்களில் (imperial gardens) பல, பேரரசவையினர் நாட்டுப் பகுதிகளில் சுற்றிவருகின்றபொழுது அவர்கள் தங்கும் இன்பக் களங்களாக இருக்கும் நோக்கத்துடனேயே திட்டமிட்டு அமைக்கப்பட்டன. எல்லா முகலாயப் பேரரசர்களும்—குறிப்பாக ஜஹாங்கீர்—தம் மத்திய ஆசிய முன்னோர்களிடமிருந்து சுற்றித்திரியும், முகாமிடும் விருப்பத்தை மரபுரிமையாகப் பெற்றிருந்தார்கள். அவுரங்கசீபும்கூடக் காஷ்மீரத்திற்கு அரசப் பயணம் (royal progress) செய்துள்ளார். அவுரங்கசீபின் முகாம் வாழ்க்கைகள் இராணுவ நெருக்கடிபற்றி அமைந்திருந்தனவே தவிர, அவருடைய முன்னோர்களின் காலத்தில் சிறப்புற்றிருந்த களிப்புப் பயணமாக (envied'errer) இல்லை. அவுரங்கசீபின் முகாம் வாழ்க்கை அவர் இறப்பதற்குமுன் பல ஆண்டுகள் நீடித்திருந்தது. 'ஜஹாங்கீர் ஓர் ஒப்புயர்வற்ற அரச

[1] Ibid., pp. 47-9.
[2] Ibid., pp. 63, 64.

இன்பச் செலவாளர்' [1] (royal stroller). அவருடைய இயற்கைக் காட்சிப் பற்றும், திறந்த வெளிகளில் சுற்றித்திரியும் ஆர்வமும் ஜஹாங்கீரையும் அவருடைய அரசியையும் காஷ்மீரத்திரத்திற்குப் பல முறை செல்லச் செய்தன. நிஷாத் (Nishat), சாலமார் (Shalamar), ஆச்சபால் (Achebal), வெர்னக் (Vernag) பூந் தோட்டங்கள், இன்பமான பள்ளத்தாக்கின்மேல் அவர் கொண் டிருந்த பற்றிற்குப் பேசாத சாட்சியங்களாய் அமைந்திருக் கின்றன. அந்த இன்பத் தோட்டங்கள் மெதுவாக உயர்ந்து செல்கின்ற குன்றின்மேல் மேடைகளாக உயர்ந்திருக்கின்றன. அங்குத் தோன்றுகின்ற அருவிகள் நீரைத் தொடர்ந்து மிகுதியாகத் தோட்டங்களின் மேல் பொழிந்துகொண்டு இருந்தன. அது இஸ்லாமின் இதயத்தின் ஆழ்ந்த சிந்தனை யில் மூழ்கியிருக்கிற புலன் நுகர் ஆற்றல், நாட்டுப்புறக் கூறு களை வெளிப்படுத்துகின்றன. முகலாயப் பேரரசின் மற்றொரு கோடியில், பிறைநிலாவின் மேற்கு முனைக்குக் கீழே, ஆலம்ப்ரா (Alhambra) என்ற மற்றொரு தோட்டம் 'உலகத்தில் உள்ள மிகுந்த கவர்ச்சியுள்ள பகுதிகளில் ஒன்று' என்ற புகழைப் பெற்றிருக் கின்றது. இவ்விரண்டும் கடவுள் நம்பிக்கையுடையவர் (Believer) தங்குமிடங்கள், அரண்மனைகள் அல்லது கல்லறைகள்; இன்பத்தின் விளைநிலங்கள் அல்லது மனிதனின் இறுதிக்கு முடிவுகட்டுகிற விதியும் கடவுளின் கீர்த்தியும் இணைந்த இடங்கள் ஆகும்.[2] 17ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த ஐரோப்பியப் பயணி கள் இப் பேரரசப் பூங்காக்களின் வசிய ஆற்றலை மிக விரைவில் உணர்ந்துகொண்டார்கள். 'நாள்தோறும் இயற்கையால் வளர்க் கப்பட்டு, மறைந்துபோகாது இருக்கிற அழகான மலர்களும் பயனுள்ள மரங்களும் நிரம்பிய வியத்தகு பூந்தோட்டங்கள். குளிக்க இன்பமான நீர்ச்சுனைகள், நீரில் ஊர்ந்து செல்ல மகிழ்ச்சி யான வசதிகள், வெயிற்கால வேளைகளில் ஒருவரை உறங்கவைக் கும் நீரின் அமைதியான முரல் ஒலி இவைகளைப் பெற்ற பூந்தோட் டங்கள்' என்று எட்வர்டு டெர்ரி (Edward Terry) எழுதுகிறார்.[3] காஷ்மீரத்துச் சாலமார் பூந்தோட்டங்களின் கோடைக்காலத்து அழகைப்பற்றி 1665-ல் பெர்னியர் சிறப்பாகப் புகழ்கிறார். விதான மண்டபங்களையும் பெரிதும் வியந்து பாராட்டுகிறார். அம் மண்டபங் களினுடைய கறுப்புச் சலவைக் கற்றூண்கள்மட்டுமே இப்பொழுது இருக்கின்றன. இருப்பினும், இப்பொழுதுங்கூட, சாலமார் பாக்கின் புகழ் மங்கியுள்ள அந்தி வேளையில், பனிபோல் தோன்றும் கருஞ்

1 'Kennedy, 'History of the Great Moghuls,' vol. ii, pp. 11 ff.
2 D'Humieres, 'Through Isle and Empire,' 213.
3 W. Foster, 'Early Travels in India,' p. 303.

சிவப்பு நிறப் பாறைகள், இழைப்புளி மரங்கள், புதர்கள், லிலேக் (lilac) மலர்கள்[1] ஆகியவற்றின் இலேசான பச்சைப் பின்னணியில் இருக்கின்ற இனிமையான தோட்டத்தில் இருந்துகொண்டு, அதைத் தோற்றுவித்த நூர்ஜஹான், பேரரசர் ஆகியவர்களின் புகழைப்பற்றிக் கனவு கண்டுகொண்டேயிருக்கலாம்.

பாபர் தம்முடைய புகழ்மிக்க வாழ்க்கைக் குறிப்பின் பல பகுதிகளில் இயற்கையில் தமக்கு இருந்த ஆர்வத்தையும் நுண்ணிய கவனத்தையும் விளக்குகிறார். மிருதுவான மலர்களால் தம்முடைய முரட்டுத்தன்மையும் மாறிற்று என்றும் குறிப்பிடுகிறார்.[2] பாஹிகிலான் (Bagh-i-Kilan), பாஹி வாஃபா (Bagh-i-Vafa) அல்லது 'நம்பிக்கைத் தோட்டம்' போன்ற தோட்டங்களைக் காபூலைச் சுற்றி அமைத்து, அப் பகுதிகளை வளமுள்ளதாக பாபர் ஆக்கினார். 'நம்பிக்கைத் தோட்டமும்' 'மூன்று நண்பர்களின் நீர்ச்சுனையும்' அவர் மிகுந்த விருப்பத்துடன் அடிக்கடி செல்லும் இரண்டு இடங்களாகும். அத் தோட்டம் ஓர் உயர்வான இடத்தில் அமைந்தும், நதியை நோக்கியும், வற்றாத ஆற்றிலிருந்து எப்பொழுதும் நீர் பெற்றும் இருந்தது என்றும் அத் தோட்டத்தை பாபர் வருணிக்கிறார். அத் தோட்டத்தின் தென்மேற்கு மூலையில் நீர்த் தேக்கத்தைச் சுற்றிக் கரும்பு, வாழை, ஆரஞ்சு மரங்கள் ஆகியவற்றை நட்டு வளர்த்தார். மூன்று நண்பர்களின் நீர்ச்சுனையின் அழகு கண்ணுக இலவங்கச் செடிகளின் கூட்டம் இருக்கிறது.[3] தம்முடைய தலைநகரை ஆக்ராவிற்கு மாற்றிய பிறகு, யமுனை நதிக் கரையில் ராம்பாக் (Ram Bagh) என்ற பூந்தோட்டத்தை அமைக்கத் தொடங்கினார். இந்தியாவில் இப்பொழுதும் இருக்கின்ற தொடக்க கால முகலாயப் பூந்தோட்டம் இதுவாகும். பேரரசி நூர்ஜஹான் இத் தோட்டத்தைத் தம்முடைய விருப்பமுள்ள நாட்டுப்புற இருப்பிடமாகப் பிற்காலத்தில் தேர்ந்தெடுத்திருந்தார். இப் பூந்தோட்டத்தில் அவர் நீர்த்தேக்கங்கள், குளிக்கும் அறைகள், தனியான விதான மண்டபங்கள் ஆகியவற்றை அமைத்து, ரோஜா மலர், நார்சிசி மலர் ஆகிய மலர்களின் பாத்திகளை ஜஹாங்கீர் ஏற்படுத்தினார். பாபருடைய தோட்டக் கலைப் பற்றும் அறிவும் பெரிதாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில், ஆக்ராத் தோட்டங்களுள் ஒன்றில் ஒரு சாலையில் அவர் நட்ட கமுகமரங்கள் அவருடைய கொள்ளுப் பேரன் காலத்தில் 90 அடி உயரம் வளர்ந்திருக்கின்றன. 'பூத்தூவுபவர்கள்' என்று அவர் பெயரிட்ட மற்றொரு தோட்டம், ஒவ்வோர் ஆண்டும் நூற்றுக்கணக்கான அன்னசிப் பழங்களைக்

[1] W. Crooke, 'Things Indian,' p. 24.
[2] S. Lane-poole, 'Babar' (Rulers of India Series), p. 94.
[3] C. M. Villiers Stuart, 'Gardens of the Great Mughals,' pp. 16 ff.

கொடுத்தது. குவாலியரிலிருந்து நாற்றுக் கொண்டுவந்து நடப்பட்ட ஆலியாண்டர்ஸ் (oleanders) என்ற நச்சு மூலிகை வகை ஒன்றின் சிவப்புப்பூச் செல்வங்கள் அவருடைய கண்களுக்கு விருந்தளித் தன என்று ஜஹாங்கீரின் வாழ்க்கைக் குறிப்புகளில் சொல்லப்பட் டிருக்கிறது. வேறோர் இடத்தில் 'எட்டு சொர்க்கங்களின் தோட்டம்' என்ற பூந்தோட்டத்தில் அவர் பயிரிட்ட கொடிமுந்திரிச் செடியி லிருந்து நேர்த்தியான திராட்சைகளைப் பெற்றதாக அவர் கூறுகிறார். பாபரின் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட வேறொரு முக்கியப் பூந்தோட்டம் ஜுஹாரா பாக் (Zuhara Bagh) என்பதாகும். இது சுவர் வேலியால் மூடப்பட்டும், அறுபது கிணறுகளிலிருந்து நீரைப் பெற்றும் ராம் பாக், சினிகாரௌஸா (Chini-Ka-Rauza) ஆகிய தோட்டங்களுக்கு நடுவில் அமைந்திருக்கின்றது. இத் தோட்டம் பேரரசின் பெண்களுள் ஒருத்திக்கு உரியது. ஆனால், பாபருடைய அரசவையைச் சேர்ந்த பலரும் பிரபுக்களும் அவருடைய செயலைக் கண்டு தூண்டப்பட்டு, ஆக்ராவின் நதிக்கரைகளின்மேல் அழகிய பூந்தோட்டங்களையும் நீர்த்தேக்கங்களையும் அமைத்தார்கள்.[1]

ஹுமாயூனின் மிகக் குறுகிய ஆட்சிக் காலத்திற்குரிய பூந் தோட்டம் டில்லியிலுள்ள அவருடைய கல்லறையைச் சுற்றியுள்ள பூந்தோட்டமாகும். இது இப்பொழுதும் தொடக்ககாலத் திட்டம் சிதைவுறாமல் முழுமையாய் இருக்கிறது. பழங்கள், நிழல் தருகின்ற மரங்கள் அழிந்துவிட்டன. ஆனால், கால்வாய்களும் நீர்ச்சுனை நிலையங்களும் பிற்காலத்தில் சீர்படுத்தப்பட்டன. இவைகள் இந்தத் தொடக்க கால முகலாய இன்பக் களத்தின் சிறப் பியல்பை நமக்கு உணர்த்துகின்றன. அக்பர் தம் பாட்டனாரின் தோட்டக் கலைப் பற்றை மரபுரிமையாகப் பெற்றிருந்தார். 'மேன்மை தங்கிய அரசர் செடிகொடிகளைப் படைப்புக் கடவுளின் மிகச் சிறந்த வெகுமதிகள் என்று நினைத்து அவற்றின்மேல் மிகுந்த கவனத்தைச் செலுத்துகிறார். ஆகவே, ஈரான், தூரான் ஆகிய நாடுகளின் தோட்டக் கலைஞர்கள் இங்கே தங்கிவிட்டார்கள். மரங்களைப் பயிரிட்டு வளர்ப்பது மிகுந்த உன்னத நிலையில் இருக் கின்றது' என்று அபுல் ஃபாசல் எழுதுகிறார். ஜஹாங்கீர், ஷாஜஹான் ஆகியவர்களைவிடப் பூந்தோட்டங்களில் குறைந்த பற்றே இவர்க்கு இருந்தது என்றாலும், இவர் சிக்கந்தராவிலும் ஃபதேபூர்-சிக்ரியிலும் 'சொர்க்கங்களைக்' கட்டியிருக்கிறார். காஷ்மீரின் முதலாவது முகலாயப் பூந்தோட்டமான நிசிம் பாக்கிற்கும் (Nisim Bagh) திட்டம் தீட்டினார். இத் தோட்டம் தாலின் (Dal) கரையில் அமைந் திருக்கிறது.

[1] Ibid., passim.

தாம் அரியணைக்கு வருமுன்னரே, ஜஹாங்கீர் உதயபுரியில் அநேக பூந்தோட்டங்களை அமைத்துத் தம்முடைய தோட்டக் கலைப் பற்றை வெளிப்படுத்தினார். பாரசீக மலர்க் கம்பளப் பாணிகளின் தோற்றத்தை இந்த உதயபுரிப் பூந்தோட்டங்களின் மலர்ப் படுக்கைகளில் காணலாம். உதயபுரிப் பூந்தோட்ட மலர்ப் படுக்கைகள் செங்கற்கள், நேர்த்தியாக மெருகிட்ட சாந்து ஆகியவைகளைக் கொண்டு கட்டப்பட்டன.[1] சாஹ்ரிண்ட் (Sahrind) என்னுமிடத்தில் கட்டப்பட்ட மற்றொரு பூந்தோட்டத்தைப்பற்றித் தமது வாழ்க்கைக் குறிப்புகளில் அவர் வருணிக்கிறார். இப் பூந்தோட்டத்தில் பாதைகளின் ஓரங்களில் ரோஜா மலர்ச் செடிகளும், ஒவ்வொரு பக்கத்திலும் எப்போதும் வாடாத செடிகளும், ஊசியிலை மரவகைகளும், சைப்ரஸ், இழைப்புளி மரங்களும் இருந்தன. அஹமதாபாத்தில் உள்ள அவரது பூந்தோட்டங்கள் ஒன்றில் ஆரஞ்சு, எலுமிச்சை, பீச்வகைப் பழம், மாதுளை, ஆப்பிள் மரங்களும், மலர்ப் புதர்களில் எல்லா வகை ரோஜாக்களும் இருந்தன. இவருடைய ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் கட்டப்பட்ட புகழ் பெற்ற இரு பூந்தோட்டங்களில் இரண்டு ஆக்ராவிலுள்ள இதிமத் உத்-தௌலாவின் (Itimad ud-daula) கல்லறைத் தோட்டமும், நூர்ஜஹானின் 'மகிழ்ச்சித் தோட்டம்' என்று புகழ் கொண்ட ஷா தாராவும் (Shah Dara) ஆகும். ஷா தாரா லாகூரிலிருந்து ஐந்து மைல் தொலைவில் இருந்தது. சிக்கந்தராவிலுள்ள பூந்தோட்டத்தின் திட்டத்தைப்போன்றே இத் தோட்டத்தின் அமைப்புத் திட்டமும் இருந்தது. இதில் உயர்ந்த மட்டத்திலிருந்த பல சுனைக் குளங்களும் (fountain - tanks) இருந்தன. இவைகள் கல்லறையைச் சுற்றி எட்டுப் பெரிய சாபுத்திராக்களாக (chabutras) அமைந்திருந்தன. தமக்கும் தம்முடைய பேரரசிக்கும் விருப்பமான காஷ்மீரத்திலுள்ள வெர்னாக் பாக்கில் (Vernag Bagh) புதைக்கப்பட வேண்டும் என்று ஜஹாங்கீர் தாம் இறக்கின்றபொழுது வேண்டிக்கொண்டிருந்தாலும், ஜஹாங்கீரின் உடல் ஷா தாராவில் தான் புதைக்கப்பட்டது. வெர்னாக் பாக்கின் நீர்த்தேக்கத்தின் சுவரில் ஜஹாங்கீரின் சொற்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவை யாவன: 'அரசர் இக் கட்டடத்தை வானளாவக் கட்டினார். கேப்ரேல் (Gabriel) என்ற தேவதை தன்னுடைய தேதி 1609ஐக் கொடுத்தது.'[2]

தாஜ்மஹால் தோட்டம் நீங்கலாக, லாகூரிலுள்ள சாலமார்ப் பூந்தோட்டமே, ஷாஜஹானால் கட்டப்பட்ட தோட்டங்களுள்

[1] Ibid., pp. 68, et passim.
[2] Ibid., pp. 68, et passim.

புகழ் மிக்கதாகும். இத் தோட்டம் அலி மர்தான் கானின் (Ali Mardan Khan) மேற்பார்வையில் 1634-ல் கட்டத் தொடங்கப் பட்டது. இதில் இரண்டு சார்பாக்குகள் (char-baghs) இருக்கின்றன. இவை ஒரு குறுகிய மேல்தளத்தால் இணைக்கப்பட்டிருக்கின்றன. இம் மேல்தளத்தின் இடையில் ஓர் உயர்ந்த நீர்த்தேக்கம் இருக்கின்றது. நீர்த்தேக்கத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் விதான மண்டபங்கள் இருக்கின்றன. இதைச் சுற்றிலும் மலர்ப் படுக்கைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. வேறொரு சாலமார் பாக் (Salamar Bagh) தில்லியில் அஜு ன்னிஸாவால் (Azu-n nissa) கட்டப் பட்டது. இவர் ஷாஜஹானின் மனைவியருள் ஒருவர். 1793-ல் ஓர் ஆங்கில அதிகாரி, வியத்தகு சுவையுணர்ச்சியுடன் இது திட்டமிட்டுக் கட்டப்பட்டது என்று கூறினர். தம் தந்தையை அரியணையிலிருந்து நீக்கிய பின்னர், அவுரங்கசீப் இப் பூந்தோட்டத்தில்தான் முதன் முதலாகக் கிரீடம் சூட்டப்பட்டார். 1664-ல் லாகூருக்கும் காஷ்மீருக்கும் பயணஞ் சென்றுகொண்டிருந்தபொழுது இப் பூந்தோட்டத்தில்தான் முதன் முதல் அவுரங்கசீப் தங்கினர்.[1] தில்லியிலும் ஆக்ராவிலுமுள்ள அரண்மனைகளில் பூந்தோட்டங்கள் இருந்தன. டில்லியில் இருந்த முக்கிய இரு தோட்டங்கள் 'உயிர் தரும் தோட்டமும்' 'மதித்தோட்டமும்' ஆகும். ஆனல், மகளிரின் அறைகளோடு சிறு தோட்டங்கள் இணைக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்றைப்பற்றி குவாபாக்கின் (Khwabgah) சுவரில் பின்வருமாறு புகழ்ந்து எழுதப்பட்டிருக்கின்றது :

'ஹையுத் பாக்ஷின் (Haiyut Baksh) இத் தோட்டத்தை நாம் புகழ்வோமாக. ஒரு மன்றத்தில் விளக்கு இருப்பது போல் இது அரண்மனையில் இருக்கின்றது. இத் தூய கால்வாயின் தண்ணீர், பார்க்கின்ற ஒவ்வொரு ஜீவனுக்கும் கண்ணுடியாகவும், ஞானிகளுக்கு இம் மறையுலகத்தைத் திறந்துகாட்டுவதாகவும் இருக்கின்றது. இந்த நீர் அருவிகள் ஒவ்வொன்றும் காலையின் வெண்மை அல்லது விதியின் இரகசியங்களிலிருந்து திருடப்பட்ட மாத்திரை என்று சொல்லலாம்'.[2]

ஆக்ரா அரண்மனையில் காஸ் மஹாலுக்கு முன்னுல் அமைந்த அங்குரி பாக் (Anguri Bagh) அல்லது திராட்சைத் தோட்டம் இருந்தது. மாதிரியாய் அமைந்த இப் பழைய முகலாயப் பூந்தோட்டத்தில் வடிவியலான கல்விளிம்புகள் கொண்ட பூம்பாத்திகள் அமைந்த சமதளப் பகுதி அமைக்கப்பட்டிருந்தது. மத்திய சபுத்ராவிலிருந்து

[1] Ibid., p. 113.

[2] D' Humieres, 'Through Isle and Empire', p. 224; C. M. Villiers Stuart, 'Gardens of the Great Mughals', p. 117 f.

(chabutra) செல்லும் பாவுதளமிட்ட நடைபாதைகளும், உயரமான நிலையில் அமைந்த சுனைக்குளமும் (fountain-tank) இதில் அமைந்திருக்கின்றன. இந்தத் தோட்டத்தில் உருவரையாக இப்பொழுதும் இருக்கின்ற மலர்ப்படுக்கைகளின் அத்தகைய ஓர் அமைப்புத் திட்டத்திலிருந்துதான் கைவினைஞர் பழைய 'ஃபிர்தூஸ் (சொர்க்கம்) தோட்டத்தின்' திட்ட அமைப்பைப் பெற்றிருக்க வேண்டும்.[1] ஷாஜஹானின் ஆட்சிக் காலத்து மற்றத் தோட்டங்கள் தில்லிக்கு அருகிலுள்ள தால்கத்தோரா பாக்கும் (Talkatora Bagh), காஷ்மீரில் வஜீர் பாக் (Vazir Bagh) என்று இப்போது சொல்லப்படும் துரதிஷ்டமுள்ள தாரா ஷிக்கோவின் (Dara Shikoh) தோட்டமும் ஆகும். தால்கத்தோரா பாக்கில் ஒரு முனையில் உள்ள உயர்ந்த மேல்தளம் (terrace) முழுவதும் மாடிப் பூங்காவாக அமைந்திருந்தது.

மனிதர்களுக்கு இயற்கையாகவேயுள்ள பல இன்ப நுகர்ச்சிகளை அவுரங்கசீப் துறந்தார். இவருடைய முன்னோர்கள் காலத்தில் சிறப்புப் பெற்றிருந்த தோட்டப் பற்று, மலர்ப் பற்று ஆகியவை இவருடைய உணர்ச்சியற்ற வைதிகப் பற்றினால் அழிந்தது. ஒரு வாசனைப் பொருளைப்பற்றி 'அது சென்ற இதயங்களைத் திரும்பக் கொண்டுவருகிறது; வாடிய ஆன்மாக்களை மீட்கின்றது' என்று ஜஹாங்கீர் ஒரு சமயம் கூறினார். இப்படிப்பட்ட எண்ணம் அவுரங்கசீபுக்கு எப்போதுமே தோன்றியிருந்திராது. அவுரங்கசீப் எளிமையான உடைகளை அணிந்திருந்தார். தங்கம், வெள்ளிப் பாத்திரங்களைப் பயன்படுத்த மறுத்துவிட்டார். தம் ஓய்வுக் காலங்களிலெல்லாம் சமய எண்ணங்களிலேயே செலவிட்டார். இருப்பினும், இவர் ஆட்சிக் காலத்தில் பூந்தோட்டக் கலை வளராமலில்லை. லாகூரில் பாத்ஸாஹி மசூதியைச் (Badshahi mosque) சுற்றி ஓர் அழகான பூந்தோட்டம் அமைக்கப்பட்டது. பேரரசருடைய வளர்ப்புச் சகோதரன் (foster-brother) ஃபதே கான் (Fadai Khan) பின்ஜோரில் (பஞ்சபுரம்) ஒரு நேர்த்தியான பூந்தோட்டத்தை அமைத்தார். இது அம்பாலாவிலிருந்து சிம்லாவிற்குச் செல்லும் சாலையில் அமைந்திருக்கிறது. பேரரசருடைய மகள் ஜெபுன்னிசா (Zebu-n nissa) லாகூரில் புகழ்வாய்ந்த சார் புர்ஜி (Char Burji) பூந்தோட்டத்தை அமைத்தார். இத் தோட்டத்தில் மலர்க்கொடிகள் படர்ந்திருக்கின்ற சுவர்களைக்கொண்ட வெள்ளை விதான மண்டபத்தில் ரோஷனரா பீகம் (Roshanara Begam) புதைக்கப்பட்டிருக்கிறார். இப்பொழுதும் அப் பெண்மணியின் பெயரைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற இன்பக் களத்தின் (pleasaunce) மேல்தளத்தின்மீது இவ் விதான மண்டபம் அமைந்திருக்கிறது.

[1] C. M. Villiers Stuart, Ibid., pp. 82 ff.

இத் தோட்டத்துக்கு வழக்கமான முகலாய நுழைவாயில் வழியாகப் போகலாம். இந் நுழைவாயில் ஓர் உயர்ந்த கால் வாயினால் ரோஷனாரா பீகத்தின் கல்லறையுடன் இணைக்கப் பட்டது. இக் கால்வாயின் இருமருங்கிலும் மலர்ப் படுக்கைகளும், வரிசையான சிறு நீர்ச்சுனைகளும் இருந்தன.[1] காலம் முக லாயர் காலத்துப் பூந்தோட்டங்களைக் கடுமையாகப் பாதித்து விட்டது. அக்பர், ஜஹாங்கீர், ஷாஜஹான் ஆகியவர்களின் ஆட்சிக் காலத்துப் பிரபுக்களால் அமைக்கப்பட்ட பூந்தோட்டங் களில் பல முழுதும் அழிந்துவிட்டன. ஆனால், முக்கியக் கல் லறைப் பூந்தோட்டங்கள், ஆங்கிலேய சமயத் துறவிகளால் 'சொர்க்கங்கள்' என்று சொல்லப்படுகின்ற தங்குமிடங்கள் ஆகியவற்றின் பழைய கவர்ச்சியைப்பற்றி அறிந்துகொள்ளப் போதுமான எச்சமிச்சங்கள் இருக்கின்றன. லாகூரிலுள்ள சாலமார் பாக்கின் வாயிலில் எழுதப்பட்ட பின்வரும் புகழுரை களுக்கு இத் தோட்டங்கள் தகுதியுள்ளவையாக இருக்கும்.

'இப் பூந்தோட்டம் கவின் மிக்கது. இதன் அழகை மேலும் உயர்த்துவனபோல் துலிப் மலர்கள் ஆங்காங்கே பரவிக்கிடக் கின்றன. பகலிலும் இரவிலும் மலரும் சூரியனும் சந்திரனுமான ரோஜாக்கள் இதன் எழில் மிகு விளக்குகளாகத் திகழ்கின்றன.'

இறுதிச் சிந்தனைகள்

முகலாயர் காலத்துக் கட்டடக் கலை, கலை மரபுரிமை கள் (artistic legacies) ஆகியவைகளைப்பற்றிச் சிந்திக்கும் பொழுதுதான், முகலாய வமிசத்தில் தொடக்க காலத்தில் இருந்தவர்களின் பெருமைமிக்க தெளிவான எண்ணத்தை (impression) நாம் பெறுகிறோம். பாபர், அக்பர் ஆகியவர்க ளுடைய இராணுவ வெற்றிச் சாதனைகளைப்பற்றிய கதைகளும், ஹுமாயூனின் வீரமும், ஜஹாங்கீர், ஷாஜஹான் ஆகியவர்க ளுடைய அரசவைகளின் ஆடம்பரமும் பகட்டும் அவர்க ளுடைய மேற்பார்வையிலும் கட்டளைப்படியும் செய்துமுடிக்கப்பட்ட பெரிய நினைவுச் சின்னங்கள், நேர்த்தியான நுணுக்க ஓவியங் கள் போன்று நம்முடைய வியப்பையும் பாராட்டுதலையும் இப்போது எழுப்புவதில்லை. பெரும்பாலும் தனிப்பட்ட பேரரசர் களின் உருவப்படங்களையே கொண்ட முகலாய ஓவியங்கள், இந்தத் தைமூரின் வமிசத்தவர்கள், அவர்களைச் சுற்றியிருந்த அக் காலத்து மக்களைவிட அறிவிற் சிறந்தவர்கள்;[2] ஆகவேதான்

[1] C.M. Villiers Stuart, ibid.
[2] P. Brown, 'Indian Painting & C.,' p.84.

அவர்கள் அரசப் பதவியைப் பெற்றார்கள் என்று உணர நமக்கு நேரடியாக உதவுகின்றன. அவர்களில் ஒவ்வோர் அரசரும் தனித் தன்மை ஒன்றைப் பெற்றிருந்தார். பாபர், களிப்புமிக்க பேரிதயம் கொண்ட மாவீரர். அக்பர், வெளிப்படையான தன்மையும், ஒழுங்கமைப்பில் முழுமைபெற்ற அறிவும் கொண்டவர். பேராசை, சூழ்ச்சி ஆகியவற்றை ஈடுகட்டும் நற்பண்புகளான புலனடக்கம், முயற்சி, கருணை ஆகியவற்றை அவுரங்கசீப் பெற்றிருந்தார்.[1] நடுநிலைமையுள்ள வரலாற்று ஆசிரியர், மிகச் சரியாக நம் நினைவுக்குக் கொண்டுவரும் செய்திகள் பின்வருவனவாகும்: இந்தப் பேரரசர்கள் தாங்கள் வாழ்ந்த காலத்தின் விளைவுருவானவர்கள்; செங்கிஸ்கான், தைமூர் ஆகியவர்களின் சந்ததியார்கள்; மனித வாழ்க்கையின் புனிதம் அவர்களுக்குத் தெரியாது; மக்களின் துன்பத்தில் அக்கறை காட்டாமல் இருந்தார்கள். அவர்களில் சிலர் பெருங்குடியர்கள்; வேறு சிலர் கெட்ட பழக்கங்களுக்கு அடிமைகளாயிருந்தார்கள். இவைகள் அனைத்தும் உண்மையானவையே. இத்துணைக் குற்றங் குறைகள் இருப்பினும், அவர்கள் மேம்பாடுடையவர்களே. அவர்களுடைய பச்சையான குற்றப் பட்டியலிலிருந்து சிறிது திரும்பி ஃபதேபூர்-சிக்ரியின் ஒப்பற்ற பெருமையையும், முத்து மசூதி, தாஜ்மகால் ஆகியவைகளின் தலைசிறந்த அழகையும், ஆக்ரா, டெல்லி அரண்மனைகளின் வீறார்ந்த தோற்றத்தையும், ஓவிய, நேர்த்திக் கையெழுத்துக் கலைகளின் அரிய செல்வத்தையும் — இதன் சிறப்புக்கு அவர்கள் ஊக்கி வழிகாட்டியதே காரணமாகும்— பார்த்தால், ஃபிரெஞ்சு நாட்டுச் சீமாட்டி மார்க்கேல் (Lady Marechale), பதினெட்டாம் நூற்றாண்டின் பழைய பிரபுக் குடும்பத்தைச் சேர்ந்த பாவி ஒருவனைப்பற்றிச் சொன்ன சொற்களை இங்கும் சொல்லத் தோன்றுகிறது. 'ஐயா, இதை நம்புங்கள்; இத் தன்மையுள்ள மனிதனை அழிக்கு முன்னர் கடவுள் இருமுறை சிந்திக்கிறார்!'[2] தங்கள் காலத்தில் அவர்கள் சாதித்ததும், இனியும் தொடர்ந்து நிலைக்கக்கூடியதுமான புகழ் அவர்களுடைய தனிச் சிறப்பான மேதாவிலாசத்தின் இயற்கையான பின்விளைவேயாகும்.

[1] P. Kennedy, 'History of the Great Moghuls,' vol. i, pp. 167,171-2; 230-1, 310-11; vol. II, pp. 29 et passim.

[2] T. Carlyle, 'French Revolution,' Cha p. II.

9. முகலாய ஆதிக்கச் சீர்குலேவின் காரணங்கள்

முகலாயப் பேரரசு இந்தியாவின் எண்ணற்ற மக்களுக்குப் பெரும்பாலும் ஓர் அந்நியப் பேரரசேயாகும். அக் காரணத்தை முன்னிட்டு அப் பேரரசு மக்களிடமிருந்து தானுகவே வரும் ஆதரவின் உறுதியான அஸ்திவாரத்தின்மேல் தன்னை அமைத்துக் கொள்ள முடியவில்லை. அதனது இயல்பு, நிர்வாக அமைப்பு ஆகியவை பொறுத்தவரை அது அந்நியமாகவே இருந்ததனுல், அப் பேரரசு, சிவாஜியைப் பின்பற்றி அவருக்காகப் போரிடும்படி மராட்டியர்களை ஊக்குவித்த உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பச் சக்தியற்றிருந்தது; இந்துக் கருத்துகளின் மீதும் உணர்ச்சி களின் மீதும் எப்போதும் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்த பழமைமிக்க மரபின் ஆதரவை அப் பேரரசு பெற்றிருக்கவில்லை. இவ்வாருக, தேசியப் பற்று என்று ஒரு பொதுவகையில் அடங்கி யிருக்கும் கூறுகளான முன்னேற்றம், உறுதி என்பவற்றை ஓர் அந்நியப் பேரரசு என்பதனுல் ஏற்படும் இயல்பின் காரண மாக அப் பேரரசு இழக்க நேர்ந்தது; ஆகையினுல், பிறிதோ ரிடத்தில் சொல்லப்பட்டதுபோல, ஒரு கீழ்த்திசை நாட்டுச் சர் வாதிகார அரசு என்ற நிலையில் அதன் வாழ்வுக்கு அரசனின் குணவியல்பையும், அவன் நிலேத்து வைத்திருந்த இராணுவ ஆற்றலையும் அப் பேரரசு நம்பியிருக்க நேரிட்டது.[1] அதனது மிகச் சிறந்த நிலையில், முகலாய அரசாங்கம் உள்நாட்டில் ஒழுங்கை நிலைநாட்டுவதையும், வெளிநாட்டில் அமைதியைப் பாதுகாப்பதையுமே குறிக்கோளாக நாடியது. பேரரசவை நாட் டின் உயிர்நாடியாக இருந்ததுமன்றி அதைப் பிணைத்தும் வைத் திருந்தது. ஆகையினுல், நிர்வாக அமைப்புச் சீர்குலைந்தபொழு தும், அரசாங்க நிர்வாக யந்திரம் சீர்குலேவுற்றபோதும், அர

[1] V. A. Smith, 'Oxford History of India.'

சாங்கம் தனது ஊர்காவல் பொறுப்பை நிறைவேற்ற முடியாமலிருந்தபோதும், அதே சமயத்தில் மாபெரு முகலாயப் பரம்பரையில் வந்தவர்கள் சண்டையிட்டுக்கொண்டிருந்த கட்சிகளின் விளையாட்டுக் கருவிகளாகவும் இரையாகவும் இருந்த பொம்மை அரசர்களாகச் சீரழிவுற்றபோதும், அதனுடைய தொடர்ந்த உறுதிநிலைக்கு ஆதரவளித்துக்கொண்டிருந்த கூறுகளையே அப் பேரரசு இழந்துவிட்டது. அதை ஓரளவு இணைத்துக்கொண்டிருந்த மிக மெல்லியதான பிணைப்பு அறுபட்டது. இதனையடுத்து அராஜகம் பரவியது.[1]

முகலாயப் பேரரசு, அதனின் இயல்பின் காரணமாகவே ஊர்காவல், இராணுவம் ஆகிய துறைகளில் போதிய திறன் பெற்றிருக்கும் வரையிலும், ஒரு சுறுசுறுப்பான, திறம்படைத்த, பொதுவாக ஒருசார்பற்ற சர்வாதிகாரி அதை ஆட்சிபுரிந்து வரும்வரையிலும் அது நிலைத்திருக்க முடிந்தது என்ற பொதுக் கூற்றை நாம் ஏற்றுக்கொள்வோமாயினும், உண்மைகளை மிக உன்னிப்பாக ஆராயும்பொழுது, நிர்வாக—அரசியல்—பொருளாதாரத் துறைகளில் குறிப்பிட்ட சில குறைகள் தோன்றியதனால்தான் அதனின் சீர்குலைவு ஏற்பட்டது என்பது நமக்குப் புலனாகும். நிர்வாகம் பொறுத்த வரை, ஒன்றோடொன்று இணைந்திருக்கும் முக்கிய உண்மைகளாவன: முகலாயப் பிரபுக்களின் பண்புச் சீர்குலைவு, இராணுவ அமைப்பில் சீரழிவு. இவ் உண்மை அவுரங்கசீபின் மரணத்திற்குப் பிறகு சில ஆண்டுகளுக்குள் வெளிப்படையாகத் தெரியவந்தது. ஷாஜஹானின் காலத்தில் அதிகாரம் வகித்த பிரபுக்களின் நிலையில் சீர்குலைவு ஏற்பட்டதென முந்திய அத்தியாயம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளோம்; இச் சீர்குலைவு அவருக்குப் பிறகு வந்த அவுரங்கசீபின் நீண்ட ஆட்சிக் காலத்தில் மேலும் மோசமாயிற்று. ஆனாலும், பேராசிரியர் ஜே. என். சர்க்காரின் கூற்றின்படி, சிறப்புமிக்க இராணுவ வகுப்பினைச் சார்ந்த பிரபுக்களும் அதிகாரிகளும் முற்றும் அழிவதை நாதர்ஷாவின் (Nadir Shah) படையெடுப்புக்கு முந்திய முப்பது ஆண்டுகளை இகழ்ச்சிக்குட்படுத்திய உள்நாட்டுப் போர் விரைவுபடுத்தி உறுதியாக்கியது. அவுரங்கசீப் இறந்து பத்து ஆண்டுகளுக்குள் பேரரசு உரிமைக்காக ஏழு கடும்போர்கள் நிகழ்ந்தன. இவற்றில் பெரும்பாலான இளவரசர்கள், பிரபுக்கள், பயிற்சிபெற்ற வீரர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர்; அதே சமயத்தில், தலையார்ந்த பிரபுக்களுக்கிடையில் ஏற்பட்ட கடும்போர்கள் பல சிறந்த ஆள்களை அழித்தன. உதாரணமாக, தக்காணத்தின் வைஸ்ராய் பதவி

[1] W. Irvine, 'Later Moghals,' ed. J.N. Sarkar, ii, 311.

உரிமையைப் பெற நைஜாமுல் முல்க் (Nijam-ul-Mulk) மூன்று பகைவர்களுடன் கடும்போர் புரிய நேரிட்டது; குஜராத்தின் கவர்னர் பதவி உரிமைக்காக மரணத்துக்கேதுவான மூன்று கடும்போர்கள் நிகழ்ந்தன. இது போன்ற உள்நாட்டுப் போர்களால் ஏற்பட்ட ஆட்சேதம், சீக்கியர்கள், பண்டேலர்கள், மராத்தியர்கள் ஆகியவர்களைத் தண்டிப்பதற்காக நடத்திய படையெடுப்புகளால் மேலும் அதிகமாயிற்று.[1] 'முகலாயர்களின் வரலாற்றை அக்கறையோடு ஆராயும் மாணவனுக்குப் பிரபுக்களின் சீர்குலைவு மிக்க வியப்பை அளிக்கிறது. சிறந்த வீரர்கள் ஒரு தலைமுறைக் காலத்திற்கே காட்சியளிக்கின்றனர்; பயனற்றவர்களை அவர்களின் வாரிசுகளாக விட்டுச் செல்கின்றனர். பதினேழாம் நூற்றாண்டில் இந்திய வரலாற்றை உருவாக்கிய அப்துர் ரஹீம் (Abdur Rahim), மஹபத் (Mahabat), சாதுல்லா (Sadullah), மீர் ஜும்லா (Mir Jumla), இப்ராஹிம் (Ibrahim), இஸ்லாம்கான் ரூமி (Islam Khan Rumi) ஆகியவர்களெல்லாம் தங்களுடைய திறனில் பாதியளவு திறனையாவது பெற்ற மகனையோ பேரனையோ வாரிசாக விட்டுச் செல்லவில்லை' என்று பேராசிரியர் ஜாதுநாத் சர்க்கார் எழுதுகிறார்.[2]

முகலாயப் படையின் சீர்குலைவு ஓரளவு இராணுவப் பிரபுக்களின் சீர்குலைவின் இயல்பான விளைவாகும்; அல்லது அச் சீர்குலைவு, சிறந்த முகலாயப் பிரபுக்களின் மறைவினால் விரைவுபடுத்தப்பட்டிருக்கலாம். ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தின் முடிவிலிருந்து அது தனது திறனை இழக்க ஆரம்பித்தது என்று கருதலாம்; அதனின் திறனற்ற நிலை அவுரங்கசீபின் ஆட்சியின் பிந்திய ஆண்டுகளில் மிகவும் முனைப்பாக இருந்தது. அக்பர் உயிருடன் இருக்கும்வரை அவர் உருவாக்கிய இராணுவ சாதனம் அவருடைய அனுபவத்தினாலும் விழிப்பினாலும் சிறந்த நிலையில் நிலைத்துவைக்கப்பட்டிருந்தது. ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தில் பேரரச படைகள் காந்தாரத்தை (Kandahar) விடுவிக்கத் தவறியது, அக்பருடைய இறப்புக்குப் பிறகு ஏற்பட்ட சீர்குலைந்த நிலையை எடுத்துக்காட்டுகிறது. 'இராணுவத் திறனிலும் பீரங்கிகளை இயக்குவதிலும் முகலாயப் படை பாரசீகர்களுக்கு நிகரல்ல என்பதை 1649, 1652, 1653 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற முற்றுகைகளிலிருந்து தெரியவருகிறது. 1658-ல் அவுரங்கசீபிற்கும் தாரா ஷிக்கோவுக்குமிடையில் (Dara Shikoh) நடந்த போரில் அப் படையின் முதுமைத் தளர்ச்சி மேலும் வெளிப்படையாகத் தெரியவந்தது.[3] பாபரின் கீழும் பைராம்கானின் (Bairam Khan) கீழும் முதல், இரண்டாவது

[1] W. Irvine, 'Later Mughuls,' ed. J.N. Sakar, ii, 311.
[2] See W. Irvine, 'Later Mughals, ed, J.N. Sarkar, ii, 308.
[3] P. Kennedy, 'History of the Great Mughals', ii, 62.

பானிபட்டுப் போர்களில் போர்புரிந்த துருப்புகள் தங்களுடைய தளபதிகள் வீழ்ச்சியுற்றபோதிலுங்கூடச் சிதறி ஓட்டம் பிடித்திருக்கமாட்டார்கள். ஆனாலும், இராஜபுத்திரர்களைத் தவிர, தாரா ஷிக்கோவுக்குட்பட்டுப் பேரரசப் படையில் இருந்த பெரும்பாலான மற்ற யாவரும் ஒழுங்குபெறு ஒரு கூட்டத்தினராகவே இருந்தனர். அதிருஷ்டம் அவர்களை ஆதரித்தபொழுது அவர்கள் ஊக்கமிக்கவர்களாகவும், ஒரு சிறு தோல்விதானும் ஏற்பட்டபோதிலும் எல்லா உற்சாகத்தையும் பற்றுறுதியையும் கைவிடுபவர்களாகவும் இருந்தனர். இருப்பினும், முகலாயப் படையின் திறன் குறைந்திருந்த போதிலும், அவுரங்கசீபின் ஆட்சிக் காலத்தின் முற்பகுதியில் இந்தியாவில் உள்நாட்டு அமைதியை நிலைநாட்டுவதற்கு அது போதிய வலிமை பெற்றிருந்தது. அக் காலத்திற்குப் பிறகு அது மிகத் துரிதமாகவும் முடிவாகவும் சீரழிவுற்றது. இவ் விளைவிற்குப் பதினேழாம் நூற்றாண்டு முழுவதும் தக்காணத்தில் தொடர்ந்து நடந்த போர்கள் பெரும்பாலும் காரணமாகும். பல இராணுவச் சாதனைகளை எப்போதும் நிறைவேற்றவேண்டியிருந்தபோதிலும், அவை முடிக்கப்படவேயில்லை. ஜஹாங்கீரின் காலத்தில் அவை அதிகமாகப் பாதிக்கவில்லை. ஏனெனில், அவருடைய இராணுவ நடவடிக்கைகள் முழுவதும் தக்காணத்திலுள்ள முகம்மதிய சுல்தான்களின் மீது எடுக்கப்பட்டவையாகும். முகம்மதியச் சுல்தான்களுங்கூட முகலாயத் தளபதிகளைப் போன்று எதையும் சீராகச் செய்கின்ற தன்மையைப் பெற்றிருக்கவில்லை. ஆனால், முகலாயப் படையினர் மராத்தியர்களுடன் மோதுகின்றபொழுது இவ்விதமான நிலை நீடித்திருக்க முடியாதென உணர்ந்தனர்.[1] மாராத்தியர்களுடைய குறிக்கோள் மிகவும் திட்டவட்டமாக இருந்ததால், அதைச் சாதிப்பதற்கான சிறந்த வழியையும் அவர்கள் தெரிந்துகொண்டிருந்தார்கள். அப்பொழுதுதான் முகலாயப் படைகளின் திறமையின்மையும் பயனற்ற தன்மையும் விரைவில் காணப்பட்டன. அவர்கள் உல்லாச வாழ்க்கையினாலும் நெறிதவறிய முறைகளினாலும் நலிவுற்றிருந்தனர். மேற்கு இந்தியாவில் ஆதிக்கம் செலுத்துவதில் ஒரு முடிவற்ற போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டிருந்ததும் அவர்கள் நலிவுக்கு ஒரு காரணமாகும்.[2]

பிரபுக்கள் வகுப்பு, இராணுவம் ஆகியவை பொறுத்தவரை, இந்தியாவுக்கப்பால் உள்ள இடங்களிலிருந்து இடையறாமல் புதிய

[1] தக்காணத்துப் போரின் இக் கூற்றைப்பற்றி அலெப்போவிலிருந்த (Alappo) தூதருக்கு எழுதிய குறிப்பில் ஆக்செண்டார் (Oxender) குறிப்பிட்டுள்ளார். அக் குறிப்பு Foster எழுதிய 'English Factories in India' என்ற நூலில் 152ஆம் பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

[2] P. Kennedy, 'History of the Great Mughals,' ii, 11.

வீரர்களை வருவித்தல் என்ற ஒரே ஒரு முறையைக் கையாண்டு தவிர்க்கமுடியாததான சீர்குலைவை முன்னுணர்ந்து தடுத்திருக்கக் கூடும். மத்திய ஆசியாவின் மலைப்பகுதிகளிலிருந்தும் பாலைவனங் களிலிருந்தும் இந்தியாவுக்குள் ஏராளமாக வந்து குவிந்துகொண் டிருந்த வீரர்கள் முன்னாள்களில் பேரரசுக்குப் பெரும் வலிமை தந்தனர். இராணுவ, சிவில் பணித்துறைகளுக்குத் தேர்ந்தெடுக் கப்பட்ட முஸ்லீம்கள், அயல்நாடுகளைச் சார்ந்த இந்தத் துணிகர வீரர்களும் மதமாற்றம் செய்யப்பட்ட இந்துக்களுமாவர். ஆனால், இந்திய நிலத்தில் அந்நியன் வெகு விரைவில் சீர்குலையக் கூடும்— இவ் உண்மையைப் போர்ச்சுகீசியர்கள் பின்னாள்களில் இந்தி யாவில் தாங்கள் நிலைநாட்டிய ஆட்சிப் பகுதியைப் பொறுத்தவரை தெரிந்துகொண்டனர். ஆகையினால், முகலாய அரசாங்கத்தை ஊக்கங் குன்றாமல் வைத்திருக்கவேண்டுமெனில், அதற்கான ஒரே ஒரு வழியாவது, கணவாய்களுக்கப்பால் உள்ள வடமேற்கு மலைப் பகுதிகளிலிருந்தும் நிலப்பகுதிகளிலிருந்தும் திறம் படைத்தவர் களும் வலிமை பெற்றவர்களும் தொடர்ந்து இந்தியாவுக்குள் வர விடுவதேயாகும்.[1] இந்தியாவை ஆளுவதற்காகச் சகதாயத் துருக்கியர்களோ அல்லது முகலாயர்களோ ஆஃப்கானிஸ் தான் (Afghanistan), துருக்கிஸ்தான் (Turkestan) ஆகிய நாடுகளைச் சேர்ந்த திடம் வாய்ந்த மக்களை நம்பியிருந்தனர். இது போன்ற மக்களும், பாரசீகத்தைச் சார்ந்த மேலும் நாகரிகமுற்ற மக்களும் தடையின்றி இந்தியாவுக்குள் வர அனுமதிக்கப்படும் வரை பேரரசு சிறந்து விளங்கிற்று; மங்கோலிய இனமும் ஆற்றல் மிக்கதாகவும் சுறுசுறுப்பு மிக்கதாகவும் இருந்தது. இது போல, புதிதாக வந்து டெல்லிப் பேரரச ஆட்சியின்கீழ் உயர் பதவிகளையும் செல்வத் தையும் நாடியவர்கள் படிப்படியாக வராமற்போனதற்கு முக்கியக் காரணம், ‘இந்தியா இந்தியருக்கே’ என்ற கொள்கை அக்பரால் வற்புறுத்தப்பட்டதேயாகும். அக்பரின் சிவில், இராணுவத் துறை கள் பெரும்பாலும் அந்நியர்களால் நிரப்பப்பட்டிருந்தன என்பது உண்மையேயாகும்; ஆனாலும், இந்தியர்களை மிக அதிக அளவில் பேரரச நிர்வாகத்துடன் இணைத்துக்கொள்வது என்னும் கொள் கையை அக்பரும், அவருக்குப்பின் தொடர்ந்து அவருடைய வாரிசு களும் பின்பற்றியதன் விளைவாகக் கணவாய்களுக்கப்பாலிருந்து வந்துகொண்டிருந்தவர்களைப் படிப்படியாக வரவொட்டாதபடி செய்தது. இங்ஙனமாக, முகலாய இராச்சியம் அதனுடைய உண்மை பலத்தை இழந்தது. இத்தகைய ஒரு நிலை அழிவுக்கும் இலஞ்ச ஊழலுக்கும் இடம் தந்தது. உயிரூட்டுவதற்கு இன்றியமையாதன வான பொருள்கள் வெளியிலிருந்து வருவது தடையுண்டதும், கீழ்

[1] W. Irvine, ‘Later Mughals’, ed. J. N. Sarkar, ii, 307 ff.

நாடுகளின் ஆட்சியில் அதுபோன்ற சூழல்கள் சகஜமாகவே ஏற்படுவது உண்டு.[1] பாபர், அக்பர் ஆகியவர்களின் ஆற்றல் மிக்க பேரரசு பதினேழாம் நூற்றாண்டின் முடிவில் சீர்குலைவதற்கான அடையாளங்கள் தெளிவாகத் தென்பட்டன. அவுரங்கசீபின் இறப்பிற்குப் பிறகு அது மிக வேகமாகச் சீர்குலைந்துகொண்டிருந்தது. படையைப் பொறுத்தவரை, திறம்படைத்த போர்வீரர்களை அவுரங்கசீப் வடமேற்கு எல்லைக்கப்பாலிருந்து பெறத் தவறியது அவர் புரிந்த பெருங்குற்றமாகும். அது போன்ற படைவீரர்களைக் கொண்டு தான் திறன் படைத்த நெருங்கியடர்ந்த ஒரு படையை அமைத்திருக்க முடியும். ஆனால், அவருடைய படையிலே, பெரும்பாலும் இந்திய முகம்மதியர்களே இருந்தனர். சுறுசுறுப்பிலும் உடல்வலிமையிலும் அவ் வீரர்கள் துருக்கிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளைச் சார்ந்த படைவீரர்களுக்குக் குறைந்தே இருந்தனர். அந் நாடுகளின் வீரர்கள் அந் நாடுகளின் மிதமான தட்பவெப்ப நிலையில் உழைப்பாற்றலைப் பெற்றிருந்தனர். கொள்ளையிடும் ஒரு மராத்தியன் மத்திய ஆசியாவைச் சார்ந்த படைவீரனுக்கு நிகராக இருக்கமுடியாது. ஆனாலும், அவன் துணிகர வீரனாகவோ பண்பு மிக்க வீரனாகவோ இருந்தபோதிலும், ஓர் இந்திய முகம்மதியனோ இராசபுத்திரனோ அவ்வுறுதி மிக்க அப் பகைவனை எதிர்க்க முடியவில்லை.[2]

முகலாயப் பேரரசின் சீர்குலைவுக்கு ஏதுவாக இருந்த நிர்வாகக் காரணங்களைப்பற்றி ஆராயும்பொழுது பேரரசர்களுடைய குணாதிசயத்தையும் நாம் கவனிக்கவேண்டியிருக்கிறது. ஏனெனில், முகலாயப் பிரபுக்களின் சீர்குலைவுடனும், அரசனுக்கும் குடிமக்களுக்குமிடையில் இருந்த தொடர்பின் சீர்குலைவுடனும் அக் குணாதிசயம் நெருங்கிய தொடர்புடையதாயிருந்தது. அக்பர், ஷாஜஹான், அவுரங்கசீப் ஆகிய அனைவரும் அசாதாரண திறத்தைப் பெற்றிருந்தனர். நால்வர்களுள் சில கூறுகளில் மிக பலவீனமுற்றிருந்த ஜஹாங்கீரும் திறனற்றவராக இருக்கவில்லை. ஆனால், அக்பர் நிலைநாட்டிய பேரரசை அவுரங்கசீபிற்குப் பிறகு வந்த பேரரசர்களுள் எவரும் இயற்கைத் திறமையாலோ நிர்வாக அனுபவத்தாலோ வைத்துக் காப்பாற்ற முடியவில்லை. இந்த நிலை, தைமூரியர்கள் இயற்கையாகவே பெற்றிருந்த ஆற்றல், தட்பவெப்பக் காரணங்களாலும் தொடர்ந்து இந்திய இளவரசிகளை மணம் புரிந்துகொண்டதனாலும் ஏற்பட்டதுமன்றி, பேரரசக் குடும்பத்தைச் சார்ந்த இளவரசர்களிடமிருந்து பொறுப்பையும் தொடங்கிவைப்பதற்கான திறத்தையும் பறித்துக்கொள்ளும்படியாக அமைந்திருந்த அவுரங்க

[1] P. Kennedy, 'History of the Great Mughals', pp. 6, 170, 310.

[2] Ibid., i.14; ii. 155.

சீபின் கொள்கையினாலும் ஏற்பட்டதாகும். தாம் ஷாஜஹானை நடத்திய விதத்தை எப்பொழுதும் நினைவில் கொண்டவரும் இயல்பாகவே எவரையும் நம்பாதவருமான அவுரங்கசீப், தம்முடைய பிள்ளைகளைத் தந்தை என்ற முறையில் அளவுகடந்து கட்டுப்படுத்தி, அவர்கள் இயல்பாகவே பெற்றிருந்திருக்கக்கூடிய திறமைகளை ஒடுக்கினார்; முதிய வயது வரை அவர் உயிர்வாழ்ந்ததனால் திறம் படப் பணியாற்ற முடியவில்லை. இவ்வாறு அவுரங்கசீப் காட்டிய வழியை அவருக்குப் பிறகு வந்தவர்களும் பின்பற்றினர்; அவர்கள் வைஸ்ராய் பதவிகளையும் மாகாண கவர்னர் பதவிகளையும் வகித்து, நிர்வாக அனுபவத்தையும் திறத்தையும் வளர்த்துக் கொள்ளத் தங்களுடைய இளவரசர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வில்லை. பதினெட்டாம் நூற்றாண்டில் முகலாயச் சிம்மாசனத்திற்கு வரும் உரிமை பெற்றிருந்த வாரிசுகள், அரசவையில் இகழ்ச்சிக்குரிய இன்ப வாழ்க்கையிலும் சுக வாழ்க்கையிலும் மூழ்கிக் கிடந்தனர். எம் முடிவிற்கும் எச் செயலுக்கும் அவர்கள் மற்றவர்களை நம்பியிருந் தனர். நிர்வாகப் பொறுப்புகள் இல்லாததனால் தங்களுடைய காலத்தை அந்தப்புரத்தையே சுற்றி வந்து வீணாக்கிக்கொண் டிருந்தனர். பேரரசை ஆளும் பொறுப்பு வசீர்களிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. அவர்கள் பெரும்பாலும் நம்பிக்கைக்குத் தகுதியற்ற வர்களாகவும், வழக்கமாகத் தலைநகரில் சதி, சச்சரவு ஆகியவற்றின் மையமாகவும் இருந்தனர். அவுரங்கசீபின் மரணத்திற்குப் பிறகு டெல்லி அரசவையில் இருந்த வரலாற்றுக் கோப்பாளர்கள், சக்தி வாய்ந்த பிரபுக்கள் இடையறுது செய்துவந்த சதிகளைப்பற்றியும் எதிர்ச் சதிகளைப்பற்றியும் எழுதியுள்ளனர். இச் சதிகளெல்லாம் அவ்வப்பொழுது அமைதிக் குலைவிலும் சண்டையிலும் முடிந்தன; அச் சமயங்களில் பேரரசர் போட்டிக் கட்சிகளின் கைப்பொம்மை யாகவும் விளையாட்டுக் கருவியாகவுமே இருந்து வந்தார். தலை நகரில் இருந்த அமைதிக்குலைவு விரைவில் மாகாணங்களிலும் பரவியது. அம் மாகாணங்களின் கவர்னர்கள் எப்போதும் புதிது புதிதாக நியமிக்கப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அச் சமயத்தில் பதவியில் வீற்றிருக்க வாய்ப்புப் பெற்றவர்களால் அக் கவர்னர்கள் பதவியிலிருந்து நீக்கவும்பட்டனர். பல கவர்னர்கள் வெளிப்படை யாகப் பகைமைபாராட்டித் தங்களுடைய நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்ளவோ பாதுகாத்துக்கொள்ளவோ முயன்றனர். இதனால் தற்காப்பற்ற நிலைமை நாடெங்கிலும் பரவி, குடியானவர்கள் நில வரியைச் செலுத்தாவண்ணமும் தல அதிகாரிகள் தாம் வசூலித்த தொகையைக் கருவூலத்திற்குச் செலுத்தாவண்ணமும் நடந்து கொள்ளத் தூண்டியது. பதினெட்டாம் நூற்றாண்டு முழுவதும் வரிகளைச் செலுத்தாதிருத்தல், சாலைகள் மூடப்படுதல், இடை யருமல் கொள்ளையடித்தல், போரைப்பற்றிய வதந்திகள் அடிக்கடி

பரவிக்கொண்டிருத்தல் ஆகியவையெல்லாம் பேரரசு வெகு விரைவாகச் சீர்குலேவதைக் காண்பிப்பதான வெளிச் சின்னங்களாகும். பேரரசர் அந்தப்புர வாழ்க்கையினுல் ஆண்மைத்தனத்தை இழந்து, சீர்கெட்ட அதிகாரிகளின் கைப்பாவையாகி, சீர்கேட்டைத் தடுத்து நிறுத்தச் சக்தியற்றிருந்தார். 1737-ல் மராத்தியப் படை ஒன்று டெல்லிக்குள் நுழைவதை அவர் பார்த்துக்கொண்டிருக்க நேர்ந்தது. 1739-ல் தம்முடைய குடிமக்கள் நாதர் ஷாவால் படுகொலே செய்யப்படுவதை அவர் பார்க்கவேண்டி நேரிட்டது. அவுரங்கசீபின் மறைவுடன் முகலாய மேதமையின் கடைசி மினுக்கொளியும் அணேந்துவிட்டது.

பேரரசின் சீர்குலேவை விரைவுபடுத்திய அரசியல்காரணங்கள், அவுரங்கசீப் முஸ்லீம் அல்லாதாரிடம் கொண்டிருந்த சமயவெறியினுல் ஏற்பட்டனவாகும். முகலாயப் பேரரசர்கள் தங்களுடைய நெருங்கிய ஆண் உறவினர்களிடம் கொண்டிருந்த தொடர்பில் படிப்படியாகத் தோன்றிய மாறுதல் அதேபோன்ற பேரழிவை உண்டாக்கியது; ஆனுலும் அதனுடைய விளேவுகள் அவ்வளவு தீவிரமாக இருக்கவில்லே. கம்ரான் (Kamran) ஹுமாயூனுடன் விசுவாசமின்றி நடந்துகொண்டதில் சகோதரப் பகைமையின் ஆரம்பத்தை நாம் கண்டாலும், முகலாய ஆட்சியின் முதல் நூற்ருண்டுக் காலத்தில் அரியணேயில் வீற்றிருந்தவர்கள் தந்தைமாட்டு அன்பையும், சகோதரர்மாட்டுப் பாசத்தையும் பொதுவாகக் காட்டி வந்தனர். பாபர், ஹுமாயூன், அக்பர் ஆகிய அனைவரும் இயற்கை அன்பு உணர்ச்சியை வெளிப்படுத்தினர். ஜஹாங்கீரும்கூடக் குஸ்ருவின் பகைமையால் கோபமுற்றபோதிலும், ஒவ்வொரு சமயத்தில் தம்முடைய மகனுக்கு இரக்கங்காட்டிஞர்; தமக்கு எதிராக நடந்துகொண்டிருந்த சதிகளேச் சுருக்கவகையாய் ஒடுக்க அவர் தீர்மானித்தபொழுதும், அவர் குற்றம் புரிந்தவனேக் குருடனுக்குவதைத் தவிர மற்ற எந்தத் தண்டனேயையும் அளிக்க முடியாத நிலேயில் இருந்தார். ஆனுல், ஷாஜஹான் அரியணேக்கு வந்த காலந்தொட்டு இயற்கை அன்பு நலிவுற்றுப் பேரரசக் குடும்பத்தைக் கறைப்படுத்தியது. ஷாஜஹானின் வெளிப்படையான ஆணேயின்படி ஷாரியார் (Shariyar) குருடாக்கப்பட்டதும், குஸ்ரு, டானியலின் இளம் பிள்ளேகள் ஆகியவர்கள் கொலேயுண்டதும் ஷாஜஹானின் பிள்ளேகளுக்கு ஒரு பாடத்தைக் கற்பித்தது. அதாவது: 'அவர் மரணமுற்றதும் ஒருவரைத் தவிர உயிரோடிருக்கும் மற்ற எவரும் அவருடைய பிள்ளேகளுடன் பைத்தியம் பிடித்த நாய்களேப் போல வேட்டையாடப்பட்டு அழிக்கப்பட வேண்டும். இல்லேயெனில், அவர்களெல்லாம் வெறுப்புக் கொண்டுள்ளவர்களின்

கையில் சிக்கிக்கொண்டு சச்சரவுக்கான கருவிகளாகிவிடுவர்'.[1] இந்த நிலைமை முகலாயர்களின் இறைமைக்கு ஒழுக்கக்கேடான பேரழிவு தந்தது. தந்தைமார்களும், பிள்ளைகளும், சகோதரர்களும் ஒருவரையொருவர் பகைவர்களாகக் கருதுவதும், கொலைபாதகனால் அழிக்கப்பட்டு அல்லது போரின் தீர்ப்பினால் விலக்கப்பட்டுப் போட்டியினின்றும் அகற்றப்படவேண்டியதுமான ஒரு குடும்பம் தனது அரசியல் இறைமையை இழக்கவேண்டியது தவிர்க்கமுடியாததாக இருந்தது.

அவுரங்கசீப்பின் பொறுமை மிக்க வைதீகம் ஷியா முஸ்லீம் மக்கள் அவரிடம் பகைமை பாராட்டுவதற்குக் காரணமாயிருந்தது. ஈரான், குரேசான் (Khurasan) ஆகிய இடங்களிலிருந்து இந்தியாவுக்கு வந்தவர்களை அக்பர், ஜஹாங்கீர், ஷாஜஹான் அனைவரும் வரவேற்றனர். அவ்விதம் வந்து குடியேறியவர்களெல்லாம் இஸ்லாமின் திறமையுற்ற இனத்தைச் சார்ந்தவர்களாவர்; அவர்கள் முகலாயப் பணித்துறையில் சேர்த்துக்கொள்ளப்பட்டதனால் நிர்வாகத்திற்கு மிக்க நலனேற்பட்டது. ஆனால், அவுரங்கசீப் போன்ற ஒரு வயோதிக ஸுன்னிக்கு அவர்களெல்லாம் சமய எதிரிகளாகவே தென்பட்டனர். அவர்கள் எவ்வித ஆதரவைப் பெறவும் தகுதியற்றவர்கள் என்றும் அவர்களைச் சும்மா விட்டு வைத்தால் அதுவே மேலானது என்றும், அவர் கருதினர். அவர்கள்மீது அவ்வளவிற்கு அவர் பகைமை கொண்டிருந்தார் என்பது, அவருடைய கடிதங்களிலிருந்தும், ஹமீதுத்தீன்கான் (Hamidu-din-Khan) என்பவர் அவரைப் பற்றியவான நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டிருப்பதிலிருந்தும் புலனாகிறது. அவருடைய மனநிலையைப் பாமர மக்களிடமும் காணக்கூடும். பொதுமக்கள் அவர்களிடம் இன்னும் கடுமையான பகைமையைப் பாராட்டினார்கள். உதாரணமாக, 1712-ல் லாகூரில் நடந்த கலகம் ஒரே ஒரு ஷியா அடைமொழி அடங்கியிருந்த குத்பாவை வாசிப்பதற்காக பகதூர்ஷா (Bahadur Shah) திட்டமிட்டதனால் ஏற்பட்டதாகும். ஒரு பிரிவாரின் இந்தச் சமயப் பொறையின்மையினால் உண்டான அரசியல் விளைவு மிக மோசமாக இருந்தது. ஷியாக்கள் இந்தியாவில் ஓர் இருப்பிடத்தையும் தொழிலையும் நாடாமலிருந்துவிட்டார்கள். ஆகையினால், மிக்க நெருக்கடியான ஒரு தறுவாயில் திறமை பெற்ற ஒரு வகுப்பின் உதவியை அரசாங்கம் பெறமுடியவில்லை.[2] சமயப் பொறையுடைய அக்பரின் பேரரசினை ஒரு ஸுன்னி முகம்மதிய அரசாக மாற்றியமைக்க அவுரங்கசீப் விருப்பங் கொண்டிருந்

[1] Sleeman's 'Rambles and Recollections,' ed. V. A. Smith, p. 335; P. Kennedy, '*History of the Great Moghuls*', *ii*. 38.

[2] J. N. Sarkar in Irvine, 'Later Mughals,' ii, 310.

தார். அவ்வித அரசில் வைதீகமற்ற முஸ்லீம் சமயக் குழுக்களும், இந்துக்களும், மற்றத் தெய்வ நம்பிக்கையற்றவர்களும் போனால் போகட்டுமென்று வாழவிடப்பட்டார்கள். அவ்வளவே தவிர, வைதீக ஸுன்னிகளுக் கெதிராக எவ்வித உரிமையும் பெற்றிராதவர் களாகக் கருதப்படவேண்டும் என்று அவர் விரும்பினார். இந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகத்தான் அவர் சூரியக் கால அட்டவணையை ஒழித்தார்; அது அக்பர் காலந்தொட்டு அதிகாரப் பூர்வமாக்கப்பட்ட நிதி ஆண்டாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது; அதற்குப் பதிலாக ஹிஜிரா (Hejira) ஆண்டை வருமானத்திற் காகவும் இதர காரியங்களுக்காகவும் அவுரங்கசீப் புகுத்தினார். அவ்வாணை பிறப்பிக்கப்பட்டதும் சூரிய ஆண்டின் திருவிழாக்களும் ஒழிக்கப்பட்டன. அவ்வாண்டு அக்கினியை வழிபாடு செய்பவர் களின் ஆண்டு என்றும், ஆகையினால் முஸ்லீம் கால அட்ட வணைக்கு முரண்பட்டதாகும் என்றும் அவர் கருதினார்.[1] இது போன்ற செயல்கள் மிக்க அருவருப்பை உண்டாக்கின; அரசியல் சீர்குலைவுக்கு உதவியாக இருந்தன.

ஆயினும், இந்துக்களை நடத்தும் விதத்தில்தான் இந்தியப் பேரரசர்களின் மோசமான செயற்கோட்பாடு பேரரசை மிகத் தீவிரமாகப் பாதித்தது. அக்பரும் ஓரளவு ஜஹாங்கீரும், வெற்றி பெறும் சிறுபான்மையோருடைய சமயத்திற்கும் வெல்லப்பட்ட பெரும்பான்மையோருடைய சமயத்திற்குமிடையில் இருக்கும் அமை தியின் அடிப்படையில் பேரரசு தங்கியிருந்தது என்பதை உணர்ந் திருந்தனர். 'விக்கிரகங்களை வழிபாடு செய்பவன் தனது தீர்வை களைச் செலுத்தி எவ்விதத் தொல்லையும் கொடுக்காத வரையில் அவனுடைய வழிபாட்டைப் பின்பற்றும்படி விட்டுவிடவேண்டும்' என்று மிக்க அறிவுநுட்பத்துடன் அவர்கள் முடிவு செய்திருந்தனர். அக்பரால் உருவாக்கப்பட்ட இவ்விதச் சமயப்பொறைக் கொள்கை, ஓர் இராஜபுத்திர இளவரசியை அவர் திருமணம் செய்துகொண்ட தாலும், இராஜபுத்திரத் தலைவர்களை உயர்பதவிகளில் அமர்த்திக் கொண்டதனாலும் உறுதியாயிற்று.[2] குஜராத்தைச் சார்ந்த சமணர் களை ஜஹாங்கீர் ஒரு சமயத்தில் தேவையின்றியே துன்புறுத்தினார்; இந்து உணர்ச்சிக்கு மிக அருவருப்பூட்டும் முறையில் அவர் கங்கரா விலுள்ள (Kangra) கோயில்கள் விஷயமாய் நடவடிக்கை எடுத்துக் கொண்டார். ஆனாலும், அக்பருடைய கொள்கை கைவிடப்பட்டது என்பதற்கான முதல் அறிகுறியை ஷாஜஹானின் ஆட்சிக் காலத் தில் காண்கிறோம். மும்தாஜ் மஹாலின் (Mumtaz Mahal) மரணத் திற்குச் சற்றுப் பிறகு, பேரரசில் குறிப்பாக வாரணாசியில் (Benaras)

[1] Elliot, vii. 241-2; P. Kennedy, ibid., ii. 72.

[2] T. W. Holderness, 'Peoples and Problems of India.'

அப்பொழுதுதான் கட்ட ஆரம்பிக்கப்பட்டுக் கட்டி முடிக்காத நிலேயில் இருந்த கோயில்களேயெல்லாம் இடித்துவிடும்படி அவர் கட்டளேயிட்டார். அக் கட்டளேயை முழுவதுமாக நிறைவேற்ற முடியவில்லே. இருந்தபோதிலும், மதவெறியை இதுபோல வெளிப்படையாகக் காட்டுவதானது முந்திய ஆட்சிக் காலங்களில் மேற்கொள்ளப்பட்ட அறிவுமிக்க சமயப் பொறைக்குத் திட்டவட்டமாக மாறுபட்டிருந்தது. அவுரங்கசீப் அரியணே ஏறியவுடன் சமயப் பொறை காட்டக்கூடாதென்ற பின்னடைவியக்கமான கொள்கை முழுவதுமே மேற்கொள்ளப்பட்டது. 1669ஆம் ஆண்டின் தொடக்கத்தில் வாரணுசியிலிருந்த இந்து சமயப் பள்ளிகளே அழிக்கும்படி அவர் கட்டளே பிறப்பித்தார்; அவ்வாண்டின் ஏப்ரல் மாதத்தில் விசுவநாதர் கோயில் அழிக்கப்பட்டது; டிஸம்பரில் மதுராவிலிருந்த (Mathura) மிகப் பெரிய இந்துக் கோயில் வன்முறையில் தகர்த்தெறியப்பட்டது. இவ்வகையான செயல்களேத் திரும்பத்திரும்பப் புரிந்ததனுலும், ஜெஸ்ஸியா வரியை மிக உறுதியாக மீண்டும் விதித்ததனுலும் ஜஸ்வந்த சிங் (Jaswant Sing) இறந்ததும் ஜோதிபுரியை (Jodhpur) இணேத்துக்கொள்ள அவுரங்கசீப் முயற்சி செய்ததனுலும், அவர் மேவார்மீது படையெடுத்ததனுலும் முகலாயர் ஆட்சியில் தங்களுடைய தன்மானமும் கருத்துச் சுதந்திரமும் பேராபத்துக்குட்பட்டுள்ளன என்பதை இந்துக்கள் உணர்ந்ததோடு, இராஜபுத்திர இனங்களின் முழுப்பகைமையையும் கொண்டார்கள். தங்களுடைய அரசியல் சுதந்திரத்திற்காகத் தங்கள்மீது அவுரங்கசீப் பொருமை கொண்டுள்ளதாக உணர்ந்த இராஜபுத்திர இனங்கள், தங்களுடைய இளவரசர்கள் பேரரசுக்கு அல்லது அதனுடைய அரசனுக்குத் தங்களது சக்திவாய்ந்த உதவியைத் தரக்கூடாது என்று மனவுறுதி கொண்டனர். இந்த முடிவின் விளேவாக, பகதூர் ஷாவின் ஆட்சிக் காலத்தில் ஒருவருக்கு ஒருவர் தற்காப்பு அளிப்பதற்கான சங்கம் உருவாயிற்று. இதனே மேவார், ஆம்பர், மார்வார் ஆகியவற்றின் அரசர்கள் தோற்றுவித்தனர். இதனுடைய ஒரு நிபந்தனேயின்படி எந்நிலேயிலும் அவர்களுடைய பெண்களே முகலாயப் பேரரசக் குடும்பத்தில் மணம் செய்துகொடுக்கக்கூடாது என்று வற்புறுத்தப்பட்டது.

கோயில்களேக் கட்டாயமாக இடித்துத் தள்ளி அவ்விடங்களிலெல்லாம் மசூதிகளேக் கட்டுதல், மதமாற்றம் செய்து முகம்மதியர்களாகியவர்களுக்கு உயர்பதவிகளேயும் சிறப்புகளேயும் அளித்தல், வாய்ப்புக் கிட்டியபொழுதெல்லாம் உயர்தரப் பதவிகளிலிருந்து படிப்படியாக இந்துக்களே நீக்கி முகம்மதியர்களே நியமித்தல், இந்து

[4] P. Kennedy, ibid., ii. 49.

மதத்திற்கு அருமையாக இருந்த பழக்கங்களின்மீது கடுமையான தடைகளை விதித்தல் போன்ற செயல்களெல்லாம், முகலாய இராச்சியத்தில் தங்களுக்கெல்லாம் நிரந்தர இடம் இல்லை என்றும், தங்களுடைய மதம் உண்மையில் பேராபத்துக்குட்பட்டிருக்கிறது என்றும் இந்துக்களைத் தீர்க்கமாக எண்ண வைத்தன. இந்தக் கருத்து மராத்தியக் கலகத்திற்கு உடனடியான வாய்ப்பாகவும் தூண்டுகோலாகவும் அமைந்தது. இரும்பு மனமும் தம்முடைய பகைவரைப்போலவே துணிச்சல் மிக்க மேதாவிலாசமும் பெற்றிருந்த சிவாஜி தம்மிடத்திலும் தம்முடைய சமயத்தினிடத்திலும் தமது அரசர் கொண்டிருந்த மனப்போக்கின் இயல்பை அறிந்து கொண்டதும், திட்டமிட்ட எதிர்ப்பைத் திரட்ட முடிவு செய்து விட்டார். அக்பர் பெற்ற வேறு பலனை, தங்களிடம் குறைகள் இருந்தபோதிலும் ஜஹாங்கீரும் ஷாஜஹானும் சமாளித்து வைத்திருந்ததை—அதாவது, தமது இந்துக் குடிமக்களின் அன்பை—அவுரங்கசீப் தமது சமயப் பொறையின்மையாலும் சமய வெறியினாலும் இழந்துவிட்டார். சிவாஜியுடனும் அவருக்குப் பிறகு வந்தவர்களுடனும் அவர் நடத்திய போர்களின்போது அவருடைய இந்து அதிகாரிகளும் சிற்றரசர்களும் தங்களுடைய தலைவனின் கொடுங்கோலாட்சியின்மீது மற்ற இந்துக்கள் வெறுப்புக் கொண்டிருந்தது போலவே வெறுப்புற்றுப் பேரரசின் நலனைப் பொருட்படுத்தவில்லை அல்லது மறைவாகப் பகைமை பாராட்டிவந்தனர். இதனால்தான் அவுரங்கசீப் மராத்தியர்களின்மீது படையெடுத்த பொழுது அவருடைய முயற்சிகள் வெற்றிபெறவில்லை. அக் கருத்து காலப்போக்கில் மேலும் வலுப்பட்டது. முகம்மது ஷாவின் ஆட்சிக் காலத்தில் (1719-48) அவ்வுணர்ச்சியை முதலாம் பாஜீ ராவ் (Baji Rao I) மாளவத்தைச் சார்ந்த இந்துத் தலைவர்களையும், மேவாரையும் ஜெய்பூரையும் சார்ந்த இராஜபுத்திர இளவரசர்களையும் மராத்தியர்களோடு தருமத்தை அழிப்பவர்களுக்கு எதிராக இணைக்கும் நெம்புகோலாகப் பயன்படுத்திக்கொண்டார். அவுரங்கசீப் இறந்த பிறகு முப்பது ஆண்டுகளுக்குள் இராணுவ மதிப்புப் பெற்ற எந்த ஓர் இந்து வமிசத்தவரிடமிருந்தும் உதவி பெற முகலாயப் பேரரசால் முடியவில்லை. அதுதான் முடியவில்லையென்றாலும், உண்மையில் அப் பேரரசு சீக்கியர்கள் (Sikhs), ஜாத்துகள் (Jats), பண்டேலாக்கள் (Bundelas), ராதர்கள் (Rathors), சிசோதியர்கள் (Sisodias) ஆகிய அனைவருடனும் போர் நடத்திக்கொண்டிருந்தது.[1] இங்ஙனமாகப் பேரரசு சீர்குலைவு விரைந்ததற்குப் பெருங் காரணம் அவுரங்கசீப் தொடங்கிப் பின்பற்றிய தவறான கொள்கையாகும்; அக் கொள்கையை அவருக்குப் பிறகு வந்த துணிவற்ற

[1] J. N. Sarkar in Irvine's 'Later Mughals', ii. 309. See also Pringle Kennedy, ibid, ii. 49, 72, 74, 117, 155, 163.

அரசர்களும் தொடர்ந்து கடைப்பிடித்தனர். அக் கொள்கையானது இந்து உணர்ச்சிகள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் ஆகிய வற்றில் நேரடியாகத் தலையிடுவதாகும்.

இந்து சமய உணர்ச்சியின்மீது நடத்திய இந்தத் தாக்குதல் களினாலும் இதர காரணங்களினாலும் உண்டான சீர்குலைவு 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்குரிய பேரரசின் அரசியல் வரலாற்றில் தெளிவுபடக் காணக்கூடும். இந்து நதிக்கப்பால் இருந்த மாகாணத் தையும் ஆஃப்கானிஸ்தானத்தையும் நாதர் ஷா 1739-ல் கைப் பற்றினார். இங்ஙனமாக முகலாயத் தலைநகருக்கு ஆபத்து உண்டாக் கும் அளவுக்கு வெகு அருகில் வடமேற்கு எல்லையில் ஆற்றல் வாய்ந்த அந்நிய ஆதிக்கம் ஒன்றை அவர் நிலைநாட்டினார். ஆமத் ஷாவின் (Ahmad Shah—1748-54) ஆட்சிக் காலத்தில் ஆமத்ஷா துர்ரானி (Ahmad Shah Durrani) என்ற ஆஃப்கானியத் தலைவர் உதவியற்றிருந்த முகலாய அரசாங்கத்தினிடமிருந்து பஞ்சாபைப் பெற்றார். இங்ஙனமாக, தமக்குப் பிறகு வந்தவர்கள் தங்களது கேந் திரங்களான காபூல், லாகூர் ஆகியவற்றில் இருந்துகொண்டு முகலாய ஆட்சிப் பகுதிக்கும் தலைநகருக்கும் இடைவிடாமல் தொல்லை கொடுக்கும் வாய்ப்பினை அவர் ஏற்படுத்திக்கொடுத்தார். சீக்கியர்கள் தமது சுதந்திரத்தை வற்புறுத்தத் தொடங்கிவிட்டனர். முகமது ஷாவின் ஆட்சிக்காலத்தின் முடிவிலிருந்து இடைவிடாமல் பேரரசுக்கு அவர்கள் தொல்லை கொடுத்து, இறுதியில் அம் முழு மாகாணத்தையுமே அவர்கள் கைப்பற்றிக்கொண்டனர். நாதர் ஷா டெல்லியிலிருந்து தமது நாட்டிற்குத் திரும்பியவுடன், மராத்தி யர்கள் தங்களைப் பேரரசின் மேற்கு, தெற்கு மாகாணங்களில் நிலை நாட்டிக்கொண்டனர். அங்கிருந்து அவர்கள் ஒரிஸ்ஸா, பீஹார், வங்காளம் ஆகிய இடங்களுக்கு ஊடுருவினர். அவர்களுடைய நுழைதலைத் தடுக்க டெல்லியின் பேரரசர் சக்தியற்றிருந்தார். அவ் விதம் செய்ய அவரிடத்தில் படையோ, திறம் படைத்த தளபதியோ இல்லை. தல கவர்னர்களும் ஒன்றும் செய்ய முடியாதவர்களாயிருந் தனர்; அல்லது தங்களுடைய நிலையை உறுதிப்படுத்திக்கொள் வதற்கான முயற்சிகளில் அதிகமாக முனைந்திருந்ததனால், தங்க ளுக்குப் பெயரளவில் அரசனாக இருந்தவருக்கு எவ்வித உதவியும் அளிக்க இயலவில்லை. 1724ஆம் ஆண்டிலேயே ஆஸஃப் ஜா (Asaf Jah) தக்காணத்தில் தமது சுதந்திரத்தைப் பகிரங்கப்படுத்திக் கொண்டார். அவரைப் பின்பற்றி சாதத்கான் (Saadat Khan) அதே ஆண்டில் தமது சுதந்திரத்தைப் பகிரங்கப்படுத்திக்கொண் டார். அவர் அவுத் மன்னர்களின் மூதாதையாகிவிட்டார். அது போலவே, வங்காளத்தின் கவர்னர் அல்லாவர்திகான் (Aleahvardi Khan) என்பவரும் பேரரசருக்குக் கப்பம் செலுத்துவதையோ

அல்லது செயல்முறையில் அவருடைய இறைமையை ஏற்றுக்கொள்வதையோ நிறுத்திக்கொண்டார். ஆஃப்கானிய இனத்தினரான ரோஹில்லாக்கள் (Rohillas) கங்கை நதிக்கு வடக்கிலிருந்த செழுமையான நிலப்பகுதியைக் கைப்பற்றிக்கொண்டனர். அப் பகுதி அதற்குப்பின் ரோஹில்கண்ட் (Rohilkhand) என வழங்கப்பட்டது. இவ்விதமாக, அவுரங்கசீப்பின் மரணத்திற்குப் பிறகு, இருபது ஆண்டுகளுக்குள்ளாக, அவரும் அவருக்குமுன் இருந்தவர்களும் அறிந்திருந்த பேரரசு சிதறிவிட்டது. எனினும், இச் சீர்குலைவு இன்னும் சில ஆண்டுகள் வரையிலும் நீடித்துக்கொண்டிருந்தது. இதற்கிடையில் தலைநகரம் இடையருச் சூழ்ச்சிக்கும் இராஜத்துரோகச்செயல்களுக்கும் ஒரு கேந்திர ஸ்தானமாயிருந்தது. பிரபுக்களுக்கிடையில் சச்சரவுகள் தடையின்றி நடந்துவந்தன. முகம்மது ஷாவின் மரணத்திற்குப் பிறகு 1748-ல் பிரபுக்கள் தெருக்களில் வெளிப்படையாகச் சண்டை புரியவும், நகரச் சுவர்களுக்கு அப்பால் சமவெளிகளில் ஆயுதம் தாங்கிப் போர் புரியவும் தொடங்கிவிட்டனர். தைமூரித்துகளின் மாண்டுபோன பேரரசின் ஈமச்சடங்குகளாகத் தென்பட்ட மாபெரும் அராஜகத்திற்கு அந் நிலை பீடிகையாகும்.[1]

பேரரச வீழ்ச்சியின் அரசியல் காரணங்கள்பற்றிய இந்த ஆய்வுரையை முடிப்பதற்குமுன், பேரரசு திறம்படைத்த ஒரு கப்பற்படையைப் பெற்றிருந்திருப்பின் அதனால் அதற்கு எவ்விதமான பலன் ஏற்பட்டிருக்கக்கூடும் என்பதைக் கவனிக்கலாம். பேரரசின் சீர்குலைவைக் கடல் பலம் தடுத்திருக்க முடியாது. இதில் விவரிக்கப்பட்டுள்ள காரணங்கள், உண்மைகள், சூழ்நிலைகள் ஆகியவற்றின் விளைவாக அச் சீர்குலைவு தவிர்க்க முடியாததாகத்தான் இருந்தது. ஆனாலும், கடற்படையை நன்ருக நெறிப்படுத்தியிருந்தால், இந்தியாவில் ஐரோப்பியர்களின் வளர்ச்சியை அது மிகத் தீவிரமாகத் தடுத்திருக்கக்கூடும். கிழக்கு இந்தியக் கம்பெனி (East India Company) 1786-ல் மேற்கொண்டிருந்த போர்க் கொள்கையின் விளைவாக ஆங்கிலேயர்கள் வங்காளத்தைவிட்டுச் செல்லும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். அதற்குப் பிறகு அவர்களுடைய நிலை மிக மோசமாயிற்று. ஆனாலும், அவர்களுடைய கடல் பலத்தால் அவர்கள் தங்களைக் காப்பாற்றிக்கொண்டனர். சர் ஜான் சைல்ட் (Sir John Child) மேற்குக் கரையோரத்திலிருந்த தமது கேந்திரத்திலிருந்துகொண்டு முகலாயர்களின் மொத்தக் கப்பல் போக்குவரத்தையுமே கைப்பற்றி, மெக்கா யாத்திரிகர்களைத் தடுப்பதற்காகத் தமது கப்பல் தலைவர்களைச் செங்கட

[1] V. A. Smith, 'Oxford History of India,' p. 456; W. Irvine, 'Later Mughals', ed. J. N. Sarkar, ii. 377 f.

டிக்கும் பாரசீகக் குடாவுக்கும் அனுப்பிவைத்தார். இதுபோலக் கடல் மார்க்கமாகத் தாக்குதல்களைச் செய்ததனால்தான் அவுரங்க சீப் உடன்படிக்கை செய்துகொள்வதற்காக அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்குச் செவிசாய்த்தார்; இறுதியில் 1690-ல் அவர் ஆங்கிலேயர்களுக்கு மன்னிப்பு அளித்து வியாபாரத்திற்காக ஒரு புதிய அரச ஆணையையும் பிறப்பித்தார்.[1] முகலாயப் பேரரசு ஓர் ஆற்றல்மிக்க கப்பற்படையைப் பெற்றிருந்திருப்பின் ஐரோப்பியர்களின் முன்னேற்றத்தைத் தடுத்திருக்கக்கூடும்; மராத்தியர்களும் மேலும் வெற்றி கொண்டிருக்கக்கூடும்; தன்னுடைய சீர்குலைவிற்கே காரணமாக இருந்த சூழ்நிலைகளைத் தடுத்திருக்கக் கூடும்.

முகலாயப் பேரரசின் சீர்குலைவின் மூன்றாவது முக்கியக் காரணத்தை அக் காலத்திற்குரிய பொருளாதார நிலையில் நாம் காண வேண்டும். சீர்குலைவு உண்டாவதற்கான பல சாத்தியக்கூறுகளை அதனில் நாம் காணக்கூடும். பேரரசு உச்ச நிலையை எய்தியிருந்த சமயத்தில், தேசிய வருமானத்தை விநியோகிப்பதற்காக நிர்வாக நடவடிக்கைகள் ஒரு முக்கியக் காரணமாக அமைந்திருந்தன என்பதில் எவ்வித ஐயப்பாடும் இருக்கமுடியாது. ஆனாலும், உற்பத்தியாளர்களிடமிருந்து அரசாங்கம் மிக அதிகமான தீர்வைகளை வசூலித்ததனால், அவர்களின் வாழ்க்கைக்குத் தேவையானதைப் போதிய அளவுக்கு அவர்களால் வைத்துக்கொள்ள முடியவில்லை. இன்னும் நியாயமான முறைப்படி அவர்களுக்குக் கிடைத்திருக்கக் கூடிய உபரித் தொகையை அதிகாரிகள் பலனற்ற செயல்களுக்குப் பரிசாக வழங்குவதில் செலவழித்தனர். தற்காலத் தானங்களின்படி ஆராய்வோமானால், அக்பருடைய நிதி நிறுவனங்கள் மிகக் கடுமையாகவே இருந்தன; ஆனாலும், அவை நியாயமற்றவையாகவோ, சக்தியையும் ஊக்கத்தையும் அழிப்பனவாகவோ இருக்கவில்லை. அவருக்குப் பிறகு வந்தவர்களின் ஆட்சிக் காலத்தில் அவர் நிறுவிய அமைப்புகளெல்லாம் படிப்படியாகச் சீர்குலைந்தன. நிர்வாக முறைகள் மிகப்பெரிதும் சீரழிவுற்றன. உற்பத்தியாளர்கள் கொடுக்க வேண்டிய நேர்முகமான தீர்வைகள் மிக அதிகமாயின; அவர்களுக்குக் கிடைத்த இலாபம் மிகக் குறைந்ததாக இருந்ததனால், உற்பத்தித் தொழிலில் அவர்கள் உற்சாகத்தை இழந்தனர். இக் குறை ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தில் வந்திருந்து பார்த்தவர்களின் கவனத்தை ஈர்த்தது. 'அக்காலத்திய எழுத்தாளர்களெல்லாம் ஷாஜஹானது அரசவையின் ஆடம்பரத்தையும், அவருடைய ஆட்சியின் தாராள மனப்பாங்கினையும், மக்கள் அவரை விரும்பியதை

[1] P. E. Roberts, 'History of British India', p. 45.

யும் புகழ்கின்றனர். அதே சமயத்தில் இந்த ஆடம்பரமிக்க தோற்றம் சீர்குலைந்துகொண்டிருந்த உட்பகுதியை அதனுள் பெற்றிருந்ததை அவர்கள் மறைக்கவில்லை. அளவுமீறிச் செலவு செய்யப்பட்டதனால் நாட்டின் ஆதாரவளங்கள் நசித்துப்போகும் அளவுக்குப் பாரம் அதிகமாயிற்று. அதிகாரிகள் இலஞ்சம் வாங்கியதனாலும், தல கவர்னர்கள் கொடுங்கோலாட்சி நடத்திவந்ததனாலும் மக்களின் துயரம் அதிகமாயிற்று; தங்களுடைய குறைகளைப் போக்கிக்கொள்வதற்கு அம் மக்கள் வகையின்றி இருந்தனர்' என்று சர் வில்லியம் ஃபாஸ்டர் (Sir William Foster) எழுதுகிறார்.[1] ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தில் நில மதிப்பீட்டின் தரம் பாதியாக உயர்த்தப்பட்டது. கிட்டத்தட்ட அதே விகிதத்தில் வருமானக் கோரிக்கையும் அதிகமாயிற்று. 'உற்பத்தித் தொழில் இலாபம் தருவதாக இருக்கவில்லை. ஏனெனில், உற்பத்தியாளர்களுக்கு வாழ்க்கையில் சலிப்பு ஏற்பட்டுவிட்டது.' வன்முறையைக் கொண்டு நிலங்களைப் பயிர் செய்ய வேண்டியிருந்தது; ஏனெனில், குடியானவர்களெல்லாம் தங்கள் விவசாயத் தொழிலை விட்டுவிட்டு மற்றத் தொழில்களை மேற்கொள்ளத் தொடங்கிவிட்டனர். அதிகாரிகள் உடனடியான இலாபத்தை மட்டும் கருத்தில் கொண்டு தாங்கள் இழைத்த தீங்குகள் இன்னவை யென்று பார்க்க முடியாத வண்ணம் தங்களைக் குருடர்களாக்கிக்கொண்டு, குடியானவர்களின்மீது பொறுக்க முடியாத அளவு தீர்வைகளை விதித்தனர்; தீர்வைகளைச் செலுத்தத் தவறியவர்களை மிகக் கொடுமையாகத் தண்டித்தனர்.

சுருங்கச் சொல்லின், பேரரசின் பொருளாதார முறை ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தின் இறுதியில் மிக்க பளுவைச் சுமக்க வேண்டியிருந்ததனால் முரிந்துவிடும்போல் இருந்தது. அவுரங்கசீப் இறந்தவுடன் தேசத்தின் பொருளாதார நொடிப்பு உறுதிப்படுத்தப்பட்டது.[2]

மற்றக் காரணங்கள் இல்லாவிட்டாலுங் கூடப் பொருளாதார, நிதிச் சீர்குலைவே முகலாய ஆட்சியின் நாசத்தை உண்டாக்கப் போதுமானதாக இருந்திருக்கும். இவ்வுண்மை 1740 ஆம் ஆண்டுக்குள் பேரரசு உண்மையில் முடிவடைந்தது என்ற கூற்றை உறுதிப்படுத்துகிறது. 1806ஆம் ஆண்டுவரை நாற்பத்து ஏழு ஆண்டுகளாகப் பெயரளவில் பேரரசனாக அமர்ந்திருந்த இரண்டாம் ஷா ஆலம் (Shah Alam II) எந்தப் பேரரசுக்கு ஒழுங்குறத் தலைமைதாங்கி

[1] W. Foster, 'English Factories in India,' 1655—60, pp. 1,2.
[2] W. H. Moreland, 'From Akbar to Aurangzeb,' p. 300 et passim.

னுரோ, அப் பேரரசின் எப் பகுதியின்மீதும் அவர் உண்மையான ஆதிக்கம் பெற்றிருக்கவில்லை. செயல்முறையில், மூன்றரை நூற்றுண்டுகளாக டில்லியில் குவித்துவைக்கப்பட்டிருந்த ஏராளமான பொக்கிஷத்தை நாதர் ஷா திரட்டிக்கொண்டு டெல்லி நகரிலிருந்து வெளியேறியவுடன், முகலாயப் பேரரசு முடிவடைந்துவிட்டது. மேலும், சில ஆண்டுகள்வரையில் முகம்மது ஷாவும் அவருக்குப் பிறகு வந்தவர்களும் தங்களை முகலாயப் பேரரசர்கள் என்று அழைத்துக்கொண்டும், பெயரளவில் டெல்லியின் அடுத்த சுற்றுப் புறத்திலிருந்த பகுதியின்மீது ஆட்சி நடத்திக்கொண்டும் பழைய தலைநகரிலேயே இன்னும் தங்கியிருந்தனர். மகதாஜி சிந்தியா (Mahadaji Sindia) போன்ற பேராசை மிக்க தலைவர்களும் கூட அவ்வப்பொழுது மாபெரு முகலாயருடைய பெயரைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டதுமன்றி கீழாள்கள் என்று வேடந் தரித்துக்கொண்டு டெல்லியின் அரசியல் விவகாரங்களின்மேல் ஆதிக்கமும் பெற்றுக்கொண்டிருந்தனர். ஆனுலும், அரசியலிலும், நிர்வாகத்திலும், பொருளாதாரத்திலும் முகலாயப் பேரரசு நாதர் ஷாவின் படையெடுப்பு நடந்தவுடனேயே அழிந்துவிட்டது. முகலாய அரசவையில் மராத்தியரின் தூதராக இருந்து படுகொலையிலிருந்து தப்பித்துக்கொண்ட பாபு ராவ் மல்ஹர் (Babu Rao Malhar) என்பவர் முகலாயர்களின் இறைமையைப்பற்றி பின்வருமாறு கூறும்பொழுது அவர் உண்மையையே பேசுகிருர் என்று கொள்ளவேண்டும்: ‘இறைவன் என்னைப் பெரும் ஆபத்து ஒன்றிலிருந்து பிழைக்கவைத்ததுமன்றி மானத்துடன் தப்பித்துக்கொள்ளவும் உதவினுர். சகாதிப் பேரரசு மறைந்து ஈரானியப் பேரரசு தொடங்கியுள்ளது; அங்கே மிக்க விழிப்புடன் இருந்துகொள்க!’[1]

ஆகையினுல், முடிவுரையாகக் கூறுங்கால், முகலாய இராச்சியத்தின் சீர்குலைவும் இறுதி வீழ்ச்சியும் பல்வகைப்பட்ட காரணங்களின் சேர்க்கையினுல் ஏற்பட்டவையாகும். அவற்றில் மிக முக்கியமான இரண்டு காரணங்களாவன: சுயநலம் நாடியவர்களும் அத்துமீறிச் செலவழித்தவர்களுமான பணித்துறையாளர்களின் கட்டுப்பாடற்ற ஆதிக்கமும், வருமானத்தை உற்பத்தி செய்பவர்களைத் தொடர்ந்து ஏழைகளாக்கிய நியாயமற்ற பொருளாதார முறையும் ஆகும். அந்த இரண்டு தீங்குகளும் பிற சமயத்தினரைத் துன்புறுத்தலும் ஒன்ருக இணைந்து, வெளியிலிருந்து வந்த பகைவர்களைப் பேரரசு எதிர்க்கச் சக்தியற்றிருக்கச் செய்ததுமன்றி, நாட்டுக்குள்

[1] Rajwade VI, No. 131, quoted by J. N. Sarkar in W. Irvine's 'Later Mughals', ii. 360.

பரவிய வஞ்சகச் செயல்களுக்கு இரையுமாயின. அதனுடைய வளர்ச்சி, அழிவு ஆகியவற்றின் வரலாறு தற்காலத்திய ஜனநாயக அரசாங்கங்களுக்கு ஒரு சிறந்த பாடத்தைக் கற்பிக்கிறது. அதனது புகழின் உச்சநிலையில் பழமை வாய்ந்த கிரேக்கத்(Greek) துன்ப நாடகத்தின் உட்பொருளாக அமைந்திருந்த துணிச்சல்மிக்க தன் முனைப்புக்கு அது சிறந்த எடுத்துக்காட்டாகும். முகலாயப் பேரரச வமிசத்தைச் சார்ந்த பிந்திய அரசர்களின் நிழலார்ந்த உருவங்கள் ஒன்றன்பின் ஒன்ருக மேடையின்மீது நடந்துசென்று கொண்டிருப்பதையும், எல்லாவற்றிற்கும் கடைசியாகத் துரதிர்ஷ்டம் பிடித்த டெல்லி அரசர் நாடுகடத்தப்பட்டு ரங்கூனில் (Rangoon) உயிர் துறப்பதையும் நாம் காணும்பொழுது, அகமெம்னன் (Agamemnon) என்ற கவிதையில் காசெண்டிராவின் (Cassandra) புலம்பலின் எதிரொலியை நாம் கேட்பதுபோலத் தோன்றுகிறது.

'மனிதனுடைய நிலை இரங்கத்தக்கதாகும்; செல்வ நிலையில் இருக்கும்பொழுது அது வெறும் ஓர் உருவரையேயாகும்; ஆனுல், ஓர் துயரம் மேற்கொள்ளும்பொழுது, ஈரமான கடற்பஞ்சு பட்டவுடன் அந்த உருவரை மறைந்துவிடுகிறது.'

கலைச்சொல் அகராதி

(ஆங்கிலம்—தமிழ்)

A

Accession — அரியணை ஏறுதல்
Acropolis — நகரின் உள் அரண்
Administration — நிர்வாகம்
Ad valorem — மதிப்பீட்டின்படி
Album — படக்கோப்பு
Artillery — ஆயுதப் படை
Artists — கலைஞர்கள்
Astrology — சோதிடம்
Assessment — மதிப்பீடு
Astronomy — வான நூல்

B

Banjar — ஐந்து ஆண்டுக் காலமாக அல்லது அதற்கு மேற்பட்ட காலமாகப் பயிரிடப்படாமல் விட்டுவைக்கப்பட்ட நிலம்
Bureaucracy — பணித்துறை ஆட்சி

C

Calligraphy — கையெழுத்துக் கலை
Camaraderie — தோழமை உணர்ச்சி
Chabutras — திண்ணைகள்
Chachar — மூன்று அல்லது நான்கு ஆண்டுக் காலமாகப் பயிரிடப்படாமல் விட்டுவைக்கப்பட்ட நிலம்
Chefs d'-oeuvre — தலைசிறந்த படைப்புகள்
Chor minar — திருடர் கோபுரம்
Chronicles — காலவரிசை வரலாறு எழுதுபவர்
College — கல்லூரி
Communications — செய்திப் போக்குவரத்து
Contemporary — சமகாலத்தவர்; சமகாலத்திய
Coup de grace — இறுதி வீச்சு; முடிவாக்கும் செயல்
Court — அரசவை

D

Darsan jharokha — முகமாடி தரிசனம்
Delirium tremens — மயக்கவெறி அதிர்ச்சி
Descendants — வழித்தோன்றல்கள்
District — மாவட்டம்
Douceur — அன்பளிப்பு; கைக்கூலி
Dynasty — வமிசம்; வம்சாவளி

E

Ecclesiastical — சமயம் அல்லது திருச்சபையைச் சார்ந்த
Eclecticism — பல்வேறான நற்கூறுகளைத் தேர்ந்து திரட்டி உருவாக்கும் பாங்கு
Emperor — பேரரசர்
Endowments — அறக்கொடைகள்
En route — வழியில்

F

Farman — அரச ஆணை
Flogging — சாட்டையால் அடித்தல்

G

Geography — புவியியல்
Government — அரசாங்கம்
Gur — வெல்லம்

H

Headquarters — அரசாங்கத்தின் இருப்பிடம்

I

Ihram — முஸ்லீம்கள் ஹஜ் யாத்திரைக்குச் செல்லும்பொழுது அணிந்து கொள்ளும் ஆடைகள்
Imperial orders — பேரரச ஆணைகள்
Inherit — மரபுரிமையாகப் பெறுதல்

J

Jarib — சங்கிலி

K

Khalsa (land) — அரச நிலம்

L

Library — நூலகம்

M

Madad-i-mash — அறக்கொடைகள்
Madarsa — இஸ்லாமியப் பள்ளிகள், கல்லூரிகள்
Maestro — புகழ்வாய்ந்த இசைப் பாடல் இயற்றுபவர்
Maktab — ஆதாரப் பள்ளி
Manuscript — கையெழுத்துப் பிரதி
Markets — அங்காடிகள்
Mausoleum — கல்லறை
Memoirs — வாழ்க்கைக் குறிப்புகள்
Mosque — மசூதி; பள்ளிவாசல்

N

Naqarrah Khana — இசைக்கலைஞர்களின் மாடம்
Nazrs — பரிசுகள்
Nishan — சாசனம்
Nobility — உயர்குடியினர்

O

Order — உத்தரவு; ஆணை

P

Padsha salamat — அரசரே! வாழ்க
Par excellence — சாலச் சிறந்த
Parauti — தனது சக்தியை அல்லது வளத்தை மீண்டும் பெறுவதற்காக எனச் சிறிது காலத்திற்குப் பயிரிடப்படாமல் விட்டு வைக்கப்படும் நிலம்
Peshkush — பரிசுகள்
Polaj — ஆண்டுதோறும் பயிரிடப்படும் நிலம்
Possessions — உடைமைகள்
Predecessors — முற்பட்டவர்கள்
Public service — பொதுப்பணித் துறை

R

Rahdari — சாலைத் தீர்வைகள்
Remissions — தள்ளிக் கொடுத்தல்

Revenue — வருமானம்
Rois feineants — அரசர்கள்

S

Sarai — பிரயாணிகள் தங்குவதற்கான விடுதிகள்; சத்திரங்கள்
Sarcophagus — கல் சவப்பெட்டி
Settlement — குடியேற்றம்; ஏற்பாடு
Shah bandar — துறைமுக அதிகாரி
Sovereignty — இறைமை
Sufis — முஸ்லீம் துறவிகள்

T

Taibegi — திருமண மேற்பார்வை அலுவலர்
Tanab — கூடாரக் கயிறு
Territory — ஆட்சிப் பகுதி
Transit duties — ஊடு சுங்கவரி
Treasury — கருவூலம்
Tyranny — கொடுங்கோலாட்சி

Z

Zamindar — நிலக்கிழார்
Zakat — ஒருவரிடம் ஓர் ஆண்டு வரை பணம் சேமிக்கப்பட்டிருந்தால், அதில் நூற்றுக்கு 2½ சதவிகிதம் கட்டாயமாகக் கொடுக்க வேண்டிய தானம்
Zenana — பெண்கள்

பொருட்குறிப்பு அகராதி

அ

அகுவாவிர், 156, 162.
அக்பர்—அவருடைய நிர்வாக முறை, 1, 5, 9-18, 20.
அவருடைய படை, 21-28.
அவருடைய படகு தொகுதி, 28.
பாதுகாவலர் பணித் துறை, 31-39.
நிதி முறை, 45-58.
நீதிமுறை, 39-44.
வருமானச் சீர்திருத்தங்கள், 39-44, 55.
நாணய முறை, 72-76.
கருவூலம், 77.
கல்வி முறை, 79-93.
செய்தி போக்குவரத்து, 93-97.
பஞ்சங்கள், 98-102.
அவருடைய குடும்பம், 102.
அவருடைய அன்றாட வாழ்க்கை, 108-113.
அவருடைய அடிமைகள், 119.
அவருடைய நிர்வாகச் செயலாற்றல்கள், 121-125.
விவசாயம், 126.
தொழிற்சாலைகள், 129-133.
அயல் நாட்டு வாணிகம், 133.
பொருளாதார முறை, 140-147.
விளையாட்டுகள், 152-161.
குடிப்பழக்கங்கள், 161-164.
யாத்திரிகர்கள், 164-169.
ஸொராஸ்டிரிய சமயம், 174.
கட்டடக் கலை, 177-190.
ஓவியக் கலை, 191-208.
கையெழுத்துக் கலை, 208-211.
செதுக்குக் கலை, 212.
இசைக் கலை, 215.
அவருடைய அணிகலங்கள், 221.
அவருடைய பூங்காக்கள், 226-227.
அவருடைய உள்நாட்டுக் கொள்கை, 242-243.
அக்பர் (இளவரசர்) 9.
அபிஸீனியர்கள், 6, 118, 172.
அபுல் ஃபாஸல், 13, 27, 40, 42, 54, 56, 60, 65, 67, 73, 74, 77, 96, 107, 117, 131, 141, 158, 164, 174, 181, 196, 197, 198, 209, 226.
அய்னி அக்பரி, 7, 9, 41, 54, 196, 198.
அராபிய மொழி, 71.
அராபியர்கள், 6.
அரேபியா, 12, 160, 172.
அர்மீனியர்கள், 173.

அலாவுத்தீன் கில்ஜி, 2, 15.
அலி மர்தான்கான், 97.
அவுரங்கசீப், அவருடைய நிர் வாக முறை, 8, 16.
படை, 16-17, 28.
அவரும் சீதியும், 31.
நீதி, 43.
வருமானம், 52-53, 66-67.
நாணயம், 75.
கல்வி, 83, 89.
சாலைகள் கட்டுதல், 96.
பஞ்சங்கள், 166, 100, 102
அன்றுட வாழ்க்கை, 112.
நிர்வாகத் திறம், 124-125.
வாணிகம், 136.
பொருளாதார முறை, 146-147.
விளையாட்டுகள், 152-160.
யாத்திரிகை செல்லுதல், 168.
கட்டடக் கலை, 190.
ஓவியக் கலை, 207.
கையெழுத்துக் கலை, 210.
இசைக் கலை, 215, 220.
அவருடைய அணிகலங்கள், 224.
அவருடைய பூங்காக்கள், 234-235.
அவரும் பேரரசின்சீர்குலைவும், 242-243.
அவருடைய திறமைகள், 243-244.
அவருடையஉறுதியில்லாமை, 244-245.
அவரும் இந்துக்களும், 246.
அஹாதிக்கள், 21, 22, 198.

ஆ

ஆக்ரா, 51, 81, 94, 98, 131, 147, 181, 188.
ஆகா மீரக் (தப்ரீஸைச் சார்ந்த) 192.
ஆகா ரிஸா (ஹெராட்டைச் சார்ந்த), 203.
ஆஃப்ரிக்க அடிமைகள், 118.
ஆப்கானிஸ்தானம், 1.
ஆப்கானியர்கள், இந்தியாவில், 5, 249.
ஆமத் நகர், 106.
ஆமத் ஷா, 249.
ஆஸப் கான், 17.
ஆஸப் ஜா, 249.

இ

இங்கிலாந்தும் முகலாயர்களும், 61-65, 127, 135, 145.
இராசபுத்திரர்கள், 7-8.
,, படை, 48.
அவர்களுடைய ஓவியப் பாணி, 191.

ஏ

ஏற்றுமதிகள், 133-135.

ஐ

ஐரோப்பாவும் முகலாயர்களும், 6, 26, 167, 173.

ஃப

ஃபதேபூர் சிக்ரி, 47, 85, 131, 179, 181.
ஃபிரோஸ் ஷா, 3, 69, 70, 80, 116, 225.
ஃபெரிஷ்டா, 80, 210.
ஃபௌஜ்தார் (Foujdar) 25, 32, 33, 52.

க

கருவூலங்கள், 77-79.
கல்வி முறை, 79-93.
கல்வி (பெண்களின்), 91-93.
கிழக்கு இந்தியக் கம்பெனி, 32, 63, 76, 136, 250.
கிறித்துவ சமயம், 71.
கிறித்தவர்கள், 71.
குல்பதன் பேகம், 92.
குஜராத், 89, 99.

கையெழுத்துக் கலை, 208-211.

ச

சதர், 92, 114.
சதி, 35.
சத்நாமிகளின் கிளர்ச்சி, 37.
சந்திரகுப்த மௌரியன், 36, 94.
சமஸ்கிருதக் கல்வி, 80.
சர்கார்கள், 49, 52.
சலீமா சுல்தானு பேகம், 92.
சலீம் (இளவரசன்), 9 (பார்க்க: ஜஹாங்கீர்).
சாதி முறை, 169.
சாத்துகள், 37, 171.
சாலைகளின் நிலை, 34-35.
சீக்கியர்கள், 169-170, 249.
சீதி (ஜன்ஜீராவைச் சார்ந்த), 31.
சுங்க வரிகள், 61, 65.
சுபாக்கள், 50-51.
சுபேதார், 32, 40.
சுவர் (suwar), 11.
செங்கிஷ்கான், 171.
செய்திப்போக்குவரத்து, 93.

ட

டச்சுக்காரர்கள், 30, 62, 77, 118, 132.
டெல்லி, 39, 51, 73, 94, 97, 188.
டெல்லி சுல்தானியம், 1-3.

த

தக்காணம், 249.
தக்கி (thagi), 38.
தஸ்தூரி அமல், 51.
தஸ்தூரி மெஹர்ஜிரானு, 174.
தாகிலி (dakili), 21-22.
தாராஷுக்கோ, 88, 234, 239.
தாஜ்மஹால், 187-189, 214.
திவானிகாஸ், 111, 189.
தீனே இலாஹி, 85.
தீர்வைகள், 61.
துருக்கியர்கள், 2-3.
துருக்கிஸ்தான், 72.
துலாதானம், 77.
தோடர்மல், 4-5, 29, 49-52.

ந

நதிப் போக்குவரத்து, 28-31.
நாதிர்ஷா, 22, 238, 249, 253.
நீதிமுறை, 39-44.
நூர்ஜஹான்-அவளுடையகல்வி, 92-93.
ஜஹாங்கீரிடம் அவளது செல்வாக்கு, 163.
ஆக்ராவுக்கருகில் அவளுடைய தந்தையின் கல்லறை, 186.
அவளுடைய பூங்காக்கள், 230, 232.

ப

பக்ஷி (அவன் கடமைகள்), 19.
பஞ்சங்கள், 98-102, 130.
பஞ்சாப், 93-94, 249.
பட்டானியர்கள், 25.
பர்கானுக்கள், 13, 49-50, 58.
பஸ்பகதூர், 215.
பாதுகாவலர் பணித்துறை, 31-39.
பாபர், 1.
அவருடைய நிர்வாகம், 2, 65, 71.
அவருடைய கல்வி முறை, 81-83.
அவருடைய விளையாட்டுகள், 152.
அவருடைய குடிப்பழக்கம், 161.
கட்டடக் கலை, 179.
ஓவியம், 193.
இசை, 215.
அவருடைய பூங்காக்கள், 226.

பாரசீகம், 130, 157, 173.
பாரசீகர்கள், 7
பாரசீகக் குடா, 251.
பார்சீக்கள், 207, 174, 175.
பானிப்பட்டுப் போர், 23, 36.
பிராமணக் கல்வி முறை, 80.
பிராமணர்கள், 71, 170.
பிஸாத் (ஹெராட்டைச் சார்ந்த) 192.
பிர்ஜா பௌலா, 217.
பீஜப்பூர், 168.
பூங்காக்கள் (முகலாயப் பேரரசர்களின்), 225-235.
பேஷ்வாக்கள், 70.
பைராம்கான், 239.
பொதுப்பணித் துறை (முகலாயர்களின்கீழ்), 6-9.
அதனின் குறைபாடுகள், 16-18.
பொருளாதார முறை, 140-147.
போர்ச்சுகீசியர்கள், 24, 30, 75, 118, 127, 133.
போலோ (விளையாட்டு), 157.

ம

மகபத்கான், 186.
மக்தப்புகள், 81, 86, 89.
மயில் சிம்மாசனம், 222.
மராட்டியர்கள், 16, 248.
மன்சப்தார்கள், 9, 11, 15, 21, 198.
மாஹம் அனகா, 85.
மியான் தான் சென், 216.
மீர் சய்யித் அலி, 194.
மீர் ஜும்லா, 47, 63, 176, 222.
முகம்மதியர்கள்: அவர்களுடைய மாகாண ஆட்சிமுறை, 2-3.
பொதுப்பணித்துறையில் முகம்மதியர்கள், 6-9.
கல்வி முறை, 80.
அவர்களுடைய கட்டடக் கலை, 177-191.
முகமது பின் துக்ளக், 2, 72.
முகலாயர்களின் கப்பற்படை, 28-31, 250-51.
முகலாயர் காலத்திய ஓவியக் கலைஞர்கள், 191-208.
முகலாயர்களின் கீழிருந்த அதிகாரிகள், 14-16.
முகலாயர்களின் கீழ் ஓவியக் கலை, 191-208.
முகலாயர்கள்: அவர்களுடைய நிர்வாக முறை, 1-5.
அவர்களுடைய பொதுப் பணித்துறை; 6-9.
அவர்களது இராணுவத்துறை, 21-28.
அவர்களுடைய நிரந்தர அதிகாரிகள், 13-16.
ஊதியங்கள், 13-16.
பணித்துறையின் குறைகள், 16-18.
அவர்களுடைய தலைமை அமைச்சர்கள், 18-21.
அவர்களுடைய படை, 21-28.
கப்பற்படை, 28-31.
நீதிமுறை, 39-44.
அவர்களுடைய நீதிமுறை, 45-48.
அவர்களுடைய வருமான முறை, 48-61.
சுங்கத் தீர்வைகள், 61-67
அவர்களுடைய நாணய முறையும் நாணயச்சாலைகளும், 72-77.
அவர்களுடைய கருவூலங்கள், 77-79.
கல்வி முறை, 79-93.
பெண்கள் கல்வி முறை, 97-93.
செய்திப் போக்குவரத்து, 93-97.
நகர்ப்புறங்கள், 97-98.
பஞ்சங்கள், 98-102.

அவர்களுடைய விடுதி, 102-108.
அவர்களது அன்றாட வாழ்க்கை 108-113.
வாழ்க்கைத் தொழில்கள், 113-114.
அடிமைகள், 116-119.
அவர்களுடைய நிர்வாகத்தின் குறைபாடுகள், 120-125.
விவசாயம், 126-129.
தொழில்கள், 129-133.
அவர்களுடைய சமூக வாழ்க்கை, 147-150.
அவர்களுடைய விளையாட்டுகள், 151-161.
குடிப்பழக்கம், 161-164.
அவர்களும் ஐரோப்பியர்களும், 175-176.
கட்டடக் கலை, 177-191.
கலைகள், 191-215.
அவர்களுடைய அணிகலங்கள், 221-225.
அவர்களுடைய பூங்காக்கள், 225-235.
அவர்களுடைய சாதனைகள், 237-254.
அவர்களுடைய சீர்குலைவின் காரணங்கள், 237-254.
முத்து மசூதி, 187.
மூரத் (இளவரசன்), 162.
மெகஸ்தனிஸ், 116, 147.
மெக்கா யாத்திரிகைகள், 164-169.

யூ

யூதர்கள், 71, 173.

வ

வங்காளம், 14, 38, 51, 73, 81, 132-136, 176, 250.
வருமான முறை, 48-61.
வனங்கள், 115, 150.
வனசாதிகள், 171.
விர்ஜி வோரா, 7, 139.
வெள்ளங்கள், 149.

ஜ

ஜஸ்வந்த் சிங், 247.
ஜஹாங்கீர்: பொதுப்பணித்துறை 6-9, 9-13, 16-17.
இராணுவம், 21.
போலீஸ் துறை, 31.
நீதிமுறை, 39-44.
வருமான முறை, 48-58.
ஜோதிடம், 83.
கல்வி முறை, 87
சாலைகள் கட்டுதல், 96.
அவருடைய இல்லம், 105-106.
அவருடைய அன்றாட வாழ்க்கை, 110.
நிர்வாகத் திறம், 122.
தொழில்கள், 130-132.
அயல்நாட்டு வர்த்தகம், 133-137.
விளையாட்டுகள், 153-155.
குடிப்பழக்கம், 162-163.
யாத்திரிகைகள், 167-168.
அவரும் பார்சீக்களும், 174-175.
கட்டடங்கள், 186-187.
கலை, 201.
இயற்கையின்பால் அவர் கொண்டிருந்த காதல், 202.
கையெழுத்துக் கலை, 210.
சுற்றுலாவுவதில் அவருக்கிருந்த விருப்பம், 228.
அவருடைய பூங்காக்கள், 228-233.
அவருடைய குணவியல்பு, 242.
ஜாகீர்கள், 13, 14, 15.
ஜான் ஜஹான் கான், 87.
ஜெஸ்வியா, 71.

ஸ

ஸகாத், 69.
ஸெபுன்னிஸா, 92.
ஸொராஸ்டிரிய சமயம், 174.

ஷ

ஷா அப்பாஸ், 223.
ஷா ஆலம் II, 182, 252.
ஷா தம்ஸ்ப், 194, 222.
ஷாயிஷ்டகான் (வங்காள கவர்னர்), 14, 30, 64-72.
ஷாஜஹான்: அவருடைய நிர்வாக முறைகள், 1—16, 19.
அவருடைய படை பலம், 21-28.
போலீஸ் பணித்துறை, 31-39
தக்கி, 38.
நீதி, 39-44.
வருமான முறை, 48-61.
சுங்கத் தீர்வைகள், 61-67.
நாணயங்கள் அச்சிடும் சாலை, 72-77.
அவருடைய கல்வி முறை, 87-89.
பஞ்சங்கள், 100-101.
அவருடைய குடும்பம், 102-108.
அவருடைய அன்றாட வாழ்க்கை, 108-113.
அவருடைய நிர்வாகத் திறம், 121-122.
தொழிற்சாலைகள், 130-132.
விளையாட்டுகள், 153-155, 156.
கட்டடக் கலை, 187-191.
இசைக் கலை, 219-220.
பூங்காக்கள், 228-235.
அவருடைய குணவியல்பு,
பொருளாதார நிலை, 242.
ஷி ஆபுத்தின் தலீஷ், 14, 29-30, 69.
ஷிவாஜி—அவருடைய படை 13, 37, 63.
ஷெர்ஷா—அவருடைய நிர்வாகத் திறமை, 3-5, 15.
காவற் படை, 31-39.
வருமானத் திட்டம், 48-49.
நாணய முறை, 72-73.
கட்டடக் கலை, 179-180.

ஹ

ஹப்ஷிக்கள், 6, 172.
ஹுமாயூன் நிர்வாகம், 1, 3, 4.
பீரங்கிகளை உபயோகித்தல், 23.
வரிமுறை, 67-72.
நாணய முறை, 72-73.
கல்வி முறை, 79-91.
விளையாட்டுகள், 152-157.
குடிப்பழக்கம், 161-162.
கட்டடக் கலை, 179-191.
ஓவியம், 193-194.
அவருடைய பூங்காக்கள், 225-231.

தமிழ் வெளியீட்டுக் கழகம்

சென்னை-9

1967 வரை வெளியிட்ட நூல்கள்

பொருளாதாரம்

*1.	பொருளாதாரம்-II	சி. வேலாயுதம்	9	00
2.	புதுமைப் பொருளாதாரக் கூறுகள்	திருமதி ஆர். தாமரஜாட்சி	12	00
3.	பொருளாதாரம் — ஓர் அறிமுகம்-I	தி. சி. மோகன்	12	00
4.	,, II	எம். ஏ. அபூர்வசாமி, பி. வி. ஸ்ரீநிவாசன்	10	75
5.	பொருளாதாரக் கோட்பாடு வளர்ந்த வரலாறு	க. முத்தையன்	7	00
*6.	பணவியலும் பாங்கியலும்-II	சி. வேலாயுதம்	11	50
7.	நவீன பாங்கு இயல்	க. வெற்றிவேல்	7	50
*8.	இந்தியச் செலாவணியும் பாங்கு முறைகளும்	பி. வி. ஸ்ரீநிவாசன்	5	50
*9.	அரசாங்க நிதி இயல்	அர. சேஷாசலம்	4	75
10.	இந்தியப் பொருளியல்-I	எம். பாலசுப்பிரமணியன்	10	00
11.	,, II	எம். லூர்துநாதன்	4	25
12.	நமது பொருளாதாரப் பிரச்சினை-I	சி. சுந்தரராஜன்	10	75
13.	,, II	எஸ். குழந்தைநாதன்	10	50

மூலநூல் (Original Book)

14.	இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு-I	கீ. சீ. இராமசாமி	6	00
15.	,, II	,,	6	00
16.	அமெரிக்காவின் நவீன பொருளாதார வளர்ச்சி	தி. சி. மோகன்	5	00
17.	அமெரிக்கப் பொருளாதார வரலாறு-I	மு. க. சுப்பிரமணியம்	11	00
18.	,, II	பி. வி. சீனிவாசன்	6	00
19.	,, III	,,	6	50
20.	அரசாங்க நிதியியலின் பொருளாதாரம்-I	மா. குமாரசாமி	10	00
21.	,, II	அர. சேஷாசலம்	9	50
22.	இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி-I	தே. வேலப்பன்	10	00
23.	,, II	ஜி. சிதம்பரம்	8	00
24.	பணம்—சிறு விளக்கம்	கோ. இராதாகிருஷ்ணன்	10	00
*25.	வணிக இயலின் தத்துவங்கள்	கு. ஆளுடைய பிள்ளை	9	50
26.	பத்தொன்பதாம் நூற்றுண்டில் கிரேட் பிரிட்டனில் தொழில், வாணிபப் புரட்சி	கு. ரா. கருப்பண்ணன்	11	00
27.	பெண்ஹாம். பொருளாதாரம்-I	ஏ. குழந்தை	11	00
28.	,, II	எஸ். குழந்தைநாதன்	7	00
*29.	வரவுசெலவுத் திட்டம்	ஆர். ரங்காச்சாரி	6	00
30.	பன்னாட்டுப் பொருளாதாரம்-I	ஏ. குழந்தை	7	50
31.	,, II	கே. எஸ். இராமசாமி	9	00
32.	பொருளாதார ஆய்வு நூல்-I	கோ. இராதாகிருஷ்ணன்	7	75
33.	,, II	,,	7	00
34.	வளர்ச்சியுறாத நாடுகளின் அரசாங்க நிதியியல்	க. வெற்றிவேல்	4	25
35.	வளர்ச்சி குறைந்த நாடுகளின் முதலாக்கம் பற்றிய சிக்கல்கள்	மா. குமாரசுவாமி	5	50
36.	1939 முதல் இந்தியாவில் பணவீக்க விலைப் போக்குகள்	சி. சுந்தரராஜன்	7	50
37.	பொருளாதார வளர்ச்சிபற்றிய கட்டுரைகள்	எம். கே. சுப்பிரமணியம்	7	75

வரலாறு

*38.	பிரிட்டன் வரலாறு-I	கி. ர. அனுமந்தன்	10	00
*39.	,, II	,,	9	75
*40.	ஐரோப்பிய வரலாறு-I	டி. வி. சொக்கப்பா	4	50
41.	ஐரோப்பா—கடந்த ஐந்து நூற்றாண்டு காலச் சரித்திரம்	வை விருத்தகிரீசன்	15	00
42.	இங்கிலாந்து வரலாறு-I	இரா. அண்ணாமலை	13	00
43.	,, II	பா. மாணிக்கவேலு	13	00
44.	,, III	என். ஜே. இராஜகோபால்	8	00
45.	,, IV	,,	8	00
46.	இங்கிலாந்தின் வரலாறு-I	க. த. திருநாவுக்கரசு	15	00
47.	,, II	எம். எக்ஸ். மிராண்டா	8	00
48.	,, III	,,	5	00
49.	இந்தியாவின் சிறப்பு வரலாறு-I	தி. வெ. குப்புசாமி	7	50
50.	,, II	ஏ. உஸ்மான் ஷெரீப்	9	00
51	,, III	அ. பாண்டுரங்கன்	11	00
52.	கிரேக்க நாட்டு வரலாறு-I	சைமன் ஐ. எஸ். பாக்கியநாதன்	7	50
53.	,, II	,,	7	00
54.	,, III	பி. இராமானுஜம் தேவதாஸ்	7	75
55.	ஆக்ஸ்ஃபோர்டின் இந்திய வரலாறு-I	தி. வெ. குப்புசாமி	8	25
56.	,, II	ஏ. உஸ்மான் ஷெரீப்	7	50
57.	,, III	க. த. திருநாவுக்கரசு	10	50
58.	முகலாயப் பேரரசு-I	ஏ. உஸ்மான் ஷெரீப், எம். எக்ஸ். மிராண்டா	7	50
59.	,, II	எம். எக்ஸ். மிராண்டா, பா. மாணிக்கவேலு	7	75

* மூலநூல் (Original B ook)

அரசியல்

*60.	இந்திய அரசியலமைப்பு	வீ. கண்ணையா	4	75
61.	அரசியலுக்கு ஓர் அறிமுகம்	டி. செல்லப்பா	8	50
62.	தற்கால அரசியல் அமைப்புகள்	மோ. வள்ளுவன் கிளாரன்சு	8	50
63.	பன்னாட்டு அரசியல்-I	திருமதி நூர்ஜஹான் பாவா	16	00
64.	,, II	,,	13	25
65.	பொதுத்துறை ஆட்சி இயல்-I	வீ. கண்ணையா	9	00
66.	,, II	அ. ஜெகதீசன்	7	25
67.	பொதுத்துறை ஆட்சியியலுக்கு ஓர் அறிமுகம்-I	வீ. கண்ணையா	7	50
68.	,, II	டி. செல்லப்பா	7	50
69.	இந்திய அரசியலமைப்புத் திட்டம்	தி. வெ. குப்புசாமி, எஸ். சுப்பிரமணியன்	9	25
70.	இந்திய ஆட்சி அமைப்புமுறை வளர்ச்சி-I	வீ. கண்ணையா	6	25
*71.	மக்கள் ஆட்சி	க. சந்தானம்	4	25
72.	1919 முதல் சர்வதேச உறவுகளும் உலக அரசியலும்	என். ஜே. இராஜகோபால்	7	75

உளவியல்

73.	குழந்தை உளவியல்-I	கி. ர. அப்புள்ளாச்சாரி	8	00
74.	,, II	,,	7	00
75.	உட்கவர் மனம்	சி. ந. வைத்தீஸ்வரன்	7	00
76.	இளையோர் உளவியல்-I	தி. இரா. அரங்கராசன்	12	00
77.	,, II	,,	9	00
78.	சமூக உளவியல்	என். வேதமணி மானுவேல்	9	25
79.	பிறழ்நிலை உளவியல்	அ. பெசன்ட் கிரீப்பர்ராஜ்	11	00
80.	பித்தரின் உள்ளம்	,,	3	00
*81.	குமர உள்ளம்	டாக்டர் மு. அறம்	6	25

தத்துவம்

82.	இந்து சமயத் தத்துவம்	ஞா. ராஜாபகதூர்	5	50
*83.	அறிவு ஆராய்ச்சி இயல்	ஆர். இராமானுஜாச்சாரி	3	50
*84.	மேலைநாட்டுத் தத்துவம்	ஆர். எஸ். தேசிகன்	3	50
85.	அத்துவித தத்துவம்	கோ. மோ. காந்தி	6	50
86.	ஆங்கிலேயப் பயன்வழிக் கொள்கையினர்	மோ. வள்ளுவன் கிளாரன்சு	5	50
87.	இந்தியத் தத்துவம்	வ. அ. தேவசேனாபதி, பா. நா. சண்முகசுந்தரம்	3	50
88.	மெய்ப்பொருளியல்—ஓர் அறிமுகம்-I	சி. இராமலிங்கம்	6	00

அறவியல்

89.	அறவியல்—ஓர் அறிமுகம்	கோ. மோ. காந்தி	8	50

அளவையியல்

90.	அளவையியல்—தொடக்கநூல்	கி. ர. அப்புள்ளாச்சாரி	2	50

மானிடவியல்

*91.	மானிடவியல்	ம. சு. கோபாலகிருஷ்ணன்	4	75
92.	பண்பாட்டுக் கோலங்கள்	கி. பூ. சுப்பிரமணியன்	5	50
93.	இந்தியாவில் குடியானவர் வாழ்க்கை	எஸ். இலட்சுமி	3	50

சமூகவியல்

94.	சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள்	ஜே. நாராயணன்	10	00

புவியியல்

95.	ஆசியா-I	கொ. சேஷ. நரசிம்மன்	9	50
96.	,, II	,,	8	75
97.	ஐரோப்பாக் கண்டத்தின் புவியியல்	ஏ. எஸ். நாராயணன்	8	50

* மூலநூல் (Original Book)

புவியியல்—தொடர்ச்சி

*98.	தென்கிழக்கு ஆசியா	ஜி. கிருஷ்ணமூர்த்தி	8 50
*99.	வட அமெரிக்கா	குமாரி இரா. அலமேலு	8 25
*100.	தென் அமெரிக்கா	எம். என். பத்மநாபன்	9 00
*101.	தென் கண்டங்கள்—ஆஸ்திரேலியா	திருமதி எச். நியூமன்	4 00
*102	,, —ஆஃபிரிக்கா	எஸ். முத்துக்கிருஷ்ணக் கரையாளர்	3 25
*103	புவிப்புறவியல்-II	நா. அனந்தபத்மநாபன்	6 00
*104.	செய்முறைப் புவியியல்	சு. ஜெயச்சந்திரன்	9 00
*105.	மக்கட் பரப்பியல்	வி. எஸ். அனந்தபத்மநாபன்	8 25
*106.	சமுத்திரவியல்	கோ. இராமசாமி	8 50
107.	காலநிலை இயல்-I	கொ. சேஷ. நரசிம்மன்	10 00
108.	,, II	,,	5 00
109.	வளியியலுக்கு ஓர் அறிமுகம்	கோ. இராமசாமி	11 00
*110.	புவி அமைப்பு இயல்	சி. விசுவநாதன்	4 75
111.	பௌதிகப் புவியியலும் புவியமைப்பியலும்	கோ. இராமசாமி	6 00

புள்ளியியல்

*112.	புள்ளியியல்—அறிமுகம்	சு. வைத்தியநாதன்	10 00
113.	புள்ளியியல் முறைகள்-I	கோ. சண்முகசுந்தரம்	10 00
114.	,, II	கே. ஆர். இராஜகோபாலன்	14 00
115.	நம்மைச் சுற்றியுள்ள பேரண்டம்	தி வி லட்சுமி நரசிம்மன்	6 50

உயர்கணிதம்

*116.	ஆயத்தொலை வடிவகணிதம்	டி. கே. மாணிக்கவாசகம் பிள்ளை	12 50
*117.	வகை நுண்கணிதம்	,,	8 00
*118.	தொகை நுண்கணிதம்	தி. கோவிந்தராசன்	9 00

விலங்கியல்

*119.	விலங்கியல்	பெ. மா. அண்ணுமலை, இரா. முருகேசன்	12 00

பௌதிகவியல்

120.	ஒளி நூல்	ச. சம்பத்து	10 00

விஞ்ஞானம்

*121.	வானவெளி வெற்றி	டாக்டர் எம். ஏ. தங்கராஜ்	6 00
122.	ரேடியோ	,, பி. திருஞானசம்பந்தம்	4 75
*123.	எக்ஸ்-கதிர்கள்	பெ. நா. அப்புசாமி, ஜே. பி. மாணிக்கம்	4 50
*124.	பாம்புகள்	பெ. மா. அண்ணுமலை	3 50
*125.	தாவரம்—வாழ்வும் வரலாறும்	டாக்டர் கு. சீனிவாசன்	8 00
*126.	கரும்பு	கு. பெரியசாமி	4 00
*127.	தாவரங்களின் வாழ்வியல்	எஸ். சுந்தரம்	6 50

மருத்துவம்

*128.	நீரிழிவு—க்ஷயரோகம்	டாக்டர் ஜி. வேங்கடசாமி, டாக்டர் ஏ. கதிரேசன்	2 50
129.	மகப்பேறும் மாதர் நோயும்	டாக்டர் (குமாரி) மணிமேகலை	8 25
*130.	பாக்டீரியா	சு. சுந்தரம்	2 50
131.	புற்றுநோய்	அ. கதிரேசன்	3 50

* மூலநூல் (Original Book)

பொறியியல்

132.	நீங்களே வீட்டைக் கட்டலாம்	கே. வி. கிருஷ்ணராஜ், சி. ஆர். சுப்பிரமணியம், ஆர். இராமசாமி, கே. வேணுகோபால்	8 50

சட்டம்

*133.	குற்றவியல் சட்டம்	எம். சண்முகசுப்பிரமணியம்	10 00

பொது நூல்கள்

134.	மகாத்மா காந்தி	சரஸ்வதி தங்கையன்	3 25
135.	விவசாயப் புரட்சி	வி. கார்த்திகேயன்	8 00
136.	சேமக் கை-நூல்	ஆ. சுப்பிரமணியம்	2 50
*137.	முற்காலச் சோழர் கலையும் சிற்பமும்	எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்	9 00
*138.	உணவும் ஊட்டமும்	தி. வேங்கிடகிருஷ்ணய்யங்கார்	4 50

புகுமுக வகுப்புகளுக்குரியவை (P.U.C.)

*139.	உலக வரலாறு	டி. ஆர். இராமச்சந்திரன்	4 50
*140.	பொருளாதாரம்	ஜி. சிதம்பரம்	3 50
*141.	வணிகவியலுக்கு ஓர் அறிமுகம்-I	கு. ஆளுடைய பிள்ளை	4 00
*142.	,, II	,,	3 50

*மூலநூல்(Original Book)

தமிழ் வெளியீட்டுக் கழகப் புதிய வெளியீடுகள்
1969

வரலாறு

ஆங்கில அரசியலமைப்பின் வரலாறு - I, II, III, IV — டாஸ்வெல்-லாங்மீட்

ஆங்கிலேயரின் சமுதாய வரலாறு - I, II, III — G. M. டிரெவெலியன்

இந்தியாவில் முகலாயரின் ஆட்சி - I, II — S. M. எட்வர்ட்ஸ் & H. L. O. காரட்

பொருளாதாரம்

இந்தியப் பொருளாதார வரலாறு (1857 - 1956) - I — V. B. சிங்

பொருளாதாரம் - ஓர் அறிமுகம் — வீரா ஆன்ஸ்டி

அரசியல்

இந்திய ஆட்சி அமைப்பு முறையின் வளர்ச்சி - II, III — H. N. சின்ஹா

சமூக, அரசியல் கொள்கையின் அடிப்படைகள் — எர்னஸ்ட் பார்க்கர்

புவியியல்

சிஷோமின் வாணிகப் புவியியல் - I, II, III — L. டட்லி ஸ்டாம்ப்

தத்துவம்

இந்தியத் தத்துவம் - II — M. ஹிரியண்ணு

மருத்துவம்

உடலியங்கியல் - I, II — K. M. பைகாவ்

எலும்புருக்கி நோய் — V. L. எய்னிஸ்